கலைஞரின்
கடிதங்கள்

44

18.07.2010 - முதல்
11.03.2011 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 44

18.07.2010 - 11.03.2011

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

"படமும் பாடமும்"
"மூலவர் மூவர் முரசொலி"

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?"
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! "யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!"

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
3484. அம்மணியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டும், ஆணித்தரமான பதிலும்! (3)	18-07-2010	23
3485. அம்மணியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டும், ஆணித்தரமான பதிலும்! (4)	19-7-2010	29
3486. தேன் துளிகள்; தேனருவியாகட்டும்!	22-7-2010	37
3487. தேன் துளிகள்; தேனருவியாகட்டும்! (2)	23-7-2010	45
3488. இட ஒதுக்கீடும்; இரட்டை வேடமும்! (3)	25-7-2010	57
3489. வாய்மையை எதிர்த்து வஞ்சகம் ஜெயிக்காது!	26-07-2010	66
3490. இருப்பதையும் இழக்காமல் இட ஒதுக்கீடு அமைந்திட...!	30-7-2010	74
3491. எதிரொலிக்கிற அந்தக் கூச்சல்!	11-8-2010	79

3492. எல்லாம் காலத்தின் கோலம்தான்!	18-8-2010	87
3493. முதலில் புரியாத ஏடுகளாவது; இனி புரிந்து கொள்ளுமா?	20-8-2010	93
3494. நியாயம் தானா? நீங்களே சொல்லுங்கள்!	31-08-2010	98
3495. பதுங்கிக் கொள்ள இருக்கவே இருக்கிறது கொடநாடு!	2-9-2010	104
3496. ஒத்துழைத்திட முன் வருவீர்!	3-9-2010	111
3497. வன்முறைக்கு வக்காலத்து வாய்மை ஆகுமா?	4-9-2010	117
3498. அன்பில் சிலையாகி; அழைக்கின்றார்!	7-9-2010	124
3499. மலையேறி நிற்போரல்ல நாம்!	18-9-2010	132
3500. எதிர்க்கட்சியாக இருங்கள்; எதிரிக்கட்சியாக அல்ல!	19-9-2010	139
3501. நிந்தனை விடுத்து; சிந்தனை செய் மனமே!	20-09-2010	147
3502. இரு விழாக்கள்; ஒரு ஒப்பீடு!	4-10-2010	153
3503. அமளியும் - வன்முறையும் ஜனநாயகமா?	6-10-2010	158

3504. மத்திய அரசாணைக்கும் இப்படியொரு மறுப்பா?	13-10-2010	162
3505. "வாழ்க வசவாளர்" என்ற வாசகத்தை மறக்கலாமா?	17-10-2010	165
3506. தாய்த் தமிழகத்தின் ஏக்கம் - என்று தணியுமோ?	19-10-2010	169
3507. தேர்தல் தீர்ப்புக்குக் கூட்டமே; அளவுகோலா?	24-10-2010	175
3508. குடிசைகள்; கோபுரங்களாக - மண்வீடுகள்; மாளிகைகளாக!	27-10-2010	179
3509. அம்மையார் வாக்கும் போக்கும்; அன்றும்-இன்றும்!	1-11-2010	186
3510. காலம்தான் பதில் சொல்லும்!	3-11-2010	192
3511. நடுநிலையாளர்க்கு; கெடுமதி கூடாது!	4-11-2010	198
3512. துரோகத்தின் முகத்திரையைக் கிழிப்போம்!	14-11-2010	206
3513. மனு தர்மத்திற்கு மறு பிறவி கிடையாது!	17-11-2010	213
3514. வரப்போகும் வெற்றிக்கு வெள்ளோட்டம்!	30-11-2010	222
3515. கணக்கு காட்டுகிறேன்; கண்ணுடையோர் காண!	2-12-2010	229
3516. ஒய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்...!	10-12-2010	239

3517. என்னதான் எரிச்சலோ; இந்தச் சில ஏடுகளுக்கு?	12-12-2010	245
3518. வயதில் ஈராண்டு இளையோன்; வணங்குகிறேன்!	19-12-2010	251
3519. உத்தமிகாள்! நீவிர் ஊழல் பற்றிப் பேசலாமா?	20-12-2010	256
3520. பட்டிதொட்டி எங்கும் பணிகளைத் தொடர்ந்திட; வெற்றி முரசு கொட்டிட விரைந்தெழுவீர்!	21-12-2010	264
3521. புறப்படட்டும், நமது பிரச்சாரப் படை!	22-12-2010	270
3522. வேலை வாய்ப்பு; அன்றும் இன்றும்!	23-12-2010	277
3523. எப்போதுதான் முடியுமோ?	29-12-2010	283
3524. அய்யோ! தாங்க முடியவில்லையே அம்மையாரின் புளுகு!	31-12-2010	290
3525. படித்திடுவீர்; பனகல் அரசர் வரலாறு!	7-1-2011	298
3526. நஞ்சைக் கக்கிடுவோர்; நெஞ்சைத் தொட்டுச் சொல்வாரா?	12-1-2011	301
3527. நஞ்சைக் கக்கிடுவோர்; நெஞ்சைத் தொட்டுச் சொல்வாரா? (2)	13-1-2011	311

3528. அரசியல் ஆக்க விரும்புவோர்க்கு விளக்கம்!	26-1-2011	317
3529. அரசு அலுவலர்களும் அம்மையார் ஜெயலலிதாவும்!	27-02-2011	325
3530. ஆணையத்தின் ஆணை பிறந்து விட்டது!	3-3-2011	331
3531. விளைச்சல் நிறைந்தது; விவசாயி கண்ணீர் மறைந்தது!	4-03-2011	337
3532. விளைச்சல் நிறைந்தது; விவசாயி கண்ணீர் மறைந்தது!	05-03-2011	349
3533. கமழும் கல்வி நீரோடை!	06.03-2011	359
3534. கமழும் கல்வி நீரோடை - 2	09-03-2011	369
3535. கமழும் கல்வி நீரோடை - 3	10-03-2011	380
3536. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஐந்தாண்டு சாதனைகள்! (1)	11-3-2011	390

3484. அம்மணியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டும், ஆணித்தரமான பதிலும்! (3)

உடன்பிறப்பே,

ஜெயலலிதா தனது கோயமுத்தூர் பேச்சில் "ஊழலின் ஊற்றுக்கண்" என்று நம்மைச் சொல்லியிருக்கிறார்.

வருமானத்துக்கு அதிகமாக ஊழல் செய்து 66 கோடி ரூபாய்க்குச் சொத்து சேர்த்து, அதற்காகவே ஏழாண்டுப் காலமாக ஜெயலலிதா மீது வழக்கு நடைபெறுகிறதே; அந்த வழக்கிலே, "நீதி பரிபாலன முறையின் புனிதத்தையும், அதன் மீது சாதாரண மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் நிலைநாட்ட இந்த வழக்கு விசாரணையை கர்நாடக மாநில நீதி மன்றத்திற்கு மாற்றுகிறேன்" என்று உச்ச நீதி மன்ற நீதியரசர்கள் எஸ்.என். வரியவா மற்றும் எச்.கே. சேமா ஆகியோர் 18-11-2003 அன்று தீர்ப்பு வழங்கினார்களே, அந்தத் தீர்ப்பைப் பெற்ற ஜெயலலிதா அல்லவா; ஊழலின் ஊற்றுக் கண்ணாக விளங்குகிறார்!

1993-94ஆம் ஆண்டுக்கான வருமான வரி கணக்கை ஜெயலலிதா தாக்கல் செய்ய வில்லை என்று வருமானவரித் துறையே அவர் மீது வழக்கு தொடுத்து - அந்த வழக்கில் 24-2-2006 அன்று ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்த போதே, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.என்.அகர்வால், ஏ.கே. மாத்தூர் ஆகியோர் "You (Jayalalithaa) are making a mockery of the Judicial Process. How long you can drag the proceedings?" என்று விமர்சனம் செய்தார்களே, அதை ஜெயலலிதாவே மறந்து விடலாமா? இந்த விமர்சனத்திற்கு ஆளான ஜெயலலிதா அல்லவா; ஊழலின் ஊற்றுக்கண்ணாவார்! - ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது அரசுக்குச் சொந்தமான "டான்சி" நிலத்தை குறைந்த விலைக்கு வாங்கிய குற்றச்சாட்டிலே அந்த நிலத்தைத் திரும்பவும் ஜெயலலிதா; அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும், அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக, நிலப் பத்திரத்தில் உள்ளது தன்

கையெழுத்தே இல்லை என்று கூறும் அளவுக்கு ஜெயலலிதா சென்றுள்ளார் என்றும், மனச்சாட்சிப்படி நினைத்துப் பார்த்து ஜெயலலிதா பரிகாரம் தேட வேண்டும் என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் எஸ். ராஜேந்திரபாபு, திரு.பி.வி. ரெட்டி ஆகியோர் தீர்ப்புக் கூறினார்களே, இதிலிருந்தே யார் ஊழலின் ஊற்றுக்கண் என்று ஊருக்கும் உலகிற்கும் தெரியுமே!

ஜெயலலிதாவின் வீட்டைச் சோதனையிட்ட போது கிடைத்த பொருள்களும், அதன் மதிப்பும் என்று சில ஆண்டுகளுக்கு முன்பு அனைத்து ஏடுகளிலும் ஒரு பட்டியலாகவே வெளியிடப்பட்டது. அந்தப் பட்டியலில் குறிப்பிட்டவாறு -

ஜெயலலிதாவின் 86 வகையான நகைகள் மதிப்பு 17 லட்சத்து 50 ஆயிரத்து 31 ரூபாய்.

சசிகலாவின் 62 வகையான நகைகள் மதிப்பு - 9 லட்சத்து 38 ஆயிரத்து 460 ரூபாய்.

ஜெயலலிதாவின் 26 வகையான நகைகள் - 19 லட்சத்து 30 ஆயிரத்து 852 ரூபாய்.

ஜெயலலிதாவின் 41 வகையான நகைகள் - 1கோடியே 40 லட்சத்து 75 ஆயிரத்து 958 ரூபாய்.

ஜெயலலிதாவின் 394 வகையான நகைகள் - 3 கோடியே 12 லட்சத்து 67 ஆயிரத்து 725 ரூபாய்.

சசிகலாவின் 34 வகையான நகைகள் - 1 17 லட்சத்து 54 ஆயிரத்து 868 ரூபாய்.

1116 கிலோ எடையுள்ள வெள்ளிப் பாத்திரங்கள் - 48 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்.

இந்தியன் வங்கி, அபிராமபுரம் கிளையில் முதலீடு - ஒரு கோடி ரூபாய்.

சொகுசு பேருந்து எண் டி.என். 09-எப். 2575 - 32 இலட்சத்து 40 ஆயிரத்து 278 ரூபாய்.

91 கைக் கடிகாரம் - 6 இலட்சத்து 87 ஆயிரத்து 350 ரூபாய்.

7 விலை உயர்ந்த கைக்கடிகாரங்கள் - 9 லட்சத்து 3 ஆயிரம் ரூபாய்.

914 புதிய பட்டுச் சேலைகள் - 61 லட்சத்து 13 ஆயிரத்து 700 ரூபாய்.

6195 மற்ற புதிய சேலைகள் - 27 லட்சத்து, 8 ஆயிரத்து 720 ரூபாய்.

2140 பழைய சேலைகள் மற்றும் துணி மணிகள் - 4 லட்சத்து 21 ஆயிரத்து 870 ரூபாய்.

389 ஜோடி காலணிகள் - 2 இலட்சத்து 902 ரூபாய். உடன்பிறப்பே,

இந்தப் பட்டியலையெல்லாம் மீண்டும் நினைவுபடுத்த வேண்டுமென்று நான் எண்ணவில்லை தான்! ஆனால் ஜெயலலிதாதான் இந்தப் பட்டியல்களையெல்லாம் வெளியிட்டு மக்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டுமென்று நம்மைத் தூண்டுகிறார்.

நாடாளுமன்றத்தில் மாநிலங்களவையில் வெளியிட்ட விவரப்படி எடுத்துக்கொண்டால் 1-7-1991 அன்று ஜெயலலிதாவின் சொத்துக்களின் மதிப்பீடு 2 கோடியே 1 லட்சத்து 83 ஆயிரம் ரூபாய். 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு மே திங்கள் வரையில் ஜெயலலிதாதான் தமிழகத்தின் முதல் அமைச்சர். 30-4-1996 அன்று ஜெயலலிதாவின் சொத்துக்களின் மதிப்பு 66 கோடியே 44 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய். எப்படி வந்தது இந்த 66 கோடி ரூபாய் சொத்துக்கள்? ஊழலின் ஊற்றுக்கண் யார்? ஆனாலும் இதுவரை நாம் அவரை இப்படியெல்லாம் விமர்சனம் செய்தது உண்டா?

ஜெயலலிதா கோவையில் மேலும் பேசும்போது, "காப்பீட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், பிரீமியத் தொகை 2000 கோடி ரூபாய். இதற்கான ஏஜெண்ட் கமிஷன் 400 கோடி ரூபாய். இந்த 400 கோடி ரூபாய் ஏஜெண்ட் கமிஷன், யாருக்குச் சென்றுள்ளது? கருணாநிதியிடமா? அல்லது அவரது மகனிடமா? இந்த 400 கோடி ரூபாய் கருணாநிதி குடும்பத்தாரிடம் கொடுக்கப்பட்டிருந்தால் அந்தப் பணம் எங்கே? வருமானவரித் துறை சோதனை நடத்தினால் அவர்களுடைய வீடுகளில் கிடைக்குமா?" என்றெல்லாம் கேட்டிருக்கிறார்.

இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பத்தி 45இல் "கலைஞர் தலைமையிலான இந்த அரசின் நான்காண்டுச் சாதனைகளின் மணி மகுடமாக கலைஞர் காப்பீட்டுத் திட்டம் திகழ்கிறது என்றால் மிகையாகாது. இந்தப் புரட்சிகரமான திட்டத்தில் ஒரு கோடியே 44 லட்சம் ஏழை எளிய குடும்பங்கள் இதுவரை சேர்ந்துள்ளனர். இதுவரை 54,145 பேர் ரூபாய் 165 கோடி மதிப்பிலான உயிர்காக்கும் உயர் சிகிச்சை பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்கு அரசே காப்பீட்டுத் தொகை செலுத்துவதற்காக இந்த வரவு செலவு திட்டத்தில் ரூபாய் 750 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு முன்னாள் முதலமைச்சர், இந்நாள் எதிர்க் கட்சித் தலைவர் - நிதி நிலை அறிக்கை பற்றி தெரிந்து வைத்திருக்க வேண்டியவர் - இவ்வளவு அபத்தமாக பிரீமியத் தொகை 2000 கோடி ரூபாய் என்றும், அதிலே ஏஜெண்ட் கமிஷன் 400 கோடி ரூபாய் என்றும் ஒரு பொதுக் கூட்ட மேடையிலே மக்களிடம் கூறி யிருக்கிறார் என்றால் அவர் மக்களை ஏமாற்ற நினைக்கிறாரா அல்லது அவருக்கு தெரிந்ததே இவ்வளவு தானா என்று கேட்கத் தோன்றுகிறது அல்லவா?

இத்திட்டத்திற்கான பிரீமியத் தொகை 2000 கோடி என்றும் - அதிலே ஏஜெண்ட் கமிஷன் 400 கோடி ரூபாய் என்றும் ஜெயலலிதா கோவையிலே பேசியதை நிரூபிக்க அவர் தயாராக இருக்கிறாரா? அரசின் சார்பில் இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடே 750 கோடி ரூபாய் என்று அரசு அறிவித்திருக்கும் நிலையில், 2000 கோடி ரூபாய் பிரீமியத் தொகை என்றும் 400 கோடி ரூபாய் கமிஷன் என்றும் ஜெயலலிதா சொல்லியிருப்பது எப்படிப்பட்ட புளுகுமூட்டை என்பதை தமிழ்நாட்டு மக்கள்தான் புரிந்து கொள்ள வேண்டும். வருமான வரித் துறை சோதனை நடத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். வருமான வரித் துறைக்கு சொத்து வரி குறித்து கணக்கே தாக்கல் செய்யாமல், அதற்காக நீதிமன்றத்திலே தன்னை விடுவிக்க வேண்டுமென்று மனு போட்டுக் கொண்டிருப்பவர் என்பதால், தன்னைப் போல பிறரும் இருப்பார்கள் என்று அவர் நினைக்கிறாரோ என்னவோ?

இதய நோய், சிறுநீரக நோய், புற்று நோய் போன்ற நோய்களால் பாதிக்கப்படுபவர்களுக்கு தேவைப்படும் அறுவை சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளில் காத்திருப்போரின் எண்ணிக்கை கடந்த

காலத்தில் அதிகரித்து வந்தது. அரசு மருத்துவமனைகளுக்கு வரும் ஏழை, எளிய மக்கள் தனியார் மருத்துவமனைகளுக்கு சென்று அதிக செலவு செய்து சிகிச்சை பெற இயலாது. மேற்கண்ட ஆபத்தான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் சிறப்பு மருத்துவமனைகளில் ஏழை, எளிய நோயாளிகளும் தரமான சிகிச்சை பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

அதிலே கூட ஏதோ எனக்கு வேண்டிய ஒரு நிறுவனத்திற்கு அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுவிட்டதாக ஜெயலலிதா ஏற்கனவே ஒருமுறை கூறி, அதற்கு மறுப்பு கூறி விவரமாக பதிலளிக்கப்பட்ட ஒரு பிரச்சினையை மீண்டும் சொல்லியிருக்கிறார்.

அரசாங்கத்தின் விதிமுறைப்படி இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த திறந்தவெளி ஒப்பந்தம் கோரப்பட்டு - ஸ்டார் ஹெல்த் அண்டு அலைடு இன்சூரன்ஸ் என்ற நிறுவனம் தேர்ந் தெடுக்கப்பட்டதே தவிர - தன்னிச்சையாக ஒருவருக்கு வழங்கப்பட்டுவிடவில்லை.

இந்த நிறுவனம் இந்திய இன்சூரன்ஸ் காப்பீட்டு ஆணையத்தின் விதிமுறைகளின்படி இயங்கும் ஒரு நிறுவனமாகும். இந்த காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த இந்த இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு பிரீமியம் தொகையாக ரூ.569.54 கோடியும் சேவை வரியாக ரூ.58.66 கோடியும் ஆக மொத்தம் ரூ.628.20 கோடி மட்டுமே தரப்பட்டுள்ளது; ஆனால் அ.இ.அ.தி. மு.க. பொதுச் செயலாளர் கோயம்புத்துரில் ரூபாய் இரண்டாயிரம் கோடி அரசுப் பணம் வழங்கப்பட்டுள்ளதாக ஒரு வடிகட்டிய பொய்யை பொதுமக்களை திசை திருப்பும் வகையில் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தில் 14.07.2010 வரை 1,45,054 நபர்கள் சிகிச்சை பெற்றுள்ளார்கள். இதற்காக இன்சூரன்ஸ் நிறுவனம் ரூ.394.72 கோடியை காப்பீட்டுத் தொகையாக வழங்கியுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் உறுப்பினர் புகைப்படம் எடுத்து அடையாள அட்டை வழங்கும் பணிக்கான செலவினத்தையும் மேற்கண்ட தொகையிலிருந்து இன்சூரன்ஸ் நிறுவனம் செய்துள்ளது. இந்தத் திட்டத்தில் ஒரு குடும்பத்திற்கு நான்காண்டுகளுக்கு

ஒரு இலட்சம் ரூபாய் வரை சிகிச்சை அளிக்க அனுமதி அளிக்கப்படுகிறது. ஆனால் ஜெயலலிதா இத்திட்டத்தையே தவறு என்கிறாரா? ஏழையெளிய மக்களின் அறுவை சிகிச்சைக்காக ஒரு இலட்ச ரூபாய் வழங்குவதை கூடாது என்கிறாரா? இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்ற - பயன்பெறும் தமிழ்நாட்டு மக்கள்தான் ஜெயலலிதாவின் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும். ஜெயலலிதா ஆட்சியிலே இத்தகைய திட்டத்தை மேற்கொண்டது உண்டா என்றால் இல்லை, இல்லவே இல்லை! அவரும் நிறைவேற்ற வில்லை, தற்போது நிறைவேற்றுவதையும் கெடுக்கப் பார்க்கிறார் என்றால் அத்தகையவரின் உள்நோக்கத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

18-07-2010

3485. அம்மணியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டும், ஆணித்தரமான பதிலும்! (4)

உடன்பிறப்பே,

ஜெயலலிதா எப்போதுமே ஒரு "அவசரக் குடுக்கை" என்பார்கள். அது சரியாகத்தான் இருக்கிறது. தான் சொன்ன குற்றச்சாட்டுக்கு பதில் வந்திருக்கிறதா? அப்படி பதில் வந்தால் என்ன பதில் வந்திருக்கிறது? தான் சொன்னது சரிதானா என்றெல்லாம் பார்க்காமல் - என்னுடைய பதில்கள் தொடர்ந்து இரண்டு மூன்று நாட்களாக வந்து கொண்டிருக்கும் நிலையில்; விலைவாசி உயர்வு பற்றி அவர் கோவையிலே பேசியதற்கு நீண்ட விளக்கத்தை நான் 16ஆம் தேதியே அளித்த பிறகும் - விலைவாசி பற்றி பேசியதற்கு கருணாநிதி வாய் திறக்கவில்லை, ஆகவே நான் கூறியது உண்மையாகி விட்டது என்றெல்லாம் புலம்பித் தள்ளியிருக்கிறார்.

தமிழ்நாடு வளர்ச்சி அடைந்தது என்பதற்கு உதாரணமாக பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் பெருகியிருப்பதை மட்டுமே நான் காட்டிடாமல், எந்த அளவிற்கு பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் பெருகியிருக்கின்றன என்பதையும் எடுத்துக்காட்டியிருக்கிறேன். நுனிப்புல் மேயும் ஜெயலலிதாவும், அவரது ஆதரவு ஏடுகளும் அவைகளையெல்லாம் படிக்கவில்லை போலும்! புதிய கல்லூரிகள், பள்ளிகள், மாவட்டங்கள் ஏற்படுத்துவ தெல்லாம் சாதனை அல்ல என்று சொல்லுகிறார் ஜெயலலிதா. அவரது ஆட்சிக் காலத்தில் அவர் இவ்வாறு தொடங்கியிருந்தால், அதனைப் புள்ளி விவரத்தோடு குறிப்பிட்டு, கழக ஆட்சியைவிட அ.தி.மு.க. ஆட்சியிலே அதிகமாகச் செய்தோம் என்று சொல்வதற்கு அவர்களிடம் "மசாலா" இல்லாதபோது அறிக்கை என்ன கேடு?

16ஆம் தேதி நான் வெளியிட்ட அறிக்கையின் இறுதிப் பகுதி முழுவதும் உரம் பற்றித்தான் எழுதியிருக்கிறேன். ஆனால் உரம் பற்றி நான் வாய் திறக்கவில்லை என்று ஜெயலலிதா தனது

அறிக்கையிலே நேற்று சொல்லியிருக்கிறார் என்றால் அவரைப் பற்றி என்ன நினைப்பது?

ஜெயலலிதா மேலும் தனது கோவை உரையிலே கழக ஆட்சியில் அரிசி பதுக்கல், கடத்தல் என்றெல்லாம் முழங்கியிருக்கிறார். ஜெயலலிதாவின் ஆட்சியில் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், 1955-ன் கீழ், 2001 முதல் 2006 ஏப்ரல் மாதம் வரை ஐந்தாண்டுகளில் மொத்தம் 34,308 வழக்குகளும், 3,313 கைது நடவடிக்கைகளும், 1,492 வாகனக் கைப்பற்றுதலும், 67 நபர்கள் மீது தடுப்புக் காவல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த வழக்குகளிலிருந்து 251 நபர்கள் கைது செய்யப்பட்டதில் ஒருவர் மீது மட்டும் கள்ளச்சந்தை தடுப்புக் காவலின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த அளவிற்கு ஜெயலலிதா ஆட்சியிலே பதுக்கல்காரர்கள் மீதும், கடத்தல்காரர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படாமல் அவர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

ஆனால் தற்போது கழக ஆட்சியில் 2006 முதல் 2010 ஜூன் மாதம் முடிய மொத்தம் 58,807 வழக்குகளும், 13,311 கைது நடவடிக்கைகளும், 4,728 வாகனக் கைப்பற்றுதலும், அதில் 453 வாகனங்களின் உரிமத்தை ரத்து செய்யவும், 270 ஓட்டுநர் உரிமங்களை ரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆன்-லைன் வர்த்தகம் பற்றி பேசியுள்ள ஜெயலலிதா அரிசி, பருப்பு, சர்க்கரை போன்ற பொருள்களை விற்பனை செய்வதாகவும், அந்த அபாயத்தைக் கட்டுப்படுத்த கழக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், அவர்களைப் பாதுகாப்பதற்கு பல காரணங்கள் உண்டு என்றும் பேசியிருக்கிறார். ஆன்லைன் வர்த்தகத்தின் மூலமாக எந்தெந்தப் பொருள்களை விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற அடிப்படை கூட அவருக்குத் தெரியவில்லை. ஜெயலலிதா குறிப்பிட்டுள்ள இந்த மூன்று பொருள்களுமே ஆன்-லைன் வர்த்தகம் மூலமாக தற்போது விற்பனை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. அதுமாத்திரமல்ல, அந்த வர்த்தகர்களை நான் ஏதோ பாதுகாப்பதாகவும், அதற்கு ஏதோ காரணம் இருப்பதாகவும் ஜெயலலிதா புளுகியிருக்கிறார். உண்மை என்னவென்றால், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் ஆன்-லைன் வணிகத்திற்கு ஆட்சேபணை தெரிவித்து மாண்புமிகு

பாரதப் பிரதமர் அவர்களுக்கு 14.03.2007-ல் நான் அதிகார பூர்வமாகவே அறிவித்திருக்கிறேன். அதற்குப் பிறகுதான் பாசுமதி அரிசி தவிர பிற அரிசி வகைகளும், கோதுமையும், துவரம் பருப்பும், உளுத்தம் பருப்பும் 2007 முதல் ஊக வணிகத்தின் மூலம் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்ட பொருள்களின் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது. இந்த விவரங்கள் எதுவும் தெரியாமல், ஏதோ வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்ற பாணியில் எழுதிக் கொடுத்தவன் ஏட்டைக் கெடுத்தான் என்று அம்மணியார் கோவையில் புளுகியிருக்கிறார்.

காலாவதி மருந்து பற்றியும் ஜெயலலிதா கோவையிலே பேசியிருக்கிறார். காலாவதி மருந்து பற்றி சட்டப் பேரவையிலேயே விளக்கமாகப் பதில்கள் சொல்லப்பட்டு - அது குறித்து வழக்கும் பதிவு செய்யப்பட்டு - குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஜெயலலிதா ஆட்சியிலே இருந்த காலத்திலிருந்து காலாவதியான மருந்துகளின் முகப்புச் சீட்டுகளை மாற்றி மீண்டும் விற்பனைக்கு அனுப்பும் செயலில் ஈடுபட்டுவந்த ஒரு கும்பலை இந்த கழக அரசுதான் கண்டுபிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தது. இந்தச் செயலில் ஈடுபட்ட 40 நபர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அதில் 19 நபர்கள் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கை மேலும் விசாரிக்க குற்றப்பிரிவு புலனாய்வுத்துறைக்கு இந்த வழக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்டிருந்த 8 மொத்த மருந்து நிறுவனங்களின் மருந்து உரிமங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் சில நிறுவனங்களின் மருந்து உரிமங்களை இரத்து செய்ய மருத்துக் கட்டுப்பாடு இயக்குநர் நடவடிக்கை எடுத்துவருகிறார். இந்த நிலையில் போலி மருந்து மற்றும் காலாவதி மருந்துகளின் காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் மரணமடைந்ததாக ஒரு தவறான தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதா தனது பேச்சில், தமிழகத்தில் 42 ஆயிரம் மருந்துக் கடைகள் உள்ளன என்றும், அவைகளைச் சோதனை செய்ய அரசு சார்பில் 52 மருந்து ஆய்வாளர்கள் மட்டுமே உள்ளதாகச் சொல்லியிருக்கிறார். ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் எத்தனை மருந்து ஆய்வாளர்கள் இருந்தார்கள்? தற்போது அவர்களின்

எண்ணிக்கையை இந்த அரசு குறைத்து விட்டதா என்பதை ஜெயலலிதா சொல்லத் தயாரா? ஸ்டாலினின் மருமகன் பற்றி அவர் கூறிய குற்றச்சாட்டிற்கு நான் பதில் அளிக்க வில்லையாம், அதனால் அதை நான் ஒப்புக் கொண்டு விட்டேன் என்கிறார் ஜெயலலிதா. அதற்குள் அவசரப்படுகிறார் அம்மா! ஸ்டாலினின் மருமகன் மீது ஜெயலலிதா கூறிய புகாருக்கு அவரே அந்த அம்மையாருக்கு வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்.

மின்சாரப் பிரச்சினை குறித்தும் நான் பதில் சொல்லவில்லை என்கிறார் ஜெயலலிதா. அவர் தான் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கிறார் என்றால், எத்தனை முறை தான் நாம் பதில் சொல்வது? இந்த அரசின் சார்பில் மின்சாரப் பிரச்சினை குறித்து விளக்கமளிக்கப் பட்டு விட்டது. அவரது ஆட்சியில் மின்சாரம் உபரியாக இருந்தது என்றும், தற்போது பற்றாக்குறையாக உள்ளது என்றும் முக்கியமாக சொல்லியிருக்கிறார். அதற்குக் காரணம், தற்போது கழக ஆட்சியிலே புதிது புதிதாக தொழிற்சாலைகளை ஏற்படுத்தியதன் காரணமாக தொழில்வளம் பெருகி, மின்சாரத் தேவை அதிகமாகியுள்ள காரணத்தால், அந்தப் பற்றாக்குறையையும் ஈடுகட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் திட்டவட்டமாக ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதா தனது பேச்சில் மணல் கொள்ளை நடைபெறுவதாக நீண்ட நேரம் பேசியிருக்கிறார். ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலேதான் தமிழக அரசே மணல் குவாரிகளை எடுத்து நடத்தும் என்று 2003ஆம் ஆண்டில் அறிவித்து நடைமுறைப்படுத்தினார்கள். அதே நடைமுறைதான் தற்போதும் பின்பற்றப்படுகிறது. மணல் வியாபாரம் மூலமாக தனது ஆட்சியிலே ஆறுமுகசாமிகள் கப்பம் கட்டியதை மறந்து விட்டு, ஆதாரம் எதுவுமில்லாமல் தற்போதும் அப்படி நடக்கும் என்ற யூகத்தின் அடிப்படையில் கோவையிலே பேசியிருக்கிறார்!

அரசின் தோல்விகளையும், சாதனைகளையும் கணக்குப் போடுவதற்கான நல்ல தருணம் இது தான் என்றும், இந்த அரசின் சாதனைகள் என்று சொல்லக் கூடியவை மிகக் குறைவு என்றும் ஜெயலலிதா பேசியிருக்கிறார். இந்த நான்காண்டு காலத்தில் செய்யப்பட்ட ஒரு சில சாதனைகளை மட்டுமே இங்கே பட்டியலிடுவோம். அதற்குப் பிறகும் இந்தச் சாதனைகள் எல்லாம் "மாயத் தோற்றங்கள்" என்று ஜெயலலிதா கூறுகிறாரா?

கூட்டுறவுக் கடன் தள்ளுபடி; விவசாயிகளுக்கு குறைந்த பயிர்க்கடன் வட்டி -பயிர்க் காப்பீட்டுத் திட்டம் - 31 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியம் - நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம் - இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் - மாணவ மாணவியருக்கு சத்துணவுடன் வாரம் 3 முறை முட்டைகள்; வாழைப்பழங்கள் - பள்ளி, மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் ரத்து - செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சென்னையில் அமைப்பு - திருமணத் திட்ட நிதியுதவி 10 ஆயிரம் ரூபாய் என்பது 25 ஆயிரம் ரூபாயாக உயர்வு - ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபாய் - "உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" - 108 சேவைத் திட்டம் - இஸ்லாமியர் சமுதாயம் மேன்மை பெற 3.5 விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு - அருந்ததியர் சமூகத்தின் அவலம் தீர 3 விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு - சமத்துவபுரத் திட்டம் - மெட்ரோ ரயில் திட்டம் - ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் - ராமனாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் - மதுரவாயல், சென்னைத் துறைமுகம் பறக்கும் சாலைத் திட்டம் - "கலைஞர் வீட்டுவசதித் திட்டம்" என்பன போன்ற திட்டங்கள் எல்லாம் ஜெயலலிதாவின் அகராதியில் சாதனைகள் இல்லையா? கொள்ளையடித்த பூதத்தை கொஞ்ச நாள் அனுமதித்து விட்டு, இந்தப் பூதம் கூண்டோடும், கூட்டோடும் கொடநாடு குகைக்குள்ளே அடைபட்டுக் கிடக்கச் செய்ததும் சாதனைகளில் ஒன்றுதானே?

கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு பற்றியும் ஜெயலலிதா கோவையிலே பேசியிருக்கிறார். அந்த மாநாடு வசூல் செய்வதற்காகத்தான் நடத்தப்பட்டது என்றும், அந்த மாநாட்டிற்காக தமிழ்நாடு முழுவதும் 2000 கோடி ரூபாய் தி.மு.க. வினரால் வசூல் செய்யப்பட்டுள்ளது என்றும் ஜெயலலிதா குற்றம் சாட்டியிருக்கிறார். கோவையில் நடைபெற்ற மாநாட்டிற்காக எந்தத் தனியாரிடமோ, நிறுவனங்களிடமோ நிதி வசூலிக்கக் கூடாதென்று முடிவெடுத்து, முழுச் செலவையும் அரசாங்கத்தின் மூலம்தான் செய்யப்பட்டது.

தமிழ் பெயரைச் சொல்லி எனது குடும்ப கஜானாவை நிரப்பி விட்டதாகவும் ஜெயலலிதா சொல்கிறார். அவருக்கு எதை எடுத்தாலும் நிதி வசூல், ஊழல், கஜானாவை நிரப்பிக் கொள்ளுதல் என்ற நினைப்புதான். அமெரிக்காவிலிருந்து வந்த 3 கோடி

டாலரைதன் கஜானாவில் நிரப்பிக் கொண்டதைப் போலவும் - யாருக்கோ சொந்தமான கொடநாடு எஸ்டேட்டை எப்படியோ கைப்பற்றிக் கொண்டதைப் போலவும் - எண்ணிக் கொள்கிறார். 2000 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்ட தென்றால், ஜெயலலிதா உண்மையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் என்றால், பொறுப்போடு அந்த நிதி யார் யாரிடமிருந்து என்னால் வசூலிக்கப்பட்டது, அதற்கு என்ன ஆதாரம், என்று நிரூபிக்கத் தயாரா?

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை அமல்படுத்த ஒரு துரும்பைக் கூட நான் கிள்ளிப் போடவில்லை என்றும் ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். நடுவர் மன்றம் தன் இறுதி அறிக்கையை 05.02.2007 அன்று அளித்த பிறகு 19.02.2007, 05.04.2007 ஆகிய தேதிகளில் நடந்த அனைத்துக்கட்சிக் கூட்டங்களில் எடுத்த முடிவின்படி, பன்மாநில நதிநீர்த் தாவாச்சட்டம் பிரிவு 5 (3)-ன் கீழ் காவிரி நடுவர் மன்றத்தில் மேல் விளக்கம் கோரி தமிழ்நாடு அரசின் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்திலும் சிறப்பு முறையீட்டு மனு ஒன்றை 05.05.2007 தேதி அன்று தாக்கல் செய்துள்ளது. கேரளம் மற்றும் கர்நாடக அரசுகளும் நடுவர் மன்ற இறுதி ஆணையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தின் சிறப்பு முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

மேலும் நடுவர் மன்றத்திலும் இறுதி ஆணையில் விளக்கங்கள் கோரி பன்மாநில நதிநீர்த் தாவாச்சட்டப் பிரிவு 5(3)-ன்படி எல்லா மாநில அரசுகளும் மத்திய அரசும் மனுக்கள் தாக்கல் செய்துள்ளன. காவிரி நடுவர் மன்றம் 10.07.2007 அன்று, தற்போது காவிரி வழக்கு சிறப்பு முறையீட்டு மனுக்கள் (SLPs) மூலம் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதை கருத்தில் கொண்டு, உச்சநீதிமன்றம் இம்மனுக்களை அனுமதித்துள்ளதாலும் அவை உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாலும், உச்சநீதிமன்றத்தில் இம்மனுக்கள் விசாரிக்கப்பட்டு, ஆணை பிறப்பித்த பின்தான், அவர்களிடம் மேல் விளக்கங்களைக் கோரி தாக்கல் செய்துள்ள 5 (3) மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியும் என்று கூறியது.

உச்சநீதிமன்றத்தில் உள்ள மனுக்கள் விசாரிக்கப்பட்டு ஆணை பிறப்பித்த பின்தான், நடுவர் மன்றம் பன்மாநில நதிநீர்த் தாவாச்சட்டப் பிரிவு 5(3)-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ள

மனுக்களை விசாரித்து மேலும் ஒரு அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பும். மேற்கண்ட நடவடிக்கைகள் எல்லாம் முடிந்த பின்னர்தான் பன்மாநில நதி நீர்த் தாவாச்சட்டப் பிரிவு 6(1)-ன்படி மத்திய அரசு நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை அரசிதழில் பதிப்பிக்கும். அந்த ஆணை படுகை மாநிலங்களை கட்டுப்படுத்தும். இதுவே நடைமுறையில் உள்ள சட்டமாகும். அதுவரை ஏற்கெனவே 25.6.1991 ல் பெறப்பட்ட நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்திரவு நடைமுறையில் இருக்கும். இவ்வழக்கு 29.9.2009 அன்று விசாரணைக்கு வந்தபோது உச்ச நீதி மன்றம் இதை டிசம்பர், 2009 முதல் வாரத்திற்கு ஒத்தி வைத்தது. ஆனால், இதுவரை இவ்வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. உச்ச நீதி மன்றத்தில் காவிரி தொடர்பான சிறப்பு முறையீட்டு மனுவில் வழக்காட, கர்நாடக மாநிலம் 25 தொகுப்பில் அதன் ஆவணங்களையும், கேரளா 15 தொகுப்பில் ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளன. அவைகளுக்கு தேவையான கூடுதல் ஆவணங்களை வழக்கறி ஞர்களுடன் ஆலோசித்து தமிழ்நாடு சார்பிலும் 13 தொகுப்புகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

06.5.2010 அன்று தமிழக வழக்கறிஞர்கள் தலைமை நீதிபதி அமர்வின் முன் இவ்வழக்குப் பற்றி கவனத்திற்கு கொண்டுவந்தபோது நீதிமன்றம் இவ்வழக்கை ஆகஸ்டு முதல் வாரத்திற்கு ஒத்தி வைத்துள்ளது. இதையெல்லாம் மறைத்து விட்டு நான் துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை என்று ஜெயலலிதா சொல்கிறார் என்றால் அவர் எப்படிப்பட்ட புளுகுணி என்பதை தமிழ்நாட்டு மக்கள்தான் எடை போட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஜெயலலிதா எப்படிப்பட்டவர் என்பதற்கு இறுதியாக ஒன்றைக் கூறி முடிக்க விரும்புகிறேன். ஐந்து முறை தமிழகத்தின் முதல் அமைச்சராக இருந்த என்னை - இன்று வரை ஒரு தெரு வீட்டில் (Street House) அதாவது பத்து வீடுகளோடு இணைந்த ஒரு வீட்டில், அதுவும் நான் முதல் அமைச்சராக வருவதற்கு முன்பு வாங்கப்பட்ட அதே வீட்டில் - தொடர்ந்து வாழ்ந்து வருகின்ற என்னைப் பற்றி - "டிக்கெட் இன்றி, சட்டைப் பாக்கெட்டில் பணம் இன்றி, திருவாரூரிலிருந்து திருட்டு ரயில் ஏறி வந்தவர் என்று தன்னைப் பற்றிதானே கூறிக்கொண்ட ஒரு மனிதர், அரசியல்

மூலம் இவ்வளவையும் சம்பாதித்து இருக்கிறார்" என்று பேசியிருக் கிறார் என்றால் அவரைப் பற்றி தமிழ்நாட்டு மக்கள்தான் புரிந்து கொள்ளவேண்டும். திருட்டு ரயில் ஏறி வந்தவன் நான் என்று எப்போதும் நான் கூறிக் கொண்டதில்லை. நான் சென்னைக்கு வருவதற்கு முன்பே ஈரோட்டில் தந்தை பெரியாரின் "குடியரசு" அலுவலகத்தில் துணை ஆசிரியனாகப் பணியாற்றி, பின்னர் கோவையிலும், சேலத்திலும் திரையுலகிலே சேர்ந்து பல திரைப்படங்களுக்கு கதை வசனம் எழுதி, சம்பாதித்து அதன் பின்னர்தான் சென்னைக்கே வந்தேன். என்னுடைய பேனாவினால் நான் எழுதிக் குவித்த திரைப்படங்கள் மூலமாக, ஏராளமான நூல்கள் வாயிலாக நான் சம்பாதித்தேன். அவற்றிலிருந்து பொது நலன்களுக்காக நிதியும் வழங்கி வருகிறேன். ஆனால் ஜெயலலிதா என்னைக் கேட்பதைப் போல; வேறு யாராவது ஜெயலலிதாவைப் பார்த்து நீ எப்படி இவ்வளவு சொத்துக்களையும் சம்பாதித்தாய், நடிப்பின் மூலமாக மட்டும் இத்தனை சொத்துக்களையும் சம்பாதிக்க முடியுமா என்று கேட்டுவிட்டால் அவர் என்ன பதில் சொல்வார்? அவருக்கு இறுதி எச்சரிக்கை; "வைரம்" படத்து நாயகியே, வாயில் வந்ததையெல்லாம் பேசாதே! என்பது தான்!

அன்புள்ள,

மு.க.

19-7-2010

3486. தேன் துளிகள்; தேனருவியாகட்டும்!

உடன்பிறப்பே,

சமூக நீதி எனப்படும் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் 1921ஆம் ஆண்டு நீதிக் கட்சி ஆட்சியில் தொடங்கிய போர்க்களத்தில் மாறி மாறி வரும் வெற்றித் தோல்விகளுக்கிடையே - திராவிட இயக்கத்தின் ஜீவாதார முழக்கமான சமுதாயத்தில் கல்வி, வேலைவாய்ப்புகளில் முன்னேறியுள்ளோர் தவிர்த்து மற்றும் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோருக்கான இட ஒதுக்கீடு தொடர்பான தீர்ப்புகள் பலவற்றைப் பெற்று மகிழ்ச்சியும் அடைந்திருக்கிறோம்; மனக்கலக்கமும் பெற்றிருக்கிறோம். மாநிலத்திலோ, மத்தியிலோ ஆட்சிப் பொறுப்பை ஏற்போர்களைப் பொறுத்து இந்தச் சமூக நீதிப் போராட்டத்தில் வெற்றி தோல்விகள் அமைந்திருக்கின்றன. அந்த வெற்றி தோல்விகளுக்கு சட்டங்கள் நிறைந்த ஆயுதச்சாலைகளில் இருந்து இரு தரப்பு வழக்கறிஞர்கள் எடுத்துப் பயன்படுத்திய போர்க்கருவிகள் ஒரு புறம் - ஒவ்வொரு முறையும் அந்தப் போரினை முடித்து வைத்து வழங்கப்பட்ட தீர்ப்பு ஒரு புறம். இந்தச் சூழலில் முடிவடையாத இந்தச் சமூக நீதிப் போராட்டத்தில் இடையிடையே கிடைத்திடும் தேன் துளிகளில் ஒரு பகுதியாக தற்போது தமிழக அரசு எடுத்துள்ள தளரா முயற்சியின் விளைவாக; சமூக நீதி குற்றுயிரும் குலையுயிருமாக களத்திலே வீழ்த்தப்பட்டு விட்டது என்ற நிலைமைக்கு மாறாக; உயிர்த் துடிப்போடு உலவும் என்ற நம்பிக்கையை காலம் காலமாக ஒடுக்கப்பட்டு - கல்வி வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வரிசையில் இருப்போர் பெற்று, ஆறுதல் பெருமூச்சு விடக் கூடிய ஒரு நிலை நமது தமிழக அரசு தொடர்ந்து நீதிமன்றங்களில் நடத்திய சட்ட ரீதியான போராட்டத்தால் ஏற்பட்டிருக்கிறது.

மண்டல் கமிஷன் பரிந்துரைகள் தொடர்பாக உச்ச நீதி மன்றத்தில் ஆதரவாகவும் எதிராகவும் தாக்கல் செய்யப்பட்ட

மனுக்களின் மீது 1992ஆம் ஆண்டு நவம்பர் 16-ந்தேதியன்று ஒன்பது நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் தீர்ப்பு அளித்தது. பெரும்பான்மை நீதிபதிகள் அளித்த தீர்ப்பில், "மண்டல் கமிஷன் பரிந்துரைகளின்படி 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13ஆம் தேதி மத்திய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கி அன்றைய பிரதமர் வி.பி. சிங் பிறப்பித்த உத்தரவு செல்லும். இந்த ஒதுக்கீடுகள் அனைத்தும் 50 சதவிகிதத்திற்கு மேல் அதிகமாகப் போகக் கூடாது. ஏற்கேனவே பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து சமூக ரீதியில் முன்னேறியவர்களுக்கு இந்த இட ஒதுக்கீடு கூடாது. எனவே பிற்படுத்தப்பட்ட வகுப்புகளை நிர்ணயம் செய்ய இன்னும் நான்கு மாதங்களில் மத்திய மாநில அரசு கமிஷன்களை நியமிக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பு குறித்து தி.மு. கழகத்தின் சார்பில் நான் தெரிவித்த கருத்து வருமாறு :-

பொருளாதார அடிப்படை; அரசியல் சட்டத்திற்கு உகந்ததல்ல என்று தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது. இதை வரவேற்கிறோம். மத்திய அரசு உத்தியோகங்களில் 27 சதவிகிதம் பின் தங்கிய சமூகத்திற்கு ஒதுக்கிய தேசிய முன்னணியின் அரசு உத்தரவு செல்லுபடியாகும். இது தீர்ப்பின் இதயம் போன்ற பகுதியாகும். இதையும் வரவேற்கிறோம். ஆனால் 27 சதவிகித ஒதுக்கீடு உத்தரவை உடனடியாக அமல்படுத்த முடியாதபடி தடங்கல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சமுதாயத்தில் "முன்னேறிய - பின்தங்கிய சமூகத்தோரை" (Creamy Layer) இந்த 27 சதவிகிதத்தி லிருந்து நீக்கி விட வேண்டுமாம். எனவே இப்பிரச்சினை மீண்டும் "பண்டோராபெட்டி" யைத் திறந்து அநாவசிய சர்ச்சைகளைக் கிளப்பும். இது குறித்து மாநில அரசுகள் சுப்ரீம் கோர்ட்டை அணுகி இதற்கான மாற்றத்தை மறு ஆய்வின் மூலம் பெற வேண்டும். இல்லாவிடில் இது மாநிலந்தோறும் ஒரு பெரிய குழப்பத்தை ஏற்படுத்தும். ஆகவே இந்தத் தீர்ப்பு பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கிடைத்த பாதி வெற்றியே ஆகும்."

என்னுடைய இந்தக் கருத்தைப் பற்றி 21-11-1992 தேதியிட்ட "எகனாமிக் டைம்ஸ்" இதழ் எழுதும்போது, "இந்தத் தீர்ப்பு குறித்து முக்கியமாக திரு.கருணாநிதி சகல விதத்திலும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஏனெனில் பின்தங்கிய சமூகத்தினருக்கு சமூக நீதி

கோரி அவரது கட்சி பெரும் பணி ஆற்றியிருக்கிறது. 1990ஆம் ஆண்டு மண்டல் எதிர்ப்பு அலையால் வி.பி. சிங் ஆட்சி என்ற படகு ஆடிக் கொண்டிருந்தபோது முதலமைச்சராக இருந்த திரு. மு. கருணாநிதி தனது முழு பலத்தையும் உபயோகித்து வி.பி. சிங்கை ஆதரித்தார். ஆனால் சமுதாய ரீதியாக - கல்விரீதியாக - பின்தங்கியோரிலிருந்து முன்னேறியோரைக் கண்டறிந்து அவர்களைப் பின்தங்கியோர் பட்டியலில் இருந்து நீக்கி விட வேண்டும் என்கிற உச்ச நீதிமன்ற தாக்கீது தி.மு.க. தலைவரை வருத்தமடையச் செய்திருக்கிறது" என்று எழுதியிருந்தது.

இட ஒதுக்கீட்டை 69 சதவிகிதம் என்பதற்கு மாறாக 50 சதவிகித அளவிற்கு மட்டுமே செல்லும் என்று உச்ச நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பின் விளைவாகத் தொழில் கல்விகளில் 69 சதவிகித அளவிற்கு இடங்களை ஒதுக்குவது குறித்த போராட்டம் மாணவர்கள் மத்தியில் பெரிதாக எழுந்தது. இட ஒதுக்கீடு பிரிவில் எத்தனை சதவிகிதம் என்பதை நிர்ணயிக்கும் உரிமையை அந்தந்த மாநில அரசுகளுக்கே வழங்கும் வண்ணம் அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்பது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கையாக இருந்தது. இட ஒதுக்கீடு பிரச்சினையில் ஜெயலலிதா அரசு அப்போது இரட்டை வேடம் போடுவதைப் போல ஒரு கருத்து பத்திரிகையாளர்கள் மத்தியில் இருந்தது. அதற்குக் காரணம் 22-11-1993 அன்று உச்ச நீதி மன்றத்தில் அளித்த ஒப்புதல் பிரமாணப் பத்திரத்தில், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையேற்று தமிழ்நாட்டில் 93-94ஆம் ஆண்டுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க ஜெயலலிதா அரசின் சார்பில் சம்மதம் கொடுத்ததுதான். இதனால் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப்படும் நேரத்தில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடுதான் என்று அறிவிக்கப்படும் நிலை ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து உடனடியாக நான் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக, தி.மு.க., பா.ம.க., இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா தளம், அகில இந்திய பார்வார்டு பிளாக், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க., இந்திய தேசிய லீக் மற்றும் சிறுபான்மை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் சமூக அமைப்புகள் இணைந்து 69 சதவிகித இட ஒதுக்கீட்டை வற்புறுத்தி மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் முன் மறியல் போராட்டம் நடத்தின.

திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்களும் இதே பிரச்சினைக்காகக் குரல் கொடுத்ததோடு, இந்திய அரசமைப்புச் சட்டம் 31 சி.யின் அடிப்படையில் சமூக நீதியைக் காக்க சட்ட முன் வடிவு ஒன்றையே தயாரித்தளித்தார். அரசு வழிகாட்டு நெறிகளை அரசமைப்புச் சட்டத்தில் நான்காம் பிரிவு கூறுகிறது. அதில் உள்ள கொள்கைகளுக்கு ஏற்ப மாநில அரசு ஒரு சட்டம் செய்து, அது குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றிருந்தால், அந்தச் சட்டம் அரசமைப்புச் சட்டத்தின் 14 ஆவது மற்றும் 19வது ஷரத்துகளுக்கு முரணானது என்ற முறையில் அது செல்லாதது ஆகாது என்று திரு.வீரமணி அவர்கள் எழுதினார்.

69 சதவிகித இட ஒதுக்கீட்டை நீட்டிக்கச் செய்வதற்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வருவதே சரியான தீர்வாகும் என்று நான் ஓர் அறிக்கை விடுத்தேன். இட ஒதுக்கீட்டின் அளவு எவ்வளவு என்பதை உள்ளூர் நிலைமைகளின் அடிப்படை யில் மாநில அரசே முடிவெடுக்க வழி செய்யும் வகையில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் உடனடியாகக் கூட்டி, அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற ஆதரவளிக்கக் கோரியும் -

அவ்வாறு அரசியல் சட்டத்தைத் திருத்த ஆதரவு கேட்டும், பிரதமர் நரசிம்மராவ், முன்னாள் பிரதமர் வி.பி.சிங், தெலுங்கு தேசக் கட்சித் தலைவர் என்.டி. ராமராவ், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் இந்திரஜித் குப்தா, மார்க்சிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் ஹர்கிஷன் சிங் சுர்ஜித், பாரதிய ஜனதா தலைவர்கள் வாஜ்பய், எல்.கே. அத்வானி மற்றும் சந்திரசேகர், ஜார்ஜ் பெர்னாண்டஸ், பஸ்வான், ரபிராய், சிக்கந்தர் பக்த், சுப்பிரமணிய சுவாமி, இப்ராகிம் சுலைமான் சேட், பனத்வாலா, சித்த பாசு, உன்னிகிருஷ்ணன், பிரகாஷ் சிங் பாதல், கன்சிராம் போன்ற தலைவர்களுக்கு 27-6-1994 அன்று நான் கடிதம் எழுதினேன்.

அந்தக் கடிதத்தில் -

“மிகவும் பிற்படுத்தப்பட்டோர் உட்பட பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாநில அரசு வழங்கி வந்த இட ஒதுக்கீடு உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவின் காரணமாக 69 சதவிகிதத்திலிருந்து 50

சதவிகிதமாகக் குறைக்கப்பட்டு விட்டது. இது மக்கள் தொகையில் 85 சதவிகிதமாக இருக்கும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களிடையே பெருமளவில் வேதனையை உருவாக்கியுள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில் நாடாளுமன்றத்தின் மக்களவை, மாநிலங்களவை ஆகிய இரு அவைகளையும் உடனடியாகக் கூட்டி, அதில் இட ஒதுக்கீட்டுக்கான அளவை அந்தந்த மாநில தேவைகளுக்கேற்ப மாநில அரசே நிர்ணயிக்க வகை செய்யும், அரசியலமைப்புச் சட்டத்திற்கான அவசரத்திருத்தம் கொண்டு வருவதற்கு இணைந்து செயல்பட தங்கள் கட்சி முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 69 சதவிகித இட ஒதுக்கீடு நீடிப்பதற்கு தங்கள் கட்சி முழு ஆதரவைத் தெரிவித்திருப்பதால் தங்கள் ஆதரவு நிச்சயம் உண்டு என்று நம்புவதோடு, ஆதரிக்க வேண்டும் என்றும் கோரி, அந்த நோக்கத்தை அடைய தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் கேட்டுக் கொள்கிறேன். தங்களிடமிருந்து சாதகமான பதிலை எதிர்பார்க்கிறேன்."

என்று எழுதியிருந்தேன்.

இந்தக் கடிதத்திற்கு ஆதரவு தெரிவித்து வாஜ்பய், வி.பி. சிங், ரபிராய், இந்திரஜித் குப்தா, ஜார்ஜ் பெர்னாண்டஸ், ஹர்கிஷன் சிங் சுர்ஜித், சுப்பிரமணிய சுவாமி ஆகியோர் எழுதிய கடிதங்கள் 10-7-1994 தேதிய தினமணி இதழில் முழுவதுமாக வெளியிடப்பட்டிருந்தன. இதற்குப் பிறகு 18-7-1994 அன்று ஜெயலலிதாவும் இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் இட ஒதுக்கீடு பிரச்சினையில் ஆதரவு கோரி கடிதம் எழுதினார்.

29-6-1994 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, அவர்களிடமிருந்து பெற்ற அறிவுரைப்படி, இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் இதற்காக அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வர அனைத்துக் கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவதற்காக அப்போது கழக நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த திண்டிவனம் வெங்கட்ராமன், விடுதலை விரும்பி, மிசா கணேசன், முகமது சகி, ஜெ.எஸ். ராஜு ஆகியோரை டெல்லிக்கு அனுப்பி வைத்தேன்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஜூலை 10-ந்தேதி முதல் 15-ந்தேதி வரை வட்டத் தலைநகரங்களிலும், பேரூர்களிலும்

கூட்டங்களை நடத்துவதென்றும், ஜூலை 15-ந்தேதி முதல் 22-ந்தேதி வரை ஒன்றியங்களில் உள்ள எல்லா கிராமங்களிலும் அனைத்துக் கட்சி சைக்கிள் பேரணிகள் அல்லது நடைப் பேரணிகள் நடத்துவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

இட ஒதுக்கீடு பிரச்சினைக்காக 17-6-1994 அன்று தி.மு.கழகம் உட்பட அனைத்து எதிர்க் கட்சிகள் மத்திய மாநில அரசு அலுவலகங்கள் முன் மறியல் நடத்தப் போவதாக அறிவித்த போது அதே நாளில் இட ஒதுக்கீடு பிரச்சினைக்காக "பந்த்" நடத்துவதற்கு ஜெயலலிதா அழைப்பு விடுத்தார். உடனே தி.மு.கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தமது மறியல் போராட்டத்தை 20ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தோம். மறியல் போராட்டத்தால் வன்முறை ஏற்படும் என்று ஜெயலலிதா அரசு கூறி அனுமதி மறுத்ததோடு, 20-6-1994 அன்று காலையில் என்னையும், நல்லக்கண்ணு, டாக்டர் ராமதாஸ், எஸ். திருநாவுக்கரசர் ஆகியோரையும் கைது செய்து பின்னர் பெரும் விளைவுகள் ஏற்படக் கூடும் என்பதற்காக அன்று மாலையில் எங்களை விடுவித்தது. ஜெயலலிதாவின் அந்த மாறுபட்ட நிலையினை 15-7-1994 தேதிய "ப்ரண்ட் லைன்" ஏடு நீண்ட கட்டுரையாக "இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் ஜெயலலிதா இரட்டை வேடம்" என்ற தலைப்பிலேயே வெளியிட்டிருந்தது.

8-7-1994 தேதிய "தினமணி" நாளிதழோ, தனது தலையங்கத்தில், "இட ஒதுக்கீட்டை 69 சதவிகித அளவில் தொடர வேண்டும் என்பதில் தனக்கு ஆத்மார்த்த ஈடுபாடு உண்டு, இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணாமல் ஓய மாட்டேன்" என்று முதல் அமைச்சர் ஜெயலலிதா உறுதி அளித்திருக்கிறார். அவரது இந்த முடிவை வரவேற்கிறோம். முன்பு கச்சத்தீவை மீட்பேன் எனச் செய்த சபதத்தைப் போல இதுவும் வெறும் வாய்ச்சொல் வீரமாகக் போய் விடாமல் இந்த வாக்கை நிறைவேற்றிக் காட்டுவார் என்று நம்புகிறோம். அதே சமயம் சில கேள்விகள் மனதில் எழுவதைத் தவிர்க்க இயலவில்லை. 69 சத இட ஒதுக்கீடு இருக்க வேண்டும் என்று ஆத்மார்த்த மாக விரும்புகிற ஒருவரின் தலைமையில் இயங்கும் அரசு, 69 சதவிகித இட ஒதுக்கீட்டை அமல்படுத்த மாட்டோம், 50 சதவிகிதத்தை அமல்படுத்துகிறோம் என்று உச்ச நீதி மன்றத்தில் ஒரு உறுதிமொழியை எழுத்து மூலமாகக் கொடுத்தது எப்படி? கல்வி நிலையங்களில் இடங்களின் எண்ணிக்கை போர்க்கால

அடிப்படையில் அதிகரிக்கப்படும் என்று அமைச்சரவையில் தீர்மானம், ஒரு சில நாட்களுக்குள் மாணவர் சேர்க்கை ஒத்திவைப்பு என்று அறிவிப்பு, கன்னியாகுமரியில் ஒரு நிலை, புதுடெல்லியில் ஒரு நிலை, நவம்பர் மாதம் ஒரு நிலை, டிசம்பர் மாதம் ஒரு நிலை, அமைச்சரவைக் கூட்டத்தில் ஒரு நிலை, அரசு அறிவிப்பில் ஒரு நிலை என்று முதல்வர் (ஜெயலலிதா) வெவ்வேறு நிலைகளை மேற்கொள்வது இட ஒதுக்கீடு பிரச்சினையில் அவர் குழம்பிப் போயிருக்கிறார் என்பதைக் காட்டுவதாகவே இருக்கிறது.

"முன்னாள் முதல்வர் கருணாநிதி எழுதியுள்ள கடிதத்திற்குக் கிடைத்திருக்கும் பதில்கள் அந்தக் கட்சிகளிடமிருந்து ஆதரவைப் பெற முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருக்கின்றன. கருணாநிதி எடுத்த முயற்சிதானே என்று அலட்சியமாகவோ, அல்லது அரசியல் போட்டி மனப்பான்மை காரணமாகவோ ஜெயலலிதா இந்த வாய்ப்பை ஒதுக்கித் தள்ளி விடாமல், ஆக்கபூர்வமாக பயன்படுத்திக் கொள்ள முன் வர வேண்டும். கருணாநிதி புகழ் பெற்று விடுவாரோ என்று எண்ணித் தயங்குவதை விட, தமிழக மக்கள் நலம் பெற வேண்டும் என நினைத்துச் செயல்படுவது ஆரோக்கியமான முன்னுதாரணமாக இருக்கும். கருணாநிதியின் முயற்சியைத் தொடர்ந்து அவரோடு இணைந்து ஜெயலலிதா களத்தில் இறங்கட்டும்" என்று எழுதியிருந்தது.

இட ஒதுக்கீடு பிரச்சினை குறித்து இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவராக அப்போது இருந்த நண்பர் வாழப்பாடி ராமமூர்த்தி விடுத்த கண்டன அறிக்கையில் - "தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு 69 சதவிகித இட ஒதுக்கீடு பிரச்சினையில் போதுமான ஈடுபாடோ அல்லது நம்பிக்கையோ இல்லாத காரணத்தால் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளை உதாசீனப்படுத்தி ஒதுக்கித் தள்ளிவிட்டார். கடந்த 1929ஆம் ஆண்டிலிருந்து தமிழகம் அனுபவித்து வந்த இந்த இட ஒதுக்கீடு, ஜெயலலிதாவின் பொறுப்பற்ற செயல் காரணமாக இப்போது இழக்க வேண்டி வந்துள்ளது. ஜெயலலிதா இட ஒதுக்கீடு பற்றி உதட்டளவில் பேசி வந்தாரே ஒழிய அதனைப் பாதுகாக்க உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இட ஒதுக்கீடு 50 சதவிகிதத்துக்கு மிகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தீர்ப்பு வழங்க ஜெயலலிதா வழி செய்து கொடுத்து விட்டார்.

எனவே தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்து விட்ட ஜெயலலிதா முதல்வர் பதவியை ராஜினாமா செய்து விட்டு வெளியேற வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

இட ஒதுக்கீட்டிற்கான முயற்சிகளை நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது மாத்திரமல்ல; அதன் பின்னர் முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த நிலையிலும் சமூக நீதி பற்றிய இந்தச் சாராம்சங்களை வலியுறுத்தி, அதற்குத் துணை நிற்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும் மற்றும் பிரதமர்களுக்கும், இந்திய தேசத்து மாநில முதல் அமைச்சர்கள் அனைவருக்கும் நான் கடிதங்கள் எழுதியிருக்கிறேன். அந்த விவரங்களை நாளை எழுதுகிறேன்.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

22-7-2010

3487. தேன் துளிகள்; தேனருவியாகட்டும்! (2)

உடன்பிறப்பே,

இட ஒதுக்கீடு என்பதற்கு தமிழ்நாடுதான் அதற்கு விளை நிலம் - நாற்றங்கால் - தமிழ்நாட்டிலேதான் நீதிக் கட்சியினால் அதற்கு விதை ஊன்றப்பட்டு, தந்தை பெரியார் அவர்களால், பேரறிஞர் அண்ணா அவர்களால், பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் கவனமாகப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. பெரியாரும், அண்ணாவும் நடத்திய சமூக நீதிப் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியின் விளைவாகத்தான், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களிடம் சமூக நீதிப் போராட்டத்தால் தமிழகம் பற்றி எரிவதை எடுத்துச் சொல்லி, அதன் பயனாகவே அரசியல் சட்டத்தில் முதல் திருத்தமே வருவதற்கான நிலை ஏற்பட்டது. நம்முடைய எதிர்கால சந்ததி வாழ, வளம் பெற, நாடு வலிமை பெற, சமுதாயம் ஊக்கம் பெற, எத்தகைய முன்னேற்றங்களை கல்வித் துறையிலும், வேறு பல துறைகளிலும் நாம் பெற வேண்டுமென்று கருதுகிறோமோ, அதற்கெல்லாம் இடையூறாக சமூக நீதிப் பாதையில் அவ்வப்போது ஏற்படுகின்ற பின்னடைவை நீக்க வேண்டும் என்பதற்காகத்தான் தொடர்ந்து நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்.

இட ஒதுக்கீடு பற்றி 1994ஆம் ஆண்டில் அகில இந்தியத் தலைவர்களுக்கெல்லாம் நான் எழுதிய கடிதங்கள் குறித்தும், அதற்கு அவர்கள் ஆதரவு தெரிவித்து எழுதிய பதில் கடிதங்கள் குறித்தும் விரிவாக விளக்கியிருக்கிறேன். அதற்குப் பிறகு 1996ஆம் ஆண்டு நான்காவது முறையாகத் தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர்கள் ஞானசேகரன், சுப்பராயன், தாமரைக்கனி, பேராசிரியர் தீரன் ஆகியோர் இட ஒதுக்கீடு பிரச்சினை குறித்து 16-8-1996 அன்று சட்டப் பேரவையில் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார்கள்.

அப்போது பேசிய ஞானசேகரன், "ஏற்கனவே இந்த மாமன்றத்தில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டை கல்லூரி மாணவர்கள் சேர்க்கையின்போது கடைப்பிடிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசை வற்புறுத்தி, அரசியல் சாசனத்தின் 9வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. ஆனால் சில பேர் அதை எதிர்த்து 50 சதவிகிதத்திற்கு மேல் இட ஒதுக்கீடு கூடாது என்று உச்ச நீதி மன்றத்திற்குச் சென்ற காரணத்தினால், அப்போது இருந்த தமிழக அரசினுடைய முதல்வர் ஜெயலலிதா அவர்களும், மற்றவர்களும் சேர்ந்து, 50 சதவிகித இட ஒதுக்கீட்டை நாங்கள் அமல்படுத்துகிறோம் என்று ஒரு அபிடவிட்டை உச்சநீதிமன்றத்திலே தாக்கல் செய்தார்கள். அரசியல் சாசனத்தின் 9வது அட்டவணையில் சேர்க்கப்பட்ட விஷயத்தை அவர்கள் உச்சநீதி மன்றத்தில் தெரிவிக்காத காரணத்தினால், இந்த இட ஒதுக்கீடு சம்பந்தமாக, இந்த மாமன்றத்தில் நாம் தீர்மானம் நிறைவேற்றியும், 9வது அட்டவணையில் சேர்த்தும் அதை இன்னும் செயல்படுத்த முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறோம். இப்போது மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பின்னால், 69 சதவிகித இட ஒதுக்கீட்டை அமல்படுத்தும் முகத்தான், 9வது அட்டவணையையெல்லாம் நினைவுகூர்ந்து, ரெவ்யூ பெட்டிஷன் போட்டும் கூட, உச்சநீதி மன்றம் 50 விழுக்காட்டிற்கு மேல் இட ஒதுக்கீடு கூடாது என்கின்ற தீர்ப்பை வழங்கியிருக்கின்ற காரணத்தினாலே, தமிழக அரசு, இந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டை எப்படி செயல்படுத்தப் போகிறது, அதற்கு என்ன முயற்சி எடுக்கப் போகிறது?" என்று கேள்வி எழுப்பினார். அன்றையதினமே, அதற்குப் பதிலளித்து நான் கூறியதை சுருக்கமாக இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

> "இட ஒதுக்கீட்டில் 1991ஆம் ஆண்டு வரையிலே 69 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு என்று இருந்ததை அனைவரும் அறிவோம். அதற்குப் பிறகு வழக்கு ஒன்றின் காரணமாக 50 சதவிகிதம் என்ற நிலை உச்சநீதி மன்றத்தினுடைய தீர்ப்பால் ஏற்பட்டபோது தமிழகத்திலே உள்ள எல்லாக் கட்சிகளும் குரல் கொடுத்ததன் காரணமாக, எல்லாக் கட்சிகளினுடைய ஒத்துழைப்போடு இந்தச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

69 சத விகிதத்தை உறுதிப்படுத்துகின்ற வகையில், அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே ஒரு சட்டமும் இங்கே நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை வடிவமைத்துக் கொடுத்ததே திராவிடர் கழகம்தான். ஆனால் அந்த ஆட்சிக்காலத்திலே அதற்கு ஒரு நன்றி கூட சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. அந்தத் தீர்மானத்தை வரவேற்ற அதே நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ், திருநாவுக்கரசர் அவர்கள் கூட அந்த அணியிலே எங்களோடு இருந்தார். எல்லோரும் அந்தத் தீர்மானம் போதுமானதல்ல, அந்தச் சட்டம் போது மானதல்ல, இருந்தாலுங்கூட அந்தச் சட்டத்தை 9வது அட்டவணையிலே சேர்க்க வேண்டுமென்று குரல் கொடுத்தோம். அந்த நேரத்திலே நான் அகில இந்தியக் கட்சிகளினுடைய தலைவர்களுக்கு கடிதங்கள் எழுதி, "உங்களுடைய ஆதரவெல்லாம் தேவை, நீங்கள் நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டினுடைய இந்தச் சட்டத்தை அங்கீகரித்து 9ஆவது அட்டவணையிலே சேர்ப்பதற்கு துணை நிற்க வேண்டு"மென்று எழுதினேன். அந்தக் கடிதங்களுக்கு பெரும்பாலான தலைவர்கள் "நாங்கள் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம்" என்று கடிதங்கள் எழுதினார்கள். அந்தக் கடிதங்களுடைய நகல்களையெல்லாம் எடுத்து, அன்றைய மத்திய அரசுக்கு அனுப்பிவைத்து, இதனை 9 வது அட்டவணையிலே சேர்க்க உதவிட வேண்டுமென்று தி.மு.கழகத்தின் சார்பில் நானும் கேட்டுக் கொண்டேன். இதிலே அக்கறை உள்ள கட்சிகள் அனைத்தும், தங்களுடைய ஆவலை மத்திய அரசுக்கு தெரிவித்து வலியுறுத்தினார்கள். அதற்குப் பிறகு அரசியல் சட்டத்திலே சேர்க்கப்பட்டு 9வது அட்டவணையிலும் சேர்க்கப்பட்டது.

அதுபோதுமானது அல்ல, அந்தந்த மாநிலங்களின் நிலைகளுக்கேற்ப இந்த இட ஒதுக்கீட்டை அந்தந்த மாநில அரசுகளே நிர்ணயம் செய்து கொள்கின்ற அதிகாரம் மாநில அரசுகளுக்கு வழங்கப் பட வேண்டுமென்ற முறையில், அரசியல் சட்டம்

திருத்தப்பட வேண்டும் என்ற கருத்தை - கழகத்தின் சார்பில் நாங்கள் எடுத்து வைத்தோம். பா.ம.க. சார்பில் டாக்டர் ராமதாஸ் அவர்கள் வலியுறுத்திச் சொன்னார்கள். அதற்காக பல மாநாடுகள் நடைபெற்றன. பல தீர்மானங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அரசியல் சட்டத்திலே திருத்துவது என்றால் அதற்கு நாடாளுமன்றத்திலே மூன்றில் இரண்டு பங்கிற்கு மேற்பட்ட வாக்குகள் தேவை என்கிற ஒரு நியதி இருக்கின்ற காரணத்தால் இப்போது அது முடியுமா இயலுமா என்பது பிரச்சினையாக இருக்கிறது. இருந்தாலும் அந்த முயற்சியிலே இந்த அரசு ஈடுபடும்.

கடந்த காலத்திலே இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டு, 9வது அட்டவணையிலும் சேர்க்கப்பட்ட சட்டத்தை உச்சநீதி மன்றத்தில் நடைபெற்ற வழக்கின்போது கடந்த அரசின் காலத்தில் அரசு வழக்கறிஞர்கள் நினைவூட்டவே தவறி விட்ட காரணத்தினாலே, உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் அந்தத் தீர்ப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒன்பதாவது அட்டவணையிலே சேர்க்கப்பட்ட செய்தியையே கடந்த கால அரசில் வழக்கறிஞர்கள் எடுத்துச் சொல்லாத காரணத்தினாலே இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது."

★

1996ஆம் ஆண்டு சட்டமன்றத்திலே நடை பெற்ற இந்த விவாதத்திற்குப் பிறகு 1997ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாள் அன்றைய பிரதமராக இருந்த திரு.தேவகவுடா அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தில்,

"திரு. வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்த போது மத்திய அரசின் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கி ஆணை பிறப்பித்ததைத் தொடர்ந்து மத்திய அரசின் கல்வி நிலையங்களிலும் 27 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கிட உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் அந்தந்த மாநிலங்களே தேவைகளுக்கேற்ப இட ஒதுக்கீட்டின் அளவை நிர்ணயித்துக் கொள்ளும் வகையில்

அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்" என்று வலியுறுத்தியிருந்தேன்.

தமிழக முதலமைச்சர் பொறுப்பிலே 2006 ஆம் ஆண்டு ஐந்தாவது முறையாக அமர்ந்த நான் அந்த ஆண்டு அக்டோபர் மாத இறுதியில் அனைத்து மாநில முதல்வர்களுக்கும் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது :-

"அன்புள்ள முதல்வர் அவர்களுக்கு,

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் திருமதி. சோனியா காந்தி அவர்களுக்கு நான் எழுதியுள்ள கடிதத்தின் நகலை இத்துடன் இணைத்துள்ளேன். இக்கடிதத்தின் பொருள் தங்களுக்குப் புரியும். இக்கடிதம் கிடைத்தவுடன் அவர் உடனடி நடவடிக்கை எடுத்து என்னுடைய கடிதத்தில் கண்டுள்ள ஆலோசனைகளை மத்திய மனிதவள ஆற்றல் வளர்ச்சி அமைச்சகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். தங்களது மாநிலத்தில் சமூகரீதியிலும் கல்விரீதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர்; மக்கள் தொகையில் 70 சதவிகிதம் இருப்பார்கள் என்று நம்புகிறேன். எனவே, இத்தகைய உரிமை மறுக்கப்பட்ட வகுப்பினருக்கு கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் உங்களது மாநிலம் இடஒதுக்கீடு செய்திருக்கும் என்று நம்புகிறேன். உச்சநீதிமன்றத்தின் ஒருசில தீர்ப்புகளால், இட ஒதுக்கீடு முறைக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்பதை தாங்கள் அறிவீர்கள். தற்பொழுது இந்தப் பிரச்சினை 9 நீதிபதிகள் கொண்ட உச்சநீதிமன்றத்தின் அரசியலமைப்புச் சட்ட பெஞ்ச் முன்பு விசாரணைக்கு வரவுள்ளது.

அரசியல் அமைப்புச் சட்டம் 31(பி) பிரிவின் படி 9வது அட்டவணை யின்கீழ் இயற்றப்படும் சட்டங்கள் தாக்குதலுக்கு ஆளாக்கப்படவுள்ளன. இந்த வழக்கு வரும் அக்டோபர் 30-ம் தேதியன்று விசாரணைக்கு வரவுள்ளது. எனவே இப்பிரச்சினை அவசர முக்கியத்துவம் வாய்ந்த தாக உள்ளதால், தங்களது மாநிலம் உடனடி நடவடிக்கை எடுக்கலாம். இது சம்பந்தமாக தாங்கள் வரும் 30.10.2006 அன்று விசாரணைக்கு வரவுள்ள வழக்கில் தங்கள் மாநிலத்தையும் மனுதாரராக சேர்த்துக் கொள்ளலாம் என்பது எனது ஆலோசனையாகும். மத்திய அரசுக்கும் எம்.நாகராஜ்

என்பவருக்கும் நடைபெற்ற ஒரு வழக்கில் உச்சநீதிமன்றம் சமீபத்தில் அளித்துள்ள தீர்ப்பில்,

“மேற்கூறிய காரணங்களால் அரசுக்கு தவிர்க்கமுடியாத காரணங்கள் இருந்தாலும் கூட இடஒதுக்கீடு அளவு என்பது, மிக அதிகமாகப் போகாததாகவும் 50 சதவிகித உச்சவரம்பை தாண்டி விடாததாகவும் இருக்க வேண்டும்; பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தில் பொருளாதார ரீதியாக முன்னேறியவர்களை விலக்காமல் இருக்கக் கூடாது; இட ஒதுக்கீட்டை காலவரையறையின்றி நீட்டிப்பதாக இருக்கக் கூடாது’’

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

உச்சநீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பு இந்திய அரசியல் சட்டத்தின் உணர்வுக்கு எதிரானது என்பது கண்கூடு. அரசியல் சட்டத்தின் முன்னுரையில் குடிமக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதியை நிலை நிறுத்துவது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அரசியல் சட்டம் சமூ கரீதியிலும், கல்விரீதியிலும் பின்தங்கிய வகுப்பினருக்கு மட்டுமே இடஒதுக்கீட்டுக்கு வழிவகை செய்துள்ளதே யொழிய எந்த விதமான பொருளாதாரரீதியாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு என வகை செய்யப்படவில்லை. பல நூற்றாண்டுகளாக சமூகரீதியிலும், கல்விரீதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நுகத்தடியின்கீழ் இருந்து வந்துள்ளனர். சுதந்திரம் கிடைத்தபிறகுதான், அதுவும் அரசியல் சட்டத்தில் இட ஒதுக்கீட்டுக்கு வகை செய்யப்பட்ட பிறகுதான் இந்த வகுப்பினருக்கு அரசுப் பணிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் கதவுகள் திறந்து விடப்பட்டன. கடந்த 50 ஆண்டுகளில் இந்த வகுப்பினர் படிப்படியாக சமூக நிலைமையில் உயர்ந்து வருகின்றனர். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகள் இட ஒதுக்கீடு மூலம் அளிக்கப்பட்டு வந்த ஏணி இழுத்து விடப்பட்டுள்ளதால், இந்த வகுப்பினருக்கு பெரும் அதிர்ச்சி யளித்துள்ளது.

உச்சநீதிமன்றத்தின் முன்பு இந்த வழக்கில் மனுதாரராக மாறி இந்த வழக்கை உச்சநீதி மன்றத்தின் 13 அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகள் பெஞ்சுக்கு அனுப்ப வேண்டும் என்பதை

மத்திய அரசுக்கு வலியுறுத்த வேண்டிய தேவை மாநிலங்களுக்கு மிக அதிகமாக உள்ளது என்று நான் கருதுகிறேன். இந்த நெருக்கடியான வரலாற்றுரீதியான நேரத்தில் சமூகரீதியிலும், கல்விரீதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் ஆகியோரது நலன்களைப் பாதுகாத்து, பேரழிவு பின்விளைவுகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவசர நடவடிக்கைகளை எடுக்கும் படி தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு அந்தக் கடிதத்தில் நான் எழுதியிருந்தேன்.

இந்தக் கடிதத்திற்கு முன்பே 9-10-2006 அன்று திருமதி சோனியா காந்தி அவர்களுக்கு இட ஒதுக்கீடு பிரச்சினையில் ஐந்து பக்கங்கள் கொண்ட விவரமான கடிதம் ஒன்றை எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்தின் இறுதிப் பகுதியில் பின்வரும் யோசனைகளை தெரிவித்திருந் தேன்.

அ) ஒரு முழுமையான கருத்தைப் பெறும் வகையில் இட ஒதுக்கீட்டைப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு நடைமுறைப்படுத்தும் மாநில அரசுகளின் கருத்துக்களை இந்திய அரசு கோரிப் பெற வேண்டும்.

ஆ) இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை மட்டு மன்றி, ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள சட்டங்களைப் பற்றியும் உச்ச நீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் எடுத்துக்கொள்ள இருக்கிறது. ஒன்பதாவது பட்டியலில் சேர்க் கப்பட்டுள்ள எல்லாச் சட்டங்களும் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன. ஆகையால் இந்தப் பிரச்சினை குறித்தும் மாநில அரசுகளின் கருத்துகளைக் கண்டறிய மத்திய அரசு முன் முயற்சி எடுக்க வேண்டியது தேவையாகிறது. அப்பொழுதுதான், வழக்குகளைக் கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் நல்ல முறையில் கையாள இயலும்.

இ) எல்லா மாநிலங்களிலும், இதர பிற்படுத் தப்பட்டவர்களுக்கு உள்ள சிறப்பு நிலையை மத்திய அரசு தெரிந்து கொண்ட பிறகு இந்த வழக்கைப் பற்றிய வாதங்களை எடுத்துக் கொள்வது நல்லது. அப்பொழுது தான், நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 70 முதல் 85 சதவிகிதம் வரையிலுள்ள சமுதாயப் பிரிவினரைப் பாதிக்கும் பிரச்சினை குறித்து உச்ச நீதிமன்றத்திற்கு மத்திய அரசு உரிய முறையில் எடுத்துச் சொல்ல இயலும். வரலாற்று முறையில் உருவாகியிருக்கும் கசப்பான இந்தச் சிக்கல் தீர்க்கப் படுவதற்குப் பல வகையான நியாயமான தீர்வுகள் தேவைப்படுகின்றன.

ஈ) அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புக் குறித்து உச்ச நீதிமன்றம் விவாதிக்க இருப்பதால், மத்திய அரசே இவ்வழக்கில் தன்னையும் சேர்த்துக் கொள்ளலாம். மேலும் ஒன்பதாவது அட்ட வணையில் சேர்க்கப்பட்டிருக்கும் சட்டங்களை இயற்றுவதில் மத்திய அரசு ஆக்கப் பூர்வமான பங்காற்றியிருக்கிறது. மத்திய அரசும் அனைத்து மாநில அரசுகளும் உச்ச நீதிமன்றத்தின் முன் உள்ள இந்த வழக்குகளில் பங்கேற்காமல், பல கோடிக்கணக்கான மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளைச் சரியாக முன் வைத்து வாதிட முடியாது.

உ) இப்பொழுது எழுந்துள்ள வழக்கை இன்னும் விரிவான 13 நீதிபதிகள் அடங்கிய உச்சநீதி மன்ற பெஞ்ச் விசாரிக்க நடவடிக்கைகள் எடுக்கலாம். ஏனென்றால் கேசவானந்த பாரதி வழக்கில் (அரசமைப்புச் சட்டத்தின்) அடிப்படைக் கட்டமைப்பு எனும் கருத்தாக்கத்தை 13 நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் உருவாக்கியது.

ஆகையால் இந்த நெருக்கடியான கட்டத்தில் இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன்களையும் உரிமைகளையும் உறுதியாகவும், நல்ல முறையிலும் பாதுகாக்க எல்லாத் தேவையான

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த நெருக்கடியான நேரத்தில் உங்கள் உதவியை அவர்கள் முழுமையாக நம்பியுள்ளார்கள். இந்த விஷயத்தில் சரியான காலத்தில் நீங்கள் எடுக்க இருக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் நான் தனிப்பட்ட முறையில் நன்றியுடன் இருப்பேன்.

இவ்வாறு திருமதி சோனியா காந்தி அவர்களுக்கு எழுதியதோடு நிற்காமல் பின்னர் நான் அனைத்து முதல் அமைச்சர்களுக்கும் கடிதம் எழுதியபோது இந்தக் கடிதத்தை இணைத்தும் அனுப்பினேன்.

ஏன் இன்னும் சொல்லப்போனால், தி.மு. கழகத்தின் சார்பில் தேர்தல் நேரத்தில் வைக்கப்பட்ட ஒவ்வொரு தேர்தல் அறிக்கையிலும் இட ஒதுக்கீடு குறித்தும், சமூக நீதி பற்றியும் நான் சொல்லாமல் விட்டதே கிடையாது. 1996ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருவதற்கு முன்பே - நாடாளுமன்ற, சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்காக கழகத்தின் சார்பில் படிக்கப்பட்ட தேர்தல் அறிக்கையில்,

“சமூக நீதி பெற உருவாக்கப்பட்ட இயக்கம் தான் திராவிட இயக்கம். தி.மு.கழகம் பங்கேற்ற திரு.வி.பி.சிங்கின் தேசிய முன்னணி அரசால்தான் மாநில அளவில் இருந்த இட ஒதுக்கீடு மண்டல் கமிஷன் பரிந்துரை அடிப்படையில் மத்திய அரசு அளவிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது இந்திய வரலாற்றில் மகத்தான நிகழ்ச்சியாகும். ஆனால் இது குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு சமூக நீதிக்கான பயணத்தில் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது. ஐம்பது சதவிகிதம்தான் இட ஒதுக்கீடு இருக்க வேண்டு மென்பதும்; பின் தங்கியோரில் கிரீமிலேயர் எனும் வசதி பெற்றோர் என்று சொல்லப்படுபவர்களுக்கு இட ஒதுக்கீடு கிடையாதென்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல. அவை சமூக நீதிக்குப் புறம்பானவை. எனவே எத்தனை சதவிகிதம் இடஒதுக்கீடு இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்யும் அதிகாரம் மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டும். கிரீமிலேயர் என்பது பொருளாதார அடிப்படையைக் கொண்ட தால் அந்த அளவு கோல் நீக்கப்பட்டு வருமான வசதி வித்தியாச மின்றி பின்தங்கிய சமூகத்தினர் அனைவருக்கும் இட ஒதுக்கீடு

வழங்கப் பட வேண்டுமென்றும்; அரசியல் அமைப்புச் சட்டம் அதற்கேற்பத் திருத்தப்பட வேண்டுமென்றும்; மத்திய அரசின் கல்விக் கூடங்களுக்கும் உடனடியாக இந்த இட ஒதுக்கீடு முறை கொண்டுவரப்பட வேண்டுமென்றும் தி.மு.கழகம் வற்புறுத்தும்" என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். 1996ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே மாத்திரமல்ல; 2006ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே கூட,

"பிற்படுத்தப்பட்டோருக்கான மத்திய அரசின் இட ஒதுக்கீட்டில் உள்ள வருமான உச்ச வரம்பை (கிரீமிலேயர்) நீக்குவதற்குரிய சட்டத் திருத்தங்களை கொண்டு வருவதற்கு தேவையான முயற்சிகளை மேற்கொள்வோம். தமிழ் நாட்டில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை தடையின்றி செயல்படுத்த உச்சநீதிமன்ற வழக்கினை விரைவுபடுத்தி தகுந்த தீர்ப்பினைப் பெறுவதற்கு வழிவகை செய்வோம். அந்தந்த மாநிலங்களில் வாழும் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கைக் கேற்ப இடஒதுக்கீடு அளவை அந்தந்த மாநிலங் களே மேற்கொள்வதற்குரிய வகையில் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்படவேண்டும்....." என்று குறிப்பிட்டிருந்தோம்.

இவ்வாறு தொடர்ந்து 1920ஆம் ஆண்டு முதல் சமூக நீதிக்காக - இட ஒதுக்கீட்டிற்காக குரல் கொடுத்து வந்ததின் பயனாகத்தான் - நான் தொடக்கத்தில் குறிப்பிட்டதைப் போல - வெற்றியும், தோல்வியும் மாறி மாறி கிடைத்து வருகிறது என்பதின் அடையாளமாக - கடந்த 13-7-2010 அன்று உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் தலைமை நீதிபதி எஸ்.எச். கபாடியா, நீதிபதி கே.எஸ். ராதாகிருஷ்ணன், மற்றும் நீதிபதி சுதந்திர குமார் ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற பெஞ்ச் அளித்த தீர்ப்பு நமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளது.

உச்ச நீதி மன்றம் அளித்த இந்தத் தீர்ப்பில் -

"பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத் தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு மொத்தமாக தமிழ்நாடு அரசு 69 விழுக்காடு இட ஒதுக்கீடு தருவது மேலும் ஓராண்டிற்கு தொடரலாம்.

1993இல் 69 விழுக்காடு ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டம் செல்லுமா என்பது குறித்து கருத்து எதுவும் இந்தக் கட்டத்தில் தெரிவிக்க விரும்பவில்லை.

பிற்படுத்தப்பட்டோரின் எண்ணிக்கை குறித்த புள்ளி விவரத்தை மாநிலப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திடம் மாநில அரசு அளிக்க வேண்டும் என்று உச்சநீதி மன்றம் இப்பொழுது கேட்டுக் கொண்டிருக்கிறது. அப்படி அளிக்கப்படும் புள்ளி விவரத்தின் அடிப்படையில், மாநிலப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், புதிதாக இட ஒதுக்கீட்டு அளவைப் பிற்படுத்தப்பட்டோருக்குப் பரிந்துரைக்கும். உச்சநீதிமன்றம் பொதுவாக விதித்துள்ள மொத்தம் 50 விழுக்காடு இட ஒதுக்கீட் டிற்கும் அதிகமாக தர வேண்டும் என்று ஆணையம் கருதினால், மண்டல் ஆணைய (இந்திரா சாஹ்னி) வழக்கில், 1992இல் உச்சநீதிமன்றம் கூறிய அடிப் படைகளை கணக்கில் கொண்டு முடிவு தெரிவிக்க வேண்டும். அதாவது 50 விழுக்காடு எல்லையைத் தாண்டுவ தென்றால் மாநிலத்தில் நிலவும் சிறப்புக் காரணங்களைக் கூற வேண்டும்.”

என்று கூறப்பட்டுள்ள வாசகங்கள் - பாலைவனத்தில் குடிநீர் கிடைக்காமல் வேகாத வெயிலில் சென்று கொண்டிருந்தவர்களுக்கு வழியிலே ஒரு சிறிய நீரூற்று தென்பட்டதைப் போல - தமிழ்நாட்டு மக்களுக்கு அமைகிறது என்றால் மிகையல்ல. அதிலும் குறிப்பாக எத்தனையோ ஆண்டு காலமாக இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்காக உண்மையிலேயே பாடுபட்டு வரும் நமக்கு தேன் துளிகள் தேனருவியாகப் பெருகிட வேண்டுமென்ற ஆவல் ததும்புவதில் வியப்பில்லை அல்லவா? மாநிலத்தில் சிறப்புக் காரணங்கள் இருந்தால், அதனைத் தெரிவித்து 50 விழுக்காடு என்பதைத் தாண்டலாம் என்றும் உச்சநீதிமன்றம் கூறியிருப்பது நாம் கேட்கின்ற மாநிலங்களுக்கு இட ஒதுக்கீட்டு அதிகாரம் வேண்டும் என்ற நியாயத்தை உணர்ந்து சொல்லியிருப்பது போலத் தெரிகிறது.

இந்த வெற்றியிலும் மகிழ்ச்சியிலும் நாம் உரிமை கொண்டாடுவதற்கு ஆட்சியில் நாம் இருந்தாலும்

இல்லாவிட்டாலும் திராவிட இயக்கத்தின் சமூக நீதி கொள்கையை தொய்வில்லாமல் பாதுகாத்து நிறைவேற்றி வருகிறோம் என்பதற்கு நீதி மன்றங்களில் நாம் நடத்தி வந்துள்ள சட்ட ரீதியான சமூக நீதிப் போராட்டங்களும் மக்களிடையே ஏற்படுத்திய விழிப் புணர்வும் பெரும் காரணங் கள் என்பது மாத்திர மல்ல; ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் இந்தச் சமூக நீதியைப் பலமாகப் பாதுகாத்து மிகவும் பிற்படுத்தப்பட்டோரான வன்னியப் பெரு மக்களும், சீர் மரபினர்களும் மற்றும் சில வகுப்பினரும்; மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பட்டியலில் இணைக்கப்பட்டு, 20 விழுக்காடு எனப் பயன் பெறவும் - மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடாக இஸ்லாமியப் பெருமக்கள் 3.5 விழுக்காடு பெறவும் - தாழ்த்தப்பட்டோருக்கான ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடாக அருந்ததியப் பெருமக்கள் 3 விழுக்காடு பெறவும் - தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் பழங்குடியின மக்களும் ஒட்டுமொத்தமாக 18 விழுக்காடு என்று பெற்றிருந்ததை மாற்றி, பழங்குடி இன மக்களுக்கென தனியே ஒரு விழுக்காடு என்றும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமே 18 விழுக்காடு என்றும் மாற்றியமைத்ததும் - முன்னேறிய வகுப்பினர் பட்டியலிலே இருந்த கொங்கு வேளாளச் சமுதாயத்தினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைத்ததும் - சமூக நீதியில் இந்த இயக்கத்திற்கு உள்ள அக்கறைக்கான எடுத்துக்காட்டுகளாகவும் - அதனால்தான் அண்மையில் வந்துள்ள உச்ச நீதிமன்ற தீர்ப்பை தேன் துளிகளாகவும், இது தேனருவியாக மாறுகின்ற அளவுக்கு சமூக நீதிப் பயணத்தில் முழுமையான வெற்றியைப் பெற வேண்டுமென்றும் விரும்புகிறோம்.

(முற்றும்)

அன்புள்ள,

மு.க.

23-7-2010

3488. இட ஒதுக்கீடும்; இரட்டை வேடமும்! (3)

உடன்பிறப்பே,

இட ஒதுக்கீடு பிரச்சினை பற்றி உச்சநீதி மன்றம் கடந்த 13-7-2010 அன்று வெளியிட்ட தீர்ப்புகள் குறித்தும் அதன் விளைவுகள் என்ன என்பதை விவரித்தும், இந்தப் பிரச்சினையில் கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்களை யெல்லாம் விரிவாகத் தொகுத்தும் இரண்டு கடிதங்களை நான் முரசொலியில் எழுதியிருந்தேன். உச்சநீதிமன்ற வழக்கு ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட சட்டம் தொடர் பானது என்றும், எனவே அந்தத் தீர்ப்பைப் பற்றி எழுதினால் ஜெயலலிதாவுக்கு புகழ் கிடைத்து விடுமோ என்பதற்காக நான் அதை இருட்டடிப்பு செய்யும் வகையில் மௌனமாக இருந்தேன் என்றும், தற்போது அவருக்கு ஏதோ பாராட்டு விழா நடத்த சில பிற்படுத்தப்பட்டோர் அமைப்புகள் முடிவு செய்த செய்தியை ஏடுகளிலே பார்த்துவிட்டு, நான் இந்த இரண்டு கட்டுரைகளில் நஞ்சைக் கக்கியிருப்பதாகவும் ஜெயலலிதா அவருக்கே உரிய பாணியில் உளறிக் கொட்டியிருக்கிறார்.

நஞ்சைக்கக்குவது - கபட நாடகம் என்று கூறுவது - எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவது - உதிர்ந்த ரோமம் என்பது - பதிபக்தி இல்லாதவர் என்று விமர்சிப்பது - ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களை யெல்லாம் மரியாதை இல்லாமல் பேசுவது - ஆளுநர் கையைப் பிடித்து இழுத்தார் என்று வாய் கூசாமல் புளுகுவது - இவைகள் எல்லாம் ஜெயலலிதா என்ற தனிப்பட்ட ஒரு பெண்மணிக்கே உரிய வாசகங்கள் ஆகும்.

ஜெயலலிதா ஆட்சியில் இயற்றிய சட்டம் என்பதை நான் ஏதோ மறைத்து விட்டதாகச் சொல்லியிருக்கிறார். இது உண்மையா? நான் முரசொலியில் எழுதிய கடிதத்தில் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது பற்றியும்,

சட்டம் நிறைவேற்றப்பட்டது பற்றியும், அந்தத் தீர்மானத்தை வடிவமைத்துக் கொடுத்ததே திராவிடர் கழகப் பொதுச் செயலாளர், தமிழர் தலைவர் வீரமணி என்பதை நினைவூட்டியும், ஆனால் அதற்கு அந்த ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு நன்றி சொல்லவில்லை என்றும், அந்தச் சட்ட முன் வடிவு அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு தமிழகச் சட்ட மன்றத்திலே நிறைவேற்றப்பட்டதையும் விரிவாகவே எழுதியிருக்கிறேன். எப்போதும் போல எதையும் ஒழுங்காகப் படிக்காமல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் சட்டம் இயற்றப்பட்டது என்பதை நான் இருட்டடிப்பு செய்து விட்டேன் என்று ஜெயலலிதா அறிக்கை விடுத்திருக்கிறார். நான் என்னுடைய கடிதத்தில் "18-7-1994 அன்று ஜெயலலிதாவும்; இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் இட ஒதுக்கீடு பிரச்சினையில் ஆதரவு கோரி கடிதம் எழுதினார்" என்றும் அரசியல் நாகரிகத்தோடு வரலாற்றை மறைக்கக் கூடாது என்ற வகையில் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் அதைப் புரிந்து கொள்ளாமல் அவர் குதிக்கிறார் என்றால் அதற்கு நான் என்ன செய்வது?

இட ஒதுக்கீடு பிரச்சினையில் ஜெயலலிதா இரட்டை வேடம் போட்டதாக நான் எனது அறிக் கையிலே சொல்லியிருப்பதாகத் தெரிவித்து அதற்கு அவர் கண்டனம் தெரிவித்திருக்கிறார். இதிலும் அவர் நுனிப்புல்தான் மேய்ந்திருக்கிறார்.

"இட ஒதுக்கீடு பிரச்சினையில் ஜெயலலிதா அரசு அப்போது இரட்டை வேடம் போடுவதைப் போல ஒரு கருத்து பத்திரிகை யாளர்கள் மத்தியில் இருந்தது. அதற்குக் காரணம் 22-11-1993 அன்று உச்ச நீதிமன்றத்தில் அளித்த ஒப்புதல் பிரமாணப் பத்திரத்தில், உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பையேற்று தமிழ்நாட்டில் 93-94 ஆம் ஆண்டுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க ஜெயலலிதா அரசின் சார்பில் சம்மதம் கொடுத்ததுதான்" என்றும்; 15-7-1994 தேதிய "ப்ரண்ட்லைன்" ஏடு நீண்ட கட்டுரையாக அதைப் பற்றி எழுதியிருந்தது என்றும் நான் தெரிவித்திருந்தேனே தவிர, அவர் இரட்டை வேடம் போட்டதாக நான் கூறவில்லை. "ப்ரண்ட் லைன்" ஏடு தான் அப்படிக் கூறியது.

"ப்ரண்ட் லைன்" இதழ் அப்படி எழுதியதாக நிரூபிக்க முடியுமா என்று ஒருவேளை அவர் கேட்கக் கூடும்.

"If the AIADMK Government in Tamil Nadu finds itself isolated today on the sensitive reservation issue it has to blame itself. This isolation is in sharp contrast to the support it received from all Opposition Parties on December 31, 1993 when the State Assembly unanimously passed a bill.....But today, Jayalalitha finds herself caught in a cleft. The Chief Minister's attempts to extricate herself have only worsened her plight. All the Major Opposition Parties rejected her invitation to join her to meet Prime Minister on June 25 to press the Centre for Presidential assent for the State Bill. They increasingly view her as being "insincere" and playing a "double game" on this issue, which is the bed rock of the Dravidian Movement."

(இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் தமிழகத்திலே உள்ள அ.இ.அ.தி.மு.க. அரசு தனிமைப்படுத்தப்பட்டிருப்பது போல உணருகிறது என்றால், அந்த நிலைக்கு அவர்கள்தான் காரணம் என்று தங்களுக்குத் தாங்களே குற்றஞ்சாட்டிக் கொள்ள வேண்டும். 31-12-1993 அன்று தமிழகச் சட்டமன்றம் ஒருமனதாக மசோதா ஒன்றினைக்கொண்டு வந்து நிறைவேற்றிக் கொண்ட நேரத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளின் ஆதரவையும் பெற்றிருந்த நிலை அடியோடு மாறி இன்றைக்கு ஜெயலலிதாதானே ஒரு பொறியில் சிக்கிக்கொண்டிருக்கிறார். அதிலிருந்து விடுவித்துக்கொள்ள அவர் மேற்கொண்ட முயற்சி நிலைமையை மேலும் மோசமாக்கிவிட்டது. அரசின் மசோதாவுக்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத் தரும்படி பிரதமர் அவர்களை வற்புறுத்துவதற்காக கடந்த ஜூன் மாதம் 25ஆம் தேதி டெல்லி சென்றபோது, தனது தலைமையிலான பிரதிநிதிகள் குழுவில் பங்கேற்க வருமாறு ஜெயலலிதா விடுத்த அழைப்பை அனைத்து முக்கிய எதிர்க் கட்சிகளும் நிராகரித்துவிட்டன. திராவிட இயக்கத்தின் அஸ்திவாரமான கொள்கைகளில் ஒன்றான இந்தப் பிரச்சினையில் ஜெயலலிதா உண்மையாக இல்லை, இரட்டை வேடம் போடுகிறார் என்றே அவர்கள் கருதுகிறார்கள்.)

இதிலிருந்து ஜெயலலிதா இரட்டை வேடம் போட்டதாக நான் கூறவில்லை என்பதும், ஏடுகள் தெரிவித்த கருத்தைத்தான் தெரிவித்தேன் என்பதும் தெளிவாகிறது அல்லவா? ஆனால் ஜெயலலிதா என் மீது கண்டனம் தெரிவித்திருக்கிறார் என்றால் அந்தக் "குணவதி"யைப் பற்றி மக்கள் புரிந்து கொண்டால் போதும்!

அடுத்து ஒரு இமாலயப் பொய்யை ஜெயலலிதா தனது அறிக்கையிலே சொல்லி யிருக்கிறார். தாழ்த்தப்பட்டோருக்கு 18 விழுக்காடு இட ஒதுக்கீடும், பழங்குடியினருக்கு 1 விழுக்காடு இட ஒதுக்கீடும் தமிழகத்தில் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வந்தது என்று கூறியிருக்கிறார். 1969ஆம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின், திரு.ஏ.என். சட்டநாதன் அவர்கள் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு அளித்த பரிந்துரையினை ஏற்று, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அதுவரை 16 சதவிகிதம் என்றிருந்த இட ஒதுக்கீட்டு அளவை 18 சதவிகிதம் என்று உயர்த்தி 7-6-1971 அன்று ஆணை பிறப்பிக்கச் செய்தேன். அதே ஆணையில்தான் அதுவரை பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 25 சதவிகிதம் என்றிருந்த இட ஒதுக்கீட்டை 31 சதவிகிதம் என்று உயர்த்தினேன்.

அதன் பின்னர், அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கான சலுகைகளைப் பெற அவர்களது ஆண்டு வருமானம் 9 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு இருக்கக் கூடாது என்று அ.தி.மு.க. ஆட்சி உச்ச வரம்பு விதித்து - அதன் காரணமாக அ.தி.மு.க. வின் நாடாளுமன்றத் தேர்தல் தோல்விக்குப் பிறகு - 1-2-1980இல் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை 31 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்தினார்கள். அதற்குப் பின் 28-3-1989இல் நான் முதல் அமைச்சராக இருந்தபோது டாக்டர் ராமதாஸ் அவர்களுடன் விவாதித்து, பிற்படுத்தப்பட்டோருக்கான 50 சதவிகித இட ஒதுக்கீட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவிகிதம் தனி ஒதுக்கீடு செய்தேன். 22-6-1990இல் நான் முதல்வராக இருந்தபோதுதான், தாழ்த்தப்பட் டோருக்கும், பழங்குடியினருக்கும் சேர்த்து 18 சதவிகிதம் இட ஒதுக்கீடு என்பதில், தாழ்த்தப்பட்டோருக்கு மட்டும் 18 சதவிகிதம் என்றும் பழங்குடியினருக்கு தனியாக ஒரு சதவிகிதம் என்றும் ஆக்கினேன். ஆனால் ஜெயலலிதா இதையெல்லாம் மறைத்துவிட்டு,

அவருடைய மொழியிலே சொல்ல வேண்டுமானால் அப்படியே இருட்டடிப்பு செய்துவிட்டு, தமிழகத்தில் இந்த இட ஒதுக்கீடு காலம் காலமாக பின்பற்றப்பட்டு வந்தது என்று தனது பாணியில் புளுகியிருக்கிறார்.

ஜெயலலிதா அறிக்கையிலே மற்றொரு பொய்! மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று மத்திய அரசு 13-8-1990 அன்று ஆணை வெளியிட்டதாகவும், 13-8-1990 முதல் 30-1-1991 வரை ஆட்சியிலே இருந்த நான் மண்டல் கமிஷன் பற்றி தீர்மானம் நிறைவேற்ற வில்லை என்றும், 30-9-1991 அன்றுதான் ஜெயலலிதாவின் தீர்மானம் கொண்டுவரப்பட்டது என்றும் ஜெயலலிதாவின் அறிக்கையிலே எழுதிவிட்டு, அவரே 21-8-1990 அன்று மண்டல் கமிஷன் பரிந்துரை அடிப்படையில் ஆணை பிறப்பித்ததற்காக பாராட்டுத் தீர்மானம் தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்டதென்று சொல்லியிருக்கிறார். மண்டல் குழுவின் பரிந்துரைகளை உடனடியாக நிறைவேற்றிட மத்திய அரசு முன்வர வேண்டுமென்று ஒரு சிறப்புத் தீர்மானத்தை 12-5-1989 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் முன்மொழிந்தவனே நான்தான். 5-2-1990 அன்று நான் டெல்லி சென்றிருந்தபோது, துணைப் பிரதமராக இருந்த தேவிலால் அவர்களைச் சந்தித்து மண்டல் கமிஷன் பரிந்துரைகளை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

12-6-1990 அன்று பிரதமர் வி.பி. சிங் அனைத்து மாநில முதல் அமைச்சர்களுக்கும் மண்டல் கமிஷன் பரிந்துரைகள் பற்றி கருத்துக்களைக்கேட்டு, அந்த மாத இறுதியிலேயே அதற்கு நான் பதில் எழுதி - அதைப் பற்றி பின்னர் பிரதமர் வி.பி.சிங் கூறும்போது, மத்திய அரசின் சார்பில் எழுதப்பட்ட கடிதத்திற்கு உடனடியாக பதில் எழுதிய மாநிலம் தமிழ்நாடு மட்டும் தான் என்று பாராட்டினார். 26-5-1990 அன்று தஞ்சை மாநகரில் சமூக நீதி மாநாடு ஒன்றே நடைபெற்றது. அதிலே இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் ஜெயில்சிங் அவர்களும், தமிழர் தலைவர் வீரமணி அவர்களும் கலந்து கொண்டார்கள். ஜெயில் சிங் அவர்கள் பேசும்போது, “தமிழ்நாட்டு மக்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள், கொடுத்து வைத்தவர்கள். ஏனென்றால் திறமைக்கும், வேகத்திற்கும், அன்புக்கும், அருளுக்கும் நல்ல நிர்வாகத் திறமைக்கும் பிரச்சினைகளை அணுகுவதற்கும் உரிய மகத்தான வரலாற்றுச்

சிறப்பு மிக்க ஒரு தலைவர் காலத்தில் நீங்கள் வாழ்கின்றீர்கள். அந்த அருந்தலைவருடைய பெயர்தான் கலைஞர் கருணாநிதி என்பது. அவரிடம் இப்போது நான் ஒரு விண்ணப்பத்தை வைக்கின்றேன். இன்றைக்கு கலைஞர் கருணாநிதியின் ஆட்சி டெல்லியிலே நடந்து கொண்டிருக்கிறது. தேசிய முன்னணியின் ஒரு அங்கம் கலைஞர் கருணாநிதி. இந்த நேரத்தில் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அதை சட்டமாக ஏற்படுத்துவதற்கு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் தேசிய முன்னணியின் அங்கம் மட்டும் அல்ல. நீங்கள் இல்லாவிட்டால் தேசிய முன்னணி ஏது? எனவே தேசிய முன்னணியை உருவாக்கியவர் என்ற முறையில் விண்ணப்பிக்கிறேன். மண்டல் கமிஷன் பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு முறையாக அறிவிக்கப்படும் நாளை நாடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது" என்றெல்லாம் குறிப்பிட்டது இன்றைக்கும் ஏடுகளிலே உள்ளது.

மண்டல் கமிஷன் பரிந்துரைகள் மீதான ஆணை மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட அடுத்த வாரமே 21-8-1990 அன்று அதனைப் பாராட்டி சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தையும் முன் மொழிந்தவன் நான் தான்.

இட ஒதுக்கீடு மசோதா சட்டப் பேரவையில் ஜெயலலிதாவினால் கொண்டு வரப்பட்டு நிறைவேறியதாகவும் - ஆனால் மாநிலங்களவையில் அந்த மசோதா மீது வாக்கெடுப்பு நடைபெற்றபோது - தி.மு.க. உறுப்பினர்கள் மூன்று பேர் ஓட்டுப் போடவில்லை என்றும் பங்கேற்கவில்லை என்றும் ஜெயலலிதா தனது அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். அவரோடு தோழமை கொண்டுள்ள ஒரு கட்சியின் "பிரகஸ்பதி"யும், ஜெயலலிதாவை முந்திக் கொண்டு கோவையிலே செய்தியாளர்களிடம் அதையே தெரிவித்திருக்கிறார். இட ஒதுக்கீட்டிற்கான தீர்மானம் 9-11-1993 அன்று ஜெயலலிதாவினால் கொண்டுவரப்பட்டது என்றும், 30-12-1993 அன்று சட்டமன்றத்தில் மசோதா ஜெயலலிதா அரசினால் நிறைவேற்றப்பட்டது என்றும் சொல்லியிருக்கிற அவர் யோக்கியராக இருந்தால், அந்த தீர்மானத்தை தி.மு.க. ஆதரித்ததா இல்லையா என்று சொல்லியிருக்க வேண்டும் அல்லவா? அது போலவே மாநிலங்களவையில் அந்தத் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது, தி.மு. கழகத்தைச் சேர்ந்த ஐந்து பேர் அந்த

வாக்கெடுப்பில் ஆதரித்து வாக்களித்ததைச் சொல்லியிருக்க வேண்டுமல்லவா?

இட ஒதுக்கீட்டுக்காக தமிழ்நாட்டின் அரசியல் சட்டத் திருத்தம் நிறைவேற வாக்களிப்போம் என்று தி.மு. கழக மாநிலங்களவை உறுப்பினர் விடுதலை விரும்பி அவர்களும் கலந்து கொண்ட தேசிய முன்னணி - இடது சாரிக் கட்சிகள் கூட்டம் 11-8-1994 அன்று டெல்லியில் நடைபெற்றபோது முடிவெடுத்தது.

21-8-1994 அன்று நான் விடுத்த அறிக்கையில் மத்திய அரசு மேலும் காலம் தாழ்த்தினால், சமூக நீதிக்காக போராடுகிற அணியின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஏற்கனவே எடுத்துள்ள முடிவின்படி மீண்டும் போராட்டத்தைத் தொடங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்று குறிப்பிட்டேன்.

22-8-1994 அன்று மாநிலங்களவையில் தி.மு. கழகத்தின் சார்பில் பேசிய விடுதலை விரும்பி, பிரச்சினை தாமதப்படுத்தப்படுமானால் போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை என்று எங்கள் தலைவர் கலைஞர் மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். தமிழகச் சட்டத்தைப் பாதுகாப்பதற்கான சட்டத்திருத்த மசோதா நடப்புக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவரப் பட்டு நிறைவேற்றப்படும் என்பதற்கு அரசு தரப்பில் திட்டவட்டமான உறுதிமொழி அளிக்க வேண்டுமென்றார். தமிழக அரசின் சட்டம் என்றால், அது அ.தி.மு.க. அரசு நிறைவேற்றிய சட்டமாயிற்றே என்றெல்லாம் நினைக்காமல் பிரச்சினையின் முக்கியத்துவத்தை கருதி குரல் கொடுத்தார். அவரது பேச்சிலே அ.தி.மு.க. உறுப்பினர் குறுக்கிட்டு, "மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருப்பதாகக் கூறக் கூடாது" என்றார்.

24-8-1994 அன்று தமிழக இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை 9வது அட்டவணையில் சேர்ப்பதற்கான அரசியல் சட்டத்திருத்த மசோதா மாநிலங்களவையில் விவாதம் இன்றியே நிறைவேறியது. அதற்கு ஆதரவாக 148 வாக்குகளும், எதிராக 2 வாக்குகளும் விழுந்தன. எதிராக வாக்களித்த இரண்டு பேர் யார் தெரியுமா? சிமன்பாய் மேத்தா, சத்தீஸ் பிரதான் ஆகியோராகும். கலந்து கொண்டு வாக்களித்த தி.மு.கழக மாநிலங்களவை உறுப்பினர்கள் எஸ். விடுதலை விரும்பி, மிசா ஆர்.கணேசன், பசும்பொன்

தா. கிருட்டிணன், முகமது சகி, நாமக்கல் கே.கே.வீரப்பன் ஆகியோராகும். அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திண்டிவனம் வெங்கட்ராமன் அவர்களது மகன் திருமணம் அதே நாளில் என் தலைமையிலே நடைபெற்றதால், அவர் டெல்லிக்கு அன்று செல்லவில்லை. அதைப்பற்றிக் கூட அந்தத் திருமண விழாவிலே பேசிய நான், அந்த மசோதா நிறைவேற ஒரு வாக்கு முக்கியம் என்ற நிலைமை இருந்தால், திருமணத்தை நாங்கள் நடத்திக் கொள்கிறோம் என்று வெங்கட்ராமனை டெல்லிக்கு அனுப்பியிருப்போம் என்று குறிப்பிட்டது இன்றைக்கும் பழைய முரசொலி ஏட்டில் உள்ளது. அதுபோலவே தனது உடல் நலக் குறைவு காரணமாக முரசொலி மாறன் டெல்லி செல்லவில்லை. ஜெ.எஸ். ராஜூ தனது மகனின் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் சற்றுத் தாமதமாகச் சென்று கலந்துகொண்டிருக்கிறார். இதையெல்லாம் அப்படியே மறைத்து விட்டு தி.மு.க உறுப்பினர்கள் மூவர் கலந்து கொள்ளவில்லை என்று களங்கம் சுமத்த நினைப்பது ஊரை ஏமாற்றுகின்ற செயலா அல்லவா? மக்களவையிலே 26-8-1994 அன்று இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டபோது, அதற்கு எதிர்ப்பேஇல்லை. 348 உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்தனர்.

இறுதியாக ஒரு கேள்வி. சமூக நீதியைக் காப்பதில் அ.தி.மு.க. விற்கு நிகர் யாருமில்லை என்று ஜெயலலிதா அறிக்கையிலே சொல்லி யிருக்கிறார். 16-11-1993 அன்று தமிழகம் தழுவிய பொது வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது என்றும், 26-11-1993 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டது என்றும் கூறியிருக்கின்ற ஜெயலலிதா இரண்டுக்கும் இடையில் 22-11-1993 அன்று உச்ச நீதி மன்றத்தில் ஜெயலலிதா அரசின் சார்பாக 69 சதவிகித இட ஒதுக்கீட்டை அமல்படுத்த மாட்டோம், 50 சதவிகிதத்தையே அமல்படுத்துகிறோம் என்று உறுதி மொழி கொடுக்கப்பட்டதா இல்லையா?

இட ஒதுக்கீட்டில் சாதி அடிப்படை கூடாது என்றும், பொருளாதார அளவுகோலே வேண் டும் என்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டிற்கு ஜெயலலிதா பேட்டி கொடுத்தது உண்டா இல்லையா? அந்தப் பேட்டியில், "பிற்படுத்தப் பட்ட வகுப்புகளிலும் சிலர், நல்ல நிலையில் இருக்கிறார்கள்.

அவர்கள் இட ஒதுக்கீட்டுச் சலுகையைப் பெறுவது என்பது இட ஒதுக் கீட்டுக் கொள்கையையே கேலிக் கூத்தாக்கி விடும். எனவே பிற்படுத்தப்பட்ட வகுப்பில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்குச் சலுகைகள் கிடைக்குமாறு செய்ய வேண்டும். அப்போதுதான் அதைச் சமூக நீதி என்று கூறலாம். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவிகிதம் என மத்திய அரசு முடிவெடுத்துள்ள நிலையில் முன்னேறிய வகுப்பினரில் கூட பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவினருக்கு 5 அல்லது 10 சதவிகிதம் இடஒதுக்கீடு செய்வது தவறில்லை" என்று கூறியது உண்டா? இல்லையா? இலங்கைப் பிரச்சினையில்தான் இரட்டை வேடம் போட்டீர்கள்; இட ஒதுக்கீட்டிலுமா?

இறுதியாக ஜெயலலிதா தனது அறிக்கையை முடிக்கும்போது "ஊரார் உடைமைக்கு பேயாய் பறப்பதாக" என்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். சமூக நீதிக் கொள்கை ஊரார் உடைமை அல்ல. திராவிட இயக்கத்தின் கொள்கை. ஆனால் ஊரார் உடைமைக்குப் பேயாய் பறப்பவர்கள் யார் என்பதைப் பற்றி நான் விளக்க வேண்டுமா என்ன? அது ஊரார் அறிந்த ரகசியமாயிற்றே! பேய், பூதம், பிசாசு இந்த மூன்றுக்கும் சொல்லப்படும் இலக்கணத்தின் மொத்த உருவமே! மூடிடுக வாயை என்பதைத் தவிர வேறென்ன சொல்ல?

அன்புள்ள,

மு.க.

25-7-2010

3489. வாய்மையை எதிர்த்து வஞ்சகம் ஜெயிக்காது!

உடன்பிறப்பே,

பார்த்தாயா உடன்பிறப்பே! இந்தப் பரிதாபத்திற்குரிய காட்சிகளை!

பரிவு பாசம் இவை மட்டுமல்ல; பண்பாடும் உள்ள எந்த மனிதரானாலும், கண் கலங்கி, கசிந்துருகி, "கடவுளே! நீ தான் இவர்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று பாரத்தைப் பகவான் மீது போட்டுவிட்டுச் செல்கின்றவர்களைப் பார்த்துப் பார்த்து பழக்கப்பட்டவர்கள் மாத்திரமல்ல; அந்தப் பழக்கத்தைச் சிறிது மாற்றி இந்தக் கொடுமைகளுக்குப் பரிகாரம் தான் என்ன என்று பகுத்தறிவைப் பயன்படுத்திச் சிந்திப்போரில் - பரிகாரம் காண்போர், ஒருவர் இருவரல்ல; ஒரு அரசே அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறது என்பதை உணரும்போது, அதற்காகச் செலவழிக்கப்படுகின்ற நேரம், நினைப்பு, உழைப்பு, பணம் இவைகளையெல்லாம் பற்றி மனித நேயம் படைத்தோர் மனக்கவலை கொள்ள மாட்டார்! எள் என்றால் மக்கள் கவலையை மாற்ற வேண்டும் என்ற மனமுடையோர் அவர்கள். அவர்களால் நடத்தப்படும் ஓர் இயக்கத்தின் பிரதிநிதிகளாகக் கோட்டையில் அமர்ந்து ஆட்சி நடத்துவோர், குடி மக்களுக்கு உற்ற கேட்டையும் களைந்திட முன்வருவர் - முன்வர வேண்டும்! அதற்குப் பெயரே மக்கள் நல அரசு.

அத்தகைய மக்கள் நல அரசாக விளங்குவோம் என்றும் - எங்கள் சிந்தை அணு ஒவ்வொன்றும் உங்களுக்கே - உங்கள் நன்மைக்கே - உங்கள் எதிர்கால நல்வாழ்வுக்கே - என்று தமிழ் மக்களுக்கு அளித்த உறுதி நீர் மேல் குமிழியாகாமல் - தேர் மீதுள்ள கலசம் போல திசையனைத்தும் தெரிகின்ற காட்சிதான் -

இதோ; மரணத்தின் விளிம்பிலிருந்து மீட்சியுற்ற மனித ஜீவன்கள் நம் முன் காட்சியாகி அளிக்கின்ற சாட்சிகளாம்!

எதற்கு இந்தப் பீடிகை? என்று கேட்கத் தோன்றும்!

கடந்த ஆண்டு இதே நாளில் - 23-7-2009 அன்று "உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" தமிழக அரசின் சார்பில் தொடங்கப்பட்டது.

இன்று ஓராண்டு நிறைவுற்று - இந்த ஓராண்டில் இந்தத் திட்டத்தால் கிடைத்த பயன்கள் என்ன?

நோய் நீங்கி நடமாடுவோர் எத்தனை பேர்? ஒருவரல்ல, இருவரல்ல! ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் - சரியாகச் சொல்ல வேண்டுமேயானால் - ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 257 நோயாளிகள் நலம் பெற்றனர் என்று புள்ளி விவரம் கூறுகிறது. இதற்காக காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் மருத்துவமனைகளுக்கு 415 கோடியே 43 இலட்சம் ரூபாய் இதுவரை வழங்கப்பட்டுள்ளது. ஒரு கோடியே 44 இலட்சத்து 45 ஆயிரத்து 117 குடும்பங்கள் இத்திட்டத்தில் உறுப்பினர்களாகக் கடந்த ஓராண்டு காலத்தில் சேர்ந்து - 1 கோடியே 33 இலட்சத்து 60 ஆயிரத்து 439 குடும்பங் களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தொடங்கும் பொழுது இந்தத் திட்டம்

நிறைவேறுமா?

ஆண்டு தோறும் முழுமை பெறுமா?

என்றெல்லாம்

ஐயம் எழுப்பியோர் -

ஏகடியம் செய்தோர் -

எரிச்சல் கொட்டியோர் -

ஏன் இந்த வீண் வேலையென்று ஏளனம் புரிந்தோர் -

இவர்களின் எண்ணிக்கையும் நமக்குத் தெரியும்.

ஆனால்;

இந்த அரசின் மக்கள் நலத் திட்டங்களைப் பழித்தே பழகிவிட்ட, பித்து மனங்களுக்கு இந்தத் திட்டம் - இப்போது ஓராண்டு நிறைந்து அடுத்த ஆண்டில் அடியெடுத்து வைக்கும் போது - கடந்த ஆண்டில் பாதிக்கப்பட்டு பரிகாரம் பெற்றோர் -

மரணத்தை எட்டிப் பார்த்து மறுவாழ்வு பெற்றோர் - எத்தனை பேர் என்ற கணக்கு நம்மைக் களிப்பில் அல்லவா ஆழ்த்துகிறது!

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல ஒன்றிரண்டை மாத்திரம் விளக்கிச் சொல்கிறேன்.

- செங்கல்பட்டு, மண்ணிவாக்கம் பகுதியை சார்ந்த 55 வயது ராமதாஸ் என்பவருக்கு திடீரென 24.01.2010 அன்று காலை தலை சுற்றல் ஏற்பட்டது. அன்று மாலை மயக்கம் ஏற்பட்டு, சுயநினைவற்ற நிலைக்கு சென்றார். அவரது உறவினர்கள், அவரை உடனடியாகச் சென்னையில் உள்ள பில்ராத் மருத்துவமனை "யில் அனுமதித்தனர். அங்கு, அவருக்கு சிகிச்சை மேற்கொள் ளப்பட்டது. அவருக்கு CT ஸ்கேன் எடுத்து பார்த்ததில் மூளையில் இரத்தக் கட்டி உறைவு ஏற்பட்டது தெரிய வந்தது. அவருக்கு 29.01.2010 அன்று மூளையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த அறுவை சிகிச்சைக்கு, உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் ரூ. 60,000 அளிக்கப்பட்டது. தற்போது அவர் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி நலமாக உள்ளார்

- திண்டுக்கல் மாவட்டம். வேடசந்தூர், படியை சார்ந்த திரு.வீரப்பன் என்பவருக்கு நாவில் புற்று நோய் வந்ததின் காரணமாக மிகவும் அவதியுற்று வந்தார். இந்நோயினால் உண்ணவும் முடியாமல் சிரமப்பட்ட இவரை அவரது குடும்பத்தினர் ஈரோடு நோய் மையத்தில் 01.02.2010 அன்று அனுமதித்தனர் சிகிச்சைக்காக ரூ. 36,000 கலைஞர் காப்பீட்டு திட்டத்தின் மூலமாக வழங்க உடனடியாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டு 24.02.2010 அன்று பூரண நலத்துடன் திரும்பினார்.

- சென்னை , தாம்பரம் லெட்சமி நகரைச் சேர்ந்த, 45 வயதான திரு.சரவண ஐயர் என்பவர் இரண்டு மாதங்களுக்கு மேலாக கடுமையான

வயிற்றுவலியால் துடித்து வந்தார். அவருடைய வயிரும் வீங்கி வாந்தியும் எடுத்து அவதியுற்றதால் உணவும் அருந்தாமல். சிரமப்பட்டார். திரு.சரவண ஐயர் இரண்டு மாதங்களுக்கு மேலாக மஞ்சள் காமாலை நோய் தாக்கியும் ஆபத்தான நிலைக்கு ஆளானார். ஏழ்மையான இவரைச் சார்ந்துதான் அவரின் குடும்பம் இருந்தது. நோயினால் அவரின் மொத்த குடும்பமும் செய்வதறியாமல் திகைத்தபோது, உடனே அவரை அழைத்து வந்து "லைப்ஃலைன் மல்டி ஸ்பெஷாலிடி " மருத்துவமனையில் கடந்த 10.05.2010 அன்று சேர்த்தனர். உடனடியாக இவரை மருத்துவர்கள் பரிசோதனை செய்து, பித்தப்பை சம்பந்தமான புற்றுநோய் வந்திருப்பது தெரிய வந்ததால் உடனடியாக 10 பாட்டில் இரத்தம் ஏற்றப்பட்டு அவருக்கு 14.05.2010 அன்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவர் இப்போது நலமுடன் உள்ளார். இவருக்குக் கலைஞர் காப்பீட்டு திட்டத்தின் மூலம் அறுவை சிகிச்சைக்கான செலவையும் ஏற்று ரூ. 1 இலட்சம் காப்பீடு தொகையாக வழங்கப்பட்டது.

❖ தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரிய உறுப்பினரான உடுமலைப்பேட்டை, கே. வல்லக்குண்டாபுரத்தைச் சேர்ந்த திரு. டி. தங்கவேலு என்பவரின் மகள் செல்வி சரண்யா. இவருக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு பொள்ளாச்சி அருண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு காப்பீட்டு நிறுவனத்திடம் ரூ. 17,500/அனுமதி பெற்று 21.10.2009 அன்று அறுவை சிகிச்சை செய்து கொண்டார். கலைஞர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்ற இவர் தற்போது நலமுடன் இருக்கிறார்.

❖ தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி, ஒக்கரைப் பட்டியை சார்ந்த திரு. பாண்டியன் என்பவரின் மகன் பள்ளி செல்லும் முனியாண்டிக்கு இதய

நோய் காரணமாகப் பள்ளி செல்ல இயலாத நிலை ஏற்பட்டு, வளர்ச்சியும் குன்றி அவதிப்பட்டார். ஏழ்மை நிலையில் இருக்கும் அவரது தந்தை கலைஞர் காப்பீட்டு திட்டம் பற்றி அறிந்து, மிகவும் நலம் குன்றிய நிலையில் முனியாண்டியை மதுரை மாவட்டத்திலுள்ள சரவணா மருத்துவமனையில் 23.11.2009 அன்று சேர்த்தார். மருத்துவர்கள் அவரைப் பரிசோதித்து, உடனடியாக அவருக்கு இருதய அறுவை சிகிச்சை செய்தனர். அவரது அறுவை சிகிச்சைக்கான முழு செலவான ரூ. 60,000 கலைஞர் காப்பீட்டு திட்டம் மூலம் செலுத்தப்பட்டு அவர் நலமுடன் வீடு திரும்பினார்.

❖ சேலம் மகுடஞ்சாவடி, திருமதி தனலட்சுமி அம்மாள் 15-1-2010 அன்று பொங்கல் விழாவினைக் கொண்டாடிவிட்டு, ஒரு மினி ஆட்டோவில் வீட்டிற்குத் திரும்பும் போது, சேலத்திற்கு அருகில் உள்ள மகுடஞ்சாவடியில் வளைவில் ஆட்டோ நிலை தடுமாறி கவிழ்ந்து விடுகிறது. அதில் தனலட்சுமியின் முன் கை துண்டாகிவிடுகிறது. துண்டான முன்னங்கை ஐஸ்கட்டிகளில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது. விபத்து நடந்த 6 மணி நேரத்திற்குள் கோவையில் உள்ள கங்கா மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு - மைக்ரோ சர்ஜரி அறுவை சிகிச்சையின் மூலம் துண்டான கை ஒன்று சேர்த்து வைக்கப்பட்டது. இரண்டு வார தொடர் கண்காணிப்பிற்கு பின்னர் இணைக்கப்பட்ட கையுடன் இல்லம் திரும்பினார்

❖ திரு.சுந்தரசேகர் திண்டுக்கல்லைச் சேர்ந்தவர். 52 வயது. இவருக்கு இரண்டு மாத காலமாக சிறுநீரோடு சேர்ந்து ரத்தமும் கசிந்து, பல மருத்துவர்களிடம் காட்டி குணமாகவில்லை. கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்த பின்னர் - ஸ்கேன் எடுக்கப்பட்டு - நோயின் காரணமறிந்து - 23-5-2010 அன்று அறுவை சிகிச்சை ஆறு மணி நேரம் நடைபெற்று தற்போது முழுவதும் குணமாகியுள்ளார்.

❖ திருமதி மதினா - வயது 28 - திருவண்ணாமலை மாவட்டம் கீழ் பென்னாத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர். குறவர் வகுப்பைச் சேர்ந்த பெண்மணி. பல ஆண்டுகளாக இருதயத்தில் கோளாறு. கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்படி செட்டிநாடு மருத்துவ மனையிலே சேர்ந்து இருதய சிகிச்சை செய்துகொண்டு தற்போது நலமாக இருக்கிறார்.

❖ செல்வன் முருகன் - வயது 9 - வந்தவாசி, குலாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த சிறுவன். இதய நோயினால் பிறந்தது முதல் அவதிப்பட்டு வந்தான். இவனுக்கு சிகிச்சை செய்ய வசதி இல்லாத ஏழைப் பெற்றோர், அவனுடைய ஆயுள் அவ்வளவுதான் என்று கை விட்டு விட்டனர். கலைஞர் காப்பீட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு அந்தத் திட்டத்தின்படி அறுவை சிகிச்சை செய்யப்பட்டு நல்ல உடல் நலத்தோடு இருக்கிறான்.

❖ திரு. மோசஸ் - வயது 60 - தர்மபுரி மாவட்டம் - இலங்கைத் தமிழர் இவர் - அகதியாக தங்கியிருக்கிறார். இவருக்கு இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு ஓராண்டு காலமாக அவதிப்பட்டு வந்தார். கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்து அதன் கீழ் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. தற்போது நலமாக உள்ளார்.

❖ திரு.விக்னேஸ்வரன் - வயது 32 - கும்முடிப் பூண்டியில் உள்ள அகதிகள் முகாமில் இருப்பவர். சாலை விபத்து ஒன்றில் சிக்கி, எலும்பு முறிவு முகத்தாடையில் ஏற்பட்டு மிகுந்த சிரமத்தோடு இருந்தார். இவர் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்படி மருத்துவமனையிலே சேர்ந்து அறுவை சிகிச்சை நடைபெற்றது. தற்போது முழு நலத்தோடு உள்ளார்.

இன்னும் எழுதிக்கொண்டே போகலாம். இத்திட்டத்தினால் பயன் பெற்றவர்கள் எல்லாம் இத்திட்டம் ஓராண்டு நிறைவு பெற்றதை யொட்டி, கடந்த 23ஆம் தேதி என்னை தலைமைச் செயலகத்திலே சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். அப்போது அவர்கள் என்னைப் பார்த்து என்றும், “இந்தத் திட்டம் இல்லாவிட்டால் நாங்கள் உயிரோடு இருந்திருக்கவே மாட்டோம்” என்று, நெஞ்சு நெக்குருகச் சொல்லியபோது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? ஆனால் அவர்கள் நோயினால் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருந்தோம் என்பதையும், இந்த அளவுக்கு ரூபாய் செலவழித்து தங்களால் சிகிச்சை செய்து

கொண்டிருக்கவே முடியாது என்பதையும் கண்களில் நீர் மல்க சொன்னபோது எனக்குப் பெருமிதமாகவும் இருந்தது.

இந்த ஒரு திட்டம் மாத்திரமல்ல; 108 என்ற திட்டத்தைப் பற்றி நீ அறிவாய். அந்தத் திட்டத்தைப் பற்றி நாள்தோறும் செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. கிராமப்புற மக்கள் எல்லாம் அந்தத் திட்டத்தினால் தாங்கள் உயிர் பிழைத்த செய்தியை தொடர்ந்து சொல்லி, இந்த அரசைப் பாராட்டுகிறார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக அரசு அலுவலர் களுக்கான காப்பீட்டுத் திட்டம் ஒன்றும் இந்த அரசால் தொடங்கப்பட்டு பெரும் வரவேற்பினை பெற்றுள்ளது. அதுபோலவே இளஞ்சிறார்களுக்கான இதயப் பாதுகாப்பு திட்டம் ஒன்று தொடங்கப்பட்டு ஆயிரக்கணக்கான சிறுவர், சிறுமியர் உயிர்பிழைத்து அவர்கள் என்னைச் சந்தித்து தாங்கள் உயிரோடு இருப்பதற்குக் காரணம் நீங்கள்தான் என்று சொல்லும்போது நான் என்னையே மறக்கிறேன். இந்தத் துறையின் மூலமாக - அமைச்சர் தம்பி எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், செயலாளர் சுப்பராஜ், ஐ.ஏ.எஸ்., மற்றும் அதிகாரிகள், மனித நேயமுள்ள மருத்துவர்கள் ஒத்துழைப்போடு செய்யப்படுகின்ற முக்கிய திட்டங்களை மட்டும் இங்கே நினைவுபடுத்தியிருக்கிறேன்.

மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டமும் அப்படித்தான். மாற்றுத் திறனாளிகள் கைகால் ஊனமுற்றோர், கண் தெரியாதோர், காது கேளாதோர் சிலர் சென்னை பொது மருத்துவமனையில் உண்ணா விரதம் இருக்கிறார்கள் என்ற செய்தியை காலையிலே ஏடுகளிலே கண்டதும், உடனடியாக நானே நேரடியாக பொது மருத்துவமனைக்கு விரைந்து சென்று அந்த மாற்றுத் திறனாளிகளைச் சந்தித்தேன். கோரிக்கைகளை முன் வைத்து உண்ணா விரதம் இருந்த அவர்கள், தங்கள் கோரிக்கைகளையே மறந்து விட்டார்கள். உங்களைச் சந்தித்ததே போதும், கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை உள்ளது, உண்ணா விரதத்தை இத்துடன் முடித்துக் கொள்கிறோம் என்று அங்கிருந்து எழுந்துச் சென்றார்கள்.

எனவே இயலாதோர்க்கு உதவிட வேண்டுமென்ற எண்ணம் வேண்டும். அந்த எண்ணம் எங்களுக்கு இருக்கின்ற காரணத்தால் அந்த வழியிலே செயல்படுகிறோம்.

இதை ஊழல் திட்டம் என்றும், கோடிக் கோடியாகக் கொள்ளைப் போய்விட்டது என்றும் சிலர் பேசுகிறார்கள் என்றால்; நான் அவர்களைப் பொருட்படுத்தாதற்குக் காரணம் - உண்மை ஒரு நாளும் தோற்காது - வாய்மையை எதிர்த்து வஞ்சகம் ஜெயிக்காது - துரோகத்தையே தங்கள் வாழ்வின் தொடர் நிகழ்ச்சிகளாக ஆக்கிக் கொண்டவர்களால் இதுபோன்ற தூய்மையான திட்டங்களின் மீது தூசி படவும் செய்திட இயலாது என்பதை தமிழகத்தின் பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரையில் நமது திட்டங்களால் பயன்பெறும் ஏழையெளிய சாதாரண மக்கள் பெறுகின்ற வாழ்வு வஞ்சகத்தின் வாயை அடைத்து அதன் இடுப்பை ஒடித்தே தீரும் என்ற நம்பிக்கையோடு நாம் நடை போடுவோம்! அதற்கு நம்மை ஊக்குவிக்கும் ஓராயிரம் பேர், ஒரு லட்சம் பேர் என்று உடல் நலம் பெற்றோரின் உருவப் படங்களை இணைத்து வழங்கிட இந்தக் கடிதத்தில் இடம் இல்லாத காரணத்தால் - அன்று நலிவடைந்து - இன்று நலம் பெற்றோர் அனைவரின் சார்பாகவும் ஒத்துழைப்போர் எல்லோருக்கும் உளமார்ந்த நன்றி கூறுகிறேன். தொடர்ந்து ஒத்துழைக்க வேண்டுமென்றும் அவர்களுக்கும், அவர் போன்றோருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

26-07-2010

3490. இருப்பதையும் இழக்காமல் இட ஒதுக்கீடு அமைந்திட...!

உடன்பிறப்பே,

சமூக நீதிக் களத்தில் 90 ஆண்டுப் பின்னணி வரலாற்றைப் பெற்றுள்ள இயக்கம் நமது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நீ அறிவாய்! திராவிட இயக்கத்தின் ஆணிவேர்க் கட்சியாம் நீதிக்கட்சியின் ஆட்சிக் காலத்தில், 1921ஆம் ஆண்டில் முதல் கம்யூனல் ஜி.ஓ. எனப்படும் அரசாணை பிறப்பிக்கப்பட்ட நாள்முதல்; வாழையடிவாழையென வளர்ந்து கழகம் இமயமென உயர்ந்து நிற்கும் இன்றுவரை சமூகநீதி என்பதை நமது உயிர்மூச்சுக் கொள்கையாகப் போற்றிப் பேணி வருகிறோம்.

தமிழ்நாட்டில் இடஒதுக்கீட்டுக் கொள்கையை மறுஆய்வு செய்யும் பிரச்சினை பல்வேறு கட்டங்களில் எழுப்பப்பட்டு வந்தாலும், முதல்முறையாக நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், 1969ஆம் ஆண்டில் திரு.ஏ.என்.சட்டநாதன் அவர்கள் தலைமையில் 13.11.1969 அன்று பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காகவும், அவர்தம் நிலையை மேம்படுத்தவும், அரசு அதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளை ஆராயவும், கல்வி வசதிகள், அரசுப் பணிகளில் பிரதிநிதித்துவம், சமுதாய நலவளர்ச்சி ஆகிய முனைகளில் அவர்களுடைய நிலையை மேம்படுத்த மாநில அரசு என்னென்ன நடவடிக் கைகள் மேற்கொள்ள வேண்டு மென்று பரிந் துரை செய்யவும், தமிழகத்தின் வரலாற்றில் முதன்முதலில் அமைக்கப்பட்ட குழு இதுதான்.

இந்தச் சட்டநாதன் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையிலேதான் அதுவரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 16 சதவீதம்; பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு

25 சதவீதம்; என்றிருந்த இடஒதுக்கீட்டு அளவை மாற்றியமைத்து, 7.6.1971 அன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவீதம்; பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 31 சதவீதம்; என உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள பல்வேறு வகுப்புகள், கல்வி நிலையங்கள் மற்றும் வேலை வாய்ப்புகளில் தங்களுக்கு உரிய பங்கினைப் பெறமுடிய வில்லை என்கிற உணர்வு மேலோங்கி, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு தனிஒதுக்கீடு வேண்டு மென்ற கோரிக்கை வலுப்பெற்று வந்ததை யொட்டி; பா.ம.க. நிறுவனர் டாக்டர் இராமதாசு அவர்களை கலந்தாலோசித்து; பிற்படுத்தப்பட்டோர்க்கான 50 சதவீத இடஒதுக்கீட்டில், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 20 சதவீதம் ஒதுக்கியும், மீதமுள்ள 30 சதவீதத்தை பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கியும்; நான் மூன்றாம் முறையாக முதலமைச் சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னர் 28.3.1989 அன்று ஆணையிடப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினர் மக்கள் தொகையைக் கருத்தில்கொண்டு, 1990ஆம் ஆண்டில் பொதுத் தொகுப்புக்கான ஒதுக்கீட்டிலிருந்து தனியே 1 விழுக்காடு பழங்குடியினருக்கும், 18 விழுக்காடு தாழ்த்தப்பட்டோருக்கும் என 22.6.1990 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது.

நான் ஐந்தாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, தற்போது சிறுபான்மை முஸ்லிம்களுக்கு தனி இட ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கையில் உள்ள நியாயத்தை உணர்ந்து, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவர் நீதியரசர் ஜனார்த்தனம் அவர்களின் பரிந்துரையினைப் பெற்று, பிற்படுத்தப்பட்டோருக்கான 30 சதவீத இடஒதுக்கீட்டில் இருந்து 3.5 சதவீத இடஒதுக்கீட்டினை பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு என தனியே இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

அதைப்போலவே, தாழ்த்தப்பட்டோருள் கடைக்கோடிப் பிரிவினராய் இருந்துவரும் அருந்ததியர்க்கு தனி

இடஒதுக்கீடு தரப்பட வேண்டுமென்ற கோரிக்கையினை ஏற்று, தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டுவரும் 18 சதவீத இடஒதுக்கீட்டில் 3 சதவீத உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

நான் இவ்வளவு விவரங்களையும் தொகுத்துச் சொல்வதற்குக் காரணம் இடஒதுக்கீட்டின் பரிணாம மாற்றங்களை நீ நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். பிற்படுத்தப்பட்டோருக்கென வழங்கப்பட்டு வந்த 30 சதவீத மொத்த இடஒதுக்கீட்டில், மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கு தனியே 20 சதவீத இடஒதுக்கீடு வழங்கியதும்; பிற்படுத்தப்பட்ட சிறுபான்மை இஸ்லாமியர்க்கு 3.5 சதவீத தனி இடஒதுக்கீடு வழங்கியதும்; அருந்ததியர்களுக்கு 3 சதவீத தனி உள்ஒதுக்கீடு வழங்கியதும்; பழங்குடியினர்க்கு ஒரு சதவீதம் தனி ஒதுக்கீடு வழங்கியதும் கழக ஆட்சியிலேதான். எப்போதுமே கோரிக்கைகளிலே நியாயம் இருக்குமேயானால்; சட்டமும் காலமும் ஒத்துவருமானால்; அந்த கோரிக்கைகளை ஒத்திப்போடாமல் உடனடியாக ஏற்று, நிறைவேற்றி வருவது கழக ஆட்சி என்பதனை நடுநிலையாளர்கள் நன்கு அறிவார்கள். அந்த அடிப்படையிலே தான் மிகப் பிற்படுத்தப்பட்டோர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும், அருந்ததியர்களுக்கும், பழங்குடியினர்க்கும் தனித்தனியே இடஒதுக்கீடுகள் கழக ஆட்சியிலே வழங்கப்பட்டுள்ளன.

தற்போது டாக்டர் இராமதாசு அவர்கள், அருந்ததியர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் தனி இடஒதுக்கீடு வழங்கி வருவதை முன்னுதாரணமாகக் காட்டி, வன்னியர்களுக்கு 20 சதவீத தனி இடஒதுக்கீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அவர் வைத்துள்ள கோரிக்கையிலே இருக்கும் அடிப்படை நியாயங்களைப் பற்றியெல்லாம் இந்தத் தருணத்தில் நான் விரிவாக விவாதிக்க விரும்பவில்லை. அருந்ததியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உள் ஒதுக்கீட்டையும், சிறுபான்மை இஸ்லாமியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் தனி இடஒதுக்கீட்டையும் - வன்னியர்களுக்கு 20 சதவீத தனி இடஒதுக்கீட்டுடன் ஒப்பிடுவது பொருத்தமாக இருக்காது.

தமிழகத்தில் 69 சதவீத இடஒதுக்கீட்டுக்கென நிறைவேற்றப்பட்ட சட்டம் செல்லாது என்று இந்திய

உச்சநீதிமன்றத்திலே 1994ஆம் ஆண்டு வழக்கு தொடுக்கப்பட்டு, ஏறத்தாழ 16 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது உச்சநீதி மன்றம் இடைக்காலத் தீர்ப்பொன்றை வழங்கியிருக்கிறது. அந்த இடைக்காலத் தீர்ப்பில், "It has been laid down that if a State wants to exceed 50 percent reservation, then it is required to base its decision on the quantifiable data", அதாவது, ஒரு மாநிலம் 50 சதவீத இடஒதுக்கீட்டு அளவை விஞ்ச வேண்டுமென்றால், அதனை நியாயப்படுத்துவதற்குத் தேவையான புள்ளிவிவரங்களின் அடிப்படையில் முடிவு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் நாம் தேவையான புள்ளிவிவரங்களை பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அளித்து, அந்த ஆணையம் நாம் அளித்திடும் புள்ளிவிவரங்களை ஆராய்ந்து, இடஒதுக்கீட்டு அளவை முடிவு செய்யும் வாய்ப்பை உருவாக்க வேண்டும்.

இந்தப் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதற்கு நமக்கு சாதிவாரியான மக்கள்தொகை விவரங்கள் வேண்டும். அதற்கு சாதிவாரிக் கணக்கெடுப்பு (Caste-Based Census) மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழ் மாநிலத்தில் மட்டும் சாதிவாரிக் கணக்கெடுப்பு மேற் கொள்ளப்பட வேண்டுமென்றால், அதற்கு 400 கோடி ரூபாய் நிதி தேவைப்படுகிறது. அந்த நிதியை மத்திய அரசிடமிருந்து கேட்டுப் பெறலாமென்று தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் நமக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறது.

உச்சநீதிமன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி, தமிழகத்தில் சாதிவாரிக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டால்தான், வன்னியர்களுக்கு எவ்வளவு இடஒதுக்கீடு அளிக்கலாம்; மற்றும் ஒவ்வொரு தனிப்பட்ட சாதியினருக்கும் எவ்வளவு இடஒதுக்கீடு அளிக்கலாம் என்பதையெல்லாம் முடிவு செய்திட இயலும். அப்படிச் செய்தால்தான், சட்டப்படி அந்த முடிவுகள் எல்லாம் செல்லுபடியாகும். அப்படியில்லை என்றால் நாம் எடுக்கும் முடிவு சட்டத்திற்குப் புறம்பானதாக ஆகிவிடக் கூடும்.

எனவே, வன்னியர்களுக்குத் தனி இடஒதுக்கீடு என்ற பிரச்சினையில் நாம் உடனடியாக அவசர முடிவு எதையும் மேற்கொள்வதற்கு உச்சநீதிமன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு

இடம் தரவில்லை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். சாதிவாரிக் கணக்கெடுப்பு மேற்கொண்டு, நமது மாநிலத்திற்கான இடஒதுக்கீட்டு அளவை நிர்ணயம் செய்து, அதற்குப்பிறகு தனி ஒதுக்கீடு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுதான் சட்டப்படியான அணுகுமுறையாக அமைந்திடும். இதில் அவசரம் காட்டினால், பிரச்சினை திசை திரும்பிவிடக் கூடும் என்பதாலும், இருப்பதையும் இழந்துவிடக் கூடாது என்பதாலும் தொடர்புடைய அனைவரும் இந்த இடஒதுக் கீட்டுப் பிரச்சினையில் இணக்கமான ஒத்துழைப்பினை வழங்கிட வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன். எனவே இருப்பதை இழக்காமல் இட ஒதுக்கீடு அமைய இணைந்து செயல்படுவோம்!

அன்புள்ள,

மு.க.

30-7-2010

3491. எதிரொலிக்கிற அந்தக் கூச்சல்!

உடன்பிறப்பே,

எதிர்க்கட்சித் தலைவர் ஜெயாவுக்கு இன்று அறிக்கை எழுத வேறு எந்தப் பொருளும் கிடைக்கவில்லையாம்! "டாஸ்மாக்" பணியாளர்களின் பிரச்சினை குறித்து அறிக்கை விடுத்துள்ளார். அரசுப் பணியாளர்கள் பற்றி அறிக்கைவிட ஜெயலலிதாவுக்கு ஏதாவது தகுதி உண்டா? அவர் ஆட்சிக் காலத்தில் தமிழக அரசின் பணியாளர்கள் பட்ட துன்பத்தை மக்கள் மறந்திருப்பார்கள் என்று அவர் கனவு காண்கிறாரா? "அரசு அலுவலர்களும் அம்மையார் ஜெயலலிதாவும்" என்ற தலைப்பிலே ஒரு பெரிய புத்தகமே எழுதலாமே! இருந்தாலும் ஒரு சிலவற்றை ஞாபகப்படுத்துகிறேன்.

தி.மு. கழக ஆட்சி 1989ஆம் ஆண்டு நடைபெற்றபோது வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதற்காக 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களை மாதம் 750ரூபாய் மதிப்பூதியத்தில் கழக அரசு அமர்த்தியது. ஆனால் 1991ஆம் ஆண்டு ஜெயலலிதா முதல மைச்சர் ஆனதும் இந்த மக்கள் நலப் பணியாளர்களையெல்லாம் டிஸ்மிஸ் செய்து வீட்டிற்கு அனுப்பி விட்டார். ஆனால் 1996ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சி மீண்டும் ஏற்பட்டதும், பதவியிழந்த மக்கள் நலப் பணியாளர்களுக் கெல்லாம் நான் மீண்டும் வேலை வாய்ப்பளித்து அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைத்தேன்.

அதைப் போல இளைஞர்களுக்கு மேலும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்பதற்காக பத்தாயிரம் இளைஞர்களுக்குச் சாலைப் பணியாளர்கள் வேலை அளித்தேன். 2001ஆம் ஆண்டு ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சரானதும், கருணை உள்ளத்தோடு கழக ஆட்சியிலே நியமிக்கப்பட்ட 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களையும், 10 ஆயிரம் சாலைப் பணியாளர்களையும் "டிஸ்மிஸ்" செய்து வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

பல ஆண்டுக் காலம் வேலை பார்த்து ஊதியம் பெற்று குடும்பம் நடத்திக் கொண்டிருந்தவர்களுக்கு திடீரென வேலையில்லை யென்றால் என்ன செய்வார்கள்? பலபேர் தற்கொலை செய்து கொண்டு மாண்டார்கள். பல பேர் திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில் இருந்ததால் திருமணமும் நிறுத்தப்பட்டு, அவர்களை மணக்கவிருந்த பெண்கள் நிர்க்கதிக்கு ஆளானார்கள்.

உதாரணமாக நாகை மாவட்டம், கீழையூர் அருகேயுள்ள வைரவன்கட்டளை "காமேஸ்வரம்" கிராமத்தைச் சேர்ந்த வீரப்பன் என்ற மக்கள் நலப் பணியாளர் 11-6-2001 அன்று விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன் சத்திரம் ஒன்றிய மக்கள் நலப் பணியாளர் சி.கந்தசாமியின் வேலை பறிபோன காரணத்தால் அவருடைய மனைவி பிரபா என்பவர் 11-6-2001 அன்று விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். 12-6-2001 அன்று நத்தம் ஒன்றிய மக்கள் நலப் பணியாளராக பணியாற்றி வந்த திலகர் என்பவரும் வேதனை தாங்காது தன் உயிரை மாய்த்துக்கொண்டார். இவர்களின் குடும்பத்திற்கு தி.மு.கழகத்தின் சார்பில் தலா 25 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டது. அருப்புக் கோட்டையைச் சேர்ந்த ராமமூர்த்தி பணி பறிபோனதும் சோகத்தில் உணவு உண்ணாமல் பட்டினி கிடந்தே மாண்டார். நாகை மாவட்டத்தில் தரங்கம்பாடியைச் சேர்ந்த இளங்கோவன் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். ராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் கபிலன் வேலை போன காரணத்தால் பட்டினி கிடந்து உயிர் துறந்தார்.

அரசு அலுவலர் வேலை நிறுத்தம் செய்தால் மூன்றாண்டு சிறைத் தண்டனையும் ஐந்தாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் என்று ஒரு அரசாணை வெளியிடப்பட்டது. ஜெயலலிதாவின் அகராதிப்படி அதற்குப் பெயர் என்ன? மிரட்டல்தானே? மேலும் அதே ஆணையில் போராட்ட நாட்களில் எந்தவிதமான விடுமுறையும் எடுக்கக் கூடாதென்றும், வேலைக்கு வராதவர்களின் பட்டியலை உடனடியாக அரசுக்கு அனுப்ப வேண்டும் என்றும், அந்த நாட்களுக்கு சம்பளம் வழங்கப்பட மாட்டாது என்றும் அறிவித்திருந்தார்கள். அது மட்டுமல்ல; 2002 ஆம் ஆண்டு அத்யாவசிய சேவைகள் பராமரிப்புச் (எஸ்மா) சட்டத்தின்கீழ், வேலை நிறுத்தம் செய்த அரசு ஊழியர்களின் தலைவர்களை கைது செய்ததோடு, தமிழ்நாடு அத்யாவசிய

சேவைகள் பராமரிப்பு (டெஸ்மா) சட்டம் என்ற புதிய அவசரச் சட்டம் ஒன்றை அமல்படுத்தி பணியாளர்களை வேலை நீக்கமும் (டிஸ்மிஸ்) செய்தார்கள். அந்த அம்மையார் தான் தற்போது டாஸ்மாக் பணியாளர்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கிறார்.

இந்த ஆட்சியின் டிஸ்மிஸ் பட்டியலைப் பார்த்து விட்டு தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணிக்கு அருகே தலைமை ஆசிரியை ரேணுகா பெரியராசன், அந்தியூரைச் சேர்ந்த குமாரசாமி, கொடுமுடியில் உதவி தலைமை ஆசிரியை சரோஜினி, தொடக்கக் கல்வி உதவி அதிகாரி அழகம்மாள், டெங்கனிக் கோட்டை செங்கோட் ராஜ், கல்லூரிக் கல்வி இயக்கக ஊழியர் சோலையப்பன், வில்லிவாக்கம் பச்சையப்பன், புள்ளம்பாடி அஞ்சுகம் என்று உயிரைப் பறிகொடுத்தவர்களின் பட்டியல் தொடர்ந்தது.

மேலும் ஒரு கொடுமையாக அலுவலர்களை டிஸ்மிஸ் செய்துவிட்டு, அதுகுறித்த வழக்கிலே என்ன தீர்ப்பு வருமோ என்று கூடக் காத்திருக்காமல் புதிதாக 15,500 பேரை வேலைக்கு எடுப்பதாகக் கூறி, அதிலே ஒரு பெரிய குழப்பம். அரசுப் பணிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானால் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக தேர்வு நடத்தித்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படி எதுவும் முறைப்படி செய்யாமல் கட்சிக்காரர்களின் பரிந்துரைப்படி தேர்வு செய்தார்கள்.

அரசு அலுவலர்களை டிஸ்மிஸ் செய்ததை ரத்து செய்யக் கோரியும், கைது செய்யப்பட்ட அரசு அலுவலர்களை விடுவிக்கக் கோரியும், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் 6-7-2003 அன்று நீதிபதி வழங்கிய தீர்ப்பு வருமாறு :-

“இந்தப் பிரச்சினையில் அரசு நல்ல முடிவெடுக்க இரண்டு நாட்கள் அவகாசம் கொடுத்தேன். அரசு எந்த முடிவும் அறிவிக்க வில்லை. மேலும் இதில் கால தாமதப்படுத்தியது. அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்றுதான் நீதிமன்றம் கேட்டுக்கொண்டது. ஆனால் அரசு அதைக்கூட செய்யத் தவறி விட்டது. அரசு அலுவலர்கள்தானாக முன்வந்து போராட்டத்தை வாபஸ் பெறுவதாகக் கூறியுள்ளனர். எனவே அதை ஏற்று இந்த உத்தரவு பிறப்பிக்கிறேன். அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது துரதிருஷ்டவசமானது. அரசு இதில்

காலதாமதப்படுத்துவது மிகவும் வருத்தமளிக்கிறது. வேதனை அளிக்கிறது. நியாயமான விசாரணையே இல்லாமல் அரசு ஊழியர்களை டிஸ்மிஸ் செய்வது தவறானது, சட்ட விரோதமானது. அனைத்து அரசு ஊழியர்களையும் விடுதலை செய்கிறேன். எஸ்மா சட்டம் பிரிவு 4, 5இன் கீழ் கைதான அனைவரையும் உடனே விடுதலை செய்ய வேண்டும். போலீஸ் டி.ஜி.பி. இதை உடனே அமுல்படுத்த வேண்டும். அரசு ஊழியர்களை சஸ்பென்ட், டிஸ்மிஸ் செய்த அனைத்து உத்தரவுகளையும் நிறுத்தி வைக்கிறேன். அனைவரும் உடனடியாக வேலைக்குப் போக வேண்டும். புதிய ஆட்களை பணியில் நியமிக்கக் கூடாது. ”

இந்தத் தீர்ப்புக்குப் பிறகு அரசு வழக்கறிஞர் இந்த உத்தரவை இரண்டு நாளைக்கு நிறுத்தி வைக்க வேண்டுமென்று கோரியபோது, நீதிபதி “இதை ஏற்க முடியாது, நள்ளிரவில் எதையும் செய்யாதவர்களை தூக்கத்தில் தட்டியெழுப்பி கைது செய்துள்ளது போல இன்று நள்ளிரவே விடுதலை செய்யுங்கள்” என்றார்.

உயர்நீதிமன்ற நீதிபதி இந்த அளவிற்கு அரசு அலுவலர்களுக்காக ஆதரவாக தீர்ப்பளித்ததும், ஜெயலலிதா அரசு அதனையேற்காமல், இரவோடு இரவாக சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியின் இல்லத்திற்கே சென்று மேல் முறையீடு செய்து, அன்றையதினம் மாலையில் உயர்நீதிமன்ற நீதிபதி அளித்த தீர்ப்புக்கு இடைக்காலத் தடை பெற்றது. அந்த அளவிற்கு அரசு அலுவலர்களிடம் விரோதம் பாராட்டிய ஜெயலலிதாதான் தற்போது அவர்களிடம் அன்பு கொண்டவர்களைப் போல தேர்தல் வருகிறது என்றதும் நடிக்கிறார்.

2003ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அரசு அலுவலர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்ட போது, அவர்களை மிரட்டுவதற்காக அரசாங்கம் அவசர அவசரமாக 16 ஆயிரம் பேரைத் தேர்ந்தெடுத்து, பணியிலே அமர்த்தியது. புதிதாக அமர்த்தப்பட்டதால் - அனுபவமும் இல்லாத காரணத்தால் பணிகளை ஆற்றவும் முடியவில்லை. வேலை நிறுத்தம் செய்த அலுவலர்கள் உச்சநீதிமன்றம் வரை சென்று வழக்கு நடத்திய காரணத்தால், மீண்டும் அவர்கள் பணியிலே சேர்க்கப்பட்ட பிறகு, புதிதாக அமர்த்தப்பட்ட 16 ஆயிரம் அலுவலர்களை என்ன செய்வதென்று அந்த அரசுக்குத் தெரியாததால், அவர்கள் அனை

வரும் வேண்டாத விருந்தாளிகளாக அரசு அலுவலகங்களிலே பணியாற்றாமலே ஊதியம் பெற்று வந்தார்கள்.

2004ஆம் ஆண்டு ஜூன் திங்களில் திடீரென்று அ.தி.மு.க. அரசு அந்த அலுவலர்களையெல்லாம் நீக்குவதாக ஒரு ஆணை பிறப்பித்தது. உதவிக்கரம் நீட்டியவர்களின் வாழ்வைப் பாழாக்குவது நல்லதல்ல என்று நான் ஒரு அறிக்கை விடுத்தேன்.

பல்வேறு எதிர்க்கட்சித் தலைவர்களும் அவர்களை பணியிலிருந்து அகற்றக் கூடாதென்று கண்டன அறிக்கைகளை வெளியிட்டார்கள். அதன் பிறகு ஜெயலலிதா அரசு பணிந்து அவர்களை பணியிலிருந்து நீக்குவதற்காக பிறப்பித்த உத்தரவை திரும்பப் பெற்றது. அந்த ஜெயலலிதாதான், தனது ஆட்சிக் காலத்தில் பணியமர்த்தப்பட்டவர்கள் என்பதற்காக தற்போது இன்னலுக்கு ஆளாக்கப்படுவதாக அறிக்கையிலே கூறியிருக்கிறார். அவரது ஆட்சிக் காலத்தில் அவருக்கு உதவி செய்ய பணியிலே சேர்ந்தவர்களையே, தன் காரியம் முடிந்தவுடன் வீட்டிற்கு அனுப்ப முயற்சி செய்தவர்தான் ஜெயலலிதா. இப்படிப்பட்ட ஜெயலலிதாதான் டாஸ்மாக் பணியாளர்களுக்காக அறிக்கை விடுத்துள்ளார்.

டாஸ்மாக் பணியாளர்கள் அ.தி.மு.க. ஆட்சியிலே இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் என்ற போதிலும், கழக அரசு 2006ஆம் ஆண்டு பதவியேற்ற பிறகு அவர்களையெல்லாம் வீட்டிற்கு ஜெயலலிதாவைப் போல அனுப்பிவிடாமல் அவர்களுக்கு தொடர்பணி வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் நியமிக்கப்பட்ட போதே பகுதிநேர-ஒப்பந்த-தற்காலிக ஊழியர்களாகத்தான், தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்டார்கள். அவ்வாறு நியமிக்கப்பட்டபோது, மேற்பார்வையாளர்களுக்கு மாதம் 2000 ரூபாயும், மற்றும் விற்பனையாளர்களுக்கு 1000 ரூபாயும் தொகுப்பூதியமாகத்தான் அ.தி.மு.க. ஆட்சியில் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு தி.மு. கழக அரசு பொறுப்பேற்றபோது, மேற்பார்வையாளர்களுக்கு 3000 ரூபாயும், விற்பனையாளர்களுக்கு 2000 ரூபாயும், மதுக் கூட உதவியாளர்களுக்கு 1500 ரூபாயும் மாத ஊதியமாக வழங்கப்பட்டு வந்தது.

இந்த அரசு பதவியேற்ற பின், இந்தப் பணியாளர்களுக்கு இரண்டு முறை ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மேற்பார்வையாளர்களின் ஊதியத்தை 3000 ரூபாயிலிருந்து 3,500 ரூபாயாகவும், விற்பனையாளர்களின் ஊதியத்தை 2000 ரூபாயிலிருந்து 2,400 ரூபாயாகவும், மதுக்கூட உதவியாளரின் ஊதியத்தை 1500 ரூபாயிலிருந்து 1,800 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.

2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் இந்த ஊதியம் மீண்டும் உயர்த்தப்பட்டு மேற்பார்வையாளர்கள் 4000 ரூபாயும், விற்பனையாளர்கள் 2,800 ரூபாயும், மதுக்கூட உதவியாளர்கள் 2,100 ரூபாயும் மாத ஊதியமாகப் பெற்று வருகிறார்கள்.

மதுபானக் கடைகளின் பணி நேரம் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 16 மணி - இந்த ஆட்சி பணியேற்றபின் தற்போது 12 மணி நேரமாகக் குறைக்கப்பட்டுள்ளது. பணியாளர்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு நாளும் ஷிப்ட் முறையில் 8 மணி நேரமே தற்போது பணி செய்து வருகிறார்கள். சுழற்சி முறையில் வாராந்திர விடுமுறையும் விடப்படுகிறது.

ஏற்கெனவே அ.தி.மு.க ஆட்சியில் நடை முறையில் இருந்த ஆண்டுக்கு ஐந்து நாள் பொது விடுமுறையைத் தவிர - இந்த ஆண்டு மே முதல் நாளும் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டு - அன்றைய தினம் பணிபுரிபவர்களுக்கு இரட்டிப்பு ஊதியம் வழங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊழியர்களின் காப்புத் தொகைக்கு அ.தி.மு.க. ஆட்சியில் வட்டி ஏதும் வழங்கப்பட வில்லை. கழக ஆட்சியில்தான் 1-7-2007 முதல், ஆண்டு ஒன்றுக்கு 3.5 சதவிகிதம் வட்டி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மேற்பார்வையாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1,750 ரூபாயும், விற்பனையாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 525 ரூபாயும், மற்றும் மதுக்கூட உதவியாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 350 ரூபாயும் வழங்கப்படுகிறது. இதுவரை மொத்தப் பணியாளர்களுக்கும் இதற்காக 7 கோடியே 57 லட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் நடைமுறையில் இருந்த முந்தைய ஊக்கத்தொகை திட்டத்தின்படி குறிப்பிட்ட பணியாளர்கள் மட்டுமே இந்தப் பயனை பெற்று வந்தனர். 2005-2006ஆம்

ஆண்டு ஊக்கத் தொகையாக 26 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது. சில்லறை விற்பனைப் பணியாளர்களுக்கு அமலில் இருந்த ஊக்கத் தொகை திட்டம் இந்த அரசு பதவியேற்றபின் அனைத்துப் பணியாளர்களும் பயன்பெறும் வகையில் திருத்தி அமைக்கப்பட்டு, நடைமுறையில் இருந்து வருகிறது. இந்த ஆட்சியில் 2009-10ஆம் ஆண்டில் புதிய திட்டத்தின்படி ஊக்கத் தொகையாக ரூபாய் 33.33 கோடி வழங்கப்பட்டுள்ளது.

டாஸ்மாக் ஊழியர்களுக்கு கடந்த ஆட்சிக் காலத்தில் 2005-06இல் போனஸ் மற்றும் கருணைத் தொகை 10 சதவிகிதமாக ரூபாய் 8 கோடி மட்டுமே வழங்கப்பட்டது. இந்த ஆட்சியில் கடந்த மூன்று ஆண்டுகளாக போனஸ் மற்றும் கருணைத் தொகை 20 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டது. இதன் மூலம் கடந்த 2009-10ஆம் ஆண்டில் 18 கோடியே 64 இலட்ச ரூபாய் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

கடந்த ஆட்சிக் காலத்தில் பணியாளர் இறக்க நேரிட்டால் குடும்ப நல நிதியிலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆட்சிக் காலத்தில் ஜூலை 2007 முதல் இந்தத் தொகை ரூபாய் ஒன்றரை இலட்சமாக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தி.மு.க. ஆட்சியில்தான் முதல் முறையாக 1-11-2009 முதல் மேற்பார்வையாளர்களுக்கு மாதாந்திர பயணப்படி ரூபாய் 150 முதல் ரூபாய் 250 வரை அளிக்கப்படுகிறது.

உடன்பிறப்பே, இந்த அளவிற்கு டாஸ்மாக் பணியாளர்கள் எந்த ஆட்சியிலே பணியிலே நியமிக்கப்பட்டார்கள் என்றெல்லாம் பார்க்காமல், எந்த அளவிற்கு அவர்களின் கோரிக்கைகளை ஏற்க முடியுமோ, அந்த அளவிற்கு கழக ஆட்சியில் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில்தான் அந்தப் பணியாளர்களில் ஒருசிலர் மட்டும் போராட்டம் என்கிறார்கள், வேலை நிறுத்தம் என்கிறார்கள், அரசை மிரட்டிப் பார்க்கிறார்கள். அவர்களுக்குள்ளேயே கடந்த காலத்தையும், இந்தக் காலத்தையும் சீர்தூக்கிப் பார்த்து பெரும்பாலோர் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் என்ற செய்தியும் வந்து கொண்டுதான் இருக்கிறது. என் செய்வது? ஏதோ பிரச்சாரத்தை, அதிலும் குறிப்பாக தி.மு.கழக அரசாங்கத்தை எதிர்த்து யாராவது குரல் எழுப்பினால் அந்தக் குரலோடு இணைந்து கொண்டு நமது

அரசைக் குதறுவதைத் தொழிலாகக் கொண்டவர்கள் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அந்தச் சிலர் "அம்மாவுக்கு ஆதரவு" என்ற அகலமான நீண்ட சுவரின் முன்னால் நின்று கொண்டு ஓங்காரக் கூச்சலிடுகிறார்கள். ஆனால் அந்தக் கூச்சல் அந்தச் சுவரிலே மோதி "சூன்யக்காரி! சூழ்ச்சிக்காரி! சண்டாளி!" என்றெல்லாம் எதிரொலிக்கிற ஓசையை இந்த நாடு கேட்டுச் சிரித்துக் கொண்டுதான் இருக்கிறது.

அன்புள்ள,

மு.க.

11-8-2010

3492. எல்லாம் காலத்தின் கோலம்தான்!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கென நிறைவேற்றப்பட்ட சட்டம் செல்லாது என்று இந்திய உச்ச நீதிமன்றத்திலே 1994ஆம் ஆண்டு தனியார் ஒருவரால் வழக்கு தொடுக்கப்பட்டு - ஏறத்தாழ 16 ஆண்டுகளுக்குப் பிறகு 13-7-2010 அன்று தான் உச்ச நீதிமன்றம் ஒரு இடைக்காலத் தீர்ப்பை வழங்கியது.

அந்த இடைக்காலத் தீர்ப்பில், "It has been laid down that if a State wants to exceed 50 percent reservation, then it is required to base its decision on the quantifiable data. In the present case, this exercise has not been done. Therefore, keeping in mind the said parameter, we direct the State to place the quantifiable data before the Tamil Nadu State Backward Classes Commission and, on the basis of such quantifiable data amongst other things, the Commission will decide the quantum of Reservation" என்று சொல்லப்பட்டுள்ளது. அதாவது ஒரு மாநிலம் 50 சதவிகித இட ஒதுக்கீட்டு அளவை விஞ்ச வேண்டுமானால், அதனை நியாயப்படுத்துவதற்குத் தேவையான புள்ளி விவரங்களின் அடிப்படையில் முடிவு மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த நிகழ்வில் புள்ளி விவரங்கள் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்படவில்லை. எனவே ஏற்கனவே சொல்லப் பட்டுள்ள அளவுகோலை மனதிலே கொண்டு, மாநில அரசு தேவையான புள்ளி விவரங்களைச் சேகரித்து, தமிழ்நாடு மாநில பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திடம் ஒப்படைக்க வேண்டு மென்றும், சாதிவாரியான புள்ளி விவரங்களின் அடிப்படையில் அந்த ஆணையம் இட ஒதுக்கீடு எவ்வளவு என்ற அளவை நிர்ணயம் செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடுகிறோம் என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் புள்ளி விவரங்களை தமிழக அரசின் சார்பில் தனியாக சேகரிக்க வேண்டு மென்றால், அதற்கு நமக்கு சாதிவாரியான மக்கள் தொகை விவரங்கள் வேண்டும். அதற்கு சாதிவாரியான கணக்கெடுப்பு (Caste-Based Census) மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் மட்டும் இந்தச் சாதிவாரிக் கணக் கெடுப்பை நடத்த வேண்டுமென்றால் அதற்கு சுமார் 400 கோடி ரூபாய் நிதி தேவைப்படுகிறது. இந்த நிதியை மத்திய அரசிடமிருந்து கேட்டுப் பெறலாம் என்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் கருத்து தெரிவித்திருக்கிறது. இது பற்றி தமிழக அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கும் நிலையில்தான் அகில இந்திய அளவிலேயே சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவது பற்றி மத்திய அரசில் பரிசீலிக்கப்பட்டு, அதை ஏற்கலாம் என்ற அளவிற்கு முடிவுகள் வந்துள்ளன. அவ்வாறு மத்திய அரசின் சார்பிலேயே ஒரு கணக்கெடுப்பு சாதிவாரியாக எடுக்கும்போது, தமிழ்நாடு அளவில் தானாக ஒரு கணக்கெடுப்பை நடத்த வேண்டுமா, அல்லது மத்திய அரசு எடுக்கும் கணக்கெடுப்பில் தமிழகத்தின் கணக்கெடுப்பும் எடுக்கப்பட்டு விடாதா என்றும் யோசிக்க வேண்டும். மேலும் மத்திய அரசு எடுக்கும் கணக்கெடுப்பை பயோ-மெட்ரிக் சென்சஸ் அடிப்படையிலே எடுப்பதா அல்லது சாதிவாரியாக கணக்கெடுப்பு நடப்பதா என்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கள் நிலவு கின்றன.

இதிலே கூட "பயோ-மெட்ரிக் சென்சஸ் முறையில் சாதிவாரி கணக்கெடுப்பை தொடங்கலாம் என்று முதல் அமைச்சர் கருணாநிதி கூறியிருக்கிறார்" என்று பா.ம.க. நிறுவனர் ஒரு விழாவில் பேசி இன்றைய "தினத்தந்தி" நாளிதழில் வெளிவந்துள்ளது. எந்த அடிப்படையில் அவர் அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார் என்று தெரியவில்லை. ஆனால் நம்மைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்சினை எழுந்ததும் 14-8-2010 அன்றே இந்தியப் பிரதமருக்கு நான் எழுதிய கடிதத்தில் "I firmly believe that caste-based census will certainly go a long way in ensuring that the fruits of the various developmental schemes implemented by the Union Government and the State Govern-ment fully percolate down to the lower strata of the Society. Hence the urgent need of the hour is to incorporate the Caste-based details in the on-going Census

2011 itself without postponing it to bio-metric stage. I am given to understand that a few changes in the existing census format by the experts concerned will be sufficient to achieve the object of caste-based census and accomplish the task early" என்று யாரும் என்னைக் கேட்டுக்கொள்ளாத நேரத்திலேயே - சமூக நீதிக்காக எனக்கு முன்பே குரல் கொடுத்ததாக கூறிக் கொள்வோர் - ஆர்ப்பாட்டம் செய்வோம், போராட்டம் நடத்துவோம் என்றெல்லாம் அறிவிக்காத நிலையிலேயே நான் கடிதம் எழுதியிருக்கிறேன்.

அதாவது "மாநில அரசும், மத்திய அரசும் நிறைவேற்றி வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் பலன்கள் கடைக்கோடிப் பிரிவினருக்கும் முழுமை யாகச் சென்றடைய வேண்டுமென்றால், சாதிவாரிக் கணக்கெடுப்பு மிகவும் அவசியமானதென்று நான் உறுதியாக நம்புகிறேன். **எனவே நடைபெற்று வரும் மக்கள் தொகை கணக்கெடுப்பிலேயே சாதிவாரிக் கணக் கெடுப்பையும் இணைத்து மேற்கொள்வதும் பயோ-மெட்ரிக் கணக்கெடுப்பு என்று சொல்லி சாதிவாரிக் கணக்கெடுப்பை ஒத்திப் போடாமல் இருப்பதும் தற்போது அவசியத் தேவை யாகும். தற்போது உள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கான படிவத்திலேயே ஒருசில மாறுதல்களைச் செய்து சாதிவாரிக் கணக்கெடுப்புக்கான விவரங்களை சேகரித்திட முடியும் என நான் அறிகிறேன்**" என்று தெளி வாக சாதிவாரிக் கணக்கெடுப்பின் அவசியத்தையும், அவசரத்தையும் வலியுறுத்தி நான் கடிதம் அனுப்பியிருக்கிறேன்.

தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத் தலைவராக உள்ள நீதிபதி எம்.என். ராவ் அவர்கள் கூட, "சாதிகளால் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளை சாதி வாரிக் கணக்கெடுப்பு நடத்துவதன் மூலம் மட்டுமே போக்க முடியும். சாதி வாரியான கணக்கெடுப்பு நடத்தினால் சுதந்திரம் பெற்று 63 ஆண்டுகள் ஆன பிறகும் பல சமூகங்கள் முன்னேறவில்லை என்பது புள்ளி விவரங்களுடன் தெரியவரும். அவ்வாறு தெரிய வந்தால் அந்தச் சமூகத்தினர் மேலும் சலுகைகளைக் கோரு வார்கள் என்பதாலேயே சாதிவாரிக் கணக்கெடுப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது" என்று சொல்லியிருப்பதையும் நாம் மனதிலே கொள்ளலாம்.

சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணியை சென்சஸ் அமைப்பிடம்தான் ஒப்படைக்க வேண்டும் என்பதையும், பயோ மெட்ரிக் நடைமுறையுடன் இணைத்து மேற்கொள்ளக்கூடாது என்பதையும் வலியுறுத்தி அண்மையில் பெங்களூருவில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் கலந்து கொண்ட அறிஞர்கள் விளக்கங்கள் வழங்கியுள்ளனர். அந்த விளக்கங்களின் அடிப்படையில் அவர்கள் மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், ''பயோ மெட்ரிக் நடைமுறையில் வெளி அமைப்புகள் பங்கேற்று ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் உள்ள நிலையில், அந்த அமைப்புகள் சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணியில் சமரசம் செய்துகொள்ளும் வாய்ப்புகளும் ஏற்படக்கூடும்.

பயோமெட்ரிக் புள்ளி விவரங்களைத் தொகுக்கும் மிகப்பெரிய பணி அந்த அமைப்புகளுக்கு அளிக்கப் பட்டிருப்பதே அதன் காரணம். சாதிவாரியான மக்கள் தொகை புள்ளி விவரங்கள் தொகுக்கப்படும் பணி சமரசம் செய்து கொள்ளப்பட்டால், இந்தப் புள்ளி விவரங்கள் தொகுக்கப்படும் நோக்கத்தை நிச்சயமாகத் தோற்கடித்துவிடும். மார்ச் 2011 உடன் இக்கணக்கெடுப்பின் அனைத்துப் பணிகளும் முடிந்து போய்விடும். ஆனால் பயோ மெட்ரிக் புள்ளி விவரங்கள் தொகுக்கும் பணி மட்டும் மேலும் சிறிது காலத்திற்குத் தொடரும் வாய்ப்பு உள்ளது. எனவே, சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பணியை மேற்கொள் வதற்கான சரியான அமைப்பு தேசிய சென்சஸ் அமைப்புதான் என்றும், 2011 பிப்ரவரி 9 ஆம் தேதி முதல் 28ஆம் தேதி வரை வீடு வீடாக மேற்கொள்ளப்படவிருக்கும் மக்கள் தொகைக் கணக்கிடும் பணி மேற்கொள்வதற்கான சரியான நேரம். சோதித்து அறியப்பட்ட, நம்பகத் தன்மை உள்ள சென்சஸ் அமைப்பிடமே சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பையும் ஒப்படைக்க வேண்டும். பயோமெட்ரிக் புள்ளி விவரங்கள் பெறும் நடைமுறையுடன் அதனை இணைப்பதால் ஏற்படும் பேராபத்துகள் தவிர்க்கப்படவேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளதையும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

மத்திய அரசாங்கப் பணிகளில் வன்னியர்களுக்கு இரண்டு சதவிகித இட ஒதுக்கீடு வேண்டுமென்று கோரிக்கை வைத்த டாக்டர் ராமதாஸ் அவர்கள் அவரது மகன் டாக்டர்

அன்புமணி அவர்கள் மத்திய அமைச்சராக இருந்த போது நாடாளுமன்றத்திலோ அல்லது அமைச்சரவைக் கூட்டத்திலோ அது குறித்து எப்போதாவது வாய் திறந்தது உண்டா?

"சமூக நீதியைப் பற்றி கருணாநிதி பேசலாமா?" என்றும், "சமூக நீதியைப் பற்றி முதல்வர் கருணாநிதியோ, வேறு திராவிடக் கட்சித் தலைவர்களோ பேசலாமா?" என்றும், "வன்னியர் சங்கம் தொடங்கி, பெரும் போராட்டங்களை நடத்தி, 30 உயிர்களை பலி கொடுத்த பிறகு தான் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு 20 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது" என்றும் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் பேசியதாக ஏடு களில் செய்தி வெளிவந்துள்ளது. அந்த இருபது சதவிகித ஒதுக்கீடு வேண்டு மென்று அவர் போராடியிருக்கலாம். ஆனால் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடத்தப்பட்ட அந்தப் போராட்டத்திற்கு கழகம் ஆட்சிக்கு வந்ததும் மதிப்பு அளித்து, அவரையும் அழைத்துப் பேசி, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கென்று தனியாக 20 சதவிகிதம் வழங்கப்பட்டது என்ற வரலாற்றை டாக்டர் ராமதாஸ் மறைத்த போதிலும், அந்தப் போராட்டத்தில் உயிரிழந்த அந்த 30 உயிர்களுக்கும் குடும்ப நிதி ஒதுக்கீடு அளித்து, மாதந்தோறும் ஓய்வூதியமும் வழங்கச் செய்து, அந்த இருபது சதவிகித இட ஒதுக்கீட்டின் பலனை அனுபவித்து வரும் ஒவ்வொருவரும் மறக்க மாட்டார்கள் என்பது மட்டும் திண்ணம்.

சமூக நீதியைப் பற்றி திராவிடக் கட்சித் தலைவர்கள் பேசலாமா என்று டாக்டர் ராமதாஸ் வேண்டுமானால் கேட்கலாம். ஆனால் சமூக நீதிக்காகவே தோன்றிய கட்சி தான்; நீதிக் கட்சி எனும் திராவிட இயக்கங்களின் வேர்க் கட்சியாகும். நீதிக்கட்சி ஆட்சியிலேதான் முதன் முதலாக 1921ஆம் ஆண்டில் முதல் கம்யூனல் ஜி.ஓ. எனப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க இட ஒதுக்கீட்டு ஆணையே வழங்கப்பட்டது. சமூக நீதியைப் பற்றி நானோ, அல்லது தமிழர் தலைவர் வீரமணி அவர்களோ மற்ற திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களோ பேசக் கூடாது என்றால் வேறு யார்தான் பேசுவதற்குத் தகுதி படைத்தவர்கள் என்பதை டாக்டர் ராமதாஸ் அவர்களே யோசித்துப் பேசியிருப்பாரானால் உணர்ந்து கொண்டிருக்க முடியும்.

நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது, என்னை விழுப்புரத்திற்கு அழைத்துச் சென்று தனியாக நாற்காலி ஒன்றையே போட்டு, கலைஞர் முதல் அமைச்சராக வந்தால் தான் சமூக நீதியைக் காப்பாற்ற முடியுமென்று முழக்கமிட்ட டாக்டர் ராமதாஸ், தற்போது சமூக நீதியைப் பற்றி கருணாநிதி பேசலாமா என்று கேட்கிறார் என்றால் எல்லாம் காலத்தின் கோலம்தான்!

அன்புள்ள,

மு.க.

18-8-2010

3493. முதலில் புரியாத ஏடுகளாவது; இனி புரிந்து கொள்ளுமா?

உடன்பிறப்பே,

மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்க அகில இந்திய அளவில் பொது நுழைவுத் தேர்வு அடுத்த கல்வி ஆண்டு முதல் கொண்டுவரப்படும் என்ற ஒரு முடிவினை மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் தெரிவித்ததாக நாளேடுகளில் ஒரு செய்தி கடந்த 14-8-2010 அன்று வெளிவந்தது. அந்தச் செய்தி வந்தவுடன் 15-8-2010 அன்று மத்திய அரசின் அந்த முடிவு காரணமாக தமிழக மாணவர்கள் குறிப்பாக ஏழையெளிய மற்றும் கிராமப் புற மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதை விளக்கி, இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கும், மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் கடித வாயிலாக தெரிவித்து நமது நாடாளுமன்றக் குழுத் தலைவர் தம்பி டி.ஆர்.பாலு மூலமாகவும் அறிவித்துள்ளேன்.

அந்தக் கடிதத்தில்

> “இந்திய மருத்துவக் குழுமம் அளித்துள்ள பரிந்துரையின் பேரில் 2011-2012 ஆம் ஆண்டு முதல் அகில இந்திய அளவில், மருத்துவப் படிப்பில் சேருவதற் கான நுழைவுத் தேர்வு நடத்தப்படும் என்று மத்திய அரசு; உச்சநீதிமன்றத்தில் உள்ள வழக்கு, விசாரணைக்கு வந்த போது தெரிவித்துள்ளது. கிராமப்புற மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று, தொழில் மற்றும் மருத்துவக் கல்விக்கான நுழைவுத் தேர்வினை 2007-2008ஆம் ஆண்டு முதல் இரத்து செய்து சட்டம் இயற்றியுள்ளது. இதனால் சமூக மற்றும் பொருளாதார

நிலைகளில் பின்தங்கியுள்ள கிராமப்புற மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். மத்திய அரசு தற்போது அறிவித்துள்ள முடிவு மாநிலங்களின் கல்வி முறையை நிர்வகிப்பதில் உள்ள உரிமையில் குறுக்கிடுவதாகக் கருதப்படுகிறது. தமிழ்நாடு அரசு 69 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் முறையைப் பல ஆண்டுகளாக நடை முறைப்படுத்தி வருகிறது. தற்போது மத்திய அரசு தெரிவித்துள்ள புதிய முறையினால் இந்த இட ஒதுக்கீட்டு முறையைச் செயல்படுத்த இயலாத நிலை ஏற்படும். எனவே தமிழ்நாடு அரசு, மருத்துவக் கல்வி சேர்க்கையில் அகில இந்திய அளவில் பொது நுழைவுத் தேர்வு நடத்துவதை ஏற்க இயலாது"

என்று எழுதி அந்தச் செய்தி அனைத்து ஏடுகளிலும் விளக்கமாக வந்துள்ளது.

15ஆம் தேதி நான் இவ்வாறு எழுதியதற்குப் பிறகு, ஜெயலலிதா நான்கு நாட்களுக்குப் பிறகு திடீரென்று விழித்துக் கொண்டு, அவர் ஏன் இத்தனை நாட்களுக்கும் சும்மாயிருந்தார் என்பதைப் பற்றியெல்லாம் நினைக்காமல்; நீண்ட அறிக்கையினை எழுதச் செய்து - அதில்; பெரும்பாலும் என்னைக் குற்றஞ்சாட்டு வதிலும், என்னைப் பற்றியே தேவையில்லாமல் விமர்சிப்பதிலும் நேரத்தினைச் செலவிட்டுள்ளார்.

ஏடுகளில் செய்தியைப் பார்த்த அன்றைய தினமே நான் பிரதமருக்கும், மத்திய அமைச்சருக்கும் கடிதம் எழுதியிருந்த போதிலும், கடிதம் எழுதினால் போதுமா, முதல் அமைச்சர் நேரிலேயே சென்றிருக்க வேண்டாமா என்றெல்லாம் ஜெயா அறிக்கையிலே கேட்டுள்ளார். ஒரு அரசு என்றிருக்கும்போது ஒவ்வொரு நாளும் பிரச்சினைகள் வந்து கொண்டுதான் இருக்கும். ஒவ்வொரு பிரச்சினை வந்தபோதும் உடனடியாக ஒரு முதல் அமைச்சர் டெல்லிக்குச் சென்று பிரதமரையும், துறையின் அமைச்சரையும் நாடாளுமன்றத் தொடர் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமேயானால், சரக்கு மற்றும் சேவை வரி முறையை அமல்படுத்திட அரசியல் அமைப்புச் சட்டத்தில் கொண்டுவரப்பட உள்ள உத்தேச வரைவுத் திருத்தம்

குறித்த செய்தி வந்ததும், 29-7-2010 அன்று பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கிறேன். அந்தக் கடிதத்தின் நகலை மத்திய நிதி அமைச்சருக்கும் அனுப்பினேன். அதைத் தொடர்ந்து டெல்லியில் நடைபெற்ற கூட்டத்தில் நமது நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களும், வணிக வரித்துறை அமைச்சர் தம்பி உபயதுல்லா அவர்களும் கலந்து கொண்டு நமது நிலையை அங்கே வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி, மீண்டும் 17-8-2010 அன்று பிரதமருக்கும் நிதித்துறை அமைச்சருக்கும் நானே கடிதம் எழுதியதோடு, நேற்றையதினம் டெல்லியில் நடைபெற்ற கூட்டத்திற்கு நமது சட்டத் துறை அமைச்சர் தம்பி துரைமுருகனை நேரில் அனுப்பி அங்கே அந்தப் பிரச்சினை குறித்து பேசச் செய்திருக்கிறேன்.

அதுபோலவே சாதிவாரிக் கணக்கெடுப்பில் பயோ-மெட்ரிக் முறையைக் கொண்டுவரப் போவதாக செய்தி வந்ததும், 14-8-2010 அன்று இந்தியப் பிரதமருக்கும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழிகாட்டும் தலைவர் திருமதி சோனியா காந்திக்கும் அதுபற்றி விவரமாக கடிதம் எழுதியிருக்கிறேன். எனவே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரச்சினை வரும்போதும் முதலமைச்சர் நேரடியாக டெல்லிக்கு சென்றிட முடியாது.

எதிர்க்கட்சித் தலைவர் ஜெயாவுக்கு பிரச்சினையைப் பற்றி அறிக்கை எழுதவே நான்கு நாட்களாகி இருக்கிறது. அந்த அறிக்கையிலும் பிரச்சினையைப் பற்றி எழுதுவதற்குப் பதிலாக என்னைப் பற்றியே எழுதுகிறார் என்றால், அவருக்கு பிரச்சினையிலே உள்ள அக்கறையை விட இந்த அரசை எதிர்த்து எழுத வேண்டும் என்பதிலேதான் கவனம் என்பதை யாரும் புரிந்து கொள்ள முடியும்.

மேலும் ஜெயலலிதா தனது அறிக்கையில், தமிழகத்திலே நுழைவுத் தேர்வை அவர்தான் ரத்து செய்ததைப் போல விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார். உண்மையில் சொல்ல வேண்டுமென்றால், ஜெயாவின் ஆட்சிக் காலத்தில்தான் பொது நுழைவுத் தேர்வு முறையை முறையாக சட்டவிதிகளின்படி நீக்காமல் 9-6-2005 அன்று அவசர அவசரமாக ஒரு அரசாணையைப் பிறப்பித்து, அந்த ஆணை 27-6-2005 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தால் செல்லுபடியாகாது என்று தீர்ப்பு கூறப்பட்டுவிட்டது. மீண்டும் 18-2-2006இல் ஜெயா

ஆட்சிக் காலத்தில் பிறப்பிக்கப்பட்ட ஆணையும், 27-2-2006இல் உயர்நீதிமன்றத் தினால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

ஆனால் 2006ஆம் ஆண்டு மே திங்களில் தி.மு. கழக அரசு பொறுப்பேற்ற பிறகுதான், பொது நுழைவுத் தேர்வு முறையை ரத்து செய்ய எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய ஒரு குழு அமைக்கப்படும் என்று 24-5-2006 அன்று ஆளுநர் உரையிலேயே அறிவித்து, அதன் தொடர்ச்சியாக அண்ணா பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர், டாக்டர் எம். அனந்தகிருஷ்ணன் தலைமையிலே ஒரு குழு 7-7-2006 அன்று அமைக்கப்பட்டது.

அந்தக் குழு அளித்த பரிந்துரைகளை சட்டப்படி பரிசீலித்து, பொது நுழைவுத் தேர்வு முறையை அறவே நீக்குவதற்கான உரிய சட்டத்திருத்தம் தி.மு. கழக ஆட்சியிலே கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத் திருத்தம் சட்டமன்றத்தில் நிறைவேறிய பிறகு - குடியரசுத் தலைவரின் ஒப்புதலை முறைப்படி பெற்று, அதன் பின்னர் இது சட்டமாக்கப்பட்டு 7-3-2007 அன்று முதல் இந்தச் சட்டம் அமுலிலே இருந்து வருகிறது. இந்தச் சட்டத்தையும் எதிர்த்து வழக்கு தொடரப்பட்டு - அந்த வழக்கினை விசாரணை செய்த, சென்னை உயர்நீதி மன்றம் 27-4-2007 அன்று இந்தச் சட்டத்தை ஏற்று உறுதி செய்தது. அதன் காரணமாக கடந்த இரண்டு மூன்று ஆண்டு காலமாக ஏழையெளிய, கிராமப்புற மாணவர்கள் பல்லாயிரக்கணக்கில் பயன் பெற்று வருகிறார்கள்.

தற்போதைய பிரச்சினையிலேகூட, பிரதமருக்கும், துறை அமைச்சருக்கும் நான் 15ஆம் தேதி கடிதம் எழுதியதோடு விட்டு விடாமல், இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கில், நம்மையும் ஒரு வாதியாகச் சேர்த்துக் கொள்ளக் கோரி, தமிழக அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் நேற்றைய தினம் மனு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவில் தமிழக அரசு கொள்கை முடிவெடுத்து, பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வை அறவே ரத்து செய்துள்ள நிலையில், மருத்துவக் கவுன்சிலின் முடிவு, தமிழக அரசின் நிலைக்கு எதிராக உள்ளதால், தமிழக அரசையும் ஒரு வாதியாக சேர்த்துக்கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது.

இந்த மனு அடுத்த மாதம் 10ஆம் தேதியன்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் ரவீந்தரன், ஏ.கே.கங்குலி ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வரவுள்ளது. இந்தச் செய்தியும் ஏடுகளிலும் வந்துள்ளது ; தொலைக் காட்சிகளிலும் சொல்லப்பட்டுள்ளது.

இந்த அளவிற்கு இந்தப் பிரச்சினையிலே தமிழக அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ள நிலையில் அதையெல்லாம் அப்படியே மறைத்து விட்டு, எதிர்க்கட்சித் தலைவர் என்று சொல்லிக்கொள்ளும் ஒருவர் அரசின் நடவடிக்கைகளுக்கெல்லாம் எதிராக எந்த அளவிற்கு செயல்பட்டு வருகிறார் என்பதையும், அதுவும் இத்தனை நாட்களும் கொடநாட்டிலும், சிறுதாவூரிலும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்து விட்டு, தற்போது தேர்தல் வருகிறது என்றதும், அதற்காக இப்படியெல்லாம் தேவையற்ற செயல்களில் ஈடுபடுவதையும் தமிழ்நாட்டு மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முதலில் புரியாத ஏடுகளாவது; இனி புரிந்து கொள்ளுமா?

அன்புள்ள,

மு.க.

20-8-2010

3494. நியாயம் தானா? நீங்களே சொல்லுங்கள்!

உடன்பிறப்பே,

திராவிட இயக்கம், திராவிடர் கழகமாக போராட்டங்களில் ஈடுபட்ட போதும் சரி - திராவிட முன்னேற்றக் கழகம் என்ற நிலையில் போராட்டங்களில் ஈடுபட்ட போதும் சரி - ஒவ்வொரு நேரத்திலும் தன்னை விளம்பரப்படுத்திக்கொள்ளவோ, வேண்டுமென்றே அரசுக்குச் சிக்கலை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகவோ - "போர் முனைக்கு வாருங்கள்" என்று பொதுமக்களைத் திரட்டியது இல்லை - தனது கட்சித் தோழர்களை அவ்வாறு கூறி அழைத்ததும் இல்லை. எந்தப் பிரச்சினைக்கான கோரிக்கை முழக்கமிட்ட காலத்திலும், அதற்கான கிளர்ச்சிகளை அமைதியான முறையில், அறவழியில் நடத்திப் பழக்கப்பட்டவைகள்தான். அதனால்தான் அந்தப் போராட்டங்கள் "அறப்போராட்டம்" என்ற பெயரிட்டே அழைக்கப்பட்டது.

தமிழ் மொழிக்குப் பேராபத்து சூழுமோ என்ற நிலையில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்த போதுகூட, 1938 ஆம் ஆண்டு வாக்கில் சென்னை தொண்டை மண்டல உயர்நிலைப் பள்ளி வாசலில் அறப்போர் வீரர்கள் அணிவகுத்து நின்று - முதல் அணியிலே அவர்கள் யார் யார் என்று பெயர் குறிப்பிடப்பட்டு - குறிப்பிட்ட நாளில் - குறிப்பிட்ட பள்ளியின் வாசலில் - குறிப்பிட்ட தோழர்கள் மாத்திரம் அமைதியான முறையில் மறியல் செய்து கைதாகியிருக்கிறார்களே தவிர - மொழிப் போராட்ட வீரர்கள், பள்ளியை முற்றுகையிடுவார்கள் என்றோ அல்லது இந்தியைக் கட்டாயப்படுத்திய அன்றைய ஆட்சியாளர் களுடைய கோட்டையை முற்றுகையிடுவார்கள் என்றோ கட்சித் தலைமையினால் அறிவிக்கப்படவும் இல்லை; அப்படியொரு

போராட்டத்தில் ஈடுபடவும் இல்லை. ஆனால் பொது மக்கள் - ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள மக்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்பதற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய கம்யூனிஸ்ட்கள் இருக்கிறார்களே. அவர்கள் நடத்துகின்ற கிளர்ச்சி எதுவாயினும், அதற்கு ஒரு போர்க்கள முத்திரையைக் குத்தாமல் இருக்க மாட்டார்கள். முதலில் ஊர்வலம் என்பார்கள், அடுத்து, கண்டன ஆர்ப்பாட்டம் என்பார்கள், அதற் கடுத்து, மறியல் என்பார்கள், அதைத் தொடர்ந்து தலைமைச் செயலகம் (கோட்டை) முற்றுகை என்பார்கள். ஓர் அரசு இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு அவர்கள் அணி வகுத்து வரும் படைக்கு முரசு கொட்டி வர வேண்டும் என்றும் - முற்றுகைப் போராட்டத் தளபதிகளுக்கு முகமன் கூறி வரவேற்பு வழங்க வேண்டுமென்றும் எதிர்பார்ப்பார்கள். இப்படித்தான் கம்யூனிஸ்ட்களுடைய கிளர்ச்சிகள் கோரிக்கைப் பேரணிகளாக மாறி 'கோட்டை முற்றுகை' என்ற அளவிற்கு வளர்ந்திருக்கின்றன.

அவர்கள் வைத்த கொள்ளிதான் இந்தியாவில் சில மாநிலங்களில் "மாவோயிஸ்ட்" தாக்குதல், அராஜகம், உயிர் பலிகள் என்ற அளவுக்கு கொழுந்து விட்டு எரிகிற காட்சியைக் காணுகிறோம். தமிழகத்திலும் அத்தகைய அராஜகங்களை வன்முறைச் சேட்டைகளை கொலை வெறித் தாக்குதல்களை கட்டவிழ்த்து விட வேண்டுமென்று திட்டமிட்டு, திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு ஒரு சிறு களங்கமாவது ஏற்படுத்தினால்தான் அதை வைத்துக் கொண்டு தேர்தலில் தாங்கள் நிற்கவோ அல்லது தங்கள் கூட்டணித் தலைவி, "சிறுதாவூர் சீமாட்டி", வெற்றி வாகை சூடி மீண்டும் கோலோச்சவோ முடியும் என்ற எதிர்பார்ப்போடு - திட்டங்களைத் தீட்டுகின்றனர், தீர்மானங்களை நிறைவேற்றுகின்றனர்.

இதோ பாருங்கள்! அவர்கள் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையின் சாராம்சமாக என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள்? "சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயற்குழு முடிவின்படி 30-8-2010 திங்கள் அன்று சென்னையில் கோட்டை முற்றுகைப் போராட்டத்தை நடத்த திட்டமிட்டிருந்த நிலையில், அரசு அதனை தடுத்து நிறுத்தி விட்டது" - இது அவர்களின் துண்டறிக்கையில் காணப்படும் இந்த அரசைப் பற்றிய குற்றச்சாட்டு.

இவர்கள் கோட்டையை நோக்கி வருவார்களாம்! முற்றுகைப் போராட்டம் நடத்துவார்களாம்! அதை அரசும் இந்த அரசின் காவல் துறையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு அவர்களுக்கெல்லாம் விருந்து வைத்து மகிழவேண்டுமாம்.

என்ன இவர்களுடைய கோரிக்கை?

அவர்களே வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது போல 27 ஆண்டுகளாக தொகுப்பூதியத்தின் கீழ் பணியாற்றும் சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்பதுதான் அவர்களுடைய கோரிக்கை.

எத்தனை ஆண்டு கோரிக்கை இது? அவர்களே கூறுகிறார்கள் - 27 ஆண்டு கோரிக்கை என்று. இந்த 27 ஆண்டுகளில் சத்துணவு ஊழியர்கள் என்று இல்லாவிட்டாலும் - தொகுப்பூதிய ஊழியர்கள் என்று ஆயிரக்கணக்கானவர்கள் இந்த அரசில் பணியாற்றினார்களா? இல்லையா? அவர்களுக்கெல்லாம் எந்த ஆட்சியிலாவது பணி நிரந்தரம் செய்யப்பட்டதா?

தொகுப்பூதியத்தில் இருப்பவர்களை, பகுதி நேர ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்குவதற்கு எந்த அரசாவது ஏன் மேற்கு வங்க அரசோ, கேரள அரசோ போன்ற கம்யூனிஸ்ட் அரசுகளாவது முன் வந்தது உண்டா? ஆனால் 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்ற கதையாக தமிழ் நாட்டில் மாத்திரம் பணி நிரந்தரம் கோரி போராட்டம் நடத்துவோம் என்றும், அதற்கு கோட்டையையே முற்றுகையிடுவோம் என்றும் அதைக் காவலர்கள் தடுத்தால், அங்கே ஏற்படுகிற தகராறைப் பெரிதுபடுத்தி, "தமிழக அரசின் உச்சகட்ட அராஜகம்" என்று ஊருக்கு ஊர் சொல்லுவோம் என்று பேசுவதும், எழுதுவதும் எந்த வகை ஜனநாயகம் என்று எனக்குத் தெரியவில்லை

போகட்டும். இந்த கோரிக்கையைக் கூட இந்த அரசு கவனிக்காமல் இருந்ததா? கவனித்த காரணத்தால்தான் அவர்களை முழு நேர அரசு ஊழியர்களாக ஆக்க இயலாவிட்டாலும், கடந்த காலத்தில் அ.தி.மு.க. அரசு அளிக்காத சலுகைகளையெல்லாம் இந்த ஆட்சியிலே அளித்திருக்கிறோம். உதாரணமாகச் சிலவற்றைச் சொல்ல வேண்டுமென்றால்

42251
க 894.8116
கலை.44

தி.மு.க. அரசு
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம் & ஆராய்ச்சி மையம்
சென்னை-18

- சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் ஒருமுறை கூட ஊதிய விகிதம் உயர்த்தி வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியில் அவர்களுக்கு மூன்று முறை ஊதிய விகிதம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- அங்கன்வாடி, மற்றும் சத்துணவு மையங்களில் பணி புரியும் சமையலர், சமையல் உதவியாளர், மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு தொகுப்பூதியத்திற்குப் பதிலாக "சிறப்பு கால முறை ஊதியம்" வழங்க இந்த ஆட்சிக் காலத்தில்தான் முடிவு செய்யப்பட்டுள்ளது.

- சத்துணவு மற்றும் அங்கன் வாடிப் பணியாளர்களுக்கும் கழக ஆட்சியிலே தான் முதல் முறையாக வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி, பண்டிகைக் கால முன்பணம் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

- கழக ஆட்சியிலேதான் இவர்களுக்கு மாதந்தோறும் முதல் முறையாக ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

- கழக ஆட்சியில்தான் இவர் களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது.

- கழக ஆட்சியிலேதான் இவர்களுக்கு பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம், சிறப்பு சேமநல நிதித் திட்டம், குடும்ப நலத் திட்டம், புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மகப்பேறு காலத்தில் விடுப்பு கோடை விடுமுறை காலத்தில் ஊதியம், பயணப்படி ஆகிய அனைத்தும் வழங்கப்படுகின்றன.

- சத்துணவு அமைப்பாளர்கள், மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆகியோர் தமிழகத்தில் தற்போது பெற்று வரும் ஊதியத்தின் அளவு, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்தை விடவும் அதிகம்.

இந்த அளவிற்கு கழக அரசின் சார்பில் அவர்களுக்கு சலுகைகள் அளித்து வரும் நிலையில் அவர்கள் இந்த அரசினை எதிர்த்து, கோட்டை முன் முற்றுகைப் போராட்டம் என்று சொல்வது நியாயம்தானா? தற்போதைய சத்துணவுப் பணியாளர்கள் பிரச்சினையில் கோட்டையை முற்றுகையிட வேண்டிய அளவிற்கு என்ன நடந்து விட்டது? அ.தி.மு.க. ஆட்சியில் 'எஸ்மா, டெஸ்மா' சட்டங்கள் கொண்டு வரப்பட்டதைப் போல தற்போது கொண்டு வரப்பட்டுள்ளதா? அல்லது அந்த ஆட்சியில் இரவோடு இரவாக அரசு அலுவலர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் எங்கே அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்றே தெரியாத அளவிற்கு நிலைமை இருந்ததே. அதுபோல இப்போது எதாவது நிலைமையா? அல்லது ஒரே நாளில் இலட்சக்கணக்கான அரசு அலுவலர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டதே அது போன்று எதாவது தற்போது நடைபெற்று விட்டதா? எதற்காக முற்றுகை போராட்டம்? சத்துணவுப் பணியாளர்களுக்கு என்று இந்த ஒரு சங்கம்தான் உள்ளதா? கடந்த ஆண்டு 21-11-2009 அன்று சத்துணவுப் பணியாளர்களின் பல்வேறு சங்கங்களின் சார்பில் எம். பழனிநாதன் போன்றவர்கள், வரதராசன் போன்றவர்கள் எல்லாம் வள்ளுவர் கோட்டத்திலே பல்லாயிரக்கணக்கான சத்துணவுப் பணியாளர்கள் திரண்டிருந்து எனக்கு நன்றி அறிவிப்பு பாராட்டு விழா நடத்தினார்களே, அந்த அலுவலர்கள் எல்லாம் உண்மையை அறிய மாட்டார்களா? அவர்கள் மத்தியில் நான் அடுக்கடுக்காக ஒன்றன் பின் ஒன்றாக பதினைந்து சலுகைகளை அறிவித்த போது அந்த மண்டபமே எதிரொலிக்கின்ற அளவுக்கு அவர்கள் கையொலி செய்யவில்லையா? அந்த விழாவிலே பேசியது மாத்திரமல்லாமல், அந்தச் சலுகைகளுக்காக நன்றி தெரிவித்து பழனிநாதனும், சூரியமூர்த்தியும் அறிக்கைகள் விட்டது இன்றளவும் ஏடுகளிலே உள்ளதே? ஏன், சத்துணவுப் பணியாளர்களுக்காக 2006ஆம் ஆண்டு தி.மு. கழக அரசு பொறுப்பேற்ற ஒரு சில மாதங்களில் ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்ட போது சட்டப் பேரவையிலேயே இரண்டு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும், காங்கிரஸ், பா.ம.க. கட்சியினரும் பாராட்டும் நன்றியும் தெரிவித்துப் பேசியது 1-9-2006 தேதிய அவை நடவடிக்கை குறிப்பிலேயே இடம் பெற்றுள்ளதே!

உடன்பிறப்பே, உண்மையிலே சொல்லப் போனால், சத்துணவுப் பணியாளர்களுக்கு இந்த அரசின் மீது எந்தவிதமான

குறையும் இல்லை. அவர்கள் அனைவரும் நல்ல மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். ஆனால் அவர்களை வைத்துக் கொண்டு ஒரு சில சங்கத்தினர் மட்டும், அவர்களை சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்வதாகவும், ஒரு சில கோவில்களைப் பார்த்து வரலாம் என்று கூறி ஏமாற்றி சென்னைக்கு அழைத்து வர முற்படுகிறார்களே தவிர வேறல்ல. மற்ற அலுவலர்களின் சங்கத்தினர் எல்லாம் இது போன்ற கோரிக்கைகளுக்குத் தீர்வு வர வேண்டுமென்று நினைப்பவர்கள் என்னையோ அமைச்சர்களையோ அணுகி தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்து சலுகைகளைப் பெறுகிறார்கள், ஆனால் வேண்டுமென்றே இந்த அரசுக்கு எப்படியாவது கெட்டப் பெயரை ஏற்படுத்த வேண்டுமென்ற நினைப்போடு இருப்பவர்கள் தான் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறார்கள். அவர்களின் உண்மை உருவத்தை இந்தச் சங்கங்களில் உறுப்பினர்களாக இடம் பெற்றிருப்பவர்கள், வேறு எந்த ஆட்சிக் காலத்திலாவது அல்லது வேறு எந்த மாநிலத்திலாவது இதுபோன்ற சலுகைகள் கிடைத்துள்ளதா என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்து செயல்பட வேண்டாமா? "குடிதழீஇக் கோலோச்சும்" குறள் நெறி நடக்கும் இந்த அரசைக் குறை கூறுவது நியாயம்தானா? நீங்களே சொல்லுங்கள்!

அன்புள்ள,

மு.க.

31-08-2010

3495. பதுங்கிக் கொள்ள இருக்கவே இருக்கிறது கொடநாடு!

உடன்பிறப்பே,

ஏற்கெனவே நடந்தவைகளை உதாரணம் காட்டி, அவற்றில் சில, இப்போது நடப்பதைப் பொறுத்திச் சொல்வது சரியா என்று ஒரு வாதம் வைக்கப்படும்! முன்பு இருந்தவர்கள் தவறு செய்தால், அதே தவற்றை நாம் செய்யலாமா என்ற கேள்வி எழுப்பப்படும். ஆனால் இவற்றுக்கு இடையே நான் எழுப்பும் பிரச்சினை என்னவென்றால், முன்பு தங்கள் காலத்தில் இருந்த சூழலுக்கேற்ப சில பிரச்சினைகளைக் கையாண்டவர்கள் இப்போது அதே மாதிரியான சூழலுக்கிடையே நாம் ஒரு பிரச்சினையை கையாளும்போது - முன்பு போல இல்லாமல் இப்போது மென்மையாகவும், லாவகமாகவும் அணுகும்போது - அரசியல் காரணங்களுக்காக உள்நோக்கத்தோடு - இன்று நாம் கடைப்பிடிக்கும் மென்மையான அணுகுமுறையை ஏதோ ஒரு மிருகத்தனமான அணுகுமுறை என்பது போல பாவித்து - புயல் கிளம்பும் என்று எச்சரிக்கிறார்கள். பூகம்பம் ஏற்பட்டு விட்டது போல புலம்புகிறார்கள்.

இந்தப் பீடிகையெல்லாம் எதற்காக என்று கேட்கத் தோன்றும் உனக்கு! அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்ட - அரசே முன்னின்று நடத்தும் சத்துணவு திட்டத்தில் பணியாற்றும் ஊழியர்களுடைய போராட்டம் பற்றி - அதைத் தூண்டிவிட்டவர்களுடைய உள்நோக்கம் பற்றி - நீயும் பொது மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இதை எழுதுகிறேன்!

நமது கழக அரசுக்கு எதிராக எங்கேயாவது ஒரு சலசலப்பு தோன்றினாலும் - அதைப் பெரிய பிரளயமாக ஆக்கி இந்த அரசைக்

கவிழ்த்து விட்டு - அந்த இடத்தில் தான் வந்து உட்கார்ந்து விடலாமா என்று கனவு காண்கின்றவர்களில் தலையானவர் ஜெயலலிதா என்பதை நீ அறிவாய்!

அண்மையில் சத்துணவு ஊழியர்கள் சில கோரிக்கைகளை வைத்து - அவற்றைப் பற்றி என்னிடமோ - அந்தத் துறை அமைச்சரிடமோ - விவாதிப்பது கூடத் தேவையில்லை; நேரடியாகப் போராட்டத்திலேயே குதிப்போம்; தலைமைச் செயலகக் கோட்டையையே முற்று கையிடுவோம் என்று ஆர்ப்பரித்து, அதற்காக பல ஊர்களிலேயிருந்து படையும் திரட்டி, இந்த அரசு பாதுகாப்புக்காக ஏதாவது எதிர் நடவடிக்கை எடுத்தால் அவற்றைப் பூதாகாரமாக ஆக்கி - புயலைக் கிளப்பலாம் என்று சில கட்சியினர் கண்ட கனவு பலிக்காமல் போய் விடவே தூஷணை அகராதியில் என்னென்ன வார்த்தைகள் உண்டோ; அவைகளையெல்லாம் தொகுத்து என் மீதும், என் தலைமையிலே உள்ள இந்த அரசு மீதும் அர்ச்சனையாகப் பொழிந்து கொண்டிருக்கிறார்கள்.

இதிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களாவது தாங்கள் ஆரம்பித்த இந்தப் போராட்டம் இப்படி ஆகி விட்டதே என்று கவலைப்பட நியாயம் உண்டு. அதற்காக அவர்கள் நம் மீது கனல் கக்கவும் உரிமை உண்டு. ஆனால் இதில் இடையிலே புகுந்து கொண்டு ஜெயலலிதா என்ற அம்மையார் "குய்யோ முறையோ" என்று கூப்பாடு போடுவதற்குத்தான் பொருள் நமக்கு விளங்க வில்லை.

சத்துணவு ஊழியர்களையெல்லாம் நான் பழி வாங்குகிறேனாம்! இவர் ஆட்சியில் அவர்களுக்கெல்லாம் பட்டாபிஷேகம் நடத்திய வரைப் போலவும் - அவர்கள் பரவசமடையும் அளவுக்கு, பாதி நாள் வேலைக்கே முழுச் சம்பளம் கொடுத்தவரைப் போலவும் இன்றைக்குப் பசப்புகிறார்!

"ஆகா! எங்கள் எம்.ஜி.ஆர். கொண்டு வந்த திட்டம் என்பதால் தானே; சத்துணவு ஊழியர்களை கருணாநிதி பழிவாங்குகிறார்" என்று கதறுகிறார்; கண்ணீர் வடிக்கிறார்.

உடன்பிறப்பே! கண்ணீரில் "நீலிக் கண்ணீர்" என்று ஒரு வகை உண்டு. அந்த வகையில் ஜெயலலிதாவின் கண்ணீருக்கு அந்தப் பெயர் பொருந்தும்!

சத்துணவு ஊழியர்கள் இப்போது என்ன கேட்கிறார்கள்? அரை நாள் அதாவது பகுதி நேரம் வேலை பார்த்து விட்டு, முழு நேரச் சம்பளம் கேட்கிறார்கள். அவர்கள் பணியிலே சேரும்போது, அவர்களுடைய பணி "பகுதி நேரப்பணி" தான் என்பதை ஏற்றுக் கொண்டு தானே பணியிலே சேர்ந்தார்கள். அப்போது அரசின் சார்பாக அவர்கள் முழு நேரப் பணியாளர்களாக ஆக்கப்படுவார்கள் என்று ஏதாவது உறுதி மொழி அரசின் சார்பில் தரப்பட்டுள்ளதா? அவர்கள் பகுதி நேரப் பணியாற்றுபவர்கள் என்பதற்காகத்தான் அந்தந்த பகுதிகளிலே உள்ளவர்களைத்தான் இந்தப் பணியிலே அமர்த்தப்பட்டது. அவர்களை முழு நேரப் பணியாளர்களாகஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை அப்படியே ஏற்கலாம் என்று ஜெயலலிதா சொல்கிறாரா?

ஜெயலலிதா ஆட்சியிலே இருந்தாரே பத்தாண்டு காலம்! அப்போது, இந்தக் கோரிக்கையை அவரே நிறைவேற்றி யிருக்கலாமே? அப்போதும் சத்துணவுப் பணியாளர்கள் இந்தக் கோரிக்கையை வைத்துக் கொண்டுதானே இருந்தார்கள்!

இதற்கெல்லாம் பதில் சொல்ல வக்கற்றுப் போய் - வகையற்றுப் போய் - திருச்சி கூட்டத் திலே போய் "வனவாசத்தை"த் தேடியிருக்கிறார் ஜெயலலிதா! அதுவும் கண்ணதாசன் எழுதிய "வனவாசத்தை!" கண்ணதாசன் "வனவாசம்" பற்றி மாத்திரமா எழுதினார். இவரைப் போன்றவர்களின் "சகவாசம்" எப்படிப்பட்டது என்பதையும் பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறாரே?

அவ்வளவு ஏன்? அதைவிட அதிகமாக - அதைவிட ருசிகரமாக - இவரே கைப்பட எழுதிய கடிதங்கள் இன்றைக்கும் அந்தச் "சகவாச" சாட்சியங்களாக விளங்குகின்றனவே?

சத்துணவுத் திட்டத்தை எம்.ஜி.ஆர். கொண்டு வந்தாராம்; அதற்காக சத்துணவு ஊழியர்களைப் பழிவாங்குகிறோமாம்!

உண்மை என்ன உடன்பிறப்பே! எம்.ஜி. ஆருடைய சத்துணவுத் திட்டத்தை மேலும் விரிவாக்கி; அதை உண்மையான சத்துணவாக ஆக்கியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை; சத்துணவு அருந்தும் சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் வாரம் மூன்று முட்டை; முட்டை சாப்பிடாதவர்களுக்கு

வாழைப்பழம் என்றாக்கி, அந்தத் திட்டத்தை மேலும் பலன் உள்ளதாக செய்தது யார்? ஜெயலலிதா ஆட்சியா? அல்லது இப்போது நடைபெறுகின்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியா?

சத்துணவு ஊழியர்களின் இன்றைய கோரிக்கைகளை ஜெயலலிதா வாங்கிப் படித்துப் பார்க்கட்டுமே! என்னென்ன கோரிக்கைகளை நிறைவேற்றலாம் என்று அவரே சொல்லட்டுமே!

அரசு அலுவலர்களின் நலன்களுக்காகப் பாடுபட்டு வரும் மிகப் பெரிய சங்கமான தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் தலைவராக நீண்ட காலம் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற முன்னாள் மாநிலத் தலைவர் திரு.கோ. சூரியமூர்த்தி அவர்கள் இந்தச் சத்துணவுப் பணியாளர்கள் பற்றி இரண்டு நாட்களுக்கு முன்பு விடுத்துள்ள பத்திரிகை செய்தியில்,

> “மேற்கு வங்கம், கேரளா, திரிபுரா போன்ற (கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடக்கும்) மாநிலங்களைப் போன்ற நிர்வாகக் குறைபாடுகளும், அகவிலைப்படி மற்றும் ஊதியத்தில் பாதிப்பான நிலையும் தமிழ்நாட்டில் ஏற்படவில்லை. சத்துணவு, அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் சமையல் உதவியாளர்கள் அரசுடன் சுமூகமாகப் பேச்சு வார்த்தை நடத்தியதன் மூலமாக ஊதிய உயர்வு, பதவி உயர்வு, உள்ளிட்ட பல சலுகைகளைப் பெற்றுள்ளார்கள். அதைப் போலவே இன்னும் பெற வேண்டிய சலுகைகளை ஒற்றுமையாக இருந்து அரசியல் சூழ்ச்சிகளுக்கு பலியாகி விடாமல் பெற்றுக் கொள்ள முயல வேண்டும்.
>
> மனித நேயத்தோடு பல சலுகைகளை வழங்கிய ஆட்சியாளர்களின் மனதை அரசியல் உள்நோக்கத்தோடு புண்படுத்துவதன் மூலமாகவோ அல்லது போராடுவோம் என்று மிரட்டல் விடுப்ப தன் மூலமாகவோ பெரிதாக ஒன்றும் சாதித்து விட முடியாது. சத்துணவு, அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் சமையல் உதவியாளர்களில் பெரும் பகுதியினர் கிராமப் பகுதியைச் சார்ந்தவர்கள் என்பதாலும், தாழ்த்தப்பட்ட,

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், வர்க்கப் பற்றோடும், மனிதாபிமானத்தோடும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 15-9-2008ஆம் தேதி யன்று இப்பணியாளர்களை பணி நிரந்தரம் செய்து, ஊதிய உயர்வளித்து, ஓய்வூதியம் வழங்கி, பணி மூப்புக்கு ஏற்றவாறு உயர்வான ஊதியத்தையும் வழங்கி சுதந்திரதின உரையில் அறிவிப்புச் செய்தார். மேற்கொண்டும் சில சில சலுகைகளை வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து 21-11-2009 இல் சென்னை வள்ளுவர்கோட்டத்தில் சத்துணவு அங்கன்வாடிப் பணியாளர் சார்பில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு மாநாட்டில் கலந்துகொண்டு பதினைந்து கோரிக்கைகளை நிறைவேற்றி அறிவிப்புச் செய்தார். அரசும், அதனை வழி நடத்தும் முதல் அமைச்சரும் மனிதாபிமானத்தோடு நடந்து கொண்டு ஊதிய உயர்வையும், ஆறு மாதத்திற்கொருமுறை அகவிலைப்படி உயர்வையும் வழங்கி வரும்போது, "கேட்பார் பேச்சைக் கேட்டுக் கொண்டு" ஊழியர்கள் நலனுக்கு விரோதமாக போராடுவது தவறானது. போராட்டம் என்ற பெயரில் அரசியல் சூழ்ச்சிக்கு சத்துணவு அங்கன் வாடிப் பணியாளர்கள் பலியாக வேண்டா மென இப்பணியாளர்களுக்காகப் பாடுபட்டு பல சலுகைகள் பெறுவதற்குக் காரணமாக இருந்தவன் என்கின்ற முறையில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். சத்துணவு, அங்கன் வாடிப் பணியாளர் மற்றும் சமையல் உதவியாளர்கள் அனைவரும் உண்மை நிலையை உணர்ந்திருக்கிறார்கள். எடுப்பார் கைப்பிள்ளையாக இருப்பார்கள் என்ற எண்ணத்தில் இப்பணியாளர்களை எவராவது தூண்டினால் அது எடுபடாது என்பதை உறுதிப் பட தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று தெரிவித்திருக்கிறார்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுப் பணி யாளர்கள் நல

சங்கத்தின் மாநிலத் தலைவராக உள்ள திரு. மு.வரதராசன் எனக்கு எழுதிய கடிதத்தில்,

> "தங்களது பொற்கால ஆட்சியில் "பூவெப்போ மலரும் பொழுதெப்போ விடியும்" என ஏங்கியிருந்த பல்லாயிரக் கணக்கான சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர் கட்கு பல்வேறு சலுகைகளை வாரி வழங்கி, மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய வேளையில் ஒரு அரசியல் கட்சியின் தூண்டுதலின்பேரில் ஒரு சங்கம் எதிர் வரும் ஆகஸ்ட் 30ம் தேதி கோட்டை முற்றுகை அறிவித்து அரசியல் ஆதாயம் தேட முயலுகின்ற வேளையில், நன்றி மறப்பது நன்றன்று என நினைக்கும் பல்லாயிரக்கணக்கான பணியாளர்கள் நாடு முழுவதிலுமிருந்து திரண்டு தங்க ளுக்கு நன்றி அறிவிப்பு பேரணி சென்னையில் எதிர் வரும் 17-9-2010 அன்று நடத்தவுள்ளோம்"

என்று தெரிவித்திருப்பது சத்துணவுப் பணியாளர்கள் அனைவருமே நன்றி கெட்டவர்கள் அல்ல என்பதை எனக்குத் தெரிவித்து ஆறுதல் அடையச் செய்கிறது.

பகுதி நேரம் வேலை பார்ப்பவர்களுக்கு முழு நேரச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜெயலலிதா ஏற்கிறாரா? அப்படியென்றால் எத்தனை இலட்சம் பேருக்கு அந்த ஊதிய உயர்வு தரவேண்டும்? அந்தக் கணக்கையெல்லாம் அவர் பார்த்தாரா? பார்க்காமலேயே நான் ஆட்சிக்கு வந்தால் அவர்களையெல்லாம் முழு நேர ஊழியர்களாக ஆக்குவேன் என்று சொல்கிறார் என்றால், அது ஊரை ஏமாற்றுகின்ற செயல்தானே? ஆட்சியிலே இருந்த பத்தாண்டு காலத்தில் அவர் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றாதது ஏன்? அவருக்கு வேண்டிய கணக்கு - கோட்டைக் கதவு தனக்கு எப்போது திறக்கும் என்ற கணக்குத்தான்! கணக்கு கூட அல்ல - கனவு! அந்தக் கனவு பலிக்க வேண்டு மென்பதற்காகத் தான் ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடுகிறார் - பாடாத பாட்டெல்லாம் பாடுகிறார் - போடாத வேஷமெல்லாம் போடுகிறார்!

தரிசனத்திற்காக திருவரங்கத்திற்குப் போகிறார்! அவர் அயர்ந்து நின்ற இடமெல்லாம் முக்காலி போட்டு உட்கார

வைக்க காத்திருக்கிறது ஒரு கூட்டம்! அதனால் அவர் எது வேண்டுமானாலும் பேசுவார் - எது வேண்டுமானாலும் செய்வார்! அவரது ஆட்சிக் காலத்தில் அரசு அலுவலர்களை எல்லாம் என்ன பாடுபடுத்தினார், நீதி மன்றங்களில் நீதியரசர்கள் எல்லாம் அவரது ஆட்சியைப் பற்றி அப்போது என்னென்ன விமர்சனம் செய்தார்கள் என்பதைப் பற்றி தேவைப்பட்டால் நான் மீண்டும் நினைவு படுத்துகிறேன்.

இதுபோன்ற பதில் சொல்ல முடியாத கேள்விகளுக்கு பதுங்கிக் கொள்ள அவருக்கு இருக்கவே இருக்கிறது கொடநாடு!

அன்புள்ள,

மு.க.

2-9-2010

3496. ஒத்துழைத்திட முன் வருவீர்!

உடன்பிறப்பே,

மாற்றுத் திறனாளிகள் ஆங்காங்கு போராட்டம் நடத்துவதாகவும் - ஆர்ப்பாட்டம் நடத்துவதாகவும் - உண்ணாவிரதம் இருப்பதாகவும் ஒருசில ஏடுகளில் செய்திகள் வருகின்றன. மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் வேலை வழங்க வேண்டும் அல்லது வேலையில்லா கால நிவாரணமாக மாதந் தோறும் 3 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் செப்டம்பர் 3ஆம் தேதியிலிருந்து 10ஆம் தேதிவரை மாற்றுத்திறனாளிகள் போராட்டம் நடத்தவிருப்பதாக அவர்களுக்கான சங்கம் ஒன்று நேற்று அறிவித்துள்ளது.

மாற்றுத் திறனாளிகளைப் பற்றி எந்தவொரு தரப்பினரும் கவலைப்படாத நிலையில் நான்தான் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு 2010-2011ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் பத்தி 87, 88, 89, 90, 91, 92, 93 என மொத்தம் 7 பத்திகள் எழுதப்பட்டுள்ளன. இதுவரை எந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலும் மாற்றுத்திறனாளிகள் நலன் குறித்து ஏழு பத்திகள் எழுதப்பட்டதில்லை. அதற்குக் கைமாறாகத்தான் அந்த மாற்றுத் திறனாளிகளில் ஒருசிலர் அரசுக்கு எதிரான இதுபோன்ற போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். எனினும் மாற்றுத்திறனாளிகளுக்காக நிதி நிலை அறிக்கையில் இந்த அரசு குறிப்பிடும்போது,

“மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை இந்த “மாற்றுத் திறனாளிகள்” பெற்றிட நிர்ணயிக்கப்பட்டுள்ள வருவாய் உச்ச வரம்பு முற்றிலும் நீக்கப்படும். மாற்றுத்திறன் உடையோர் உயர்கல்வி பயில்வதற்கு ஏதுவாகக் கல்விக் கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்களித்த இந்த அரசு, வரும் கல்வி

ஆண்டில் இருந்து தனிக் கட்டணம் செலுத்துவதில் இருந்தும் விலக்களிக்கும். அரசு மற்றும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் "மாற்றுத் திறனாளி" மாணவர் இல்லங்களில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு, உணவுச் செலவாக மாதம் ஒன்றுக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் ரூபாய் 200 உதவித் தொகை, ரூபாய் 450 ஆக உயர்த்தப்பட்டு இனி வழங்கப்படும். இந்தியாவிலேயே முதல் முறையாக மாற்றுத் திறனாளிகளுக்கு சமூகப் பாதுகாப்பு அளித்து நலத்திட்ட உதவிகள் வழங்க தனி நல வாரியம் தமிழ்நாட்டில்தான் அமைக்கப்பட்டுள்ளது.

தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ள இயலாத மன வளர்ச்சி குன்றியவர்களுக்கு, வருவாய் உச்சவரம்பு இன்றி, 500 ரூபாய் வீதம் மாதாந்திர உதவித் தொகையை இந்த அரசு வழங்கி வருவதால் 50 ஆயிரம் பேர் பயன்பெற்று வருகின்றனர். கண்பார்வையற்றோர் மற்றும் இதர மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு உதவித் தொகைகள் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளன. அவர்கள் ஆசிரியப் பணி புரிய சிறப்பு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. காது கேளாதோருக்குக் குழந்தைப் பருவத்தின் தொடக்கத்திலேயே கண்டறிந்து சிறப்புக் கல்வி அளிக்கும் பள்ளிகள் மாவட்டந்தோறும் தொடங்கப்பட்டுள்ளன. கை, கால் ஊனமுற்றோருக்குப் பயணச் சலுகைகளுடன், நாட்டிலேயே முதல் முறையாக மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் முதலான பல்வேறு உதவிக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வேலைவாய்ப் பற்ற பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை வழங்கும் திட்டம், அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு

60 ஆயிரம் பேர் இத்திட்டத்தில் பயன் அடைந்துள்ளனர். இந்தியாவிலேயே முதல் முறையாக தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிடும் வகையில் 2008-2009 ஆம் ஆண்டிலிருந்து 1000 பேருக்கு மாத உதவித் தொகையாக 500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் நலனுக்குச் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 49 கோடி அளவாக இருந்ததை, வரும் நிதியாண்டில் ரூபாய் 176

கோடியாக உயர்த்தியுள்ளதுடன் மாற்றுத் திறனாளிகளுக்கான தனித்துறை என்னுடைய நேரடி மேற்பார்வையில் இயங்கும்" என்று எழுதப்பட்டிருந்தது.

இன்னும் சொல்லப்போனால், அவர்களையெல்லாம் "ஊனமுற்றோர்" என்று அழைப்பதைத் தவிர்த்து அவர்களின் தனிப்பட்ட திறமைகளைக் கருத்தில் கொண்டு "மாற்றுத் திறனாளிகள்" என்று அழைக்கப்படவேண்டு மென்று அறிவிக்கப்பட்டதே இந்த ஆட்சியிலே தான்.

பார்வையற்றோர்க்கு வழங்கப்படுவதைப் போன்று ஏனைய வேலைவாய்ப்பற்ற அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை - பட்டதாரிகளுக்கு 450 ரூபாயும், 12வது படித்தவர்களுக்கு 375 ரூபாயும், பத்தாம் வகுப்பு மற்றும் அதற்குக் குறைவாகப் படித்தவர்களுக்கு 300 ரூபாயும் வழங்கப்படுகிறது. இவர்களுக்கு இதற்கு முன்பு இருந்த ஆட்சியில் ஒரு ரூபாய் கூட வழங்கப்பட வில்லை.

2010-2011 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் அறிவிப்பின்படி "மாற்றுத் திறனாளிகளுக்கான துயர் உறுவோர் நிவாரண நிதி" ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் கடும் வன்முறைச் செயல்களால் பாதிக்கப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிட நிவாரண நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாய் வரை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு; ஒன்றுக்கு மேற்பட்ட குறை பாடுடைய மாற்றுத் திறனாளிகள் மற்றும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் 1500 பேருக்கு இலவசமாக மடக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்படவுள்ளது. கடும் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் கை, கால்களின் தசை இறுக்கமாக இருப்பதாலும், இவர்களது தனிப்பட்ட தேவைகளின் அடிப்படையில், புதிதாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு நாற்காலிகள் அரசால் 500 பேருக்கு முதல் கட்டமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சட்டப் பேரவை உறுப்பினருக்கும் அந்தந்த தொகுதியில் உள்ள மாற்றுத்

திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வாங்கி வழங்கவென 5 இலட்சம் ரூபாய் வீதம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகளுக்காக கழக அரசின் சார்பில் செய்யப்பட்டுள்ள சாதனைகள் பல முறை தெரிவிக்கப்பட்டிருப்பதால், அதனை மீண்டும் விளக்கிட நான் தற்போது விரும்பவில்லை.

தமிழக அரசின் சார்பில் மாற்றுத் திறனாளிகளுக்காக இவ்வளவு காரியங்களைச் செய்யும் போது, அதை எதிர்த்து போராட்டம் நடத்துகிறீர்களே, உண்ணா விரதம் இருக்கிறீர்களே என்று நானே ஒருமுறை பொது மருத்துவமனையிலே அவர்கள் உண்ணாவிரதம் இருந்தபோது நேரில் கேட்டேன். அப்போது அவர்கள் தரப்பில் என்னிடம் கூறப்பட்ட பதில் - "நீங்கள் எங்களுக்காக எதுவும் செய்ய வேண்டியதில்லை. இரண்டு நாட்களாக உண்ணா விரதம் இருந்த எங்களைப் பற்றி யாருமே கவலைப்படாத நேரத்தில் முதலமைச்சராகிய தாங்களே இந்தக் காலை நேரத்தில் உணவுகூட அருந்தாமல் வந்து சந்தித்ததே போதுமானது" என்று கூறினார்கள். அப்போது நான் அவர்களிடம் இந்த அரசின் சார்பில் உங்களுக்கு அடுத்தடுத்து சலுகைகளைச் செய்து வரும்போது, இவ்வாறு யாரிடமும் முறையிடாமல் நேரடியாக உண்ணாவிரதத்தில் ஈடுபடுவது நியாயம்தானா என்று கேட்டேன். அதற்கு அவர்கள், நாங்கள் இதற்கு முன்பிருந்த ஆட்சிக் காலத்தில் இப்படியெல்லாம் கேட்டுப் போராட்டம் நடத்தியதில்லைதான். இந்த ஆட்சியிலேதான் போராட்டம் நடத்துகிறோம், உண்ணாவிரதம் இருக்கிறோம். காரணம் இப்போது கேட்டால்தான் ஏதாவது நடக்கும், எங்களுக்கு விமோட்சம் பிறக்கும். அ.தி.மு.க. ஆட்சி என்றால் காவல் துறையினரை விட்டு எங்களை விரட்டி அடிப்பார்கள், கேட்க நாதியே இருக்காது. இப்போது போராட்டம் நடத்தக் காரணமே, எப்படியாவது உங்கள் காதுகளுக்கு செய்தி எட்டினால் உடனடியாக விடிவு காலம் பிறக்கும் என்பதால்தான் இப்படியெல்லாம் செய்கிறோம். நாங்கள் வைக்கின்ற கோரிக்கைகளே அதிகப் பட்சம் என்பது எங்களுக்கு தெரிந்திருந்தும் - விடிவு காலம் பிறக்கும் என்பதால்தான் கேட்கிறோம் என்று சொன்னார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் மாற்றுத் திறனாளிகள் மட்டுமல்ல, யாருக்குமே எந்த விதமான சிரமமும் இல்லாமல் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதுதான். அதற்காகத்தான் நான் இந்த வயதிலும் இரவுப் பகலாக உழைக்கிறேன், சிந்திக்கிறேன். யாருக்கு என்ன செய்தால், அவர்களுக்கு நல்வாழ்வு ஏற்படும் என்றுதான் நினைத்துக்கொண்டே இருக்கிறேன். ஆனால் அரசு ஒன்று இருக்கும் போது, அந்த அரசினால் எந்த அளவிற்கு செலவழிக்க முடியும் என்றெல்லாம் பார்க்க வேண்டியிருக்கிறது அல்லவா? அரசிடம் இருக்கின்ற நிதியைக்கொண்டு அனைத்துத் தரப்பினரையும் முடிந்த அளவிற்கு திருப்தி செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணம். அதுவும் இன்னும் சில மாதங்களில் பொதுத் தேர்தல் வரப்போகிறது என்றதுடன், அதற்குள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்று அனைத்துத் தரப்பினரும் எண்ணுகிறார்கள். அதற்காக அவர்கள் தேர்ந்தெடுக்கும் முறைதான் போராட்டம் என்பதெல்லாம்! உண்மையில் அவர்களுக்கு இந்த அரசை எதிர்த்துப் போராட்டம் நடத்த வேண்டுமென்பது நோக்கமல்ல. அதே நேரத்தில் ஒருசில அரசியல் வாதிகள் தங்கள் சங்கங்களை வளர்க்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு இந்த அப்பாவிகளைத் தூண்டிவிட்டு குளிர்காய எண்ணுகிறார்கள். அதுவும் அந்த அலுவலர்களுக்குத் தெரிகிறது என்ற போதிலும் தங்களையும் அறியாமல் ஆளாகிவிட நேரிடுகிறது என்பதை நான் நன்கறிவேன்.

பொதுத் தேர்தல் நெருங்குகிறது என்பதற்காக போராட்டம் நடத்த முற்படுவோருக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். இந்த ஆட்சி மாறிவிடும், பிறகு உங்கள் தேவைகள் எதுவும் நிறைவேறாது என்றெல்லாம் நீங்கள் பயப்படத் தேவையில்லை. நிச்சயமாக ஆட்சி மாறாது! ஏன் மாறப்போகிறது? இந்த ஆட்சியிலே உங்கள் தேவைகள் கவனிக்கப்பட வில்லையா? எந்தத் தரப்பினராவது புறக் கணிக்கப்பட்டதுண்டா? ஊழல்கள் நடை பெற்றது உண்டா? உங்களுக்காக இந்த அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட சலுகைகளை நீங்கள் அறிய மாட்டீர்களா? அந்தச் சலுகைகளையெல்லாம் நீங்கள் பெறுகிறீர்களா இல்லையா? அந்த அறிவிப்பின் வாயிலாக நடத்தப்படும் திட்டங்களில்

ஏதாவது குறை உண்டா, ஊழல் உண்டா? சுமார் ஒன்றரை கோடி குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக் காட்சி பெட்டிகள் வாங்கித் தரப்பட்டுள்ளதே, அதிலே ஏதாவது புகார்கள் வந்ததுண்டா? ஆனால் இந்த ஆட்சியிலே அனைத்துக் கட்சியினரைக்கொண்டு குழு அமைத்து, அந்தக் குழுவினை அழைத்து அவர்கள் முன்னிலையில்தான் "டெண்டர்"களே திறக்கப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த விவரங்களையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் அறிய மாட்டார்களா? எனவே ஆட்சி மாறி விடும், உங்கள் கோரிக்கைகள் நிறைவேறாமலே போய்விடும் என்றெல்லாம் நினைக்கத் தேவையில்லை. எனவே இந்த அரசை எதிர்த்துப் போராட்டம், ஆர்ப்பாட்டம், உண்ணா விரதம் என்பதையெல்லாம் கைவிட்டு, இந்த அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைக்க முன்வாரீர், முன்வாரீர் என்று அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

3-9-2010

3497. வன்முறைக்கு வக்காலத்து வாய்மை ஆகுமா?

உடன்பிறப்பே,

அகில இந்திய அளவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பொதுச் செயலாளராகவும், இடதுசாரி கட்சிகளுடைய பிரதிநிதியாகவும் விளங்குகிற தோழர் ஏ.பி. பரதன் அவர்கள் ஆத்திரமூட்டக் கூடிய விஷயங்களைக் கூட, அமைதியான வார்த்தைகளைக் கோத்தெடுத்து வாதாடக் கூடிய இயல்புடையவர் மட்டுமல்ல; இடதுசாரி இயக்கங்களில் இரண்டறக் கலக்காத பிரமுகர்களையும் விரோதியாகக் கருதி விஷத்தைக் கக்காத பண்புடையவர். ஆனால் அவரா இப்படிப் பேசியிருக்கிறார் என்று அதிர்ந்திடும் அளவுக்கு, அவர் நமது கழகத்தைப் பற்றி - என்னைப் பற்றி அளித்துள்ள பேட்டி நம்பக்கூடியதாக இல்லை யெனினும் - யாரோ சிலரால் நம்மைப் பற்றித் தூவப்பட்ட நச்சுக் கருத்துக்களுக்கு ஆட்பட்டு அவர் கூறியுள்ள கடுமையானதும் காரமானதுமான விமர்சனத்திற்கு நான் விளக்கம் கூறியே தீரவேண்டிய நிலையில் இருக்கிறேன்.

"தோல்வி பயத்தில் கம்யூனிஸ்ட்களை முதல்வர் சாடியிருக்கிறார்" என்று ஏ.பி. பரதன் சொல்லியிருப்பதைப் படித்தபோது எனக்கு சிரிப்புத்தான் வந்தது. நான் எத்தனையோ தோல்விகளை என்னுடைய அரசியல் வாழ்வில் சந்தித்திருக்கிறேன். அதற்காக நான் வாடியதும் இல்லை - யாரையும் தோழர் பரதன் சொல்வது போல சாடியதும் இல்லை.

கழக அரசுக்கும், ஓரிரு சத்துணவு பணியாளர் சங்கங்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பிரச்சினையில் - அரசு எடுத்த நிலைக்கு நாம் விளக்கம் தர வேண்டிய சூழலில் - இங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சி தேர்தலை மனதிலே வைத்து தூண்டி விடும் போராட்டங்களில் ஒன்றாக இது அமைந்திருக்கிறது என்பதையும்

- இதற்கு மக்கள் ஆதரவு இல்லை என்பதையும் - இன்னும் சொல்லப்போனால் சத்துணவு பணியாளர்களில் பெரும் பகுதியினர் - ஏன் அந்த பணியாளர்களுக்கான பல்வேறு சங்கங்களை வைத்திருப்பவர்களே - இவர்கள் நடத்துகின்ற போராட்டத்திற்கு ஆதரவாக இல்லையென்பதையும் - சில மாதங்களுக்கு முன்பு கூட அந்தச் சத்துணவு பணியாளர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் தமிழகம் முழுவதிலுமிருந்து சென்னை வந்து எனக்கு நன்றி தெரிவிக்கும் மாநாட்டினை நடத்தினார்கள் என்பதையும் - தற்போது இவர்களின் குறிப்பிட்ட ஒரு சங்கத்தினர் எடுத்து வைக்கின்ற கோரிக்கைகள் அனைத்தும் எந்தவொரு மாநிலத்திலும் - கம்யூனிஸ்ட்கள் ஆளுகின்ற மாநிலங்களிலே கூட நிறைவேற்றப் படவில்லை என்பதையும் எடுத்துச் சொல்லும் போது - இதுபோன்ற போராட்டங்களைத் தூண்டிவிட்டு - சாலை மறியலில் தொடங்கி - தலைமைச் செயலகக் கோட்டையையே முற்றுகையிடுவோம் என்று போராட்டம் விரிவாக்கப்படும்போது - சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கின்ற கடமை, பொறுப்பு எந்தவொரு கட்சி அரசானாலும் தவிர்க்க முடியாதவையாகும்.

ஆர்ப்பாட்டம் -

போர்ப்பாட்டு -

கோட்டை முற்றுகை -

மாநிலம் முழுவதிலுமிருந்து பேருந்துகளில் படையெடுப்பு -

என்றெல்லாம் பத்திரிகைகளில் விளம்பரம் செய்துவிட்டு - தேதியும் குறித்துவிட்டு - பேரணியாகப் புறப்பட்டு வருவார்களேயானால் - சட்டப்படி அவர்களைத் தடுக்க - மீறியவர்களை கைதுசெய்ய - ஒரு அரசுக்குக் கடமையும், உரிமையும் உண்டு என்பதை ஏனோ அவர்கள் அறியவில்லை.

கழக அரசைப் பொறுத்தவரையில் சத்துணவு ஊழியர்கள் ஆனாலும் - வேறு எந்த ஊழியர்கள் ஆனாலும் அவர்களது கோரிக்கைகளை அலட்சியப்படுத்தியதில்லை. அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தத் தவறியதுமில்லை. இன்னும் சொல்லப்போனால் மத்திய அரசு அலுவலர்களுக்காக ஊதியக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அந்தக்குழு அளித்த பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்கின்ற போதும், அகவிலைப்படி உயர்வினை

மத்திய அரசு உயர்த்துகின்றபோதும் அந்தப் பரிந்துரைகளை மற்ற மாநிலங்களையெல்லாம் முந்திக் கொண்டு அறிவித்து நடைமுறைப்படுத்துகின்ற மாநிலம் தமிழகம் என்பதை எந்தவொரு அரசு அலுவலரும் மறுத்திட முன்வர மாட்டார்கள். தி.மு. கழக ஆட்சிக் காலம்தான் அரசு அலுவலர்களின் பொற்காலம் என்ற சொற்றொடர் நிலைத்துவிட்ட ஒன்றாகும். ஆனால் இந்தப் பிரச்சினை எப்படி ஏற்பட்டது என்பதையெல்லாம் விவரமாகத் தெரிந்து கொள்ளாமலேயே டெல்லியிலிருந்து வந்த தோழர் ஏ.பி. பரதன் அவர்களுக்கு இங்குள்ள கம்யூனிஸ்ட்கள் சொன்னதுதான் உண்மையாகத் தோன்றி, உஷ்ணமான வார்த்தைகளை நம் மீது உதிர்த்திருக்கிறார்.

சரி; அதுதான் போகட்டும்! இவர்கள் வைத்த கொள்ளி இந்தியாவில் சில மாநிலங்களில் மாவோயிஸ்ட் தாக்குதலாகப் பரவுகிறது என்பதை நான் வேதனையோடு சுட்டிக் காட்டியிருப்பதைக் கூட தோழர் பரதன் விமர்சித்திருக்கிறார். மாவோயிஸ்ட்களுக்கும் - கம்யூனிஸ்ட்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று அவர் கூறியதுடன், நான் வீண் பழி சுமத்திவிட்டதைப் போல வெகுண்டெழுந்து வியாக்யானம் செய்திருக்கிறார்.

ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன்.

நக்சலைட்டு அமைப்பு என்பது 1967 தேர்தலுக்குப் பின்னர் மேற்கு வங்கத்தில்தான் ஆரம்பமானது. அன்று அவர்கள் "நக்சல்பாரிகள்" என்று அழைக்கப்பட்டார்கள். பின்னர் அவர்கள் இயக்கம் வேறு சில மாநிலங்களுக்கும் பரவியபோது "நக்சலைட்டுகள்" என்று அழைக்கப்பட்டார்கள்.

நக்சலைட்டுகள் எங்கிருந்து உருவானார்கள்? கம்யூனிஸ்ட் கட்சிகளில் இருந்தே - குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து அவர்கள் புதிய இயக்கம் கண்டார்கள்.

அப்போது அவர்கள் - இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி சட்டசபைகளுக்கும், பாராளுமன்றத்துக்கும் போட்டியிட முடிவு செய்ததன் மூலம் மார்க்சிசம், லெனினிசம் என்ற மகோன்னதமான கொள்கையை கைவிட்டு, அதனைக் குழி தோண்டி புதைத்துவிட்டதாக குற்றஞ்சாட்டினார்கள்.

ஜனநாயகத்தின் மூலம், சட்டசபை நுழைவின் மூலம் ஒருபோதும் புரட்சியை உருவாக்க முடியாது - பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கொண்டுவர முடியாது என்று உரத்துக் கூறிய அவர்கள் இரு கம்யூனிஸ்ட் கட்சியினரையும் திருத்தல்வாதிகள், திரிபுவாதிகள் என்றெல்லாம் அழைத்தார்கள்.

தோழர் பரதன் கோவையில் அளித்த பேட்டியில் "அடிக்கடி கருணாநிதி கம்யூனிஸ்டுகள் ஆளும் மாநிலங்களைச் சுட்டிக் காட்டுகிறார். ஒரு சில விஷயங்களில் அது சரி தான்" என்று ஒப்புக் கொண்டிருக்கிறார். அவர் கூறுவதைப் போல, மாவோயிஸ்ட்களுக்கும் கம்யூனிஸ்ட்களுக்கும் இடையே ஏதோவொரு உறவு இல்லை என்றால், மத்திய அரசு மாவோயிஸ்டுகளுக்கு தடை விதித்து, அவர்களை தீவிரவாதிகள் என அறிவித்த போது, மத்திய அரசின் இந்த முடிவுக்கு கம்யூனிஸ்ட் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தது ஏன்? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. பிரகாஷ் காரத் அவர்கள் இந்தப் பிரச்சினையை அரசியல் ரீதியாகத்தான் தீர்க்க வேண்டுமே தவிர தடையால் ஒரு பயனும் ஏற்படாது என்று தெரிவிக்கவில்லையா? இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம்.பி. குருதாஸ் குப்தா, மாவோயிஸ்ட்களை தீவிரவாத இயக்கமாக அறிவித்து, அவர்களை தடை செய்ததற்குப் பதிலாக, அரசியல் ரீதியாக அவர்களை எதிர்த்து வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்று சொன்னாரா இல்லையா?

மாவோயிஸ்ட்களுடன் கம்யூனிஸ்ட் கட்சிக்கு பாசம் இல்லையென்றால், 3-4-2008 தேதிய "தீக்கதிர்" நாளேட்டில் நேபாள அரசின் வெளி உறவுத் துறை அமைச்சரும், நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைக் குழு உறுப்பினருமான சகானா பிரதான் அளித்த பேட்டி எவ்வாறு வெளியிடப்பட்டது? அந்தப் பேட்டியிலே மாவோயிஸ்டுகள் தேசிய நீரோட்டத்திலும் பொதுவான மக்கள் இயக்கங்களிலும் பங்கேற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறியது வெளியிடப் பட்டிருந்ததா அல்லவா? அது மாத்திரமா?

14-4-2008 அன்று "ஜனசக்தி" தலையங்கத்தில்,

"மன்னர் ஆட்சி முற்றுப் பெற்று, புத்தம் புதியதாய் பிறந்த ஜனநாயகத்தின் மழலை சத்தம் நேபாளத்திலிருந்து

நம் காதுகளில் இனிமையாகக் கேட்கத் தொடங்கியுள்ளது. பெருவாரியான வாக்குகளைப் பெற்று மாவோயிஸ்ட்கள் வெற்றிபெறவிருக்கிறார்கள். இனி நேபாளத்திற்குப் புதிய வாழ்க்கை கிடைக்கும் என்பதை உறுதியாக நம்பலாம். மாவோயிஸ்டுகளுக்கு வாழ்த்து சொல்லும் அதே நேரத்தில் பொதுவுடமையின் மிகச் சிறந்த ஆட்சியை இவர்கள் அமைத்துக்காட்ட வேண்டும் என்பதும் முக்கியமானதாகும்" என்று எழுதப்பட்டது மறந்து விடக்கூடிய ஒன்றல்லவே!

30-4-2008 தேதிய "ஜனசக்தி"யில் சி. மகேந்திரன் எழுதிய கட்டுரையில் "மிகவும் பிற்போக்கு அராஜகத்தைக் கொண்ட மன்னராட்சிப் பாதையிலேயே நேபாளம் எந்த மாற்றமும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருந்தது. உலகின் எந்த ஒரு நாட்டின் மாற்றங்களும், கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களால்தான், சாதிக்க முடியும் என்பது உலகில் நிரூபிக்கப்பட்ட உண்மை. வீரம் செறிந்த மாவோயிஸ்ட் புரட்சியாளர்களுக்கும் மன்னருக்கும் இடையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள் மன்னராட்சிக்கு ஆயுதம் வழங்கினார்கள் என்ற உண்மையை யாரும் மறந்து விட இயலாது." என்று எழுதியது மாவோயிஸ்ட்களுக்கு ஆதரவாகத்தானே?

9-5-2008 தேதிய "ஜனசக்தி"யில் செ. காமராசு அவர்கள் எழுதிய கட்டுரையில் - "உலகின் ஒரே ஓர் இந்துத்துவ அரசு என்ற முகமூடியை அகற்றி மதச்சார்பற்ற நேபாளக் குடியரசு என்ற மகுடத்தை சூட்டிக் கொள்ள இருக்கிறது. புதிய நேபாளம், மத அடிப்படைவாத மன்னராட்சி என்ற சிதிலமடைந்த பழமையான கோட்டையைத் தகர்த்து ஜனநாயகக் கூட்டாட்சிக் குடியரசை நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடத்தப்பட இருக்கிறது. புதிய நேபாளத்தை நிர்மாணிக்க வேண்டிய மாபெரும் கடமையை மாவோயிஸ்டுகளிடம் கொடுத்திருக்கிறார்கள் மக்கள். மாவோயிஸ்டு கட்சி தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றுள்ளது" என்று எழுதவில்லையா?

அவ்வளவு ஏன், இன்று கோவையில் பேட்டியளித்துள்ள தோழர் ஏ.பி. பரதன் அவர்களே, "நேபாள மாவோயிஸ்டுகளின் வெற்றி தெற்காசியாவில் மாற்றத்தை ஏற்படுத்தும்" என்று கூறிடவில்லையா?

மாவோயிஸ்ட்கள்பால் கம்யூனிஸ்ட்களுக்கு அன்பு இல்லை என்றால், பாசம் இல்லை என்றால் இந்தக் கருத்துக்கள் எல்லாம் அவர்களின் இதழ்களில் ஏன் வெளியிடப்பட்டன? இதைத் தானே நான், அவர்கள் வைத்த கொள்ளிதான் இந்தியாவில் சில மாநிலங்களில் "மாவோயிஸ்ட்" தாக்குதல்கள் என்று எழுதி யிருந்தேன். அதற்காகத்தான் பரதனில் தொடங்கி இங்குள்ள கம்யூனிஸ்ட்கள் வரை என்மீது தாண்டிக் குதிப்பது என்ன நியாயம்?

இங்குள்ளவர்கள் நம் மீது பாய்வதிலாவது ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் எதிலும் ஆழமாகவும், தீவிரமாகவும் சிந்தித்துப் பேசக் கூடிய பரதன் அவர்கள் இங்குள்ள கம்யூனிஸ்ட்களின் வன்முறைப் போராட்ட அறைகூவல்களுக்குத் துணை போகலாமா?

குறிப்பு:- இந்த ஆண்டு மே திங்கள் இறுதியில் செய்தியாளர்கள் என்னைச் சந்தித்த போது, "நக்சலைட்டுகள், மாவோயிஸ்ட்கள் சமீப காலமாக பொது மக்கள் மீது தாக்குதல் தொடுக்கிறார்கள், அந்தப் பிரச்சினையை சமாளிப்பது என்பது மத்திய அரசுக்கு ஒரு பெரிய கேள்விக் குறியாக இருக்கிறது, அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?" என்று கேட்ட நேரத்தில் நான் அளித்த பதில் -- "அவர்களது இலட்சியங்கள் உயர்ந்தவைகளாக இருக்கலாம். அவர்களது கொள்கைகள் சிலாக்கியமானவைகளாக இருக்கலாம். ஆனால் அவற்றை நிறைவேற்றுவதில் இப்போது அவர்கள் கையாளுகின்ற முறைகள் மனித நேயத்திற்கு முற்றிலும் விரோதமானவைகளாக இருக்கின்றன. இன்றைக்குக் கூட (30-5-2010) ஒரு பத்திரிகையிலே பார்த்தால், ரெயிலைத் தகர்த்ததில் மாண்டுபோனவர்களின் படங்கள் எல்லாம் வெளிவந்திருக்கின்றன. அதிலே மிகப் பரிதாபகரமான ஒரு காட்சி - இறந்துபோன ஒரு குழந்தையின் சவத்தை பயணிகள் தூக்கிச் செல்கின்ற காட்சி. இதிலே அந்தக் குழந்தைகளுக்கும் மாவோ இயக்கத்திற்கும் எந்தவிதமான மாறுபாடான கருத்தும் கிடையாது. ஆனால் இப்போது ஒரு புது முறை - பழைய முறைதான் - இருந்தாலும் புதுமுறையாகக்கையாளப்படுவது - சமுதாயத்திலே உள்ள - ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மற்றவர்கள் இறப்பைப் பற்றிக் கவலைப் படாமல் - தங்களின் நோக்கம் நிறைவேற வேண்டும் என்று கருதுகின்ற நிலை

வளருவது நல்லதல்ல. அந்த இயக்கங்களின் அடிப்படையான பொதுவுடைமைக் கொள்கைகளில் இந்த முறை சரி தானா என்பதை அந்த இயக்கங்களின் தலைவர்கள் சிந்திக்க வேண்டும். இன்று நேற்றல்ல, நீண்ட காலமாக நான் சொல்லி வருகின்ற ஒரு கருத்து இது. அந்தக் கருத்தை இந்தியாவிலே எங்கேயோ ஒரு மூலையில் - தமிழ்நாட்டிலேயிருந்து நான் ஒலிக்கின்றேன் - அந்தக் கருத்துக்கு மாவோ தலைவர்கள் மதிப்பளித்து மனித நேயத்தைக் காப்பாற்றுவதற்குப் பக்க பலமாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்" என்பதாகும். உடன்பிறப்பே, இன்று இந்தக் கடிதம் உனக்கு எழுதும்போது என்னுடைய இந்தக் கருத்தையும் சம்பந்தப் பட்டவர்கள் யோசிக்க வேண்டுமென்பதற்காகவே தந்துள்ளேன்.

அன்புள்ள,

மு.க.

4-9-2010

3498. அன்பில் சிலையாகி; அழைக்கின்றார்!

உடன்பிறப்பே,

8-9-2010 அன்று திருச்சியில் என் அன்பு நண்பர் அன்பில் தர்மலிங்கத்தின் சிலை திறப்பு விழா. அதுபற்றி நினைத்துக் கொண்டிருந்தேன். எத்தனையோ நினைவுகள் அடுக்கடுக்காக என் முன் எழுகின்றன. எனது 87 வயது வாழ்க்கையில் எனக்கு நெருங்கிய பத்து நண்பர்களைச் சொல் என்றால் அதற்குள் இடம் பெறும் பெயர்களில் ஒன்றுதான் அன்பில் தர்மலிங்கத்தின் பெயர்.

"அன்பில் அழைக்கிறார்" என்று தலைப்பிட்டு 1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற தி.மு. கழக மாநில மாநாட்டுக்கு அறிஞர் அண்ணா "திராவிட நாடு" இதழில் அழைப்பு விடுத்தார். அதே திருச்சியில் மீண்டும் 1990ஆம் ஆண்டு பிப்ரவரி 9, 10, 11 ஆகிய நாட்களில் தி.மு.கழக மாநில மாநாடு நடைபெற்றது. அந்த திருச்சியில்தான் இப்போது அன்பிலுக்கு சிலை திறப்பு விழா! "அன்பில் அழைக்கிறார்" என்ற தலைப்பில் அண்ணா அழைத்தபோது என்ன சொல்லி அழைத்தார் என்பதை நினைவூட்டவா?

> "முடியுமா? முடியும்! என்று எண்ணுவோரின் தொகையையும், வகையையும், அவர்தம் உறுதியையும், உற்சாகத்தையும், அவர்தம் உள்ளத்தில் பொங்கி, கண்வழி வழியும் பேரார்வத்தையும் காட்டுகிறேன் வாரீர், என்று அழைக்கிறார், அன்பில்! இலட்சக்கணக்கில் கூடப் போகிறார்கள் - இலட்சிய முழக்கம் கேட்கப் போகிறது. சிங்களத் தீவிலிருந்தும், திருநெல்வேலிச் சீமையிலிருந்தும் சிங்காரச் சென்னையிலிருந்தும் பிற மாவட்டம் பலவற்றிலிருந்தும் அடலேறுகளும், அவர்கட்குக் காதல் தேனில் வீரத்தைக் குழைத்தளிக்கும் குமரிகளும், வீரரைப் பெற்றெடுத்த தாய்மார்களும்,

அவர்தம் இளமை வளத்தை எண்ணிக்களித்திடும் முதியோரும், வரலாறு அறிந்த மாணவர்களும், புதிய வரலாறு காணும் பாட்டாளித் தோழர்களும், அணிஅணியாக வரப் போகிறார்கள், கடல் அலையை மிஞ்சிடும் களிப்பொலி எழுப்பியபடி, குடும்பம் குடும்பமாக வரப் போகிறார்கள்-குதூகலம் காணப் போகிறார்கள். குன்றெடுக்கும் நெடுந்தோளையும், குளிர்மதிப் பார்வையையும், இன்று கண்டோம் இனி வென்றோம், என்று எவரும் ஆர்வத்துடன் கூறிடத்தக்க வகையில் திரண்டு வருகிறார்கள் திருஇடத்தவர்கள்! காண வாரீர், கடமையை உணர வாரீர்! கருத்தளிக்கவும், காரியமாற்றவும், கலங்கா உள்ளம் படைத்தோரே! திரண்டு வாரீர்! தீரரும் வீரருமான திருஇடத்தினர் எத்துணை எழுச்சியுடன் அணி வகுத்து நிற்கின்றனர் என்பதை எவரும் அறியத்தக்க விதத்திலே வந்து சேருமின்! பெற்றேனே இந்த மக்களை, மாற்றான் எனை ஏச, கூசாது கேட்டுக் கிடந்தனரே குனிந்த தலையுடன் - என்னால் சீராட்டி வளர்க்கப்பட்ட இந்த மக்கள் என்று கூறிக் கொண்டிருந்த தாயகம்; இன்று ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியையும் வீரத்தையும் கண்டு, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு "நான் பெற்ற செல்வங்களே! தீர்ந்ததே என் துக்கம். இனி என் தளை உடைபடும் என்ற நம்பிக்கை பிறந்ததடா" என்று வாழ்த்தி வரவேற்கிறது! அன்னையின் பணிக்காக அருமந்த மக்காள், அனைவரும் வருக!! என்றெல்லாம் கூறி அழைக்கிறார் அன்பில்!"

என்று அண்ணா அன்று எழுதினார். அந்த அன்பிலுக்கு சிலை திறக்கும் நிகழ்ச்சிக்கு உன்னை அழைக்க அண்ணாவும் இல்லை, அந்த அன்பிலும் இல்லை. நான்தான் இருக்கிறேன் உனை அழைக்க. என் வாயார, மனமார உன்னையெல்லாம் திருச்சிக்கு அழைக்கிறேன் இந்த மடலின் மூலமாக!

அண்ணா மறைந்த பிறகு 1990இல் நடைபெற்ற மாநாட்டின் போது நம்மோடு இருந்த - அன்பிலின் மகன் சட்டமன்ற உறுப்பினராக, இளைஞர் அணியின் நிர்வாகியாக இருந்த தம்பி பொய்யாமொழியும் இப்போது இல்லை.

திருச்சியில் எனக்கு நெருங்கிய நண்பர்கள் என்ற வரிசையில் அன்பில் தர்மலிங்கத்தில் தொடங்கி, பொன்மலை பராங்குசம், து.ப. அழகமுத்து, திராவிடப் பண்ணை முத்துக் கிருஷ்ணன், குளித்தலை முத்துக்கிருஷ்ணன், எம்.எஸ். மணி, மு.க.து. நடராசன், உப்பிலியாபுரம் அர. நடராசன், இளமுருகு பொற்செல்வி, திருச்சி பாலகிருஷ்ணன், கஸ்தூரி ராஜ், நகரச் செயலாளராக இருந்த ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி, நாதன் கம்பெனி பாண்டுரங்கம், காமாட்சி. ராபி ஷரீப் என்று இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்!

அன்பில் என்பது திருச்சி மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர். அன்பில் என்று சொன்னால் நமது இயக்கத்தினருக்கு, ஏன் தமிழகத்திலே உள்ள அனைவருக்குமே அந்த ஊரின் பெயர் ஞாபகத்திற்கு வராது. அன்பில் தர்மலிங்கத்தின் பெயர்தான் ஞாபகத்திற்கு வரும். அன்பில் வந்தார், போனார் என்றே எல்லோரும் பேசுவார்கள். வந்தார், போனார் என்கிறேனே, அதற்கே ஒரு பொருள் உண்டு. அவர் ஓர் இடத்தில் சில மணி நேரங்கள் இருக்க மாட்டார். அவ்வளவு வேலை அவருக்கு. இயக்கக் காரியங்கள் மட்டுமல்ல; மற்றவர்களுக்கும் நலம் பயக்கும் ஒத்தாசைகள் புரிய வேண்டும் என்பதிலும், அதற்காக அலைவதிலும் முயற்சி எடுப்பதிலும் அலாதியான சுவை அவருக்கு! யாரையும் பார்த்தவுடன் "மச்சான்" - "மாப்பிள்ளை" முறை வைத்துத்தான் அழைப்பார். யாராவது தேர்தலிலே வெற்றி பெற வேண்டுமா? அங்கே அன்பில் இருப்பார். யாரையும் எளிதில் நம்பி விடுவார். அதன் காரணமாக நம்பிக்கை மோசத்திற்கு ஆளாகிப் பிறகு தன்னையே நொந்து கொள்கிற காட்சி நமக்கே பரிதாபமாயிருக்கும்.

அந்த வரிசையில் முதல் இடத்திலே இருக்கும் அன்பில் தர்மலிங்கத்தின் சிலையினைத்தான் வரும் 8ஆம் தேதியன்று நான் திறந்து வைக்கவருகிறேன். அந்த அன்பில் அழைத்து எத்தனையோ முறை நான் திருச்சிக்கு வந்தது உண்டு. ஆனால் அந்த அன்பிலின் சிலையினைத் திறந்து வைக்க நானே வருவேன் என்று நான் நினைத்ததே இல்லை. அந்த அன்பிலுக்கும் எனக்கும் உள்ள நட்பு பற்றியும், தொடர்பு பற்றியும் நினைவூட்டு வதற்கு பல சம்பவங்கள் உண்டு.

1955ஆம் ஆண்டுவாக்கில் திருச்சியில் கழகத் தோழர்களிடையே சற்று ஒற்றுமையின்மை ஏற்பட்டபோது, அண்ணா அவர்கள் திருச்சிக்கே இனி நான் வர மாட்டேன் என்றொரு முடிவினையெடுத்தார். அன்பில் தர்மலிங்கம் தலைமையில் திருச்சி தோழர்கள் எல்லாம் என்னை அணுகியபோது முதலில் அண்ணா ஒப்புக் கொள்ளாமல், என்னை திருச்சிக்கு அனுப்பி முதலில் அங்கே கழகத்திற்குள் ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சி செய்யச் சொன்னார். அவ்வாறே நானும் திருச்சி சென்று அதற்கான செயல்களில் ஈடுபட்ட பின்னர் அண்ணா மகிழ்ந்து, கைத்தறித் துணிகளை விற்பதற்காக கழகம் முடிவெடுத்து திருச்சியில் யார் விற்பது என்ற கேள்வி எழுந்த போது, "திருச்சியில் நானே கைத்தறித் துணி விற்கப் போகிறேன்" என்று அண்ணா அறிவித்தார்.

ஒரு முறை தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருக்காட்டுப்பள்ளியில் காலையில் ஒரு திருமணத்தில் கலந்து கொண்டு, அன்று மாலையில் அன்பில் கிராமத்திற்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் பொதுக் கூட்டத்தில் பேசுவதற்காக ஒப்புக் கொண்டிருந்தேன். திருமணத்திற்காக நான், மாறன், அன்பில் தர்மலிங்கம், பராங்குசம், பண்ணை முத்து கிருஷ்ணன், குளித்தலை முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் காரில் போய்க் கொண்டிருந்தோம். அது ஒரு ஆற்றங்கரைப்பாதை. நாங்கள் அதே கரையில் இரண்டொரு மைல் தூரம் சென்று அதற்குப் பிறகு ஒரு பாலத்தைக் கடந்து, அடுத்த கரையில் உள்ள திருமண வீட்டிற்கு வந்தாக வேண்டும். அந்தத் திருமண வீட்டிற்கு எனக்கு முன்பு சென்றாக வேண்டுமென்று விரும்பிய அந்தப் பகுதி மக்கள் ஆற்றிலே இறங்கிச் சென்று கொண்டிருந்தார்கள். எங்கள் கார் பாலத்தைச் சுற்றிக் கொண்டு அடுத்த கரை வழியாக வந்தபோது, ஆற்றின் கரையில் ஒரு கூட்டம் நின்றதைக் கண்டு, காரை நிறுத்தி விட்டு, அன்பில் தர்மலிங்கம் அங்கே சென்று என்னவென்று விசாரித்தார். ஆற்றில் இறங்கி வந்த இளைஞர் ஒருவன் நீரில் மூழ்கி அவனைத் தூக்கி வந்து போட்டிருந்தார்கள். அவனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். பிழைக்கவில்லை. அவனது உயிரற்ற உடலை அனுப்பிவிட்டு திருமண வீட்டிற்குச் சென்று மணவிழாவினை நடத்தி வைத்து விட்டு, கல்லணைக்குத் திரும்பினோம்.

மாலையில் பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டுத் திரும்பும்போது, இரட்டை மாட்டு வண்டியில் சென்றால் சுற்றிக் கொண்டு போக வேண்டும், கொள்ளிடம் ஆற்றில் இறங்கி எதிரே உள்ள கல்லணைக்குச் சென்று விடலாம் என்று அனைவரும் கூற நானும் தலையை அசைத்து விட்டேன். கொள்ளிடத்தின் குறுக்கே இறங்கி கொஞ்ச தூரம் சென்றிருப்போம். திடீரென இடியுடன் கூடிய மழை. ஆற்றில் வரவர நீர் மட்டம் உயர்ந்து கொண்டே வந்தது. மாறனை அன்பில் தர்மலிங்கம் தன் தோளில் தூக்கிக் கொண்டார். இரத்தினம் என்ற ஒரு தோழர் என்னைத் தூக்கிக் கொண்டார். நேரமாக வெள்ளம் பெருகி, பிழைத்து கரையேறுவோமா என்பது சந்தேகத்திற்குரியதாகி, எப்படியோ நீண்ட போராட்டத்திற்குப் பிறகு இரவு ஒரு மணி அளவில் கரையேறினோம்.

இதுவும் ஒரு மறக்க முடியாத சம்பவம் ஆகும்.

கழக முன்னணி தளபதிகளில் ஒருவரான என் ஆருயிர் நண்பர் அன்பிலுக்கு 1992-93ஆம் ஆண்டுகளில் உடல் நலம் ஓரளவிற்குப் பாதிக்கப்பட்டு, அவரால் சரியாகப் பேச முடியாத நிலை ஏற்பட்டது. பேசிக் கொண்டேயிருக்கக் கூடிய அவரால் பேசாமல் இருக்க முடியவில்லை. 93ஆம் ஆண்டு மார்ச் முதல் வாரத்தில் உடல் நிலை சற்று மோசமாகி தனியார் மருத்துவமனை ஒன்றில் திருச்சியிலே உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தார். சங்கரன்கோவில், தூத்துக்குடி, கன்யாகுமரி மாவட்டங்களில் சுற்றுப் பயண நிகழ்ச்சிக்காக தேதி கொடுத்திருந்த நான் நேராக அங்கே செல்லாமல், மார்ச் 5ஆம் தேதி திருச்சி சென்று அன்பிலை மருத்துவமனையிலே பார்த்து விட்டுத்தான் கார் மூலம் சங்கரன்கோவில் கூட்டத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். சென்று கொண்டிருக்கும்போதே, அந்தச் சுயமரியாதைச் சுடரொளி, என் அன்புக்கு இனிய நண்பன், அண்ணாவின் ஆருயிர்த் தம்பி, பெரியாரின் செல்லப் பிள்ளை 45 ஆண்டு காலம் என்னுடன் பழகிய அந்த மாவீரன் அன்பில் தர்மலிங்கம் மறைந்து விட்ட செய்தி வந்தது. உடனடியாக திருச்சிக்குத் திரும்பிட நான் துடித்தேன். இருந்தாலும் சங்கரன்கோவில் கூட்டத்தில் 15 நிமிடம் அன்பில் தர்மலிங்கம் பற்றியே பேசிவிட்டு திருச்சி திரும்பினேன்.

அன்பில் தர்மலிங்கம் தன் வாழ்நாளில் பல பதவிகளை வகித்தவர். ஊராட்சி மன்றத் தலைவராக, கூட்டுறவு சங்க

இயக்குநராக, திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக, சென்னை கூட்டுறவு வங்கி இயக்குனராக, திருச்சி மாவட்ட கழகத்தின் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, வேளாண்மைத் துறை அமைச்சராகப் பணியாற்றியவர். என்னுடைய அமைச்சரவையில் வேளாண்மைத் துறை அமைச்சராக மட்டுமல்லாமல், உள்ளாட்சித் துறை, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, வருவாய்த் துறை ஆகிய துறைகளையும் அவர் பொறுப்பேற்று நடத்தினார்.

அண்ணாவின் அமைச்சரவையிலேயே இடம் பெற்றிருக்க வேண்டிய அன்பிலை; 1971ஆம் ஆண்டு நான் இரண்டாவது முறையாக முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது; 8-3-1972 அன்று எனது அமைச்சரவையில் வேளாண்மைத்துறை அமைச்சராக ஆக்கினேன்.

1986ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் அன்பில் தர்மலிங்கத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் "பெரியார் விருதினை" என் கையினால் வழங்கி நானே பெருமைப்பட்டுக் கொண்டேன்.

அன்பில் மறைந்த போது, முரசொலியில் நான் எழுதினேன் -

"திருச்சியில் 1956 கழக மாநில மாநாட்டின் போது 'அன்பில் அழைக்கின்றார்' என்பது அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய கடிதத்தின் தலைப்பு. அது அண்ணா வழங்கியுள்ள பொருள் பொதிந்த சொற்றொடர்களில் ஒன்றாக ஆகிவிட்டிருப்பதை எப்படி மறக்க இயலும்? அந்த அன்பில் இன்று இல்லை. படமாகி விட்டார். இந்த முடிவு இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் உண்டு எனினும், இன்னும் அவர் பழமாக, கிழமாக மாறி அப்போதும் இந்த இயக்கத்தின் பாதுகாப்பு அரணாகத் திகழ்வார் என்றுதான் நம்பியிருந்தேன். நானிருந்தாலும், இல்லாவிட்டாலும் இல்லத்தில் எம் அஞ்சுகத்தாயின் கையினால் குறைந்தது பத்து இட்லிகளாவது பரிமாறச் செய்து உண்டு செல்லும் அந்தக் காலம் முதல் எங்கள் குடும்பத்தில் ஒருவரானவர்தானே அவர். மாவட்டத்திலும் சரி, மாநில முழுமையும் சரி, எத்தனை செல்வாக்கு அவருக்கு! அமைச்சராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவரைச் சுற்றி ஒரு கூட்டமே இருக்கும். ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்து, உழைப்பால் உயர்ந்து, பெரியார், அண்ணா, இராஜாஜி,

பெருந்தலைவர் காமராஜர், காயிதேமில்லத் போன்றவர்களின் அன்பைப் பெற்ற என் நண்பர் - என் உயிர்த் தோழர் - கழக ஆட்சியில் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்ததையும், அத்துறையினைத் திறம்பட வளர்த்ததையும் எண்ணித்தான் திருச்சி மாவட்டத்தில் 1989ஆம் ஆண்டு 'அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி' ஒன்றினைத் தொடங்கினேன் கழக அரசு சார்பில்! அன்பிலுக்கும், அருமை நண்பர் எம்.ஜி.ஆருக்குமுள்ள நட்பைப் பத்திரிகைகள் எல்லாம் படம் போட்டு எழுதியுள்ளனவே இப்போது. அந்த எம்.ஜி.ஆர் அவர்களின் நண்பர் அன்பிலின் பெயரை நான் வைத்ததைத் தான்; இந்த ஆட்சி வந்ததும் வராததுமாகத் தூக்கி எறிந்து விட்டது. ஆனால் புகழ்வானின் உச்சியிலே கொடி போட்டு, இலட்சோப இலட்சம் கழகத் தொண்டர்களின் உள்ளத்தில் குடி கொண்டுள்ள, அந்த விவசாயக் குடும்பத்து வீரன் - கொள்கைத் தங்கம், அன்பில் தர்மலிங்கத்தின் பெயர் என்றைக்கும் யாராலும் அழிக்க முடியாதது!

நண்பனே! அன்பில்! இப்போதும் நீ எங்கள் வீட்டுக்குள் நுழைந்து தாழ்வாரம், கூடம், இங்கெல்லாம் நடந்து கொண்டிருப்பது போலவே இருக்கிறது! அண்ணா அறிவாலயத்தில் என்னருகிலும் பேராசிரியர் அருகிலும் அமர்ந்து இருப்பது போலவே உணருகிறேன்! நீ எங்கும் போய்விடவில்லை! எங்களுக்குள்தான் இருக்கிறாய்!

அன்பில் பிரிந்துவிட்டக் கொடுமைக்குப் பிறகு அவர் பெற்ற மூத்த செல்வன் என்னை அன்பொழுக அப்பா, அப்பா என்று அழைப்பானே, அன்பு மகன் பொய்யா மொழி, அவனை சட்டப் பேரவை உறுப்பினராக ஆக்கினேன். ஆனால் அவன் தன் தந்தையைப் பின் தொடர்ந்து மிகச் சிறு வயதிலேயே மறைந்து விட்டான். அன்பிலின் இரண்டாவது மகனும், பொய்யாமொழியின் தம்பியுமான பெரியசாமியை திருச்சி இரண்டாவது தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினராக ஆக்கியுள்ளோம். அவனைப் பார்க்கும் போதெல்லாம் மறைந்த மாவீரர்களின் நினைவு என் நெஞ்சில் எத்தனையோ பழைய சிந்தனைகளை எழுப்பிடத் தவறுவதில்லை.

அன்பிலும் நானும் நண்பர்களாக தொடங்கியது - அடுத்த தலைமுறையில் தம்பி மு.க. ஸ்டாலினும், அன்பிலின் மகன்

பொய்யா மொழியும் நண்பர்களாக இரண்டாம் தலைமுறையில் தொடர்ந்து - இப்போது ஸ்டாலினின் மகன் உதயநிதியும், பொய்யா மொழியின் மகன் மகேந்திரனும் நண்பர்களாகித் தொடருகிறது நட்பு. அந்த நட்பின் அடையாளச் சின்னம், அன்பிலின் சிலையைத் திறக்கத்தான் திருச்சி வருகிறேன்; அங்கே திருச்சி தீரர்களுடன் நீயும் இருப்பாய் என்ற நம்பிக்கையுடன்!

ஆம்; என்னையும் உன்னையும் சிலை வடிவில் நின்று சிரித்த முகத்துடன் அன்பில் அழைக்கின்றார் - எத்தனையோ கோபதாபங்கள் - எம்மிடையே ஊடல்கள் - உறவுகள்! எதையும் உரிமையுடன் - உணர்வு கலந்த உண்மை நட்புடன் - கணமும் பிரியாமல் கண்ணின் கருவிழி போல என்னையும் - என் நட்பையும் - எம் கழகத்தையும் காத்து நின்ற காவலன் இன்றில்லையெனினும் இதோ - தம்பி நேருவின் தளராத உழைப்பின் சின்னமாக தடந்தோள் உயர்த்தி நிற்கும் - அந்தத் தங்கத் திருமகனின் பெயரை நெஞ்சில் தாங்கி - அன்று திருச்சியில் நடைபெற்ற முதல் மாநில மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தார் அண்ணா; "அன்பில் அழைக்கிறார்" என்று! இதோ நானும் அழைக்கின்றேன்! வா! உடன்பிறப்பே! அந்தத் திருநகர் திருச்சியில் சந்திப்போம்!

அன்புள்ள,

மு.க.

7-9-2010

3499. மலையேறி நிற்போரல்ல நாம்!

உடன்பிறப்பே,

சில பேருக்கு நம்மைப் பற்றி - நமது அரசைப் பற்றி - யாரைப் பற்றியாவது, எதைப்பற்றியாவது குறை சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்களால் தூங்க முடியாது. மருத்துவர்கள் எதற்கு மருந்து கண்டு பிடிக்கிறார்களோ இல்லையோ இந்த நோய்க்கு ஒரு மருந்து கண்டுபிடிக்க முதலில் முன் வர வேண்டும். அரசு மருத்துவ மனைகளிலே அந்த மருந்து இல்லை, இந்த மருந்து இல்லை, மருத்துவர்கள் இல்லை, அந்தத் துறையே சரியில்லை, வெறும் வியாபாரமாகி விட்டது என்றெல்லாம் புலம்பித்தவித்து அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்த அறிக்கைக்காக குறிப்பாகப் பதில் கூறாவிட்டாலும், அதையும் ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு, மக்கள் நல்வாழ்வுக்காக எந்தத் துறைகளில் எந்த அளவிற்கு விரிவானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை இன்று முதல் விளக்கிட விரும்புகின்றேன்.

தமிழக மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் இந்தியாவிற்கே முன்மாதிரியாக விளங்குகிறது என்று, குறிப்பாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் "கலைஞர் மருத்துவ காப்பீட்டுத் திட்ட"த்தை நாட்டிலே உள்ள நல்லவர்கள் எல்லாம் பாராட்டி வருகின்ற நிலையில் அந்தத் திட்டத்தை தொடர்ந்து ஒரு சிலர் குறை கூறி வருகின்றனர். அத்தகைய வசவாளர்களுக்கு நாம் பதில் அளிப்பதற்கு முன்பாகவே நேற்றைய தினம் (15-9-2010) வெளி வந்த "இந்து" பத்திரிகையில்; தமிழ்நாட்டில் குறைந்து வரும் மகப்பேறு இறப்பு விகிதம், சிசு மரண விகிதம், மொத்த கருவள விகிதம் மற்றும் இந்த அரசு செயல்படுத்தி வரும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், கலைஞர் காப்பீட்டுத் திட்டம், இலவச அவசர ஆம்புலன்ஸ் திட்டம் போன்ற தி.மு.க. அரசின் திட்டங்களை பாராட்டி திவ்யா குப்தா என்பவர் ஒரு நீண்ட கட்டுரை எழுதியுள்ளார். அந்தக் கட்டுரை, குழந்தைகள்

இறப்பு விகிதம் தொடர்பான பிரச்சினைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் "குழந்தைகளை காப்போம்" என்னும் இயக்கத் தின் சார்பில் நியூயார்க் நகரில் நடைபெறவிருக்கும் ஐ.நா. சபை அபிவிருத்தி இலக்குகள் குறித்த மாநாட்டுக்காக எழுதப்பட்ட ஒரு ஆய்வு அறிக்கையின் சுருக்கமாகும்.

அந்தக் கட்டுரையில், "இந்தியாவிலேயே கர்ப்பிணி இறப்பு விகிதம் மிகக் குறைவாக உள்ள மாநிலம் தமிழ்நாடாகும். 1993இல் (அ.தி.மு.க. ஆட்சியில்) ஒரு இலட்சம் பேர்களுக்கு 380 ஆக இருந்த இறப்பு விகிதம், 2008இல் (தி.மு.க. ஆட்சியில்) 111 ஆக குறைந்துள்ளது. பிரசவ நேரத்தில் சரியான மருத்துவ உதவிகள் கிடைக்காததால் பல கர்ப்பிணி பெண்கள் மரணத்தைத் தழுவ நேரிடுவதாகக் கண்டறிந்த தமிழக அரசு மகப்பேறு அவசர உதவி மற்றும் பிறந்த குழந்தைகள் பராமரிப்புக்கான நிலை யங்களை தமிழ்நாடு முழுவதும் தகுந்த பயிற்சி பெற்ற மருத்துவர்கள் சிகிச்சை வசதிகள் ரத்த சேமிப்பு வங்கிகள் போன்றவற்றுடன் 24 மணி நேர சேவையையும் அறிமுகப்படுத்தியது. தமிழக அரசு அறிமுகப்படுத்திய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம் கர்ப்பிணி பெண்கள் இறப்பு விகிதத்தைத் தடுக்க பெரிதும் உதவியது. இந்தியாவின் மற்ற மாநிலங்களை விட அரசு திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு மிகச் சிறப்பான நடைமுறைகளை கையாளுகிறது. திட்டங்கள் எப்படி செயல்படுகின்றன என்பதைக் கண்காணிக்க உறுதியான நடவடிக்கைகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. அரசு விடுமுறை நாட்களிலும்கூட பொது சுகாதார நிலையங்கள் மருத்துவ சேவை அளிக்க பணியாளர்களுடன் தயாராக உள்ளன. ஞாயிற்றுக்கிழமைகளிலும் செவிலியர்கள் 24 மணி நேரமும் சேவை அளிக்க தயார் நிலையில் இருக் கிறார்கள்.

தமிழக அரசு நடைமுறைப்படுத்தும் 108 ஆம்புலன்ஸ் வசதி 385 சமுதாய அபிவிருத்தி வட்டங்களுக்கு ஒன்று வீதம் குறைந்தபட்சம் 385 ஆம்புலன்ஸ் இயங்கு

கின்றன. கர்ப்பிணி தாய்மார்கள் உட்பட ஆபத்தான மருத்துவ உதவிக்கு இந்த ஆம்புலன்ஸ் வாகனங்கள் இலவசமாக இயக்கப்படுகின்றன. ஆம்புலன்ஸ் உதவி கேட்டு யாரும் 20 நிமிடங்களுக்கு மேல் காத்திருக்கத் தேவையில்லை. அந்த அளவில் மக்களுக்கு 108 ஆம்புலன்ஸ் பெரும் பணி புரிந்து வருகிறது. மத்திய அரசு செயல்படுத்தும் ஒருங்கிணைந்த குழந்தைகள் அபிவிருத்தி திட்டம் போன்ற திட்டங்கள் இருந்தாலும், தமிழக அரசின் நலத் திட்டங்கள் சாதாரணமாக எங்கு சென்றாலும் யாரும் கண்கூடாக காணும் வகையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன"

என்றெல்லாம் 'இந்து'க் கட்டுரையில் எழுதப்பட்டுள்ளது.

அந்தக் கட்டுரையாளருக்குப் பேட்டியளித்த மருத்துவ நிபுணர் சாரதா சுரேஷ் என்பவர், "நான் நேரில் கண்ட ஒரு முக்கிய வேறுபாடு என்ன வென்றால் இந்தச் சுகாதார நிலையங்கள் தமிழ்நாட்டில் சிறப்பாக இயங்குகின்றன. மற்ற மாநிலங்களில் அவை இயங்குவதே இல்லை" என்று சொல்லியிருக்கிறார். இவ்வாறு பத்திரிகையாளர்களும், மருத்துவர்களும் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை குறித்து உயர்வாகப் பாராட்டிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், பாரதத்தில் வரும் காந்தாரி குழவிக் கல்லை எடுத்து வயிற்றிலே குத்திக் கொண்டதைப் போல, சிலர் தமிழகத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறையே சரியில்லை என்று அறிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 4 ஆண்டுகளில் சுமார் ரூ.1,100 கோடிக்கும் அதிகமான மதிப்பீட்டில் மருத்துவ மனை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூ.600 கோடிக்கு மேலாக நவீன மருத்துவக் கருவிகள் வாங்கி மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக தனியார் மருத்துவமனைகளை தவிர்த்துவிட்டு அரசு மருத்துவ மனைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை பொதுமக்கள் அறிவர்.

ஆண்டொன்றிற்கு ரூ.236 கோடி நிதியை மருந்துக்காக கழக அரசு ஒதுக்கியுள்ளது. இதனால் அரசு மருத்துவமனைகளில் மருந்துக்கு தட்டுப்பாடு என்பதே இல்லை.

அரசு மருத்துவமனைகளில் இதுவரை 6,772 மருத்துவர்கள், 7,242 செவிலியர்கள், 1,767 கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் 10,000-க்கும் அதிகமான மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அ.தி.மு.க. ஆட்சியில் 2005-2006-ல் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிகழ்ந்த மகப்பேறுகளின் எண்ணிக்கை 81,190 மட்டும்தான். கழக ஆட்சியில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் தரம் உயர்த்தப்பட்டதால் அங்கு நிகழும் பிரசவங்கள் மூன்று மடங்குக்கு மேல் உயர்ந்துள்ளன. 2009-2010-ம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிகழ்ந்த பிரசவங்களின் எண்ணிக்கை 2,98,253 ஆகும்.

மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் கடந்த ஆண்டு மட்டும் 5,57,294 சிறிய மற்றும் பெரிய அறுவை சிகிச்சைகள் நடந்துள்ளன. 79,13,344 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர். இந்த ஆண்டு ஜூன் 2010 வரை 2,80,016 சிறிய மற்றும் பெரிய அறுவை சிகிச்சைகள் நடைபெற்றுள்ளன.

எனவே, "கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில்" தனியார் மருத்துவமனைகளில் நடைபெறும் அறுவை சிகிச்சை மட்டுமல்லாது பல்வேறு நோய்களுக்கு அரசு மருத்துவமனைகளிலும் அறுவை சிகிச்சைகள் தொடர்ந்து செய்யப் பட்டு வருகின்றன.

இருப்பினும் நோயின் தீவிரம், நோயாளியின் உடனடித் தேவை மற்றும் சிறப்பு அறுவை சிகிச்சைகளுக்கு அரசு மருத்துவமனைகளில் இருக்கும் காத்திருப்போர் பட்டியல் போன்றவற்றை கருத்தில் கொண்டு ஒரு கூடுதல் சேவையாக (Supplementary Facility) தான் தனியார் மருத்துவமனைகளை இத்திட்டத்தின் மூலமாக ஒருங்கிணைத்து பொதுமக்கள் பயனடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலமாக சுமார் 650 தனியார் மருத்துவமனைகளின் சேவை பொதுமக்களுக்கு இலவசமாக கிடைத்துள்ளது. அதற்கு சான்று; கடந்த 14 மாதங்களில் நிகழ்ந்துள்ள சுமார் 1,93,000 அறுவை சிகிச்சைகள் மூலம் பிணி நீங்கிய பயனாளிகள்தான்.

அறுவை சிகிச்சைக்காக பதிவு செய்து காத்திருப்போர் அதிகமாக இருக்கின்றனர் என்பதை உணர்ந்து, உடனடியாக அறுவை சிகிச்சை செய்து ஏழை நோயாளிகளின் உயிர் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக இந்த அரசினால் கொண்டு வரப்பட்டதுதான் கலைஞர் காப்பீட்டுத் திட்டம். அரசு மருத்துவ மனைகளில் எல்லா நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதால் தான் அறுவை சிகிச்சைக்கு காத்திருப்போர் அதிகமாக உள்ள இருதய அறுவை சிகிச்சை, புற்று நோய், மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சை போன்ற உயிர் காக்கும் 51 நோய்களுக்கு காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த 51 வகையான நோய்களில் உட்பிரிவாக சுமார் 630 வகையான நோய்களுக்கு இத்திட்டத்தில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அறிவிப்பில் கண்டுள்ளபடி இருதயம், புற்றுநோய் மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சை மட்டும் அல்லாது எலும்பு முறிவு, விபத்து, நரம்பியல், பிறப்பில் குறைபாடு, இன சேர்க்கை சார்ந்த நோய்கள், காது, மூக்கு, தொண்டை நோய்கள் போன்ற அனைத்து பிரிவுகளுக்கும் இத்திட்டத்தில் சிகிச்சை பெறமுடியும்.

இத்திட்டத்தில் ஒரு இலட்சம் ரூபாய் மட்டுமே அளவீடாக வைத்திருப்பினும், அனைத்து சிகிச்சைகளுமே அதற்குள் செய்துகொள்ள காப்பீட்டு நிறுவனம் மருத்துவ மனைகளுடன் ஒரு புரிந்துணர்ந்து ஒப்பந்தம் அரசு ஒப்புதலுடன் செய்துகொண்டு அதன்படி ஒவ்வொரு சிகிச்சைக்கும் கட்டணம் நிர்ணயம் செய்து அதை வலைதளத்தில் அனைவரும் அறிய வெளியிட்டுள்ளது. இந்த திட்டத்தில் 1.33 கோடி குடும்பங்களுக்கு அடையாள அட்டை கொடுக்கப்பட்டுள்ளது. இந்த குடும்ப அடையாள அட்டைகளினால் சுமார் 4.50 கோடி பொதுமக்கள் இந்த திட்டத்தில் பயனடைவர். ஒருசில "அறிக்கை ஜீவிகள்" ரூ.3,000 கோடி தனியார் காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாக கூறியிருப்பதில் துளியும் உண்மையில்லை. இதுவரை இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் விகிதாச்சார அடிப்படையில் ஆண்டு பிரிமீயத் தொகை ஒரு குடும்பத்திற்கு ரூ.469 என்று கணக்கிடப்பட்டு இதுவரை 5 காலாண்டிற்கு பிரிமீயத் தொகை ரூ.722 கோடியும், சேவை வரி ரூ.74 கோடியும் ஆக மொத்தம் ரூ.796 கோடி மட்டுமே இதுவரை வழங்கப்பட்டுள்ளது. காப்பீட்டு நிறுவனம் இதுவரை ரூ.515 கோடியை அறுவை சிகிச்சை செய்து

கொண்டவர்களுக்காக மருத்துவ மனைகளுக்கு வழங்கியுள்ளது. இதில் கமிஷன் என்பதற்கே இடமில்லை. ஏனெனில் திட்டத்தை செயல்படுத்தும் காப்பீட்டு நிறுவனம் திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலமாகவே இறுதி செய்யப்பட்டது என்றும் அனைத்து திட்ட வடிவும் அனைத்து அதிகார மட்டங்களிலும் விவாதித்து முடிவு செய்ததும் ஆகும்.

சிக்கன்குனியா, காலரா, டைபாய்டு, அம்மை, மஞ்சள்காமாலை, பன்றிக்காய்ச்சல் போன்ற நோய்களால் பாதிக்கப்படுபவர்களுக்கு அரசு மருத்துவமனைகளிலேயே சிறப்பான சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், இந்த நோய்களால் பாதிக்கப்படுபவர்களுக்கு அறுவை சிகிச்சை தேவைப்படுவதில்லை. தரமான சிகிச்சை அரசு மருத்துவமனைகளிலேயே இத்தகைய நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதால் இந்த நோய்களை காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டிய அவசியம் எழவில்லை. தொண்டை அடைப்பான், இளம்பிள்ளைவாதம், காச நோய், தட்டம்மை, மஞ்சள்காமாலை, கக்குவான், பொன்னுக்கு வீங்கி, இரண ஜென்னி போன்ற பல்வேறு நோய்களை தடுப்பதற்கு மத்திய அரசுதான் எல்லா மாநிலங்களுக்கும் தடுப்பூசி மருந்துகளை அனுப்பிவைக்கிறது. மாநில அரசு இந்த மருந்துகளை கொள்முதல் செய்வதில்லை.

பன்றிக்காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு பன்றிக்காய்ச்சல் வராமல் இருக்க மத்திய அரசு தடுப்பு மருந்தை தமிழகத்திற்கு அனுப்பி உள்ளது. மருத்துவர்களுக்கும் மருத்துவமனைப் பணியாளர்களுக்கும் இந்த தடுப்பூசி மருந்து போடப்பட்டு வருகிறது. பன்றிக்காய்ச்சல் வராமல் இருக்க பொதுமக்களை பாதுகாக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் மத்திய அரசு அனுமதி அளித்துள்ள மருந்து தயாரிக்கும் கம்பெனிகளிடம் அரசு அதிகாரிகள் பேசி பொதுமக்களுக்கு குறைந்த விலையில் இந்த தடுப்பூசி போடும் திட்டம் கிண்டி கிங் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இந்த திட்டம் தொடங்கப்படாத நிலையில் தமிழகத்தில் மட்டும் தான் பன்றிக்காய்ச்சலுக்கு குறைந்த விலையில் தடுப்பூசி போடும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு குறைந்த விலையில் இந்தத் தடுப்பூசி போடப் பட்டு வரும் நிலையில், மாவட்டத் தலைநகரங்களிலே உள்ள அரசு பொது மருத்துவமனைகளில் இந்தத் தடுப்பு ஊசி போடவும், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களிடம் இந்தக் குறைந்த தொகையையும் கூட இனி வசூலிக்கத் தேவையில்லை என்றும் இந்த அரசு முடிவெடுத்து, உடனடியாக நடைமுறைப் படுத்திட ஆணையிட்டுள்ளது.

தமிழகத்தில் சுகாதாரத்துறையும், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மத்திய அரசும் மற்ற மாநிலங்களும் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் சுகாதாரத் திட்டங்களை பாராட்டி இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களில் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துவருகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் மக்களின் நலனில் எந்தவிதமான அக்கறையும் இல்லாதவர்கள் அரசு செயல்படுத்திவரும் மக்கள் நலத்திட்டங்களையும் குறை கூறி பீதி உருவாக்கிட முயற்சி செய்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து இவ்வாறு குறை கூறிக்கொண்டே இருப்பது; நமக்கும் மக்களுக்கு உண்மையான விளக்கங்களை அளிக்கப் பயன்படுவதால் அவர்களின் தூற்றுதல்களையும் வரவேற்போம், பதில் அளிப்போம், மக்களுக்கு தெளிவு ஏற்படுத்துவோம்! மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதை மறந்து விட்டு; மலையேறி நிற்போரல்ல நாம்!

அன்புள்ள,

மு.க.

18-9-2010

3500. எதிர்க்கட்சியாக இருங்கள்; எதிரிக்கட்சியாக அல்ல!

உடன்பிறப்பே,

"வாரம் ஐந்து நாள் முட்டை வழங்கும் முதல்வருக்கு சில கேள்விகள்" என்ற தலைப்பில் 17-9-2010 தேதிய "தீக்கதிர்" நாளிதழில் கொட்டை எழுத்துச் செய்தி ஒன்று என் கண்ணில்பட்டது! அந்த இதழ் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வமான ஏடு. தமிழகத்திலே உள்ள ஏழையெளிய வீட்டு சிறார்களுக்கு தற்போது வாரம் ஒன்றுக்கு மூன்று முட்டைகள் என்று வழங்கப்படுவதை, ஐந்து முட்டைகள் என்று அரசின் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினையொட்டி நான் செய்த அறிவிப்பினைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் - பொறாமையின் உச்சக் கட்டத்திற்குச் சென்று அந்த நாளேட்டில் எனக்கு சில கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளது. அடித்தட்டு மக்களுக்காகப் பாடுபட உறுதியெடுத்துக் கொண்ட அந்த ஏடு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக எந்த அளவிற்கு மாறிவிட்டது என்பதை நினைக்கும் போது வருத்தமாகவே உள்ளது.

கோழிப் பண்ணையாளர்கள் கோரிக்கை வைத்ததாகவும், 24 மணி நேரத்திற்குள் முதல்வரால் அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது என்றும் உள்நோக்கத்தோடு செய்தி வெளியிடப்பட்டுள்ளது. பண்ணையாளர்களின் கோரிக்கைகளை ஏற்பவர்கள் யார் என்று இன்றைய மார்க்சிஸ்ட்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். தஞ்சைத் தரணியில் பண்ணையார்களை எதிர்த்துத்தான் என்னுடைய அரசியல் வாழ்க்கையே தொடங்கியது. பண்ணையாளர்களின் கோரிக்கைகளையேற்று பாவ காரியங்களைச் செய்தவர்களோடு தோழமை கொண்டுள்ள சகவாச தோஷத்தினால், அதே கெட்ட எண்ணத்தோடு அதனை எழுதியிருக்கிறார்கள். எந்தக் கோழிப்பண்ணை முதலாளிகளுக்கும் நன்மை ஏற்பட வேண்டுமென்பதற்காக அல்ல - சிறார்களுக்கு

உண்மையிலேயே சத்துள்ள உணவு அன்றாடம் கிடைத்திட வேண்டுமென்ற அடிப்படையிலேதான் அந்த அறிவிப்பு செய்யப் பட்டது. மார்க்சிஸ்ட் நாளேடு எழுதியுள்ள அந்த நாமக்கல் கோழிப்பண்ணையாளர்கள் சங்கத்தினர் யாராவது நான் அந்த அறிவிப்பைச் செய்வதற்கு முன்பு என்னைச் சந்தித்தது உண்டா? ஏதாவது கோரிக்கையினை என்னிடம் அளித்தது உண்டா? அதனை ஏற்பதாக நான் அவர்களிடம் தெரிவித்தது உண்டா என்பதை மார்க்சிஸ்ட் நாளேடு ஆதாரத்தோடு வெளியிடுவதற்குத் தயாரா? நான் அந்த அறிவிப்பினை செய்த பிறகுதான், அந்தச் சங்கத்தினர் நேற்றையதினம் எனக்கு நன்றி தெரிவிப்பதற்காக மத்திய இணை அமைச்சர் நாமக்கல் காந்திசெல்வன் மூலமாக என்னிடம் நேரம் கேட்டு, நான் நேற்று அவர்களைச் சந்தித்தேன். அந்த நேரத்தில் கூட, நான்தான் அவர்களிடம் ஒரு செய்தியைத் தெரிவித்தேன். என்ன செய்தி என்றால், முட்டை உற்பத்தி பெருக அரசு வழி வகுத்துள்ளது. அரசின் பெருந்தன்மையை உணர்ந்து நீங்கள் முட்டை விலையைக் குறைத்துக்கொள்ள முன்வர வேண்டும். அப்போதுதான் இத்திட்டம் தொடரும் என்று கண்டிப்பாகத் தெரிவித்திருக்கிறேன்.

15ஆம் தேதியன்று மாலையில் நான் வெளியிட்ட அறிவிப்பு, அத்துடன் நின்றுவிடாமல் 17ஆம் தேதியன்றே அரசினால் ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. அந்த ஆணையில் முட்டைகள் சாப்பிடாத மாணவர்களுக்கு முட்டைகளுக்குப் பதிலாக வாழைப்பழம் வழங்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. உடனே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிஏடு வாழை உற்பத்தியாளர்களின் கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளதாக சொல்லும்?

"ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்க மாட்டார்கள்" என்று ஒரு பழமொழி உண்டு. அதைப்போல அந்த நாளேடு அறிவிப்பு வெளி வந்த மறுநாளே, முட்டையை எப்படி வேக வைப்பது, முட்டை ஓடுகளை எங்கே கொண்டு போய் கொட்டுவது, கொண்டைக் கடலை தொடர்ந்து வழங்கப்படுமா, அதற்கான செலவுகளுக்கெல்லாம் என்ன செய்வது என்று என்னிடம் பல கேள்விகளை எழுப்பியிருக்கின்றது. இப்படிப்பட்ட அவசரக்காரர்களை எண்ணித்தான் அரசின் சார்பில் இன்று காலையில் விரிவாக அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த

அரசாணையில், "ஏற்கெனவே செவ்வாய்க்கிழமை 20 கிராம் வேகவைத்த கொண்டைக் கடலை அல்லது பச்சைப் பயறு - வெள்ளிக்கிழமை 20 கிராம் வேகவைத்த உருளைக்கிழக்கு ஆகியவைகளும் தொடர்ந்து வழங்கப்படும். இத்துடன் சத்துணவுக் கூடங்களில் காய்கறி, விறகு ஆகிய செலவுகளுக்காக ஒரு குழந்தைக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த 44 பைசா என்பதும் உயர்த்தி வழங்கப்படும்" என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் தீக்கதிர் அவசரப்பட்டு ஆத்திரத்தைக் கொட்டித் தீர்க்கலாமா? அரசியல் காரணமாக எதிர்ப்பு இருக்கலாம். அதற்காக மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்வதை யெல்லாம் சேர்த்து எதிர்த்தால் உங்கள் கட்சியைப் பற்றி அந்த முட்டைகளை சாப்பிடப் போகும் குழந்தைகளும், அவர்களின் பெற்றோர்களும் என்ன நினைப்பார்கள்?

அண்ணா பிறந்த நாளில் ஐந்து நாட்கள் முட்டைகள் மாணவர்களுக்கு வழங்கப்படும் என்ற அறிவிப்போடு தமிழகத்திலே அரசு அலுவலகங்கள், அரசு சார்புடைய நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் தினக் கூலி அடிப்படையில் அல்லது தொகுப்பூதியத்தில் பணிபுரியும் துப்புரவு தொழிலாளர்களின் ஊதியத்தில், ஒவ்வொருவருக்கும் சுமார் ஆயிரம் ரூபாய் அளவிற்கு கூடுதலாகக் கிடைத்திடக் கூடிய வகையில் அதாவது இனி மாதம் ஒன்றுக்கு தொடக்க நிலையில் 2,320 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தேனே, அது யாருடைய கோரிக்கை? அந்தக் கோரிக்கையினை எந்தப் பண்ணையார் வைத்ததாக அந்த மார்க்சிஸ்ட் ஏடு எண்ணுகின்றது? அடித்தட்டு மக்களுக்காக பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்ளும் அந்த ஏடு அந்த மக்களுக்காக அறிவிக்கப்பட்ட அந்தச் சாதனையைப் பாராட்டி எழுதியிருக்க வேண்டாமா? அப்படிப் பாராட்டி எழுத மனம் வராமல், முட்டைகள் வழங்குவதற்கு மட்டும் உள்நோக்கம் கற்பித்து எழுதுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் சேருவார் தோஷம்தானே?

பன்றிக் காய்ச்சல் வராமல் தடுக்க வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு இலவசமாக தடுப்பூசி வழங்கப்படும் என்று அரசு அறிவித்தது. உடனே அந்த ஊசித் தயாரிப்பாளர்களுக்காக அந்தத் திட்டம் அறிவிக்கப் பட்டதாகக் கூறுவதா?

பால் உற்பத்தியாளர்களுக்காக 17 கோடி ரூபாய் அளவிற்கு ஊக்கத் தொகை அரசின் சார்பில் நேற்றையதினம் வழங்கினேன். உடனே பால் உற்பத்தியாளர்களுக்கான கோரிக்கை ஏற்கப்பட்டது என்று அதற்கு ஒரு அர்த்தம் கற்பித்து எழுதுவதா?

மக்களுக்கு நன்மைகள் செய்திட வேண்டு மென்று எண்ணுகின்ற ஒரு அரசு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தால், அதன் சார்பில் பல்வேறு நலத்திட்டங்கள் அறிவிப்பதும், அவைகளை நடைமுறைப்படுத்துவதும் வழக்கமான ஒன்றுதான்! கலைஞர் காப்பீட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்டு ஏழையெளிய மக்கள் எல்லாம் அதனை வரவேற்கிறார்கள். ஆனால் எதிர்க் கட்சித் தலைவர் ஜெயலலிதா மட்டும் அந்தத் திட்டத்திலே 3000 கோடி ரூபாயை யாருக்கோ கொடுத்துவிட்டார்கள், அவர்கள் எனது குடும்பத்தினருக்கு உறவினர்கள் என்றெல்லாம் அறிக்கை விடுகிறார் என்றால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நண்பர்கள் அதே பாணியில் மாங்காய் புளித்ததோ, வாய்புளித்ததோ என்ற அளவிற்குப் பேசலாமா? எழுதலாமா?

இன்னும் அவர்களுக்கு உதாரணத்திற்காக ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஏழையெளிய மக்களுக்காக கழக ஆட்சி அமைந்த பிறகு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை இலவசமாக வழங்கிட முடிவு செய்தபோது, அது முடியாதென்றார்கள், அந்தப் பெட்டிகளை வாங்குவதிலே ஊழல் நடக்குமென்று பக்கம் பக்கமாக எழுதினார்கள். ஆனால் கழக அரசின் சார்பில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கி விநியோகிப்பது குறித்து தொடக்கத்திலேயே சட்டமன்றத் திலே உள்ள அனைத்துக் கட்சியினரையும் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு - ஒவ்வொரு ஆண்டும் பல முறை அந்தக் குழு கூடி, வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை வாங்குவதைப் பற்றி திறந்த வெளி ஒப்பந்தப் புள்ளிகளைக் கோரி, அதனை அந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் மத்தியில்தான் பிரித்து, ஒவ்வொருவரும் எந்த அளவிற்கு விலைப் புள்ளிகளைக் குறித்திருக்கிறார்கள் என்பதை யெல்லாம் எல்லா கட்சித் தலைவர் களும் நேரடியாக கண்டு அவர்களது ஒப்புதலைப் பெற்றுதான் அவற்றை வாங்குவதற் கான ஆணை பிறப்பிக்கப்பட்டது என்பதை அனைவரும் அறிவார்கள். ஒரு கோடிக்கு மேற்பட்ட

வண்ணத்தொலைக்காட்சி பெட்டிகள் வாங்கியதில் ஒரு சிறு ஊழல் நடைபெற்றதாகக் கூட யாராவது கூற முடியுமா? எனவே இந்த அரசைப் பொறுத்தவரையில் மக்களுக்கு நன்மைகளைச் செய்திட வேண்டு மென்பதிலே மட்டும்தான் அக்கறை உள்ள அரசு.

சமூக நலத் துறையின் மூலமாக சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு முட்டைகளின் எண்ணிக்கையை மாத்திரமா இந்த அரசு உயர்த்தியிருக்கிறது? அந்தத் துறையின் சார்பில் கடந்த நான்காண்டுகளில் செய்யப்பட்ட ஒருசில சாதனைகளை மட்டும் இங்கே குறிப்பிட்டுக் காட்டுகிறேன்.

ஏழைப் பெண்களின் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் 3,44,206 பேர்களுக்கு 624 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

50 வயதினையொட்டி, திருமணம் ஆகாமல் இருக்கும் ஏழையெளிய பெண்களுக்கு மாதம் 400 ரூபாய் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு 31-3-2010 வரை 11,860 பேர் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

விதவை மறுமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி உதவி கடந்த நான்கு ஆண்டுகளில் 89 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் 9,545 தம்பதியர்க்கு 18 கோடியே 36 இலட்ச ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் 11,197 பேருக்கு சுமார் 18 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஆதரவற்றப் பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் 1,302 பேருக்கு 199 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

அரவாணிகள் நல வாரியம் இத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டு, பல்வேறு உதவிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை சுமார் ஆயிரம் அரவாணிகளுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 451 அரவாணிகளுக்கு வீட்டு

மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க 2009-2010ஆம் நிதியாண்டில் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சத்துணவு மையங்களை நவீனப்படுத்தும் முகமாக 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் 1,850 சத்துணவு மையங்களுக்கு எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் துணி கொள்முதல் செய்வதற்கு கடந்த நான்காண்டுகளில் 123 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு கழக ஆட்சியிலேதான் மூன்று முறை ஊதிய விகிதம் உயர்த்தி வழங்கப் பட்டுள்ளது.

கழக ஆட்சியிலேதான் சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களில் பத்தாண்டுப் பணி முடித்தவர்களுக்கு ஒரு ஊதிய உயர்வு வழங்கப்பட்டது.

சத்துணவு சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள் ஆகிய அனைவருமே கழக ஆட்சியிலேதான் சிறப்பு ஊதிய விகிதம் பெற்று வருகிறார்கள்.

சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு மார்க்சிஸ்ட்கள் தற்போது துணையாக உள்ள அ.தி.மு.க. ஆட்சியில் அகவிலைப்படி தவிர ஏனைய படிகள் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான் அவர்களுக்கு முதல் முறையாக வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப் படி, பண்டிகைக் கால முன்பணம் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் மாதாந்திர ஓய்வூதியம் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான் சத்துணவுத் திட்டம் தொடங்கிய காலம் முதல் இதுவரை பணியாற்றி ஓய்வு பெற்ற அனைத்துப் பணியாளர்களுக்கும் முதல் முறையாக ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

கழக ஆட்சியிலேதான் அவர்களுக்கு வழங் கப்பட்டு வந்த பொங்கல் பரிசுத் தொகை 28-12-2006 முதல் 825 ரூபாய் என

உயர்த்தப்பட்டு - மீண்டும் அது 5-2-2008 முதல் 1000 ரூபாய் என உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

அ.தி.மு.க. ஆட்சியில் அவர்களுக்கு பதவி உயர்வு எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான் சத்துணவு அமைப்பாளர்களுக்கு பதிவுரு எழுத்தர்களாகவும், அலுவலக உதவியாளர்களாகவும், இரண்டாம் நிலை மேற்பார்வையாளர்களாகவும், சத்துணவு உதவியாளர்களுக்கு சமையலர்களாகவும், சமையலர் மற்றும் உதவியாளர்களுக்கு சத்துணவு அமைப்பாளர்களாகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது.

சத்துணவு சமையலர் மற்றும் உதவியாளர் இயற்கை எய்தினால், அவர்களுடைய வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் முறை கழக ஆட்சியிலே தான் வழங்கப்பட்டது.

கழக ஆட்சியிலேதான் - 1-4-2010 முதல் பொது வருங்கால வைப்பு நிதித் திட்டமும், சிறப்பு சேமநல நிதித் திட்டம் பத்தாயிரம் ரூபாயாகவும், குடும்ப நலத் திட்டம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாகவும், தமிழ்நாடு அரசின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் உயர்ந்த பட்சமாக இரண்டு இலட்ச ரூபாய் வரையும், மகளிருக்கு மகப்பேறு காலத்தில் 3 மாத விடுப்பும், சத்துணவு பணியாளர்களுக்கு கோடை விடுமுறை காலத்திற்கும் ஊதியம் என்றெல்லாம் வழங்கப்படுகிறது.

2001 முதல் 2006 வரை ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் 7655 பணி இடங்களில் மட்டுமே புதியவர்கள் நியமனம் செய்யப்பட்டதற்கு மாறாக, கழக ஆட்சியில் இந்த நான்காண்டுகளில் 57 ஆயிரம் பணி இடங்கள் புதிதாக நிரப்பப்பட்டுள்ளன.

சத்துணவு அமைப்பாளர்களும், அங்கன்வாடிப் பணியாளர்களும் அ.தி.மு.க. ஆட்சியில் மாதந்தோறும் குறைந்தபட்சமாக 1488 ரூபாயும், உயர்ந்தபட்சமாக 2158 ரூபாயும் பெற்று வந்தனர். ஆனால் கழக ஆட்சியில் தற்போது அவர்கள் குறைந்தபட்ச ஊதியமாக மாதந்தோறும் 3780 ரூபாயும், உயர்ந்தபட்ச ஊதியமாக மாதந்தோறும் 4694 ரூபாயும் பெற்று

வருகின்றனர். மக்களுக்கான திட்டங்களைத் தீட்டும்போது, அதில் குற்றம் குறை இருந்தால் அதனைச் சுட்டிக்காட்டுகின்ற எதிர்க்கட்சியாக இருக்க வேண்டுமேயல்லாமல், எங்கோ, ஏதோ என்று எதையோ கூறி எரிச்சலை உமிழ்கின்ற எதிரிக்கட்சிகளாக இருக்கக் கூடாது!

உடன்பிறப்பே, இந்தத் துறை மூலமாக மட்டும் செய்யப்பட்டு வரும் சாதனைப் பட்டியல்களைத் தொகுத்துள்ளேன். ஆனால் இவைகளைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் பொறாமை வயப்பட்டு எழுதுவோரையும் உன் நினைவிற்குக் கொண்டு வந்துள்ளேன். உண்மையைப் புரிந்துகொள்!

அன்புள்ள,

மு.க.

19-9-2010

3501. நிந்தனை விடுத்து; சிந்தனை செய் மனமே!

உடன்பிறப்பே,

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாளேடான "ஜனசக்தி"யில், 18-9-2010 அன்று அந்தக் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர், தோழர் திரு. தா. பாண்டியன் அவர்கள் "குடிசைகள் இல்லாத தமிழகம்... மலரட்டும்" என்ற தலைப்பில் ஒரு நீண்ட கட்டுரையினை எழுதியிருக்கின்றார். அந்தக் கட்டுரையின் முதல் பகுதியில் "குடிசைகள் இல்லாத தமிழகத்தை அமைப்போம் என அறிவித்தவுடன் அறிவிப்பை கொள்கை ரீதியில் வரவேற்கிறோம்" என்று தெரிவித்திருக்கிறார். ஆனாலும் தொடர்ந்து இன்றைய தோழமை நினைவு வந்துவிட்டது போலும்! உடனே தமிழ்நாட்டில் உள்ள மொத்தக் குடிசைகள் எத்தனை? எப்பொழுது கணக்கு எடுத்தீர்கள்? ஏதோ ஒரு மதிப்பீட்டின்படி 21 லட்சம் குடிசைகள் என்று சொல்வதா? இதற்கான ஆய்வு, கணக்கெடுப்பு நடத்தப்பட்டதா? உத்தேசக் கணக்கா? என்றெல்லாம் கேள்வி மேல் கேள்வி கேட்டிருக்கின்றார்.

அரசு சார்பில் இத்தகைய ஒரு பெரிய அறிவிப்பு செய்யப்படுகின்ற நேரத்தில் கணக்கெடுக்காமலா அறிவிக்கப்படும்? தோழர் பாண்டியன் அவர்களிடம் ஒரு குறைபாடு உண்டு. அவரிடமே அதை நான் ஒரு முறை சொல்லியிருக்கிறேன். அதாவது பத்திரிகைகளை முறையாகப் படிப்பது இல்லை. 6-1-2010 அன்று தமிழக ஆளுநர் பேரவையில் உரையாற்றும்போதே, "தமிழகமெங்கும் ஏழை எளியோர் மண் சுவர்களால் ஆன கூரை வீடுகளில் வசித்து வருவதால், இயற்கை இன்னல்களை எதிர்கொள்ளும் துயர்மிகு நிலை இன்னமும் தொடர்கிறது. கடந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில், நமது மாநிலத்தில் ஊரகப் பகுதிகளில் மட்டும் இத்தகைய வீடுகளின் எண்ணிக்கை சுமார்

21 இலட்சம் என அறியப்பட்டுள்ளது. தற்போது மத்திய அரசின் நிதி உதவியுடன் நாடு தழுவிய அளவில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மட்டும் இக்குடிசைகளை நமது மாநில அளவில் நிரந்தர இல்லங்களாக மாற்ற வேண்டும் என்றால் அதற்கு இன்னும் 30 ஆண்டுகள் ஆகும். இந்த நிலையை நெஞ்சில் நிறுத்தி, முதல் கட்டமாக, ஊரகப் பகுதிகளில் 21 இலட்சம் வீடுகளில் வசிக்கும் ஏழை எளியோரின் வாழ்வில் ஒளியேற்றும் வகையில் இந்த வீடுகள் அனைத்தையும் காங்கிரீட் கூரை கொண்ட நிரந்தர இல்லங்களாக தமிழக அரசின் நிதியைக் கொண்டே மாற்றி அமைத்து, அவற்றை இலவசமாக அளிக்கும் மாபெரும் திட்டம் ஒன்றை இந்த அரசு வகுத்துள்ளது. 2010-2011ஆம் ஆண்டு தொடங்கி, இந்தத் திட்டத்தின் கீழ் ஆறு ஆண்டுக் காலத்தில் மண் சுவர்களால் ஆன 21 இலட்சம் கூரை வீடுகளுக்குப் பதிலாக நிரந்தர வீடுகள் இந்த அரசினால் கட்டித் தரப்படும்" என்று தெரிவிக்கப்பட்டு, அது அனைத்து ஏடுகளிலும் வெளிவந்துள்ளது.

இந்த அறிவிப்பு அப்படியே நின்று விடாமல் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு 3-3-2010 அன்று திருச்சியில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து தொடக்க விழா நடைபெற்றபோது அதிலே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்றத் தலைவர் நண்பர் சிவபுண்ணியம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்றத் தலைவர் செல்வி பாலபாரதி அவர்களும் கலந்து கொண்டு இத்திட்டத்தை வரவேற்றுப் பாராட்டியதோடு, சில திருத்தங்களையும் குறிப்பாக இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வீடு ஒன்றுக்கு 60 ஆயிரம் ரூபாய் என்பது போதாது, அதனை சற்று உயர்த்திட வேண்டுமென்று வலியுறுத்திப் பேசினார்கள்.

அவர்களுடைய அந்தக் கருத்துக்களைக் கூட அலட்சியப்படுத்தாமல் வீடு ஒன்றுக்கு 60 ஆயிரம் ரூபாய் என்பதை 75 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தி அறிவித்தேன் என்பதை அனைவரும் அறிவார்கள். இவ்வளவிற்கும் பிறகு நேற்றையதினம் தா.பாண்டியன், தமிழ் நாட்டில் உள்ள மொத்தக் குடிசைகள் எத்தனை, எப்போது கணக்கெடுத்தீர்கள் என்றெல்லாம் கேட்பது சரிதானா? உள்ளபடியே இந்தத் திட்டத்தை வரவேற்கும் செயல்தானா என்பதை அந்தக் குடிசை வீடுகளில்

குடியிருக்கின்றவர்களுக்காக குரல் எழுப்பும் கம்யூனிஸ்ட் கட்சியின் நண்பர்கள் ஒரு சிலராவது எண்ணிப் பார்க்க வேண்டும்.

வீடு ஒன்றுக்கு மூன்று இலட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டுமாம்! வீட்டின் அளவை அதிகப்படுத்த வேண்டுமாம்! மலிவான பரிந்துரைகளை வாரி இறைக்கிறார்கள். தற்போது அரசு அறிவித்துள்ள வீடு ஒன்றுக்கு 75 ஆயிரம் ரூபாய் என்பதற்கே ஆண்டு ஒன்றுக்கு 2250 கோடி ரூபாய் செலவாகும். இதை மூன்று இலட்சம் ரூபாயாக உயர்த்தினால் ஆண்டு ஒன்றுக்கு 9000 கோடி ரூபாய் தேவைப்படும். உண்மையில் இந்தத் திட்டம் நிறைவேறி கழக அரசுக்கு நல்ல பெயர் வந்து விடக் கூடாது என்பதுதான்! அதனால்தான் வேண்டுமென்றே இப்படிப்பட்ட பரிந்துரைகளை கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பாண்டியனார் கூறுகிறார் என்பதை தமிழ்நாட்டு மக்களே புரிந்து கொள்வார்கள்!

தா. பாண்டியனை விட ஒரு படி மேலே சென்று, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராக இருந்து, தி.மு. கழகத்தோடு தோழமை பூண்டு, என்னை அடிக்கடிச் சந்தித்து உரையாடிய தோழர் என்.வரதராசன் அவர்கள் "தமிழகத்தில் தி.மு.க. அரசு; ஊழலின் ஊற்றுக் கண்ணாக விளங்குகிறது" என்று ஒரு பொதுக் கூட்டத்தில் பேசி அவர்களின் நாளிதழில் வெளி வந்துள்ளது.

இதே வரதராஜன் அவர்கள்தான் தலைமைச் செயலகத்திலே என்னைச் சந்தித்து சிறுதாவூரில் தலித் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை ஜெயலலிதாவும், அவருடைய நண்பர்களும் ஆக்கிரமித்துக் கொண்டதாக எழுத்து மூலமாக புகார் மனு கொடுத்து, அதுகுறித்து நான் உடனடியாக நீதிபதி சிவசுப்ரமணியம் அவர்களைக் கொண்டு விசாரிக்கச் செய்து, அவரும், தலித் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலம் அபகரிக்கப் பட்டது உண்மைதான் என்று அறிக்கை கொடுத்த பிறகு, அந்த விசாரணைக்கு ஏற்பாடு செய்த கழக அரசு; ஊழலின் ஊற்றுக் கண்ணாம், அந்த அபகரிப்புக்குக் காரணமான ஜெயலலிதா உண்மையின் உறைவிடமாம்!

26-7-2006 அன்று தோழர் என். வரதராசன் கையெழுத்திட்டு என்னிடம் கொடுத்த மனுவில், "முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் முதல்வராக இருந்த போது தங்கியிருந்த

சிறுதாவூர் பங்களா அமைந்துள்ள இடம் அவரது தோழி சசிகலாவின் நெருங்கிய உறவினர்களான இளவரசி மற்றும் சுதாகரன் பெயரில் பதிவு மற்றும் பட்டா உள்ளதாக ஆவணங்கள் தெரிவிக்கின்றன" என்று எழுதிக் கொடுத்தார்களே, அந்த ஜெயலலிதா தற்போது கம்யூனிஸ்ட்களுக்கு புனிதவதியாகத் தெரிகிறார், தி.மு. கழக அரசு ஊழலின் ஊற்றுக் கண்ணாக மாறிவிட்டதா?

அ.தி.மு.க. அரசு விவசாயத் தொழிலாளர்களுக்கு செய்திட்ட துரோகத்தை மூடி மறைக்க முயற்சி செய்கிறார் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா என்று அறிக்கை விட்ட கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள், தற்போது தி.மு. கழக அரசை ஊழலின் ஊற்றுக் கண் என்று பேசுவது முறைதானா?

பட்டா வழங்கவேண்டுமென்று ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். 14-11-2008 அன்று பேரவையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் நன்மாறன் பேசுகையில், "கடந்த செப்டம்பர் 30ஆம் தேதியோடு பட்டா வழங்குதல் நிறைவடைந்து விட்டது என்று குறிப்பிட்டாலுங்கூட எங்களுடைய தலைவர் தோழர் திரு.என். வரதராசன் அவர்களுடைய வேண்டுகோளின் அடிப்படையில் மீண்டும் ஓர் ஆண்டு காலத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது குறித்து மகிழ்ச்சி" என்று குறிப்பிட்டது இப்போதும் அவை நடவடிக்கைக் குறிப்பிலே உள்ளதே!

தமிழக அரசின் திட்டங்களையும், செயல்பாடு களையும் ஆளுநர் உரை விவாதமாக இருந்தாலும், சரி, நிதிநிலை அறிக்கை மீதான விவாதமாக இருந்தாலும் சரி இரண்டு கம்யூனிஸ்ட் கட்சியினரும் வரவேற்று, பாராட்டிக் கொண்டு தானே இருந்தார்கள்! திடீரென்று தி.மு. கழக அரசு எப்படி ஊழலின் ஊற்றுக்கண்ணாக மாறி விட்டது? நாங்கள் என்ன ஊழல் செய்து விட்டோம்? தலித்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை விலை கொடுத்து வாங்கி விட்டோமா, அல்லது அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை குறைந்த விலைக்கு யாராவது வாங்கி விட்டோமா? அரசு ஊழியர்களுக்கு எதிராக ஏதாவது எஸ்மா, டெஸ்மா சட்டங்களைப் பிறப்பித்து விட்டோமா? அரசு அலுவலர்கள் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள் - அனைத்துத் தரப்பினரும் இந்த அரசின் செயல்பாடுகளை வரவேற்கிறார்கள். இந்த நிலையில் கம்யூனிஸ்ட்கள் இந்த அரசை எதிர்க்கக் காரணம் என்ன ?

ஏழையெளிய மக்களுக்காகவே ரேஷன் கடைகள் மூலமாக ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. மளிகைச் சாமான்கள் குறைந்த விலையில், சலுகை விலையில் வழங்கப்படுகிறது. ஆனால் மேற்கு வங்கத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆளுங்கட்சியாக உள்ள மாநிலத்தில் என்ன நிலை? நேற்றைய "தினமலர்" நாளிதழில் "மேற்கு வங்கத்தில் ரேஷன் கடைகள் தனியார் வசம் - சுப்ரீம் கோர்ட் வெளியிட்ட அதிர்ச்சி தகவல்கள்'' என்ற தலைப்பில் வந்துள்ள செய்தியில், "மேற்கு வங்கத்தில் பெரும்பான்மையான ரேஷன் கடைகளும், அங்கன்வாடி மையங்களும் தனியார் வசம் இருப்பது சுப்ரீம் கோர்ட் குழு சமீபத்தில் நடத்திய ஆய்வில் தெரிய வந்தது. நாட்டின் பெரும்பாலான மாநிலங்களில் பொது விநியோக திட்டத்தின் கீழ் இயங்கும் ரேஷன் கடைகள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. ஆனால், தனியார் மயத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் மார்க்சிஸ்ட் கட்சி, தனது ஆட்சி நடக்கும் மேற்கு வங்கத்தில், பெரும்பான்மையான ரேஷன் கடைகளை தனியார் வசம் ஒப்படைத்துள்ளது. இது குறித்து சுப்ரீம் கோர்ட் உணவுத் துறை கமிஷன் அங்கு விரிவான ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் கூறி இருப்பதாவது:

மேற்கு வங்கத்தில் பொது விநியோக திட்டத்தின்கீழ் இயங்கும் 97 சதவிகித ரேஷன் கடைகள் தனியார் வசம் உள்ளன. இதே போன்று 97.5 சதவிகித அங்கன் வாடிகள், காண்ட்ராக்டர்களிடம் உள்ளது. இதில் நான்கில் மூன்று பங்கு அங்கன் வாடிகளுக்கு சொந்தக் கட்டடம் கிடை யாது. மூன்றில் இரண்டு பங்கு அங்கன் வாடி மையங்களில் குழந்தைகளுக்கு தண்ணீர் மற்றும் கழிப்பறை போன்ற அடிப்படை வசதி கிடையாது. வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் பெரும்பாலான ஏழை குடும்பங்களுக்கு இதுவரை ரேஷன் அட்டைகள் வழங்கப் படவில்லை. ஆனால் ரேஷன் கடைகள் தனியார் வசம் இருப்பதால், ஏராளமான போலி ரேஷன் அட்டைகள் தயாரிக்கப்பட்டு மானிய விலையில் வழங்கப்படும் பொருள்கள் கள்ளச் சந்தையில் கொள்ளை லாபத்துக்கு விற்பனை செய்யப்படுகின்றன. பள்ளிக்கூடங்களில் 43 சதவீத நடுநிலைப் பள்ளி மாணவர்கள் மதிய

உணவு திட்டத்தின் கீழ் பயன் பெறவில்லை. இது தவிர சமூக வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்துவதிலும் மேற்குவங்கம் மிகவும் பின்தங்கியுள்ளது"

இதனை நான் அந்த அரசை குறை கூற வேண்டும் என்பதற்காக சொல்லவில்லை. நேற்றையதினம் நாளேட்டில் வந்துள்ள செய்தியினைத்தான் எழுதியிருக்கிறேன். இதைக் கூட எழுத நேரிட்டதற்கு காரணம், மதுரை கூட்டத்தில் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி. ராமகிருஷ்ணன், "அடக்குமுறை கொண்டு எந்த இயக்கத்தையும் தமிழக அரசால் ஒடுக்கி விட முடியாது. ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்திற்கு தலைமை ஏற்பது மேற்கு வங்க அரசே" என்று கூறி அவர்களின் ஏட்டில் அந்தப் பேச்சு இடம் பெற்ற காரணத்தினால் தான் மேற்கு வங்க அரசின் நிலையை நான் குறிப்பிட வேண்டியதாயிற்று! இரு கம்யூனிஸ்டுகளும் இனியாவது "நிந்தனை" விடுத்துச் "சிந்தனை" செய்வார்களாக!

அன்புள்ள,

மு.க.

20-09-2010

3502. இரு விழாக்கள்; ஒரு ஒப்பீடு!

உடன்பிறப்பே,

அண்மையில் நடைபெற்ற இரண்டு மூன்று நிகழ்ச்சிகளை இணைத்துப் பார்க்கும்போது, எனக்கு ஒருபக்கம் பிரமிப்பாகவும், பெருமையாகவும் இன்னொருபக்கம் ஆச்சரியமாகவும் இருக்கிறது. அதை உன்னோடு பகிர்ந்து கொள்ளத்தான் இந்தக் கடிதம்.

20.9.2010 அன்று நாகர்கோவிலில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்ற எழுச்சி மிகு தி.மு.க. முப்பெரும்விழா நடைபெற்றது. அந்த விழாவில், 'தந்தை பெரியார் விருதினை' தம்பி வீரபாண்டி ஆறுமுகத்திற்கும்; 'அண்ணா விருதினை' செ.குப்புசாமிக்கும்; 'பாவேந்தர் பாரதிதாசன் விருதினை' திருமதி ராஜம் ஜானுக்கும்; 'கலைஞர் விருதினை' ஜி.எம். ஷாவிற்கும் வழங்கி; முரசொலி அறக்கட்டளை சார்பில், மாணவர்களுக்குப் பரிசு - சான்றிதழ், சிறந்த ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நற்சான்று - பணமுடிப்பு - பதக்கம் மற்றும் தி.மு.க. அறக் கட்டளை சார்பில், மாணவர்களுக்கு நிதியளித்து; நான் உரையாற்றியபோது:

"நான் பேசுகின்ற இந்த இடம் நாகர்கோவில். ஆதித்தமிழன் தோன்றிய இடம். ஏதோ கற்பனையாகச் சொல்லப்படுவது அல்ல; லெமூரியாக் கண்டம் இருந்த பகுதியிலேதான் நாம் இன்றைக்குக் கூடியிருக்கிறோம். இந்த லெமூரியாக் கண்டம்தான் மாற்றமடைந்து, கன்னியாகுமரி மாவட்டமாக விளங்கி- இன்றைக்கு "லெரியா" என்ற பெயரை உச்சரிக்கின்ற அளவுக்கு நம்முடைய பழம்பெரும் புலவர்கள், ஆராய்ச்சியாளர்கள் இவர்களெல்லாம் எடுத்துக்கூறிய அந்த ஆதாரங்களுக்கு விளக்கமாகத் திகழ்கின்ற இந்த நாகர்கோவில் நகரம்!

நாகர் என்றால் வேறு யாருமல்ல - நாகர் என்றால் அது நம்மைக் குறிப்பிடுவதுதான். நாகர் என்றால் வேறு யாரோ எவரோ என்று யாரும் கருதத் தேவையில்லை. இனவழி நாகர்க்கு உரிமையான பெரும்பரப்பு, நாகரிகப் பண்பாட்டின் உறைவிடமாக

இருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இன்றைக்கும் "நாகர்கோவில்" வட்டாரம் காண்கிறோம். நாகப்பட்டினம், நாகர்கோவில் இவைகளெல்லாம் தமிழர்களுடைய பழம்பெரும் பூமிக்கான அடையாளங்கள்.

கன்னியாகுமரி உள்ளிட்ட இந்த இடத்தை லெமூரியா கண்டம் என்று அழைத்த அந்தக் காலத்தில், நாமெல்லாம் தோன்றா விட்டாலும் கூட, நம்முடைய முன்னோர்கள் தோன்றிய இடம்தான் இந்த இடம். அப்படிப்பட்ட முன்னோர்கள் விதைத்த நாகரிகம்தான் கொஞ்சம்கொஞ்சமாக சிறிதுசிறிதாக, படிப்படியாக வளர்ச்சியுற்ற அந்தப் பரிணாம வளர்ச்சிதான் இன்றைக்கு நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற இந்த நாகரிக வளர்ச்சி; அப்படிப்பட்ட பெரும்புகழுக்கும், வரலாற்றுச் சிறப்பிற்கும் உரிய பகுதி இந்த நாகர்கோவில் பகுதி.

அப்படிப்பட்ட பழம்பெரும்பூமியில் - "வரலாற்றுச் சிறப்புவாய்ந்த பூமியில் ஆயிரக் கணக்கான, லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய மக்களின் சந்ததிகள் நாம். நம்முடைய கலாச்சாரம் தனிக் கலாச்சாரம். அதற்குப் பெயர்தான் திராவிடக் கலாச்சாரம். திராவிடக் கலாச்சாரம் என்று சொல்லும்போது, அதிலே என்ன முக்கியமான பொருள் என்றால், ஏதோ இன்னொரு கலாச்சாரம் இருக்கிறது, அதனால் தான் இதனைத் திராவிடக் கலாச்சாரம் என்று பிரித்துச் சொல்கிறோம் என்ற அந்த வேறுபாட்டை பொதுவிலே உணரக்கூடியவர்கள் உண்டு. ஆரியக் கலாச்சாரத்தைப் பிரித்துக் காட்ட, நாம் திராவிடக் கலாச்சாரத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. திராவிடக் கலாச்சாரத்தில் ஊறி வளர்ந்தவர்கள் நாம். அதனால்தான், இந்த இயக்கத்திற்கு, "திராவிட முன்னேற்றக் கழகம்" என்று பெயர் வைத்திருக்கிறோம் என்றால், திராவிடக் கலாச்சாரத்தை வாழ்த்த, திராவிடக் கலாச்சாரத்தைப் போற்ற, திராவிடக் கலாச் சாரத்தை வெற்றி கொள்ளச் செய்ய, நாம் உருவாக்கியிருக்கின்ற கழகத்திற்குப் பெயர் தான் திராவிட முன்னேற்றக் கழகம்"

- என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அல்லது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய திராவிடப் பாரம்பரியத்தின் பரிணாம வளர்ச்சியைக் குறிப்பிட்டுக் காட்டினேன். "கல்தோன்றி

மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடி" திராவிட இனம் என்பது வாழையடி வாழையாக வரும் மரபு.

அதைப்போலவே, தமிழரின் கலை, பண்பாடு, கலாச்சாரத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழும் இராஜராஜனின் தஞ்சைப் பெரியகோயில் ஆயிரம் ஆண்டு நிறைவு விழா - இலட்சோப லட்சம் தமிழ்மக்கள் பங்கேற்க - தஞ்சை மாநகரில் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது. அந்த விழாவில், நிறைவுரை ஆற்றும்போது, தென்னிந்திய வரலாற்றில் மிகவும் படைப்பாற்றல் நிறைந்த சோழர்காலத்தின் அருமைபெருமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி; அவர்கள் கையாண்ட வெளிநாட்டு வாணிகம், கடல் வாணிகம், செய்முறைகள் ஆகியவற்றின் நுணுக்கங்களைப் பற்றியெல்லாம் விளக்கி உரைத்து, 176 ஆண்டுகள் சோழப்பேரரசு தென்னகத்திலே நிலைத்து வாழ்ந்தது என்பதற்கான ஆதாரங்களை நீலகண்ட சாஸ்திரி, காத்யாயனர் போன்ற ஆய்வாளர்களின் கருத்துகளை எடுத்துவைத்து, நான் ஆற்றிய உரையில்:

"இராஜராஜனுடைய நிர்வாகம் அனைத்து மன்னர்களுக்கும் ஒரு உதாரணமாக விளங்கியது. எல்லா எல்லைகளிலும் காவல் படைகள்; சிங்கம்போல் சாம்ராஜ்யத்தைச் சுற்றி வருவதற்கு மகன் இராஜேந்திரன். புதிதாக வென்ற நாடுகளில் பழைய நம்பிக்கையான அதிகாரிகள். அரசியல் அறிவும், கூர்மதியும் கொண்ட அலுவலாளர்கள் எல்லோரையும் தன்னிடத்திலே வைத்துக்கொள்ளும் சாதுர்யம் பெற்றிருந்தார் இராஜேந்திரன்" - என்று குறிப்பிட்டு; இராஜராஜசோழன் காலத்தில் நிர்வாகத்தில் அறிமுகம் செய்துவைத்த நில அளவை முறை, நீட்டல் அளவை முறை, நிறுத்தல் அளவை முறை, ஊராட்சிக்கான குடவோலை முறை ஆகியவற்றைப் பற்றியெல்லாம் எடுத்துரைத்தேன். இது ஆயிரம் ஆண்டு காலத்திற்கு முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் சரித்திரம். இவையனைத்திற்கும் ஆதாரங்களாக இராஜராஜனே எழுப்பியிருக்கும் தஞ்சைப் பெரியகோயிலும், பொறித்து வைத்திருக்கும் கல்வெட்டுகளும் நீடித்து நிலைத்திருக்கும் சான்றுகளாக நம் கண்முன்னே காட்சியளிக்கின்றன.

30.9.2010 அன்று அயோத்தி சம்பந்தமான வழக்கில் சர்ச்சைக்குரிய நிலத்தை மூன்றாகப் பிரித்து, இரண்டு இந்து அமைப்புகளுக்கும், ஒரு முஸ்லீம் அமைப்பிற்கும் சமமாக வழங்கவேண்டு மென்று தீர்ப்பு சொல்லப்பட்டது. நீதிபதி

டி.வி.சர்மா என்பவர் தனது தீர்ப்பில், "சர்ச்சைக்குரிய இடம் இராமர் பிறந்த இடம்தான். இராமர் ஒரு கடவுள். அவர் தெய்வாம்சம் பொருந்தியவராக வழிபடப்பட்டிருக்கிறார். அங்கு பாபரால் கட்டடம் எழுப்பப்பட்டது. எந்த வருடம் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. சர்ச்சைக்குரிய இடத்தில் 1949ஆம் ஆண்டில் டிசம்பர் 22-ம் தேதி நள்ளிரவில், சிலைகள் வைக்கப்பட்டன. சர்ச்சைக்குரிய இடத்தை இராமர் பிறந்த இடமாகக் கருதி, இந்துக்கள் வழிபட்டு வந்துள்ளனர். நினைவு தெரிந்த நாளிலிருந்தே, அதை புனிதத் தலமாகக் கருதி, ஆன்மீகப் பயணம் சென்று வருகிறார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இராமர் கிருதயுகத்தில் பிறந்ததாகச் சொல்லப்படுகிறது. கிருதயுகம் என்பது

17 இலட்சத்து 28 ஆயிரம் ஆண்டுகள் கொண்டதாகும். இப்படி கற்பனைக்கே எட்டாத எண்ணிக்கை கொண்ட ஆண்டுகளுக்குமுன், நடந்த நிகழ்ச்சியைப்பற்றி, இராமர் பிறந்த இடம் இதுதான் என்று அறுதியிட்டு உறுதியாக வழங்கப்பட்டிருக்கும் நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பார்க்கும்போது; சுமார் 17 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு இராமர் பிறந்த இடத்தை உறுதிப்படுத்த முடிகிறது; ஆனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து- தென்னகத்தையே கட்டி ஆண்ட மாமன்னன் இராஜராஜசோழன் மறைந்தவிதத்தையோ, அவன் கல்லறையையோ, அவனுக்கான நினைவுத்தூண் அமைந்த இடத்தையோ நம்மால் இன்னமும் அறிய முடியவில்லையே என அகம் நொந்து வருந்தத்தானே வேண்டியுள்ளது.

திராவிட இனத்தின் வரலாறு, நிரல்படுத்தி முறையாக எழுதப்படவில்லை என்றாலும்கூட, லெமூரியாக் கண்டத்தைப் பற்றிய ஆராய்ச்சி, சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றிய ஆராய்ச்சி, தமிழ்மொழியைப் பற்றிய மூல ஆராய்ச்சி ஆகிய ஆராய்ச்சிகளின் மூலமாக, வெளிநாடுகளைச் சேர்ந்த தொல்லியல் அறிஞர்கள், மொழியியல் வல்லுநர்கள் திராவிட நாகரிகம் குறைந்தது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த அடிப்படையில் - நம்முடைய திராவிட இனத்தின் வரலாறு பற்றிய ஆதாரங்களை, பிற வரலாறுகளுடன் ஒப்பிட்டு

நோக்கும்பொழுது, திராவிட இனம் அறிவியல் ரீதியாக வாழ்ந்துள்ள உண்மை வரலாற்றினைத் தெளிவாக உலகம் அறிந்துகொள்ளமுடியும். ஆனால், திராவிட இனத்தைப் புறந்தள்ள முயற்சித்த ஆரிய நாகரிகம் அடிப்படை ஆதாரம் இல்லாமலேயே வெறும் மூடநம்பிக்கையை மக்களிடம் வளர்ப்பதில்மட்டும்முனைப்பாகச்செயல்பட்டிருக்கிறதுஎன்பதை நீ அறிந்துகொண்டால் போதும்!

அன்புள்ள,

மு.க.

4-10-2010

3503. அமளியும் - வன்முறையும் ஜனநாயகமா?

உடன்பிறப்பே,

எந்த ஜனநாயகத்திலும் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் அத்தியாவசியத் தேவைகள் என்பதையாரும் மறுத்துரைத்திட இயலாது. ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. அப்போதுதான், மக்களாட்சியின் மாண்புகள் மேலும்மேலும் பொலிவு பெறும். நிர்வாகத்தில் அவ்வப்போது ஏற்படும் குறைகளை ஆக்கப்பூர்வமான முறையில் எதிர்க்கட்சி சுட்டிக்காட்டுவதும்; வேறு எந்த உள்நோக்கமும் இன்றி இதய சுத்தியோடு சுட்டிக்காட்டப்படும் அந்தக் குறைகளைக்களைந்து, ஆளுங்கட்சி ஆட்சிச் சக்கரத்தைச் செலுத்துவதும்; ஜனநாயகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நடைமுறையாகும்.

ஆனால், தமிழக அரசியலில் நாம் காண்ப தென்ன? இதுவரை இல்லாத அளவுக்கு சரித்திரம் போற்றும் சாதனைகளை நிகழ்த்தி வருகிறது கழக அரசு. ஏழை எளியோர், பாட்டாளி மக்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், விவசாயிகள், வணிகர்கள் என அனைத்துத் தரப்பினரின் நலன்களையும் பேணிக்காத்திடும் அரசு கழக அரசு. தமிழகத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் உணவுப் பாதுகாப்பும், மருத்துவப் பாதுகாப்பும், உறைவிடப் பாதுகாப்பும் வழங்கிட வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு பல்வேறு திட்டங்களைத் தீட்டி - அதன் காரணமாக இலட்சோபலட்சம் மக்கள் பலனடைந்து நிறைவும், நிம்மதியும் பெற்று வாழ்ந்து வருகின்றனர். நல்லவர்கள், நடுநிலையாளர்கள், பொருளாதார வல்லுநர்கள், அரசியல் கட்சிகளைச் சாராத அமைப்பினர், கழக அரசின் திட்டங்களையும், செயல்பாடுகளையும் போற்றிப் பாராட்டிவருகின்றனர்.

கழக அரசு நாள்தோறும் பெற்றுவரும் பாராட்டுகளையும், மக்களிடையே பெருகி வரும் பேராதரவினையும் கண்டு பொறுக்காத எதிர்க் கட்சியினர் சிலர்; எங்காவது ஒரு துரும்பு கிடைத்தாலும், அதைத் தூணாக்கிக் காட்டுவதிலும்; சிறு பொறி கிடைத்தாலும், அதனை ஊதிஊதி பெருநெருப்பாக்குவதிலும், தங்களது நேரத்தையும் நினைப்பையும் செலவிட்டு வருகிறார்கள்.

இதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளைக் கூறமுடியும். நேற்று சென்னையில் நடந்த நிகழ்ச்சியையே பார்ப்போமே!

சென்னை, தியாகராய நகரிலிருந்து ஆவடிக்கு 3.10.2010 அன்று இரவு 9 மணிக்கு மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்து புறப்பட்டுச் சென்றிருக்கிறது. அந்தப் பேருந்து பாடி, புதுநகர் பஸ் நிறுத்தம் அருகில் சென்று கொண்டிருந்தபோது, "ஸ்கார்ப்பியோ" கார் ஒன்று அந்த பஸ்சை முந்திச் செல்ல முயன்றிருக்கிறது. காருக்குள் ஓட்டுநர் உதயகுமார், செந்தில் சுரேஷ், ஸ்டாலின், முருகன் என்போர் இருந்திருக்கின்றனர்.

பேருந்து ஓட்டுநர் காருக்கு வழிவிடவில்லை என்பதால், பேருந்துக்கும், காருக்கும் போட்டியும், உரசலும் ஏற்பட்டிருக்கின்றன. இதன் தொடர்ச்சியாக இரு குழுவினருக்கும் இடையே வாய்த்தகராறு முற்றி, கைகலப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கைகலப்பில் மாநகரப் போக்கு வரத்துக் கழகத்தைச் சார்ந்த குமாரவேல், குமார், உமாபதி, தினகரன், பாப்பையா, சுப்பிரமணியம் ஆகியோர் காயம் அடைந்திருக்கின்றனர். காயம் அடைந்த 6 பேரும் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கே தேவையான சிகிச்சைக்குப் பிறகு திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றனர். ஆனால், சி.ஐ.டி.யு. சங்கத்தைச் சார்ந்த சிலர், குமாரவேல், குமார், தினகரன் ஆகிய மூவரையும் அழைத்துச் சென்று சென்னை பொது மருத்துவமனையில் அனுமதித்திருக்கிறார்கள். வேண்டுமென்றே திட்டமிட்டுப் பொய்யுரையாக, "காயம் அடைந்த ஒருவர் இறந்துவிட்டார்" என்ற வதந்தியை அந்தத் தொழிற் சங்கத்தினர் பரப்பியதால், போக்குவரத்துக் கழகப் பணி மனைகளில் பதற்றம் ஏற்பட்டது.

இதன் காரணமாக, 4.10.2010 காலையில் அண்ணா நகர், ஆவடி, அம்பத்தூர் ஆகிய பணிமனைகளைச் சேர்ந்த ஓட்டுநர்களும், நடத்துநர்களும் பேருந்துகளை இயக்க

மறுத்தனர். பேருந்துகளை எடுத்துச் சென்ற ஓட்டுநர்களையும், நடத்துநர்களையும் வழிமறித்து, பேருந்துகளை சாலைகளிலேயே குறுக்கும் நெடுக்குமாக நிறுத்தச் செய்தனர்.

நாள்தோறும் சென்னை மாநகரச் சாலைகளில் 3 ஆயிரத்து 151 பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆனால், நேற்று ஆயிரத்து 907 பேருந்துகள் மட்டுமே ஓடின. 713 பேருந்துகள் ஓடவில்லை. அதற்குக் காரணம், சில எதிர்க்கட்சிகளைச் சார்ந்த தொழிற் சங்கங்கள்தான். பேருந்துகள் ஓடாமல் இருந்ததால், பொதுமக்கள் எவ்வளவு அவதிக்கு ஆளானார்கள் என்பதை அனைத்துப் பத்திரிகைகளும் விரிவாக வெளியிட்டிருக்கின்றன.

செந்தில் சுரேஷ், ஸ்டாலின், முருகன், உதயகுமார் ஆகிய நான்கு பேர் மீதும் கொலை முயற்சி, பொதுச் சொத்தைச் சேதப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து; அவர்களைக் கைது செய்து, புழல் சிறையில் அடைத்தனர்.

இதில் உண்மைநிலை என்ன தெரியுமா? காரில் பயணம் செய்த செந்தில் சுரேஷ் என்பவர் அம்பத்தூர் நகராட்சி, 37வது வட்டம் தி.மு.க. கவுன்சிலர் அன்பு என்பவரின் மகன். கைகலப்பின் காரணமாகக் கலவரத்தில் காயம்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஓட்டுநர்- நடத்துநர்களில் உமாபதி, பாப்பையா, சுப்பிரமணியம் ஆகியோர் கழகச் சார்பிலான தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்கள். அவர்கள் தி.மு.க.வினர் அல்லது தி.மு.க. ஆதரவாளர் என்பதற்காக; காவல் துறை அவர்களைக் கைது செய்யாமலோ, ரிமாண்டில் வைக்காமலோ, விடுவித்து விடவில்லை - மாறாக; அவர்கள் புழல் சிறையில் அடைக்கப்பட்டுமிருக்கிறார்கள். இத்தனை நடவடிக்கைகளையும் பாரபட்சமில்லாமல் - தயவு தாட்சண்யம் பாராமல்; இந்த அரசின் காவல் துறை எடுத்திருக்கும்போது, பேருந்துகளை இயக்கிடாமல்; தொழிலாளத் தோழர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவதால், போக்குவரத்து ஸ்தம்பித்துப் போய், பொதுமக்கள் எவ்வளவு பெரும் பாதிப்புக்கு ஆளாகிட நேரிட்டது என்பதை நடுநிலையோடு சிந்தித்துப் பார்த்திட வேண்டுகிறேன்.

நியாயத்துக்காகப் போராடும் தொழிலாளிக்கு விரோதமாக எந்தவொரு செயலும் நடைபெறுவதை நான் விரும்பாதவன்

என்பதை; இன்று நேற்றல்ல; இளமைக் காலம் முதலே நிரூபித்து வருபவன் என்ற முறையில்; யாருடைய கோபதாபமானாலும், அதன் விளைவாக பொது மக்களோ, பொதுச் சொத்துக்களோ தாக்குண்டு - ஏற்படும் இழப்பை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

இரு குழுவினருக்கிடையே ஏற்பட்ட மோதலை காரணமாகக் காட்டி, எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த தொழிலாளர் சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, பொதுமக்களுக்கு பல்வேறு வகையிலும் இன்னல்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

இப்படித்தான், தமிழகத்திலே இருக்கின்ற எதிர்க்கட்சிகள் பிரச்சினைகளே இல்லை என்றாலும்கூட, பிரச்சினைகளை உருவாக்கி, தொடர்புடையவர்களைத் திசைதிருப்பியும், உருவாக்குகின்ற பிரச்சினைகளின் மூலமாக பொதுமக்களுக்கு அவதியும், இன்னலும் ஏற்படும் என்றாலும், அதைப் பற்றியெல்லாம் கொஞ்சமும் கவலை கொள்ளாமல், எந்தப் பிரச்சினையாவது கிடைக்காதா, அதை வைத்து அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்த முடியாதா என்ற அடிப்படையிலேயே செயல்பட்டு வருகிறார்கள் என்பதற்கு இந்த நிகழ்ச்சியும் ஒரு சான்றாகும்.

தமிழகத்தில் உள்ள எதிர்க்கட்சியினர்க்கு ஆக்கப்பூர்வமான முறையில் பொதுப்பணி ஆற்றிட வேண்டும் என்ற நோக்கத்தைவிட; எதையாவது வைத்து அரசியல் நடத்திட வேண்டும்; தாங்கள் சார்ந்திருக்கும் கட்சிக்கு ஆதாயம் தேடிட வேண்டும்; என்பதிலேயே கண்ணுங்கருத்துமாக இருக்கிறார்கள் என்ற நிலையைத் தமிழக மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை; இத்தகைய அமைதி குலைக்கும் காரியங்களில் ஈடுபடுவோர் மறந்துவிடக் கூடாது என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

6-10-2010

3504. மத்திய அரசாணைக்கும் இப்படியொரு மறுப்பா?

உடன்பிறப்பே,

ஒவ்வொரு நாளும் பகல் 1 மணி அளவில் தலைமைச் செயலகத்திலிருந்து, பணியாற்றியகளைப்புடன் வீடு திரும்பி உணவருந்திட உட்காரும்போதுதான்; எதிரே உள்ள தொலைக் காட்சியில், நெஞ்சைக் குலுக்கும் நிகழ்வுகளும், செய்திகளும் ஒன்றன்பின் ஒன்றாக வந்து போகும். அவற்றைப் பார்க்கும்போது உணவருந்தவே மனம் இடம் தராது. எத்தனையோ முறை உணவு பரிமாறப்பட்டிருக்கிற தட்டினை அப்படியே வைத்துவிட்டு, கை கழுவிவிட்டு; அடுத்த அலுவல்களுக்குச் சென்றிருக்கிறேன். இந்த நிலை ஒரு நாள் இரு நாள் அல்ல; ஏறத்தாழ ஒவ்வொரு நாளுமே உள்ளத்தைச் சுட்டெரிக்கும் அந்தக் காட்சிகள் வரத் தவறியதில்லை.

திருப்பதிக்குச் சென்று திரும்பிய வழியில் வேன் கவிழ்ந்து, குழந்தைகள் உட்பட குடும்பத்தார் அனைவரும் பலி என்ற செய்தியும்; பலியான குழந்தைகளை, பதறித் துடித்தவாறும், கதறி அழுதவாறும் சுற்றத்தார் சூழ்ந்து கொண்டு, துக்கத்தை வெளிப்படுத்தும் அந்தத் துயர நிகழ்ச்சிகளும், அந்த நாள் முழுதும் எனது இதயத்தை அலைக்கழிக்கச் செய்யத் தவறியதே இல்லை.

திருமணம் முடிந்து வருகிற வழியில் காரில் வந்த மணமக்கள் லாரியுடன் மோதிய விபத்தில் மாண்டு போனார்கள் என்ற செய்தி என்னை செந்தீயாகச் சுட்ட நாட்கள் எத்தனையோ உண்டு.

விழாவுக்குச் சென்றவர்கள், காரோட்டியின் அஜாக்கிரதையால், சாலையில் அடையாளத்தைப் பார்க்கத் தவறி, வேறு வழியில் திரும்பி, குடும்பத்தோடு குடை சாய்ந்து, ஒருவர்கூட பிழைக்காமல்

பலியான பரிதாபம். இப்படி ஒவ்வொரு நாளும் உள்ளத்தை உலுக்குகின்ற விபத்துகள் - நெஞ்சைப் பிழியும் கோரச் சாவுகள் - பச்சிளங்குழந்தைகளின் பிணக் குவியல்கள் - இந்த விபத்துகள் குறைய வழியே இல்லையா? என்று நம் போன்றோர்க்கு ஏற்பட்ட பெருமூச்சின் விளைவாகத்தான்; வாகனங்களை ஓட்டிவரும் ஓட்டுநர்களுக்குப் படிப்பறிவு அவசியம் என்று கருதி, மத்திய அரசு அறிவார்ந்த விதிமுறை ஒன்றை வகுத்தது. அதன்படி, 8ஆவது வகுப்பு வரையிலாவது ஓட்டுநர்கள் படித்திருக்க வேண்டும் என்றொரு நியதி வகுத்து, அதனை ஆணையாகவும் ஆக்கியது.

அந்த ஆணையை நிறைவேற்றும் வகையில், மாநில அரசுகள் செயல்படத் தொடங்கிய காரணத்தால், வரவர வாகனங்களின் எண்ணிக்கை சாலைகளில் அதிகமாகிக் கொண்டே வந்தால்கூட, விபத்துகளின் எண்ணிக்கை ஓரளவு குறைந்து கொண்டே வருவதைக் காண்கிறோம். மேலும் அது குறைய வேண்டும்; விபத்துகளால் ஏற்படும் திடீர்ச் சாவுகள் காரணமாக உருவாகும் குமுறல், கொந்தளிப்பு குறைய வேண்டுமென்று நம்மைப் போன்றவர்கள் சிலர் எண்ணுகிற நேரத்தில்; எப்படியோ ஒரு வேலைக்குப் போகிற இளைஞனுக்கு எட்டாவது வரையிலாவது படிக்க வேண்டுமென்ற ஊக்கத்தை, மத்திய அரசின் இந்த ஆணை உருவாக்குகிறது என்பதில் ஓரளவு நிம்மதி.

ஆனால், எப்படியோ மத்திய அரசையோ, மாநில அரசையோ குற்றஞ்சாட்டி; இளைஞர்கள் எட்டாவது வரையிலாவது படித்து கல்வி அறிவு பெறுவதைத் தடுக்கும் வகையில்; அதை எதிர்க்கும் ஒரு போராட்டத்தை நடத்துகிறேன் என்கிறார்கள் ஒரு சிலர்!

எல்லா ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் நடத்திப் பார்த்துக்களைத்துப் போனவர்களுக்கு, இந்தப் போராட்டமாவது கைகொடுக்குமா என்றுதான் அவர்களைச் சுற்றி இருப்பவர்கள் கைதட்டி ரசித்து, வாழ்த்தொலி முழங்குவதற்கு வாயைப் பிளந்து கொண்டிருக்கிறார்கள்.

பணி வாய்ப்பும் தேவை; ஓரளவு படிப்பும் தேவை; என்று கருதி, மத்திய, மாநில அரசுகள் கடைப்பிடிக்கும் (கல்வியை வலியுறுத்தும்) - இந்தச் சாதாரண நிபந்தனையைக்கூட சகிக்க

மாட்டோம் என்று சண்டமாருதம் போல் கிளம்புகின்றவர்கள் இப்படி ஏதாவது காரணம் கிடைக்காதா? என்று அலைந்து கொண்டிருந்தால்; நாடு வாழுமா, நல்லது நடக்குமா என்பதை நல்லோரே, நீவிர்தான் எண்ணிப் பார்க்க வேண்டும்!

அன்புள்ள,

மு.க.

13-10-2010

3505. “வாழ்க வசவாளர்” என்ற வாசகத்தை மறக்கலாமா?

உடன்பிறப்பே,

மதுரை நகரம் எனக்குப் புதிய நகரமல்ல. என் பொதுவாழ்வில் ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கு மேலாக அந்த நகரின் தெரு முனைகளில் இயக்கக் கொடிகளை ஏற்றி வைத்து, அந்தக் கொடி உருவான வரலாற்றை விளக்கியிருக்கிறேன். மதுரை முத்து என்ற தன்மான இயக்கத் தளபதியின் அரவணைப்போடு நான் கொடியேற்றிய இடங்களில், கொடியோர் சிலர் அந்தக் கொடியை மரத்தோடு வெட்டி எறிந்திருக்கின்ற காட்சிகள் இன்னும் என்கண்களை விட்டு அகலவில்லை; நெஞ்சத் திரையை விட்டு நீங்கவில்லை. அப்படி ஒரு எரிநெருப்பு போன்ற எதிர்ப்புக்கிடையேதான், என் பொதுவாழ்வு அரும்பி மலர்ந்து, அய்யா பெரியார் தந்த உறுதியோடும், அறிஞர் அண்ணா தந்த அறிவுச் சுடரோடும் வளர்ந்து செழித்து; இருபதாம் அகவையில் பெற்றிருந்த எழுச்சியோடு இந்த எண்பத்தாறாம் அகவையிலும் உன்போன்றோரை என் உடன்பிறப்புகளாகப் பெற்று, இந்த திராவிடக் கலாச்சாரப் படையினை - இன உணர்வுச் சேனையினை நடத்திடும் பக்குவத்தை எனக்கு அளித்துள்ளது என்பதை எவரும் மறுத்திடார்!

உடன்பிறப்புகளாம் உன்போன்றோர் என் பக்கம் இருக்கின்றீர்கள் என்ற பெருமிதத்திலும்; தமிழ்கூறும் நல்லுலகின் அறிஞர் பெருமக்கள், புலவரேறுகள் என்னை வாழ்த்தியிருக்கின்ற மகிழ்வோடும், ஆட்சிச் சக்கரத்தை இயக்குகின்ற வாய்ப்பினைப் பெற்று; அந்த வாய்ப்பை வளமார் தமிழ்நாட்டு மக்கள் மேலும் வலிவுபெறவும், பொலிவு பெறவும் பயன்படுத்தும் வகையில், தொடர்ந்து தொண்டாற்றியதால், நான் சார்ந்துள்ள இயக்கத்தினை

என்றைக்கும் முடிவுக்குக் கொண்டுவர முடியாமல் போய் விடுமோ என எண்ணிடும் நச்சு நினைப்பினர் சிலர்; என்னையே இல்லாமல் செய்துவிட்டால் என்ன - என்கின்ற அளவுக்கு அணிசேர்ந்து ஆய்வு நடத்தி, அவர்கள் எண்ணம் ஈடேற, அதற்கான ஆயத்தப் பணிகளில் பலமுறை இறங்கியது போல், இம்முறையும் இறங்கியுள் ளனர்.

ஒருவனை வீழ்த்தக் குழிதோண்டி வைத்து விட்டு, "அய்யோ, என்னை வீழ்த்தத் தோண்டிய குழியைப் பாரீர்!" என்று நடுங்கிக் கதறும் நாட்டியப் பேரொளிகள், நடன மாதரசுகள் மலிந்துவிட்ட நமது நாட்டு அரசியலில், அவர்களின் காட்டுக்கூச்சலைக் கேட்பதற்கும், ஏமாந்த சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

உடன்பிறப்பே, இந்த உண்மையை உன் உள்ளத்திலே பதியவைத்துக் கொண்டு, இதோ நான் சொல்வதையும் கொஞ்சம் சிந்தித்துப்பார்!

எதிர்க்கட்சித் தலைவர் மதுரைக்குப் போகிறாராம்; பொதுக்கூட்டத்தில் பேசுகிறாராம்; அங்கே தி.மு.க.வினர் அந்தக் கூட்டத்தைக் கலைக்கவும், அவருக்கு ஆபத்து விளைவிக்கவும் திட்டமிட்டு, அதனை எச்சரிக்கையாக்கி ஏராளமான சுவரொட்டிகளை நகரெங்கும் ஒட்டியிருக்கிறார்களாம்; அதற்கு எதிரான சுவரொட்டிகள் அ.தி.மு.க. வினரால் ஆங்காங்கே ஆயிரக்கணக்கில் ஒட்டப்பட்டிருக்கிறதாம்.

இந்த இரண்டுமே அரசியல் நாகரிகத்திற்கு அடியோடு எதிர்ப்பான செயல் என்பதற்காகவும், இவற்றின் காரணமாக இரு சாராரிடையே மோதல் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவும், காவல் துறையினர் கண்விழிப்போடு அலைந்து திரிந்து அதற்கான தடயம் எங்கும் இருத்தலாகா தென்றும்; அந்தத் தடயங்களுக்குக் காரண மானவர்கள் ஆளுங்கட்சியினராயினும், எதிர்க் கட்சியினராயினும் ஒரேவிதமான குற்றச் சாட்டுக்கும், விசாரணைக்கும், தண்டனைக்கும் உரியவர்களே ஆவார்கள் என்ற நிலைப்பாட் டுடன் சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கத் தயங்காமல் இந்த அரசு செயல்படும்போது; இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் இருக்கின்ற ஆத்திரக்காரர்கள் எவராயினும் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து நல்வழி காண்பதும், நகரின் - நாட்டின் அமைதி காப்பதுமே அரசுக்கு

மாத்திரமல்ல; எதிர்க்கட்சிக்கும் ஏன், எல்லா கட்சிகளுக்கும் உரிய நடுநிலை இலக்கணம் ஆகும்.

உடன்பிறப்பே, மதுரையிலே ஏதாவது சம்பவம் நடக்கக்கூடும் என்று அதைத் தடுக்க சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று அ.தி.மு.க. கோரியது. அதற்காக அட்டியின்றி உடனடியாக ஆணை வழங்கப்பட்டு; சி.பி.ஐ. நடவடிக்கை எடுக்கவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் சி.பி.ஐ. அமைப்பு நடவடிக்கை எடுப்பதற்குள்ளாகவே, தமிழ்நாட்டுக் காவல்துறையை குற்றம் சொல்லியும், குறை கூறியும், தி.மு.க. அரசு மீது வீண் பழி சுமத்தியும்; அதற்குப் பக்கபலமாக சில கட்சியினரை இணைத்துக் கொண்டு, சிலர் ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுப் பாடுகிறார்கள் என்றால் அதன் பொருள்தான் என்ன?

இப்படிப்பட்ட பிரச்சாரங்களால் பெருங்கூட்டம் சேர்க்க வேண்டிய நிலையில் எதிர்க்கட்சி இல்லை என்பதும்; அதன் வலிவும், மக்கள் ஆதரவும் எவ்வளவு என்பதும் நமக்குத் தெரிந்திருப்பதைப் போலவே; எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். இதற்கிடையே நம்மீது ஓர் அபவாதத்தைச் சுமத்தி அவர்கள் பெறப் போகும் பயன் என்ன?

எதிர்க்கட்சியினர், வன்முறை வன்முறை என்று எச்சரிக்கைக் கூச்சல் போடுவது ஒருவேளை இவர்களின் வன்முறை ஆயுதத்தை நம்மீது வீசுவதற்குத்தானோ என்று எண்ணிடாமல் இருக்க முடியவில்லை.

எனவே உடன்பிறப்பே, மதுரையிலே அவர்களின் கூட்டம் நடந்து முடிகிற வரையில், ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டுகிற அகிம்சாவாதியாக இருக்க வேண்டும். அவர்கள் திட்டினால் உன் காதுகளுக்குத் தேனமுதமாக இருக்க வேண்டும். ‘‘உன்னையே திட்டுகிறார்களே, வசைபாடுகிறார்களே, என்னால் வாயை மூடிக் கொண்டு இருக்கமுடிகிறதா’’ என்று கேட்பா யானால்; எனக்கும், உனக்கும் என்றைக்கும் நினைவிருக்கக்கூடிய அண்ணாவின் வாசகத்தை மறந்து விடலாமா? அதுதானே, ‘‘வாழ்க வசவாளர்கள்!’’ என்ற வாசகம்.

எழுபது ஆண்டுகால என்னுடைய பொது வாழ்க்கையில் என்னைத் தலைவரே, தலைவரே என்று மூச்சுக்கு மூன்று தடவை

அழைத்தவர்கள், முதுகில் குத்திய துரோகிகள் ஆகிவிட்டதையும் நான் அறிவேன். இதுநாள் வரையில் வசைபாடிக்களித்தோர் இன்று, கொள்கை இசைபாடி என்னை மகிழ்விப்பதையும் நினைத்துப் பார்த்தால்;

''அரசியலில் எதுவும் நடக்கலாம்'' என்பது அழித்து எழுதமுடியாத ஆத்திச்சூடி ஆகிவிட்டது; என்பதுதானே உண்மை!

அன்புள்ள,

மு.க.

17-10-2010

3506. தாய்த் தமிழகத்தின் ஏக்கம் - என்று தணியுமோ?

உடன்பிறப்பே,

9.10.2010 அன்று சென்னை விமான நிலையத்தில் நான் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் திருமதி.சோனியா காந்தி அம்மையார் அவர்களைச் சந்தித்தபோது, கடிதம் ஒன்றை அவர்களிடம் அளித்தேன். அந்தக் கடிதத்தில், இலங்கையில் இன்னமும் முகாம்களில் இருந்துவரும் 30 ஆயிரம் தமிழர்களையும் உடனடியாக அவரவர் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டுமென்றும்; போரினால் பாதிக்கப்பட்ட அனைத்துத் தமிழர்களுக்கும் விரைவில் மறுவாழ்வு அளிக்க இலங்கை அரசை பயன்தரத்தக்க முறையில் வலியுறுத்த வேண்டுமென்றும்; மேலும் தாமதமின்றி அரசியல் தீர்வுக்கான செயல்முறையைத் தொடங்க இலங்கை அரசு வற்புறுத்தப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தேன். அம்மையார் அவர்களும் அதுகுறித்து உடனடியாகக் கவனிப்பதாக என்னிடம் உறுதி அளித்தார்கள்.

இலங்கைத் தமிழர்கள் அந்த நாட்டின் குடிமக்கள் என்ற முறையில் அனைத்து அடிப்படை உரிமைகளையும் பெறுவதற்கு அரசியல் தீர்வு ஒன்றுதான் நிரந்தரத் தீர்வாக அமைந்திட முடியும் என்று, இன்று நேற்றல்ல; நீண்ட நெடுங்காலமாகவே திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்பது உனக்கும் உன்னைப் போன்றவர்களுக்கும் நன்றாகவே தெரியும்.

29.1.1956 அன்று சிதம்பரத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுவில் நான் முன்மொழிந்து; பெரியவர் அ.பொன்னம்பலனார் அவர்கள் வழிமொழிந்த தீர்மானத்தில், இலங்கைத் தமிழர்களுடைய உரிமைகளுக்காக குரல் கொடுத்த நாள்தொட்டு; தொடர்ச்சியாக இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்காகவும், உரிமைகளுக்காகவும், அரசியல்ரீதியான தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்காகவும், நாம் தொடர்ந்து தீர்மானங்கள் நிறைவேற்றியும், பேரணிகள்

நடத்தியும், உரியவர்களிடத்தில் முறையீடுகள் மூலமாகவும் வலியுறுத்தி வருகிறோம். இலங்கைத் தமிழர்களுக்காக இருமுறை நமது ஆட்சியையே இழந்திருக்கிறோம்.

இலங்கைத் தமிழர்களைக் காக்கவும் - அவர்தம் உரிமைகளை அறவழியில் - அமைதி வழியில் - அரசியல் ரீதியாக வாதாடி, போராடிப் பெறுகிற வழிமுறைகளைப் பின்பற்றி, கழகம் முயற்சிகளை மேற்கொண்டு - அதற்கு ஒத்துவருகின்ற கட்சிகள், இலங்கைத் தமிழர்பால் பரிவுகொண்ட இயக்கங்கள் - அவற்றின் தலைவர்கள் - முன்னோடிகள் ஆகியோருடன் தொடர்புகொண்டு - அவர்களும் ஈடுபாடு கொண்டு நடத்திய பல போராட்டங்களையும் - செய்த தியாகங்களையும் உலகம் முழுதும் இலங்கைத் தமிழர்களுக்காக வாதாடும் தமிழர்தம் தூயநெஞ்சங்கள் நன்கறியும்.

1956ஆம் ஆண்டிற்குப் பிறகு, அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பியபடி, 22.6.1958 அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாடெங்கும் "இலங்கைத் தமிழர் உரிமைப் பாதுகாப்பு நாள்" நடத்தப்பட்டது. அன்றையதினம், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், "இலங்கையில் உள்ள ஒருசில பொறுப்பற்ற சிங்கள அரசியல்வாதிகளின் தூண்டுதலின் பேரில் நடைபெறும் வெறிச் செயல்களுக்கு ஆளாகி, உயிரையும், உரிமையையும், உடைமையையும் இழந்து அவதியுறும் இலங்கைவாழ்த் தமிழர்கள் நிலைகண்டு, இக்கூட்டம் மிகவும் இரங்குகிறது. நீண்டகாலமாக இலங்கையை தாயகமாகக் கொண்டுள்ள தமிழர்களுக்கு நியாயமாக அளிக்கப்பட வேண்டிய ஜனநாயக உரிமைகளை வழங்குமாறு இலங்கை அரசியலாரை இக்கூட்டம் விரும்பிக் கேட்டுக் கொள்கிறது. இலங்கை அரசியலாரை இணங்க வைக்கும் முறையில், தங்களுடைய நல்லுறவையும், செல்வாக்கையும் முழுக்க முழுக்கப் பயன்படுத்த வேண்டுமென்று இந்தியப் பேரரசினரை இப்பொதுக் கூட்டம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது" என்று விளக்கமாகக் குறிப்பிடப்பட்டது. அதன்பிறகும்;

இந்திய நாட்டின் அரசியல் சட்டத்திற்குட்பட்டு, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நாம் மேற்கொண்டுவரும் முயற்சிகள், எடுத்துவரும் நடவடிக்கைகள் எண்ணற்றவை. தமிழீழ ஆதரவாளர்கள் (TESO) என்ற ஒரு அமைப்பினை உருவாக்கி, இலங்கைத் தமிழர்களுக்காகப் போராடிய அமைப்பின்

தலைவர்களையெல்லாம் மதுரைக்கு அழைத்து வந்து, இந்திய நாட்டின் முக்கியமான அரசியல் தலைவர்கள் முன்னிலையில், சகோதரயுத்தம் கூடாது என்று 4.5.1986 அன்று வேண்டுகோள் விடுத்தோம். அந்த வேண்டுகோள் முழுமையாக - மனப்பூர்வமாக அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டிருக்குமேயானால், வரலாறு வேறுவகையான வடிவத்தைப் பெற்றிருக்கும்.

இலங்கையில் நடைபெற்ற சகோதரயுத்தத்தின் காரணமாக, 1986-ல் "டெலோ" இயக்கத்தின் தலைவர் சிறீசபாரத்தினம் கொல்லப்பட்டார்; 1989.ல் கொழும்பு நகரில் பெருந்தமிழர் பெரியவர் அமிர்தலிங்கம் அவர்களும், ஈழப் போருக்கு ஆதரவாளரான யோகேஸ்வரன் அவர்களும் கொல்லப்பட்டார்கள்; அதே ஆண்டில், "பிளாட்" இயக்கத்தின் தலைவர் முகுந்தன் என்ற உமாமகேஸ்வரன் இலங்கையில் கொல்லப்பட்டார்; 1990 ஆம் ஆண்டில் சென்னையில் "ஈ.பி.ஆர்.எல்.எப்" இயக்கத்தைச் சேர்ந்த பத்மநாபா அவர்களும், அவரோடு 10 பேரும் கொல்லப்பட்டார்கள். அப்போதும் சகோதர யுத்தத்தால் விளைந்திடும் கொடுமைகளைப் பற்றியும், பேரிழப்புகளைப் பற்றியும் எடுத்துச் சொல்லி, "சகோதரயுத்தத்தால் நாம் பாழ்பட்டு விட்டோம் என்பதை மறந்துவிடாமல், அந்தச் சகோதர யுத்தங்கள் ஏற்படுத்திய விளைவுகளை, இப்போது நாம் பெறவேண்டிய பாடமாகப் பெற்று, இப்போதாவது இலங்கைத் தமிழர்களுக்கு, ஒற்றுமையாக இருந்து உதவிகள் செய்ய உறுதி எடுத்துக் கொள்வோம்" என்று நான் சொன்னேன்.

சகோதரயுத்தத்தின் காரணமாக, இலங்கையிலே நடைபெற்ற சோகமயமான நிகழ்ச்சிகள், அவற்றினால் இலங்கைத் தமிழர்கள் பட்ட - இன்னமும் பட்டுக் கொண்டிருக்கும் துன்பதுயரங்கள் ஆகியவற்றை சரித்திரம் நிச்சயமாக மறக்காது; மன்னிக்கவும் செய்யாது.

இலங்கையிலே போர் தொடங்கி மேலோங்கியபோது, தமிழர்கள் பேரிழப்பைச் சந்திக்கத் தொடங்கியதைக் கண்டு, தமிழகச் சட்டப் பேரவையில்,

"இலங்கையில் தமிழ் இனமே அழிந்து கொண்டிருக்கிறது. ஐ.நா. மன்றமே கண்டனம் தெரிவிக்கிற அளவுக்கு; அந்த

நாடு அப்பாவித் தமிழ் மக்களின் இடுகாடாக - சுடுகாடாக - ஆகிக் கொண்டிருக்கிறது.

குழந்தை குட்டிகளோடு, குடும்பம் குடும்பமாக குய்யோ முறையோ என்று கூச்சலும் - ஒப்பாரியும் புலம்பலும் - பின்னணியாக, பிணங்கள் குவிக்கப்படுகின்றன. அத்தனையும் தமிழ் மக்களின் பிணங்கள்.

அய்யோ! அந்தச் சிங்கள இராணுவ குண்டு வீச்சுக்கிடையே - சிதறியோடும் - சிறுவர்கள் சிறுமியர் - சிலராவது செத்துப் பிழைத்தனர் என்ற சேதியும் கூட அறவே அற்றுப்போய் - இன்று கூண்டோடு சாகின்றனரே - பூண்டோடு அழிகின்றனரே -

மனித நேயமற்ற மாபாவிகளின் சேட்டையால்; இத்தனை ஆண்டுகள்; இழித்தும் - பழித்தும் - இறுதியாக அழித்தும் ஒழிக்கப்படுகிறதே உலகை ஆண்ட ஓர் இனம் - அந்த இனத்தை இறுதியாக இலங்கையில் விடப்பட் டுள்ள இந்த அறைகூவலில் இருந்து எப்படி மீட்கப் போகிறோம்?

இந்தியாவில் உள்ள தமிழ்நாடு மாநிலத்தில் நாம் வாழுகிறோம் என்பதால் நம்மை அரவணைத்துக் காத்திடும் பொறுப்பை இந்தியப் பேரரசு பார்த்துக் கொள்ளும் - ஆம், பார்த்துக் கொள்ள வேண்டும் என்று உரிமையோடு எதிர்பார்க்கிறோம். நமக்கு பாதுகாப்பு தருவதாயினும் - பாதிப்பு களைவதாயினும் இரண்டையும் சீர்தூக்கி செயல்படுத்தி, இந்த மாநில மக்களுக்கும் - இந்த மாநில மக்களாம் தமிழ்க்குடி மக்களின் நலத்திற்கும் நமது தொப்புள் கொடி உறவு கொண்ட இலங்கைத் தமிழ் மக்களின் நலத்திற்கும் உத்திரவாதமளிக்கக் கூடிய பொறுப்பு; - உலகில் எங்கு இனப்படுகொலை நடந்தாலும் தட்டிக் கேட்கும் உணர்வும், உரிமையும் கொண்ட இந்தப் பெரிய ஜனநாயக நாடாம் இந்தியத் திருநாட்டில் மக்களாட்சியை நடத்துகிற மத்திய ஆட்சியின் கரங்களில் இருக்கும் போது; நாம் அந்தக் கரங்களைப் பிடித்துக் கொண்டுதான்; இலங்கையில் சீரழியும் - செத்து மடியும் எங்கள் தமிழ்ச் சாதியைக் காப்பாற்றுக என்று கண்ணீர் மல்கக் கேட்கிறோம்.

கேட்டுக் கேட்டுப் பயன் விளையாமற் போனதால் -

இறுதி வேண்டுகோளாக முறையிடுகிறோம்; உடனடியாக இலங்கையில் போர் நிறுத்தம் செய்து; அந்தப் புத்தர் உலவிய பூமியில் அமைதிப் பூ மலர்ந்திட - ஆவன செய்திடுக என்று!

இந்த இறுதி வேண்டுகோள் புறக்கணிக்கப்படாமல் - இன்றே போர் நிறுத்தம் இலங்கையில் - அடுத்து அரசியல் தீர்வு - தொடர்ந்து அமைதி.

எனவே அந்த நல்ல விளைவை எதிர்பார்த்து; இந்த மாமன்றத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்த இறுதித் தீர்மானமாக இதனை முன்மொழிகிறேன்"

- என்று இவ்வாறு நான் முன்மொழிந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையிலே போர் நிற்கவில்லை; தொடர்ந்து நடந்தது; விபரீதமான விளைவுகளுக்குப் பிறகு, ஓய்ந்தது. எனினும், உரிமைகளுக்கான போராட்டம் இலங்கையிலே உச்சக் கட்டத்திலே இருந்தபோது, ஜெயலலிதா அம்மையார் என்ன சொன்னார் என்பதை இங்குள்ள தமிழர்களும், இலங்கையிலே உள்ள தமிழர்களும் மறந்திருக்க மாட்டார்கள். 18.1.2009 அன்று ஜெயலலிதா அளித்த பேட்டியில், "இலங்கை வேறு நாடு. எனவே, அந்த நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதற்கு ஒரு எல்லை உண்டு. இலங்கையில் ஈழம் என்ற ஒரு நாடு இன்னும் அமையவில்லை. இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டுமென்று, சிங்கள இராணுவம் எண்ணவில்லை. ஒரு போர் நடைபெறும்போது, அப்பாவி மக்கள் கொல்லப்படுவார்கள். இதிலே எந்த நாடும் விதிவிலக்கல்ல" என்று சொல்லியிருந்தார். அப்படிச் சொன்னவருக்கு ஆதரவாகத்தான் - ஈழத் தமிழர்களுக்காக தான் மட்டுமே பிறவி எடுத்ததாகச் சொல்லிக் கொள்ளும் - ஒருசிலர்; குரல் உயர்த்திப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள் என்பதை; வரலாறு உன்னிப்பாக கவனித்துக் கொண்டுதான் வருகிறது.

இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வுதான் நிரந்தரமாகப் பிரச்சினையைத் தீர்க்கும் என்று நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருவதன் பின்னணியில், இன்றைய(18.10.2010) "இந்து" நாளேடு தலையங்கம் ஒன்றைத் தீட்டியுள்ளது. அதில், போரின்போது இடப் பெயர்ச்சிக்கு ஆளான தமிழர்களை மறுகுடியமர்த்தலும், அவர்களுக்கான மறுவாழ்வும் முக்கியமானப் பிரச்சினையாகும்

என்றும்; அதிபர் ராஜபக்சே இலங்கை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்றிருப்பதால், அரசியல் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவருவதென்பது இயலக் கூடியதாகும் என்றும்; இலங்கைத் தமிழர்களுடைய - இலங்கை இஸ்லாமியர்களுடைய நீண்டநாள் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய வேண்டுமானால் அரசியல் சட்டத் திருத்தம் தேவையான ஒன்றாகும் என்றும்; தமிழர்கள் வாழும் பகுதிகளுக்குத் தேவையான அதிகாரப் பங்கீடு ஒன்றுதான் இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மிகச்சிறந்த வழியாகும் என்றும்; இதுவரை இல்லாத வாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளதால், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வு வேண்டு மென்று நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருவதைத்தான்; இன்றைய "இந்து" தலையங்கம் அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது என்பதை நீ அறிவாய்!

"இன்னமும் உங்களுக்குள் ஒற்றுமை ஏற்படவில்லையே" என்று திரு.ராஜபக்சே போன்றோர் காரணம் சொல்லிக் கொண்டிருப்பது; கவைக்குதவாத வாதமாகவே இருக்கிறது - அந்த வீண்வாதங்களையும், பிடிவாதங்களையும் விட்டுவிட்டு; இலங்கையில் தமிழர்கள், இனியாவது உரிமை பெற்ற தமிழர்களாக வாழ்வதற்கு, இலங்கை அரசு உறுதியளித்து, உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்று தாய்த் தமிழகம் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து ஏங்கியவாறு இருக்கிறது.

இந்த ஏக்கத்தைப் போக்க வேண்டியக் கடமை இந்தியப் பேரரசுக்கு இருக்கிறது என்பதை நினைவூட்டி; அந்தக் கடமையை காலத்தே நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

19-10-2010

3507. தேர்தல் தீர்ப்புக்குக் கூட்டமே; அளவுகோலா?

உடன்பிறப்பே,

ஜனநாயகத்தில் ஆளுங்கட்சிகள் எதிர்க் கட்சிகளாவதும், எதிர்க்கட்சிகள் ஆளுங்கட்சிகளாவதும்; மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கருவிகளாக விளங்குவதைப் புறந்தள்ளிவிட முடியாது. ஆளுங்கட்சி ஆகிவிட்டோம் என்ற ஆணவப் போக்குடன் எதிர்க்கட்சிகளை பழிவாங்குவதும்; எதிர்க் கட்சியாகவே இருக்க வேண்டுமா என்ற எரிச்சலில், எதையும் பேசுவது, எதற்காகவும் போராடுவது, ஏனோதானோவென்று ஆளுங்கட்சியை விமர்சிப்பது; இவையெல்லாம் ஜனநாயகத்தில் ஏற்புடையதா என்று அரசியல் அறிவுடையார், நேர்மையுடையார், நியாய உணர்வுடையார் எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்த அடிப்படைக் கருத்தை அடியோடு மறந்துவிட்டு; மத்தியில் ஆளுகின்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணியையும், அந்த அணியுடன் தோழமை கொண்டு மாநிலத்தில் ஆட்சிப்பொறுப்பில் இருக்கின்ற தி.மு.க. அணியையும்; கடுமையானதும், காரசாரமானது மானதாக்குதலை நடத்தியே, மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி விடலாம் என்று ஒரு அணியைத் திரட்டுவதற்கான ஆயத்தங்கள் அனைத்திந்திய அளவிலும், தமிழக அளவிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்றுள்ள அரசியல் நிலையை மாத்திரம் அளந்து பார்த்தோ - எடைபோட்டுப் பார்த்தோ நமது கழகம் எந்த முடிவையும் எடுக்க விரும்பாமல்; அனைத்திந்திய அளவில் சாதி, மத வேறுபாடுகள், மதமாச்சரியங்கள், மனித நேயத்திற்கு மாறான செயல்கள், நம் மூட நம்பிக்கைகள் என்ற அடிப்படையில் நடைபெறும் முயற்சிகள் எதுவாயினும்; அது இந்திய மக்களின் ஒற்றுமையைக் குலைக்கக் கூடியதாகவும், மத நல்லிணக்கத்திற்கு மாறுபட்டதாகவும், திராவிட இன உணர்வுகளைச் சிதைக்கக் கூடியதாகவும், அன்னைத்

தமிழின்பால் கொண்டுள்ள பற்றினை அசைக்கக்கூடியதாகவும் அமையுமேயானால்; அவற்றைப் பொறுத்துக் கொள்ளும் வாய்மூடி மவுனியாகக் கழகம் இருந்ததுமில்லை; இருக்கப் போவதுமில்லை.

கழகத்தின் இந்த உணர்வுகளை - அவற்றின் அடிப்படையிலான இலட்சிய முழக்கங்களை, ஒரு குறைந்தபட்ச அளவிலான பொதுத் திட்டங்களாக அமைத்துக் கொண்டுதான்; இந்திய அளவிலும், தமிழக அளவிலும் தேர்தல் அல்லாத நேரங்களிலேகூட கட்சிகளின் தோழமை அணிகள் உருவாகியிருக்கின்றன. அந்த அணிகளில் ஒன்றாக விளங்கி வீறுநடை போட்டு வருவதுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்தக் கழகத்தைப் பொறுத்தவரையில், நேற்றைய முன்தினம் கோவை மாவட்ட தி.மு.க. ஆய்வுக்கூட்டத்தில் நான் எடுத்துரைத்தவாறு, கொள்கையும், இலட்சியமும் முன்வைக்கப் பெற்று அவற்றை வென்றெடுக்கும் வகையில் தேர்தல் முடிவுகள் பயன்பட வேண்டுமேயல்லாமல்; தேர்தல் வெற்றிதான் தி.மு.கழகத்தின் மூல நோக்கம் என்று நாம் என்றைக்கும் கூறியது மில்லை; கருதியதுமில்லை.

ஆனால், தமிழகத்தில் உள்ள சில ஏடுகள், ஒரு கட்சியைப் பொறுத்தவரை; தேர்தலுக்காக எடுத்து வைக்கும் திட்டங்கள், கொள்கைகள், அவற்றை நிறைவேற்றும் பாங்குகள் இவற்றை யெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, தேர்தலுக்கு முன்பு அந்தக் கட்சியின் பிரச்சாரத்துக்காகக் கூடுகிற அல்லது கூட்டப்படுகின்ற கூட்டத்தையே அளவாக வைத்துக்கொண்டு; எது நல்ல கட்சி அல்லது எது பெரிய கட்சி என்ற தீர்ப்பு வழங்க இப்பொழுதே எழுதுகோல்களைக் கூர்தீட்டிக் கொண்டிருக்கின்றன.

உடன்பிறப்பே, 1971ஆம் ஆண்டு நம் கழகப் படையை நடத்துவதற்கு தலைவர் அண்ணா அவர்கள் இல்லாத காலம். தந்தை பெரியாரின் துணையோடு, அன்றைக்கு நம்முடன் நட்பு கொண்டிருந்த சில கட்சிகளின் தோழமையோடு, இ.காங்கிரஸ் கட்சியுடன் அணிவகுத்து தேர்தலைச் சந்திக்க வேண்டிய கட்டம். பெருந்தலைவர் காமராசரும், பெரியவர் மூதறிஞர் இராஜாஜியும் ஓரணியிலிருந்து நம்மை எதிர்க்கின்ற நேரம். அப்பொழுதுதான், சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் காமராசரும், இராஜாஜியும் ஒரே மேடையில் ஏறி நமது அணியை எதிர்த்து

முழங்குகிறார்கள். அந்த மேடையிலேதான் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்கு நெற்றியிலே வெற்றித் திலகம் இட்டு, ஆசி வழங்கினார்கள்.

நமது அணியின் தலைவியாக இருந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், அந்தக் கூட்டத்தின் புகைப்படத்தைப் பார்த்து விட்டு, நாம் வெற்றி பெறுவோமா என்பது போல, விழிகளை அகல விரித்துப் பார்த்தார்கள். "கவலைப்படாதீர்கள்; இதுவரையில் இந்த அரசு புரிந்துள்ள சாதனைகளையும், அடுத்து வரும் ஆட்சிப்பொறுப்பில் நாம் புரியவிருக்கும் சாதனைகளையும் நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டிருக்கின்ற மக்கள் நம்மை ஏமாற்ற மாட்டார்கள்'' என்று நான் இந்திரா அம்மையாருக்கு விளக்கமளித்தேன்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற அந்தத் தேர்தலில் - மகா கூட்டணி அமைத்து பெருந்தலைவரும், பெரியவர் இராஜாஜியும் - பரமாத்மாவே பாஞ்ச சன்யம் முழங்கியது போல் முழங்கிய அந்தத் தேர்தல் போரில்; திருவல்லிக்கேணி கடற்கரையில் கூடிய அந்தக் கூட்டம்; கணித்த ஆரூடத்தையும் மிஞ்சி, தெருவோரத்தில் நின்ற மனிதர்களின் தீர்ப்பே வென்று காட்டியது.

உடன்பிறப்பே, கூட்டத்தை வைத்து வெற்றி தோல்வியை எடைபோட்டு விடக்கூடாது என்பதற்காக அல்ல; கூட்டமும் தேவைதான் - நாம் கூறுகிற கருத்துக்களை சீர்தூக்கிப் பார்த்து மக்கள் தீர்ப்பளிப்பதற்கு; என்பதில் எனக்கு இருவேறு எண்ணமும் இல்லை. ஆனால், கூட்டம் மாத்திரமே அளவுகோல் எனக் கணிப்போருக்கு, அதுவே அளவுகோல் என்று நினைத்துவிடக்கூடாது என்பதற்காக,

அந்த நாள் திருவல்லிக்கேணி கடற்கரைக் கூட்டத்தை நினைவுபடுத்தினேன்.

1962 பொதுத் தேர்தலில், காஞ்சிபுரம் சட்டப் பேரவைத் தேர்தலுக்கு, அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சைக் கேட்க இலட்சக் கணக்கில் மக்கள் கூடினர். ஆனால், அந்தத் தேர்தல் முடிவு என்ன?

பொதுமக்கள் நமது கருத்துக்களைக் கேட்கிறார்கள்; நமது கழகத்தின் தேவையை உணர்கிறார்கள். அவர்களை அழைத்து,

"வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களியுங்கள் உதயசூரியனுக்கு" என்று சொல்வதற்கு அல்லும் பகலும் உழைக்கக்கூடிய ஆற்றல் உள்ளவர்கள், ஆர்வம் படைத்தவர்கள், அக்கறையுடன் பணியாற்றக் கூடியவர்கள் - ஆம்; தொண்டர்கள், தொண்டர்கள், தொண்டுள்ளம் படைத்த தூயவர்கள் இடைவிடாது உழைத்து இணையற்ற வெற்றியைத் தேட வேண்டும் என்று செயல்படுகிற சிங்க ஏறுகள், கொள்கை வேங்கைகள் - இன்று உழைத்தது போதும் என்றெண்ணாமல்; இன்னும் எண்ணற்ற பணிகள் இருக்கின்றன நமக்கு என்றெண்ணி; "கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம்" என புரட்சிக் கவிஞரின் வீரவரிகளுக்கு இலக்கணமாகத் திகழும் செயல் வீரர்கள், காஞ்சியில் மட்டுமல்ல; கழகம் தேர்தலில் நின்ற எல்லா இடங்களிலும் அது போன்ற பணி தொடர்ந்திருக்குமேயானால்; அண்ணா தலைமையில் 1967-ல் அமைந்த ஆட்சி, அதற்கு முன்பே 1962-லேயே அமைந்திருக்கும் என்பதை யார்தான் மறுத்திட இயலும்?

உடன்பிறப்பே, இதிலிருந்து என்ன புரிந்து கொள்கிறாய்? உழைப்பு உழைப்பு உழைக்கும் மாமணிகளாம் உங்களுக்கிடையே ஒற்றுமை ஒற்றுமை - இவை இருப்பின் எவர் அணி வகுத்து நின்றாலும், நம் அணிக்கு வெற்றி உறுதி உறுதி!

அன்புள்ள,

மு.க.

24-10-2010

3508. குடிசைகள்; கோபுரங்களாக - மண்வீடுகள்; மாளிகைகளாக!

உடன்பிறப்பே,

எனது இளமைக் காலத்திலேயே ஏழை யெளிய பாட்டாளி மக்கள் சிறுசிறு குடிசை வீடுகளில் வாழ்ந்து வந்ததைப் பார்த்திருக்கிறேன். அதனால் எனது உள்ளத்தின் அடிஆழத்தில் ஒருவகை பாதிப்பு ஏற்பட்டிருந்ததையும் உணர்ந்திருக்கிறேன்.

அருமை அண்ணன் ஜீவா அவர்கள் எழுதிய, "காலுக்குச் செருப்புமில்லை; கால்வயிற்றுக் கூழுமில்லை; பாழுக்குழைத்தோமடா - என் தோழனே; பசையற்றுப் போனோமடா" என்று; தொழிலாளர்கள்-விவசாயிகள் மத்தியில் அந்தக் காலக்கட்டத்தில் பிரசித்திப் பெற்ற பாடல் என் இதயத்திற்குள் புகுந்து ஏற்படுத்திய அதிர்வுகள் சொல்லொணா தவை. அந்தப் பாடலில், ''ஒண்டக் குடிசையில்லை - என் தோழனே; உழைத்திளைத்துப் போனோமடா'' என வரும் வரி; ஏழையெளிய பாட்டாளி மக்கள் வாழ்வதற்கு குடிசைகளுக்குக்கூட படும் அவதியை படம்பிடித்துக் காட்டியது.

மனிதன் வாழ்வதற்கு உணவு, உடை, உறையுள் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளாகும். உணவு என்பது அன்றாடம் எழும் தேவையாகும்; உடை என்பது ஆண்டு தோறும் எழும் தேவையாகும்; உறைவிடம் என்பது நிரந்தரத் தேவையாகும். ஒருமுறை உறைவிடம் ஒன்றை உருவாக்கிவிட்டால், வாழ்நாள் முழுதும் அந்தத் தேவையை நிறைவு செய்வதோடு, வாழ்நாளுக்குப் பிறகும் மரபுரிமையினர்க்கு அந்தத் தேவையை நிறைவு செய்திடப் பயன்படுவதாகும்.

உறைவிடத்தைப் பற்றிய இந்த உண்மையும்; அதிலும் குறிப்பாக - ஏழையெளிய பாட்டாளி மக்கள் - விவசாயிகள் - விவசாயக் கூலிகள் ஆகியோருக்கு பாதுகாப்பான உறைவிடம்

என்பது எட்டாக்கனியாக இருந்துவரும் நிலையும்; இளமைக் காலத்தில் எனது உள்ளத்திலே ஏற்பட்ட உணர்வுகளும்; ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், ஏழையெளியோர்க்குப் பாதுகாப்பான உறைவிடம் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் பற்றி என்னைச் சிந்திக்கத் தூண்டின. அதன் விளைவாகத்தான், ஓலைக் குடிசையிலேயே வாழ்ந்துவரும் ஏழையெளிய பாட்டாளி மக்களுக்கும், விவசாயிகளுக்கும், விவசாயக் கூலிகளுக்கும், ஆதிதிராவிட சமுதாயத்தினர்க்கும், இலவசமாக கான்கிரீட் வீடுகள் வழங்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை நீயும், உன்போன்ற உடன்பிறப்புகளும் நன்கறிவர்!

"புறக்கணிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளைச் சமூகத் தொண்டர் ஒரு சிலரால் மட்டுமே சீர்படுத்த முடியாது. நகரத்திற்குள்ளும் அந்த எல்லைகளை ஒட்டியுள்ள குடிசைப் பகுதிகளின் நிலைமைகளையும் மாற்ற வேண்டுமானால், அரசே முன்னின்று சிந்தித்துப் பெரிய அளவில் திட்டம் தீட்டிச் செயற்படுத்தினால் மட்டுமே சீராகும்" என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரையை மனதில் கொண்டு, 1970ஆம் ஆண்டு கழக அரசினால் தொடங்கப் பட்டதுதான் "தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்."

இது ஏழை, நடுத்தர மக்களின் வரப்பிரசாத மாக விளங்கி வருகிறது. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் இதுவரை 68 ஆயிரத்து 236 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, குடிசைவாசிகளுக்குத் தரப்பட்டுள்ளன. குடிசை வாசிகள் மீது அ.தி.மு.க. ஆட்சி காட்டிய அக்கறைக்கும் ஆர்வத்துக்கும் எடுத்துக்காட்டொன்றைச் சொல்ல வேண்டுமென்றால், 20 ஆண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சியில் குடிசைவாசிகளுக்குக் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் மொத்தம் 38 ஆயிரம்தான். இதை, கழக ஆட்சியில் கட்டப்பட்ட அடுக்கு மாடிக் குடியிருப்புகளின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை விளங்கும்.

சென்னை அடையாறு ஊரூர்ப் பகுதியில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய அண்ணல் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள், "காந்தியடிகள் கண்ட கனவினை முதல்வர்

கலைஞர் அவர்கள் நனவாக்கியதை எண்ணிப் பரவசம் அடைகிறேன்; பாராட்டுகிறேன்; போற்றுகிறேன்'' என்று புகழ்ந்துரைத்தது இன்றும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது!

ஆண்டாண்டு காலமாக, மண் குடிசைகளில் வாழ்ந்து வரும் ஆதிதிராவிட சமுதாய மக்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகள் கட்டித் தந்து அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு அடித்தளம் அமைக்கும் சீரிய முயற்சியாக இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில்தான் "ஆதிதிராவிடர் இலவச வீட்டுவசதிக் கழகம்'' 1974ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அதன்படி, ஓட்டு வீடுகளே கட்டப்பட்டு வந்த இத்திட்டத்திற்கு கழக அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து கான்கிரீட் வீடுகள் கட்ட ஆணையிட்டது. இத்திட்டம் தான், இந்திரா வீட்டுவசதித் திட்டம் என மத்திய அரசால் ஏற்கப்பட்டு, நாடு முழுதும் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், கழக அரசினால், இதுவரை 7 இலட்சத்து 85 ஆயிரம் கான்கிரீட் வீடுகள் கட்டப்பட்டு, ஆதிதிராவிட சமுதாயத்தைச் சார்ந்த குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன; ஆனால், ஜெயலலிதா அரசின் 10 ஆண்டு ஆட்சிக்காலத்தில் 3 இலட்சத்து 86 ஆயிரம் வீடுகள் மட்டுமே கட்டப்பட்டன; அதாவது கழக அரசில் கட்டப்பட்டதில் பாதி அளவுக்குத்தான் ஜெயலலிதா ஆட்சியில் கட்டப்பட்டது என்பதிலிருந்து; ஆதிதிராவிட சமுதாயத்திற்கு இன்றைக்கு வக்காலத்து வாங்குகின்ற வாய்ஜாலக்காரர்கள் ஆதிதிராவிடர் நலனில் கொண்டிருந்த ஈடுபாட்டின் அளவை எல்லோரும் புரிந்து கொள்ளலாம்!

மத்திய அரசில் உணவு அமைச்சராகத் திகழ்ந்த பாபு ஜகஜீவன்ராம் அவர்கள் 1975ஆம் ஆண்டு சனவரியில் செங்கற்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கத்தில் அரிசன வீட்டுவசதிக் கழகத்தின் சார்பில் கட்டப்பட்டிருந்த குடியிருப் புகளைத் திறந்து வைத்து உரையாற்றியபோது, " மக்கள் நல அரசு என்ற வார்த்தைக்கு உண்மையான விசுவாசத்துடன் தமிழக அரசு பணியாற்றி வருவதைக்கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். வாடகை எதுவும் இல்லாமல் இலவசமாக இந்த வீடுகளை அரிசனச் சகோதரர்களுக்கு வழங்குவது என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் முடிவு செய்திருப்பது அவருடைய

சீரிய மனப்பான்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். தமிழ்நாடு காட்டியுள்ள இந்தச் சிறந்த முன் உதாரணத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்ற முயலும் என்று நம்புவோமாக!'' என்று பாராட்டியது இன்றைக்கும் பழைய நாளேடுகளில் அப்படியே உள்ளன. பழைய நாளேடுகளில் உள்ள இந்த மணிவாசகங்கள் இன்றலர்ந்த மலர்களைப் போல் என் மனதில் மணம் வீசிக் கொண்டிருக்கின்றன!

மீனவ சமுதாயத்தினர்க்கு இலவச வீடுகள் கட்டித் தரவேண்டும் எனும் நோக்கில்; 1975 ஆம் ஆண்டு கழக ஆட்சியில் உருவாக்கப்பட்டது தான் ''மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டம்''. இந்தத் திட்டம்தான் பின்னர் 1996.இல், மீனவர் சமுதாய மேதை, சிந்தனைச் சிற்பி ம.சிங்கார வேலர் பெயரில் - சிங்கார வேலர் நினைவு இலவச மீனவர் வீட்டுவசதித் திட்டம் எனப் பெயர் சூட்டப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 53 ஆயிரத்து 413 மீனவக் குடும்பங்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. இதில், பாதிக்கு மேல், அதாவது 28 ஆயிரத்து 174 வீடுகள் கழக ஆட்சியில் கட்டப்பட்டவை. மேலும், 8,495 வீடுகள் தற்போது மீனவர் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக கட்டப்பட்டு வருகின்றன.

இத்தகைய திட்டங்களின் தொடர்ச்சியாகவே, தற்போது ''கலைஞர் வீடுவழங்கும் திட்டம்'' என்ற திட்டத்தைத் தமிழக அரசு உருவாக்கி, செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் அடிநாதமாக இருக்கும் குறிக்கோளே, ''குடிசைகள் இல்லாத கிராமங்கள்'' (Hutless villages) என்ற நமது நீண்டநாள் கனவை, நனவாக்கி, ஏழையெளியோர் வாழ்வில் நிம்மதியைத் தரவேண்டும் என்பதுதான்.

21.1.2010 அன்று தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் உரையில், ''இந்த அரசு மகத்தான சாதனைகள் புரிந்துள்ள போதிலும், மாநில மெங்கும் ஏழை எளியோர் மண் சுவர்களால் ஆன கூரை வீடுகளில் வசித்து வருவதால், இயற்கை இன்னல்களை எதிர்கொள்ளும் துயர்மிகு நிலை இன்னமும் தொடர்கிறது. கடந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில், நமது மாநிலத்தில் ஊரகப் பகுதிகளில் மட்டும் இத்தகைய வீடுகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 21 இலட்சம் என அறியப்பட்டுள்ளது. தற்போது மத்திய அரசின் நிதியுதவியுடன்

நாடு தழுவிய அளவில் செயல்படுத்தப்பட்டுவரும் இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் மட்டும் இக்குடிசைகளை நமது மாநில அளவில் நிரந்தர இல்லங்களாக மாற்ற வேண்டும் என்றால், அதற்கு இன்னும் 30 ஆண்டுகள் ஆகும். இந்த நிலையை நெஞ்சில் நிறுத்தி, முதற்கட்டமாக ஊரகப் பகுதிகளில் 21 இலட்சம் வீடுகளில் வசிக்கும் ஏழை எளியோரின் வாழ்வில் ஒளியேற்றும் வகையில் இந்த வீடுகள் அனைத்தையும் கான்கிரீட் கூரை கொண்ட நிரந்தர இல்லங்களாக தமிழக அரசின் நிதியைக் கொண்டே மாற்றி அமைத்து, அவற்றை இலவசமாக அளிக்கும் மாபெரும் திட்டம் ஒன்றை இந்த அரசு வகுத்துள்ளது.

2010-2011ஆம் ஆண்டு தொடங்கி, இந்தத் திட்டத்தின்கீழ் ஆறு ஆண்டுகாலத்தில் மண் சுவர்களால் ஆன 21 இலட்சம் கூரை வீடுகளுக்குப் பதிலாக, நிரந்தர வீடுகள் இந்த அரசால் கட்டித் தரப்படும். இத்திட்டத்தின் முதல் ஆண்டான வரும் நிதியாண்டில் மூன்று இலட்சம் நிரந்தர வீடுகள் கட்டப்படும்" என்று அறிவிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக;

15.8.2010 அன்று நான் ஆற்றிய சுதந்திரத் திருநாள் உரையில், "இந்தத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் ஒவ்வொரு கான்கிரீட் வீட்டிற்காகவும் அரசின் சார்பில் 60 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுமென்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள போதிலும்; திருச்சி மாநகரில் நடைபெற்ற இதற்கான தொடக்க விழாவின் போது என்னிடம் தெரிவிக்கப்பட்ட கோரிக்கையினை ஏற்று, மேலும் 15 ஆயிரம் ரூபாய் கூடுதலாக்கி, ஒவ்வொரு வீட்டிற்கும் 75 ஆயிரம் ரூபாய் வீதம் மானியமாக வழங்கிட இந்த அரசு முடிவு செய்துள்ளது என்ற மகிழ்ச்சிகரமான அறிவிப்பையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஓட்டைக் குடிசையிலே - ஒன்றரைச் சாண் பாயிலே - கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும் - வாடிக்கிடந்த மக்களுக்கு வாழ்வில் விடிவளிக்கும் இத்திட்டத்தை இன்று தொடங்கி வைப்பதில் உள்ளம் எல்லாம் இன்ப வெள்ளம் நிறைந்தது போன்ற உணர்வைப் பெறுகிறேன்" என்று எனது உள்ளத்தில் பொங்கியெழுந்த உணர்வுகள் இரண்டறக் கலந்த அறிவிப்பினை வெளியிட்டேன்.

தமிழகத்திலுள்ள 12 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகளிலும், ஒரே நேரத்தில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு;

ஒவ்வொரு வீடும் 207 சதுர அடி பரப்பில் கட்டப்பட்டு வருகிறது. வீடு கட்டத் தேவைப்படும் கட்டுமானப் பொருட்களான சிமெண்ட் மற்றும் இரும்புக் கம்பிகளை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் குறைந்த விலையில் அரசே வழங்குகிறது. வெளிச்சந்தை விலையை விட குறைவான விலையில் ஒரு மூட்டை சிமெண்ட் 210 ரூபாய் வீதம் 60 மூட்டை சிமெண்ட் வழங்கப்படுகிறது. ஒரு வீட்டிற்குத் தேவைப்படும் 155 கிலோ கம்பி, சராசரியாக கிலோ 36 ரூபாய் என்ற விலையில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது. இதன் காரணமாக, வெளிச்சந்தையில் சிமெண்ட் மற்றும் இரும்புக் கம்பிகளின் விலை உயர்ந்தாலும், "கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்" பயனாளிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

மேலும், செங்கற்களின் விலை உயர்வினைத் தடுத்திட மாவட்ட ஆட்சியர்கள், தங்கள் மாவட்டத்திலுள்ள செங்கற் சூளை உரிமையாளர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி, வெளிச்சந்தை விலையை விடக் குறைவான விலைக்கு செங்கற்கள் கிடைத்திடச் செய்யவும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மணல் மற்றும் ஜல்லிக் கற்களை அரசு நிர்ணயிக்கும் விலையில் அல்லது வெளிச்சந்தை விலையை விடக் குறைத்துப் பெறுவதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உரிய நடவடிக்கையினை எடுத்துள்ளார்கள். இவை தவிர, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நல நிறுவனத்தின் மூலம் செங்கற்சூளைகள் அமைப்பதற்கு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவியும், கட்டடத் தொழிலாளர்களுக்குப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. மணல் மற்றும் ஜல்லிக்கற்களை அரசு நிர்ணயிக்கும் விலையில் அல்லது வெளிச்சந்தை விலையைவிடக் குறைத்துப் பெறுவதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தக்க நடவடிக்கையினை எடுத்து வருகிறார்கள்.

நாடெங்கும் வீடுகட்டும் பணிகள் தொடங்கி, தீவிரமாக நடைபெற்று வருகின்றன. ஒருசில இடங்களில் வீடுகட்டும் பணி நிறைவு பெற்றிருக்கிறது. 10.10.2010 அன்று திருவாரூர் செல்லும் வழியில், சிதம்பரத்திற்கு அருகே வல்லம்படுகை என்ற கிராமத்தில் "கலைஞர் வீடுவழங்கும் திட்டத்தின்"கீழ் கட்டிமுடிக்கப்பட்ட வீட்டையும், வீட்டுச் சொந்தக்காரர் கொண்ட

கழிபேருவகையினையும், கண்ணாரக் கண்டு அவர்களை மனமார வாழ்த்தினேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் முடிந்து திரும்பிய துணை முதலமைச்சர் தம்பி மு.க.ஸ்டாலின் என்னிடம் திருவண்ணாமலை மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுவரும் வீடுகளின் புகைப்படங்களைக் காட்டி; வரும் டிசம்பர் மாதத்திற்குள் இரண்டு இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்று தெரிவித்தார். 2011, ஜனவரி மாதத்திற்குள் மூன்று இலட்சம் வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு, ஏழையெளியோர் நிரந்தரமான கான்கிரீட் வீடுகளுக்கு உரிமையாளர்கள் என்ற சமுதாய அந்தஸ்தினைப் பெற்று, பெருமிதமும், மகிழ்ச்சியும் கொள்வார்கள்.

"கலைஞர் வீடுவழங்கும் திட்டம்" கிராமப் புறங்களில் பெற்றுவரும் பெரும் வரவேற்பினைக் கண்டு ஒருசில நாளேடுகளும், ஒருசில எதிர்க்கட்சிகளும் இத்திட்டத்தில் ஏதாவது குறைகாண முடியாதா என்று ஏங்கித் தவிக்கிறார்கள்.

உடன்பிறப்பே,

"எல்லோர்க்கும் எல்லாம் என்றிருப்பதான
இடம்நோக்கி நடக்கின்றதிந்த வையம்"

எனப் புரட்சிக் கவிஞர் பாடியதுபோல், தமிழகத்தில் வாழும் மக்கள் எல்லோர்க்கும், எல்லா வசதிகளும் கிடைத்திட வேண்டும் என, இந்த அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது என்பதை நீ அறிவாய்! நீ அறிந்ததை ஊரார்க்கும் அறிவிப்பாயாக!

அன்புள்ள,

மு.க.

27-10-2010

3509. அம்மையார் வாக்கும் போக்கும்; அன்றும்-இன்றும்!

உடன்பிறப்பே,

கடந்த இரண்டு நாட்களாக ஜெயலலிதா, காவிரிப் பிரச்சினை பற்றி, தனது நிழல் எழுத்தாளர் எழுதிக் கொடுத்த அறிக்கைகளின் மூலம்; நீட்டி முழக்கியிருக்கிறார்.

இதே ஜெயலலிதாதான், 7.11.2003 அன்று தமிழக சட்டப் பேரவையில் காவிரிப் பிரச்சினை குறித்துப் பேசும்போது: ‘‘காவிரியில் தண்ணீர் கிடைக்க வில்லை என்றால், அது மாநில அரசின் குற்றம் அல்ல; பிரதமரின் குற்றம், மத்திய அரசின் குற்றம் என்று பகிரங்கமாகச் சொல்கிறேன்” என்று பேசினார்.

2002ஆம் ஆண்டில் காவிரி ஆணையத்தை, செயல்படாத ஆணையம் என்றும்; பல் இல்லாத ஆணையம் என்றும் முதலமைச்சர் என்கிறதன் நிலை மறந்து வர்ணித்தவர் ஜெயலலிதா.

2002ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் காவிரி ஆணையம் தன் கடமையைச் செய்யவில்லை என்றும், அது கர்நாடகத்திற்கு ஆதரவாகவே செயல்படுகிறது என்றும், எனவே அதன் மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும், இந்தப் பிரச்சினையில் பிரதமரின் செயல்பாடும் திருப்தியாக இல்லை என்றும், இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதிய ஜெயலலிதாதான் இன்றைக்கு ஏதோ காவிரி நதிநீர் ஆணையத்தின்மீது மிகுந்த மரியாதையும் நம்பிக்கையும் உள்ளவரைப் போல பாசாங்கு செய்துகொண்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

காவிரி ஆணையம் பற்றிய வழக்கு உச்சநீதி மன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஏ.கே.சபர்வால், அர்ஜித் பசாயத் ஆகியோர்; ‘‘பிரதமருக்கு 2002 நவம்பர் 5ஆம் தேதியிட்டு ஜெயலலிதா எழுதிய கடிதத்தை படித்து வேதனைப்பட்டோம். ஒரு மாநில முதல்வராக இருப்பவர் அதற்குரிய கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும்.

காவிரி ஆணையத்தைப் பற்றி ஜெயலலிதா கூறியுள்ள கருத்துகள் துரதிர்ஷ்டவசமானது. அப்படிப் பேசியிருப்பது முறையற்றதுமாகும். காவிரி ஆணையத் தலைவரைப் பற்றியும் தனிப்பட்ட முறையில் குறை சொல்லியிருப்பது சரியல்ல. இன்னும் நான்கு நாட்களுக்குள் பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம் எழுதி, காவிரி ஆணையத்தின் மீது நம்பிக்கை உள்ளது என்று தெரிவிக்க வேண்டும். ஆணையத்தைப் பற்றியும், அதன் தலைவரைப் பற்றியும் ஜெயலலிதா சொன்ன கருத்துக்களைத் திரும்பப் பெற வேண்டும்" என்று கண்டனம் தெரிவித்தவுடன், அப்படியே ''பல்டி'' அடித்து, ''காவிரி ஆணையத்தின்மீது நான் தனிப்பட்ட முறையில் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறேன். ஆணையத் தலைவர் மீதும் மிகுந்த நம்பிக்கைவைத்துள்ளேன். பிரதமர் மற்றும் காவிரி ஆணையம் பற்றி நான் தெரிவித்த கருத்துக்களைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்" என்று பிரதமருக்குக் கடிதம் எழுதிய ஜெயலலிதாதான்; இன்றைக்கு, ''காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி தண்ணீர் திறந்துவிட கர்நாடக அரசு மறுக்குமேயானால், கர்நாடகத்தில் உள்ள அணைகளின் மதகுகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொள்ளக் கூடிய அதிகாரத்தை காவிரி மேலாண்மைக் குழுவுக்கோ அல்லது **காவிரி நதிநீர் ஆணையத்துக்கோ** வழங்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்" என்று நடுவர் மன்றத் தீர்ப்பினை நிறைவேற்றும் பொறுப்பினை காவிரி நதிநீர் ஆணையத்திடம் ஒப்படைக்கலாம் என்று; இதுவரை அவர் மேற்கொண்டு வந்த நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறாக - கடந்த காலத்தில் அவர் சொன்னவற்றையெல்லாம் பொதுமக்கள், குறிப்பாக காவிரி தீரத்து விவசாயப் பெருங்குடி மக்கள் மறந்திருப்பார்கள் என்ற தீய நம்பிக்கையில்; அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ஜெயலலிதாவுக்கு எந்தப் பிரச்சினை பற்றி எழுதவும், பேசவும் உரிமை உண்டு. ஜனநாயகம் அனுமதி அளித்திருக்கும் உரிமையாகும் அது. ஆனால், அந்த உரிமையை ஜெயலலிதா தவறாகப் பயன்படுத்துவதுதான் வேடிக்கையாகவும், வேதனையாகவும் உள்ளது. பொதுவாக அறிக்கை வெளியிட்டிருந்தால் கூட நாம் அதை பொருட் படுத்தாமல் விட்டிருக்கலாம். ஆனால் முதலமைச்சர், காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித்தீர்ப்பு வந்ததற்குப் பிறகு; இந்தப் பிரச்சினையில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று

குற்றஞ்சாட்டியிருப்பதால்தான்; முழுக்க முழுக்க உண்மைக்கு எதிராக இருக்கிறதே என்று உள்ளம் பதை பதைக்கிறது.

காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றம் ஒன்று அமைத்திட வேண்டும் என்று முதல் முதலாக 17.1.1970-ல் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியது நான்தான்.

8.7.1971 அன்று நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதல்முறையாகத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு காரணகர்த்தாவாக இருந்ததும் நான்தான்.

1989-ல் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது, இந்தியப் பிரதமராக இருந்த திரு.வி.பி.சிங் அவர்களிடம், நடுவர் மன்றம் அமைக்க வலியுறுத்தி, தமிழகச் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியதும் நான்தான்.

உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில், மத்திய அரசின் கருத்தை நீதிமன்றம் கேட்டபோது, திரு.வி.பி. சிங் தொலைபேசியிலே 1990 ஆம் ஆண்டு என்னைத் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, நடுவர் மன்றம்தான் வேண்டும் என்று தமிழக மக்களின் சார்பில் வலியுறுத்தியவன்தான் நான். எனது வேண்டுகோளை ஏற்று, மத்திய அரசும் உச்சநீதிமன்றத்திலே கருத்தறிவித்து, அதன்படி காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. இவ்வாறு காவிரி நடுவர் மன்றம் அமைய முழுமுதல் காரணமாக இருந்தது நான் என்பதை காவிரிப் பிரச்சினை பற்றிய வரலாறு பதிவு செய்து வைத்திருக்கிறது.

நடுவர் மன்றத்தின்மூலம் இடைக்காலத் தீர்ப்பு வழங்கவேண்டும் என்று 28.7.1990 அன்று கழக ஆட்சியிலேதான் கேட்கப்பட்டது.

இடைக்காலத் தீர்ப்பு தர தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று நடுவர் மன்றம் தெரிவித்தபோது; கழக ஆட்சியில் 10.1.1991 அன்று உச்சநீதிமன்றத்திலே வழக்கு தொடுத்து, அதன் விளைவாக, அதிகாரம் உண்டு என்ற தீர்ப்பு கிடைத்தது.

ஜெயலலிதா ஆட்சியிலே இருந்தபோது, 9.6.1992 அன்று மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர்; நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்துவது பற்றி

ஜெயலலிதாவின் ஒப்புதல் வேண்டிக் கடிதம் எழுதினார். டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் உயிராதாரமாக விளங்கும் இந்த முக்கியமான பிரச்சினையில்; **மத்திய அரசிடம் இருந்து வந்த கடிதத்திற்கு 9 மாதங்கள் கழித்து பதில் எழுதிய ஜெயலலிதாதான்;** இன்றைக்கு காவிரிப் பிரச்சினை பற்றி பக்கம் பக்கமாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

1991ஆம் ஆண்டு கிடைத்த நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பினை; அதற்குப் பிறகு 5 ஆண்டுகள் ஆட்சியிலே இருந்தபோது ஓராண்டு கூட அதனை நிறைவேற்றிக் கொடுக்க மனமும், முயற்சியும் இல்லாதவராக - இயலாதவராக இருந்த ஜெயலலிதாதான்; இன்றைக்கு தமிழக அரசுக்கு ஏராளமான அறிவுரைகளை வாரி வழங்கியிருக்கிறார்.

நான்காவது முறையாக நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், 1998ஆம் ஆண்டில் 9 மணி நேரம் இடைவிடாமல் அப்போது இந்தியப் பிரதமராக இருந்த திரு.வாஜ்பாய் அவர்கள் தமிழகம்-கர்நாடக அரசுகளுடன் கலந்து பேசி; அதன் விளைவாக காவிரி நதிநீர் ஆணையமும், கண்காணிப்புக் குழுவும் அமைக்கப்பட்டன. அதற்கு தமிழகத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களின் அனுமதியையும் பெற்றவன் நான். அப்போது, மத்திய அரசுக்கு தோழமைக் கட்சியாக இருந்தது அ.தி.மு.க. எனினும், பிரதமர் வாஜ்பாய், தமிழக முதல்வர், கர்நாடக முதல்வர் ஆகியோரது கூட்டு முயற்சிகளினால் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை அனைத்துக் கட்சித் தலைவர்களும், அனைத்து ஏடுகளும் வரவேற்றன.

ஆனால், ‘‘நடுவர் மன்றத் தீர்ப்பு வந்தால்கூட கர்நாடகாவில் அவர்களாகவே அணையைத் திறந்தால்தான் காவிரி நீர் தமிழ்நாட்டிற்கு வரும்!’’ என்று 21.3.1991-ல் திருவாய் மலர்ந்தருளிய ஜெயலலிதாதான்; இன்றைக்கு நடுவர் மன்றத் தீர்ப்பை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று தமிழக அரசை குறை கூறியிருக்கிறார்.

2001 முதல் 2006 மே மாதம் வரை ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது, எத்தனை ஆண்டுகள் காவிரியில் ஜூன் மாதம் 12 ஆம் தேதியே மேட்டூர் அணையை விவசாயத்திற்காக திறந்திருக்கிறார்?

2002ஆம் ஆண்டில் 6.9.2002 அன்றும்; 2003ஆம் ஆண்டில் 7.10.2003 அன்றும்; 2004ஆம் ஆண்டில், 12.8.2004 அன்றும்; 2005ஆம் ஆண்டில், 4.8.2005 அன்றும்தான் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. இவரது ஆட்சியின் போதுதான் டெல்டா மாவட்ட விவசாயிகள் குறுவையை மறந்திட வேண்டிய கொடுமை நிகழ்ந்தது. அப்போதெல்லாம் கர்நாடக அரசிடமிருந்து இழப்பீட்டுத் தொகை வாங்கி தமிழக விவசாயிகளுக்கு ஜெயலலிதா வழங்கினாரா? அப்படி வழங்கியிருந்தால் இப்போது தமிழக அரசுக்கு அறிவுரை சொல்ல அவர் அருகதை உள்ளவர் ஆவார்.

தமிழக விவசாயிகளுக்குத் தேவையான தண்ணீரை அண்டை மாநிலங்களில் இருந்து கோரிப் பெற வேண்டிய பெரும் பொறுப்பு தமிழக அரசுக்கு உண்டு. இந்த பொறுப்பை நிறை வேற்றிட, அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா, கேரளா அரசுகளுடன் சுமுக உறவை வளர்த்துக் கொண்டு, நமக்குத் தேவையான தண்ணீரைப் பெற வேண்டிய ஒரு அணுகு முறையைத்தான் கழக அரசு தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது. ஜெயலலிதாவைப் போல எந்தப் பிரச்சினையிலும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பாணியிலும்; ஏனோதானோ என்ற முறையிலும் கழக அரசு நடந்துகொள்ள எப்போதும் நினைத்ததில்லை.

சுமுகமான அணுகுமுறையைத் தொடர்ந்து பின்பற்றி வரும் கழக அரசு, இந்த ஆண்டு மேட்டூர் அணைக்கு போதிய நீர் வரத்து இல்லாத நிலை ஏற்பட்டபோது, கர்நாடக அரசுக்கும், மத்திய அரசுக்கும் பின்வருமாறு கடிதங்கள் அனுப்பியதோடு மட்டும் நின்று விடாமல், கர்நாடக முதலமைச்சருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறந்துவிட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

தலைமைச் செயலாளரிடமிருந்து கர்நாடக தலைமைச் செயலாளருக்கு 3.7.2010 அன்றும்; என்னிடமிருந்து கர்நாடக முதலமைச்சருக்குக்கு 18.7.2010 அன்றும்; பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளரிடமிருந்து கர்நாடக அரசு நீர் ஆதாரத்துறை முதன்மைச் செயலாளருக்கு 24.9.2010 அன்றும் கடிதங்கள் எழுதப்பட்டன. மீண்டும் கர்நாடக முதலமைச்சருடன், நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, உடனடியாக காவிரியில் தண்ணீர் திறந்துவிட ஆணை யிடுமாறு கேட்டுக் கொண்டதுடன்,

அவருக்கு நேர்முகக் கடிதம் ஒன்றையும் 2.10.2010 அன்று அனுப்பினேன். அதன் பின்னர், காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய தண்ணீரின் அளவு, இடர்ப்பாடு காலத்தில் தண்ணீர் பகிர்ந்து கொள்ளும் வழிமுறைப்படி தண்ணீரை விடுவிக்க வேண்டிய முழு விவரங்கள் அடங்கிய கடிதம் ஒன்றினை தமிழக அரசின் தலைமைச் செயலாளர், கர்நாடக தலைமைச் செயலாளருக்கு 4.10.2010 அன்று அனுப்பினார். இதனைத் தொடர்ந்து, மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்துவரும் சூழ் நிலையைக் கவனத்தில் கொண்டு, மீண்டும் கர்நாடக முதலமைச்சருக்கு சம்பா பயிருக்குத் தேவையான தண்ணீரை விடுவிக்க கடிதம் ஒன்றை, 25.10.2010 அன்று எழுதி, அக்கடிதத்துடன் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி மற்றும் பொதுப்பணித் துறையின் முதன்மைச் செயலாளர் ஆகியோர் 26.10.2010 அன்று கர்நாடக முதலமைச்சரை நேரடியாக சந்தித்து, காவிரியில் தண்ணீர் திறந்துவிடுவதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

இந்த முயற்சிகளுக்கிடையே, மத்திய அரசு தலையிட்டு, கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்கு நீரை விடுவிக்க அறிவுறுத்தக் கோரியும், காவிரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்தை கூட்ட வேண் டியும்; தமிழக முதலமைச்சரிடமிருந்து இந்தியப் பிரதமருக்கு 29.8.2010 நாளிட்டு கடிதமும் மற்றும் அதிகாரிகள் நிலையில் 13.8.2010 மற்றும் 24.9.2010 நாளிட்டு கடிதங்களும் அனுப்பப் பட்டன.

காவிரிப் பிரச்சினையில், கழக அரசு காலத்தே ஆற்றிவரும் பங்களிப்புகளின் ஆழத்தையும், அருமையையும்; ஜெயலலிதா வின் எதிர் மறை அணுகுமுறையையும், ஆணவப் போக்கை யும் தமிழக விவசாயிகள் நன்றாக அறிந்து வைத்திருக்கும்போது; சட்டப்பேரவைத் தேர்தலை மனதிலே வைத்துக் கொண்டு, உள்நோக்கத் தோடு காலந்தாழ்த்தி இப்போது அவர் வெளி யிடும் பொருளற்ற அறிக்கைகளை எல்லாம் மக்கள் கிஞ்சிற்றும் பொருட்படுத்த மாட்டார்கள்.

அன்புள்ள,

மு.க.

1-11-2010

3510. காலம்தான் பதில் சொல்லும்!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா நேற்று வெளியிட்ட அறிக்கையில்; பொதுவாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நேர்மையைப் பற்றியும், நாணயத்தைப் பற்றியும், ஜனநாயகத்தைப் பற்றியும்; ''சாத்தான் வேதம் ஓதுகிறது'' என்ற பாணியில்; அறிவுரைகளையும், அறவுரைகளையும் வழங்கியிருக்கிறார்.

ஜெயலலிதா ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, 1.7.1991 அன்று அவரிடமிருந்த சொத்துக் களின் மதிப்பு 2 கோடியே 1 இலட்சத்து 83 ஆயிரத்து 957 ரூபாய். ஐந்தாண்டுகள் அவர் முதலமைச்சராக ஆட்சி செய்ததற்குப் பிறகு, 30.4.1996-ல் அவருடைய சொத்துக்களின் மதிப்பு 66 கோடியே 44 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய். ஆக, ஐந்தாண்டுகளில் மட்டும், ஜெயலலிதா சேர்த்த சொத்துக்களின் மதிப்பு 64 கோடியே 42 இலட்சத்து 89 ஆயிரத்து 43 ரூபாய். இதுதான் ஜெயலலிதாவின் அகராதி யில் ''நாணயம்'' என்பதற்கான அர்த்தமா?

ஜெயலலிதா வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவித்த வழக்கு கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகிறது. சட்டத்தின் சந்துபொந்துகளிலெல்லாம் புகுந்துகொண்டு, ''கின்னசில்'' இடம் பெறக் கூடிய அளவுக்கு, தனது சொத்துக்குவிப்பு வழக்கை கீழ்கோர்ட்டிலிருந்து சுப்ரீம் கோர்ட் வரை, பிறகு சுப்ரீம் கோர்ட்டில் இருந்து கீழ்கோர்ட் வரை ''பரமபத சோபன படத்தில்'' பார்ப்பதைப் போல; மேலும் கீழும் இழுத்தடித்து, தனது ''நேர்மை''யை குறித்த காலத்தில் நிரூபிப்பதற்கு திராணியின்றி தாமதம் செய்து வருகிறாரே; இதுதான் ''ஜெயலலிதா பிராண்ட்'' நேர்மைக்கு அடையாளமா?

சென்னைக்கு அருகில் சிறுதாவூர் என்ற இடத்தில் 17 ஏக்கர் நிலப்பரப்பில், 30 ஏக்கர் அரசு நிலத்தையும் வளைத்துப் போட்டு;

108 குளுகுளு வசதிகளுடனான அறைகளுடன் கட்டப்பட்டுள்ள ஆடம்பர பங்களாவிற்கு அடிக்கடி சென்று சுகவாசம் செய்கிறாரே! இதுதான் ஜெயலலிதா சொல்லும்

''நேர்மை''க் கான குறியீடா?

முதலமைச்சராக இருந்தபோது, அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை, குறைந்த விலையில் வாங்கிக் கொண்டாரே, இதுதான் ''நேர்மை''க்கான அறிகுறியா?

டான்சி நிலபேர வழக்கில்; டான்சி நில சம்மந்தமான ஆவணங்களில் கையெழுத்துப் போட்டுவிட்டு; வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக, நீதிமன்றத்தில், தான் போட்ட கையெழுத்தையே தன்னுடைய கையெழுத்து இல்லை என்று ''சத்தியப்பிரமாணம்'' செய்து சொன்னாரே, இதுதான் ''நாணயத்திற்கு'' ஜெயலலிதா வழங்கும் சான்றிதழா?

''ஜெயலலிதா தனது மனசாட்சிக்குப் பதில் சொல்லும் வகையில், டான்சி நிலத்தை அரசிடமே திரும்ப ஒப்படைத்துவிட வேண்டும்'' என்று டான்சி வழக்கில் இந்திய உச்சநீதி மன்றமே ஜெயலலிதாவின் நேர்மைக்கும், நாணயத்திற்கும் சான்றிதழ் வழங்கியுள்ளதே!

கோடநாடு எஸ்டேட்டில், முறையான அனுமதி பெறாமல், பொய்யான தகவலை அளித்து, ஊராட்சி மன்றத்தின் அனுமதியைப் பெற்ற தாகக் கூறிக்கொண்டு, சுற்றுச்சூழலை கெடுக்கும்வண்ணம், நீதிமன்ற உத்தரவையும் மதிக்காமல் ஆடம்பர பங்களாக்களையும், கட்டடங்களையும் கட்டிக்கொண்டுள்ள, சுகவாசியான ஜெயலலிதாவின் ''நேர்மை''க்கான இலக்கணம் இதுதானா?

கொடைக்கானல் ''பிளசன்ட் ஸ்டே'' ஓட்டலுக்கு விதிமுறைகளை மீறி அனுமதி கொடுத்தார் என்று தொடரப்பட்ட வழக்கில்; ஜெயலலிதாவுக்கு ஓராண்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்ட போது; தர்மபுரி மாவட்ட அ.தி.மு.க.வினர் வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட்டு; கோவையிலிருந்து தருமபுரிக்கு சுற்றுலா வந்த கோவை வேளாண் பல்கலைக்கழக மாணவ, மாணவியர் பயணம் செய்த பேருந்தை தீயிட்டுக் கொளுத்தியதால், மூன்று மாணவிகள் உயிரோடு எரிக்கப்பட்டு,

துடிதுடித்துச் செத்தார்களே! அப்போது, அந்த மாணவிகளுக்காக ஓர் இரங்கலைக்கூட தெரிவிக்காத மனசாட்சி இல்லாத ஜெயலலிதா, இன்றைக்கு ''அரசியல் நேர்மை''யைப் பற்றி இலக்கியம் எழுதத் தொடங்கியுள்ளாரே!

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது, சட்டப்பேரவையில் எதையும் விவாதித்து, கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கிற பக்குவம் இல்லாமல்; எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களைத் தாங்கிக் கொள்ளும் பொறுமை இல்லாமல்; ஆணவப்போக்குடன் நடந்து கொண்டாரே, இதுதான் ஜெயலலிதா எடுத்துக் காட்டும் ''ஜனநாயக''த்திற்கான வழி முறையா?

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப் பேரவைத் தலைவர், பொறுப்பேற்ற உடனேயே, முதல் பணியாக சட்டப்பேரவையிலேயே ஜெயலலிதா காலில் விழுந்து வணங்கிய அநாகரிகப் போக்கும், அ.தி.மு.க. சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் உறுதிமொழியை எடுத்துக் கொண்டதும், சட்டப்பேரவையிலேயே ஜெயலலிதா காலில் விழுந்து வணங்கிய கலாச்சாரக் கேடும் அரங்கேற்றப்பட்டனவே, இதுதான் ஜெயலலிதா வழிகாட்டும் ''ஜனநாயக''த்தின் பாதையா?

இப்படி சட்டப்பேரவையை மாசுபடுத்திய ஜெயலலிதா; இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களையும், அரசுப் போக்குவரத்து ஊழியர்களையும் இரவு நேரத்தில் கைது செய்து, கொடுமைப்படுத்தி;

மக்கள் நலப்பணியாளர்கள் 10 ஆயிரம் பேரையும், சாலைப் பணியாளர்கள் 10 ஆயிரம் பேரையும், கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் 20 ஆயிரம் பேரையும், எந்தக் காரணமும் சொல்லாமல், அனைவரையும் வீட்டுக்கு அனுப்பி; பட்டப்பகலில் பத்திரிகையாளர்கள்மீது தாக்குதல் நடத்தி, அவர்களைக் கைது செய்து, சிறையில் அடைத்து, ஊடகங்களின் கேமராக்கள் உள்ளிட்ட சாதனங்களைச் சேதப்படுத்தி, நூற்றுக்கும் மேலான பத்திரிகையாளர்கள்மீது வழக்குகள் தொடுத்து;

சட்டப் பேரவையிலேயே நீதிமன்றத்தையும், நீதியரசர்களையும் இழிவுபடுத்திப் பேசியதோடு, நீதியரசர் ஒருவரது உறவினர் மீது ''கஞ்சா'' வழக்கு போட்டு;

ஜனநாயகத்தின் தூண்கள் எனக் கருதப்படும் சட்டப் பேரவை, நிர்வாகத்துறை, நீதித்துறை, பத்திரிக்கைத்துறை என அனைத்தும், மிகவும் சாதாரணமானவை, தனது காலடியில் உள்ளவை என்ற எண்ணத்தில்; குலைத்து, குழப்பத்தில் ஆழ்த்திய ஜெயலலிதாவின் ஜனநாயகத்தைப் பற்றி தமிழ்நாடும், இந்தியத் திருநாடும் நன்றாகவே அறிந்திருக்கிறது!

முன்னாள் முதலமைச்சர் என்று கருதாமல், நள்ளிரவில் தாக்குதல் நடத்தி அப்படியே தூக்கிச் சென்று என்னைக் கைது செய்ததோடு; நீதியரசர் வழங்கிய அறிவுரைகளுக்கு மாறாக என்னை சென்னைப் பொது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல், சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்ற ஜெயலலிதா;

முன்னாள் மேயர் தம்பி ஸ்டாலினை மேம்பாலம் கட்டியதிலே முறைகேடு என்று வேண்டுமென்றே பழிசுமத்தி இரவிலே கைது செய்து, மதுரை சிறையிலே அடைத்த ஜெயலலிதா;

தனது வளர்ப்பு மகனும், நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வீட்டு மாப்பிள்ளையுமான வி.என். சுதாகரனை, தூங்கிக் கொண்டிருந்த போது தட்டியெழுப்பி, 16 கிராம் ஹெராயின் போதைப் பொருள் வைத்திருந்ததாகக் கூறி, சிறையிலே அடைத்த ஜெயலலிதா; கஞ்சா கடத்தியதாக மதுரையைச் சேர்ந்த இளம்பெண் செரினாவை கைது செய்து, கொடுமைப்படுத்திய ஜெயலலிதா;

இந்தியத் திருநாடு ஒரு மதச்சார்பற்ற நாடு என்ற உண்மையை காற்றிலே பறக்கவிட்டு; தமிழகத்தில் உள்ள கிறித்துவச் சிறுபான்மை மக்களுக்கு எதிராக மதமாற்றத் தடைச் சட்டத்தைச் சட்டப் பேரவையில் நிறைவேற்றிய ஜெயலலிதா;

‘‘முஸ்லிம்களுக்கு தனி இடஒதுக்கீடு அளித்தால், நாளை கிறித்துவர்களும் இட ஒதுக்கீடு கேட்பார்கள். பிறகு மற்ற சிறுபான்மையினரும் கேட்பார்கள். எனவே, இவ்வாறு இடஒதுக்கீடு அளிப்பது இயலாத ஒன்றாகும். அரசியல் சட்டத்தின் அடிப்படையில் முஸ்லிம்கள் ஏற்கெனவே பல சலுகைகளை அனுபவித்து வருகிறார்கள். பெரும்பான்மைச் சமூகத்தினர் அந்தச் சலுகைகளையெல்லாம் அனுபவிக்கவில்லை’’ என்று

சிறுபான்மை இஸ்லாமியர்களுக்கு எதிரான தனது எண்ணத்தை வெளிப்படுத்திய ஜெயலலிதா;

"போனஸ்" என்பது ஒரு நல்லெண்ணத்தின் அடையாளமாக, அந்த நிறுவனத்தின் உரிமையாளர்களுக்கு, அவ்வளவு இலாபத்தை ஈட்டித் தந்த ஊழியர்களுக்கு, அந்த இலாபத்தில் பங்கு தருவதுதான் "போனஸ்". ஆனால், அந்த நிறுவனம் நஷ்டத்தில் இயங்கினாலும் பரவாயில்லை. எங்களுக்குத் தந்தே ஆக வேண்டும் என்று கேட்டால், அது எப்படி நியாயமாகும்" என்று; போனசுக்கு எதிராக - போனசை உரிமையாகக் கொண்டாடும் தொழிலாளர்களுக்கு எதிராகப் பேசிய ஜெயலலிதா;

"நான் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, அதிகாரிகளிடம் வேலை வாங்க முடியாத நிலை ஏற்பட்டது குறித்து, அதிர்ச்சியடைந்தேன்! நான் இப்போது ரிங்மாஸ்டர் செய்வது போல சாட்டையடி கொடுத்து வேலை வாங்கி வருகிறேன். எவ்வளவு அடிகொடுத்தும் அதிகாரிகளுக்கு வேலையில் சிரத்தை இல்லை. அதை நானே ஒப்புக் கொள்கிறேன். அதிகாரிகளிடம் இழந்துவிட்ட பணியார்வத்தை மீண்டும் ஏற்படுத்த சாட்டையடி கொடுத்து வேலை வாங்கிக் கொண்டு வருகிறேன்" என்று அரசு ஊழியர்களை சட்டப் பேரவையிலேயே கேவலப்படுத்திய ஜெயலலிதா;

முதலமைச்சர் என்ற பதவி வழங்கிய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, ஜனநாயகத்தையே கேலிக் கூத்தாக்கிய ஜெயலலிதா; இன்றைக்கு ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவது எந்த வகையைச் சார்ந்தது என்பதை எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டாமா!

இப்படி நேர்மைக்கும், நாணயத்துக்கும் ஜெயலலிதா கொடுத்துவரும் அர்த்தத்தைப் பற்றியும், ஜனநாயகத்தைப் பற்றிய அவரது அணுகுமுறையைக் குறித்தும் ஏராளமான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டலாம்.

ஜனநாயகத்துக்கும், நாணயத்துக்கும் அவர் கொண்டிருக்கும் அர்த்தமும், அவர் பின்பற்றும் அணுகுமுறையும் கண்டு - ஜனநாயகத்திலும், நேர்மை - நாணயத்திலும், குறைந்தபட்ச நம்பிக்கை கொண்டவர்கள்கூட, அதிகபட்சமாக நகைப்பார்கள்!

‘‘செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க

செய்யாமை யானும் கெடும்.’’

என்ற அய்யன் திருவள்ளுவரின் குறளில் கண்டுள்ளவாறு; செய்ய வேண்டியதைச் செய்யாமலும், செய்யக் கூடாததைச் செய்தும்; முதலமைச்சர் பொறுப்பையும், அதிகாரத்தையும் சொந்த சுயநல வேட்டைக்காகப் பயன்படுத்திய ஜெயலலிதா; இன்றைக்கு ஜனநாயகம், நேர்மை, நாணயம் இவற்றைப் பற்றியெல்லாம் பேசுவதை நமது ஜனநாயக மாண்புகளிலே அக்கறையும், ஆர்வமும் உள்ளவர்கள் கவனித்து, கணித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்! இவை அனைத்திற்கும் காலம்தான் பதில் சொல்லும்.

அன்புள்ள,

மு.க.

3-11-2010

3511. நடுநிலையாளர்க்கு; கெடுமதி கூடாது!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக எதிர்க்கட்சியினர் - குறிப்பாக ஜெயலலிதா தொடர்ந்து செய்துவரும் பொய்ப் பிரச்சாரத்திற்கு, உதவி செய்யும் நோக்கத்துடன்; என்ன செய்தாலும் ஜெயலலிதாவைப் போன்றவர்களை ஆதரிப்பதே பிறவிப்பயன் என்று ''சத்தியப்பிரமாணம்'' செய்து கொண்டதைப் போல, நடுநிலை நாளேடு என்ற போர்வையில், ''தினமணி'' இதழ் நேற்று ஒரு தலையங்கம் தீட்டியுள்ளது. அதில் படிப்பவர்களை திசைதிருப்புவதற்காக, திட்டமிட்டு செய்திகளை எல்லாம் - Blown out of proportions என்று ஆங்கிலத்திலே சொல்வார்களே, அதைப் போல - ஊதி ஊதிப் பெரிதாக்கி, மிகைப்படுத்தி - கடுகுக்குள் மலையைப் புகுத்தி எழுதியிருக்கிறார்கள்.

நல்லாட்சி நடத்தி வரும் தமிழக அரசின் பல்வேறு நலத் திட்டங்களின் சிறப்பான செயல்பாடுகளால் குறை ஒன்றும் கண்டுபிடிக்க இயலாததன் காரணமாக, சட்டம் ஒழுங்கு சீர்குலைவு என்ற கடைசி அஸ்திரத்தை எடுத்துக்கொண்டு, பொத்தாம்பொதுவாக, "வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ" என்ற பாணியில் சட்டம் ஒழுங்கைப் பற்றியும், குற்ற நிகழ்வுகள் குறித்தும் திசை திருப்பும் வகையில் பல கருத்துகளைத் தெரிவித்து வருகின்றன.

இந்தியாவிலேயே மிகச் சிறப்பாகச் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படும் மாநிலங்களில் ஒன்று தமிழகம் என்பதில் நாம் அனைவரும் பெருமை கொள்ளலாம். சாதி மதப் பூசல்கள் தலையெடுக்காத வண்ணம் தமிழக அரசின் தொடர் கண்காணிப்பில் மிகுந்த விழிப் புணர்ச்சியுடன் காவல் துறை சட்டம் ஒழுங்கைப் பராமரித்து வருகிறது.

30.10.2010 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் நடந்த "பசும்பொன் தேவர் குருபூஜை" மிகவும் அமைதியாக நடைபெற்றது. சட்டம் ஒழுங்கை காவல் துறையினரும், மாவட்ட நிர்வாகமும் நன்கு பராமரித்து வருவதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. கடந்த சில ஆண்டுகளைப்போலவே இந்த ஆண்டும் விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள். அமைதிக்குக் குந்தகமின்றி நடத்தப்பட்டதும், சட்டம் ஒழுங்கு சிறப்பாகப் பராமரித்து வருவதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டு.

எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதாவுக்கு மிரட்டல் கடிதங்கள் வருவதாகக் கூறி 18.10.2010 அன்று மதுரையில் திட்டமிட்டபடி அவரது பொதுக் கூட்டத்தை நடத்த விடாமல், தடுத்திட முயற்சிப்பதாகவும், அவரது பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும் என்றும் தொடர்ந்து அவரது கட்சியினர் அறிக்கைகள் விடுத்தபோதும் கூட; காவல்துறையினரின் சிறப்பான நடவடிக்கை களினால் 18.10.2010 அன்று எதிர்கட்சித் தலைவர் எந்தவித அச்சுறுத்தலும் இன்றி மதுரை சென்று கூட்டத்தை நடத்தி பாதுகாப்பாகச் சென்னைக்குத் திரும்பினார் என்பதை நாடே அறிந்துள்ளது. எனவே, சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று கூறுவது உண்மைக்கு மாறானது என்பதைத் தமிழக மக்கள் புரிந்துகொள்வார்கள்.

தமிழகத்தில் மட்டுமே தொடர்ந்து அதிக எண்ணிக்கையில் கொலைக் குற்றங்களும், கொள்ளைகளும், கடத்தல்களும் நடப்பது போன்றும், இவற்றையெல்லாம் காவல்துறை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது போன்றும் ஒரு பொய்ப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த விஷமத்தனமான பிரச்சாரத்திற்கு அடிப்படை ஏதுமில்லை.

பொருளாதார, சமூக மாற்றங்களும், தகவல் தொழில்நுட்ப முன்னேற்றங்களும் மிக வேகமாக ஏற்பட்டு வரும் இன்றைய சூழ்நிலையின் காரணமாக; புதிய புதிய முறையில் பல்வேறு குற்ற நிகழ்வுகள் நடக்கின்றன. எனினும், காவல் துறையினரின் தீவிர நடவடிக்கையால் மிகப் பெரும்பாலான குற்றங்களில், குற்றவாளிகள் உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

உதாரணத்திற்கு 2009ஆம் ஆண்டில் நடந்த 1644 கொலைக் குற்றங்களில், 1562 இனங்களில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். மொத்த குற்ற நிகழ்வுகளை கணக்கில் எடுத்துக்கொண்டால்கூட; அ.தி.மு.க. ஆட்சியில் 2004ஆம் ஆண்டில் மிக உயர்ந்த எண்ணிக்கையில் 8 இலட்சத்து 2 ஆயிரத்து 817 குற்றங்கள் நிகழ்ந்துள்ள நிலையில்; கழக ஆட்சியில், கடந்த 2009ஆம் ஆண்டில் 7 இலட்சத்து 17 ஆயிரத்து 957 குற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள்தொகை அடிப்படையில் குற்ற நிகழ்வுகள் நடக்கும் விகிதாசாரத்தை எடுத்துக் கொண்டால்கூட பிற மாநிலங்களை விடக் குறைந்த அளவில் குற்றங்கள் நடக்கும் மாநிலமாகத் தமிழகம் உள்ளது. உதாரணமாக, 2008ஆம் ஆண்டில் கேரள மாநிலத்தில் ஒரு இலட்சம் மக்கள்தொகைக்கு 322 குற்றங்கள் நிகழ்ந்தன. டெல்லி மாநிலத்தில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 286 குற்றங்கள் நிகழ்ந்தன. ஆனால் தமிழகத்தில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 266 குற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

சென்னை, பெங்களூரு, மும்பை, கொல்கத்தா, டெல்லி போன்ற பிற மாநிலங்களை ஒப்பீடு செய்தால்கூட; சென்னைப் பெருநகரில் குற்ற நிகழ்வுகள் குறைந்த அளவிலேயே உள்ளது என்பதும் புள்ளி விவரங்களிலிருந்து தெளிவாகத் தென்படுகிறது.

2008ஆம் ஆண்டில் சென்னையில் 11 ஆயிரத்து 829 நிகழ்வுகள் நடந்துள்ளன. அதே நேரத்தில் பெங்களூரில் 29 ஆயிரத்து 664 நிகழ்வுகளும், மும்பையில் 32 ஆயிரத்து 770 நிகழ்வுகளும், கொல்கத்தாவில் 13 ஆயிரத்து 5 நிகழ்வுகளும், டெல்லியில் 49 ஆயிரத்து 350 நிகழ்வுகளும் நடந்துள்ளன.

முக்கிய நகரங்களில் நிகழ்ந்த கொலைக் குற்றங்களைப் பார்ப்போமேயானால், சென்னையில் 2008ஆம் ஆண்டில் 100 கொலைக் குற்றங்களும், டெல்லியில் 554 கொலைக் குற்றங்களும், பெங்களூரில் 253 கொலைக் குற்றங்களும், மும்பையில் 210 கொலைக் குற்றங்களும் நடந்துள்ளன. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது 2009ஆம் ஆண்டில் தமிழகத்தில் 573 கற்பழிப்புக் குற்றங்கள் நிகழ்ந்த அதே நேரத்தில் ஆந்திர மாநிலத்தில் 1,257 குற்றங்களும், மராட்டிய மாநிலத்தில்

1,558 குற்றங்களும், மேற்கு வங்கத்தில் 2,263 குற்றங்களும் நடந்துள்ளன.

இதுவரை நான் எடுத்துச் சொன்ன ஒப்பீடுகளும், புள்ளிவிவரங்களும் குற்றங்களை நியாயப்படுத்துவதற்காக அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். குற்றங்கள் நிகழாமல், தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை காவல் துறை மேற்கொள்ள வேண்டும் என்பதில் எனக்கு இருவேறு கருத்து கிடையாது.

அண்மைக்கால குற்ற நிகழ்வுகளை எடுத்துக்கொண்டால்கூட, குற்றநிகழ்வுகளில் குற்றவாளிகள் உடனடியாகக் காவல்துறை யினரால் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு சில நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

20.11.2008 அன்று டாமின் நிறுவன முன்னாள் தலைவர் டாக்டர் சரவணன் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்ட வழக்கில் எந்தவிதமான தடயங்களும் உடனடியாகக் கிடைக்காத சூழ்நிலையிலும், குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, பொருட்கள் மீட்கப்பட்டு, நீதிமன்ற விசாரணை முடிக்கப்பட்டு,

3 ஆயுள் குற்றவாளிகளுக்கும் தலா 3 ஆயுள் தண்டனைகள் பெற்றுத்தந்தது மிகவும் பாராட்டக்கூடியதாகும்.

முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் உறவினர் விஜயன் என்பவர் 4.6.2008 அன்று கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகளை 8.9.2008 அன்றும்; 30.4.2009 அன்று திண்டுக்கல்லைச் சேர்ந்த மருத்துவர் பாஸ்கரன் என்பவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில், 23.8.2009 அன்றும் கொலையாளிகளை கைது செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அரியலூர் காங்கிரஸ் சட்டப் பேரவை உறுப்பினரின் தம்பி மீது கொண்ட முன் விரோதம் காரணமாக, அவரது மகன் தர்மதுரை என்ற மாணவனை 11.6.2010 அன்று கடத்திய இரண்டு குற்றவாளிகளில் ஒருவன் 14.6.2010 அன்று கைது செய்யப்பட்டு, கடத்தப்பட்ட சிறுவனையும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனத்தையும் காவல் துறை மீட்டது. மற்றொரு குற்றவாளியும் வேறொரு வழக்கில் சென்னையில் கைது செய்யப்பட்டான்.

3.7.2010 அன்று சென்னை மாம்பலத்தில் போத்தீஸ் துணிக்கடை ஊழியர்களை வழி மறித்து தாக்கி அவர்களிடமிருந்து 81 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயை கொள்ளையடித்துச் சென்ற வழக்கில்; 15.7.2010 அன்று குற்றவாளிகள் 10 பேரைக் கண்டுபிடித்துக் கைது செய்து, அவர்களிடமிருந்து 39 இலட்சத்து 37 ஆயிரத்து 500 ரூபாயை மீட்டுள்ளது காவல்துறை.

17.7.2010 அன்று நடந்த சிறுவன் ஆதித்யா கொலை வழக்கில் குற்றவாளி 4 நாட்களுக்குள் கைது செய்யப்பட்டுள்ளார்.

21.8.2010 அன்று மதுரை மாநகரில், மாணிக்கம் செட்டியார் என்பவரைக் கொலை செய்து, 9 கிலோ தங்கம் மற்றும் 1,274 கிராம் வெள்ளி மற்றும் 12 ஆயிரம் ரூபாயை கொள்ளையடித்துச் சென்ற குற்றவாளிகளை 24.8.2010 அன்று அதாவது 42 மணி நேரத்திற்குள் கைது செய்து அவர்களிடமிருந்து 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்புடைய களவுபோன பொருள்கள் மீட்கப்பட்டன.

25.10.2010 அன்று விழுப்புரம் மாவட்டத்திலிருந்து சுமார் 11 கிலோ தங்க நகைகளை எடுத்துக்கொண்டு திருவண்ணாமலைக்குச் சென்றபோது வாகனம் வழிமறிக்கப்பட்டு நகைகள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக 2 மணி நேரத்தில் திண்டிவனத்தில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு உடனடியாக 8 கிலோ தங்க நகைகளும் மீட்கப்பட்டன என்பது காவல்துறையின் துரித நடவடிக்கைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

கடத்தல், வழிப்பறி, பொருளாதாரக் குற்றங்கள், கட்டப்பஞ்சாயத்து போன்ற பல்வேறு குற்றங்களில் குழுவாக (Organized crime syndicates) ஈடுபடுபவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்து, இம்மாதிரியான குற்றங்களைத் தடுக்கும் நோக்கத்துடன், காவல்துறையில் தனியாக ஒரு நுண்ணறிவுப் பிரிவு (Organized Crime Intelligence Unit) என்ற சிறப்புப் பிரிவு இந்த ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதன்பயனாக, பல்வேறு பெரும்குற்றங்கள் நிகழாமல் தடுக்கப்பட்டுள்ளன.

சட்டவிரோதச் செயல்கள் மற்றும் குற்றங்களில் ஈடுபடும் கொடும் குற்றவாளிகள் 2009ஆம் ஆண்டில் 2220 பேரும், 2010ஆம் ஆண்டில் இதுவரை 1808 பேரும் குண்டர் தடுப்புக்காவல் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜெயலலிதா தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது - மயிலாடுதுறையில் காங்கிரஸ் தலைவர் குரு ஞானசேகரன் படுகொலை; முன்னாள் அமைச்சர் சுப்புலெட்சுமி ஜெகதீசன் சம்பந்திகள் இரண்டு பேர் படுகொலை; வேலூர் நகைக் கடையைக் கொள்ளையடித்து மூன்று பேர் சுட்டுக் கொலை; மயிலாடுதுறை கல்லூரி மாணவி கற்பழித்துக் கொலை; சென்னையில் தலித் மக்கள் முன்னணித் தலைவர் பாலு என்பவர், அவர் மகன் கண்ணெதிரே படுகொலை; செய்யாறில் கதிர்வேலு என்ற தொழிலாளி அடித்துக் கொலை; சசி என்ற சசிகுமார் என்ற சினிமா ஸ்டண்ட் நடிகர் வெட்டிக் கொலை; திண்டுக்கல் நிதி நிறுவன அதிபரின் மனைவி பூங்கோதையும் அவரது மகளும் கழுத்தறுக் கப்பட்டு படுகொலை; அம்பத்தூர் அருகே பிரகாஷ் என்ற வாலிபர் வெட்டிப் படுகொலை; காரப்பாக்கத்தில் கோயிலில் புகுந்து பூசாரி உட்பட இருவர் படுகொலை; திருப்பத்தூர் அருகே பெட்ரோல் பங்க் உரிமையாளர் மணி என்ற கழகத் தோழர் சுட்டுப் படுகொலை; திருமுல்லைவாயிலைச் சார்ந்த சப்-இன்ஸ் பெக்டர் மகன் விஜி வர்கிஸ் நடுரோட்டில் வெட்டிக் கொலை; அம்பத்தூர் கல்லூரி மாணவர் தாமோதரன் படுகொலை; சென்னை சேத்துப்பட்டில் கூலித் தொழிலாளி வெங்கடபதி குத்திக் கொலை; கொடைக்கா னலில் வக்கீல் சுதாகரன் படுகொலை; சூனாம்பேட்டில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த கோவலன் வெட்டிக் கொலை - என ஜெயலலிதா ஆட்சியில், 2003 ஆம் ஆண்டு மட்டும், சங்கிலித் தொடர் போன்ற படுகொலை நிகழ்ச்சிகள் நடந்தபோது; அவற்றையெல்லாம் வெறும் செய்தி என்ற அளவில், "தினமணி"கள் வெளியிட்டனவே தவிர; "சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது; நல்லாட்சிக்கு இது அழகல்ல" என்று அறிவுரை கூற முன்வருவதற்கான திராணியும், தைரியமும் இருந்தனவா என்றால், இல்லை. இப்போது மட்டும் வரிந்து கட்டிக் கொண்டு எழுதுகிறார்களே, என்ன காரணம்? நடுநிலையாளர்கள் சிந்தித்துப் பார்க்க மாட்டார்களா?

ஜெயலலிதா ஆட்சியில் - காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமன் 3-9-2004 அன்று கொலை செய்யப்பட்டு; அந்த வழக்கில் ஜெயேந்திரர், விஜயேந்திரர், அவரது சகோதரர் ரகு, மடத்தின் மேலாளர் சுந்தரேச அய்யர், அப்பு, கதிரவன், ரவி சுப்பிரமணியன் உட்பட 25 பேர் கைது செய்யப்பட்ட போதும்; சுந்தரேச அய்யர், அப்பு உட்பட 11 பேர் மீதும் குண்டர் சட்டம் ஏவப்பட்ட போதும்; "தினமணி"கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு தானே இருந்தார்கள்? தலையங்கங்கள் தீட்டி தங்கள் சான்றாண்மையைக் காட்டிக்கொள்ள முயற்சித்தார்களா?

8-8-1993 அன்று சென்னை சேத்துப்பட்டில் ஆர்.எஸ். எஸ். அலுவலகத்தில் குண்டு வெடித்து 11 பேர் பரிதாபமாக மரணமடைந்தபோது;

14-4-1995 அன்று சென்னை இந்து முன்னணி அலுவலகத்தில் குண்டு வெடித்து "பைபிள்" சண்முகம் என்பவர் மாண்டபோது; 10-7-1995 அன்று திரைப்பட இயக்குநர் மணிரத்னம் வீட்டில் குண்டு வெடித்தபோது; 1991 முதல் 1996 வரையிலான 5 ஆண்டுக்கால ஜெயலலிதா ஆட்சியில் 333 வெடிகுண்டு சம்பவங்கள் நடந்து - 135 பேர் மரணமடைந்து, 394 பேர் காயமடைந்தபோது; "தினமணி"கள் சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்று தமது பேனா முனையைத் தீட்டிட முன்வந்தார்களா?

சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர் எம்.கே. பாலன் கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டாரே; கழக நாடாளுமன்ற உறுப்பினர் கே.பி. ராமலிங்கம் அவர்களின் தம்பி, ஈரோடு மாவட்டத்தில் காவல் துறை ஆய்வாளராக இருந்தவர்; திடீரெனக் காணாமல் போனாரே, இவற்றின் அடிப்படையில், ஜெயலலிதாவின் காவல் துறை செயலிழந்துவிட்டது என்று சுட்டிக்காட்ட "தினமணி"கள் முயற்சி செய்தனவா?

16-8-1991 அன்று மத்திய அமைச்சர் திரு. ப.சிதம்பரம் அவர்கள் கல்வீசித் தாக்கப்பட்ட போது; அ.தி.மு.க.வைச் சார்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்களே, அதாவது, திரு. ரமேஷ் என்பவரும், திரு.பி.சொக்கலிங்கம் என்பவரும் தாக்கப்பட்டபோது; 19-5-1992 அன்று முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா மீது

“ஆசிட்” பாட்டில் வீசப்பட்டு தாக்கப்பட்டபோது; 2-12-1994 அன்று முன்னாள் தலைமைத் தேர்தல் கமிஷனர் திரு. சேஷன் தங்கியிருந்த ஓட்டல் தாக்கப்பட்ட போது; 26-7-2004 அன்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி மீது நாட்டு வெடிகுண்டு வீசப்பட்டபோது; சென்னை எம்.ஜி.ஆர். நகரில் 2005 டிசம்பர் மாதம் நிவாரணம் பெறுவதற்காக ஜெயலலிதா அரசு கையாண்ட தவறான அணுகுமுறையின் காரணமாக, 40-க்கும் மேலான அப்பாவிப் பொது மக்கள் நெரிசலில் சிக்கி மாண்டபோது; “தினமணி”கள் சட்டம்-ஒழுங்கைப் பற்றி வாய்திறந்தார்களா?

ஆனால், இனியாவது நடுநிலை நாளேடுகள் நாட்டு மக்களுக்குத் தேவையான - ஆக்கப்பூர்வமான செய்திகளையும், எந்த ஒரு கட்சியையும் சாராமல், விருப்பு வெறுப்பின்றி அரசியல் குறித்த செய்திகளையும், நாகரிக - கலாச்சாரக் கேடுகளுக்குத் துணை புரியாத செய்திகளையும், நல்லெண்ணத்தையும், நற்செயல்களையும் ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் செயல்களையும் வெளியிடுவது குறித்து சிந்திப்பார்கள் என்று நம்புகிறேன்! நடுநிலையாளர்க்குக் கெடுமதி; கூடா தல்லவா?

அன்புள்ள,

மு.க.

4-11-2010

3512. துரோகத்தின் முகத்திரையைக் கிழிப்போம்!

உடன்பிறப்பே,

முல்லைப் பெரியாறு பிரச்சினையில் - ஒவ்வொரு கட்டத்திலும் தமிழக அரசின் சார்பில் உரிய விளக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எனினும், நமது விளக்கங்களைப் படித்துப் பார்த்து, புரிந்தோ புரியாமலோ அல்லது வேண்டுமென்றோ, கேரள மாநிலத்தின் தரப்பில் திசை திருப்பும் நோக்கத்தோடு, அதிர்ச்சி அளிக்கக்கூடிய பதில்களை வெளியிடுவதையே வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். கேரளம் தருகின்ற இந்தப் பதில்களை, தமிழகத்திலே உள்ள சில நாளேடுகள் உள்நோக்கத்தோடு, மிகைப்படுத்தியும், திரித்தும் வெளியிடுகின்றன. அந்த நாளேடுகளைப் படிப்போர், சில வேளைகளில் முல்லைப் பெரியாறு பிரச்சினையில் குழப்பம் அடைந்து விடுகின்றனர்.

இடுக்கி மாவட்டத்தில் ஏற்பட்ட சமீபகால நில அதிர்வுகள் காரணமாக, "முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்த கவலைகள் எழுகின்றன. (Mullai Periyar - Fresh tremors in Idukki raises concerns about dam's safety)" என்ற தலைப்பிட்டு; ''இந்தியன் எக்ஸ்பிரஸ் " ஆங்கில நாளேடு 7.11.2010 அன்று செய்தி வெளியிட்டுள்ளது. அதைப்போலவே, "தினமணி' நாளேட்டில் 10.11.2010 அன்று; "உச்சநீதி மன்றக் குழுவைத் திசை திருப்பவே முல்லைப் பெரியாறில் தமிழகம் பராமரிப்புப் பணி - கேரள நிபுணர் குழு அறிக்கை '' என்ற தலைப்பிட்டு; செய்தி வெளியிட்டுள்ளது. முல்லைப் பெரியாறு அணையில் தமிழக அரசு - உச்சநீதி மன்றத்தின் உத்தரவுப்படி - தொடர்ந்து பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இப்படிப் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதைத்தான், கேரள மாநிலத் தரப்பினர் திரித்து, தங்கள் வசதிக் கேற்றவாறு கதை கட்டி விடுகின்றனர். பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வது குறித்து, கேரள அரசின் ஆட்சேபனை எனது கவனத்திற்கு

வந்தவுடனேயே, நான் 7.11.2010 அன்று பின்வரும் பதிலை வெளியிட்டேன்; "முல்லைப் பெரியாறு அணையில் வழக்கமான (routine) பராமரிப்புப் பணியைத் தமிழக அரசு மேற்கொள்ளலாம் என்று இந்திய உச்சநீதி மன்றமே தெளிவுபடுத்தியுள்ளது. அதன் அடிப்படையில், அவ்வப்போது சிறுசிறு பராமரிப்புப் பணிகளைத் தமிழக அரசு மேற்கொள்வது வழக்கமாக இருந்துவருகிறது. இப்படி மேற்கொள்வது ஒன்றும் புதிதாக நடைபெறுவது அல்ல. இது ஏதோ புதிதாக நடைபெறுவதைப் போனால், அதற்கு ஏதோ அடிப்படை இருப்பதைப் போலவும்; கேரள நீர்ப்பாசனத் துறை அமைச்சர் விமர்சித்திருப்பது தவறு.

எனினும், முல்லைப் பெரியாறு பிரச்சினையைத் தொடர்ந்து கவனித்து வருவோர்; அறிந்து கொண்டு மேலும் தெளிவுபெற வேண்டும் என்பதற்காக, அது தொடர்பான சில செய்திகளை வெளியிடுவது இன்றைய நிலையில் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

முல்லைப் பெரியாறு அணையின் பிரதான அணை மற்றும் சிற்றணை ஆகிய இரண்டு அணைகளின் உறுதித் தன்மை குறித்து உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையின் பேரில் மத்திய நீர்வளத்துறை அமைச்சகம் 2000 ஆண்டு ஜூன் திங்களில் ஒரு வல்லுநர் குழுவை அமைத்தது. அக்குழு அணையின் பாதுகாப்புப் பற்றி அனைத்துக் கோணங்களிலும் ஆய்வு நடத்தி, அணைப் பகுதியில் நில அதிர்வுகள் ஏற்பட்டாலும் அணை பாதுகாப்பாக இருக்கும் என்று கணக்கிட்டுப் பார்த்து, அதன்பின்புதான் அணையின் நீர்மட்டத்தை 142 அடிவரை உயர்த்தலாம் என்று பரிந்துரை செய்தது. ("After going through the results of field and laboratory investigations for Baby dam and stress analysis of Baby dam as well as the main dam, all the members of the Committee are of firm opinion that the Mullai Periyar Baby dam and main dam are safe for raising the reservoir water level to 142 ft. (43.28 m)")

இதற்கிடையே, கேரள அரசு பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிலையம் (Indian Institute of Science, IISc) வாயிலாக அணை நில அதிர்வுகளைத் தாங்கக்கூடியதாக இல்லை என்று ஓர் அறிக்கையை 2001-இல் அளித்தது. அந்த அறிக்கையில் அவர்கள் கொய்னா மற்றும் உத்தரகாசி ஆகிய இடங்களில் ஏற்பட்ட நில அதிர்வுகளை எடுத்துக் கணக்கிட்டிருந்தனர். அந்த கணக்கீடுகள்

முல்லைப் பெரியாறு அணைக்குப் பொருந்தாது என்று மத்திய நீர்வளக் குழுமம் நிராகரித்தது. இது குறித்து ஒரு பிரமாண அறிக்கையை மத்திய நீர்வளக் குழுமம் உச்ச நீதி மன்றத்தில் 2004-இல் தாக்கல் செய்தது.

இதற்கு முன்பும் இம்மாதிரி சில நில அதிர்வுகள் ஏற்பட்டதாகக் கேரள அரசு கூறியதின் - பேரில், அப்போதைய மத்திய நீர்வளக் குழுமம் 7.2.2001-இல் ஒரு நிபுணரை அனுப்பி, அணையைச் சோதித்தது. அவர் தமது சோதனை மூலம் அணைக்கு எந்தவித பாதிப்பும் இல்லை எனத் தெரிவித்தார். இதுபோல 2004-இல் நில அதிர்வுகள் அணைப் பகுதியில் ஏற்பட்டுள்ளது எனக் கேரள அரசு கூறியதின் பேரில், மத்திய நீர்வளக் குழுமத்தின் தலைமைப் பொறியாளர் டாக்டர் ஜீ. ஆண்டணி பாலன் அவர்கள், அணையை 9.7.2004-இல் பார்வையிட்டு அணையில் எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்று அறிக்கை கொடுத்தார். அவற்றை எல்லாம் கருத்தில் கொண்டுதான் உச்ச நீதிமன்றம் 27.2.2006 அன்று அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்தலாம் என ஆணையிட்டது. ("There is no report to suggest that the safety of the dam would be jeopardized, if the water level is raised for the present to 142 ft.")

தீர்ப்பு வந்த பிறகு, மீண்டும் கேரள அரசு நில அதிர்வு ஏற்பட்டால் அணை பாதுகாப்பாக இருக்காது என 30.3.2007 அன்று உச்ச நீதிமன்றம் தன் ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்தது.

அதற்காகத் தமிழக அரசு முல்ல அணையின் பாதுகாப்பு பற்றி ஆய்வு செய்ய ஒரு பிரத்யேகமான வல்லுநர் குழுவை தேசிய நீர் மேம்பாட்டு முகமையின் ஓய்வு பெற்ற பொது இயக்குநர் திரு. ஆர்.கே. சர்மா அவர்களைத் தலைவராகவும், உத்திரபிரதேச மாநிலத்தின் ஓய்வு பெற்ற முதன்மை தலைமைப் பொறியாளர் திரு. பி.எல். ஜட்னா , ஓரிசா மாநிலத்தின் முதன்மை தலைமைப் பொறியாளராக இருந்த, ஓய்வுபெற்ற திரு, ஜீ.சி. சாகு , உத்த மாநிலத்தின் ஓய்வுபெற்ற முதன்மை பொறியாளர் திரு. சி.கே. அகர்வால், ஆந்திர பிரதேசம் மாநிலத்தின் ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர் திரு. கே.வி. சுப்பாராவ், ஆகிய நான்கு அனுபவமிக்க பொறியாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு 2007-இல் அமைத்து ஆய்வு செய்தது.

இந்த வல்லுநர் குழு முல்லைப் பெரியாறு பிரதான அணை மற்றும் சிறிய அணைகளின் பாதுகாப்பு பற்றித் தேவையான எல்லா ஆய்வுகளையும் இந்திய தர நிர்ணயம் (I.S.I) வகுத்துள்ள முறைகள்படி ஆய்வு செய்து; அணைப் பகுதிகளில் ஏற்படக் கூடிய நில அதிர்வுகளையும் கணக்கில் கொண்டு அணை உறுதியாக உள்ளது என அறிக்கை அளித்தது. அந்த அறிக்கை உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஓர் ஆவணம் ஆகும்.

இவ்வாறு, கேரள அரசு பலமுறை எழுப்பிய நில அதிர்வுகள் பற்றிய கருத்துகள் எல்லாம் நிராகரிக்கப்பட்டதால், மீண்டும் 2008-இல் ரூர்க்கியில் உள்ள ஐ.ஐ.டி. நிறுவனத்திடம் நில அதிர்வு ஏற்பட்டால் முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்யக் கோரியது. அந்நிறுவனம் ஆய்வு செய்து அளித்த அறிக்கையைக் கேரள அரசு, ஓர் ஆவணமாக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அதில் முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் நில அதிர்வு இந்திய தர நிர்ணயம் (I.S.I.) குறிப்பிட்டுள்ளதைவிட மிக அதிகமாக இருக்கும் எனக் கூறப்பட்டிருந்தது. ஆனால், அந்த அறிக்கையைத் தயாரித்த டாக்டர் டி.கே. பால் மற்றும் டாக்டர் எம்.கே. சர்மா இருவரும் தம் ஆய்வு முடிவை நிரூபிக்கும் வகையில் விசாரணைக்கு வந்து கலந்து கொள்ளவில்லை. அவர்களின் அறிக்கையை உறுதி ஆவணமாக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கேரள அரசின் பிரதிநிதி திரு. எம்.கே. பரமேசுவரன் நாயர், அந்த 2 அறிக்கையைப் பற்றிய குறுக்கு விசாரணையில் சரியான விவரங்களையும் தகவல்களையும் தெரிவிக்கவில்லை. எனவே, அந்த அறிக்கை ஒரு நிரூபிக்கப்படாத ஆவணமாகும்.

அதன்பிறகு, 2009-இல் சாட்சிகளின் குறுக்கு விசாரணை முடிந்து இறுதி வாதங்கள் நடந்து வரும் தருணத்தில் டாக்டர் டி.கே. பால் அவர்கள் இரண்டாவது அறிக்கையைத் தயாரித்துக் கேரள அரசுக்குக் கொடுத்துள்ளார். அந்த அறிக்கையை ஓர் ஆவணமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் கேட்ட போது, அதனை 4.11.2009 அன்று உச்ச நீதிமன்றம் நிராகரித்து ஆணையிட்டது.

உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாத திரு. டி.கே.பால் அறிக்கையில், அணையின் நீர் மட்டம் 136 அடியாக இருக்கும் பொழுதும் நில அதிர்வுகள் ஏற்பட்டால் அணை பாதுகாப்பாக

இருக்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவருடைய அறிக்கையை மீண்டும் தற்போது உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட அதிகாரமுள்ள குழுவிடம் ஓர் ஆவணமாகக் கேரள அரசு அளித்துள்ளது. இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ளக் கூடாதெனத் தமிழக அரசு கோரியுள்ளது. இதுபற்றி அதிகாரமுள்ள குழு எந்த முடிவும் இதுவரை எடுக்கவில்லையென 15.10.2010 அன்று நடைபெற்ற, அதன் கூட்டத்தில் தெரிவித்துள்ளது. இந்நிலையில் டாக்டர் டி.கே.பாலின் அறிக்கை, ஒரு நிரூபிக்கப்படாத அறிக்கை என்பது உறுதியாகிறது. மேலும், இந்த வழக்கு உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளதால் அந்த அறிக்கையில் உள்ள பல குறைபாடுகளை இங்கே சுட்டிக்காட்ட முடியாது.

பலப்படுத்தப்பட்ட முல்லைப் பெரியாறு பிரதான அணை, மற்றும் சிற்றணைகளிலிருந்து மாதிரிகள் (Core Samples) எடுத்து சோதித்து, அதைக் கணக்கில் கொண்டு இந்திய தர நிர்ணயம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி, நீரைத் தேக்கவும், நில அதிர்வுகள் ஏற்பட்டால் அதனால் எந்தவித பாதிப்பும் ஏற்படாது எனவும் 2001-இல் வல்லுநர் குழு தெரிவித்துள்ளது. அணை கட்டுமானப் பொருட்களின் பளு தாங்கும் தன்மையைச் சோதித்த பின்புதான் அதன் அடிப்படையில் வல்லுநர் குழு அதன் அறிக்கையைத் தந்துள்ளது. ஆனால், அணை கட்டுமானப் பொருட்களின் பளுதாங்கும் தன்மையைப் பற்றி ஆதாரமற்ற செய்திகள் பத்திரிகையில் வந்துள்ளன.

மேலும், இந்திய தர நிர்ணயம், (I.S.I.) 2003-இல் நிர்ணயித்துள்ள நில அதிர்வு வரைபடத்தின்படி பெரியார் அணை மூன்றாவது பகுதியில் (Zone-III) உள்ளது. அதன்படி, இப்பகுதியில் மிக அதிகமாக ஏற்படக்கூடிய நில அதிர்வுகள் (ரிக்டர் அளவுகோல் - 6 வரை) கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அணையின் நீர்மட்டம் 142 அடியாக இருக்கும் போது நில அதிர்வு ஏற்பட்டாலும் அணைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும் வல்லுநர் குழு தெரிவித்துள்ளது. அதனை உச்ச நீதி மன்றமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

முல்லைப் பெரியாறு அணையில் அன்றாடப் பராமரிப்புப் பணிகளை நிறைவேற்றுவதற்குக் கூட, கேரள அரசின் அலுவலர்கள் இடையூறு செய்து வந்துள்ளனர். ஒருமுறை

அணையின் 5 நீர்மட்ட அளவுகோல் பலகையைச் சரிசெய்த போது கூட மறுப்பு தெரிவித்து அதை எடுத்துவிட்டனர். அது மீண்டும் சரிசெய்யப்பட்டது. இவற்றை எல்லாம் தமிழக அரசு உச்ச நீதி மன்றத்தில் 2009, நவம்பரில் தெரிவித்தது. உச்ச நீதிமன்றம் 10.11.2009-இல் அளித்த ஆணையில் மராமத்து பணிகள் மற்றும் சிறு பணிகள் செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை எனக் கூறியுள்ளது. ஆனால், இம்மாதிரி பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இம்மாதிரி பணிகள் இப்பொழுதுதான் நடைபெறுகின்றன எனப் பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகள் சரியானவை அல்ல; மண் அணை மற்றும் வழிந்தோடிகளில் புதர்களை அகற்றுவது, அணைக் கதவுகள் மற்றும் அணைப்பகுதி களில் வர்ணம் பூசுதல், சேதமடைந்த பகுதிகளைச் சரிசெய்தல் போன்ற பணிகள் எல்லா அணைகளிலும் செய்வது போல் இந்த அணையிலும் அவ்வப்போது செய்யப்படும் பணிகளாகும். எனவே, அணையில் செய்யப்படும் பணிகள் அனைத்தும் மராமத்துப் பணிகளே. ஏதோ மூடி மறைத்துச் செய்யப்படும் பணிகள் என்று கூறுவது தவறானதாகும்.

மேலும் அணையினைச் செயலிழக்கச் செய்ய வேண்டும் என்பதற்காகப் பத்திரிகையில் கொடுக்கப்பட்டுள்ள காரணங்கள் யாவும் சரியானவை அல்ல.

ஓர் அணை பழமையானதாக இருந்தாலும், நன்கு ஆய்வு செய்து அணை செறிவூட்டப்பட்டாலோ அல்லது வலுப்படுத்தப்பட்டாலோ (Retrofitted) அதன் ஆயுட்காலம் மீண்டும் புது அணைபோல் இருக்கும்.

முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்த வரையில் அதன் வடிநிலம் அடர்ந்த வனப்பகுதியாக இருப்பதால் அணையின் நீர்ப் பரப்புப் பகுதியில் மண் படிதல் மிகமிகக் குறைவாக உள்ளது. மேலும், இந்த நீர்த்தேக்கத்தில் உபயோகப்படுத்த முடியாத நீர்மட்ட அளவு (Dead Storage) 104 அடியாகும். ஆகையால், மண்படிதல் இந்த நீர்தேக்கத்தைப் பொறுத்த வரையில் ஒரு பொருட்டாகாது. எனவே, அணையைச் செயலிழக்கச் செய்ய இதை ஒரு காரணமாகக் காட்ட முடியாது.

பெரியாறு அணையைப் பொறுத்தவரை 2003-இல் மத்திய

சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு அணையின் நீர்மட்டத்தை முழு கொள்ளளவு உயரமான 152 அடிக்கு நீரை உயர்த்தினாலும் சுற்றுச்சூழலுக்கு எந்தவித பாதிப்பும் வராது என்றும், அது வன விலங்குகளுக்கு உதவியாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது. இதனை உச்ச நீதிமன்றமும் அதன் 27.2.2006 அன்று அளித்த தீர்ப்பில் குறிப்பிட்டு ஆணையிட்டுள்ள து. ("If the lowest water level even after increasing the water capacity of the dam is maintained at the current level, then the increased high water table will make more area available as Vayals, effectively adding some more area to the existing vayals, thereby increasing the carrying capacity of the reserve for ungulates, elephants and in turn of tigers")

இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் பொழுது, உச்சநீதிமன்றம் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட கருத்துகளுக்கு மாறுபட்ட கருத்துகளைப் பத்திரிகை வாயிலாக கேரள அரசின் சார்பில் தெரிவிப்பதும்; தமிழகத்திலே உள்ள சில ஏடுகள் மட்டும், கேரள அரசின் கருத்துகளைப் பெரிதுபடுத்தி வெளியிடுவதும்; நீதிக்கும், நியாயத்திற்கும் நல்லதல்ல. தமிழ கத்தின் பொதுநலனை பாதிக்கும் - தமிழகத்திற்கு எதிரான செய்திகளை, பத்திரிகையில் அச்சியற்றி; தமிழகத்திலேயே அவற்றை விற்பனை செய்து, தொழில் நடத்தும் ஒருசில பத்திரிகைகளின் முகத்திரையை அகற்றி; தமிழக மக்கள், அவற்றை முழுமையாகப் புரிந்து கொள்ளும் காலம் வெகுதொலைவில் இல்லை!

அன்புள்ள,

மு.க.

14-11-2010

3513. மனு தர்மத்திற்கு மறு பிறவி கிடையாது!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா 15-11-2010 அன்று விடுத்த ஆங்கில அறிக்கை ஒன்றில், "Raja had been mocking at all constitutional institutions including the Office of the Prime Minister, the Comptroller and Auditor General of India and even the Supreme Court of India" என்று கூறியிருக்கிறார். அதாவது, பிரதமர் அலுவலகம், தணிக்கைத் துறை, உச்ச நீதிமன்றம் போன்ற அரசியல் சட்ட அமைப்புகளை மத்திய அமைச்சராக இருந்த ஆ.ராசா கேலிக் கூத்தாக்கி விட்டார் என்று ஜெயலலிதா அறிக்கையிலே கூறுகின்றபோது, 25-2-2006 அன்று வருமான வரி வழக்கிலே இதே ஜெயலலிதாவைப் பற்றி உச்சநீதிமன்றம் "You are making a mockery of the Judicial Process. How long you can drag the proceedings" (நீதிமன்ற நடவடிக்கைகளை நீங்கள் (ஜெயலலிதா) கேலிக் கூத்தாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த நடவடிக்கைகளை எவ்வளவு காலத்திற்கு நீங்கள் இழுத்தடிப் பீர்கள்) என்று கேட்டதை மறந்து விடலாமா?

தம்பி ராசா மீது ஜெயாவும் மற்ற எதிர்க்கட்சிகளும் அலைவரிசை ஒதுக்கீடு குறித்து சொல்லுகின்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக அவர்கள் எடுத்து வைப்பது தணிக்கைத் துறை அதிகாரியின் அறிக்கையில் அரசுக்கு ராசா இழப்பினை ஏற்படுத்திவிட்டார் என்பதாகும். அவர்கள் குறிப்பிடுகின்ற தணிக்கைத் துறை அறிக்கை நாடாளுமன்றத்தில் வைக்கப்படுவதற்கு முன்பே அந்த அறிக்கையின் நகல் அனைத்து ஊடகங்களிலும் வெளியிடப்பட்டு விட்டன.

அந்த அறிக்கையிலே உள்ள ஒரு வாசகம் - "Any loss ascertained while attempting to value the spectrum can only be 'presumptive'....." என்றுள்ளது. அதாவது, "அலைவரிசையின் மதிப்பைக் கணக்கிட்டு அதனால் ஏதாவது இழப்பு என்று

சொல்லப்படுவது "அனுமானத்தின்" அடிப்படையிலே மட்டும் சொல்லப்படுவ தாகும்.

எனவே தற்போது லட்சக்கணக்கான கோடி ரூபாய் இழப்பு என்பதெல்லாம் "அனுமானத்தின்" அடிப்படையிலே சொல்லப்படுவதாகும் என்று அவர்கள் ஆதாரமாகக் காட்டுகின்ற தணிக்கை துறை அறிக்கையிலேயே வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது. அனுமானத்தில் சொல்லப்படும் கருத்தின் அடிப்படையில் இறுதித் தீர்ப்பை எழுத முற்படுவது முறை தானா?

தணிக்கை அதிகாரிகளின் அறிக்கை என்பது ஆண்டு தோறும் அரசின் பல்வேறு துறைகளின் வரவு செலவு கணக்குகளைப் பற்றி ஆய்ந்தறிந்து, அறிக்கை அரசுக்குத் தரப்பட்டு, அந்த அறிக்கை நாடாளுமன்றத்திலும், சட்ட மன்றத்திலும் முறையே வைக்கப் பட்டு, அதன் பின்னர் அதிலே கூறப்படும் குற்றச்சாட்டுகள் அந்தந்த துறைகளுக்கு அனுப்பப்பட்டு, துறைகளின் விளக்கங்களைப் பெற்று அவை பொதுக் கணக்குக் குழுவிலே விவாதிக்கப்படும். அ.தி.மு.க. ஆட்சி தமிழகத்திலே நடைபெற்ற நேரத்திலும் இது போன்ற தணிக்கை அதிகாரி களின் அறிக்கைகள் தரப்பட்டு சட்டப் பேரவையிலே வைக்கப்பட்டுள்ளன.

அ.தி.மு.க. ஆட்சியில் அவ்வாறு வைக்கப்பட்ட தணிக்கை அதிகாரியின் அறிக்கை "இந்து" நாளிதழ் உட்பட அனைத்து ஏடுகளிலும் வெளி வந்தது. 3-8-2004 தேதியிட்ட இந்து நாளிதழ் பக்கம் 5-ல் "Short levy / audit report for 2003 – 2004" / Rs. 1033/- crore potential Revenue loss என்ற தலைப்பில் The State Government suffered a loss of Rs. 1033 /- crore potential Revenue in 2003 – 2004 as a result of short levy of Taxes. Besides, it incurred an "avoidable expenditure" of various companies and autonomous bodies under government control was to the tune of Rs. 3681/- crores in the last financial year.

Giving these figures, T. Teethan, Accountant General (audit) for Tamil Nadu , told press persons here today that the aggregate of "Short levy" and "wasteful expenditure" was Rs. 2982 crores in 2002-2003; Rs. 3930 crores in 2001-2002; Rs. 2621 crores in 2000-2001 and Rs.1901 crores in 1999-2000. .....

A Rs. 61 crore cash loss was incurred owing to an excess procurement of 1.75 lakh tonnes of paddy. Poor planning, lack of infrastructure and a defective pricing policy of the Tamil Nadu Housing Board led to blocking of Rs. 96 crores on 18,755 plots under 17 schemes completed."

("விலை குறைவாக நிர்ணயம் செய்தது பற்றிய 2003-2004ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கை - 1033 கோடி ரூபாய் வருவாய் இழப்பு'' என்ற தலைப்பில் முறையாக வரிகள் விதிக்கப்படாததன் காரணமாக 2003-2004ஆம் ஆண்டில் மாநில அரசுக்கு 1033 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டது. அது மட்டு மல்லாமல் அரசு நிர்வாகத்தின்கீழ் உள்ள பல்வேறு நிறுவனங்களின் மூலமாக தவிர்க்கப்பட்டிருக்க வேண்டிய செலவுகள் என்ற வகையில் மட்டும் மாநில அரசுக்கு 3681 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இந்தப் புள்ளிவிவரங்களை வழங்கிய தமிழ்நாடு தலைமை கணக் காயர் திரு. டி. தீத்தன் அவர்கள் முறையாக வரிகள் விதிக்காததன் காரணமாகவும், வீணான செலவுகளின் காரணமாகவும், அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 2002-2003ஆம் ஆண்டில் 2982 கோடி ரூபாய்; 2001-2002ஆம் ஆண்டில் 3930 கோடி ரூபாய்; 2000-2001ஆம் ஆண்டில் 2621 கோடி ரூபாய்; 1999-2000ஆம் ஆண்டில் 1901 கோடி ரூபாய் என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். .....

1.75 இலட்சம் டன் நெல்லை அதிகப்படியாக கொள்முதல் செய்ததன் காரணமாக 61 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. சரியாக திட்டமிடாததாலும், அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தேவையான அளவுக்கு இல்லாததாலும், தவறான விலை கொள்கையாலும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 17 திட்டங்களில் 96 கோடி ரூபாய் மதிப்புள்ள 18,755 மனைகள் விற்பனையாகாமல் உள்ளன.'')

இது மாத்திரமல்ல, அதே நாளைய "இந்து'' முதலமைச்சராக இருந்த ஜெயாவின் துறையைப் பற்றி தணிக்கை அதிகாரி கூறிய செய்தியையும் வெளியிட்டிருந்தது. அதில், "The Comptroller and Auditor General of India (CAG) has criticized the Tamil Nadu Home Department for not following open tender system in purchase of tents for the police. Though the rates quoted by ordinance factories were higher than open market prices, orders were still placed with

them resulting in an extra expenditure, the CAG said in his report for the year ended March 2003 placed in the Legislature." (தலைமைக் கணக்காயர் காவல் துறைக்கு "டெண்ட்''கள் வாங்குவதற்கு திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளி முறையைப் பின்பற்றாததன் காரணமாக உள் துறையை கடுமையாகச் சாடினார். வெளிச் சந்தை விலையைவிட துப்பாக்கி தொழிற்சாலைகள் கொடுத்த விலைப்புள்ளி கூடுதலாக இருந்தபோதிலும், "டெண்டுகள்'' அந்தத் தொழிற்சாலைகளிடமிருந்தே வாங்கப்பட்டன. இதன் காரணமாக அதிகச் செலவு ஏற்பட்டுள்ளது.)

இவ்வாறு தொடங்கி "இந்து'' தணிக்கைத் துறை அதிகாரியின் அறிக்கையையும், அவர் செய்தியாளர்களிடம் வெளியிட்ட தகவல் களையும் விரிவாக வெளியிட்டுள்ளது.

அதே செய்தி அனைத்து நாளேடுகளிலும் வெளி வந்த போதிலும், தமிழ் நாளேடு ஒன்று வெளியிட்ட தலைப்பே, "ஆடிட்டர் ஜெனரல் ஆதாரத்துடன் பேட்டி - ஜெ. ஆட்சியில் ரூ. 11 ஆயிரம் கோடி இழப்பு - மந்திரி, அதிகாரிகளை அடிக்கடி பந்தாடியதால் நிர்வாகம் சீர்குலைந்தது - மத்திய அரசின் மலிவு விலை அரிசி வாங்காததால் ரூ. 66 கோடி நட்டம் - 46 திட்டங்கள் தொடங்காமலேயே ரூ. 3500 கோடி திரும்ப ஒப்படைப்பு'' என்பதாகும். அந்தத் தலைப்பைத் தொடர்ந்து விரிவாக எவ்வாறெல்லாம் தவறுகள் நடைபெற்றன என்று தணிக்கை அறிக்கையிலே எழுதப்பட்டிருந்ததையும், அதைப் பற்றி தணிக் கைத் துறை அதிகாரி அளித்த பேட்டியையும் வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்திகளையெல்லாம் பார்த்ததும் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா என்ன செய்தார்? தணிக்கை துறை அறிக்கையே இவ்வாறு வெளியிட்டுவிட்டது, இதோ நான் பதவியை ராஜினாமா செய்கிறேன், ராஜினாமா செய்தால் மட்டும் போதாது, என்னை நானே கைது செய்து கொள்கிறேன், என்மீது வழக்கு தொடரப்பட வேண்டும் என்றெல்லாம் சொன்னாரா? கிடையாது. என்ன செய்தார் தெரியுமா?

இவ்வாறு தமிழ்நாட்டிலுள்ள தணிக்கை அதிகாரி நிருபர்களிடம் கூறியது என்பது பெரும் அதிர்ச்சியாக உள்ளதாகவும், சுதந்திர இந்திய வரலாற்றில் இதுபோன்று எப்போதும் நடந்ததில்லை என்றும், அரசியல் சாசனத்திற்கு

முரணானது என்றும் எடுத்துக்கூறி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு முழுப் பக்க அறிக்கையினை தணிக்கை அறிக்கை குறித்து செய்தியாளர்களிடம் விளக்கிய ஒரு அதிகாரிக் குப் பதில் கூறி சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு அப்போது வெளியிட்டார். இந்தப் பிரச்சினையை அடிப்படையாக வைத்துத்தான் அறிக்கையாகக் கூட அல்ல, அரசின் சார்பாக விளம்பரமாகவே முழுப் பக்கத்திற்குக் கண்டனம் அப்போது வெளியிடப்பட்டது. தமிழகத்திலும், வட இந்தியாவிலும் வெளிவந்துள்ள ஜெயலலிதாவின் இந்த முழுப் பக்க விளம்பரத் திற்காக மட்டும் தமிழக மக்களின் வரிப்பணம் 1 கோடியே 22 லட்சத்து 81 ஆயிரத்து 100 ரூபாய் கொட்டி அழப்பட்டது.

ஜெயா வெளியிட்ட அந்த முழுப் பக்க விளம்பரமே எப்படி தொடங்குகிறது என்றால்,

“தமிழ்நாடு அரசின் கணக்குகள் மீதான இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் 2002-2003-ஆம் ஆண்டுக்கான அறிக்கை வெகு அண்மையில்தான் -2004 ஜூலையில் தமிழ்நாடு சட்டப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது. இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் அறிக்கை உரிய கால முறையில் தமிழ்நாடு சட்டப் பேரவையில் பொதுக் கணக்குக் குழுவில் விவாதிக்கப்படும். இந்த அறிக்கையில் கடுமையான முறைகேடு எதுவும் சுட்டிக் காட்டப்படவில்லை. சில பொருள்கள் மீது இந்தியத் தணிக்கைத் துறைத்தலைவரின் கருத்தறிவிப்புகளை மட்டும்தான் இந்த அறிக்கை கொண்டுள்ளது. அதைப்பற்றி பொதுக்கணக்குக் குழுவால் உரிய காலமுறையில் விரிவாக விவாதிக்கப்படும். இந்தியத் தணிக்கைத் துறைத்தலைவரின் அறிக்கை மீது பொது கணக்குக் குழு தனது பணியினை முடித்த பின்னரே , இது முழுமை அடையும். .....இவ்வாறு பல நிகழ்வுகளில் கூறப்பட்டிருக்கின்ற இழப்பானது, வெறும் கருத்தியலான இழப்பு என்பதை தணிக்கைத் துறை தலைவரின் அறிக்கையே சுட்டிக்காட்டுகிறது. ஆகவே இந்த விஷயங்களைப் பெரிதுபடுத்திக் காட்டுவதும், இதனால் பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டுவிட்டது என்ற தோற்றத்தை உருவாக் குவதும் சற்றும் முறையானதல்ல.’’

ஜெயலலிதா மீது தணிக்கைத் துறை அதிகாரி குற்றஞ்சாட்டிய போது இப்படியெல்லாம் வியாக்யானம் செய்தவர் தற்போது, எப்படியெல்லாம் தன் தோற்றத்தை மாற்றிக் கொண்டு

தணிக்கைத் துறை அதிகாரியின் அறிக்கையே முடிவான ஒன்று என்றும், அதனையேற்று ராசாவை கைது செய்ய வேண்டும், வழக்கு போடப்பட வேண்டுமென்றும் சொல்வது எத்தகைய ஈனத்தனமான நோக்கம் என்பதை இந்த இரண்டு நடவடிக்கைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே தெரிந்து கொள்ள முடியும்.

ஜெயலலிதா ஆட்சியில் உண்மையிலேயே நடைபெற்று உச்ச நீதி மன்றத்தாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு ஊழல் குறித்துக் கூட, தணிக்கைத் துறை அதிகாரி தாக்கல் செய்த அறிக்கையிலே கூறப்பட்டதை இங்கே நான் நினைவுபடுத்துகிறேன். அதன் தலைப்பே, , "TANSI - Loss of revenue due to failure to follow uniform procedure in disposal of assets" (டான்சி - சொத்துக்களை விற்றதில் முறையான அணுகுமுறையை பின்பற்றாததால் ஏற்பட்ட வருவாய் இழப்பு) என்பதாகும்.

".....the sale of land in all the three defunct units had been effected almost at the same time, in the same locality, the sale price of land of Tansi Foundry to Jaya Publications Limited at Rs. 1350 per square metre was very low when compared to the sale price of Rs. 2080 and Rs, 2100 per square metre obtained in case of sale of land of Tansi Enamelled Wires and Tansi Forgings, respectively. Thus, the Company had not fully explored the possibility of getting a higher rate....."

(ஒரே பகுதியில் இருந்த டான்சி நிறுவனத்திற்குரிய டான்சி எனாமல்டு ஒயர்ஸ் மற்றும் டான்சி போர்ஜிங்ஸ்க்குச் சொந்தமான இரண்டு இடங்களை ஒரு சதுர மீட்டர் 2080 ரூபாய் மற்றும் 2100 ரூபாய் என்ற விலைக்கு விற்றிருக்கும் போது, ஜெயாபப்ளிகேஷன்ஸ் நிறுவனத்திற்கு மட்டும் டான்சி பவுண்டரி நிறுவன இடத்தை ஒரு சதுர மீட்டர் 1350 ரூபாய் என்ற குறைந்த விலைக்கு விற்றிருக்கிறார்கள். எனவே அதிகத் தொகையை பெறுகின்ற வாய்ப்பினை டான்சி இழந்துவிட்டது.)

இந்தக் கருத்து தணிக்கைத்துறை அதிகாரியினால் அறிக்கையிலே எழுதப்பட்டு இன்றளவும் அந்தப் புத்தகத்திலே உள்ள வாசகங்களாகும். தற்போது அரசின் சார்பில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு தகவல் தொழில்நுட்பப் பணிக்காக குத்தகை அடிப்படையில் ஒதுக்கப்பட்ட இடம் குறித்து அறிக்கை வெளியிட்ட ஜெயலலிதா, அந்த இடம் குறைந்த விலைக்குக்

கொடுக்கப்பட்டு விட்டது என்றும், அந்த இடத்திற்குப் பக்கத்திலே உள்ள இடம் அதிக மதிப்பு கொண்டது என்றும் அதன் காரணமாக அரசுக்கு பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு விட்டது என்றும் கூறியிருந்தார். ஜெயலலிதா குறைந்த விலைக்கு வாங்கிய இடம், அவருடைய சொந்த நிறுவனத்திற்காக குறைந்த விலையில் வாங்கப்பட்டதாகும். தற்போது கழக அரசில் ஒதுக்கப்பட்ட இடம் தனியார் ஒருவர் பங்குதாரராக இருந்து, தமிழக அரசின் தொழில் வளர்ச்சிக் கழகத்தோடு இணைந்து தகவல் தொழில் நுட்பப் பணிகளைத் தொடங்கி பல்லாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க விருந்தார் என்ற அடிப்படையில் ஒதுக்கப்பட்டதாகும். ஆனால் அந்தத் தனியார் நிறுவனம் அந்த இடத்தைக் கூட தங்களுக்குத் தேவையில்லை என்று கூறி, அரசுக்கு மனு கொடுத்துள்ளார்கள் என்பதிலிருந்தே, யாரோ ஒரு தனிப்பட்டவருக்கு இந்த அரசு உதவி செய்து விடவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இப்படிப்பட்ட ஜெயலலிதா தேவையில்லாமல் தனது அறிக்கையில் என்னைப் பற்றிக் கூறும் போது, ஊழலே என்னுடைய வாழ்க்கை முறையாக உள்ளதாகத் தெரிவித்திருக்கிறார். என்னைப் பற்றியா உச்ச நீதிமன்ற நீதிபதிகள் வருமானவரி வழக்கில் நீதிமன்ற நடவடிக்கைகளை கேலிக் கூத்தாக்குகிறேன் என்று சொன்னார்கள்? அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை குறைந்த விலைக்கு வாங்கி, அதனைத் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென்று என்னைப் பற்றியா உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கூறினார்கள்? ஜெயாவுக்குத்தானே வேண்டு மென்றே விலையைக் குறைத்தும், முத்திரைக் கட்டணத்தைக் குறைத்தும் வாங்கிய நிலத்தை அரசுக்குத் திரும்ப கொடுத்திட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கொடநாட்டில் எஸ்டேட் வாங்கிக் கொண்டு, மாதக்கணக்கில் ஓய் வெடுத்துக் கொண்டிருப்பவனா நான்? சிறு தாவூரில் தலித் மக்களுக்காக ஒப்படைக்கப்பட்ட நிலத்தையெல்லாம் பறித்துக் கொண்ட தாக ஜெயாவின் தோழமைக் கட்சியாலேயே குற்றம் கூறப்பட்டு, அதற்காக நீதிபதியைக் கொண்டு விசாரித்து, தலித்களுக்காக ஒப்படைக்கப்பட்ட நிலம் கைப்பற்றப்பட்டது உண்மைதான் என்றும், அந்த நிலங்களைத் திரும்பப் பெற வேண்டு மென்றும், அந்த இடத்திற்குப் பக்கத்திலே உள்ள அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தை இன்றளவும் கைப்பற்றி மாளிகை கட்டியிருப்பதிலே அடிக்கடி சென்று

ஓய்வெடுப்பது நானா? ஜெயலலிதாவா? வெளிநாட்டிலிருந்து தன் பெயருக்கு வந்த ஒரு கோடி ரூபாய்க்கான காசோலையை வங்கியிலே உள்ள தன் கணக்கிலே வரவு வைத்துக் கொண்டு, யார் அனுப்பியது என்றே தெரியவில்லை என்று ஊரை ஏமாற்ற நினைத்த ஜெயலலிதா ஊழல் பேர் வழியா? நானா? முதலமைச்சராக ஜெயா பொறுப்பேற்பதற்கு முன்பு 1-7-1991இல் ஜெயாவின் சொத்து மதிப்பு 2 கோடியே 2 இலட்சம் ரூபாய். அவர் முதலமைச்சராக ஐந்தாண்டுகள் பொறுப்பிலே இருந்த பிறகு 30-4-1996இல் ஜெயாவின் சொத்து மதிப்பு 66 கோடியே 45 இலட்சம் ரூபாய் என்றால் அன்றாடம் ஊழலையே வாழ்க்கை முறையாகக் கொண்டிருப்பது நானா? ஜெயலலிதாவா? வருமானத்திற்கு மீறி 64 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாக ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, இன்றளவும் பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பது என் மீதா? அல்லது அந்த வழக்குக்கு ஆண்டுக் கணக்கில் வாய்தா வாங்கிக் கொண்டிருப்பது ஊழல் மகாராணி ஜெயலலிதாவா? நானா? செய்தியாளர்கள் ஒருமுறை ஜெயாவைப் பார்த்து, "உங்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெறுகின்றனவே, இந்நிலையில் நீங்கள் பதவி வகிக்க முடியுமா?'' என்று கேட்டபோது, "உச்ச நீதி மன்றம் வரையில் விசாரிக்க வாய்ப்பும் காலமும் இருக்கிறது. உச்ச நீதிமன்றம் என்னைக் குற்றவாளி என்று தீர்ப்பளித்தால் மட்டுமே நான் குற்றவாளி ஆவேன், அதுவரையில் நான் குற்றவாளி அல்ல, வெறும் குற்றம் சாட்டப்பட்டவர்தான்" என்று பதிலளித்ததையெல்லாம் மறந்துவிட்டு, நான் ஊழலை வாழ்க்கை முறையாகக் கொண்டுள்ளேன் என்று சொல்கிறார் என்றால், எவ்வளவு பெரிய பித்தலாட்டக்காரரை தமிழ்நாடு எதிர்க் கட்சித் தலைவராகப் பெற்றுள்ளது என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகிறது அல்லவா?

இத்தனை உண்மைகளையும் மக்கள் மறந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையில், மனு தர்ம ஆட்சியை மீண்டும் கொண்டு வரலாம் என்று மகிழ்ச்சிக் கூத்தாடும் மமதையாளர்களுக்கு கடைசி எச்சரிக்கையும், அறிவிப்பும் இதுதான்!

“சூத்திரனுக்கொரு நீதி - தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கொரு நீதி”

என்று பாரதி கேட்டது போல் -

“தனக்கொரு நீதி
தஸ்யூகளுக்கொரு நீதி”

என்ற மனு தர்மத்திற்கு தமிழகத்தில் மறு பிறவி கிடையாது!

அன்புள்ள,

மு.க.

17-11-2010

(இன உணர்வுள்ள உடன்பிறப்புகள் ஆங்காங்கு கழக அமைப்புகள் சார்பில் இந்தக் கடிதத்தை முழுமையாக அச்சிட்டு; அவரவர் பகுதிகளில் ஆயிரக்கணக்கில் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.)

3514. வரப்போகும் வெற்றிக்கு வெள்ளோட்டம்!

உடன்பிறப்பே,

கடந்த பதினைந்து நாட்களாக தமிழகம் முழுவதிலும் ஏதோ பொதுத்தேர்தல் நடைபெறுவதைப்போல மிகுந்தபரபரப்பு காட்டப்பட்ட பேருந்துத் தொழிலாளர்கள் சங்கத் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது. தமிழக அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கான ஊதிய உயர்வு ஒப்பந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்கான சங்கத்தைத் தேர்வு செய்வதற்கான தேர்தல்தான் கடந்த 25-ந்தேதி தமிழகமெங்கும் நடைபெற்றது. திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கமான தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், அ.தி.மு.க., தொழிற்சங்கமான அண்ணா தொழிற்சங்கப் பேரவை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழியர் சம்மேளனம் (சி.ஐ.டி.யு.), இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்கள் சம்மேளனம், (ஏ.ஐ.டி.யு.சி.), காங்கிரஸ் கட்சியின் போக்குவரத்து தொழிலாளர் சம்மேளனம் (ஐ.என்.டி.யு.சி), தே.மு.தி.க., பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலை சிறுத்தைகள் ஆதரவுபெற்ற சங்கங்கள் என மொத்தம் 13 தொழிற் சங்கங்கள் இந்தத் தேர்தலில் போட்டியிட்டன. அதிலும் தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்பு தே.மு.தி.க. ஆதரவளித்த சங்கம், வாக்குகள் சிதறாமல் இருக்கவும், தி.மு.க., ஆதரவான தொ.மு.ச.வைத் தோற்கடிக்க வேண்டுமென்பதற்காகவும் அ.தி.மு.க., தே.மு.தி.க., ம.தி.மு.க., ஆகிய கட்சிகளின் ஆதரவானவர்கள் அனைவரும் இணைந்து தோழமை அமைத்து கூட்டணியாக போட்டியிடப் போவதாக அறிவித்து - அது 2011 சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கான முன்னணி என்பதைப் போல நமது தமிழக ஏடுகள் சில, அதற்கு பெரும் முக்கியத்துவம் தந்து, அந்தக் கட்சியின் தலைவர்களின் மிகப்பெரிய “கட்-அவுட்” புகைப்படங்களையெல்லாம் வெளியிட்டு விளம்பரம் செய்தார்கள்.

அ.தி.மு.க., தலைவி ஜெயலலிதாவோ கொடநாட்டில் இருந்தவாறே பஸ் தொழிலாளர்கள் சங்கத் தேர்தலில் அ.தி.மு.க. தலைமையிலான சங்கத்திற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டுமென்று பத்திரிகைகள் வாயிலாக அறிக்கைகளை வெளியிட்டார்.

தமிழகம் முழுவதும் பணியாற்றும் மொத்தம் 1 லட்சத்து 33 ஆயிரத்து 580 ஊழியர்களில், 1 லட்சத்து 28 ஆயிரத்து 377 பேர், அதாவது 96 சதவிகிதத்தினர், இந்தத் தேர்தலில் வாக்களித்தனர். சென்னை குரோம்பேட்டை போக்குவரத்துப் பணிமனை வளாகத்தில் ஓட்டு எண்ணிக்கை 27 ஆம் தேதி காலை 8 மணிக்குத் தொடங்கி, 28ஆம் தேதி பகல் 12 மணி வரை - நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதி அப்துல் ஹாதி அவர்கள் முன்னிலையில் வாக்குகள் எண்ணப்பட்டு ஒவ்வொரு சுற்றாக முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

வாக்கு எண்ணிக்கை தொடங்கியது முதலே திராவிட முன்னேற்றக்கழகத் தொழிற்சங்கமான தொ.மு.ச.தான் முன்னணியில் இருந்து வெற்றி பெற்றது. தே.மு.தி.க., ம.தி.மு.க., உட்பட்ட எட்டு சங்கங்களின் ஆதரவுடன் போட்டியிட்ட, அ.தி.மு.க. தொழிற்சங்கம் இரண்டாவது இடத்திற்குக் கூட வர முடியாமல், மூன்றாவது இடத்திற்கு வந்துள்ளது.

தி.மு.கழகத் தொழிற்சங்கமான தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் 73 ஆயிரத்து 450 வாக்குகளை அதாவது 57.31 சதவிகித வாக்குகளைப் பெற்று முதல் இடத்திலும், - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு சங்கமான சி.ஐ.டி.யு., 19 ஆயிரத்து 2 வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்திலும், - அ.தி.மு.க., தே.மு.தி.க., ம.தி.மு.க., ஆதரவு பெற்ற சங்கங்கள் 15 ஆயிரத்து 765 வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்திலும், - காங்கிரஸ் கட்சியின் ஆதரவு பெற்ற ஐ.என்.டி.யு.சி., சங்கம் 4 ஆயிரத்து 824 வாக்குகளைப் பெற்று நான்காவது இடத்திலும் - பா.ம.க. ஆதரவு தொழிற்சங்கம் 2 ஆயிரத்து 857 வாக்குகளைப் பெற்று 6வது இடத்திலும் - விடுதலை சிறுத்தைகள் ஆதரவு தொழிற்சங்கம் 2 ஆயிரத்து 307 வாக்குகளைப் பெற்று 7வது இடத்திலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு பெற்ற ஏ.ஐ.டி.யு.சி. சங்கம் ஓராயிரத்து 912 வாக்குகளையும் பெற்றுள்ளன.

தி.மு.கழகத் தொழிற்சங்கமான தொ.மு.சங்கம் வெற்றிபெற்று முதல் இடத்திற்குவர வாக்களித்த அத்தனை தொழிலாளர் நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியையும், அந்த வெற்றிக்காக உழைத்த அந்தச் சங்கத்தின் நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தேர்தலில் தொ.மு.ச. விற்கு வாக்களிக்காமல், வேறு சங்கங்களுக்கு வாக்களித்தவர்கள் மீது எனக்கு வருத்தம் இல்லை. அவர்கள் தங்கள், தங்கள் கட்சியின் கட்டுப்பாடு கருதி அவர்களுடைய சங்கங்களுக்கு வாக்களித்திருக்கலாமே தவிர, கழக அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு உதவிகளை செய்யவில்லை, சலுகைகளை அளிக்கவில்லை என்று ஒருபோதும் மனதார எண்ணியிருக்க மாட்டார்கள் என்பதை நான் நன்கறிவேன். அதனால்தான் நான் 27-ந்தேதி மாலையில் வேலூர் பொதுக் கூட்டத்தில் பேசும்போதுகூட, "கம்யூனிஸ்ட் கட்சி சார்புடைய சங்கம் வெற்றி பெற முடியாமல், தி.மு.கழகச் சார்புடைய சங்கம் பெரு வெற்றியைப்பெற்று வருகிறது என்ற செய்தியைக் கேட்டபோது அதற்காக நான் மகிழ்ச்சியை அடையவில்லை. இங்கே பொன்முடி போன்றவர்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். ஆனால் நான் அதற்காக மகிழ்ச்சி அடையவில்லை. "அய்யோ, இடதுசாரி இயக்கத்தினுடைய தோழர்கள், அந்த அமைப்பின் சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெறாமல் போய்விட்டார்களே" என்ற சங்கடம்தான் எனக்கு" என்று குறிப்பிட்டேன்.

அ.தி.மு.க.வின் மீது ஆழ்ந்த பற்றும் பாசமும் கொண்ட போக்குவரத்துக் கழக ஓட்டுநர் ஒருவர் - இந்தத் துறையின் அமைச்சர் தம்பி நேருவைப் பார்த்த போது, "அண்ணே, நான் அ.தி.மு.க. தான், ஆனாலும் தொ.மு.ச. விற்குத்தான் வாக்களிப்பேன், காரணம் கலைஞர் ஆட்சிக்கு வந்தாதான், தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, அனைவருக்குமே ஊதிய உயர்வு, ஊக்கத் தொகை என்றெல்லாம் கொடுப்பார்" என்று சொன்னபோது, நேரு அவரிடம் உன்தோள் மீது அ.தி.மு.க. அடையாளமிட்ட சிறு துண்டை அணிந்திருக்கிறாயே என்றுகேட்க, அதற்கு அவர் அது எப்போதும் என்தோள் மீது தான் இருக்கும், அதை எடுக்க மாட்டேன், இருந்தாலும் இந்தத் தேர்தலில் என் வாக்கு தொ.மு.ச.விற்குத் தான் என்று கூறினாராம். அந்த அளவிற்கு நம்முடைய அரசின் செயல்பாடுகள் இருக்கின்றன

என்பதை அறிந்து எனக்கு நானே மகிழ்ந்து கொண்டே அந்தத் தொழிலாளர்களுக்கு நாம் என்ன செய்தோம் என்று ஒருக்கணம் நினைத்துப்பார்த்தேன்.

அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 2001ஆம் ஆண்டு முதல் 2004-2005ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் போக்குவரத்து தொழிலாளர்கள் 20 சதவிகித போனஸ் வேண்டுமென்று எவ்வளவோ வலியுறுத்திக் கேட்ட போதும், 8.33 சதவிகித அளவிற்குத் தான் போனஸ் கொடுத்தார். ஆனால் அந்தத்தொழிலாளர்களை ஏமாற்றுவதைப் போல தேர்தல் ஆண்டான 2005-2006ஆம் ஆண்டில் மட்டும் 20 சதவிகிதம் போனஸ் என்று அறிவித்து 63.15 கோடி ரூபாய் போனசாகக் கொடுத்தார். ஆனால் தி.மு. கழகம் 2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது முதல் ஒவ்வொரு ஆண்டும் 20 சதவிகிதம் போனஸ் என்ற அளவிற்கு 2006-2007இல் 86.26 கோடி ரூபாயும், 2007-2008ஆம் ஆண்டில் 87.32 கோடி ரூபாயும், 2008-2009இல் 88.27 கோடி ரூபாயும், 2009-2010இல் 88.27 கோடி ரூபாயும், 2010-2011இல் 99.54 கோடி ரூபாயும் போனஸ் மற்றும் கருணைத் தொகை என்ற பெயரால் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது.

சம்பள உச்சவரம்பு அதிகப்பட்சம் ரூ. 3,500 என்பதை ரூ.10,000 ஆக உயர்த்தியும் - தகுதி தொகையை ரூ.2,500லிருந்து ரூ.3,500 ஆக உயர்த்தியும் வழங்கப்பட்டது. இதன் பலனாக 2005-2006இல் ஒரு பணியாளர் பெற்ற அதிகப்பட்சத்தொகை ரூ.6,000 என்பது 2006-2007 முதல் ரூ. 8,400 என்ற அளவிற்குப் பெற்று வருகிறார் என்கிறபோது - போக்குவரத்துத் தொழிலாளர்கள், தொ.மு.ச.வை வெற்றி பெற வைத்ததில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்?

ஐந்தாண்டுகள் என மாற்றப்பட்ட ஊதிய ஒப்பந்தக் காலத்தை மூன்று ஆண்டுகள் என மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது.

2003ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் தொழிலாளர்களோடு ஊதிய ஒப்பந்தம் போட்டபோது, ஊதிய ஒப்பந்தத்தில் - அடிப்படை சம்பளத்தில் 9 சதவிகிதம் என்றும், குறைந்த பட்ச ஊதிய உயர்வு 600 ரூபாய் என்றும் இருந்தது. தி.மு. கழக ஆட்சியில் 2007ஆம் ஆண்டு ஊதிய ஒப்பந்தத்தில் அடிப்படை சம்பளத்தில் 12 சதவிகித ஊதிய உயர்வு என்றும் குறைந்த பட்ச ஊதிய உயர்வு ஆயிரம் ரூபாய் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. மேலும் இந்த ஊதிய ஒப்பந்தத்தில் விலைவாசிப்படி அடிப்படை சம்பளத்தில் சதவிகித முறையில் கணக்கிட ஒப்புக் கொள்ளப்பட்டது. மேலும் ஆண்டு ஊதிய உயர்வுத் தொகை ஒன்றரை மடங்காக உயர்த்தப்பட்டது. ஊதிய ஒப்பந்தத்தால் ஆண்டிற்கு கூடுதல் செலவு 200 கோடி ரூபாய் என்பதிலிருந்தே இந்த அரசுக்கு தொழிலாளர்கள்பால் உள்ள அக்கறையைப் புரிந்துகொள்ள முடியும்.

பணியிலிருந்து ஓய்வு பெற்ற 6278 தொழிலாளர்களுக்கு 31-7-2009 வரை நிலுவையில் இருந்து வழங்கப்பட ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை சுமார் 115 கோடி ரூபாய் அரசால் வழிவகை முன்பணமாக வழங்கப்பட்டது. இந்தத் தொகை மேற்கண்ட தொழிலாளர்கள் தம்குடும்பத்துடன் சென்னைக்கு போக்குவரத்துக் கழகங்களின் ஏற்பாட்டின் மூலமாக அழைத்து வரப்பட்டு காசோலை மூலமாக நேரடியாக வழங்கப்பட்டது. மேலும் ரூபாய் பத்துகோடி அரசால் வழிவகை முன்பணமாக வழங்கப்பட்டு அது ஓய்வுபெற்ற தொழிலாளர் களுக்கு 31-3-2009 வரை நிலுவையில் இருந்த விடுப்பு ஒப்படைப்புத்தொகை வழங்கப்பட்டது.

முதல் முறையாக 17800 பதலி பணியாளர்களுக்கும் 2008-2009ஆம் ஆண்டுக்குரிய போனஸ் வழங்கப்பட்டது. 2009-2010ஆம் ஆண்டிற்கும் வழங்கப்படுகிறது.

ஓட்டுநர்களுக்கான கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி என்பதை எட்டாம் வகுப்பு தேர்ச்சி என குறைக்கப்பட்டுள்ளது. மேலும் தேவையிருப்பின்

நிர்ணயிக்கப்பட்ட உயர அளவான 160 செ.மீ. என்பதிலிருந்து அரை செ.மீ. குறைத்துக் கொள்ளலாம்.

2006 முதல் 2010 வரை, வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக 12,279 பேரும், கருணை அடிப்படையில் 1183 பேரும், பதலிப் பணியாளர்களாக 31,313 பேரும் புதிதாக பணியிலே அமர்த்தப்பட்டுள்ளார் கள். பணியாளர்களின் பதவி உயர்வு என்று எடுத்துக் கொண்டால்,

அ.தி.மு.க. ஆட்சியில் 2005-2006இல் பதவி உயர்வு பெற்றவர்கள் 171 பேர்கள் மட்டுமே; ஆனால் தி.மு.கழக ஆட்சியில் 2006இல் 744 பேர்களும், 2007இல் 1805 பேர்களும், 2008இல் 1119 பேர்களும், 2009இல் 856 பேர்களும் பணியாளர்கள் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள்.

அ.தி.மு.க. வும் ஆட்சியில் இருந்த கட்சி தானே, ஜெயலலிதாவும் முதல் அமைச்சராக இருந்தவர்தானே, அவர் வேண்டுகோள் விடுத்தும் அ.தி.மு.க. சங்கத்திற்கு தொழிலாளர்கள் ஏன் வாக்களிக்கவில்லை என்ற கேள்வி எழலாம். அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போக்குவரத்துத் தொழிலாளர்களின் சலுகைகள் பறிக்கப்பட்டன. அதற்கு உதாரணம் வேண்டுமா?

- போக்குவரத்துப் பணியாளர்களுக்கான ஊதிய ஒப்பந்தக் காலத்தை 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டாக உயர்வு.
- புதிய பணியாளர்கள் நியமனத்திற்குத் தடை.
- போக்குவரத்துக் கழகத்தில் இறந்த தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பு நிறுத்தம்.
- போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு நிறுத்தம்.
- போக்குவரத்துத் தொழிலாளர்களின் கோரிக்கையான போனஸ் மற்றும் ஊக்கத் தொகை 20 சதவிகிதம் தரப்படாததால் போக்குவரத்துத் தொழிலாளர்கள் 17 நாட்கள் வேலை நிறுத்தம்

செய்தனர். தொழிலாளர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அதன் தொடர்ச்சியாக அவர்களுக்குரிய வருடாந்திர ஊதிய உயர்வு, மறுகட்ட ஆய்வின் மூலம் ஊதிய உயர்வு ஆகியவைகள் மறுக்கப்பட்டன.

- ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு தொகை பணியாளர்களுக்கு மறுக்கப்பட்டது. பொங்கல் பண்டிகையின்போது ஆண்டு தோறும் அளித்து வரப்பட்ட செயல் திறன் ஊக்கத்தொகை, நிறுத்தி வைக்கப்பட்டது.
- கல்வி உதவித்தொகை, தொழிலாளர்களின் அதிகப் பட்ச இரண்டு குழந்தைகளுக்குரிய தொகை வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது.

உடன்பிறப்பே,

போக்குவரத்துத் துறையிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு, அலுவலர்களுக்கு தி.மு.கழக ஆட்சியிலே செய்யப்பட்ட நன்மைகளும், அ.தி.மு.க. ஆட்சியிலே செய்யப்பட்ட தீமைகளும்தான் போக்குவரத்து தொழிலாளர் சங்கத் தேர்தலில் நாம் பெற்ற மாபெரும் வெற்றிக்கு முக்கியமான காரணம். போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, கழக அரசு இது போலவே சமுதாயத்திலே உள்ள அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்படக்கூடிய தேவைகளை உணர்ந்து அவைகளை நிறைவேற்றும் பணியிலே தன்னை முன்னிறுத்திக் கொண்டு பணியாற்றுகின்றது. எந்த ஒரு முற்போக்குப் பணிக்கும் வெள்ளோட்டம் விடுவது என்பது எப்போதும் பழக்கமான ஒன்று! அந்த வகையில் 2011-ல் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான வெள்ளோட்டமே தற்போது நடைபெற்று முடிந்துள்ள போக்குவரத்துத் தொழிலாளர்கள் தேர்தலில் கழகம் பெற்றுள்ள வெற்றி! இந்த வெற்றி மேலும் மேலும் தொடர - உன் பணிகள் தொடரட்டும்!

அன்புள்ள,

மு.க.

30-11-2010

3515. கணக்கு காட்டுகிறேன்; கண்ணுடையோர் காண!

உடன்பிறப்பே,

தமிழகத்தின் எதிர்க் கட்சித் தலைவர் அம்மையார் ஜெயலலிதா தொடங்கி, அந்தக் கட்சியிலே உள்ள அடிமட்டத் தொண்டர்கள் வரையிலும் - ஏன், தமிழகத்திலே உள்ள வேறு சில கட்சிகளின் நண்பர்கள் ஒரு சிலரும் - என்னைப் பற்றி குறிப்பிடும் போது - நான் ஏதோ "சல்லிக்காசு" கூட கையிலே இல்லாமல் சென்னைக்கு வந்ததைப் போலவும் - இன்றைக்கு ஆசியாவிலேயே முதலாவது பணக்காரனாக இருப்பதாகவும் - என் பெயரில் ஏராளமான சொத்துக்களையும், எஸ்டேட்டுகளையும் வாங்கிக் குவித்திருப் பதைப் போலவும் பேசி வருகிறார்கள், எழுதி வருகிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் - என்னுடைய சொத்துக்கள் என்ன என்பதைப் பற்றி குறை கூறுபவர்களுக்கும் - அதை நம்பிக் கொண்டிருப்பவர்களுக்கும் ஒரு விளக்கம் அளிக்க வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். என்னதான் அவர்கள் என் குடும்பத்தைப் பற்றி குறைவாக எழுதினாலும், நான் சிசு பருவத்திலே இருந்தபோதே, திருடர்கள் வீடு புகுந்து திருட வருகின்ற அளவிற்கும் - உயர்நிலைப் பள்ளியில் படிக்கவே திருவாரூரில் கொண்டு போய் சேர்க்கக் கூடிய அளவிற்கும் ஓரளவு வசதியுள்ள குடும்பம் தான் என்னுடையது.

எனக்கு 18 வயதாகும்போது "முரசொலி" வாரப் பத்திரிகையைத் தொடங்கி விட்டேன். அப்போதே நாடகங்களை எழுதுகின்ற முயற்சியிலும் ஈடுபட்டேன். திராவிடர்கழகப் பிரச்சாரக் கூட்டங்களிலும் கலந்து கொண்டேன். 1949ஆம் ஆண்டு சேலம் மாடர்ன் தியேட்டர்சில் எழுத்தாளராக பணியிலே அமர்ந்தேன். அந்தக் காலத்திலேயே அதற்காக மாத ஊதியமாக 500 ரூபாய் பெற்றேன். அதே ஆண்டு செப்டம்பர் 17-ந்தேதியன்று ராபின்சன் பூங்காவில் கொட்டும் மழையிலே தி.மு. கழகம் பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப் பட்டபோது, அந்தக் கூட்டத்திலே கலந்து

கொண்டேன். அந்தக் கூட்டத்திற்கு வந்த போது விருதுநகர் நாடார் லாட்ஜில்தான் தங்கினேன். என்னுடைய "மந்திரி குமாரி" நாடகம் சேலம் மாடர்ன் தியேட்டர்சாரால் திரைப்படமாக எடுக்கப்பட்ட போது எங்கள் குடும்ப வாழ்க்கை சேலத்தில் தொடங்கியது. அப்போது சேலம் வந்த கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் என்னைச் சந்தித்து அவருடைய "மணமகள்" திரைப்படத்திற்கு நான் தான் திரைக்கதை வசனம் எழுத வேண்டு மென்று கேட்டு ஒப்புதல் அளித்தேன். அந்தக் காலத்திலேயே அதற்காக 10 ஆயிரம் ரூபாய் ஊதியமாகப் பெற்றேன். அதுபோலவே "இருவர் உள்ளம்" திரைப்படத்திற்காக உரையாடலை நான் எழுதியதுபோது, அந்தப் படம் நூறு நாளைத் தாண்டி ஓடிய காரணத்தால், அந்தப் படத்தின் தயாரிப்பாளர், அருமை நண்பர் திரு. எல்.வி. பிரசாத் அவர்கள் என் இல்லத்திற்கே வந்து முதலில் கொடுத்த பத்தாயிரம் ரூபாயைத் தவிர்த்து, மேலும் பத்தாயிரம் ரூபாயை என்னிடம் அளித்தார். நான் அந்தத் தொகையைக் கொண்டு என்னுடைய சொந்த ஊரான திருக்குவளையில் என் பெற்றோர் பெயரால் ஒரு தாய் சேய் நல விடுதியினைக் கட்டி, அதை அன்றைய முதலமைச்சர் பெரியவர் திரு. பக்தவத்சலனாரை அழைத்துச் சென்று 12-11-1964இல் திறந்து வைத்தேன். பேரறிஞர் அண்ணா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட அந்தக் கட்டிடத்தின் திறப்பு விழாவுக்கு நாவலர் தலைமை தாங்கினார். அப்போது நான் எதிர்க்கட்சியிலே இருந்த போதிலும், முதல் அமைச்சரை அழைத்துச் சென்று அந்த நிகழ்ச்சியினைச் சிறப்பாக நடத்தினேன்.

அந்தக் கால கட்டத்தில் சென்னைக்கே நான் குடி பெயர்ந்து தியாகராய நகரில் ஒரு வாடகை வீட்டில் குடும்பம் நடத்தினேன். அப்போது ஒரு நாள் கலைவாணர் என்னிடம் ஒரு பந்தயம் கட்டி, அதிலே 5000 ரூபாய் எனக்கு இலாபம் கிடைத்தது. அது கண்டு வியப்பும், மகிழ்ச்சியும் அடைந்த கலைவாணர் அதற்கு மேல் தேவையான பணத்தைத் தானே போட்டு எனக்கு ஒரு கார் வாங்கித் தருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றார். மறுநாளே ஒரு புதிய கார் என் வீட்டிற்கு வந்தது. அதிலே என்னை உட்கார வைத்து, கலைவாணரே ஸ்டுடியோவிற்கு அழைத்துச் சென்றார். அந்தக் காரின் எண் கூட எனக்கு நினைவிலே உள்ளது - "வாக்சால்" (Vauxhall) 4983.

இவைகளைத் தொடர்ந்து இன்று வரை 75 படங்களுக்கு மேல் நான் திரைக்கதை வசனம் எழுதி ஊதியம் பெற்றுள்ளேன். 1957ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் குளித்தலை தொகுதியில் நின்று சட்டப் பேரவை உறுப்பினராக ஆனது முதல் இதுவரை தொடர்ந்து பேரவை உறுப்பினராகவோ, மேலவை உறுப்பினராகவோ இருந்து வருகிறேன். முரசொலி நாளிதழும் எத்தனையோ ஏற்ற இறக்கத்துடன் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கிழமை இதழ்களாக குங்குமம், முத்தாரம், வண்ணத் திரை போன்றவைகளும், "ரைசிங் சன்" ஆங்கில இதழும் நான் தொடங்கியவைதான். 1967 முதல் 1969 வரை பொதுப்பணித் துறை அமைச்சராகவும், அதன் பின்னர் ஐந்து முறை முதல் அமைச் சராகவும் இருந்திருக்கிறேன்.

இந்தியாவிலே உள்ள அனைத்து மாநில முதல் அமைச்சர்களையும் எடுத்துக் கொண்டால் எல்லா முதல் அமைச்சர்களுடைய வீடுகளையும் விட வசதி குறைவான எளிமையான வீட்டிலே தான் நான் வாழ்ந்து வருகிறேன் என்பதை வெளிநாட்டிலிருந்து வந்த முக்கிய பிரமுகர்களே நேரில் கண்டு வியப்பு தெரிவித்துள்ளனர். செய்தியாளர்களைச் சந்திக்கக் கூட இடம் இல்லாத அளவிற்கு அவர்களே மிகுந்த சிரமத்திற்கு ஆளாகக் கூடிய வகையிலே உள்ள வீட்டிலேதான் இன்றளவும் வாழ்ந்து வருகிறேன். ஒவ்வொரு முறை முதலமைச்சராக நான் தேர்ந்தெடுக்கப்படும் போதும் பொதுப்பணித் துறை அமைச்சராக பதவியேற்போர் - தம்பி துரைமுருகன் போன்றவர்கள் - அரசு சார்பில் உள்ள வீடுகள் ஒன்றில் நான் தங்க வேண்டுமென்று கேட்டு அழைத்துச் சென்றும் காட்டியிருக்கிறார்கள். எனினும் நான் தங்கி வந்த அதே "ஸ்ட்ரீட் வீடு" என்பார்களே, அதாவது தெருவில் வரிசையாக உள்ள வீடுகளில் உள்ள ஒரு வீட்டிலேதான் வசித்து வருகிறேன்.

இந்த வீடு கூட நான் அமைச்சராக ஆவதற்கு முன்பு 45 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிய வீடு தான். அந்த வீட்டிலே ஒரு சில மாற்றங்கள் உதவியாளர்களின் வசதிக்காக செய்யப்பட்டிருக்கலாம். என் பிள்ளைகள் எல்லாம் கூட திருமணம் ஆகும் வரைதான் இந்த வீட்டிலே இருந்தார்கள். அதற்குப் பிறகு இந்த வீட்டிலே இடம் இல்லாமல் அவர்களே சொந்தத்தில் வீடு வாங்கிக்கொண்டு சென்றிருக்கிறார்கள். என்னிடம் செய்திகளைச்

சேகரிக்க வரும் பத்திரிகையாளர்கள் இந்த வீட்டிலே என்னைச் சந்திக்கும்போது எவ்வளவு இன்னலுக்கு நெரிசல் காரணமாக ஆளாகிறார்கள் என்பதை அவர்களே நன்கறிவார்கள். ஆனால் அந்தப் பத்திரிகையாளர்கள் கூட நான் இத்தனை ஆண்டுக் காலம் இத்தனைப் பொறுப்புகளிலே இருந்தும் கூட, இவ்வளவு எளிமையாக இதே வீட்டில் வாழ்கிறேன் என்பதைப் பற்றி அவர்களே அதை உணர்ந்திருந்த நிலையிலும் அதைப் பற்றி எழுதாமல், அதிலேயும் ஒரு சிலர் - என்னைப் பற்றி அவதூறாக நான் பணக்காரன் என்று எதிர் தரப்பினர் விமர்சனம் செய்வதை எழுதும் போது - அவர்கள் கூட அதை நம்புகிறார்களா என்ற வேதனை என் மனதிலே தோன்றாமல் இருப்பதில்லை.

நான் இத்தனை பொறுப்புகளையும் என்னுடைய 87 வயதிற்குள் பார்த்திருக்கிறேன் என்ற போதிலும் சென்னையில் உள்ள இந்த ஒரு வீட்டைத் தவிர வேறு பெரிய வீடுகளையோ, தோட்டங்களையோ, எஸ்டேட்டுகளையோ விலைக்கு வாங்கியதும் இல்லை. அரசு நிலங்களை ஆக்ரமித்துக் கொண்டதும் இல்லை. குறைந்த விலைக்கு பெற்றுக்கொண்டதும் இல்லை. ஆனால் என்னை ஆசியாவிலேயே பெரிய கோடீஸ்வரன் என்றெல்லாம் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள்.

"சன்" தொலைக்காட்சி தொடங்கப்பட்ட போது என் அருமைக் கண்மணி முரசொலி மாறன் என்னுடன் கலந்தாலோசித்து "பூமாலை" என்ற பெயரில் சிறிய அளவில் ஒரு தொலைக் காட்சி தொடங்கப்பட்டு, அது படிப்படியாக வளர்ந்தது. அதன் நிர்வாகத்தை பேரன் கலாநிதி மாறன் மேற்கொண்டு அவரது அறிவாற்றலால் அந்த நிறுவனம் பல மடங்கு உயர காரணமாக அமைந்தார். ஒரு கால கட்டத்திற்குப் பிறகு - முரசொலி மாறன் மறைவுக்குப் பின்னர் - அந்த நிறுவனத்தைத் தனியாக நடத்த விரும்பி கேட்டதால், என் அன்புப் பேரப்பிள்ளைகள் இருவரின் விருப்பத்தையேற்று - நானும் அதற்கு உடனடியாக ஒப்புக்கொண்டேன். அப்படி பிரிந்து சென்ற நேரத்தில் 2005 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள், "சன்" தொலைக்காட்சி நிறுவனத்தின் சார்பில் எனக்கு 100 கோடி ரூபாய் கொடுத்தார்கள். அந்தத் தொகைக்கான வருமான வரியாக 22 கோடியே 50 லட்சம் ரூபாய் உரிய காலத்தில் முறைப்படி என்னால் செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையான 77 கோடியே 50 லட்ச ரூபாயை என்னுடைய

மகன்களுக்கும், மகள்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தேன். அதிலே எனக்கும் ஒரு பங்காக பத்து கோடி ரூபாய் கிடைத்ததில், ஐந்து கோடி ரூபாயை வங்கியிலே இருப்பு செய்து, அந்தத் தொகையைக் கொண்டு "கலைஞர் கருணாநிதி அறக் கட்டளை" ஒன்று தொடங்கப்பட்டு, அதிலே கிடைக்கின்ற வட்டித் தொகையிலே இருந்து ஏழையெளியோர்க்கு மருத்துவ உதவியாகவும், கல்வி வளர்ச்சி உதவியாகவும் 8-12-2005 முதல் 8-11-2010 வரை 2,145 பேர்களுக்கு 1 கோடியே 72 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறேன்.

வங்கியில் இருப்பு செய்யப்பட்ட இந்த ஐந்து கோடி ரூபாயில் -ஆண்டுதோறும் நல்ல புத்தகங்களை, சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகள் தாங்கிய புத்தகங்களை, எதிர்கால இளைஞர்களுக்கு ஆக்கபூர்வமாக வழி காட்டுகின்ற அறிவார்ந்த புத்தகங்களை எழுதும் சிறந்த எழுத்தாளர்கள் ஐந்து பேரைத் தேர்வு செய்து, அவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் - பொற்கிழியாக வழங்கிட தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்திற்கு ஒரு கோடி ரூபாய் அளிக்கப்படும் என 10-1-2007 அன்று நடைபெற்ற 30வது புத்தகக் கண்காட்சி திறப்பு விழாவிலே அறிவித்தேன். அந்த அறிவிப்பின்படி,

11-1-2007 அன்று அதற்கான காசோலையை புத்தக வெளியீட்டாளர் மற்றும் புத்தகப் பதிப்பாளர்கள் சங்க நிர்வாகிகள், நண்பர் கண்ணதாசன் அவர்களின் அருமைச் செல்வன் காந்தி கண்ணதாசன் போன்றவர்கள் முன்னிலையில் வழங்கினேன். அந்த ஒரு கோடி ரூபாய் நிதியைக் கொண்டு, அந்தச் சங்கம் "கலைஞர் மு.கருணாநிதி பொற்கிழி அறக்கட்டளை" என்ற பெயரில் ஓர் அறக்கட்டளையை ஏற்படுத்தி, அதன் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையில் இருந்து, 2008ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் அந்தச் சங்கத்தின் மூலமே சிறந்த எழுத்தாளர்கள் தேர்வு செய்யப்பட்டு 2008, 2009, 2010 ஆகிய மூன்றாண்டுகளில் மொத்தம் இதுவரை 17 அறிஞர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் பொற்கிழிகள் வழங்கப்பட்டுள்ளன.

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத் தொடக்க விழா 30-6-2008 அன்று நடை பெற்றபோது ஆண்டுதோறும் செம்மொழித் தமிழ் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் அறிஞருக்கு 10 இலட்ச ரூபாய் பொற்கிழி விருது வழங்கிட ஒரு கோடி ரூபாய்

நிதி வழங்கப்படும் என நான் அறிவித்து, அதன்படி செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் "கலைஞர் கருணாநிதி செம்மொழி அறக் கட்டளை" தொடங்கிட 21-7-2008 அன்று ஒரு கோடி ரூபாய் வழங்கினேன். கோவையில் செம்மொழி மாநாடு நடைபெற்றபோது, பின்லாந்து நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் அஸ்கோ பர்போலா அவர்களுக்கு இந்த அறக் கட்டளையின் முதல் விருதாக பத்து இலட்ச ரூபாய் வழங்கப்பட்டது.

2004-2005ஆம் ஆண்டில் "மண்ணின் மைந்தன்" படத்திற்கு திரைக்கதை வசனம் எழுதியதன் மூலம் கிடைத்த ஊதியம் 11 இலட்சம் ரூபாய் - "கண்ணம்மா" படத்திற்குத் திரைக்கதை வசனம் எழுதியதன் மூலம் கிடைத்த ஊதியம் 10 இலட்சம் ரூபாய் இரண்டையும் சேர்த்து 21 இலட்சம் ரூபாயை "சுனாமி நிவாரண நிதி"யாக அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவிடம், தம்பி மு.க. ஸ்டாலின் வாயிலாக நேரில் வழங்கப்பட்டது..

2008ஆம் ஆண்டு, "உளியின் ஓசை" திரைப்படத்தின் மூலம் கிடைத்த ஊதியம் 25 இலட்சம் ரூபாயில் வருமான வரி போக, 18 இலட்சம் ரூபாய் திரைத் துறையிலே பணியாற்றிய நலிந்த கலைஞர்களுக்கு 9-7-2008 அன்று தயாரிப்பாளர் சங்கத் தலைவர், ராமநாராயணன் முன்னின்று ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் என்னால் நேரடியாக வழங்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட "பெண் சிங்கம்" திரைப்படத்திற்காகக் கிடைத்த 50 லட்சம் ரூபாயுடன், சொந்த நிதி 11 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் சேர்த்து - 14-9-2009 அன்று தமிழக அரசின் முதலமைச்சர் நிவாரண நிதியிலே சேர்த்து, தமிழகத்திலே உள்ள அருந்ததிய சமுதாயத்தைச் சேர்ந்த மருத்துவக் கல்வி பயிலும் 56 மாணவர்கள், பொறியியல் கல்லூரிகளில் பயிலும் 1165 மாணவர்கள் என மொத்தம் 1221 மாணவ மாணவியருக்கு தலா 5000 ரூபாய் வீதம் மொத்தம் 61 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் கல்வி வளர்ச்சி நிதியாக 26-10-2009 அன்று தூய்மைப் பணி புரிவோர் நல வாரியத்தின் மூலமாக வழங்கப்பட்டது.

மேலும், தற்போது தயாரிக்கப்பட்டுவரும் "இளைஞன்" திரைப்படத்திற்குரிய கதை வசனம் எழுதியமைக்கு 24.4.2010 அன்று வருமான வரி போக அளிக்கப்பட்ட 45 இலட்சம் ரூபாய் ஊதியத்தைத் தமிழக அரசின் முதலமைச்சர் பொது நிவாரண

நிதியிலே ஒப்படைத்து, அந்தத் தொகையினை - தமிழகத்திலே உள்ள மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் வாயிலாக மாற்றுத் திறனாளிகளின் நலன்களுக்காகச் செலவிட வழங்கப்பட்டது.

23.7.2009 அன்று நடைபெற்ற கலைஞர் காப்பீட்டுத் திட்டத் தொடக்க விழாவில் உரையாற்றியபொழுது சென்னை கோபாலபுரத்தில் நான் வசித்து வருகின்ற வீட்டை, பிற்காலத்தில் ஏழை எளியோர்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் மருத்துவமனையாக மாற்றிட நன் கொடையாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு அதன்படி உரிய பத்திரப்பதிவுகள் செய்யப்பட்டுள்ளன.

14-4-2010 அன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக சென்னை மறைமலைநகரில் நடைபெற்ற அம்பேத்கர் பிறந்த நாள் விழாவில் "அம்பேத்கர் சுடர்" எனும் விருது எனக்கு வழங்கப்பட்ட நிகழ்ச்சியில் தரப்பட்ட 50 ஆயிரம் ரூபாய் பொற்கிழியினை 15-4-2010 அன்று முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் சேர்க்க என்னால் வழங்கப்பட்டது.

25-5-1990 அன்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சார்பாக - "தென் பாண்டிச் சிங்கம்" என்ற பெயரில் நான் எழுதிய நாவல் சிறந்த புதினமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்காக "இராஜராஜன் விருது"ம், அந்த விருதுக்குரிய ஒரு இலட்ச ரூபாய் பொற்கிழியும் எனக்கு அன்றைய குடியரசுத் துணைத் தலைவராக இருந்த திரு.சங்கர் தயாள் சர்மா அவர்களால் ஆளுநராக அப்போதும் இருந்த திரு. பர்னாலா முன்னிலையில் வழங்கப்பட்டபோது, அந்த நிதியை அந்தப் பல்கலைக் கழகத்திடமே திரும்பக் கொடுத்து, அந்தத் தொகைக்குரிய வட்டியினைக் கொண்டு ஆண்டுதோறும் என் பெற்றோர் பெயரால் அறக்கட்டளை சொற்பொழிவுகளை நடத்துமாறு கேட்டுக் கொண்டேன். இந்த ஆண்டு இரண்டு நாட்களுக்கு முன்பு தான் அந்தச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

என்னுடைய பிறந்த நாளன்று மாலைக்குப் பதிலாகவும், பொன்னாடைக்குப் பதிலாகவும் கழகத் தோழர்கள் அளித்த நிதியையும் கூட முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலே தான் சேர்த்திருக்கிறேன். 3-6-1986 அன்று என்னுடைய பிறந்த நாள் விழாவின் போது உண்டியலில் குவிந்த 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயை இலங்கை விடுதலைப் போராளிகள் இயக்கங்களுக்கு

பகிர்ந்தளிப்பது என்று கழகப் பொதுக் குழுவிலேயே முடிவெடுத்து அவ்வாறே வழங்கப்பட்டது. அதைப் போலவே என்னுடைய வேறு சில பிறந்த நாள்களில் உண்டியலில் குவிந்த நிதிகளிலிருந்து மறைமலை நகரில் (காட்டாங் குளத்தூர்) உள்ள சிவானந்த குருகுலத்தில் பயிலும் சிறுவர்களின் கல்வி செலவுகளுக்காக 13-6-1988இல் 50 ஆயிரம் ரூபாயும், 7-6-1993இல் 70 ஆயிரம் ரூபாயும், 6-6-1996இல் ஐந்து இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டன. மேலும் 1994ஆம் ஆண்டு பிறந்த நாளில் அளிக்கப்பட்ட நிதி பெங்களூரில் உள்ள தமிழ்ச் சங்கத்திற்கு என்னால் வழங்கப்பட்டது.

நான் கலந்து கொள்ளும் பல்வேறு நிகழ்ச்சிகளில் எனக்கு பல்வேறு பரிசுப் பொருள்கள் வழங்குவதுண்டு. அவற்றைக் கூட அரசு விழாக்களில் அவைகள் வழங்கப்பட்டால், அவற்றை தலைமைச் செயலகத்திலும், கட்சி நிகழ்ச்சிகளிலே வழங்கப்பட்டவை என்றால் அவற்றை கழகத் தலைமைக் கழகம், அண்ணா அறிவாலயத்திலே உள்ள கருவூலத்திலும் ஒப்படைத்திருக்கின்றேன். இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள, தங்க நாணயங்கள் கோர்க்கப்பட்ட மாலைகள், வெள்ளியிலான பல்வேறு பொருள்கள் எல்லாம் இப்போதும் அண்ணா அறிவாலயத்தில் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருப்பதை யார் வேண்டுமானாலும் சென்று காணலாம்.

இறுதியாக தற்போது என் கணக்கிலே எவ்வளவு இருப்பு உள்ளது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். சன் தொலைக்காட்சி வாயிலாக எனக்குக் கிடைத்த பத்து கோடி ரூபாயில் "கலைஞர் கருணாநிதி அறக் கட்டளை"க்காக ஐந்து கோடி ரூபாய் கொடுத்ததைப் பற்றி நான் முதலில் குறிப்பிட்டிருப்பதைப் போல கொடுத்ததை அன்னியில் - எஞ்சிய 5 கோடி ரூபாயை வைப்பு நிதியாக வங்கியிலே செலுத்தி, அதற்காக கிடைத்த வட்டித்தொகையெல்லாம் சேர்ந்து - தற்போது வைப்பு நிதியாக 5 கோடியே 65 இலட்சத்து 92 ஆயிரத்து 134 ரூபாயும் - சேமிப்புக்கணக்கில் (எஸ்.பி. அக்கவுண்ட்) 35 இலட்சத்து 90 ஆயிரத்து 86 ரூபாயும் இன்றைய தேதியில் உள்ளது.

நான் வசிக்கின்ற இந்த வீட்டைக் கூட மருத்துவமனை அமைப்பதற்காக எழுதிக் கொடுக்க நான் அறிவித்தபோது - நான் வாழ்ந்த இல்லம் என்பதற்காக இதை வைத்துக் கொள்ள வேண்டுமென்று வீட்டார் எண்ணிய போதும், நான் அழைத்து

அவர்களை கையெழுத்திட்டுத் தருமாறு கேட்டபோது மறுவார்த்தை பேசாமல் கையெழுத்திட்டுக் கொடுத்து விட்டார்கள். இந்த ஒரு வீட்டைத் தவிர என் பெயரில் நான் எந்தச் சொத்தையும் வாங்கிடவில்லை, சேர்த்திட வில்லை. தமிழ்த் திரைப்பட உலகத்திலே திரைக்கதை வசனம் எழுதுவதற்காக முதன் முதலில் அதிக ஊதியம் பெற்றவன்; தி.மு. கழகத்திலே சென்னையில் முதன் முதலில் சொந்தமாக ஒரு வீடும், காரும் - நான் எந்தப் பதவி பொறுப்புக்கும் வராத போதே வாங்கியவன் என்ற பெயர் எனக்கு உண்டு என்பதை அனைவரும் அறிவர்.

இதுதான் என்னுடைய சொத்துக் கணக்கு. இதை வைத்துத்தான் நான் ஆசியாவிலேயே முதல் கோடீஸ்வரன் என்கிறார்கள். லஞ்சம், ஊழல் ஆகியவைகளைப் பொறுத்து என் உதவியாளர்கள் கூறுவது போல நான் ஒரு "நெருப்பு" மாதிரி! நான் முதன் முறையாக முதலமைச்சராக இருந்த போதே தஞ்சையில் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் எனக்கு மிகவும் வேண்டிய உயிர் நண்பர் வழக்கறிஞர் தவறு செய்தபோது, அவர் மீது நடவடிக்கை எடுத்து, அதன் காரணமாக அவர் தனது வழக்கறிஞர் பணியினையே செய்ய முடியாத அளவிற்கு ஆயிற்று! அது போலவே தான் சென்னை மாநகராட்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலே இருந்த போது, "மஸ்டர் ரோல்" ஊழல் நடை பெற்றதாக பேரவையிலே குற்றச்சாட்டுகள் கூறப்பட்ட போது, சட்டப்பேரவையிலேயே எழுந்து அந்த மாநகராட்சி மன்றம் கலைக்கப்படும் என்றும், தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்து அவ்வாறே செயல் முறை படுத்தியவன்தான் நான். இன்னும் சொல்ல வேண்டுமேயானால் எனக்கு மிகவும் வேண்டிய நண்பர்களில் ஒருவர் கவிஞர் கருணானந்தம். அவருடைய ஒரே மகன் குலோத்துங்கனுக்கு மருத்துவக் கல்லூரியில் சேர ஒரு மதிப்பெண் குறைந்தது. முதலமைச்சர் மனது வைத்தால் சேர்த்துக்கொள்ளலாம் என்று கேட்டபோது கூட நான் அதற்கு இணங்க வில்லை. அதனால் அந்தக் குடும்பத்துக்கு என் மீது எழுந்த கோபம் இன்னும் தீரவில்லை. இதுபோன்ற சம்பவங்களை நான் எழுதிக் கொண்டே போகலாம். நான் இதையெல்லாம் எழுதுவதற்குக் காரணம் யாரிடமும் சான்றிதழ் பெறவேண்டும் என்பதற்காக அல்ல, என்னுடைய குணம், இயல்பு அப்படி என்பதை என் மீது குறை காண்போர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

என் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், உற்றார் உறவினர்கள் அவரவர்கள் உழைத்து, ஒரு சிலர் தங்களுக்கென வீடுகளையோ, சொத்துக்களையோ வாங்கியிருக்கலாம். ஆனால் அதற்காக நான் எந்தவிதமான நிதி உதவியோ, அரசு சார்பிலான உதவியோ செய்தது இல்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் உறுதிப் படுத்திட விரும்புகிறேன்.

நான் பல முறை சொல்லியிருப்பதுபோல மிக மிகச் சாதாரணமான, சாமான்யமான குடும்பத்திலே பிறந்த என்னை, இந்த அளவிற்கு தமிழ் நாட்டு மக்களுக்காக உழைப்பேன் என்ற நம்பிக்கையோடு ஐந்து முறை முதலமைச்சராக்கி, 1957 முதல் 11 முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, 1969 முதல் நாற்பதாண்டு காலத்திற்கு மேலாக ஒரு கட்சியின் தலைவராக்கி இருக் கிறார்கள் என்றால், திராவிடத் தமிழ் மக்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு நன்றி செலுத்துகின்ற நேரத்தில் என் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம் என்பதை அவர்களுக்கெல்லாம் தெளி வாக்கிடவும், என் மீது இன்னமும் குறை காண்கின்ற ஒரு சிலரும் என்னைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் இந்தக் கடிதத்தை எழுதியுள்ளேன். என் எஞ்சியுள்ள காலத்தையும் திராவிடத் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகவே செலவிடுவேன் என்ற உறுதி கூறி - என்றைக்கும் ஏழையெளிய மக்களின் கவலை தீர்ப்பதையும், கண்ணீர் துடைப்பதையும் கடமையாகக் கொள்வேன் என்பதற்காகவே இந்தக் கணக்கைக் காட்டி யிருக்கிறேன், கண்ணுடையோர் காண்பதற்காக! முகத்தில் இரண்டு புண்ணுடையோர்க்கல்ல!

அன்புள்ள,

மு.க.

2-12-2010

3516. ஒய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்...!

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. ஆதரவு நாளேடுகளில் இன்று (9-12-2010) "கருணாநிதி ஆட்சியில் கொள்ளை போகும் அரசு நிலங்கள்" என்ற தலைப்பில் தி.மு.க., எம்.எல்.ஏ., மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு வீட்டுமனை வழங்கப்பட்டதாக பெரிய அளவில் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்கு நான் தெளிவாக நேற்றைய தினமே பதில் அறிக்கை கொடுத்திருந்தபோதிலும், அதே குற்றச்சாட்டு மீண்டும் வந்திருப்பதால், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்த வீட்டு மனைகள் யார் யாருக்கு வழங்கப்பட்டன என்பதை சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

ஜெயலலிதா ஆட்சியில் தலைமைச் செயலாளராக இருந்த திரு.என்.நாராயணன், ஐ.ஏ.எஸ்.க்கு 1993ஆம் ஆண்டு 4115 சதுர அடி; முன்னாள் அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் மகன் கே.எஸ். கார்த்தீசன் என்பவருக்கு பெசண்ட் நகர் பகுதியில் 1995ஆம் ஆண்டு 4535 சதுர அடி; முன்னாள் அமைச்சர் நாகூர் மீரான் துணைவியார் நூர் ஜமிலாவுக்கு கொட்டி வாக்கத்தில் 1993ஆம் ஆண்டு 2559 சதுர அடி; நாடாளுமன்ற உறுப்பினர் தம்பிதுரை மனைவி டாக்டர் பானுமதி தம்பிதுரைக்கு அண்ணா நகரில் 7 கிரவுண்ட் நிலம்; அ.தி.மு.க. வின் தொழிலாளர் பேரவைக்கு அண்ணா நகரில் 3 கிரவுண்ட் நிலம்; அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் எஸ்.எம். வேலுச்சாமியின் மனைவி திருமதி பானுமதிக்கு கோவையில் 1993ஆம் ஆண்டு வீடு, 2004ஆம் ஆண்டு தேவாரம், ஐ.பி.எஸ்., கே. விஜயகுமார், ஐ.பி.எஸ்., ஆர். நடராஜ், ஐ.பி.எஸ்., உட்பட பல ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு சோளிங்கநல்லூரில் தலா 4800 சதுர அடி; நீதியரசர் எஸ்.ஆர். சிங்காரவேலு அவர்களுக்கு 2005ஆம் ஆண்டு சோளிங்கநல்லூரில் இரண்டு மனைகள், சட்டமன்ற உறுப்பினராக இருந்த கே. செல்வராஜ் என்பவருக்கு

1994ஆம் ஆண்டு கொட்டிவாக்கத்தில் 2692 சதுர அடி, முன்னாள் முதலமைச்சரிடம் துணைச் செயலாளராக இருந்த டி.நடராஜன், ஐ.ஏ.எஸ்.க்கு 1995ஆம் ஆண்டு திருவான்மியூரில் 6784 சதுர அடி; ஆதி. ராஜாராமுக்கு 1995இல் 3101 சதுர அடி., 1993இல் சட்டமன்ற உறுப்பினராக இருந்த சரஸ்வதிக்கு அண்ணா நகரில் 880 சதுர அடி; சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த மல்லிகா வுக்கு அண்ணா நகரில் 950 சதுர அடி; எம்.ஜி. ஆருடைய ஓட்டுநர் பூபதிக்கு நந்தனத்தில் 3600 சதுர அடி; எஸ்.ஆண்டித் தேவரின் மனைவி பிலோமினாவுக்கு 1994இல் மதுரையில் 1500 சதுர அடி என்று ஒரு நீண்ட பட்டியல் உள்ளது. 2005ஆம் ஆண்டு பலருக்கு இரண்டு மனைகள் கொடுக்கப்பட்ட நீண்ட பட்டியலும் உள்ளது.

எனவே அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சர்களின் மனைவி, மகன் பெயர்களிலும், அ.தி.மு.க. தொழிற்சங்க அலுவலகத்தின் பெயரிலும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் பெயரிலும், அ.தி.மு.க. சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் பெயரிலும், அ.தி.மு.க. மாவட்டச் செயலாளரின் மனைவி பெயரிலும், நீதியரசர்கள் பெயரிலும் இத்தகைய வீடுகள், மனைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதற்கு ஒரு சிலவற்றை மட்டும் சான்றாகக் குறிப்பிட்டுள்ளேன். தி.மு.கழக ஆட்சியில் வீட்டுமனைகள் ஒதுக்கீட்டில் தவறு நடந்துவிட்டதாக முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்ட பத்திரிகையாளர்கள் எல்லாம் அ.தி.மு.க. ஆட்சியில் யார் யாருக்கு இத்தகைய வீடுகள், மனைகள் தரப்பட்டன என்ற முழு விவரத்தையும் தங்கள் புலன் விசாரணையின் மூலம் தெரிந்து இனியாவது வெளியிட்டால், அவர்களின் பத்திரிகா தர்மத்தைப் பாராட்டலாம்.

பத்திரிகைகள் இன்று ஜெயலலிதா விடுத்துள்ள ஒரு அறிக்கையையும் வெளியிட்டிருக்கிறார்கள். எந்த அளவிற்கு ஜெயா குழப்பம் அடைந்திருக்கிறார் என்பதற்கு ஆதாரம் தேடி நாம் வேறெங்கும் செல்லத் தேவையில்லை. அவருடைய அறிக்கையைப் பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம். 6-12-2010 அன்று ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கை எப்படித் தொடங்குகிறது தெரியுமா?

“ரோம் நகரம் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்த போது நீரோ மன்னன் பிடில் வாசித்தது போல, வெள்ளத்தால் தமிழக மக்கள்

அல்லல் பட்டுக் கொண்டிருக்கையில், தன்னுடைய "இளைஞன்" திரைப்பட பாடல் வெளியீட்டு விழாவிலே கலந்துகொண்டு உல்லாசமாக பொழுதை கழித்துக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர் கருணாநிதி" - இப்படித்தான் 6-ந்தேதிய ஜெயா அறிக்கை தொடங்குகிறது.

8-12-2010 அன்று மீண்டும் ஜெயலலிதாவின் அறிக்கை ஒன்று வந்துள்ளது. அந்த அறிக்கை எப்படித் தொடங்குகிறது தெரியுமா?

"ரோம் நகரம் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தபோது எப்படி நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தாரோ, அதேபோல் கன மழை காரணமாக தமிழகமே வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில், தன்னுடைய அமைச்சரவை சகாக்களுடன் திரைப்பட விழாவில் ஆனந்தமாக பொழுதைக் கழித்து இருக்கிறார் கருணாநிதி" - இந்த இரண்டு அறிக்கைகளுக்கும் என்ன வித்தியாசம் என்பதை தமிழ்நாட்டு மக்கள்தான் புரிந்து கொள்ள வேண்டும். 6-ந்தேதி வெளியிட்ட அறிக்கையை எப்படித் தொடங்கினோம் என்பது கூடத் தெரியாமல், 8-ந்தேதி அறிக்கையைத் தொடங்குகிறார் என்றால் அதற்கென்ன காரணம்? ஆத்திரமா? அறியாமையா? திரைப்படத் துறை விழாவிலே நான் கலந்து கொண்டுவிட்டேன் என்ற வயிற்றெரிச்சலா? அல்லது தன்னை யாருமே அழைக்க வில்லையே என்ற பொறாமையா? இந்த லட்சணத்தில்தான் நான் கோமாளித்தனமான அறிக்கைகளை விடுவதாக எழுதியிருக்கிறார் இந்தக் கொடநாடு கோடீஸ்வரி!

அடுத்து ஜெயலலிதா தனது அறிக்கையில் என்ன சொல்கிறார் தெரியுமா? "இதில் திடுக்கிட வைக்கும் உண்மை என்னவென்றால், ஒட்டுமொத்த தமிழக அமைச்சரவையும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதுதான்" என்று எழுதியிருக்கிறார். இதில் ஒரு வயிற்றெரிச்சல்! இந்த அம்மையாரின் ஆட்சிக் காலத்தில்தான் இவர் கலந்து கொள்கின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அமைச்சரவையிலே உள்ள அத்தனை பேரும் சென்று கலந்து கொள்வார்கள். ஏன், தற்போது முதல் அமைச்சராக இல்லாத இந்தக் காலத்திலே கூட, இவர் கோவை, திருச்சி, மதுரை நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டபோது, இவரது அமைச்சரவை முன்னாள் சகாக்கள், இன்றைய அ.தி.மு.க. முன்னணியினர் அத்தனை பேரும் சென்று கலந்து கொண்டார்கள்.

ஆனால் இப்போது என்ன நிலைமை? 7ஆம்தேதியன்று அமைச்சரவைக் கூட்டம். 5ஆம் தேதியன்று காலையில் புதுக்கோட்டை மாவட்டக் கழகத்தின் ஆய்வுக் கூட்டம். அந்தக் கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் என்ற முறையில் நிதியமைச்சர் பேராசிரியர், பொருளாளர் என்ற முறையில் துணை முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின், முதன்மை செயலாளர் என்ற முறையில் ஆற்காடு வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர்கள் என்ற முறையில் துரைமுருகன், பரிதி இளம்வழுதி ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த அமைச்சர்களில் அன்று மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பேராசிரியரைத் தவிர மற்ற நான்கு அமைச்சர்கள் கலந்து கொண்டனர். இந்த நான்கு பேரைத் தவிர 6-ந்தேதி விழுப்புரத்தில் நடைபெறவிருந்த நிகழ்ச்சிக்காக துணை முதல்வர் ஸ்டாலினை அழைத்துச் செல்வதற்காக வந்த உயர்கல்வி அமைச்சர் பொன்முடி, எ.வ. வேலு ஆகியோர் திரைப்பட விழாவிலே கலந்து கொண்டார்கள். மொத்தம் 29 அமைச்சர்களில் ஆறேழு பேர்தான் அந்த விழாவிலே கலந்து கொண்டார்கள். ஆனால் ஜெயலலிதா ஒட்டு மொத்த தமிழக அமைச்சரவையும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டதாக அறிக்கை விடுகிறார் என்றால், அதற்கு என்ன பெயர் சொல்வது?

இந்த ஆறேழு பேரிலும், துணை முதல்வர், பொன்முடி ஆகியோர் நிகழ்ச்சி முடிந்தவுடன் இரவு 9 மணிக்கு மேல் சென்னையிலிருந்து புறப்பட்டு விழுப்புரம் சென்று பல்வேறு நிகழ்ச்சிகளிலும், கடலூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் சுற்றிப் பார்த்து விட்டு நிவாரண உதவிகளை வழங்கிவிட்டு, மீண்டும் 7ஆம் தேதி அமைச்சரவையிலே கலந்து கொள்ள வந்துவிட்டார்கள்.

ஜெயலலிதா மேலும் அவருடைய அறிக்கையிலே வெள்ள நிவாரணப் பணிகளைப் பற்றி இந்த அரசு கவலைப்படவில்லை என்றும் ஒரு குற்றச்சாட்டினைக் கூறியிருக்கிறார். அதுவாவது உண்மையா? அமைச்சர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மூத்த ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் அன்றாடம் வெள்ளப் பகுதிகளையெல் லாம் பார்வையிட்டு அரசுக்கு அறிக்கை கொடுத்ததின் பேரில், தமிழக அமைச்சரவையே கூடி விவாதித்து பல்வேறு உதவிகளைச் செய்ய முடிவெடுத்துள்ளது. மத்திய அரசிடம் உதவி கோரிப் பெறுவதென அமைச்சரவையில் முடிவெடுத்து,

அதற்கான கடிதமும் அனுப்பப்பட்டு விட்டது. ஆனால் வெள்ள நிவாரணப் பணிகளிலே நான் அக்கறை செலுத்தவில்லை என்று ஜெயலலிதா அறிக்கை விடுகிறார் என்றால் அதிலே ஏதாவது பொருள் இருக்கிறதா? கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது - தமிழ்நாட்டில் பிணங்கள் விழுந்தபோது - கோவா கடற்கரையில் கும்மியடித்துக் கொண்டு 'டூயட்' பாடிக்கொண்டிருந்தவர் இதே ஜெயலலிதா!

கூட்டணிக் கட்சியை நான் ஏதோ மிரட்டுவதாகவும் ஜெயலலிதா தனது அறிக்கையிலே வழக்கம் போல உளறியிருக்கிறார். பா.ஜ.க. ஆட்சியிலே இருந்தபோது விடுதலை நாளன்று கூட ஜெயலலிதா மிரட்டியதாகவும், தனது வாழ்நாளிலேயே ஜெயலலிதாவோடு கூட்டணியிலே இருந்த காலம்தான் மோசமான காலம் என்றும் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் கூறியதை தமிழ்நாட்டு மக்கள் மறந்திருப்பார்கள் என்று ஜெயா நினைக்கிறாரா?

நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணையை ஒப்புக் கொள்கிற வரையில் எதிர்க்கட்சிகளின் போராட்டம் ஓயாது என்று ஜெயலலிதா அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் இவர்தான் ஏகத் தலைவி என்று தானாகவே கற்பனை செய்துகொண்டு அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். நினைப்பு தான் பொழப்பை கெடுக்கும் என்று சொல்வார்களே அதுபோலத்தான் எப்படியாவது, ஏதாவது நடக்காதா, அதன் மூலமாக தனக்கு விடிவு காலம் பிறக்காதா என்றுதான் ஏங்குகிறார். இதற்கிடையே கழக அரசின் சார்பில் செய்யப்படும் சாதனைகள், திட்டங்கள் கண்டு அசூயை கொண்டு, மற்றவர்கள் என்னைப் பாராட்டினால் இவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதிலும் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், காவியக் கவிஞர் வாலி, கவிப்பேரரசு வைரமுத்து போன்றவர்கள் அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு என்னைப் பாராட்டியதை எப்படி அவரால் பொறுத்துக்கொள்ள முடியும்? அதனால்தான் அறிக்கையிலே அநாகரிகமான வார்த்தைகளையெல்லாம் பயன்படுத்துகிறார்.

இறுதியாக ஜெயலலிதா தனது அறிக்கையை முடிக்கும்போது "தான் செய்த பாவங்களுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பது கருணாநிதிக்குத் தெரியும்" என்று எழுதியிருக்கிறார். செய்த பாவங்களின் பலனை தற்போதே

அனுபவித்துக் கொண்டிருக்கும் ஜெயலலிதா என்னுடைய நாள் நெருங்கிக்கொண்டிருக்கின்றது என்பதை ஏதோ அவரது வார்த்தை மூலம் சொல்லியிருந்தால், அதற்காக கவலைப்படுபவன் அல்ல இந்தக் கருணாநிதி!

அடுத்து ஜெயலலிதா தனது அறிக்கையில் நான் காங்கிரசை மிரட்டுவதாகவும் ஸ்பெக்ட்ரம் ஊழலில் காங்கிரசுக்கும் தொடர்பு உண்டு என்பதைப்போல கருத்து தெரிவித்தாகவும் அவராகவே சொல்லிக் கொண்டு தி.மு.க. விற்கும், காங்கிரசுக்கும் இடையே கலகம் ஊட்டுகின்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளார். நான் "இளைஞன்" பாடல்கள் வெளியீட்டு விழாவிலே பேசும்போது, ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 352 கோடி ரூபாய் ஊழல் என்று சொன்னால், அது எவ்வளவு பெரிய தொகை, அந்தத் தொகையை ஊழல் செய்திருக்க முடியுமா? என்று பேசினேன். உடனே ஜெயலலிதா காங்கிரசை மிரட்டுவதாக வழக்கம் போல சிண்டு முடியப்பார்க்கிறார். அவரது எண்ணம் நிறைவேறாது.

அன்புள்ள,

மு.க.

10-12-2010

3517. என்னதான் எரிச்சலோ; இந்தச் சில ஏடுகளுக்கு?

உடன்பிறப்பே,

மத்திய தணிக்கைத் துறை அதிகாரியினால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையிலே காணப்படும் ஒரு தணிக்கை குறிப்பிலே ஒரு இலட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய், மத்திய அரசுக்கு இழப்பு ஏற்பட்டுவிட்டது என்பதைச் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து - நாடாளுமன்றம் இருபது நாட்களாக நடைபெறாத நிலை ஏற்பட்டு, அதனாலேயே பல கோடி ரூபாய் நாட்டிற்கு இழப்பு என்று ஏடுகள் அன்றாடம் செய்திகளைத் தாங்கி வெளிவருகின்றன. இதே தணிக்கைத் துறை அறிக்கை ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு பாராளுமன்றத்தில் வைக்கப்பட்ட போதுகூட, அதிலே இதே அலைக்கற்றை ஒதுக்கீடு காரணமாக பலகோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்த போதிலும் - அப்போது அதற்கு யாரும் முக்கியத்துவம் தராத காரணத்தினால், வெளி உலகத்திற்கே அது தெரியாமல் போய்விட்டது.

தணிக்கைத் துறை அறிக்கை ஒவ்வொரு ஆண்டு கணக்கு வழக்குகள் பற்றி அவையிலே தாக்கல் செய்யப்படுவதைப் பற்றியும், அந்த அறிக்கையை பொதுக்கணக்குக் குழுவிற்கு அனுப்பி அந்த அறிக்கையிலே கூறப்படும் குறைபாடுகள் குறித்து உரிய துறையிடம் விளக்கம் கேட்டு, குழுவின் அறிக்கையாக சட்டப்பேரவையில் அடுத்து வரும் ஆண்டுகளில் அளிக்கப் பெறுவதும் பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் நடைமுறை யாகும்.

எந்த அரசு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும், அரசுத் துறைகளின் திட்டச் செயல்பாடுகள் குறித்து தணிக்கை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்படும் குறைபாடுகளை, எதிர்க்கட்சிகள் எடுத்துக்காட்டுவதும், அதற்கு ஆளுங்கட்சியின்

சார்பில், உங்கள் ஆட்சிக் காலத்திலும் இதுபோன்ற குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று எடுத்துக் காட்டுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒன்றாகும்.

இந்த வகையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குறித்த 2008-2009 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு குறைபாட்டிற்கு ஆங்கில நாளிதழ் ஒன்று - தமிழக அரசுக்கு இதன்மூலம் ஏதாவது களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற உள்நோக் கத்துடன் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டிருக்கிறது.

அந்த ஆங்கில நாளிதழ் அந்தச் செய்திக்கு எழுதியுள்ள தலைப்பே - Tamil Nadu Housing Board loses Rs. 5.17 Crore – (தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு 5.17 கோடி ரூபாய் இழப்பு) என்பதாகும்.

தமிழக வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடு குறித்த விளக்கத்தை வீட்டு வசதி வாரியம் தனியே பொதுக் கணக்குக் குழுவிற்கு அனுப்பும் என்ற போதிலும், உள்நோக்கத்தோடு வெளியிடப்பட்டுள்ள இந்தச் செய்தி பற்றி விளக்கம் அளிக்கலாம் என்று எண்ணுகிறேன்.

நாளிதழில் வந்துள்ள செய்தி வருமாறு :-

"தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் முகப்பேர் ஏரியில் உள்ள 158 உயர் வருவாய் அடுக்கு மாடிக் குடியிருப்புகளைக் கட்டி முடித்து பல ஆண்டு கழித்து எவ்வித மாற்றமும் இன்றி விற்பனை செய்தது - நில விலையில் எவ்வித மாற்றமும் செய்யாததால் ஏற்பட்ட வருமான இழப்பு - விண்ணப்பங்கள் பதிவுக் கட்டணத்தை விதிமுறைகளுக்கு மாறாக உயர்த்தியதால் பொதுமக்களுக்கு திரும்ப வழங்க வேண்டிய நிலையினால் ஏற்பட்ட வருமான இழப்பு - என 5 கோடியே 17 லட்சம் ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது!

முகப்பேர் ஏரித் திட்டம் அண்ணா நகர், கோயம்பேடு பேருந்து நிலையம் ஆகியவற்றின் அருகிலே இருப்பதால்

ஒரு கிரவுண்ட் விலை சுமார் 50 லட்சம் அளவிற்கு மதிப்புள்ள நிலையில் - வீட்டு வசதி வாரியம் 2007 ஆம் ஆண்டு மதிப்பு ஒரு கிரவுண்ட் 7.20 லட்சம் என்று விலை நிர்ணயம் செய்துள்ளது. நிலத்தின் மதிப்பை இப்படிக் குறைத்து மதிப்பிட்ட காரணத்தால் வாரியத்திற்கு ஒரு கோடியே 15 லட்சம் ரூபாய் இழப்பு.

இவ்வாறு விலையைக் குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டதால் மிகப் பெரிய அளவில் பொதுமக்களிடமிருந்து இரண்டு இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. விண்ணப்பதாரர்கள் தங்கள் மனுக்களுடன் பதிவுக் கட்டணமாக வழக்கமாக கட்ட வேண்டிய 200 ரூபாய்க்குப் பதிலாக 400 ரூபாய் வசூலிக்கப்பட்டது. வீடு ஒதுக்கீடு கிடைக்காத விண்ணப்பதாரர்களுக்கு பதிவுக் கட்டணமாக அவர்கள் செலுத்திய 3.46 கோடி ரூபாயைத் திருப்பிக் கொடுத்ததால் இந்த இழப்பு ஏற்பட்டுள்ளது. பதிவுக் கட்டணத்தை 200 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தாமல் இருந்திருந்தால் - வீடு ஒதுக்கீடு கிடைக்காத விண்ணப்பதாரர்களுக்கு அவர்கள் செலுத்திய 3.46 கோடி ரூபாய் திரும்பக் கொடுக்க வேண்டியிருந்திருக்காது. வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்காது."

இவ்வாறு ஆங்கில நாளிதழ் பெரிதாக செய்தியினை வெளியிட்டு - வீட்டு வசதி வாரியத்தில் பெரிய முறைகேடு ஏற்பட்டு விட்டதைப் போலவும் - 5 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுவிட்டதைப் போலவும் - அந்தத் தொகை இழப்புக்கு இந்த அரசுதான் காரணம் என்பதைப் போல மக்கள் கருதிக் கொள்ள வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு அதனை வெளியிட்டிருக் கின்றார்கள். அதிலும் தணிக்கைத் துறை அதிகாரியே இதனைக் குறிப்பிட்டிருப்பதாகவும் அந்த ஏட்டில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் நடந்தது என்ன?

முகப்பேர் ஏரித் திட்டம் என்பது 1998 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டப்பட்டு - பின்னர் 2004 ஆம்

ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் விற்பனையாகாமல் போன அடுக்குமாடிக் கட்டிடங்கள் மற்றும் வீடுகளுக்கு மதிப்பினைக் குறைக்க முடிவு செய்யப்பட்டு, ஒரு கிரவுண்ட் விலை 2 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டது.

இந்தத் திட்டத்தின்படி 250 குடியிருப்புகள் 1998ஆம் ஆண்டு கட்டப்பட்டன. கட்டப்பட்ட காலத்தில் விலை அதிகம் என்று கூறி அந்த வீடுகளை வாங்க அதிகமாக யாரும் முன் வரவில்லை. 80 குடியிருப்புகள் மட்டுமே விற்பனையாகி மீதி 170 குடியிருப்புகள் விற்கப்படாமல் இருந்தன. அந்த நிலையில் கடந்த ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 26-12-2005 அன்று அந்த அடுக்குமாடி குடியிருப்புகளை டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மாணவர்கள் தங்குவதற்கான விடுதியாகப் பயன்படுத்த வாடகைக்கு விடப்பட்டு - பிறகு கழக ஆட்சிக் காலத்தில் 2008ஆம் ஆண்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் அந்த வீடுகள் காலி செய்யப்பட்டு வாரியக் கட்டுப்பாட்டுக்குள் அவை வந்தன.

மாணவர்கள் அந்த விடுதியில் சுமார் பத்தாண்டு காலம் தங்கியிருந்த நிலையில் அந்தக் குடியிருப்புகள் எல்லாம் ஓரளவிற்கு பழுதடைந்ததாகி விட்டது. எனவே வீட்டு வசதி வாரியம் அந்தக் குடியிருப்புகளையெல்லாம் குலுக்கல் முறையில் விற்பனை செய்வதென்று முடிவெடுத்து அறிவித்தது. இந்த 170 மனைகளை வாங்க சுமார் இரண்டு இலட்சம் மனுக்கள் வந்தன. விண்ணப்பித்த மனுதாரர்களிடமிருந்து பதிவுக் கட்டணமாக 400 ரூபாய் வீதம் வசூலிக்கப்பட்டது. குலுக்கல் முறையில் வீடு கிடைத்தவர்கள் போக எஞ்சியிருந்த 1 லட்சத்து 73 ஆயிரத்து 288 பேர் என்ற எண்ணிக்கை அதிகமாக இருந்ததாலும், அவர்கள் தங்களுக்கு வீடு கிடைக்கா விட்டாலும் தாங்கள் கட்டிய பதிவுக் கட்டணம் 400 ரூபாயைத் திரும்பத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர்.

முறையான கோரிக்கைகளையேற்று பரிசீலிக்கும் மரபை கையாண்டு வரும் இந்த அரசு, அவர்களின் கோரிக்கைகளையேற்று 22-8-2008 ஆணை பிறப்பித்து 8-12-2008 அன்று அந்த 400 ரூபாயை அவர்களிடம் திரும்பக் கொடுத்தது. 22-8-2008 அன்று அரசு சார்பில் வெளியிட்ட பத்திரிகை செய்தியிலேயே விண்ணப்பம்

செய்தவர்களில் பெரும்பாலோர் ஏழை மற்றும் மத்திய தர மக்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த வீடுகளுக்காக விண்ணப்பம் செய்து, செப்டம்பர் 30-ந்தேதி நடைபெறவுள்ள குலுக்கலிலே வீடு கிடைக்காதவர்களுக்கு வீட்டுவசதி வாரியம் பெற்றுக் கொண்ட பதிவுக் கட்டணமான ரூபாய் 400 மீண்டும் அவர்களிடம் திருப்பியளிக்க மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்று அறிவித்து, ஏடுகளிலும் இந்தச் செய்தி வந்துள்ளது.

இவ்வாறு அவர்களிடம் பெற்ற 400 ரூபாயை அந்த ஏழையெளிய மத்திய தர மக்களுக்கு அரசு திரும்பக் கொடுத்ததால், அந்தத் தொகையான 3 கோடியே 47 இலட்சம் ரூபாய் வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டுவிட்டது என்று தணிக்கைத்துறை அதிகாரி தனது அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார். அதைத்தான் ஆங்கில நாளேடு ஒன்று பெரிதாக வெளியிட்டுள்ளது.

அந்த ஏழையெளிய மக்கள் கட்டிய தொகையைத் திரும்பக் கொடுக்காமல் வீட்டு வசதி வாரியம் எடுத்துக் கொண்டிருந்தால் வாரியத்திற்கு இலாபம் கிடைத்திருக்கும். ஆனால், வீடு கிடைக்காத பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கும். இதைத்தான் "வீட்டு வசதி வாரியத்திற்கு இழப்பு" என்ற அளவில் தலைப்பிட்டு, அந்த நாளேடு பெரு முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டுள்ளது.

வீட்டு வசதி வாரியத்தின் முக்கிய குறிக்கோளே, ஏழையெளிய, மத்திய தர வகுப்பினருக்கு; தாங்கக்கூடிய விலையில் வீடுகளும், மனைகளும் அளிக்க வேண்டுமென்பதுதான். தனிப்பட்ட முறையில் ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்பவர்களைப் போல, இலாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, வீட்டு வசதி வாரியம் கட்டுகின்ற வீடுகளுக்கும் விலை நிர்ணயம் செய்தால், அது மக்கள் நலனைக் காக்கின்ற அரசு செய்கின்ற செயலாக இருக்காது.

வீட்டு வசதி வாரியம் கட்டும் குடியிருப்புகளின் விலையை நிர்ணயம் செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள அதிகாரிகள் குழு, ஒவ்வொரு வாரியத் திட்டத்திற்கும் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் விலை, நிலத்தை மேம்படுத்துவதற்கான செலவு,

நிர்வாகச் செலவு மற்றும் முதலீட்டுக்கான வட்டி, ஓரளவு குறைந்த இலாபம் ஆகியவற்றை கணக்கிலே கொண்டுதான் விலையை நிர்ணயம் செய்கின்றது. அந்த முறையிலேதான் சென்னை முகப்பேர் திட்டத்திற்கும் விலை நிர்ணயம் செய்யப்பட்டதே தவிர, அந்த இடத்திற்கு குறைந்த அளவிற்குத் தான் விலை நிர்ணயம் செய்யப்பட்டுவிட்டது, அதனால் வாரியத்திற்கு, அரசுக்கு இழப்பு ஏற்பட்டு விட்டது என்று செய்தி வெளியிட்டிருப்பது சரியல்ல. இது வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு இந்த அரசு மீது ஒரு புகார் கூற வேண்டும் என்பதற்காகவே இத்தனை விபரங்களையும் மறைத்துவிட்டு, இந்த அரசின் மீது புழுதி வாரி தூற்றுகின்ற ஏடுகளுக்கு நம்மீது என்னதான் எரிச்சலோ; தெரியவில்லை!

அன்புள்ள,

மு.க.

12-12-2010

3518. வயதில் ஈராண்டு இளையோன்; வணங்குகிறேன்!

உடன்பிறப்பே,

1942ஆம் ஆண்டு திருவாரூர், விஜயபுரத்தில் இஸ்லாமிய இளைஞர்கள் இணைந்து நடத்திய சிக்கந்தர் விழா ஒன்றில் கலந்துகொள்ள அண்ணா அவர்கள் வந்திருந்தார்கள். அண்ணாவின் பேச்சினைக் கேட்பதற்காக இளைஞனாக இருந்த நானும் சென்றிருந்தேன். விழாவில் மற்றவர்கள் பேசிய பிறகு, இறுதியாக அண்ணாவைப் பேசுவதற்காக அழைத்த நேரத்தில், அண்ணா அவர்கள் எழுந்து, "நான் பேசுவதற்கு முன்பு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து மாணவர் ஒருவரை நான் அழைத்து வந்திருக்கிறேன், அவர் உங்கள் முன்னால் பேசுவார்" என்ற அறிமுகத்தோடு ஒரு இளைஞரை அங்கே பேச வைத்தார். அந்த இளைஞர்தான் இன்று 89வது பிறந்த நாள் காணும் பேராசிரியர் அன்பழகனார்! முதன் முதலாக அங்கேதான் நான் பேராசிரியர் அவர்களைச் சந்தித்து அறிமுகம் செய்து கொண்டேன்.

நான் பதினெட்டு வயது இளைஞனாக "மாணவ நேசன்" என்ற பெயரில் கையெழுத்து ஏடு ஒன்றினை நடத்திக் கொண்டிருந்தபோது கதர் சட்டை அணிந்த கண்ணாடிக்காரர் ஒருவர் திருவாரூரில் என்னைச் சந்தித்து "மாணவர்களை எல்லாம் ஒன்றுபடுத்தி சுதந்திரம், சமாதானம், சமத்துவம் ஆகியவைகளுக்காக அணிவகுத்துக் குரலெழுப்ப முன் வரவேண்டும். அதற்குப் பாசறையாக "மாணவர் சம்மேளனம்" என ஒன்று தோற்று விக்கப்பட்டுள்ளது. அதன் அமைப்பாளராக நீங்கள் இருந்து திருவாரூர்ப் பள்ளியில் உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அப்படி வந்தவர் ஒரு கம்யூனிஸ்ட் என்பது எனக்கு அப்போது தெரியாது. சுதந்திரம் -

சமாதானம் - சமத்துவம் என்ற வார்த்தைகள் என் உள்ளத்தில் பல உணர்ச்சிகளை ஏற்படுத்தியதால், மாணவர் சம்மேளனத்தின் அமைப்பாளனாக நான் ஆனேன். அதிலே 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள். ஆனால் சம்மேளனத்தின் கோஷமாக "தமிழ் வாழ்க! இந்தி வளர்க" என்று வலியுறுத்தப்பட்டபோது நான் அதற்கு மறுத்து விட்டேன். உறுப்பினர்களிடமிருந்து பெற்றிருந்த 100 ரூபாயை திருப்பிக் கொடுக்க முனைந்தேன். ஒரு சிலர் அதனைப் பெற்றுக் கொண்டார்கள். பெரும்பாலோர் சம்மேளனத்தைக் கலைத்து விடலாம், கட்டணம் உன்னிடமே இருக்கட்டும் என்றனர். அன்று மாலையே "தமிழ் மாணவர் மன்றம்" என்ற ஓர் அமைப்பை உருவாக்கி, ஏற்கெனவே கட்டணத்தொகையை திரும்பப் பெற்றுக் கொள்ளாதவர்களையெல்லாம் தமிழ் மாணவர் மன்றத்தின் உறுப்பினராக ஆக்கினேன். அந்த மன்றத்தின் ஆண்டு விழா 1942 இல் திருவாரூரில் சிறப்பாக நடைபெற்றது. அந்த விழாவிற்கு அழைக்கப்பட்டிருந்தவர்கள் பெரும்பாலோர் வரவில்லை.

அவர்கள் எல்லாம் வருவார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்து, அவர்களை வரவேற்க திருவாரூர் புகைவண்டி நிலையத்திலே காத்திருந்தபோது, அவர்களில் பலர் வரவில்லை என்று தெரிந்து கண்களிலே நீர் பெருக கலங்கி நான் நின்று கொண்டிருந்த போதுதான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த - இன்றைய பேராசிரியர், அன்றைய மாணவர் அன்பழகனும், மதியழகனும் அங்கு வந்து எனக்கு ஆறுதல் வழங்கினார்கள். எனக்குத் துணையாக 1942இல் அங்கே பேராசிரியர் வந்தபோது என்னுடைய வயது 18. அப்போது என் துணைக்கு வந்த பேராசிரியர், தற்போது எனக்கு 87 வயது நடக்கின்ற நிலையிலும், அவர் இன்று 89வது வயதில் அடியெடுத்து வைக்கின்ற நிலையிலும் எனக்குத் துணையாக இருக்கின்றார் என்பதை எண்ணும்போது இடையிலே எத்தனையோ நிகழ்ச்சிகள் - சம்பவங்கள் - கழகத்திலே உயர்வு தாழ்வுகள் - ஆட்சிக்கு வந்த நேரங்களும் உண்டு - ஆட்சியை இழந்து சோதனையிலே நடைபோட்ட நாட்களும் உண்டு - அத்தனையிலும் சளைக்காமல், சோர்வடையாமல் அன்று போலவே இன்றும் இளைஞராக, கருணாநிதி என்ற இளைஞனுக்கும் துணை நிற்கும் அன்பழகன் உடன்பிறப்பாக விளங்கி வருகிறார். நமது

கழகத்திற்கு துயரங்கள், துன்பங்கள் வந்த நேரத்தில் எல்லாம் அதைப் பற்றி சிறிதும் கலங்காமல் கழக வளர்ச்சிக்குத் தூணாக விளங்கியவர்தான் நம்முடைய இனமானப் பேராசிரியர்.

மணவழகர் ஈன்றெடுத்த செல்வன் - மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை எனக் கூறி மாத்தமிழ் காக்கும் அரிமா - பெரியாரின் பெரும் தொண்டர் - அண்ணாவின் அன்புத்தம்பி - எனது உயிரனைய உடன்பிறப்புதான் இனமானப் பேராசிரியர்.

இந்த வயதிலும் நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, நிதானமான போக்கு, நேர்மையான சிந்தனை, தன் மனதில் பட்ட கருத்தை மறைக்காது எடுத்துரைக்கும் திறந்த நெஞ்சம், ஆபத்து தமிழுக்கோ, தமிழ் இனத்துக்கோ என்றால் அனலாகக் கொதிக்கின்ற உள்ளம், எதிர்த் தரப்பினரை சுழற்றி அடிக்கும் வாள் வீச்சென வாயிலிருந்து பிறக்கும் "சுளீர்! சுளீர்!" என்ற வார்த்தைகள் பேராசிரியருக்கே சொந்தமானவை! உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசத் தெரியாதவர் பேராசிரியர். சாதி மத பேதங்களில் சிக்கித் தவித்த இந்தச் சமுதாயத்தை தலை நிமிரச் செய்ய வேண்டு மென்பதற்காக அவரது பேச்சும், எழுத்தும் பயன்பட்டது என்றால் அது மிகையல்ல.

ஈழத் தமிழர்களுக்காக என்னுடன் சேர்ந்து தனது சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் கலந்து கொண்டார் என்பதற்காக இவருடைய சட்டப் பேரவை உறுப்பினர் பதவியே அ.தி.மு.க. ஆட்சியில் பறிக்கப்பட்ட வரலாற்றுக்கு இவர் சொந்தக்காரர்.

ஒரு பெரும் இயக்கத்திற்குப் பொதுச் செயலாளர் - தமிழகத்தின் நிதி அமைச்சர் என்றெல்லாம் பாராது எளிமையான பொது வாழ்வினை இன்றளவும் நடத்தி வருபவர்.

"நன்றாண்ட மூவேந்தர் நாகரிகமேமாற்றி வென்றாண்ட ஆரியத்தை வென்றாளத் தோன்றியவர் குன்றா மறவக் குரிசிலார் அன்பழகர் என்றோழர் என்னல் எனக்குப் பெருமையதே" என்று பாவேந்தர் பாரதிதாசனாரும், "சாதி சமய வேற்றுமைகளைக் களைந்து தமிழ் மக்கள் அனைவரும் ஒரு

குலத்தாராக வாழ்தல் வேண்டும் என்னும் உயர்ந்த குறிக்கோள் பேராசிரியர் அன்பழகனாரின் இளமைப் பருவத்திலேயே நன்கு வேரூன்றியிருந்தது" என்று பேராசிரியர் "க. வெள்ளை வாரணனாரும்", "உலகக் கடல்களெல்லாம் ஓரிடஞ் சேர்ந்தாலும் ஒப்பாகா என்று சொல்லக் கூடிய அத்துணைத் தமிழன்பு மிக்கவர் அன்பழகனார்" என்று முனைவர் வ.சுப. மாணிக்கனார் அவர்களும், "மாணவப் பருவத்தில் விரும்பி ஏற்றுக்கொண்ட பகுத்தறிவுப் போக்கினை சமத்துவச் சிந்தனையை, தமிழ்ப் பற்றினை இன்றும் சிறிதும் நழுவ விடாமல் அரும்பாடுபட்டு வரும் சிலரில் பேராசிரியர் அன்பழகனாரும் ஒருவர்" என்று நெ.து. சுந்தரவடிவேலு அவர்களும் பேராசிரியரை மனமாரப் பாராட்டியிருக்கிறார்கள்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தைக் கண்டு, தமிழர் நலம் காக்கப் பாடுபட்டு உழைத்த திராவிட இயக்க முன்னோடிகளாம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டி.எம். நாயர், டாக்டர் நடேசனார், தியாகராயர், பனகல் அரசர் போன்ற கொள்கைத் தங்கங்களை இன்றைக்கும் மேடைகளிலே நினைவுபடுத்திப் பேசிக்கொண்டிருக்கும் கொள்கைக் கோமான் தான் நம்முடைய பேராசிரியர். பேராசிரியருக்கும் கோபம் வரும். உதாரணமாக சாதியைப் பற்றி பேசப்பட்டபோது, "நாமெல்லாம் திராவிடர்கள், நாமெல்லாம் தமிழர்கள் என்று திரும்பத் திரும்ப ஏன் சொல்கிறோம் என்றால், நம்மிலே ஏற்றத் தாழ்வு கிடையாது. இருப்பதாகச் சொல்லுபவன் ஏமாற்றுவதற்காகச் சொல்பவன். நால்வகைச் சாதி என்று சொன்னவன் பித்தலாட்டக்காரன்" என்று கடுமையாகக் கூறினார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அறிஞர் அண்ணா கண்டெடுத்த கொள்கை முத்துக்களில் ஒன்றே பேராசிரியர் அன்பழகன். அவருடைய கருத்தழகும், கனிவான சொல்லழகும், தமிழ்க் கட்டழகும் மேடையில் கண்டு மகிழ்ந்திருக்கிறோம் பலமுறை. பேராசிரியரைப் பற்றி ஒருமுறை நான் கூறும்போது, "நான் மக்களுக்காக எழுதுகிறேன், பேராசிரியர் அன்பழகன் அவர்களோ என் போன்றோருக்காக எழுதுகிறார்" என்று சொன்னேன். அத்தகைய அறிவும் ஆற்றலும் அனுபவமும் உள்ளவர் பேராசிரியர்.

இனமானப் பேராசிரியர் அன்பழகனார் அவர்கள் தற்போது இந்தக் கழகத்தைக் கட்டிக்காக்கின்ற பெருந்தலைவர்களில் ஒருவராக இருக்கிறார். அவருடைய 89வது பிறந்த நாள் தமிழுக்கு முடி சூட்டுகின்ற நாள் - தன்மான உணர்வுக்கு மகுடம் புனைகின்ற நாள் - திராவிட இனப் பெருங்குடி மக்கள் மட்டுமல்ல - உலகமெங்கும் வாழ்கின்ற தமிழர்கள் ஒவ்வொருவரும் தமிழர்களின் உரிமைக்காகப் போராடுவோம் என்று சூளுரைக்கின்ற நாள் இந்த நாள் என்று கூறி - மேலும் பல்லாண்டுகள் பேராசிரியப் பெருந்தகை அவர்கள் நல்ல உடல் நலத்தோடு வாழ்ந்து கழகத்தின் வளர்ச்சிக்கும், தமிழர்களின் மேன்மைக்கும் தொடர்ந்து பாடுபட வேண்டுமென்று வாழ்த்துகின்றேன், போற்றுகின்றேன். வயதில் ஈராண்டு இளையோன்; அதனால் வணங்குகிறேன்.

அன்புள்ள,

மு.க.

19-12-2010

3519. உத்தமிகாள்!
நீவிர் ஊழல் பற்றிப் பேசலாமா?

உடன்பிறப்பே,

ஸ்பெக்ட்ரம் பிரச்சினை குறித்து ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் மத்தியிலும், மாநிலத்திலும் அரசியல் பலம் வாய்ந்த பெரும்பாலோனோர் இந்த ஊழலின் பின்னணியிலும், இந்த ஊழலுக்குத் துணையாகவும் செயல்பட்டிருக்கிறார்கள் என்று வழக்கம்போல நீட்டி முழக்கி அறிக்கைவிட்டிருப்பதைப் பார்க்கும் போது சிரிப்புதான் வருகிறது. ஊழலைப் பற்றி ஜெயலலிதா குற்றம் சாட்டி அறிக்கைவிட்டால் சிரிப்பு வராதா என்ன? அதிலும் மத்திய புலனாய்வுத் துறையின் விசாரணையை உச்ச நீதிமன்றம் கண்காணிக்கும் என்று உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தான் வரவேற்பதாகவும் ஜெயலலிதா தனது அறிக்கையிலே சொல்லி யிருக்கிறார்.

உச்சநீதிமன்றம் இந்த ஒரு வழக்கிலே மாத்திரமா தீர்ப்பு சொல்லியிருக்கிறது. தமிழக அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை முதல் அமைச்சர் பொறுப்பிலே இருந்தபோது ஜெயலலிதா அடிமாட்டு விலைக்கு வாங்கியதைப் பற்றி உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு என்ன? அந்தத் தீர்ப்பையும் ஜெயலலிதா வரவேற்றிருக்க வேண்டியதுதானே?

டான்சி வழக்கில் முக்கிய சில பகுதிகள் :- "பொதுத் துறைக்குச் சொந்தமான நிலங்கள் ஜெயலலிதா பங்குதாராராக உள்ள கம்பெனி களுக்கு, அவா முதலமைச்சராகப் பதவியிலே இருந்த காலத்தில் விற்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. டான்சி நிறுவனத்தின் விதிமுறைகளின்படி அதை விற்பனை செய்வதற்கு முன்பு அரசிடமிருந்து ஒப்புதல் பெற்றாக வேண்டும். அதுவரை விற்பனை முழுமை அடைந்ததாகாது.

இந்த வழக்கைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு கம்பெனிகளை விற்க வேண்டியதற்கான அனுமதியினை முதல்

குற்றவாளியின் (ஜெயலலிதா) தலைமையிலே நடைபெறும் அரசே வழங்க வேண்டிய நிலையில், அரசு தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதால் அங்கே ஒரு அக்கறை மோதுதல் ஏற்படுகின்றது.

இப்படிப்பட்ட இரு வேறு அக்கறை மோதுதல்கள் இருக்கும்பட்சத்தில், நியாயமான விற்பனை நடைமுறைகளைக் குந்தகப்படுத்தக் கூடிய வாய்ப்புள்ள ஒருவருக்கு இந்த விற்பனை, சட்டப்படி தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

வழக்கு சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மதிப்பு குறித்து எங்களின் முடிவு எதுவாக இருந்த போதிலும், அதிலே ஜெயலலிதாவிற்கு லாபம் இருந்ததா இல்லையா என்பதைவிட, முதல் அமைச்சரே வழக்கு சொத்துக்களை வாங்க யத்தனித்துவிட்ட நிலையில், அதிகார வர்க்கம் அளவுக்கு மீறி அதிலே ஆர்வம் காட்டி இந்த விற்பனையைச் சுமூகமாக முதலமைச்சர் ஜெய லலிதா விரும்பும் விலைக்கே முடித்திருக்கிறார்கள் என்பதை எங்களால் தெரிந்துகொள்ள முடிகிறது.

எந்த நிலையிலும், ஜெயலலிதாவின் இந்தச் செயல்கள் நடத்தை விதிகளின் உட்பொருளுக்கு விரோதமானதாகும்.

நியாயமாகப் பேசவேண்டுமென்றால், அரசின் சிறு அதிகாரிகளுக்காக ஒரு சட்டமும், முதல் அமைச்சருக்காக ஒரு சட்டமும் இருக்க முடியுமா?

இதுபோன்ற நிலைகளில், நன்னடத்தை விதி என்பது அருங்காட்சியகத்திலே வைக்கப்பட வேண்டிய வெறும் ஆடம்பர பொருள் மட்டும் தானா? அது கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒன்று அல்லவா? இவைகள்தான் எங்களுடைய மனச் சாட்சியைத் துன்புறுத்துகிறது.

முதல் குற்றவாளியான ஜெயலலிதா தான் இந்த வழக்கிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக டான்சி நிலப் பத்திரத்திலே உள்ள, அவருடைய ஆடிட்டரும் அரசு அதிகாரிகளும் ஏற்றுக்கொண்ட அவருடைய கையெழுத்தையே இல்லை என்று மறுக்கக்கூடிய அளவிற்குச் சென்றிருக்கிறார்.

Further, criminal law is meant to deal with criminals ordinarily, while code of conduct is observed as gentlemen's agreement. Good

ethical behaviour on the part of those who are in power is the hallmark of a good administration and people in public life must perform their duties in a spirit of public service rather than by assuming power to indulge in callous cupidity, regardless of self imposed discipline. Irrespective of the fact whether we reach the conclusion that A.1 is guilty of the offences with which she is charged or not, she must atone for the same by answering her conscience in the light of what we have stated not only by returning the property to TANSI unconditionally but also ponder over whether she had done the right thing in breaching the spirit of the Code of Conduct and giving rise to suspicion that rules and procedures were bent to acquire the public property for personal benefit, though trite to say that suspicion however strong cannot take place of legal proof in a criminal case and take steps to expiate herselt.
உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை ஜெயலலிதா வரவேற்றாரா? அதற்காக வெட்கப்பட்டாரா? மனச்சாட்சிக்கு இடம் கொடுத்தாரா? அப்படிப்பட்டவர் தற்போது ஊழல் பற்றி அறிக்கைவிட தகுதி படைத்தவரா?

வருமானத்துக்கு அதிகமாக ஊழல் செய்து 66 கோடி ரூபாய்க்குச் சொத்து சேர்த்து, அதற்காகவே ஏழாண்டு காலமாக ஜெயலலிதா மீது வழக்கு நடைபெறுகிறதே; அந்த வழக்கிலே, "நீதி பரிபாலன முறையின் புனிதத்தையும், அதன் மீது சாதாரண மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் நிலைநாட்ட இந்த வழக்கு விசாரணையை கர்நாடக மாநில நீதி மன்றத்திற்கு மாற்றுகிறேன்" என்று உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் எஸ்.என். வரியவா மற்றும் எச்.கே. சேமா ஆகியோர் 18-11-2003 அன்று தீர்ப்பு வழங்கினார்களே, அந்தத் தீர்ப்பைப் பெற்ற ஜெயலலிதா அந்த தீர்ப்புக்கு ஒத்துழைக்கும் வகையில் பெங்களூரில் வழக்கு விசாரணையை விரைவில் முடிக்க ஒத்துழைப்பா கொடுக்கிறார்? எந்த அளவிற்கு அதனை தாமதப்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு தாமதப்படுத்த முயற்சிக்கிறார். தற்போதுகூட அந்த வழக்கை தாமதப்படுத்த உச்ச நீதிமன்றம் வரை ஜெயலலிதா மேல் முறையீடு செய்து, உச்ச நீதிமன்றம் வழக்கு விசாரணையை தடைசெய்ய மறுத்து தீர்ப்பளித்துள்ளதே! அதுவும் உச்ச நீதி மன்றத் தீர்ப்பு தானே?

1993-94ஆம் ஆண்டுக்கான வருமான வரி கணக்கை ஜெயலலிதா தாக்கல் செய்யவில்லை என்று வருமான வரித் துறையே அவர்மீது வழக்கு தொடுத்து - அந்த வழக்கில் 24-2-2006 அன்று ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்த போதே, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.என். அகர்வால், ஏ.கே. மாத்தூர் ஆகியோர் "You (Jayalalitha) are making a mockery of the Judicial Process. How long you can drag the proceedings?" என்று விமர்சனம் செய்தார்களே, அதை ஜெயலலிதாவே மறந்து விடலாமா? உச்சநீதி மன்றத்தின் இந்த கருத்தினை ஜெயலலிதா மதித்தாரா? வரவேற்றாரா? அதுபற்றி அறிக்கை விட்டாரா? ஜெயலலிதாவின் வீட்டைச் சோதனையிட்ட போது கிடைத்த பொருள்களும், அதன் மதிப்பும் என்று சில ஆண்டுகளுக்கு முன்பு அனைத்து ஏடுகளிலும் ஒரு பட்டியலாகவே வெளியிடப்பட்டது. அந்தப் பட்டியலில் குறிப்பிட்டவாறு -

ஜெயலலிதாவின் 86 வகையான நகைகள் மதிப்பு - 17 லட்சத்து 50 ஆயிரத்து 31 ரூபாய்.

சசிகலாவின் 62 வகையான நகைகள் மதிப்பு - 9 லட்சத்து 38 ஆயிரத்து 460 ரூபாய்.

ஜெயலலிதாவின் 26 வகையான நகைகள் - 19 லட்சத்து 30 ஆயிரத்து 852 ரூபாய்.

ஜெயலலிதாவின் 41 வகையான நகைகள் - 1 கோடியே 40 லட்சத்து 75 ஆயிரத்து 958 ரூபாய்.

ஜெயலலிதாவின் 394 வகையான நகைகள் - 3 கோடியே 12 லட்சத்து 67 ஆயிரத்து 725 ரூபாய்.

சசிகலாவின் 34 வகையான நகைகள் - 17 லட்சத்து 54 ஆயிரத்து 868 ரூபாய்.

1116 கிலோ எடையுள்ள வெள்ளிப் பாத்திரங்கள் - 48 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்.

இந்தியன் வங்கி, அபிராமபுரம் கிளையில் முதலீடு - ஒரு கோடி ரூபாய்.

சொகுசு பேருந்து எண் டி.என். 09-எப். 2575 - 32 இலட்சத்து 40 ஆயிரத்து 278 ரூபாய்.

91 கைக் கடிகாரம் - 6 இலட்சத்து 87 ஆயிரத்து 350 ரூபாய்.

7 விலை உயர்ந்த கைக்கடிகாரங்கள் - 9 லட்சத்து 3 ஆயிரம் ரூபாய்.

914 புதிய பட்டுச் சேலைகள் - 61 லட்சத்து 13 ஆயிரத்து 700 ரூபாய்.

6195 மற்ற புதிய சேலைகள் - 27 லட்சத்து 8 ஆயிரத்து 720 ரூபாய்.

2140 பழைய சேலைகள் மற்றும் துணிமணிகள் - 4 லட்சத்து 21 ஆயிரத்து 870 ரூபாய்.

389 ஜோடி காலணிகள் - 2 இலட்சத்து 902 ரூபாய்.

இவ்வளவு சொத்துக்களும் ஜெயலலிதாவுக்கு எப்படி கிடைத்தன? ஊழல் சொத்துக்கள் தானே?

நாடாளுமன்றத்தில் மாநிலங்களவையில் வெளியிட்ட விவரப்படி எடுத்துக் கொண்டால்

1-7-1991 அன்று ஜெயலலிதாவின் சொத்துக்களின் மதிப்பீடு 2 கோடியே 1 லட்சத்து 83 ஆயிரம் ரூபாய்.

1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு மே திங்கள் வரையில் ஜெயலலிதாதான் தமிழகத்தின் முதல் அமைச்சர்.

30-4-1996 அன்று ஜெயலலிதாவின் சொத்துக்களின் மதிப்பு 66 கோடியே 44 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய். எப்படி வந்தது இந்த 66 கோடி ரூபாய் சொத்துக்கள்? இதற்காகத்தானே இப்போது பெங்களூரில் சிறப்பு நீதி மன்றத்தில் உச்ச நீதிமன்றத் தீர்ப்புப்படி வழக்கு நடைபெறுகிறது!

சொத்துக் குவிப்பு வழக்கினை வேறு மாநிலத்துக்கு - பெங்களூருக்கு மாற்றி தீர்ப்பு வழங்கியபோது உச்ச நீதிமன்றம் தெரிவித்தவை வருமாறு :-

1. "ஜெயலலிதா மீண்டும் முதல்வராகப் பதவியேற்ற பிறகு பல சாட்சிகள், தாங்கள் ஏற்கெனவே கொடுத்திருந்த வாக்கு மூலத்திலிருந்து 'பல்டி' அடித்துள்ளனர்."

2. “சுதந்திரமான நியாயமான முறையில் வழக்கு விசாரணை நடைபெறாவிட்டால் நீதி வழங்கும் முறையில் மக்களின் நம்பிக்கை சீர்குலைந்து விடும்.”

3. “இந்த வழக்கு விசாரணை நடைபெற்ற விதத்தைப் பார்க்கும்போது, நீதி தோல்வி அடைந்துவிடுமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.”

4. “வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஜெயலலிதா விசாரணை கோர்ட்டில், நீதி மன்றம் கேள்வி கேட்கும்போது சென்னையில் இருந்துகொண்டே ஆஜராகவில்லை.”

5. “குற்றஞ்சாட்டப்பட்டவர் வெகு தூரத்தில் இருந்தால் மட்டுமே கேள்விப் பட்டியலைப் பயன்படுத்தலாம் என்று உச்ச நீதிமன்றம் ஒரேயொரு வழக்கில் விதிவிலக்காகக் கொண்டுவந்த முறையை - இந்த விவகாரத்தில் கடைப்பிடித்ததை ஏற்க இயலாது.”

6. “ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு இந்த வழக்கில் திரும்ப அழைக்கப்பட்ட 76 அரசு தரப்பு சாட்சிகளில் 64 பேர் ‘பல்டி’ அடித்துள்ளனர். அவர்கள் மீது அரசு வக்கீல் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார் என்பதும் கண்டனத்திற்குரியது.”

7. “நீதி பரிபாலன முறையின் புனிதத்தையும் அதன் மீது சாதாரண மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் நிலைநாட்ட இந்த வழக்கு விசாரணை கர்நாடக மாநில நீதிமன்றத்துக்கு மாற்றப்படுகிறது.”

இந்தத் தீர்ப்பினை 18-11-2003 அன்று உச்ச நீதி மன்ற நீதிபதிகள் எஸ்.என். வரியவா, எச்.கே. சேமா ஆகியோர் அளித்ததோடு, அதனை முடிக்கும்போது,

“தி.மு.க. தொடர்ந்துள்ள வழக்கில் போதுமான முதல் நிலை ஆதாரங்கள் இருப்பதாகவே நீதிமன்றம் கருதுகின்ற படியால் இவ்வழக்கை தமிழ்நாட்டில்

நடத்தினால் நியாயம் கிடைக்காமல் போக வாய்ப்புள்ளது. எனவே இவ்வழக்கு மாற்றப்பட வேண்டிய வழக்கேயாகும். நீதி வழங்கப்படுவது முக்கியமெனினும், நீதி வழங்கப்படுவதாக மக்களிடத்தில் நம்பிக்கையை ஏற்படுத்துவதும் நீதிமன்றங்களின் கடமையாகும்; எனவே இந்த வழக்கு மாறுதல் செய்யப்படுகிறது. கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, கர்நாடக அரசோடு கலந்து பேசி, இந்த வழக்கிற்காக ஒரு சிறப்பு நீதி மன்றத்தை ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஆறு வார காலத்திற்குள் பெங்களூரில் அமைக்க வேண்டும். குற்றவியல் வழக்குகளில் பயிற்சி பெற்ற முதுநிலை வழக்கறிஞர் ஒருவரை இந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக நியமிப்பதுடன், அவருக்கு இளநிலை வழக்கறிஞர் ஒருவரும் அமர்த்தப்பட வேண்டும். வழக்கறிஞர் ஊதியம் உட்பட, கட்டணங்கள் அனைத்தையும் கர்நாடக அரசு செலுத்த வேண்டும்; பிறகு தமிழ்நாடு அரசு அதனை கர்நாடக அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும். தலைமை நீதிபதியினால் நியமிக்கப்படும் அரசு வழக்கறிஞர் ஏற்கெனவே பிறழ் சாட்சியம் அளித்த- பல்டி அடித்த அரசுத் தரப்பு சாட்சிகளை (Hostile) மீண்டும் அழைத்து மறு விசாரணை செய்வதுடன், வேண்டுமென்றே மாற்றி சாட்சியமளித்த அந்தச் சாட்சிகள் மீது குற்றவியல் நடவடிக்கைகளை தனியே எடுக்கவும் அறிவுறுத்தப்படுகின்றது. சாட்சி களுக்கு மிரட்டுதல் இருப்பதாக கருதும் பட்சத்தில், அவர்களுக்கு கர்நாடக அரசு போதிய போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும். குற்றவாளிகள் அனைவரும் கேள்வி எழுப்பப்படும்போது நீதிமன்றத்தில் தவறாது ஆஜராவதுடன், இவ்வழக்கை தினமும் (Daily Basis) எடுத்து விசாரிக்க வேண்டும். வழக்கு தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் தமிழ்நாடு அரசு உடனடியாக சிறப்பு நீதி மன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்" என்று கூறியிருக்கிறார்கள்.

இவ்வளவு புகழுக்கும், பெருமைக்கும் உரிய ஜெயலலிதா ஊழல் பற்றி அறிக்கை விடலாமா?

பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்தில் தற்போது நடைபெறும் சாட்சிகளின் விசாரணை முடிந்து என்ன தீர்ப்பு அளிக்கப்படவிருக்கிறதோ என்று காத்திருக்கும் நிலையிலே உள்ள ஜெயலலிதா ஊழலைப் பற்றி அறிக்கை விடலாமா? அதைப் படிப்பவர்கள் சிரிக்க மாட்டார்களா? ஊழல் என்றால் என்ன விலை என்று கேட்கக்கூடிய அளவிற்கு தன்னை உத்தமியாகக் கருதிக் கொண்டு, ஜெயலலிதா ஊழலைப் பற்றி கேள்வி கேட்கலாமா?

நாடாளுமன்றக் கூட்டுக் குழு அமைத்தே தீர வேண்டுமென்று நாடாளுமன்றத்தையே நடத்த விடாமல் செய்த பெரிய எதிர்க்கட்சிகள் எல்லாம் இப்போது அதைப் பற்றி வேகமாகக் குரல் கொடுக்க வில்லையே; அது ஏன்? ஏன்?

அன்புள்ள,

மு.க.

20-12-2010

3520. பட்டிதொட்டி எங்கும் பணிகளைத் தொடர்ந்திட; வெற்றி முரசு கொட்டிட விரைந்தெழுவீர்!

உடன்பிறப்பே,

தி.மு. கழக அரசு கடந்த ஐந்தாண்டு காலத்தில் மக்களுக்காக ஆற்றிய சாதனைகள், நிறைவேற்றிய திட்டங்கள் காரணமாக வரவிருக்கின்ற பொதுத் தேர்தலில் தி.மு. கழகத்தை வெற்றி காண முடியாது என்று தெரிந்து கொண்டுள்ள ஜெயலலிதாவும், அவருடைய ஆதரவாளர்களான ஒருசில பத்திரிகையாளர்களும் ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீடு பிரச்சினையை பூதாகார மாக ஆக்கி, அதைச் சொல்லியே தேர்தலில் தி.மு. கழகத்திற்கு சோதனையை ஏற்படுத்தலாமா என்று கனவு காண்கிறார்கள். அந்த வரிசையில் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளிவருகின்ற ஒரு கிழமை ஏடு, தி.மு. கழகத் தலைவர் மிகவும் சோர்ந்துவிட்டார், உடன்பிறப்புக் கடிதம் எழுதுவதையே நிறுத்தி விட்டார், கேள்வி பதில்களும் எழுதுவதில்லை, ஒரு வார காலமாக எதையும் எழுதவில்லை, கோபித்துக் கொண்டு மாமல்லபுரத்திற்கும், ஏலகிரிக்கும் ஓய்வெடுக்கச் சென்றுவிட்டார் என்றெல்லாம் எழுதி தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இந்தச் செய்தியும்கூட உண்மையா என்றால் இல்லை என்பதுதான் உண்மை. இந்த டிசம்பர் திங்களில் மட்டும் 1-ந்தேதி, 2-ந்தேதி, 4-ந்தேதி, 7-ந்தேதி , 10-ந்தேதி, 12-ந்தேதி, 18-ந்தேதி, 19-ந்தேதி ஆகிய 8 நாட்களில் உடன்பிறப்புக் கடிதமோ அல்லது கேள்வி பதிலோ எழுதியிருக்கிறேன். இடையில் சில நாட்களில் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதால், அங்கே நான் பேசிய பேச்சோ, அல்லது எனது பேட்டிகளோ, அல்லது அரசு அறிவிப்புகளோ வந்திருக்கும். அரசு நிர்வாகப் பணிகள் காரணமாக ஓரிரு நாட்களில் எனக்கு எழுதுவதற்கு நேரம் இருந்திருக்காது. ஆனால் நான் ஏதோ எழுதுவதையே நிறுத்திவிட்டேன் என்றெல்லாம் கற்பனையாகவே எழுதி மகிழ்கிறார்கள்.

அந்த ஏடு மேலும் ஒருபடி சென்று, மத்திய அமைச்சரவை 2009ஆம் ஆண்டு புதிதாக அமைந்தபோது தொலைத் தொடர்புத்

துறை ராசாவிற்குத்தான் ஒதுக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியிடம் தி.மு.க. தலைமை வலியுறுத்தி பெற்றதாகவும், அதற்கு உள் நோக்கம் என்னவென்றால் அலைக்கற்றை ஒதுக்கீட்டில் பயன்பெற வேண்டும் என்பது தான் என்பதைப் போலவும் எழுதியிருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் 2009ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் மீண்டும் தி.மு. கழகம் வெற்றி பெற்று, நான் 19-5-2009 அன்று டெல்லி சென்றிருந்தபோது, "ஜெயா தொலைக்காட்சி"யின் செய்தியாளர் என்னிடம் கேட்ட கேள்வியே, "ஸ்பெக்ட்ரம் ஊழலில் குற்றஞ்சாட்டப்பட்ட மத்திய அமைச்சர் ராசாவிற்கு மீண்டும் அமைச்சரவையில் இடம் வழங்க வேண்டுமென்று கேட்பீர்களா?" என்பது தான். எந்த அளவிற்கு ராசா மீது அ.தி.மு.க. வினருக்கு காழ்ப்புணர்ச்சி இருந்திருக்கின்றது என்பது இதிலிருந்தே புரிகிறது அல்லவா?

மத்திய அமைச்சரவையில் தி.மு.க. சேருவது பற்றிப் பேச்சுவார்த்தை நடைபெற்றபோதுகூட, காங்கிரஸ் கட்சியின் சார்பில் பிரணாப் முகர்ஜி, குலாம் நபி ஆசாத், அகமது படேல் ஆகியோர் டெல்லியில் தமிழ்நாடு இல்லத்தில் என்னைச் சந்தித்து, காங்கிரஸ் கட்சி அமைச்சரவை அமைப்பதில் இந்தமுறை கையாளவிருக்கும் ஒரு "பார்முலா" தெரிவிக்கப்பட்டதே தவிர, யாருக்கு அமைச்சர், யாருக்கு என்ன இலாகா, என்பது பற்றிப் பேசப்படவில்லை. 22-5-2009 அன்று பிரதமர் மன்மோகன் சிங் அவர்களிடம், செய்தியாளர்கள் "தி.மு.க. சார்பில் ஏற்கெனவே மத்திய அமைச்சர்களாக இருந்த டி.ஆர். பாலு மற்றும் ஆ. இராசா ஆகியோரை மத்திய அமைச்சரவையில் சேர்த்துக் கொள்வதில் ஏதாவது கருத்து வேறுபாடு உள்ளதா?" என்று கேட்டதற்கு, "அவ்வாறான கேள்விக்கே இடம் இல்லை, அவர்கள் இருவரும் எங்களின் மதிப்பு மிக்க அமைச்சரவை சகாக்கள். அவர்கள் மீது குறை சொல்லும் கேள்விக்கே இடம் இல்லை" என்றுதான் பதிலளித்தார். மேலும் பிரதமர் அவர்கள், தி.மு.க. வினர் அமைச்சரவையில் சேராமல், வெளியில் இருந்து ஆதரவளிப்போம் என்று சென்னையில் எடுத்துள்ள முடிவை ஓரிரு நாட்களில் மறு பரிசீலனை செய்வார்கள் என்று நாங்கள் இன்னமும் நம்புகிறோம். அவர்களது செயற்குழுவில் விவாதித்த பின்னர் காலம் கடத்தாமல் மீண்டும் தி.மு.க. வினர் மத்திய அமைச்சரவையில் சேர வேண்டுமென்று தான் விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

பிரதமரின் விருப்பத்தின் பேரில் கழகத்தின் உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர்களோடு கலந்து பேசிவிட்டு, கழகத்தின் சார்பான அமைச்சர்களின் பட்டியலை தெரிவித்ததின் அடிப்படை யில், பிரதமர் அவர்கள் 25-5-2009 அன்று மாலையில் என்னோடு சென்னைக்கு தொலை பேசியில் தொடர்பு கொண்டு கழகத்தின் சார்பில் பரிந்துரைத்த பெயர்கள் அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். நானும் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டேன். 28-5-2009 அன்று கழகத்தின் சார்பில் தம்பி மு.க. அழகிரி உரம் மற்றும் ரசாயனத் துறை அமைச்சராகவும், தம்பி தயாநிதி மாறன் ஜவுளித் துறை அமைச்சராகவும், தம்பி ஆ. இராசா தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் என மூவரும் கேபினட் அமைச்சர்களாகவும், மற்றும் தம்பிகள் பழநி மாணிக்கம், நெப்போலியன், ஜெகத்ரட்சகன், காந்திசெல்வன் ஆகியோர் முறையே நிதி, சமூக நீதி, தகவல் ஒலிபரப்பு, சுகாதாரம் ஆகிய துறைகளின் இணை அமைச்சர்களாகவும் பொறுப்பேற்றனர்.

இவர்களுக்கு துறைகளை ஒதுக்கும்போது கூட, ஆ. இராசா 2009ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த மத்திய அமைச்சரவையிலேயே 18-5-2007 முதலே தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருந்த காரணத்தால் அவருக்கு தொடர்ந்து அந்தத் துறை மீண்டும் ஒதுக்கப்பட்டதே தவிர, அதில் திராவிட முன்னேற்றக் கழகம் பிடிவாதமாக இல்லை என்பதையும் யாருக்கும் யாரும் சிபாரிசு செய்திடவில்லை என்பதையும் அனைவரும் அறிவார்கள்.

இதிலே ராசாவிற்கு இந்தத் துறை கிடைப்பதற்காக யாரோ ஒருவர் தொலைபேசியிலே பேசினார், அவரிடம் யார் யாரோ பரிந்துரை செய்தார்கள், அதனால்தான் இந்த இலாகா அவருக்குக் கிடைத்தது என்றெல்லாம் ஏடுகள் சில செய்துள்ள விமர்சனங்கள் விஷமத்தனமே தவிர வேறல்ல!

தொலைபேசியில் பேசிய பேச்சினை "டேப்" செய்து, அந்தப் பேச்சு எப்படியோ வெளியே வந்து ஒருசில ஏடுகளில் அதனைப் பெரிதுபடுத்தி வெளியிடுகின்ற காரணத்தாலேயே, அந்த பேச்சுக்கள் எல்லாம் அப்படியே உண்மையாகி விடாது. அதற்கு உதாரணம் கூற வேண்டுமென்றால், என் பேரன் தயாநிதி மாறன் மத்திய அமைச்சர் பதவி பெற 600 கோடி ரூபாய் என் மனைவி தயாளுவுக்குக் கொடுத்தார் என்று "டேப்"பில் ஒலித்ததாகச்

சொல்லப்படும் ஒரு உரையாடலே போதும்! இதைப்பற்றி நானே இந்தச் செய்தியை உண்மை என்று நம்புபவர்கள் அவர்களின் பெயர்களைப் போட்டு இந்தச் செய்தியை வெளியிட்டால் அவர்களை நான் சட்ட ரீதியாகச் சந்திக்கிறேன் என்றே கூறியிருக்கிறேன்.

ரத்தன் டாட்டா என்ற ஒரு பெரிய தொழிலதிபர் என்னை முதலமைச்சர் என்ற முறையில் சந்தித்தார் என்றால் உடனே அதற்குக் காரணம் ஊழல்தானா? அவர் என்னைச் சந்தித்தபோது, "அவருடைய நிறுவனத்தின் சார்பில் யாருக்கும் கமிஷன் கொடுப்பதில்லை - அதுபோலவே முதலமைச்சர் என்ற முறையில் நீங்களும் அதனை ஆதரிப்பதில்லை என்று நான் கேள்விப் பட்டேன் - அதுவே உங்களைச் சந்திக்க முதல் காரணம்" என்று கூறி விட்டுத்தான் தனது பேச்சையே தொடங்கினார்.

ஸ்பெக்ட்ரம் பிரச்சினையிலே உத்தேசமாக (presumptive) 1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு என்று தணிக்கை அதிகாரி தனது அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார் என்றால், அதிலே "இழப்பு" என்ற ஒரு வார்த்தையை மாற்றி ஸ்பெக்ட்ரம் பிரச்சினையிலே 1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் "ஊழல்" என்ற வார்த்தையை திணித்து - பிறகு அந்த ஒரு இலட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் பணத்தையே லஞ்சமாக வழங்கப்பட்டது என்பதைப்போல ஏடுகள் சில பெரிதுபடுத்துகின்றன!

அலைக்கற்றை ஒதுக்கீட்டை ஏலமாக விற்றிருந்தால், இந்த அளவிற்கு அரசுக்கு வருவாய் வந்திருக்கும், ஆனால் அது தற்போது கடைப்பிடித்த முறையினால் இழப்பாகிவிட்டது என்றுதான் தணிக்கை அறிக்கை கூறுகிறது.

ராசா கடைப்பிடித்த முறை, ஏற்கனவே அந்தத் துறையினால் பின்பற்றப்பட்டு வந்த முறைக்கு மாறானதா? அவருக்கு முன்பு அந்தத் துறையிலே இருந்த அமைச்சர்கள் உகந்தமுறை என்று கருதி என்ன நடை முறையைப் பின்பற்றினார்களோ, அதே முறையைத்தானே ராசாவும் கையாண்டுள்ளார். ராசா தற்போது கையாண்ட முறையினால் அரசுக்கு வருவாய் இழப்பு என்றால், அவருக்கு முன்பு அதே துறையில் கையாளப்பட்ட முறைகளினாலும் அரசுக்கு இழப்புதானே? அந்த அமைச்சர்கள் அப்போது கையாண்ட முறையினால் அரசுக்கு இழப்பு என்பதை இதற்கு முன்பே

தணிக்கைத் துறை அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தார்களே, அப்போது ஏன் பாராளுமன்றம் முடக்கப்பட வில்லை! அப்போது ஏன் இந்தப் பிரச்சினை பூதாகாரமாகப் பெரிதுபடுத்தப்படவில்லை!

இதே துறையின் முன்னாள் அமைச்சராக இருந்த திரு. அருண் ஷோரி (பா.ஜ.க.) அவர்கள்கூட நேற்று ஒரு கருத்தரங்கில் பேசும்போது, ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் அரசியல்வாதிகள் கூறுவது போல, ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு என்பது தவறானது. இதில் 30 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்குத்தான் முறைகேடு நடந்திருக்கலாம். கருணாநிதி கூறியிருப்பது போல, தனிப்பட்ட ராசா ஒருவரால் இவ்வளவு பெரிய தொகையை ஊழல் செய்திருக்க முடியாது என்றெல்லாம் சொல்லியிருப்பதோடு, "ராசா எல்லா உண்மைகளையும் தெரிவிக்க வேண்டும்" என்றும் சொல்லியிருக்கிறார்.

(Arun Shourie, Former Union Minister for Communications advised the media not to run after the "hypothetical figure of loss (Rs.1.76 lakh crore) to the exchequer" mentioned by the CAG. The realistic figure, he said, could be around Rs. 30,000 crore. - The Hindu 19.12.2010)

எதற்கெடுத்தாலும் "டேப்பு" தான் - குறிப்பாக ஜெயலலிதாவுக்கு அறிக்கை விட வேறு காரணமே தேவையில்லை. இதே "டேப்" பற்றி அவரே இதற்கு முன்பு "டேப்பு" என்றால் உண்மையாகி விடுமா? ஒருவர் குரலில் ஒருவர் மாதிரி இன்னொருவர் பேசி அதனை "டேப்பு" செய்ய முடியாதா? சி.பி.ஐ. சொன்னால் அது உண்மையா? சி.பி.ஐ. என்ன வானத்திலிருந்து குதித்தவர்களா?" என்றெல்லாம் விமர்சனம் செய்தவர்தான்!

"பேசிப் பேசியே ஆட்சியைப் பிடித்த கட்சி இன்று பேசிப் ஒஒஒதி.மு.க. ஆளாகியிருக்கிறது" என்று அந்த ஆங்கில ஏட்டின் ஆசிரியர் எழுதியிருக்கிறார். தி.மு. கழகத்தின் மீது தற்போது சாட்டப்படும் குற்றச்சாட்டுகள் பற்றிய உண்மையான விளக்கத்தையும் தி.மு. கழகம் மக்களிடம் பேசிப் பேசி விளக்கிக் கூறி, இந்தப் பத்திரிகாசிரியர் போன்றவர்கள் செய்யும் விஷமப் பிரச்சாரங்களுக்கும் எதிர்காலத்தில் தீர்வு காணும் என்ற நம்பிக்கையை அவர்கள் பெறலாம்.

"2 ஏக்கர் இலவச நிலம் வழங்கும் திட்டத்தை அரசு தனது சாதனைகளில் ஒன்றாக சொல்கிறது. ஆனால் இத்திட்டத்தில்

பல முறைகேடுகள் நடந்திருக்கின்றன" என்று விரிவாக எழுதியுள்ள அந்த இதழிலேயே இந்த நான்கு ஆண்டுகளில் 2 லட்சத்து 10 ஆயிரத்து 747 ஏக்கர் நிலத்தை 1 லட்சத்து 75 ஆயிரத்து 798 விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருப்பது ஆறுதலாக இருந்தாலும், அந்தக் கட்டுரையிலே கூறப்பட்டுள்ள குறைபாடுகளைப் பற்றி அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு உண்மையிலேயே நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்த நிலத்தைப் பெற்றவர்கள் விதிகளை மீறி விற்று விடுகிறார்கள், அல்லது யாரோ சிலர் அதைப் பறித்துக் கொண்டு விடுகிறார்கள் என்றெல்லாம் எழுதப்பட்டுள்ள புகார்கள் உண்மையாக இருந்தால் அவற்றின் மீது நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும். இதுபோன்ற புகார்கள் வரும்போதெல்லாம் தீர விசாரித்து உடனடியாகக் களையப்பட்டுள்ளன என்பதற்கு என் தலைமையில் நடைபெறும் இந்த ஆட்சியில் எத்தனையோ சான்றுகள் உண்டு என்பதை இந்தக் கட்டுரையாளரே நன்கறிவார். எனினும் என்ன செய்வது? ஏதோ ஒரு கட்டுக்குள் அடங்கி எரிச்சலைக் கட்டவிழ்த்து விடுகிறார், பாவம்!

உடன்பிறப்பே, கடந்த நான்கரை ஆண்டுகளாக கழக அரசு தொடர்ந்து ஆற்றி வரும் சாதனைகள், திட்டங்கள் காரணமாக மக்கள் மத்தியில் பெருகிவரும் நல்ல பெயருக்கு எப்படியாவது ஊறு ஏற்படுத்திட வேண்டுமென்ற கெடு நினைப்போடு நான் மேலே குறிப்பிட்டுள்ள ஏடுகள் போன்ற ஒரு சிலர் திட்டமிட்டுச் செய்கின்ற பொய் பிரச்சாரத்திற்கு இரையாகிடாமல், போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும், நம் கடன் பணி செய்து கிடப்பதே என்ற உறுதியோடு தொடர்ந்து மக்கள் பணியினை ஆற்றிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு; விஷமப் பிரச்சாரங்களை முறியடித்து வெற்றி முரசு கொட்டிட விரைந் தெழுவீர் - சிற்றூர், பேரூர், நகரப் பகுதிகள் எங்கணும் சிங்கங்களாம் உமது முழக்கம் ஒலிக்கட்டும்!

அன்புள்ள,

மு.க.

21-12-2010

3521. புறப்படட்டும், நமது பிரச்சாரப் படை!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா 20-12-2010 அன்று வெளியிட்ட அறிக்கையில் - இரண்டாம் தலைமுறை அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ராஜா மூலமாக இமாலய ஊழல் புரிந்து சொத்துக்களைக் குவித்து வைத்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

அலைக்கற்றை ஒதுக்கீடு குறித்து சி.பி.ஐ. விசாரணை, அமுலாக்கப் பிரிவு விசாரணை, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நடைபெறவிருக்கிறது. தணிக்கைத் துறை அறிக்கையிலேயே மத்திய அரசுக்கு 1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு என்று குறிப்பிட்டுள்ளதை ஜெயலலிதா எடுத்துக்காட்டி, அந்த 1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடைபெற்றிருப்பதாக கூறுகிறார். அந்தத் துறையின் அமைச்சராக இருந்த திரு. அருண்ஷோரி அவர்களே 1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடு நடக்கவில்லை, 30 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் இழப்புதான் ஏற்பட்டுள்ளது என்கிறார்.

அந்த தணிக்கைக் குழு அறிக்கையிலேயே உள்ள ஒரு வாசகம் - "Any loss ascertained while attempting to value the spectrum can only be 'presumptive'....." என்றுள் ளது. அதாவது, "அலைவரிசையின் மதிப்பைக் கணக்கிட்டு அதனால் ஏதாவது இழப்பு என்று சொல்லப்படுவது "அனுமானத்தின்" அடிப்படையிலே மட்டும் சொல்லப்படுவதாகும்.

இந்த இழப்புக்கு உண்மையிலேயே யாராவது காரணமா என்பது விசாரணையின் முடிவிலேதான் தெரியும். தணிக்கை அதிகாரியின் அறிக்கையிலே கூறப்பட்டு விட்டது என்றால், ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் அவரது ஆட்சியிலே நடைபெற்ற தவறுகளைப் பற்றி தணிக்கை அதிகாரி சொன்னது என்ன? நான் இதைப்பற்றி முன்பே எழுதியிருக்கிறேன் என்ற போதிலும் மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன்."

அ.தி.மு.க. ஆட்சியில் வைக்கப்பட்ட தணிக்கை அதிகாரியின் அறிக்கை ஒன்று "இந்து" நாளிதழ் உட்பட அனைத்து ஏடுகளிலும் வெளிவந்தது. 3-8-2004 தேதியிட்ட இந்து நாளிதழ் பக்கம் 5-ல் "Short levy / audit report for 2003 – 2004" / Rs. 1033/- crore potential Revenue loss என்ற தலைப்பில் The State Government suffered a loss of Rs. 1033 /- crore potential Revenue in 2003 – 2004 as a result of short levy of Taxes. Besides, it incurred an "avoidable expenditure" of various companies and autonomous bodies under government control was to the tune of Rs. 3681/- crores in the last financial year.

Giving these figures,T. Teethan, Accountant General (audit) for Tamil Nadu, told press persons here today that the aggregate of "Short levy" and "wasteful expenditure" was Rs. 2982 crores in 2002-2003; Rs. 3930 crores in 2001-2002; Rs. 2621 crores in 2000-2001 and Rs.1901 crores in 1999-2000. .....

A Rs. 61 crore cash loss was incurred owing to an excess procurement of 1.75 lakh tonnes of paddy. Poor planning, lack of infrastructure and a defective pricing policy of the Tamil Nadu Housing Board led to blocking of Rs. 96 crores on 18,755 plots under 17 schemes completed."

("விலை குறைவாக நிர்ணயம் செய்தது பற்றிய "2003-2004ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கை - 1033 கோடி ரூபாய் வருவாய் இழப்பு" என்ற தலைப்பில் முறையாக வரிகள் விதிக்கப்படாததன் காரணமாக 2003-2004ஆம் ஆண்டில் மாநில அரசுக்கு 1033 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டது. அது மட்டுமல்லாமல் அரசு நிர்வாகத்தின்கீழ் உள்ள பல்வேறு நிறுவனங்களின் மூலமாக தவிர்க்கப்பட்டிருக்க வேண்டிய செலவுகள் என்ற வகையில் மட்டும் மாநில அரசுக்கு 3681 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இந்தப் புள்ளிவிவரங்களை வழங்கிய தமிழ்நாடு தலைமை கணக்காயர் திரு. டி. தீத்தன் அவர்கள் முறையாக வரிகள் விதிக்காததன் காரணமாகவும், வீணான செலவுகளின் காரணமாகவும், அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 2002-2003ஆம் ஆண்டில் 2982 கோடி ரூபாய்; 2001-2002ஆம் ஆண்டில் 3930 கோடி ரூபாய்; 2000-2001ஆம் ஆண்டில் 2621 கோடி ரூபாய்; 1999-2000ஆம் ஆண்டில் 1901 கோடி ரூபாய் என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். ..... 1.75 இலட்சம்

டன் நெல்லை அதிகப்படியாக கொள்முதல் செய்ததன் காரணமாக 61 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. சரியாக திட்டமிடாததாலும், அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தேவையான அளவுக்கு இல்லாததாலும், தவறான விலை கொள்கையாலும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 17 திட்டங்களில் 96 கோடி ரூபாய் மதிப்புள்ள 18,755 மனைகள் விற்பனையாகாமல் உள்ளன.'')

இது மாத்திரமல்ல, அதே நாளைய "இந்து'' முதலமைச்சராக இருந்த ஜெயாவின் துறையைப் பற்றி தணிக்கை அதிகாரி கூறிய செய்தியையும் வெளியிட்டிருந்தது. அதில், "The Comptroller and Auditor General of India (CAG) has criticized the Tamil Nadu Home Department for not following open tender system in purchase of tents for the police. Though the rates quoted by ordinance factories were higher than open market prices, orders were still placed with them resulting in an extra expenditure, the CAG said in his report for the year ended March 2003 placed in the Legislature." (தலைமைக் கணக்காயர் காவல் துறைக்கு "டெண்ட்''கள் (கூடாரங்கள்) வாங்குவதற்கு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றாததன் காரணமாக உள்துறையை கடுமையாகச் சாடினார். வெளிச் சந்தை விலையைவிட துப்பாக்கி தொழிற்சாலைகள் கொடுத்த விலைப்புள்ளி கூடுதலாக இருந்தபோதிலும், "டெண்டுகள்'' அந்தத் தொழிற்சாலைகளிடமிருந்தே வாங்கப்பட்டன. இதன் காரணமாக அதிகச் செலவு ஏற்பட்டுள்ளது.)

இவ்வாறு தொடங்கி "இந்து'' தணிக்கை துறை அதிகாரியின் அறிக்கையையும், அவர் செய்தியாளர்களிடம் வெளியிட்ட தகவல் களையும் விரிவாக வெளியிட்டுள்ளது.

அதே செய்தி அனைத்து நாளேடுகளிலும் வெளிவந்த போதிலும், தமிழ்நாளேடு ஒன்று வெளியிட்ட தலைப்பே, "ஆடிட்டர் ஜெனரல் ஆதாரத்துடன் பேட்டி - ஜெ. ஆட்சியில் ரூ. 11 ஆயிரம் கோடி இழப்பு - மந்திரி, அதிகாரிகளை அடிக்கடி பந்தாடியதால் நிர்வாகம் சீர்குலைந்தது - மத்திய அரசின் மலிவு விலை அரிசி வாங்காததால் ரூ. 66 கோடி நட்டம் - 46 திட்டங்கள் தொடங்காமலேயே ரூ. 3500 கோடி திரும்ப ஒப்படைப்பு'' என்பதாகும். அந்தத் தலைப்பைத் தொடர்ந்து விரிவாக எவ்வாறெல் லாம் தவறுகள் நடைபெற்றன என்று தணிக்கை அறிக்கையிலே

எழுதப்பட்டிருந்ததையும், அதைப் பற்றி தணிக்கைத் துறை அதிகாரி அளித்த பேட்டியையும் வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்திகளையெல்லாம் பார்த்ததும் முதலமைச்சராக அப்போது இருந்த ஜெயலலிதா என்ன செய்தார்? இப்போது தணிக்கைத் துறை அதிகாரியின் அறிக்கையிலே வருவாய் இழப்பு என்று வந்தவுடன், பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும், அதுவரை ஓய மாட்டோம், அந்தத் துறையின் அமைச்சராக இருந்த ராஜாவை கைது செய்ய வேண்டும், அதற்காக புதுச்சேரியில் ஆர்ப்பாட்டம் என்றெல்லாம் அறிக்கை விடுகின்ற ஜெயலலிதா அப்போது என்ன செய்தார்?

தணிக்கைத் துறை அறிக்கையே இவ்வாறு வெளியிட்டுவிட்டது, இதோ நான் பதவியை ராஜினாமா செய்கிறேன், ராஜினாமா செய்தால் மட்டும் போதாது, என்னை நானே கைது செய்து கொள்கிறேன், என் மீது வழக்கு தொடரப்பட வேண்டும் என்றெல்லாம் சொன்னாரா? கிடையாது. என்ன செய்தார் தெரியுமா?

இவ்வாறு தமிழ்நாட்டிலுள்ள தணிக்கை அதிகாரி நிருபர்களிடம் கூறியது என்பது பெரும் அதிர்ச்சியாக உள்ளதாகவும், சுதந்திர இந்திய வரலாற்றில் இதுபோன்று எப்போதும் நடந்ததில்லை என்றும், அரசியல் சாசனத்திற்கு முரணானது என்றும் எடுத்துக்கூறி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு முழுப் பக்க அறிக்கையினை - சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு அப்போது வெளியிட்டார். தணிக்கை அதிகாரிக்குப் பதில் கூறி, முதலமைச்சர் ஜெயலலிதா பெயரிலான அந்த அறிக்கை அரசின் சார்பாக ஒரு முழுப் பக்க விளம்பரமாகவே அனைத்து ஏடுகளிலும் வெளியிடப்பட்டது. தமிழகத்திலும், வட இந்தியாவிலும் வெளிவந்துள்ள ஜெயலலிதாவின் இந்த முழுப் பக்க விளம்பரத்திற்காக மட்டும் தமிழக மக்களின் வரிப்பணம் 1 கோடியே 22 லட்சத்து 81 ஆயிரத்து 100 ரூபாய் அப்போது செலவிடப்பட்டது.

ஜெயலலிதா வெளியிட்ட அந்தப் பதில் அறிக்கையில், "தமிழ்நாடு அரசின் கணக்குகள் மீதான இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் 2002-2003-ஆம் ஆண்டுக்கான அறிக்கை வெகு அண்மையில்தான் - 2004 ஜூலையில் தமிழ்நாடு

சட்டப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை உரிய கால முறையில் தமிழ்நாடு சட்டப் பேரவையில் பொதுக்கணக்குக் குழுவில் விவாதிக்கப் படும். இந்த அறிக்கையில் கடுமையான முறைகேடு எதுவும் சுட்டிக் காட்டப்படவில்லை. சில பொருள்கள் மீது இந்தியத் தணிக்கைத் துறைத்தலைவரின் கருத்தறிவிப்புகளை மட்டும் தான் இந்த அறிக்கை கொண்டுள்ளது. அதைப்பற்றி பொதுக்கணக்குக் குழுவால் உரிய காலமுறையில் விரிவாக விவாதிக்கப்படும். இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் அறிக்கை மீது பொது கணக்குக் குழு தனது பணியினை முடித்த பின்னரே , இது முழுமை அடையும். .....இவ்வாறு பல நிகழ்வுகளில் கூறப்பட்டிருக்கின்ற இழப்பானது, வெறும் கருத்தியலான இழப்பு என்பதை தணிக்கை துறை தலைவரின் அறிக்கையே சுட்டிக்காட்டுகிறது. ஆகவே இந்த விஷயங்களைப் பெரிதுபடுத்திக் காட்டுவதும், இதனால் பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டு விட்டது என்ற தோற்றத்தை உருவாக்குவதும் சற்றும் முறையானதல்ல.''

ஜெயலலிதா ஆட்சியிலே நடைபெற்ற முறைகேடுகளைப் பற்றி தணிக்கைத்துறை அதிகாரி அறிக்கை கொடுத்தால், அது மண் சட்டி; அதாவது மாமியார் உடைத்த மண் சட்டி!

ராஜா மீது குறை கூறி தணிக்கைத்துறை அதிகாரி அறிக்கை கொடுத்தால் மட்டும் அது பொன் சட்டியா? அதற்காக ராஜாவை கைது செய்ய வேண்டுமா?

என்ன நியாயம் இது?

ஜெயலலிதா ஆட்சியில் தணிக்கைத் துறை அதிகாரி தாக்கல் செய்த மற்றொரு அறிக்கையின் தலைப்பே, "TANSI - Loss of revenue due to failure to follow uniform procedure in disposal of assets" (டான்சி - சொத்துக்களை விற்றதில் முறையான அணுகுமுறையை பின்பற்றாததால் ஏற்பட்ட வருவாய் இழப்பு) என்பதாகும்.

".....the sale of land in all the three defunct units had been effected almost at the same time, in the same locality, the sale price of land of Tansi Foundry to Jaya Publications Limited at Rs. 1350 per square metre was very low when compared to the sale price of Rs. 2080 and Rs, 2100 per square metre obtained in case of sale of land of Tansi Enamelled Wires and Tansi Forgings, respectively. Thus, the Company had not fully explored the possibility of getting a higher rate....."

(ஒரே பகுதியில் இருந்த டான்சி நிறுவனத்திற்குரிய டான்சி எனாமல்டு ஒயர்ஸ் மற்றும் டான்சி போர்ஜிங்ஸ்க்குச் சொந்தமான இரண்டு இடங்களை ஒரு சதுர மீட்டர் 2080 ரூபாய் மற்றும் 2100 ரூபாய் என்ற விலைக்கு விற்றிருக்கும் போது, ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்திற்கு மட்டும் டான்சி பவுண்டரி நிறுவன இடத்தை ஒரு சதுர மீட்டர் 1350 ரூபாய் என்ற குறைந்த விலைக்கு விற்றிருக்கிறார்கள். எனவே அதிகத் தொகையை பெறுகின்ற வாய்ப்பினை டான்சி இழந்துவிட்டது.)

இந்தத் தகவல் இன்னமும் தணிக்கைத் துறை அதிகாரியின் அறிக்கையிலே உள்ளது. அந்த வாசகங்களைத்தான் மீண்டும் நான் இங்கே ஞாபகப்படுத்தியுள்ளேன். ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட இழப்புகளைப் பற்றி தணிக்கைத் துறை அதிகாரிகளே குறிப்பிட்ட வாசகங்கள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. இவைகளையெல்லாம் ஞாபகப்படுத்த வேண்டு மென்று எனக்கும் விருப்பம் இல்லைதான்! ஆனால் அவராகவே தினந்தோறும் தன் பெயரில் ஏதாவது அறிக்கை வெளிவரவேண்டுமென்பதற்காக இல்லாத கதைகளையெல்லாம் ஜோடித்து அநாகரிகமான வார்த்தைகளால் அறிக்கை விடுகின்ற காரணத்தால் அதற்கு உண்மையான விளக்கங்களை அளிக்க வேண்டியதாயிற்று!

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நேற்று ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில், "வருமானவரித் துறையினரால் பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாக்களில் கருணாநிதியின் மகனும், துணை முதலமைச்சருமான ஸ்டாலின், கருணாநிதியின் மனைவி தயாளு ஆகியோரது பெயர்கள் அடிபடுகின்றன. இதில் இருந்து நாட்டின் சொத்தைக் கொள்ளையடிக்க ஒரு மிகப் பெரிய சதித் திட்டம் தீட்டப்பட்டு அது வெற்றிகரமாக முடிந்திருப்பது தெளிவாகிறது" என்று எழுதியிருக்கிறார். வருமானவரித் துறையினரால் பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாவில் யாரோ இரண்டு பேர் பேசிக்கொண்டதைப் பதிவு செய்து, அதனை வெளியிட்டுவிட்டால், அவர்கள் பேசிக் கொண்டதெல்லாம் உண்மையாகி விடுமா? இதே தகவலை சில நாட்களுக்கு முன்பு ஜெயாவின் புதிய அரசியல் ஆலோசகர் "துக்ளக்" சோ, அவர் இதழில் வெளியிட்டபோது, உடனடியாக நான் விளக்கம் அளித்து, அந்தச் செய்தியை அவர் பெயரில் வெளியிடத் தயாரா, அப்படி

வெளியிட்டால் நான் சட்டரீதியாகச் சந்திக்கிறேன் என்று பதிலும் அளித்திருக்கிறேன். அதன் பின்னர் அதே செய்தியை ஜெயலலிதா தனது அறிக்கையிலே எழுதுகிறார் என்றால், அதற்கு நாம் பதில் அளிக்காவிட்டால் அவர் கூறியது உண்மை என்று ஆகிவிடாதா?

எனவே இவ்வளவு விளக்கங்களையும் என்னுடைய நேரத்தைச் செலவிட்டு எழுதுகிறேன். உடன்பிறப்பே, இந்த விளக்கங்களை உனக்கு நான் மீண்டும், மீண்டும் எழுதத் தேவையில்லை தான்! இருந்தாலும் நமக்கு எதிராக தவறான செய்திகள் பரப்பப்படும்போது, பொது மக்களில் ஒருசிலர் அதைக்கேட்டு, அப்படியும் இருக்குமோ என்று நினைத்து விடக்கூடாதல்லவா? இந்த விவரங்களையெல்லாம் நீ மட்டும் படித்தால் போதுமா? பொதுமக்களிடம் இந்த உண்மை களையெல்லாம் விளக்கிட வேண்டாமா? கழகத்தின் முன்னணியினர், பேச்சாளர்கள் இந்த விவரங்களை தாங்கள் பேசுகின்ற கூட்டங்களின் மூலமாக மக்களுக்குத் தெளிவாக்கிட வேண்டும். உண்மை எது, பொய் எது என்பதை மக்களிடம் விளக்கி, சிறுதாவூரில் நடை பெற்றது என்ன, கோட நாட்டில் நடைபெற்றது என்ன, தர்மபுரியிலே மூன்று மாணவிகள் உயிரோடு எரித்துக் கொல்லப்பட காரணமாக அமைந்தது எது, பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்திலே நடைபெறும் வழக்கு எதற்காக, அந்த வழக்கு பற்றி உச்சநீதிமன்றம் தெரிவித்த தீர்ப்பு என்ன என்பது பற்றியெல்லாம் ஊருக்கு ஊர் கூட்டம் போட்டு விளக்கிட வேண்டும், திண்ணைப் பிரச்சாரமாக, தெருமுனைப் பிரச்சாரமாக இந்த விவரங்களை மக்களுக்குப் புரிய வைத்திட வேண்டும். புறப்படட்டும் நமது பிரச்சாரப்படை! இப்பிரச்சாரப் படையை வரவேற்க ஒவ்வொரு மாவட்டமும் - மாவட்டக் கழகச் செயலாளர்களும் - ஒன்றிய, நகரக் கழகச் செயலாளர்களும் - இளைஞர் அணியினரும், மாணவர் அணியினரும், மகளிர் அணியினரும், வழக்கறிஞர் அணியினரும், ஏனைய பிற அணியினரும் தயாராகட்டும்! முழக்கம் செய்ய வருகின்ற தளபதிகளும், வீரர்களும் யார், எவர் என்ற பட்டியலை நம்முடைய பிரச்சாரக் கழகச் செயலாளர்கள் வெளியிடுவார்கள். அவர்களோடு தொடர்பு கொண்டு ஆவன செய்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

22-12-2010

3522. வேலை வாய்ப்பு; அன்றும் இன்றும்!

உடன்பிறப்பே,

2006ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மக்கள் முன்னால் வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கையில்

"படித்து விட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும் கூட, எவ்வித வேலை வாய்ப்பும் பெற்றிடாத இளைஞர்களுக்கு - பத்தாம் வகுப்பு படித்து முடித்தவர்களுக்கு வேலை கிடைக்கும் வரையில் மாதம் 150 ரூபாயும், மேல்நிலைப் பள்ளிப் படிப்பை நிறைவு செய்தவர்களுக்கு மாதம் 200 ரூபாயும், பட்டதாரிகளுக்கு மாதம் 300 ரூபாயும் உதவித் தொகையாக வழங்குவோம். அ.தி.மு.க. ஆட்சியின் பணி நியமனத் தடையாணை காரணமாக பணியில் சேர வாய்ப்பின்றி வயது உச்ச வரம்புக்கு ஆட்பட்டு, கடந்த நான்காண்டு காலமாக பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு வயது உச்ச வரம்பைத் தளர்த்துவோம். அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட "பணி நியமனத் தடையாணை" விளைவாக காலியாக உள்ள சுமார் மூன்று இலட்சம் பணி இடங்களையும் நிரப்புவோம்"

என்று உறுதியளித்திருந்தோம்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அரசு அலுவலர்களும், ஆசிரியர்களும் தங்களது உரிமையைக் கேட்ட காரணத்தினால் ஒரே நாளில் பணி நீக்கம் செய்யப்பட்டு - பல பேர் அதிர்ச்சியால் இறந்த துயரகரமான சம்பவங்கள் நடைபெற்றதுண்டு. ஆனால், 2006ஆம் ஆண்டு கழக ஆட்சி அமைந்த பிறகு, தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிப்படி, இதுவரை தமிழகத்தில் 4 இலட்சத்து 98 ஆயிரத்து 40 பேர்களுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறையில் மட்டும் ஒரு

இலட்சத்து 61 ஆயிரத்து 625 பேரும், பள்ளிக் கல்வித் துறையில் 1 லட்சத்து 5 ஆயிரத்து 67 பேரும், போக்குவரத்துத் துறையில் 41 ஆயிரத்து 916 பேரும், எரிசக்தித் துறையில் 26 ஆயிரத்து 154 பேரும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 33 ஆயிரத்து 766 பேரும், உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறையின் சார்பாக 27 ஆயிரத்து 189 பேரும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பாக 21 ஆயிரத்து 172 பேரும், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் 30 ஆயிரத்து 832 பேரும், வருவாய்த் துறையில் 9 ஆயிரத்து 972 பேரும், உயர் கல்வித் துறை சார்பாக 8 ஆயிரத்து 422 பேரும், வேளாண்மைத் துறையில் 4 ஆயிரத்து 966 பேரும், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பாக 4 ஆயிரத்து 265 பேரும், பொதுப்பணித் துறை சார்பாக 3 ஆயிரத்து 388 பேரும், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை சார்பாக 3 ஆயிரத்து 555 பேரும், மற்ற பிற துறைகளின் சார்பில் நூற்றுக்கணக்கானவர்களுக்கும் அரசுப் பணிகள் கடந்த நான்கரை ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திங்கள் முதல் வாரத்தில் பள்ளிக் கல்வித் துறையின் சார்பாக துணை முதலமைச்சர் தம்பி மு.க. ஸ்டாலின் சிறப்பு ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், தையல் ஆசிரியர்கள் மற்றும் இசை ஆசிரியர்கள் 851 பேர்களுக்கும் - கருணை அடிப்படையில் 62 பேர்களுக்கும் - தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 190 தட்டச்சர்களுக்கும் என மொத்தம் 1,103 பேர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கியிருக்கிறார்.

பள்ளிக் கல்வித் துறை சார்பில் 1 லட்சத்து 5 ஆயிரத்து 67 பேர் பணி வாய்ப்பு பெற்றதில் புதிதாக நியமனம் பெற்றவர்கள் மட்டும் 57 ஆயிரத்து 127 பேர். இவர்களில் பள்ளிக் கல்வி இயக்ககத்தின் சார்பில் இடைநிலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், ஆசிரியர் பயிற்றுநர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர், சிறப்பு ஆசிரியர்கள், தொழிலாசிரியர்கள், கணினி ஆசிரியர்கள், விவசாய ஆசிரியர்கள் என நியமிக்கப்பட்டவர்கள் மாத்திரம் 27 ஆயிரத்து 915 ஆசிரியர்கள். தொடக்கக் கல்வி இயக்ககத்தின் சார்பில் 26 ஆயிரத்து 451 பேர்களும், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் விரிவுரையாளர்களாக 248 பேர்களும், கருணை அடிப்படையில் உதவியாளர்கள், தட்டச்சர்கள் என 740

பேர்களும், அரசு தேர்வாணையத்தின் மூலமாக 741 பேர்களும் அடங்குவார்கள்.

இவர்களை அன்னியில் கடந்த ஆட்சிக் காலத்தில் ஆசிரியர்கள் தொகுப்பூதிய அடிப்படையில் அதாவது பெற வேண்டிய ஊதியத்தில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு ஊதியம் மட்டுமே தரப்பட்ட நிலையில் 45 ஆயிரத்து 987 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். 2006ஆம் ஆண்டில் கழக ஆட்சி அமைந்த பிறகு 1-6-2006 முதல் இந்த 47 ஆயிரத்து 200 ஆசிரியர்களுக்கும் காலமுறை ஊதியம் வழங்கி - ஒவ்வொரு ஆசிரியரும் தாம் பெற்று வந்த ஊதியத்தைவிட மூன்று மடங்கு அதிகம் பெறுவதற்கும் வழி வகுத்திருக்கின்றோம்.

அரசு சார்பில் இந்த அளவிற்கு வேலையில்லாதோருக்கு பணிகள் கிடைக்கப் பாடுபட்டிருக்கிறோம் என்றபோதிலும் - தொண்டறம் பேணும் அமைப்புக்களின் துணையுடன்; மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி அந்தந்த மாவட்ட அமைச்சர்களோடும், மாவட்ட ஆட்சியர்களோடும், தொழில் நிறுவனங்களோடும் இணைந்து, காரியாபட்டி, நாகர்கோவில், வேலூர், உதகமண்டலம், விருதுநகர், கடலூர், திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய நகரங்களில் வேலை வாய்ப்பினைத் தேடித் தரும் முகாம்களை நடத்தி, இந்த அனைத்து இடங்களிலும் 2 லட்சத்து 33 ஆயிரத்து 712 வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டு, அவர்களில் 1 இலட்சத்து 33 ஆயிரத்து 998 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. இவர்களில் குறிப்பாக திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் 36 ஆயிரத்து 297 பேர்கள் - திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 22 ஆயிரத்து 408 பேர் - கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 19 ஆயிரத்து 98 பேர் - வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 17 ஆயிரத்து 2 பேர் - தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 16 ஆயிரத்து 663 பேர் - குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 5 ஆயிரத்து 77 பேர் - நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 2 ஆயிரத்து 165 பேர் - காரியாப்பட்டியில் 1 ஆயிரத்து 196 பேர். இவ்வாறு வேலைவாய்ப்பு கிடைத்தவர்களை அன்னியில் 55 ஆயிரத்து 656 பேர்களின் வேலைவாய்ப்பு ஆய்விலே உள்ளது. இவர்களுக்கும் பணி கிடைப்பதற்கான வாய்ப்புக் கூறுகள் உள்ளன.

அடுத்து, தேர்தல் அறிக்கையில் அளித்த உறுதிமொழிக்கிணங்கவும் - 2006-2007 நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறும், படித்து வேலைவாய்ப்பற்ற நிலையில் உள்ள 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 150 ரூபாய் வீதமும்; 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 200 ரூபாய் வீதமும்; பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 300 ரூபாய் வீதமும் நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டம் 11.11.2006 அன்று திருச்சியில் தொடங்கி வைக்கப்பட்டு தொடர்ந்து வழங்கப்படுகிறது.

அந்த வகையில், இதுவரை 3 இலட்சத்து 53 ஆயிரத்து 801 படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு 31-3-2010 வரை 261 கோடி ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 1 லட்சத்து 11 ஆயிரத்து 774 பேர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆவர். வேலை வாய்ப்பற்றோர் உதவித் தொகை பெறுவதற்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு 24 ஆயிரம் ரூபாய் என்பதிலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 2 இலட்சத்து 32 ஆயிரத்து 169 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில் - 60 ஆயிரத்து 55 கோடி ரூபாய் முதலீட்டிலான 28 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு, அதற்காக 13 அரசாணைகள் வெளியிடப்பட்ட - 41 புதிய தொழிற்சாலைகள் அமைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளில் இதுவரை 13 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டு விட்டன. 10 ஆயிரத்து 683 பேருக்கு இதுவரை வேலை வாய்ப்புகள் இந்தத் தொழிற்சாலைகளின் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

"சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்பதற்கிணங்க தேர்தல் அறிக்கையில் கூறியதன் அடிப்படையில் இவைகளையெல்லாம் நிறைவேற்றிய திராவிட முன்னேற்றக் கழக அரசு - சொல்லாததையும் செய்வோம் என்ற வகையில் - 15.8.2010 அன்று சுதந்திரத் திருநாளை முன்னிட்டு, சென்னை-புனித ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து நான் உரையாற்றியபோது,

> "ஐக்கிய நாடுகள் அமைப்பு இந்த ஆண்டினை 'உலக இளைஞர்கள் ஆண்டு' என அறிவித்திருப்பதையொட்டி, வேலை வாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு,

வேலை வாய்ப்புப் பெறுவதற்கேற்ற பயிற்சிகளைத் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன், புதிய திட்டம் ஒன்றும் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு படித்த இளைஞர்கள் - பொறியியல், இளங்கலை, முதுகலைப் பட்டம் பெற்றுள்ள இளைஞர்கள் ஆகியோர்க்கு வேலைவாய்ப்புக்கான திறன் வளர்ப்புப் பயிற்சி இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும். பயிற்சி பெற்ற இளைஞர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களில் உரிய வேலை வாய்ப்புகளைப்பெற இத்திட்டம் வழி வகுக்கும். நடப்பு ஆண்டில் ஒரு இலட்சம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவிருக்கும் இத்திட்டத்தைச் செயல்படுத்த முதற் கட்டமாக 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கான அரசாணை இந்நன்னாளில் வெளியிடப்படுகிறது''

- என அறிவித்தேன்.

அந்த அறிவிப்பின்படி முதற்கட்டமாக, திருவாரூர், திருவள்ளூர், திருநெல்வேலி, நாகப்பட்டினம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய ஆறு மாவட்டங்களில் படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெறுவதற்கேற்ற பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ், வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

திருவள்ளூர் மாவட்டத்தில் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாமில், 13 ஆயிரத்து 441 இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காக முன்பதிவு செய்யப்பட்டனர். அவர்களை 83 தொழில் நிறுவனங்கள் அழைத்து நேர்முகத் தேர்வு நடத்தி, 5 ஆயிரத்து 216 இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து, வேலைவாய்ப்புகள் அளித்திட தேர்வு செய்தன.

திருநெல்வேலி மாவட்டத்தில் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாமில், 7 ஆயிரத்து 286 இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காக முன்பதிவு செய்யப்பட்டனர். அவர்களை 60 தொழில் நிறுவனங்கள் அழைத்து நேர்முகத் தேர்வு நடத்தி, 2 ஆயிரத்து 335 இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, வேலைவாய்ப்புகள் அளித்திட தேர்வு செய்தன.

திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாமில், மொத்தம் 12 ஆயிரத்து 550 இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காக முன்பதிவு செய்யப்பட்டனர். அவர்களை 54 தொழில் நிறுவனங்கள் அழைத்து நேர்முகத் தேர்வு நடத்தி, 4 ஆயிரத்து 703 இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, வேலைவாய்ப்புகள் அளித்திட தேர்வு செய்தன.

கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாமில், 16 ஆயிரத்து 218 இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காக முன்பதிவு செய்யப்பட்டனர். அவர்களை 77 தொழில் நிறுவனங்கள் அழைத்து நேர்முகத் தேர்வு நடத்தி, 5 ஆயிரத்து 346 இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து வேலைவாய்ப்புகள் அளித்திட தேர்வு செய்தன.

எனவே இந்த ஆறு மாவட்டங்களிலும், வேலைவாய்ப்பு முகாம்களில் பதிவு செய்யப்பட்ட 49 ஆயிரத்து 495 இளைஞர்களில், மொத்தம் 17 ஆயிரத்து 600 இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

இவர்கள் அனைவரையும் 2011, ஜனவரி 5ஆம் தேதியன்று சென்னைக்கு அழைத்து, அவர்கள் அனைவருக்கும் வேலைக்கான பயிற்சி பெறுவதற்கான நியமன ஆணைகளை நானே நேரடியாக வழங்கிடவிருக்கிறேன். இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குரிய செலவினங்களை தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்காக 50 கோடி ரூபாய் நிதியை தமிழக அரசு வழங்கியுள்ளது. நான் வழங்கும் ஆணைகளின் அடிப்படையில், இளைஞர்கள் சம்மந்தப்பட்ட தொழில் நிறுவனங்களுக்குச் சென்று, பயிற்சிகளைப் பெற்று, அந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பு களைப் பெறுவார்கள்.

எனவே "வேலை காலி இல்லை" என்று விரட்டும் பலகைகளுக்கு "இனி எங்கும் இடம் இல்லை" என்ற நிலையை உருவாக்க; இந்த அரசு தொடர்ந்து பாடுபட இளைஞர், மகளிர் அனைவரும் - ஆதரவுக்கரம் நீட்டுவர் என்பதில் அணுவளவும் அய்யமில்லை!

அன்புள்ள,

மு.க.

23-12-2010

3523. எப்போதுதான் முடியுமோ?

உடன்பிறப்பே,

ஜெயலலிதாவின் அறிக்கைகள் சிலவற்றைப் படிக்கும்போது, "அவருக்கு ஏன் நீங்கள் பதில் சொல்கிறீர்கள்" என்று கூட சிலபேர் என்னைக் கேட்கிறார்கள். கேட்பவர்கள் எழுதத் தெரிந்தவர்கள்தான்! ஆனால் அவர்களே இது ஏன் வீண் வேலை என்று கருதுகிறார்கள் போலும்! அதனால்தான் என்னைக் கேட்கிறார்கள்; அது எப்படியோ போகட்டும்! ஜெயலலிதாவின் அறிக்கைகள் சிலவற்றைப் படிக்கும்போது சிரிப்பை அடக்கிக் கொள்ள முடிவதில்லை. இதற்கோர் உதாரணம் கூறட்டுமா?

ஜெ.யின் 26-ந்தேதிய அறிக்கையில் "2001-2006 ஆட்சிக் காலத்தில் ஒரு சிறு தவறு கூட நடைபெறாத தூய்மையான ஆட்சியை நான் நடத்தியதால் என் மீது பொய் வழக்குப் போட கருணாநிதிக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை" என்ற வாசகங்களைப் படித்தபோது சிரிப்பு வராமல் என்ன செய்யும்? ஒரு சிறு தவறுகூட நடைபெறாத தூய்மையான ஆட்சியாம்! அதைப் படிக்கின்ற - அ.தி.மு.க. ஆட்சியிலே பணியிழந்த மக்கள் நலப் பணியாளர்களும் - சாலைப் பணியாளர்களும் - பணி நீக்கம் செய்யப்பட்ட அரசு அலுவலர்களும் - எஸ்மா, டெஸ்மா சட்டங்களுக்கு ஆளான தொழிலாளர்களும் தங்களுக்குள் என்ன நினைத்துக் கொள்வார்கள்!

தூய்மையான ஆட்சி நடத்தியிருக்கிறார்களாம் - அதனால்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினரும் போட்டி போட்டுக் கொண்டு ஜெயலலிதா அணியிலே "நான் முந்தி" - "நீ முந்தி" என்று யார் அவருக்கு "முந்தி"யாக இருப்பது என்று பந்தயம் கட்டிக் கொண்டு அணி திரளுகிறார்கள் போலும்!

முதல் அமைச்சராக ஜெ. பதவியேற்றுக் கொண்டதே தூய்மையற்ற ஆட்சிக்கு உதாரணமாக அமைந்தது. அவர்

பதவியேற்றது பற்றி 15-5-2001 தேதிய "இந்து" தனது தலையங்கத்தில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து உறுதியாக தடை செய்யப்பட்ட ஒருவர் (ஜெயலலிதா) முதல் அமைச்சராவது இதுவே முதல் முறை என்றும், சட்டப்படி நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒருவர் இத்தகைய பதவியில் அமர்வதும் இதுவே முதல்முறை என்றும், இருநிலைகளிலும் அவருடைய செயல் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை உணர்வையே மீறுவதோடு சட்டரீதியாகவும், நியாயப் பூர்வமாகவும் வேதனை அளிக்கும் வினாக்களை எழுப்பியுள்ளது என்றும் எழுதியது. அன்றைய ஆனந்தவிகடன் வார இதழ் தனது தலையங்கத்தில், தன்மீதுள்ளகளங்கத்தை சட்டரீதியாக துடைத்தெறிந்த பிறகே முதல்வர் பதவியில் ஜெயலலிதா அமர வேண்டும், அதுதான் கண்ணியமும் கவுரவமுமிக்க அந்தப் பதவிக்கும் அழகு, அவருக்கும் அழகு என்று எழுதியது.

ஜெயலலிதாவை முதல் அமைச்சராக நியமித்தது சட்டப்படி செல்லாது என்று தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் 21-9-2001 அன்று உச்சநீதிமன்ற நீதிபதி எஸ்.பி. பரூச்சா தலைமையிலான ஐந்து நீதிபதிகள் வழங்கிய ஒருமனதான தீர்ப்பில் "தமிழக முதல்வராக ஜெயலலிதா நியமனம் செய்யப்பட்டது செல்லாது. அது அரசியல் சாசனத்துக்கு எதிரானது. இனியும் அவர் முதல் அமைச்சராக நீடிக்க முடியாது" என்று கூறிய பிறகுதான்; ஜெயலலிதாவின் வழக்கறிஞரான திரு.கே.கே. வேணுகோபால், நீதிபதிகளிடம் மாற்று ஏற்பாடுகள் செய்வதற்கு சில நாட்கள் அவகாசம் தேவையென்று கேட்டார். அதற்கு உச்சநீதிமன்ற நீதிபதி, "முதல் அமைச்சர் இறந்தால் உடனடியாக மாற்று ஏற்பாடு செய்யப்படுகிறதே; இவ்வளவு பெரும்பான்மையைப் பெற்றிருக்கும் ஒரு கட்சி எந்த நேரத்திலும் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கலாமே" என்று கூறினார்கள். இதுவும் ஒரு தூய்மையான ஆட்சிக்குக் கொடுக்கப்பட்ட சான்றிதழ்தானே? இதற்குப் பிறகுதான் இடைக்கால முதலமைச்சர் பதவி பன்னீருக்குக் கிடைத்தது!

சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த பரிதி இளம்வழுதி மீது கொலை முயற்சி உட்பட 5 பிரிவுகளில் போலீசார் வழக்குப் பதிவு செய்ததோடு, 17-5-2001 அன்று கைது செய்து வேலூர் சிறையில் அடைத்தனர். இது ஜெயா பதவியேற்ற மூன்றாம்

நாளிலே செய்த தூய்மையான ஆட்சி நிர்வாகம்! 23-5-2001 அன்று பரிதியின் ஜாமீன் மனுவிலே உயர்நீதிமன்ற நீதிபதி கூறும்போது, பரிதி மீது புகார் கொடுத்தவரே, அவர் கொலை செய்து விடுவதாக மிரட்டவில்லை என்று கூறியுள்ளார். ஆனால் போலீசார் பரிதி மீது கொலை முயற்சி வழக்கைப் பதிவு செய்தது ஏன் என்று தெரியவில்லை என்று தெரிவித்தார். பரிதி இளம்வழுதி மட்டுமல்ல, ஆற்காடு வீராசாமியின் தம்பியை 26-5-2001 அன்றும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பரசுராமனை 27-5-2001 அன்றும், சட்டமன்ற உறுப்பினராக இருந்த புரசை ரெங்கநாதனை 30-5-2001 அன்றும், சட்டமன்ற உறுப்பினராக இருந்த தாமரைக்கனி போன்றவர்களையும் கைது செய்தனர். ஏன் என்னையே 29-6-2001 அன்று நள்ளிரவில் வீடு புகுந்து படுக்கையறை வரை வந்து கைது செய்த சம்பவமும் நடை பெற்றது. கைது செய்ததோடு விட்டார்களா? அதையொட்டி முரசொலி மாறனும், டி.ஆர். பாலுவும் தாக்கப்பட்டதோடு கைதும் செய்யப்பட்டார்கள். மு.க.ஸ்டாலினை கைது செய்து மதுரை சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றனர். மதுரையில் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன், மு.க. அழகிரி போன்றவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். இவையெல்லாம் ஜெ.யின் தூய்மையான ஆட்சிக்கான சான்றுகள்!

30-5-2001 தேதிய "இந்தியன் எக்ஸ்பிரஸ்" "பழி வாங்கும் நாடகம், இரண்டாம் கட்டம்" என்ற தலைப்புடனும், "போயஸ் தோட்டத்தை விட தமிழ்நாடு பெரியது என்பதை எப்போது ஜெயா உணரப் போகிறார்?" என்ற துணைத் தலைப்புடனும் தலையங்கமே எழுதியது. அந்தப் பழைய பத்திரிகைகளையெல்லாம் வாங்கி இப்போது ஜெயலலிதா படிக்கலாமே?

11-6-2001 அன்று ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் என்று கூறப்பட்ட சுதாகரனையே போலீசார் கைது செய்தனர். அதைப்பற்றி "தி பயனீர்" ஏடு "பத்ரகாளியாக மாறி வஞ்சம் தீர்க்கும் ஆத்திரத்துடன் செயல்பட்டு வரும் ஜெயலலிதா" என்ற தலைப்பில் கட்டுரை தீட்டியது. அதே ஜூன் திங்களில் என் மீது ஒரு வழக்குப் பதிவு செய்யப் பட்டபோது - தற்போது ஜெயலலிதாவின் தூதராக இருந்து கொண்டு அவரை விழுந்து விழுந்து ஆதரிக்கும் "துக்ளக்" - 27-6-2001 இதழில் "கருணாநிதியை எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாகவே இந்தப்

பிரச்சினை இந்த வகையில் கையாளப்படுகிறது என்ற சந்தேகத் திற்கு இடம் உண்டு. இம்மாதிரி விஷயத்தில் காட்டப்பட வேண்டிய பொறுப்புணர்வுமிக்க அணுகுமுறையை இந்த அரசு காட்டவில்லை. இது நல்லதல்ல" என்று எழுதியிருந்தது.

தூய்மையான ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக ஜெயலலிதா 2002ஆம் ஆண்டில் எந்தக் காரணமும் இல்லாமல் பத்தாயிரம் சாலைப் பணியாளர்களை இரவோடு இரவாக பணி நீக்கம் செய்து வீட்டிற்கு அனுப்பினார். இதனை எதிர்த்து சாலைப் பணியாளர்கள் உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில், ''பணி நீக்கம் செய்தது சட்ட விரோதமானது. அந்த உத்தரவு செல்லாது. அதை ரத்து செய்கிறோம். அரசின் இந்தச் செயல் கடும் கண்டனத்திற்குரியது. கடந்த அரசு மக்கள்நலத் திட்டங்கள்படி வேலை வழங்கியது. அதை இந்த அரசுரத்து செய்தது தவறானது. ஒரு அரசு நல்ல வேலை வாய்ப்பு நிறுவனமாகத் திகழ வேண்டுமே தவிர, இது போல செயல்படக் கூடாது. இதை வன்மையாகக் கண்டிக்கிறோம்" என்றெல்லாம் தீர்ப்பு கூறப்பட்டது.

"தி ஸ்டேட்ஸ்மேன்" ஆங்கில நாளேடு "Lawless in TamilNadu" என்ற தலைப்பில் "Time ripe for Regime Change" என்கிற துணைத் தலைப்பில் எழுதிய தலையங்கத்தில், "தமிழகச் சட்டமன்ற தி.மு. கழக உறுப்பினர்களில் ஒருவரும், இரண்டு முறை சென்னை மாநகர மேயராக இருந்தவருமான மு.க. ஸ்டாலின் அவர்களை இட்டுக்கட்டிய குற்றச் சாட்டுகளின் மீது நள்ளிரவிலே கைது செய்ததின் மூலம், உச்சநீதிமன்றம் 1994ஆம் ஆண்டிலும், 1997ஆம் ஆண்டிலும் முறையே ஜோகிந்தர் குமார் வழக்கிலும், டி.கே. பாசு வழக்கிலும் கைது செய்வதற்காக வழங்கிய விதிமுறைகளையெல்லாம் எந்த அளவிற்கு மதிக்கவில்லை என்பதை மீண்டும் ஒரு முறை அ.தி.மு.க. அரசாங்கம் செய்து காட்டியிருக்கின்றது. மு.க.ஸ்டாலினின் தந்தை திரு.மு.கருணாநிதி அவர்கள் இரண்டாண்டுகளுக்கு முன்பு சாதாரண குற்றச்சாட்டுகளின் பேரில் இதைப்போலவே நள்ளிரவில் கைது செய்யப்பட்டபோது, எதிர் காலத்தில் அரசியல் சட்டக் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் வேண்டுமென்றே தகராறினை உருவாக்கும் இதுபோன்ற எண்ணத்தைத் தவிர்க்க வேண்டுமென்று மத்திய அரசின் உள்துறை, மாநில அரசினை எச்சரித்தது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் இது போன்ற

துரதிருஷ்டவசமான செயல்களில் மற்றொரு முறை ஈடுபடாத அளவிற்கு மாநில அரசு பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் மத்திய அரசு அப்போது தெரிவித்திருந்தது. 2001ஆம் ஆண்டு மீண்டும் பதவியேற்ற நாள் முதல் ஜெயலலிதாவின் அரசியல் பழி வாங்கும் நடவடிக்கைகளே அதன் செயல்பாடுகளாக உள்ளன" என்று எழுதியிருந்தது.

பத்திரிகையாளர் நக்கீரன் கோபாலை பொடா சட்டத்தின்கீழ் கைது செய்ததோடு, அவருடைய மாமனார் ஆர்.எஸ்.பாண்டியன் அவர்களை 6-7-2003 அன்று அழைத்துச் சென்றபோது கொடூர மாக மிரட்டியதின் காரணமாக அவர் தூக்குப் போட்டுக்கொண்டு இறந்தே போனார். இதுதான் ஜெயாவின் தூய்மையான ஆட்சிக்கு உதாரணமா?

தமிழகத் தணிக்கைத் துறை அதிகாரி தீத்தன் என்பவர் 31-7-2004 அன்று அ.தி.மு.க. அரசின் தவறான அணுகுமுறையால் 11 ஆயிரம் கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது என்று அறிக்கை கொடுத்தார் என்பதற்காக - அந்தத் தணிக்கைத் துறை அதிகாரியை பதவி நீக்கம் செய்ய வழக்குத் தொடுத்ததோடு, அவருக்கு எதிராக ஏடுகளில் எல்லாம் முழுப் பக்க விளம்பரங்களும் தரப்பட்டன. அந்த ஜெயலலிதாதான் இப்போது ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் தணிக்கைத் துறை அதிகாரி கொடுத்த அறிக்கையை தலையிலே தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறார்!

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த எம்.கே.பாலன் சென்னையில் 30-12-2001 அன்று கடத்திச் செல்லப்பட்டவர் பின்னர் கண்டுபிடிக்கப்படவே இல்லை.

2003ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஜெயலலிதா அரசு மின் கட்டணங்களை சுமார் 1400 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தியது. தி.மு. கழக ஆட்சியில் வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரத்தை அ.தி.மு.க. அரசு ரத்து செய்தது.

7-5-2002 அன்று "பிளாஸ்டிக்" பொருள்களைப் பயன்படுத்துவதற்கு தடை விதித்து சட்டப்பேரவையில் ஒரு மசோதா அறிமுகம் செய்யப்பட்டது. 30-1-2003 அன்று இந்த சட்ட முன்வடிவு அ.தி.மு.க. அரசினராலேயே திரும்பப் பெறப்பட்டது. இடையில் என்ன நடந்தது? தூய்மையான ஆட்சிக்குத்தான் வெளிச்சம்!

2003ஆம் ஆண்டு தமிழகத்தில் நடைபெற்ற அரசு அலுவலர், ஆசிரியர் போராட்டம் ஜெயாவின் தூய்மையான ஆட்சி நிர்வாகத்திற்கு மற்றும் ஓர் சான்றாகும். அரசு ஊழியர்களை அவர்களுடைய வீடுகளுக்கே சென்று நள்ளிரவில் போலீசார் கைது செய்த கொடுமையும் அப்போது நடை பெற்றது. சுமார் 2 இலட்சம் அரசு அலுவலர்கள் தங்கள் நிலைக்கு விளக்கமளிக்க வாய்ப்பு அளிக்கப்படாமலே வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். அது குறித்த வழக்கிலே என்ன தீர்ப்பு வருமோ என்றுகூடக் காத்திருக் காமல், புதிதாக 15,500 பேரை பணி நியமனம் செய்தார்கள். வழக்கு உச்சநீதிமன்றம் வரை சென்று, பணி நீக்கம் செய்யப்பட்ட அரசு அலுவலர்களை மீண்டும் பணியிலே அமர்த்த நீதிபதி உத்தர விட்டார்.

2002ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் வாரத்தில் ஜெயலலிதா அரசு மற்றுமோர் தூய்மையான நிர்வாகத்திற்கு உதாரணமாக, மதம் மாறுவதைத் தடை செய்து அவசரச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. அதைக் கண்டித்து தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்தும் ஜெயா கேட்கவில்லை. 2003ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் வாரத்தில் போப் ஆண்டவரே அதனைக் கண்டித்தார்.

அதுபற்றிகூட ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், "இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் நிறைவேற்றும் சட்டங்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கவோ, எதிர்ப்புத் தெரிவிக்கவோ போப்புக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது, உரிமையும் கிடையாது" என்றார். இந்தச் செய்தியைக் கூட கன்னியாகுமரி மாவட்ட கிறித்தவர்கள் சிலர் மறந்து விட்டது தான் ஆச்சரியத்திலும் ஆச்சர்யம்!

திரைப்படத் துறையிலும் ஜெயலலிதாவின் தூய்மையான நிர்வாகம் குறுக்கிடாமல் இல்லை. 2003ஆம் ஆண்டு திரைப்படத் துறையினர் மிகுந்த இன்னலுக்கு ஆளாகியிருந்த நேரத்தில் ஜெயா ஆட்சியில் படப்பிடிப்புக் கட்டணங்கள் எல்லாம் 25 மடங்கு அதிகமாக உயர்த்தப்பட்டது.

ஜெயலலிதா தனது ஒவ்வொரு அறிக்கையிலும் இந்த ஆட்சியிலே மணல் கொள்ளை, விலை உயர்வு என்றெல்லாம் எழுதத் தவறுவதில்லை. அவருடைய தூய்மையான(?)

ஆட்சியிலே மணல் கொள்ளை பற்றி 4-5-2003 தேதிய "கல்கி" தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்த ஒரு பகுதி இதோ :-

"நிர்வாகத்தில் அரசியல் தலையீடு இருந்தே தீரும் என்பதற்கு மணல் குவாரி காண்ட்ராக்ட் நிதர்சன எடுத்துக்காட்டு! அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த சில நாட்களுக்குள்ளேயே ஆற்று மணல் விலை கணிசமாக உயர்ந்தது. ஏன் இந்தத் திடீர் விலை உயர்வு என்று விசாரித்த போது, அதெல்லாம் கண்டுக்காதீங்க, தேவையில்லாமல் தலையை நுழைச்சா, மீண்டு வருமா சந்தேகம்தான் என்ற பதிலே கிடைத்தது. அதற்கேற்பத்தான் இன்று, தட்டிக் கேட்கப்போன ஓர் அதிகாரி, மணல் லாரியாலேயே இடித்துத் தள்ளப்பட்டு பரிதாபமாக உயிர் துறந்திருக்கிறார். இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளான அதிகாரி இவர் மட்டுமல்ல, இவருக்கு முன்னும் பலர் இருந்திருக்கிறார்கள். மணல் குவாரியில் இறங்கிய காண்ட்ராக்டர்களுக்கு இவ்வளவு துணிவு எங்கிருந்து வந்தது? ஒரு லாரி லோடுக்கு இவ்வளவு என்று நிர்ணயித்து வாங்கப்படும் லஞ்சப் பணம்தான் இத்தகைய துணிவைத் தர முடியும். அங்கிங்கெனாதபடி எங்கும் பரவியுள்ள லஞ்ச ஊழலும், அதன் நேரடி விளைவான அரசியல் தலையீடும் நீக்கப்பட்டாலன்றி சண்முகசுந்தரம் போன்ற அரசு அதிகாரிகள் பலரை நாம் பரிதாபமாகப் பலி கொடுக்கத்தான் நேரும்" - ஜெயலலிதாவின் தூய்மையான ஐந்தாண்டு கால ஆட்சிக்கு இந்த ஒரு உதாரணம் போதாதா?

உடன்பிறப்பே, இந்தப் பட்டியலை இத்துடன் நிறுத்தி விடுகிறேன். ஜெயலலிதா 2001-2006 ஆம் ஆண்டு தூய்மையான நிர்வாகம் நடத்தியதாகவும், அதனால்தான் அவர் மீது வழக்குப் போடவில்லை என்றும் அறிக்கையில் எழுதியிருந்த காரணத்தால் இத்தனை விளக்கங்களையும் அளித்துள்ளேன். 1991-1996 ஆம் ஆண்டுகளில் அவர் ஆட்சியிலே இருந்த போது நடத்திய ஊழல்களுக்காக போடப்பட்ட வழக்குகளே பெங்களூரு போன்ற சிறப்பு நீதிமன்றங்களில் இன்னும் நீடித்துக் கொண்டிருக்கையில் 2001-2006 ஆம் ஆண்டு நடைபெற்றவைகளுக்காக வழக்கு என்றால், அது எப்போதுதான் முடியுமோ?

அன்புள்ள,

மு.க.

29-12-2010

3524. அய்யோ! தாங்க முடியவில்லையே அம்மையாரின் புளுகு!

உடன்பிறப்பே,

சிறுபான்மையினத்தவரின் உரிமைகளையும், நலன்களையும் காப்பதில் அ.இ.அ.தி.மு.க. தான் ஒரு வலிமை மிக்க பாதுகாவலனாக எப்போதும் இருந்து வருகிறது என்று ஒரு முழுப் பொய்யை தனது அறிக்கையிலே ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார். மேலும் தி.மு.கழக ஆட்சியில்தான் கட்டாய மதமாற்ற தடைச் சட்டம் நீக்கம் செய்யப்பட்டது என்று ஒரு தவறான செய்தி பிரபல நாளிதழ்கள் சிலவற்றில் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். ஆனால் எந்த நாளிதழ்கள் என்று அவர் கூறவில்லை.

சிறுபான்மையினரின் உரிமைகளையும் நலன்களையும் பாதிக்கக் கூடிய சட்டம்தான் கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம்! அந்தச் சட்டத்தை தி.மு. கழக ஆட்சியில் ரத்து செய்யப்படவில்லை என்கிறார் ஜெயலலிதா - ஆனால் சிறுபான்மை மக்களைப் பாதிக்கக் கூடிய கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தை கொண்டு வந்தவர் யார்? இதே ஜெயலலிதாவா? அல்லவா? 2002ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் வாரத்தில் கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தை ஜெயலலிதா அரசு கொண்டு வந்ததா? இல்லையா? அதைக்கண்டித்து தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்தபோது, அவைகளை ஜெயலலிதா உதாசீனப்படுத்தி, சிறுபான்மையின மக்களின் நலன்களையும், உரிமைகளையும் பாதிக்கச் செய்தாரா? இல்லையா? 2003ஆம் ஆண்டு ஜூன் திங்களில் போப்பாண்டவரே கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தை கண்டித்தபோது, போப்புக்கு அதற்கான எந்தவிதமான அதிகார

மும் உரிமையும் கிடையாது என்று ஜெயலலிதா அறிக்கை விடுத்து சிறுபான்மையினரான கிறித்தவர்களின் மனதை நோக அடித்தது உண்டா இல்லையா?

செய்தியாளர்கள், கட்டாய மத மாற்றத் தடைச்சட்டம் குறித்து என்னைக் கேட்ட போது, பெரியாரின் கொள்கைப்படி, அண்ணாவின் கொள்கைப்படி அந்தச் சட்டம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல, அவரவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப மதம் மாறினால் கூட அவர்கள் மதம் மாறியதாகக் கூறி தண்டிக்கப்பட நேரிடும், எனவே அந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென்று தெரிவித்தேன்.

தமிழக அரசின் மத மாற்றத் தடைச் சட்டத்தை திரும்பப் பெறக்கோரி சிறுபான்மையினர் நடத்திய அனைத்துக் கட்சி கண்டன மாநாட்டில் நான் கலந்து கொண்டு உரையாற்றினேன். சிறுபான்மை மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை என்றைக்கும் காப்பாற்றுவேன் என்றும், அ.தி.மு.க. அரசு மத மாற்றத் தடைச் சட்டத்தைத் திரும்பப் பெறும் வரை போராட்டம் ஓயாது என்றும் அந்த மாநாட்டில் நான் அறிவித்தேன்.

சட்டப் பேரவையில் 31-10-2002 அன்று ஜெயலலிதா ஆட்சியில் மத மாற்றத் தடைச் சட்ட மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தி.மு. கழகமும் மற்ற எதிர்க் கட்சிகளும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தபோதிலும் பெரும்பான்மை காரணமாக அந்தச் சட்டம் ஆளுங் கட்சியினால் அவையிலே நிறைவேற்றப்பட்டது. எனவே கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்ததே ஜெயலலிதாதான்! அதை அப்படியே மறைத்துவிட்டு, அந்தச் சட்டத்தை 18-5-2004 அன்று அவசரச் சட்டத்தின் வாயிலாக ரத்து செய்தேன் என்கிறார் ஜெயலலிதா!

ஒரு அரசு சட்டப் பேரவை நடைபெறாத நாட்களில் ஒன்றை மக்களுக்கு திடீரென அவசரமாக அறிவிக்கக் கருதினால், அப்போது அரசின் சார்பில் கொண்டு வரப்படுவதுதான் அவசரச் சட்டம். அப்படியொரு அவசரச் சட்டம் ஒரு அரசின் சார்பில் பிறப்பிக்கப்படுமேயானால், அதற்கு அடுத்து நடைபெறும் சட்டமன்றக் கூட்டத் தொடரில், அந்த அவசரச் சட்டத்திற்கு

பதிலாக ஒரு சட்ட முன்வடிவு பேரவையிலே கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படும். ஆனால் ஜெயலலிதா ஆட்சியில் 18-5-2004 அன்று கட்டாய மத மாற்றத் தடைச்சட்டத்தை ரத்து செய்து அவசரச் சட்டம் பிறப்பித்த பிறகு, அடுத்து நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் அந்த அவசரச் சட்டத்திற்கு மாற்றாக ஒரு சட்ட முன்வடிவை பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றவில்லை. 18-5-2004 அன்று ஜெயலலிதா அவசரச்சட்டம் பிறப்பித்ததற்குக் காரணமே அப்போது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவருடைய கட்சி தோற்ற பிறகு, கட்டாய மத மாற்றத் தடைச்சட்டத்தை ரத்து செய்து அவசரச் சட்டம் கொண்டு வந்தது மாத்திரமல்ல, தி.மு. கழக ஆட்சியில் வழங்கப்பட்டு வந்த சலுகைகள், உரிமைகள், நிறை வேற்றப்பட்ட திட்டங்களை அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தி வைத்து விட்டவைகளையெல்லாம் மீண்டும் கொண்டு வரப்படும் என்றும் அறிவித்தார். அப்போது செய்தியாளர்கள் 18-5-2004 அன்று என்னைச் சந்தித்து ஜெயலலிதாவின் திடீர் அறிவிப்புகளைப் பற்றி கேட்டபோது, "திடீரென்று ஒன்றும் அறிவிக்கவில்லை. தி.மு. கழக ஆட்சியில் கொடுக்கப்பட்டு வந்த சலுகைகளையெல்லாம் மூன்றாண்டு கால ஆட்சியில் ஜெயலலிதா ஒழித்துக் கட்டினார். தற்போதைய தோல்விக்குப் பிறகு கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்ற பழமொழிக்கேற்ப இப்போது சூரிய நமஸ்காரத்திற்கு வந்திருக்கிறார். சூரியன் தி.மு.க.வின் தேர்தல் சின்னம் என்பது உங்களுக்குத் தெரியும். அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மக்களை ஏமாற்றப் பார்க்கிறார். மக்கள் ஏமாறுவார்கள் என்று நான் நம்பவில்லை. ஜெயலலிதாவின் இந்த அறிவிப்புகள் தி.மு.க. தலைமையிலே அமைந்த கூட்டணிக்கு தமிழ்நாட்டில் கிடைத்த மகத்தான வெற்றி. 40 இடங்களைப் பெற்றதைப் போல இது 41வது வெற்றி" என்று கூறினேன்.

தி.மு.கழக ஆட்சியில்தான் தமிழ்நாடு கட்டாய மத மாற்றத் தடை (நீக்கச்) சட்ட முன் வடிவு 2006ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு 31-5-2006 அன்று அந்தச் சட்ட முன் வடிவு ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்த நேரத்தில் கூட அ.தி.மு.க. சார்பாக அவர்கள் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட அவசரச் சட்டம் பற்றி ஜெயலலிதா குறிப்பிட்டபோது, நான் அதற்கு அப்போதே விளக்கம் அளித்து, அது அவை நடவடிக்கை குறிப்பில் இன்றும் உள்ளது. அது வருமாறு :-

Note for Circulation, Public Departmentஇல் இருந்து வந்த கோப்பில், , "This file relates to introducing a Bill in the ensuing Session of the Tamil Nadu Legislative Assembly for replacing the Tamil Nadu Prohibition of Forcible Conversion of Religion (Repeal) Ordinance, 2004, (Tamil Nadu Ordinance 4/2004)" என்ற தொடக்கத் தோடு, அடுத்த பக்கங்களில் - "As per the Provisions of Clause 2 of Article 213 of the Constitution, every Ordinance promulgated, has to be replaced by an Act of the Legislature within six weeks from the date of re-assembly of the Legislature. Hence, the Law Department was requested to prepare a Draft Bill to replace the Tamil Nadu Prohibition of Forcible Conversion of Religion (Repeal) Ordinance, 2004". இந்திய அரசியலமைப்புச் சட்டம், Art.213 (2) (a)-ன்படி, மேதகு ஆளுநரால் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பிறகு, மீண்டும் சட்டமன்றம் கூடும் நாளிலிருந்து ஆறு வாரத்திற்குள் அந்த அவசரச் சட்டம் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்டு, நிறைவேற்றப்படவில்லை என்றால், சட்டமன்றம் கூடிய ஆறு வாரங்களுக்குப் பிறகு அந்த அவசரச் சட்டம் காலாவதியாகி விடும் என்று எழுதப்பட்டு, அதிலே முதலமைச்சர் என்ற முறையில் ஜெயலலிதா 21-6-2004இல் கையெழுத்திட்டிருக்கிறார்.

இவ்வாறு கையெழுத்திட்டவாறு அந்த அவசரச் சட்டத்தை பேரவையிலே வைத்து ஒப்புதல் பெற்றார்களா என்றால் இல்லை. ஆனால் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி அவசரச் சட்டம் நிறைவேற்றினாலே போதுமானது என்று ஜெயலலிதா சொல்லுகிறார் என்றால், பிறகு ஏன் இந்தக் கோப்பிலே பேரவையிலே வைத்து ஆறு வாரக் காலத்திற்குள் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று அவரே ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்? ஜெயலலிதா கோப்பிலே ஒப்புக்கொண்டது உண்மையா? அறிக்கையிலே கூறியிருப்பது உண்மையா?

ஜெயலலிதாவிற்கு உண்மையிலே சிறுபான்மையினர் மீது அக்கறை இருக்குமானால், அவசரச் சட்டத்திற்கு மாற்றான சட்டத்தை அடுத்துக் கூடிய சட்டப் பேரவையில் ஏன் கொண்டு வந்து நிறைவேற்றவில்லை? பொதுத்துறை கோப்பிலே அடுத்து சட்டசபை கூடிய ஆறு வாரத்திற்குள் அவசரச் சட்டத்திற்கு மாற்றுச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்க

வேண்டும். ஆனால் அவர் ஆட்சியில் இருந்து இறங்குகின்ற வரை அதைப்பற்றி நினைக்கவே இல்லை. ஏனென்றால் அவருக்கு சிறுபான்மையினரைப் பற்றிய நினைவே இல்லை. எப்போதும் அவருக்கு சிறுபான்மையினரின் நினைவு தேர்தல் நேரத்தில் மட்டும்தான் வரும் என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

ஜெயலலிதா தற்போது வைத்துள்ள வாதத்தைத்தான் 27-5-2006 அன்றும் பேரவையிலே எடுத்துவைத்தார். அப்போது கூட காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஞானசேகரன் குறுக்கிட்டு, "ஜெயலலிதா அவர்கள் இங்கே சொல்கிற போது ஏற்கெனவே அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து, பொதுவாக அந்தச் சட்டத்தை நீக்கி விட்டாலே, அதுவே போதும், நீக்கி விட்டதாகப் பொருள் என்று சொன்னார்கள். எப்பொழுதுமே ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னால், அதை ஆறு மாத காலத்திற்குள் அவையில் வைத்து நீங்கள் சட்டம் ஆக்கினால்தான், நிச்சயமாக அந்தச் சட்டம் ஒரு உறுதி பெறும். ஜெயலலிதா அவசரச் சட்டத்தைப் போட்டு விட்டு, அப்படியே விட்டு விட்டுப் போய் விட்டார் என்று சொன்னால், பிறகு எப்போதுதான் அதற்கு ஒரு விடிவுகாலம்? ஏற்கெனவே ஆடு, கோழி வெட்டக் கூடாது என்ற தடுப்புச் சட்டம் கூட இந்த அவையிலே கொண்டு வந்தார்கள். இதை மாத்திரம் ஏன் கொண்டுவரவில்லை அன்றைக்கு! ஏனென்றால் சிறுபான்மை மக்கள் மீது ஜெயலலிதாவுக்கு அந்த அளவிற்கு எதிர்ப்பு இருந்த காரணத்தினால், அதை விட்டு விட்டார்கள். இந்த அவையில் ஜெயலலிதா அவசரச் சட்டத்தை சட்டம் ஆக்காமல் விட்டு விட்டதே, அவர்கள் சிறுபான்மை மக்களுக்கு நேர் எதிரியாக இருந்தார், அவர்களுக்கு துரோகம் செய்தார் என்றுதான் பொருள்" என்று கூறியது நடவடிக்கை குறிப்பிலேயே உள்ளது.

சிறுபான்மையினரை எந்த அளவிற்கு ஜெயலலிதா சிறுமைப்படுத்தினார் என்பதற்கு மற்றுமோர் உதாரணம்! ஆண்டு தோறும் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் ஜெயலலிதா வழக்கமாக கலந்து கொள்வதில்லை. அதுபோல் ஆண்டு தோறும் காயிதே மில்லத் நினைவகத்திற்கு வந்து பூவாடை அஞ்சலி செலுத்துவதுமில்லை. ஆனால் தேர்தல் ஆண்டு என்றால் தவறாமல் இந்த இடங்களுக்கு வந்து பெரிதாக புகைப்பட மெடுத்து ஏடுகளிலே விளம்பரம் செய்யாமல் இருப்பதில்லை.

பொதுவாக ஜெயலலிதாவுக்கு பெரியார், அண்ணா, எம்.ஜி.ஆர்., காய்தே மில்லத், தேவர் திருமகன், அம்பேத்கர் போன்றவர்களின் நினைவெல்லாம் தேர்தல் வருகிறது என்றால் வந்து விடும்!

அந்த வகையில் இந்த 2005ஆம் ஆண்டு தேர்தல் வரப்போகிறது என்றதும், தானே இஃப்தார் நிகழ்ச்சியை கட்சியின் சார்பிலேயே ஏற்பாடு செய்து கலந்து கொண்டுள்ளார். ஆனால் 2003ஆம் ஆண்டும் இது போலவே தான் கட்சியின் சார்பில் இஃப்தார் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் அழைப்பு அனுப்பி அழைத்து விட்டு, கடைசி நிமிடத்தில் அந்த விழாவிற்கு தான் செல்லாமல் தவிர்த்தார் என்பது எத்தகைய அநாகரிகம் என்பதை நடுநிலையாளர்கள்தான் சொல்லவேண்டும். வீட்டிற்கு விருந்தினர்களையெல்லாம் சாப்பிட வாருங்கள் என்று அழைத்துவிட்டு, அவர்கள் வீட்டிற்கு விருந்துக்கு வரும்போது வீட்டைப் பூட்டி விட்டு செல்பவர்களுக்கும் ஜெயலலிதாவிற்கும் வேறுபாடு உண்டா?

27-2-2002 அன்று அயோத்தியிலிருந்து ஆமதாபாத் நகருக்கு சபர்மதி விரைவு ரயிலில் வந்து கொண்டிருந்த கரசேவகர்கள் மீது வன்முறைக் கும்பல் ஒன்று பெட்ரோல் குண்டுகளை வீசியதின் காரணமாக குழந்தைகள், பெண்கள் உட்பட சுமார் 60 பேர் கொல்லப்பட்டனர். இந்தச் செய்தியைத் தாங்கி அனைத்து ஏடுகளும் 28ஆம் தேதி காலையில் வந்ததும் உடனடியாக அன்றைய தினமே அந்தச் சம்பவத்தைக் கண்டித்தும், இறந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்தும் வன்முறை தொடராமல் இருக்க மத்திய மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டும் அறிக்கை விடுத்தேன். நான் மாத்திரமல்ல; பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ ஆகியோரும் கண்டன அறிக்கை விடுத்தனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏட்டில் அந்தச் சம்பவத்தைக் கண்டித்து தலையங்கமே எழுதப்பட்டிருந்தது. ஆனால் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா அதே நாளன்று விடுத்த அறிக்கையில் இந்தச் சம்பவத்தைக் கண்டித்ததோடு மட்டும் நிறுத்தாமல், தேவையின்றி, உண்மையை உணர்ந்து கொள்ளாமல்,

"பெரும்பான்மை சமுதாயத்திற்கு எதிராக நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான இந்தச் சம்பவம் மிகவும்

கண்டிக்கத்தக்கது. இதுபோன்று ஏதாவது ஒரு சம்பவம் சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டால் எல்லா அரசியல் தலைவர்களும் ஓடிச்சென்று கண்டன அறிக்கை வெளியிடுகிறார்கள். ஆனால் அதை விட வெறித்தனமான முறையில் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக காட்டு மிராண்டித்தனமாக நடந்த இந்தத் தாக்குதலைக் கண்டித்து எந்த ஒரு அரசியல் தலைவரும் இதுவரை கண்டன அறிக்கை வெளியிடவில்லை. இது விநோதமாகவும் வருத்தம் அளிப்பதாகவும் உள்ளது" - என்று குறிப்பிட்டிருந்தார்.

இஸ்லாமியர்களுக்கு தனி இட ஒதுக்கீடு பற்றிய பிரச்சினை எழுந்தபோது ஜெயலலிதா "முஸ்லீம்களுக்கு தனி ஒதுக்கீடு அளித்தால் நாளை கிறித்தவர்களும் இட ஒதுக்கீடு கேட் பார்கள். அப்புறம் மற்ற சிறுபான்மையினரும் கேட்பார்கள். எனவே இவ்வாறு இட ஒதுக்கீடு அளிப்பது இயலாத ஒன்றாகும். அரசியல் சட்டத்தின் அடிப்படையில் முஸ்லீம்கள் ஏற்கெனவே பல சலுகைகளை அனுபவித்து வருகிறார்கள். பெரும்பான்மை சமூகத்தினர் அந்தச் சலுகைகளையெல்லாம் அனுபவிக்கவில்லை" என்று கூறினார்.

30-7-2003 அன்று செய்தியாளர் ஒருவர் ஜெயலலிதாவிடம், அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவதை ஆதரிக்கிறீர்களா என்று கேட்டதற்கு, "ஆமாம், ஆதரிக்கிறேன், அயோத்தியில் ராமர் கோவில் கட்ட முடியவில்லை என்றால் வேறு எங்கே கட்ட முடியும்" என்று பதில் அளித்தவர்தான்!

23-8-2001 ஆம் நாளன்று சட்டசபையில் திரு. இரா. திருமாவளவன் "இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும்; அதை நடைமுறைப்படுத்த நான் ஆணையிடுவேன் என்று இஸ்லாமியர்கள் மாநாட்டில் ஜெயலலிதா பேசியது எனக்கு நினைவு இருக்கிறது. ஆகவே, இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படுமா?'' என்று ஜெயலலிதாவைக் கேட்டபோது, "அப்படிப்பட்ட உத்தரவாதத்தைத் தந்தவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி தான்; நான் அல்ல'' என்று கூறியவர்தான் ஜெயலலிதா. கழக ஆட்சி 2006-ல் பொறுப் பேற்ற பின்புதான், 22-10-2007 ஆம் நாளன்று, தமிழ்நாடு கிறித்தவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு தனி இட ஒதுக்கீட்டுச் சட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

உடன்பிறப்பே, இந்த விவரங்கள் எல்லாம் சிறுபான்மையோர் மீது நாம் எந்த அளவிற்கு பற்றும் பாசமும் கொண்டவர்கள் என்பதையும், ஜெயலலிதா எந்த அளவிற்கு அவர்களை ஏமாற்ற முனைகிறார் என்பதையும் விளக்கிடும் என்று நம்புகிறேன். ஜெயலலிதாவின் கூற்றினை யார் நம்புகிறார்களோ, இல்லையோ, சிறுபான்மை சமுதாயத்தினர் நிச்சயமாக நம்ப மாட்டார்கள் என்பது மட்டும் உறுதி!

அன்புள்ள,

மு.க.

31-12-2010

3525. படித்திடுவீர்; பனகல் அரசர் வரலாறு!

உடன்பிறப்பே,

சட்டமன்ற மேலவையிலும், பேரவையிலும் பனகல் அரசருடைய படத்தை வைப்பதற்கு நான் முயற்சி எடுத்துக் கொண்டபோது அதிகாரிகளிலே ஒரு சிலர் பனகல் அரசர் யார் என்று வியப்பு மேலீட்டால் திகைத்துக் கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொன்னேன்.

என்னுடைய பதின்மூன்றாவது வயதில் - 1937ஆம் ஆண்டு - திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது - எனக்கு "நான்டிடெயில்" (துணைப்பாடம்) புத்தகமாக "பனகல் அரசர் வரலாறு" வைக்கப்பட்டிருந்தது. 45 பக்கங்கள் கொண்ட அந்தச் சிறிய புத்தகத்தை மணி. திருஞானசம்மந்த முதலியார் என்பவர் எழுதியிருந்தார். "ஒற்றுமை ஆபீஸ்", சைதாப் பேட்டை, மதராஸ் என்று முகவரி அச்சிடப் பட்டு - மூன்றணா விலைக்கு விற்கப்பட்ட புத்தகம் அது.

அந்தப் புத்தகத்தில் வரும் பதின்மூன்று அதிகாரங்களையும் - 45 பக்கங்களையும் நான் மனப்பாடம் செய்து அப்பொழுதே வகுப்பில் ஒப்பிக்கும் திறமை படைத்தவனாக விளங்கி - வகுப்பாசிரியர் ராமசாமி செட்டியார், முத்துகிருட்டிண நாட்டார் ஆகியோருடைய பாராட்டைப் பெற்றவன்.

பனகல் அரசர் தமிழ்நாட்டில் 1917ஆம் ஆண்டு அன்றைய சென்னை மாகாணத்தில் "நியாயக் கட்சி" எனும் நீதிக் கட்சியின் தலைவராகவும் - அதைத் தொடர்ந்து 1923ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தின் "பிரதான மந்திரி"யாகவும் பொறுப்பேற்று மூன்றாண்டுகள் அப்பதவிகளில் வீற்றிருந்து 1928ஆம் ஆண்டு காலமானார்.

பனகல் அரசர் மறைந்தபோது அவரது மறைவு குறித்து தந்தை பெரியார் அவர்கள் எழுதிய இரங்கல் தலையங்கத்தில்,

"ஒரு நல்ல நெருக்கடியான சந்தர்ப்பத்தில் பனகல் அரசரின் காலம் முடிவுபெற்றதால், பெரியதும் திறமையானதுமான ஒரு யுத்தம் முனைந்து வெற்றிக் குறியோடு நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் போர் வீரர்கள் சேனாதிபதியின் ஆக்ஞையை எதிர்பார்த்துத் திரும்பியபோது சேனாதிபதி இறந்து போய் விட்டார் என்கின்ற சேதி கிடைக்குமானால், அந்தச் சமயத்தில் அப்போர் வீரர்களின் மனம் எப்படி துடிக்குமோ அதுபோல் நமது தமிழ் மக்கள் துடித்திருப்பார்கள் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, இழிவாய்க் கருதப்பட்ட மக்கள் அதாவது தீண்டாதார், கீழ்ச்சாதியார், ஈனச் சாதியார், சூத்திரர் என்பனவாகிய "பிறவி இழிவும்" "பிறவி அடிமைத்தனமும்" சுமத்தப் பட்ட சுமார் 20 கோடி மக்களின் சுய மரியாதைக்கும் விடுதலைக்கும் சமத்துவத்திற்கும் மனிதத் தன்மைக்குமாக வேண்டி பிரவாகமும் வேகமும் கொண்ட வெள்ளத்தில் எதிர் நீச்சு செய்வது போன்ற கண்டுமான காரியத்தைக் கைக்கொண்டு அதில் இறங்கி வேலை செய்தவர் பனகல் அரசர்."

உடன்பிறப்பே, பெரியாரால் இவ்வாறு எழுதப்பட்ட பனகல் அரசர் ஆட்சிக் காலத்திலே தான் தமிழ் வைத்திய முறைக்கு பெரும் சிறப்பு ஏற்படுத்தப்பட்டது.

ஆலயங்களின் கண்ணியத்தைக் காப்பாற்ற தர்மகர்த்தாக்களின் இழிந்த செய்கைகளை ஒழித்திட அவர்தான் "இந்து சமயச் சீர்திருத்தச் சட்டம்" என்ற மிகச் சிறந்த சட்டம் ஒன்றை அனைவரும் பாராட்டுகின்ற வகையில் ஒரு சில சுயநலக்காரர்களின் கடுமையான எதிர்ப்பையும் சமாளித்து அரசு சார்பில் கொண்டுவந்தவர் என்பதை வரலாறு எடுத்துச் சொல்கிறது.

அந்தப் பெருந்தகையினுடைய அஞ்சாமை, ஆற்றல், அறிவு, ஏழைகளின்பால் அவர் கொண்டிருந்த இரக்க உணர்வு - இவ்வளவையும் தொகுத்து எழுதப்பட்டதே ஐந்தாம் வகுப்பில் நான் படித்த துணைப்பாட நூலான "பனகல் அரசர்" பற்றியதாகும். அந்தப் புத்தகத்தை இப்போது தேடியெடுக்கச் செய்து திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி மாவட்ட நூலகத்தில் அதைத் தேடிப் பிடித்தெடுத்து திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எம். சந்திர சேகரன், ஐ.ஏ.எஸ்., எனக்கு அனுப்பியிருந்தார். 45 பக்கங்களே கொண்ட அந்தச் சிறிய நூலினைப் படித்துப் பார்த்தால்

நீதிக் கட்சி சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு - அந்தக் கட்சியின் சார்பில் பொறுப்பிலே இருந்தவர்கள் கடைப்பிடித்த கண்ணியம், நேர்மை, நியாயம் - இவற்றைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள முடியும். அத்தகைய பெருமகனாரின் படம்தான் இப்பொழுது சென்னையில் புதிய சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பழைய படம் வந்து சேரும் வரையில் பனகல் அரசருடைய வரலாற்றுக் குறிப்புகள் என்கையில் கிடைக்கும் வரையில் இந்த உண்மைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள முடியாமல் நான் எவ்வளவோ வேதனைப்பட்டேன். என் வேதனை விலகிடவும் - மேலும் சாதனைகள் புரிந்திட உற்சாகம் பெற்றிடவும் - வேரில் இடப்பட்ட எருவாக - ஊற்றப்பட்ட நீராக - இந்நூல் என் கைக்குக் கிடைத்துள்ளது. இதனை மலிவுப் பதிப்பாக வெளியிட்டால் மக்களுக்கு நீதிக் கட்சியின் தொடக்கம் - வரலாறு - அதன் தேவை எனும் இத்தனை உண்மைகளும் கிடைத்திடும் என்று நான் பெரிதும் நம்புகிறேன்.

எனவே, உடன்பிறப்பே, நான் அன்று படித்தறிந்த பனகல் அரசர் எனும் ஐந்தாம் வகுப்பு துணைப் பாடத்தை நீயும் படித்திட வேண்டும் என்று விரும்புகிறேன். என் உடன்பிறப்பாம் நீயும் உடனே படித்திட வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

7-1-2011

3526. நஞ்சைக் கக்கிடுவோர்; நெஞ்சைத் தொட்டுச் சொல்வாரா?

உடன்பிறப்பே,

தி.மு. கழகம் என்றால், தி.மு.கழக ஆட்சி என்றால் பொது மக்கள் வரவேற்று அதன் திட்டங்களினால் பயன்களைப் பெற்று வருகின்ற நிலையில், அதைக் கண்டு எத்தனை பேர் பொச்சரிப்பு கொள்கிறார்கள், பொறாமைப்படுகிறார்கள் என்பதற்கு உதாரணமாக, தேர்தல் நெருங்க நெருங்க ஒருசில ஏடுகள் இந்த அரசைக் குறை கூறி பல்வேறு செய்திகளை தங்கள் ஏடுகளிலே வெளியிட்டு வருவதை நீயும் அறிவாய்; நானும் அறிவேன். உன்னைப் பொறுத்தவரையில் அதைப் படித்து விட்டு அடுத்த நிமிடமே அதனை உதாசீனப் படுத்தி விட்டுப் போய் விடுகிறாய். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் அப்படியிருந்து விடுவதில்லை. உடனடியாக அந்தச் செய்தியிலே ஏதாவது உண்மை இருக்கிறதா என்று அறிந்து கூறும்படி என்னுடைய செயலாளர்களிடம் உடனடியாகத் தெரிவித்து, அதுபற்றியே மீண்டும் மீண்டும் அவர்களிடம் கேட்டு உண்மையைத் தெரிந்து கொள்கின்ற வரையில் அமைதிகொள்வதில்லை.

இப்படி கடந்த இரண்டு மூன்று நாட்களாக வருகின்ற செய்திகளில் ஒன்றுதான் இரண்டு ஏக்கர் வரை இலவசமாக ஏழைகளுக்கு நிலம் வழங்கும் திட்டம். இந்தத் திட்டத்தைப் பற்றி "இந்தியா டுடே" தமிழ் இதழில் 29-12-2010 தேதியில் "தரிசாகும் திட்டம்" என்ற தலைப்பில் ஐந்து பக்கங்களில் புகைப்படங்களுடன் வந்துள்ள கட்டுரையை எடுத்து வைத்துக் கொண்டுதான் - அதிலே உண்மை இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளாமல், சில எதிர்க்கட்சிகள் நிலம் வழங்கும் திட்டத்தில் ஏராளமான முறைகேடுகள் நடைபெறுவதாகச் சொல்லி வருகிறார்கள்.

இந்தப் புகார்கள் குறித்து சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களோடு தொடர்புகொண்டு, வெளியிடப்பட்ட முறைகேடுகள் குறித்து நேரடியாக விசாரித்து விளக்க அறிக்கையினை உடனடியாக அனுப்பி வைக்கவேண்டுமென்று தெரிவித்ததின்பேரில், மாவட்ட ஆட்சியர்களும் நேரடியாக விசாரணை செய்து, அறிக்கைகளை அனுப்பியுள்ளனர். விபரங்கள் பின்வருமாறு :

1. **"முறைகேடு என வெளியிடப்பட்ட செய்தி":** பவானி வட்டம், அந்தியூர் 'ஏ' கிராமப் பகுதியில் நிலமில்லாத ஏழைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் (சர்வே எண். 82/6, 82/7, 82/8, 82/9, 106/3, 117/3, 212/6, 229/2) இப்பகுதியின் அமைச்சரான வெள்ளக்கோவில் சாமிநாதனின் உறவினர்கள், நெருக்கமானவர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பகுதியில் உள்ள கால்நடை மருத்துவ ஆய்வாளர் கண்ணன் என்பவருக்கு இந்தப் பகுதியில் நிலம் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இவர் அமைச்சர் சாமிநாதனுக்கு வேண்டியவர் என்று கிராம மக்கள் கூறுகிறார்கள்.

   ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலரின் விளக்கம்: குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களில் மொத்தம் 2.94.5 எக்டேர் நிலம் 8 பேருக்கு ஒப்படை செய்யப்பட்டு, அனைத்தும் பயனாளிகளின் அனுபவத்தில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. கால்நடை மருத்துவ ஆய்வாளர் கண்ணன் என்பவருக்கு இந்த கிராமத்தில் நிலம் ஏதுமில்லை.

   உண்மைநிலை இப்படியிருக்க, அமைச்சர் வெள்ளக்கோவில் சாமிநாதன் அவர்களைத் தொடர்புபடுத்தி வெளியிடப்பட்ட செய்தி முற்றிலும் தவறானது.

2. **"முறைகேடு என வெளியிடப்பட்ட செய்தி":** சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுகாவில் தேவண்ணக்கவுண்டனூரில் மலைப் பகுதியில் ஒதுக்கப்பட்ட இலவச நிலம் உள்ளூர் அரசியல்வாதிகள்

கையில் சிக்கியிருக்கிறது. "எங்கள் பகுதி தி.மு.க. பஞ்சாயத்துத் தலைவர் அந்த மலைப்பகுதி நிலத்தை (சர்வே எண். 489/5லிருந்து 489/21 வரை) அபகரித்து ஜே.கே.மைனிங் அண்ட் கெமிக்கல்ஸ் என்ற பெயரில் கல்குவாரி நடத்தி வருகிறார்'' என்கிறார் அந்த ஊரைச் சேர்ந்த, பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர். அரசு இந்த ஊரைச் சேர்ந்த 150 பேருக்கு இலவச நிலங்களை அறிவித்து 3 வருடங்கள் ஆகியும், அந்த நிலம் இருக்கும் இடம்கூட அவர்களுக்குத் தெரியவில்லை.

சேலம் மாவட்ட ஆட்சியரின் விளக்கம்: தேவண்ணக்கவுண்டனூர் சர்வே எண். 489ன் மொத்த பரப்பளவு 4.30.0 எக்டேர் பாறை என கிராமக் கணக்குகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சர்வே எண், 489/1 என உட்பிரிவு செய்யப்பட்டு, 0.22.5 எக்டேர் நிலம் பெந்தகோஸ் சபை கிறித்துவ மயானம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் சர்வே எண். 489/5 முதல் 489/21 வரை உள்ள பாறை புறம்போக்கில் 3.64.5 எக்டேர் நிலம் 15 பேருக்கு ஒப்படை செய்யப்பட்டு; இந்த நிலங்கள் அனைத்தும் ஒப்படை பெற்றவர்களின் அனுபவத்தில் இருந்து வருகின்றன.

மேலும், ஜே.கே.மைனிங் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவன உரிமையாளர் திரு.ஜே.மோகன் என்பவருக்கு இந்த கிராமத்தில் சர்வே எண். 18/1பி.ல் 1.54.0 எக்டேர் நிலம், சர்வே எண். 183/2-ல் 1.91.5 எக்டேர் நிலம், ஆக மொத்தம், 3.45.5 எக்டேர் பட்டா நிலம் உள்ளது. இந்த நிலத்தில், சென்னையில் உள்ள புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையரிடம் 20 ஆண்டுகளுக்கு கனிமங்கள் வெட்டி யெடுக்க அனுமதி பெற்றுள்ளார். இந்த நிலங்களுக்கும், 15 பேருக்கு நில ஒப்படை செய்யப்பட்ட நிலங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. ஜே.கே.மைன்ஸ் நிறுவனத்தினர் 15 பேருக்கு நில ஒப்படை செய்யப்பட்ட நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யவில்லை. ஜே.கே.மைன்ஸ் நிலத்திற்கும், 15 பேருக்கு ஒப்படை செய்யப் பட்ட நிலங்களுக்கும் இடையே 2 கிலோ மீட்டர் தூரம் உள்ளது.

இது அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் உண்மை நிலை அறிந்து அரசுக்குக் கொடுத்துள்ள விவரமாகும்.

உண்மைநிலை இவ்வாறிருக்க, யாரோ ஒருவர் தனது பெயர் சொல்ல விரும்பாமல், பொறுப்பற்ற முறையில் கொடுத்த விவரங்களை நம்பியோ அல்லது இந்தியா டுடே இதழில் கட்டுரை எழுதியவர் தானாக ஒரு நபரை கற்பனையிலே உண்டாக்கிக் கொண்டோ அவர் கூறியதாக இந்தப் புகாரை - அந்த விவரங்களை அரசு நிலையில் யாரிடமும் விசாரித்து ஒப்பிட்டுப் பார்க்காமல் - வெளியிட்டுள்ளார்.

3. **"முறைகேடு என வெளியிடப்பட்ட செய்தி":** திருச்சி மாவட்டம், சூரியூர் கிராமத்தில் ஒதுக்கப்பட்ட இலவச நிலங்களை (சர்வே எண். 50/11, 50/12, 52/3, 52/8, 63/1, 63/3, 63/4, 67/2, 67/12, 67/13, 67/14, 67/16, 76/15) இப்போது அப்பகுதி தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் நவல்பட்டு விஜி (இந்தியா டுடே இதழ் வலசல்பட்டு விஜி என்று எழுதியுள்ளது) தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக உள்ளூர்க்காரர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். இவர் இந்த இடத்தின் ஒரு பகுதியில் மீனா என்ஜினியரிங் நிறுவனத்திற்காக ஒரு கட்டிடம் கட்டியிருப்பதாகத் தெரிகிறது. இவர் போக்குவரத்துத் துறை அமைச்சர் கே.என்.நேருவிற்கு மிக நெருக்கமானவர் என உள்ளூர் மக்கள் சொல்கிறார்கள். "எங்கள் ஊரைச் சேர்ந்த மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தைத் தி.மு.க.வினர் ஆக்கிரமித்திருக்கிறார்கள்" என்கிறார் அப்பகுதியின் முன்னாள் பஞ்சாயத்துத் தலைவரும் அ.இ.அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளருமான ஜெய் சூரியா.

திருச்சி மாவட்ட ஆட்சியரின் விளக்கம்: சூரியூர் கிராமம் சர்வே எண்கள். 50/11, 50/12, 52/3, 52/8, 67/2, 67/12, 67/13, 67/14, 67/16, 63/1, 63/3, 63/4 ஆகியவற்றில் மொத்தம் 4.58.5 எக்டேர் நிலம் 12 பேருக்கு ஒப்படை வழங்கப்பட்டு; அனைத்தும் பயனாளிகளின் அனுபவத்தில் உள்ளன.

நவல்பட்டு விஜி என்பவர் சூரியூரில் மீனா என்ஜினியரிங் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தை, நில உச்சவரம்பின்கீழ் வரும் தரிசு நிலங்களில் அமைத்துள்ளார்.

சூரியூரில் இந்த நிலங்களுக்கும், 12 பேருக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலங்களுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை. இலவசமாக ஒப்படை செய்யப்பட்ட நிலங்களை யாரும் ஆக்கிரமிக்கவில்லை.

உண்மைநிலை இவ்வாறிருக்க, போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு அவர்களை சம்மந்தப்படுத்தி, அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் ஒருவர் சொன்ன பொய்யை நம்பி, செய்தி வெளியிட்டிருப்பது உள்நோக்கம் கொண்டதாகும்.

4. **"முறைகேடு என வெளியிடப்பட்ட செய்தி":** வருவாய்த் துறை அமைச்சரும் திண்டுக்கல் மாவட்டச் செயலாளருமான ஐ.பெரியசாமியின் சகோதரர் அன்பு, நிலக் கோட்டை தாலுகா பகுதியில் அறிவிக்கப் பட்ட இலவச நிலங்களை ஆக்கிரமித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. "இப்பகுதியில் ஏழை மக்களுக்கு வழங்கப்பட்ட நிலப்பட்டாக்களை அன்பும், அவரது நண்பரும் ரியல் எஸ்டேட் புரோக்கருமான பிரகாஷும் சேர்ந்து கொண்டு அபகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் பட்டாவைக் கேட்டாலும் மிரட்டு கிறார்கள்" என "இந்தியா டுடே"விடம் தெரிவித்தார். இப் பகுதியில் இலவச நிலத்திற்கான பயனாளி என்று அறிவிக்கப்பட்டும் நிலத்தைப் பெற முடியாத எஸ்.மணிகண்டன். இதேபோல் திண்டுக்கல்-மதுரை நெடுஞ்சாலையில் இந்த நபர்கள் இலவச நிலத்தை (சர்வே எண்.4/5லிருந்து 4/9 வரை) ஆக்கிரமித்து ஊறுகாய் தயாரிக்கும் நிறுவனம் ஆரம்பித் திருப்பதாகத் தெரிகிறது.

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் விளக்கம்: திண்டுக்கல் மாவட்டம், சந்தையூர் கிராமம், சர்வே எண். 38/4.ல் 0.24.0 எக்டேர் தீர்வை ஏற்பட்ட தரிசு நிலத்தை

கருப்பையா மனைவி திருமதி. தொந்தியம்மாள் என்பவருக்கும்; சர்வே எண். 38/5.ல் 0.23.0 எக்டேர் தீர்வை ஏற்பட்ட தரிசு நிலத்தை சண்முகம் மனைவி திருமதி. சாந்தி என்பவருக்கும் ஒப்படை வழங்கப்பட்டு, அவர்களுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது. அவர்கள் நிலமற்ற ஏழை விவசாயக் கூலிகள் ஆவர். ஒப்படை வழங்கப்பட்ட நிலத்தை யாரும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை.

திண்டுக்கல்-மதுரை நெடுஞ்சாலையில் ஊறுகாய் தயாரிக்கும் நிறுவனம் எதுவும் இல்லை. ஊறுகாய் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று திண்டுக்கல்லில் இருந்து வெகு தொலைவில், தேனி-ஆண்டிப்பட்டி சாலையில், புள்ளிமான்கோம்பை என்னும் ஊருக்குச் செல்லும் பாதையில், சாலையையொட்டி திரு.ஜிதேந்திரா ஜெயின் என்பவருக்குச் சொந்தமான பட்டா நிலத்தில், "போரஸ் அக்ரோ எக்ஸ் போர்ட்ஸ்" என்ற பெயரில் கட்டி முடிக்கப்படாமல் உள்ளது. மேலும், திண்டுக்கல்-மதுரை தேசிய நெடுஞ்சாலையில் இலவச நிலம் வழங்கும் திட்டத்தின்கீழ் யாருக்கும் நிலம் வழங்கப்படவில்லை.

உண்மை நிலைமைகள் இவ்வாறிருக்க, வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஐ. பெரியசாமி அவர்களை சம்மந்தப்படுத்தி, மணிகண்டன் என்பவர் கொடுத்த செய்தியை அப்படியே நம்பி, யாரிடமும் விசாரித்து உண்மையை அறிந்துகொள்ளாமல், செய்தி வெளியிட்டிருப்பது விஷமத்தனமானது.

5. **"முறைகேடு என வெளியிடப்பட்ட செய்தி":** கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், வடசித்தூர் கிராமத்தில் ஜகோபி என்ற கார்பன் தயாரிக்கும் நிறுவனத்தின் கட்டிடம் அமைந்திருக்கிறது. இது அரசு ஏழைகளுக்கு ஒதுக்கிய நிலத்தில் அமைந்திருப்பதாக அந்த ஊர் மக்கள் சொல்கிறார்கள். அந்த நிறுவனத்தின் தொழில் நிலையங்கள் இருக்கும் 576, 580, 581 ஆகிய சர்வே எண்கள் இலவச நிலத்திட்டத்திற்கு உட்பட்டவை என்கிறார் சிவா. ஜகோபி நிறுவனம்

ஸ்வீடனில் வசிக்கும் என்.ஆர்.ஐ. ஒருவருக்குச் சொந்தமானது என்று சொல்லப்படுகிறது. "இந்த வெளிநாட்டு நிறுவனம் எந்தவித அனுமதியும் இன்றி செயல்பட்டு வருகிறது. சுற்றுச்சூழலுக்குக் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி வரும் இந்த ஆலை, நிலமற்ற விவசாயிகளுக்குத் தரப்பட்ட இரண்டு ஏக்கர் நிலத்தில் இயங்கி வருவது தான் அதிர வைக்கிறது'' என்கிறார் பேரூர் தொகுதி அ.இ.அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வும் கோவை புறநகர் மாவட்டச் செயலாளருமான எஸ்.பி. வேலுமணி. இந்தப் பகுதியில் 2 ஏக்கர் நிலம் நிறைய பேருக்கு ஒதுக்கப்பட்டிருப்பது இப்பகுதி மக்களுக்குத் தெரியவில்லை.

கோவை மாவட்ட ஆட்சியரின் விளக்கம்: இலவச நிலம் வழங்கும் திட்டத்தின்கீழ் பொள்ளாச்சி வட்டம், மெட்டுவாவி கிராமத்தில் நிலம் ஏதும் யாருக்கும் வழங்கப்படவில்லை. ஜகோபி கார்பன்ஸ் இந்தியா (பி) லிட். என்ற கார்பன் தயாரிக்கும் கம்பெனி சர்வே எண்.580-ல் அமைந்துள்ளது. இந்த சர்வே எண் தனியாருக்குச் சொந்தமான ரயத்துவாரி புஞ்சை நிலமாகும். இந்தக் கம்பெனிக்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி 31.3.2010 வரை வழங்கப்பட்டுள்ளது. இந்த கம்பெனி வளாகத்தில் அரசு புறம்போக்கு நிலம் எதுவும் இல்லை.

உண்மைநிலை இவ்வாறிருக்கும் போது, அ.தி.மு.க. எம்.எல்.ஏ. எஸ்.பி.வேலு மணி என்பவர் சொன்னதாக ஒரு தவறான தகவலை வைத்துக்கொண்டு, அரசுத் தொடர்புடைய யாரிடமும் விசாரித்து அறிந்து கொள்ளாமல், பொத்தாம்பொதுவில் செய்தி வெளியிட்டிருப்பது உள்நோக்கம் கொண்டதாகும்.

6. **"முறைகேடு என வெளியிடப்பட்ட செய்தி":** கோவை மாவட்டம், மலுமிச் சம்பட்டி கிராமத்தில் இருக்கும் நிலம் (சர்வே எண்.567/25 ஏபியிலிருந்து 567/40, 738/2-லிருந்து 738/40 வரை) வேலி அமைக்கப்பட்டு தற்போது கல்லூரி கட்டப்பட்டு வருகிறது.

கோவை மாவட்ட ஆட்சியரின் விளக்கம்: முறைகேடு என குறிப்பிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள சர்வே எண்கள் மலுமிச்சம்பட்டி கிராமத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. "இந்தியா டுடே"யில் வெளியிடப்பட்டுள்ள படம் ஒத்தக்கால் மண்டபம் கிராமத்தில் அமைந்துள்ள தனியார் பொறியியல் கல்லூரிக் (இந்துஸ்தான் என்ஜினியரிங் கல்லூரி) கட்டிட வளாகத்தில் அமைந்துள்ளதாகும். இந்தக் கல்லூரி தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னரே கட்டப்பட்டு, இயங்கி வருகிறது. மலுமிச்சம்பட்டி மற்றும் ஒத்தக்கால்மண்டபம் கிராமங்களில் 2 ஏக்கர் தரிசு நிலம் வழங்கும் திட்டத்தின்கீழ் யாருக்கும் நிலம் வழங்கப்படவில்லை. உண்மை நிலை இவ்வாறிருக்கும்போது, படிப்பவர்களைத் திசைதிருப்பும் நோக்கத்தோடு செய்தி வெளியிட்டிருப்பது முறையற்ற காரியமாகும்.

7. **"முறைகேடு என வெளியிடப்பட்ட செய்தி"**: தேனி மாவட்டத் தி.மு.க. செயலாளர் வைகை சேகர், கிரி, அ.இ.அ.தி.மு.க.வின் சன்னாசி ஆகியோர் வைகை அணைப் பகுதியைச் சுற்றி சுமார் 300 ஏக்கரை (சர்வே எண். 1349/5, 1353/6, 1445/1, 1445/2, 1446/1) ஆக்கிரமித் திருப்பதாக சொல்லப்படுகிறது. "ஏழைகளுக்கான நிலத்தை சேகர் திட்டமிட்டுத் தனது உறவினர்களின் பெயரில் பதிவு செய்திருக்கிறார். விதவைகள் உள்ளிட்ட பலரை அவர் நிலத்தை விட்டு வெளியேற்றியிருக்கிறார்" என்கிறார் தேனி மாவட்டத்தைச் சேர்ந்தவரான சிவா.

தேனி மாவட்ட ஆட்சியரின் விளக்கம்: பெரியகுளம் வட்டம், மேல்மங்கலம் பிட் 1 மற்றும் 2, ஜெயமங்கலம் பிட் 1 மற்றும் 2, குள்ளப்புரம், சில்வார்பட்டி, டி.வாடிப்பட்டி ஆகிய கிராமங்களில் 543.41 ஏக்கர் நிலம் 454 பேருக்கு ஒப்படை வழங்கப்பட்டுள்ளது. வைகை சேகர் பெயரில் இலவச நில ஒப்படை எதுவும் வழங்கப்படவில்லை. மேல்மங்கலம் பிட்.2 கிராமம் சர்வே எண். 1799/2-ல் 0.62.5 ஏர்ஸ் நிலம் நில ஒப்படைத்

திட்டத்தின்படி வைகை சேகர் மனைவி மகாலட்சுமி என்பவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலம் உழவடை தரிசாக உள்ளது. வைகை சேகர் மனைவியின் தாயார் பாக்கியம் பெயரில் சர்வே எண்.1799/1.ல் 0.61.0 ஏர்ஸ் நிலம் ஒப்படை வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலங்களின் அருகே, மகாலட்சுமி, பாக்கியம் ஆகிய இருவரைத் தவிர, 17 சர்வே எண்களில் 14 பேருக்கு நில ஒப்படை வழங்கப்பட்டுள்ளது. அந்த 14 பேருக்கு வழங்கப்பட்டுள்ள நிலம் பயனாளிகளின் அனுபவத்திலேயே இருந்து வருகிறது. அவர்கள் அனைவரும் அதில் பயிர் செய்து வருகிறார்கள். அந்த 14 பேருக்கு வழங்கப்பட்ட நிலம் எதையும் வைகை சேகர் ஆக்கிரமிப்பு செய்யவில்லை.

பெரியகுளம் வட்டம், மேல்மங்கலம் பிட்.2 கிராமத்தில் சர்வே எண். 1349/5, 1353/6 உள்ளிட்ட 5 சர்வே எண்களில் 6 பேருக்கு 2.61.5 எக்டேர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இப்படி ஒப்படை செய்யப்பட்ட நிலங்களுக்கிடையே கிரிஸ் கிருஷ்ணா என்பவரது பெயரில் 0.40.5 எக்டேர் பட்டா நிலமும், இவரது தாயார் கோமளவல்லி பெயரில் 17.29.0 எக்டேர் பட்டா நிலமும், தந்தை சுதாகர் பெயரில் 16.93.0 எக்டேர் பட்டா நிலமும் உள்ளன.

சர்வே எண்.1349/5.ல் தங்கம் மனைவி சித்ரா என்பவருக்கு ஒப்படை செய்யப்பட்ட 0.62.5 எக்டேர் நிலத்தையும், சர்வே எண்.1445/1.ல் முத்திருளன் மகன் பரமசிவம் என்பவருக்கு ஒப்படை செய்யப்பட்டு, பட்டா வழங்கப்படாமல் உள்ள 0.69.0 எக்டேர் நிலத்தையும், கிரி ஆக்கிரமித்து வேலி போட்டு அடைத்து வைத்திருக்கிறார். சர்வே எண்.1353/6.ல் முத்துசாமியின் மனைவி சுப்புலட்சுமி என்பவருக்கு ஒப்படை செய்யப்பட்ட 0.60.0 எக்டேர் நிலத்தை ஒப்படைதாரர் கேரள மாநிலத்தவருக்கு விற்றுவிட்டு வெளியேறிவிட்டார்.

பெரியகுளம் வட்டம், மேல்மங்கலம் பிட்.1 கிராமத்தில் சன்னாசி என்பவருக்குச் சொந்தமான பட்டா நிலங்களுக்கு அருகில், இலவச நில ஒப்படை வழங்கும்

திட்டத்தின் கீழ் 3 பேருக்கு வழங்கப்பட்ட 0.97.0 எக்டேர் நிலம், பயனாளிகளின் பயன்பாட்டில் இல்லை. இதில் 0.45.0 ஏர்ஸ் நிலம் மூக்கையாதேவர் மகன் பாண்டி என்பவரின் ஆக்கிரமிப்பில் உள்ளது.

கிரி என்பவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தையும், பாண்டி என்பவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தையும் மீட்பதற்கு மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உடன்பிறப்பே, இதுதான் உண்மை விவரம். நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு உதவிட வேண்டுமென்ற குறிக்கோளோடு தி.மு. கழக அரசு ஆட்சிப் பொறுப்பையேற்றதும் இந்தத் திட்டத்தைத் தொடங்கி இதுவரை 2 லட்சத்து 10 ஆயிரத்து 747 ஏக்கர் நிலத்தினை 1 இலட்சத்து 75 ஆயிரத்து 798 விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்கின்ற இந்தத் திட்டத்தைப் பாராட்டா விட்டாலும் கூட பரவாயில்லை. நஞ்சைக் கக்கிடுவோர்; நெஞ்சைத் தொட்டுச் சொல்வாரா? ஆனால் ஒரு குடிநீர் குளத்திலே விஷத்தைக் கலப்பதைப் போன்ற காரியத்தில் ஒருசில பத்திரிகையாளர்கள் ஈடுபடுவது எந்த நோக்கத்தோடு என்பதை தமிழ் நாட்டு மக்கள் புரிந்துகொண்டு அப்படிப்பட்ட தீய நோக்கம் கொண்டவர்களுக்கும், அதைப் பெரிதுபடுத்தி பேசுகின்ற ஒரு சில அரசியல் கட்சியினருக்கும் தக்க பாடம் புகட்ட ஆவன செய்திடுவதே இதற்கெல்லாம் நல்ல தீர்வு காண்பதற்கான வழி யாகும்!

அன்புள்ள,

மு.க.

12-1-2011

3527. நஞ்சைக் கக்கிடுவோர்; நெஞ்சைத் தொட்டுச் சொல்வாரா? (2)

உடன்பிறப்பே,

ஒரு சில பத்திரிகைக்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் - கழக அரசுக்கும் விரோதமாக எந்த அளவிற்கு செய்திகளையெல்லாம் திரித்து வெளியிடுகிறார்கள் என்பதற்குச் சான்றாக; ஏழைகளுக்கு இலவசமாக இரண்டு ஏக்கர் வரை நிலம் வழங்கும் திட்டத்தைப் பற்றி, அந்தத் திட்டத்திலே ஒருசில முறைகேடுகள் நடை பெற்றதாக "இந்தியா டுடே" இதழ் வெளியிட்டதிலே எந்த அளவிற்கு உண்மைக்கு மாறாக சிதைக்கப்பட்ட செய்தியை சிறப்புக் கட்டுரை என்ற பெயரால் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதற்கு பல்வேறு உதாரணங்களை எடுத்துக்காட்டி நேற்றையதினம் உனக்கு விரிவாக எழுதியிருந்தேன். அதன் தொடர்ச்சியாக வேறு சில எடுத்துக்காட்டுகளையும் உனக்கு எடுத்துக்காட்டிட விரும்புகிறேன்.

"தினமணி" நாளிதழ் பற்றி உனக்கே தெரியும். கழக அரசுக்கு எதிராக தொடர்ந்து உண்மைக்கு மாறான செய்திகளை அந்த இதழ் வெளியிட்டு வருகிறது. அந்த இதழில் "மக்கள் கருத்து" என்ற தலைப்பிலானாலும், "கேலிச் சித்திரம்" ஆனாலும், "தலையங்கம்" ஆனாலும் எந்த அளவிற்கு நமக்கு எதிராகச் செய்திகளை வெளியிட முடியுமோ அந்த அளவிற்கு எழுதி வருகின்றது.

10-1-2011 தேதிய "தினமணி" இதழின் முதல் பக்கத்தில் எட்டு கலம் செய்தியாக "குடும்பச் சேனல்களுக்கு கோடிகளில் விளம்பரம்" என்ற தலைப்பில் மிகப் பெரிதாக எழுதியுள்ள செய்தியில் - "108 இலவச ஆம்புலன்ஸ் சேவை" தொடர்பான விளம்பரங்களுக்காக என்னுடைய குடும்பத்திற்குச் சொந்தமான சன் மற்றும் கலைஞர் தொலைக்காட்சிகளுக்கு மட்டும் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு விளம்பரங்கள் தரப்பட்டுள்ளன என்றும் - அந்தத் திட்டத்தைத் தொடங்கியதற்குக் காரணமே சுய நலம்தான் என்பதைப் போலவும் எழுதப்பட்டுள்ளது.

108 இலவச ஆம்புலன்ஸ் சேவையினால் பயன் பெறும் ஏழையெளிய தமிழ் நாட்டு மக்கள் அந்தத் திட்டத்தைப் பற்றி அன்றாடம் மனம் திறந்து பாராட்டுகிறார்கள். அந்தத் திட்டம் எந்த அளவிற்கு வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதைப் பற்றியும் - தாங்கள் உயிர் பிழைக்க அந்தத் திட்டம் எந்த அளவிற்கு உதவியாக இருந்தது என்பதைப் பற்றியும் பல ஏடுகளில் பல கட்டுரைகள் வாயிலாக வெளி வந்திருக்கின்றன. அந்தத் திட்டம் மத்திய அரசின் உதவியோடு செயல்படுகின்ற ஒரு திட்டம் ஆகும். அந்தத் திட்டத்தினால் கழக அரசுக்கு மிகப் பெரிய பெயர் வருவதை ஒரு சிலரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதன் வெளிப்பாடுதான் "தினமணி" எழுதியுள்ள செய்திக் கட்டுரை.

குந்தி தேவிக்கு முன்பாக தனக்குக் குழந்தை பிறந்துவிட வேண்டுமென்று ஆத்திரப்பட்ட காந்தாரி அம்மிக் குழவியை எடுத்து அடி வயிற்றிலே குத்திக் கொண்டாள் என்று பாரதத்திலே ஒரு உபகதை உண்டு. அதைப் போல எப்படியாவது இந்தத் திட்டத்திற்கு ஒரு ஊனம் வந்துவிடக் கூடாதா என்று "தினமணி" நாளிதழ் குடும்பச் சேனல்களுக்கு கோடிகளில் விளம்பரம் என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டுள்ளது. கோடிகளில் விளம்பரம் என்கிறார்களே, எத்தனை கோடிகள் என்று செய்தியைப் படித்துப் பார்த்தால் - ஒரு கோடி ரூபாய் இதுவரை விளம்பரமாக செலுத்தப்பட்டிருக்கிறதாம்! எத்தனை நாள் விளம்பரத்திற்காக இந்த ரூபாய்! அதைப் பற்றியோ, இந்த இரண்டு தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு மட்டும்தான் இந்த விளம்பரம் தரப்பட்டிருக்கிறதா என்ற விவரங்களையெல்லாம் கெட்டிக்காரத்தனமாக அவர்கள் வெளியிடவில்லை.

தினமணியில் வந்த இந்தச் செய்தியைப் பார்த்து விட்டு நான் சும்மாயிருந்து விடவில்லை. உடனடியாக அது பற்றிய முழு விவரமும் எனக்கு வரவேண்டும் என்று கூறினேன். அவசர மருத்துவ ஊர்தி 108 இலவச சேவைத் திட்டத்தின் உதவி அதிக அளவில் குறிப்பாகக் கிராமப்புற ஏழை மக்களுக்குக் கிடைத்திட வேண்டும் என்பதற்காக இத்திட்டம் தொடர்பான விளம்பரங்கள் மக்கள் விரும்பிப் பார்க்கும் பல்வேறு தொலைக் காட்சிகளுக்கும் அளிக்கப்படுகின்றன என்றும், சன் தொலைக் காட்சிக்கும் கலைஞர் தொலைக்காட்சிக்கும் மட்டும் அளிக்கப்படுவதில்லை என்றும் எனக்கு விளக்கம் கூறினார்கள்.

பல்வேறு தொலைக்காட்சிகளுக்கு விளம்பரம் தரப்படுகிறது என்றால் எந்தெந்த தொலைக் காட்சிகள் என்று விவரம் கேட்டேன். இந்த விளம்பரங்கள் சன் தொலைக்காட்சி, கலைஞர் தொலைக்காட்சி ஆகியவைகளுக்கு மட்டு மல்லாமல், பொதிகை தொலைக்காட்சி, தூர்தர்ஷன், விஜய் தொலைக்காட்சி, மெகா தொலைக்காட்சி, எஸ்.எஸ். மியூசிக் ஆகிய தொலைக்காட்சிகளுக்கும் அளிக்கப்படுவதாகக் கூறினார்கள். ஆனால் இந்த விவரங்களையெல்லாம் தினமணி நாளிதழ் மறைத்து விட்டு - சன் தொலைக் காட்சிக்கும், கலைஞர் தொலைக்காட்சிக்கும் மட்டும் விளம்பரம் தரப்பட்டதைப்போல முதல் பக்கத்தில் கொட்டை யெழுத்துக்களில் செய்தி வெளியிட்டிருப்பது நியாயம்தானா?

இவ்வாறு தொலைக்காட்சிகளில் விளம்பரம் செய்யப்பட்ட காரணத்தினால்தான் 108 ஊர்தியை அழைப்பவர்கள் எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு 14 ஆயிரம் என்பது தற்போது 30 ஆயிரம் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. மக்கள் இந்த அளவிற்கு விரும்பி, பயன் பெறுகின்ற ஒரு நல்ல திட்டத்திற்கு ஏதாவது குதர்க்கம் சொல்ல வேண்டும் என்ற நோக்கத் தோடு "தினமணி" கொட்டை எழுத்துக்களில் அதுவும் முதல் பக்கத்தில் வெளியிடுகிறது என்றால் எந்த அளவிற்கு அவர்களுக்கு இந்த ஆட்சியின் மீது குரோதம் இருக்கிறது என்பது புரிகிறதா அல்லவா?

"தினமணி"யின் இந்தச் செய்தியைப் பார்த்ததும் "தீக்கதிர்" நாளிதழுக்குப் பொறுத்துக்கொள்ள முடியுமா? தினமணியில் செய்திதானே வந்துள்ளது, தீக்கதிரில் இதே செய்தியை வைத்து தலையங்கமே தீட்டலாம் என்று அவசர அவசரமாக இந்த விளம்பரங்களை வைத்து தமிழக அரசைக் கண்டித்து ஒரு தலையங்கமே இரண்டு நாட்களாக எழுதி விட்டார்கள். பிரதான எதிர்க்கட்சியோடு கூட்டணி வைத்துக் கொள்ளத் துடிக்கும் கட்சி அல்லவா? அந்தக் கட்சியின் தலையங்கத்தில் "மேலும் கூர்மையோடு கவனித்த போதுதான் இந்த விளம்பரங்களை இரண்டு தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு மட்டுமே தந்துள் ளார் என்பது தெரிந்தது" என்று எழுதியிருக்கிறார்கள். இந்த இரண்டு தொலைக்காட்சிகளைத் தவிர விஜய் தொலைக்காட்சிக்கும், தூர்தர்ஷன் மற்றும் பொதிகைக்கும் இதே விளம்பரம் கொடுக்கப்பட்டதாக அரசின் சார்பில் தெரிவித்திருக்கிறார்களே, அது உண்மையா, பொய்யா?

மேலும் தீக்கதிர் கிண்டலாக, மக்களுக்கு வசதி செய்து தரும் இந்தச் சேவைக்காக சன் மற்றும் கலைஞர் தொலைக்காட்சிகள் இலவசமாக சேவை செய்கிறார்களோ என்றும் எழுதியுள்ளது. மக்களுக்கு வசதி செய்துதரும் பல திட்டங்களைப் பற்றி அரசின் சார்பில் விளம்பரங்கள் தீக்கதிர் இதழில் பல முறை வெளியிடப்பட்டதே, அப்போதெல்லாம் தீக்கதிர் இலவசமாக அந்த விளம்பரங்களுக்கு கட்டணம் தேவையில்லை என்றுதான் கூறியதா?

மேலும் தீக்கதிர் தனது தலையங்கத்தில் "எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று முழக்க மிட்டவர்கள் எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்று மாறிவிட்டார்கள்" என்று எழுதியிருக்கிறார்கள். இதிலே என்ன ஊழல்? அரசு ஆறு நிறுவனங்களுக்கு விளம்பரம் தருகிறபோது இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் தந்துள்ளது. அது ஊழலா? அரசின் சார்பில் பொது மக்கள் விரும்பிப் பார்க்கும் தொலைக்காட்சிகளில் விளம்பரம் செய்தால் அது ஊழலுக்கு அடையாளமா? தீக்கதிர் கூட்டணி சேரத் துடிக்கும் அ.தி.மு.க. தலைவி 66 கோடி ரூபாய்க்குச் சொத்துக் குவித்து, வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறதே, அது ஊழலாகத் தெரியவில்லையா? இதே கட்சிக் காரர்கள் தலைமைச் செயலகத்திற்கே வந்து ஜெயலலிதா சிறுதாவூரில் "தலித்"களுக்கு அரசின் சார்பில் தரப்பட்ட நிலங்களையெல்லாம் ஆக்ரமித்துக் கொண்டதாக புகார் மனு கொடுத்து சிவசுப்பிரமணியம் கமிஷன் அமைக்கப்பட்டதே, அப்போது ஊழலாகத் தெரிந்தது, இப்போது உண்மையாகத் தெரிகிறதா? தினமணியும், தீக்கதிரும் இப்படியெல்லாம் உண்மைக்கு மாறாக பொய்ச் செய்திகளை உண்மைபோல எழுதினாலும் இந்தத் திட்டத்திற்கு மக்களிடம் இருக்கின்ற செல்வாக்கை மறைத்திட முடியுமா? இந்தத் திட்டத்தின் வாயிலாக உயிர் பெற்ற ஏழையெளிய மக்கள் இவர்களின் சூது வலையில் நிச்சயமாக சிக்க மாட்டார்கள்!

இந்தியா டுடே, தினமணி, தீக்கதிர் வரிசையிலே 11-1-2011 தேதிய "தினமலர்" நாளிதழில் மற்றும் ஓர் செய்தி முதல் பக்கத்திலே பெரிய அளவில் புகைப்படத்தோடு வெளிவந்துள்ளது. "ரேஷன் கார்டு கேட்டு சாபம் விட்ட ஊனமுற்ற தம்பதி" என்பது அந்தச் செய்திக்கான தலைப்பு. மாடிப்படிகளில் இரண்டு மாற்றுத் திறனாளிகள் தங்கள் குழந்தையோடு இறங்கிவருவதைப் போன்ற படத்தை வெளியிட்டு, அவர்களுக்கு மூன்றாண்டு

காலமாக ரேஷன் கார்டு தராமல், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இழுத்தடித்து வருவதாகவும், அவர்கள் தினமலர் செய்தியாளரிடம் கதறி அழுதனர் என்றும் படிப்பவர்கள் மனதைத் தொடுகின்ற அளவிற்கு செய்தி வெளியிட்டுள்ளார்கள்.

இந்தச் செய்தியை நான் படித்தவுடன் துடித்துப் போய் செயலாளரை அழைத்து கடிந்து கொண்டதோடு, உடனடியாக இதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கூறினேன். உடனடியாக ராமனாதபுரம் மாவட்ட ஆட்சியரோடு தொலைபேசியிலே தொடர்புகொண்டு - மாவட்ட ஆட்சித் தலைவரும் இதுபற்றி உடனடியாக விசாரித்து, முதலமைச்சர் அலுவலகத்திற்கு காலை 10.30 மணிக்கெல்லாம் "பேக்ஸ்" மூலமாக பதில் அறிக்கை அனுப்பியிருக்கிறார்.

அந்தப் பதில் அறிக்கையில், ரேஷன் கார்டு கிடைக்காத அந்தத் தம்பதியினர் இருவரும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள் என்றும், காதலுக்கு பெற்றோர் அனுமதிக்க வில்லை என்றும், இருவரும் தற்போது முஸ்லீம் மதத்திற்கு மாறி விட்டதாகவும், ரேஷன் கார்டு கேட்டு 9-2-2010இல் மனு செய்ததாகவும், ஆனால் அவர்களுடைய பெற்றோர் பழைய குடும்ப அட்டைகளைக் கொடுக்க மறுப்பதாகவும் 10-1-2011 அன்றுதான் மக்கள் குறைதீர்க்கும் நாளில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மனு கொடுக்கிறார்கள்.

இந்த மனு மீது விசாரணை நடத்தியபோது 9-2-2010இல் அவர்கள் மனு கொடுத்ததற்கான எந்தப் பதிவும் இல்லை. இவர்களது பெற்றோர்களின் குடும்ப அட்டைகளைப் பரிசீலனை செய்தபோது அதிலே இவர்கள் இரண்டு பேருடைய பெயர்களும் அதிலே இடம் பெறவில்லை. எனினும் இவர்கள் மாற்றுத் திறனாளிகள் என்பதைக் கருதி 11-1-2011 அன்று காலையிலேயே புதிதாக குடும்ப அட்டை ஒன்று வழங்கப்பட்டு விட்டது. இவர்கள் ஏற்கெனவே மனு கொடுத்து உண்மையிலேயே கால தாமதம் ஏற்பட்டிருக்குமேயானால், அதற்குக் காரணமானவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் எனக்கு அனுப்பிய அறிக்கையிலே தெரிவித்துள்ளார்.

ஆனால் "தினமலர்" நாளேடு முதல் பக்கத்திலே அந்த மாற்றுத் திறனாளிகள் மாடிப்படிகளில் பரிதாபமாக இறங்குவதைப்

போல படம் எடுத்து, மூன்று ஆண்டு காலமாக அவர்கள் ரேஷன் கார்டிற்காக இந்த ஆட்சியிலே அலைவதைப்போல செய்தி வெளியிடுகிறார்கள் என்றால் எந்த அளவிற்கு காழ்ப்புணர்ச்சி இந்த அரசின் மீது அவர்களுக்கு இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது அல்லவா?

மேலும் "தமிழக காவல் துறையில் மகளிர் கமாண்டோ படை கலைப்பு" என்று ஒரு செய்தி கொட்டை எழுத்துக்களில் சில ஏடுகளில் வந்துள்ளது. நாம்தானே காவல் துறைக்கு அமைச்சர் - நாம் எப்போது மகளிர் கமாண்டோ படையைக் கலைத்து கோப்பிலே கையெழுத்திட்டோம் என்று விசாரிக்கச் சொன்னேன். பெண் கமாண்டோ படைப் பிரிவைக் கலைப்பதற்கான எவ்வித ஆணையும் வெளியிடப்பட வில்லை. கமாண்டோ பயிற்சி முடித்த பெண் கமாண்டோக்கள் தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகள், மாநகர-மாவட்ட சேம நலப்படைகளில் தொடர்ந்து பணி புரிந்து வருகிறார்கள். எனவே நாளேடுகளில் இன்று இது சம்பந்தமாக வெளிவந்த செய்திகள் எல்லாம் உண்மைக்கு மாறானதாகும்.

யாராவது ஒருவர் நம்மிடம் வந்து ஒரு செய்தியைக் கூறும்போது, அது உண்மையா என்று கேட்டால், "பத்திரிகையிலேயே வந்திருக்கிறது" என்று அந்தச் செய்தி எவ்வளவு உண்மை என்பதை விளக்கிட உதாரணமாகக் கூறிய காலம் போய் - பத்திரிகைச் செய்தி தானே? அதுவும் அந்தப் பத்திரிகைதானே? உண்மைச் செய்தி என்ன? என்று விசாரிக்கக் கூடிய அளவிற்கு சில ஏடுகள் தற்போதெல்லாம் செய்திகளைத் தங்கள் வசதிக்குத் திசை திருப்பக்கூடிய வகையில் வெளியிடுவதும் - அதுவும் இந்த அரசைக் குறை கூறக் கூடிய செய்திகள் என்றால், குதூகலத்தில் துள்ளிக் குதித்து, அதற்கு கண் வைத்து, மூக்கு வைத்து பூதாகாரமாக அதனை ஆக்கி முதல் பக்கத்திலே கொட்டை எழுத்துக்களில் வெளியிடுவதும் நியாயம்தானா? பத்திரிகை தர்மம்தானா? என்ற கேள்விகள் பத்திரிகையாளர்களுக்காக அடுக்கடுக்கான சாதனைகளை நிறைவேற்றியவன் என்ற முறையில் என்மனதில் எழுவது நியாயந்தானே?

அன்புள்ள,

மு.க.

13-1-2011

3528. அரசியல் ஆக்க விரும்புவோர்க்கு விளக்கம்!

உடன்பிறப்பே,

ஸ்பெக்ட்ரம் விவகாரம் நீதிமன்றத்தில் இருக்கிறது. நாடாளுமன்றத்தில் பா.ஜ.க தலைவர் தலைமையிலே உள்ள பொதுக்கணக்குக் குழுவும் அதைப் பற்றி விசாரித்துக் கொண்டிருக்கின்றது. மத்திய அரசால் நியமிக்கப்பட்ட நீதியரசர் சிவராஜ் பட்டீல் தலைமையிலான குழுவும் அதைப் பற்றி விசாரித்துக் கொண்டிருக்கின்றது. மத்திய அரசின் சி.பி.ஐ. பிரிவும், அமலாக்கப் பிரிவும் உச்சநீதி மன்றத்தின் கண்காணிப்பில் தனித்தனியாக இது பற்றி விசாரித்துக் கொண்டிருக்கின்றன. அதற்கிடையில் பலரும் அதைப்பற்றி கருத்துத் தெரிவிக்கின்றார்கள். இந்த நிலையில் இதைப் பற்றி பெரிய அளவில் நான் எந்தக் கருத்துக்களையும் தெரிவிக்காத நிலையில், சிலபேர் அதைப் பெரிதுபடுத்திக் கூறுகிறார்கள், எழுதுகிறார்கள். இந்தப் பிரச்சினையை மத்திய புலனாய்வுப் பிரிவு விசாரித்து வரும் நிலையில் - வழக்கு உச்ச நீதிமன்றத்தில் உள்ள சூழ்நிலையில் நாமாகவலிந்து எதையும் தெரிவிப்பது நல்லதல்ல என்ற எண்ணத்தோடுதான் நான் இதிலே எதையும் சொல்லாமல் இருந்தேன். ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள் இந்தப் பிரச்சினையை பூதாகரமாக்கி அரசியல் நடத்த விரும்பி, மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்திப் பிரச்சாரமாகச் செய்ய நினைப்பதால், அதற்குப் பதில் சொல்ல நினைக்கிற கழக உடன்பிறப்புகள், இதிலே தெளிவாக இருக்கவேண்டுமென்பதற்காக சிலவற்றை விளக்கிட விரும்புகிறேன்.

தணிக்கைக் குழு அறிக்கையில் - 1 லட்சத்து 76 ஆயிரம் கோடி இழப்பு என்று சொல்லும் போதே -"அனுமானத்தின் அடிப்படையில்தான்" அந்த அளவிற்கு இழப்பு என்றுதான் "presumptive" என்ற வார்த்தையையே சொல்லியிருக்கின்றது. ஆனால் உடனே எதிர்க்கட்சிக்காரர்கள் அந்தத் தொகையையே

லஞ்சம் என்றும், ஊழல் என்றும் பிரச்சாரம் செய்தார்கள், செய்கிறார்கள். இப்படி நடந்திருந்தால், அரசாங்கத்திற்கு இவ்வளவு வருவாய் வந்திருக்கக் கூடும் என்று - சில மேற்கோள்களைக் காட்டி, ஊழல் என்கிறார்கள்.

ஓர் உதாரணம் கூறுகிறேன். 24-1-2011 அன்று சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர், அறநிலையத் துறை அமைச்சர் தம்பி பெரியகருப்பன் இல்லத் திருமணத்தில் கலந்து கொண்டேன். திருமணம் நடந்த இடம், பெருந்தலைவர் காமராஜர் பெயரால் உள்ள காமராஜர் அரங்கம். அந்த விழாவில் நம்முடைய முன்னாள் அமைச்சர் தம்பி செ.மாதவன் மணமக்களை வாழ்த்தும்போது, பெரியகருப்பனுக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் வகையில் "இதோ, இந்த மண்டபத்தில் லட்சோப லட்சம் மக்கள் கூடியிருக்கிறீர்கள்" என்று குறிப்பிட்டார். அப்போது நான் என்னருகே அமர்ந்திருந்த மத்திய உள்துறை அமைச்சர் மாண்புமிகு ப.சிதம்பரம் அவர்களிடம் சிரித்துக் கொண்டே சொன்னேன். "இப்படித்தான் ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றையிலும் ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி ஊழல் என்றெல்லாம் சொல்கிறார்கள்.

உலகமறிந்த, படித்துத் தெளிந்த முன்னாள் அமைச்சர் நண்பர் மாதவனே இந்த அரங்கத்திலே மக்களை அடைத்து வைத்தாலும் பத்தாயிரம் பேருக்கு மேல் நிற்க முடியாது என்பது தெரிந்திருந்தும் கூட - பேசும்போது லட்சோப லட்சம் பேர் என்று இங்கே கூறுகிறார். இப்படித்தான் ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றையிலும் லட்சம், ஆயிரம், கோடி ஊழல் என்று உத்தேசமாக எண்ணிக்கையைப் பெருக்கிக் கூறுகிறார்கள் போலும்" என்று சொன்னேன்.

மத்திய அமைச்சர் கபில்சிபல் அவர்கள் திட்ட வட்டமாக 2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் இந்த அளவிற்கு இழப்பே இல்லை என்று சொல்லியிருக்கிறார். அவர் கூறும்போது, "1999 ஆம் ஆண்டு தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் இருந்தபோது, பா.ஜ.க. ஆட்சியில் அவர்கள் கொண்டு வந்த தொலைத் தொடர்புக் கொள்கையால், ஏலம் விடாமல், உரிமம் வழங்கியதால் அரசுக்கு ஒரு லட்சத்து 43 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று அதிகாரப் பூர்வமாகத் தெரிய வந்துள்ளது" என்றார். இதே கருத்தைத்தான் திட்டக் குழுவின் துணைத் தலைவராக உள்ள திரு.மாண்டேக்சிங் அலுவாலியா அவர்களும் தெரிவித்திருக்கிறார்.

ஏலத்தில் விட்டிருந்தால், இந்த அளவிற்கு வருவாய் வந்திருக்கும் என்று அனுமானித்து குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. ஏலத்தில் ஏன் விடப்படவில்லை என்பதற்கான விளக்கமும் பலராலும் தரப்பட்டுவிட்டது. தொலைத் தொடர்புத் துறையிலே மக்களுக்கு சலுகைகளை அளிக்க வேண்டாம் என்று கருதியிருந்தால் - யாராவது ஏலம் எடுத்து மக்களிடமிருந்து அதிகத் தொகையை வசூலிக்கட்டும் என்று நினைத்திருந்தால் - அலைக்கற்றை ஒதுக்கீட்டின் வாயிலாக இந்த இழப்பு வந்திருக்காது. மாறாக இலாபம் கூட வந்திருக்கும்!

மக்கள் நல அரசு என்கிறபோது அந்த அரசு வணிக நோக்கத்தோடு, இலாபம் ஈட்டுவதையே நோக்கமாகக் கொண்டு நடைபெறாது. சமூக நன்மையைக் (Social Benefit) கருத்தில் கொண்டு அரசு நடைபெற வேண்டுமே தவிர; நிதி இழப்பு - மிச்சம் என்பதை மட்டும் கவனத்தில் கொண்டு நடைபெறுவது நல்லதல்ல. உதாரணமாக ஆறாவது ஊதியக் குழுவினை மத்திய அரசு அறிவித்தபோது அதை முதன் முதலாக

தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தினோம். அதற்கான செலவு மட்டும் 5500 கோடி ரூபாய்.

ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் போன்ற திட்டத்திற்காக உணவு மானியமாக 4000 கோடி ரூபாய் அரசு செலவிடுகிறது.

கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்காக 2250 கோடி ரூபாய் செலவிடுகிறது.

மின் வாரியத்திற்காக 1674 கோடி ரூபாய் மானியமாக செலவிடுகிறது.

முதியோர் உதவித் தொகைக்காக 1419 கோடி ரூபாய் செலவிடுகிறது.

சத்துணவுத் திட்டத்திற்காக 1185 கோடி ரூபாயும் - கலைஞர் காப்பீட்டுத் திட்டத்திற்காக 765 கோடி ரூபாயும் - கர்ப்பிணிகளுக்கு தலா ஆறாயிரம் ரூபாய் வீதம் நிதி உதவி அளிப்பதற்காக 360 கோடி ரூபாயும் - திருமண உதவித் திட்டத்திற்காக 302 கோடி ரூபாயும் - பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்காக 240 கோடி ரூபாயும் - பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க பயிற்சித் திட்டத்திற்காக 276 கோடி ரூபாயும் அரசின் சார்பில் மக்களுக்கு வழங்கிட வேண்டுமென்ற எண்ணத்தோடு செலவிடப்படுகிறது.

இவற்றையெல்லாம் சேர்த்தால் ஓர் ஆண்டிற்கு 17,921 கோடி ரூபாய் அரசின் சார்பில் செலவழிக்கப்படுகிறது.

இந்தத் திட்டங்களையெல்லாம் அரசு நடைமுறைப் படுத்தாமல் - மக்கள் எப்படி வாழ்ந்தால் என்ன என்று இருந்தால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 17 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதலாக செலவே ஏற்பட்டிருக்காது. இந்த 17 ஆயிரம் கோடி அரசுக்கு இழப்பு என்று யாராவது கூற முடியுமா?

மத்திய அரசை எடுத்துக் கொண்டால் 2010-2011ஆம் ஆண்டில் உணவு மானியமாக 55 ஆயிரத்து 578 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது. உரமானியத்திற்காக மத்திய அரசு தரக்கூடிய தொகை 49 ஆயிரத்து 980 கோடி ரூபாய். கல்வி வளர்ச்சிக்காக 29 ஆயிரத்து 483 கோடி ரூபாய். இவைகள் எல்லாம் அரசுக்கு ஏற்பட்ட இழப்புகளா?

நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவின் முன் விசாரணைக்காக ஆஜரான தலைமை தணிக்கை அதிகாரி ஆதாரம் ஏதுமின்றி அனுமானத்தின் அடிப்படையிலேயேதான் இந்த இழப்பைச் சொல்லியிருப்பதாக உறுதிப்படுத்தினார்.

வெவ்வேறு கோணத்தில் இழப்பு ஏதேனும் ஏற்பட்டிருக்குமா என்றுதான் கணக்குப் போட்டுப் பார்த்ததாகவும் - அதிலே ஒரு கோணத்தில் - வெறும் 57 ஆயிரத்து 666 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே அரசுக்கு இழப்பு ஏற்பட வாய்ப்பிருப்பதாகத் தெரியவந்தது என்றும் தணிக்கை அதிகாரி கூறியிருக்கிறார்.

தொலைத் தொடர்புத் துறை அமைச்சராக இருந்த அருண் சோரி அவர்கள், வெறும் 30 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குத்தான் இழப்பு ஏற்பட்டிருக்கும் என்றும் சொல்கிறார்.

(Arun Shourie, Former Union Minister for Communications advised the media not to run after the "hypothetical figure of loss (Rs. 1.76 lakh crore) to the exchequer" mentioned by the CAG. The realistic figure, he said, could be around Rs. 30,000 crores-The Hindu dated 19.12.2010)

இந்த இழப்பினை எப்படி வெவ்வேறு விதமாக ஒவ்வொருவரும் கணக்கிடுகிறார்கள்? 2 ஜி அலைக்கற்றை வரிசையை - தற்போது 3 ஜி அலைக்கற்றை வரிசையை ஏலம்

விட்டது போல, ஏலம் விட்டிருந்தால் எவ்வளவு கிடைத்திருக்கும் என்று கணக்கிட்டு - அந்த அடிப்படையில் கூறுவதுதான் ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் என்பது ஒரு வாதம்! "இந்த உரிமத்தை 1650 கோடி ரூபாய் வீதம் கொடுத்ததற்கு மாறாக, எனக்குக் கொடுத்திருந்தால் நான் 6 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்திருப்பேன்" என்று ஒருவர் சொல்கிறார். அதைக் கணக்கிலே கொண்டு பார்த்தால், அப்போது 58 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கும். இப்படி வெவ்வேறு முறைப்படி கணக்கிட்டுப் பார்த்துத்தான் இழப்புத் தொகை வெவ்வேறாகச் சொல்லப்படுகிறது!

அதனால்தான் தணிக்கை அதிகாரியின் அறிக்கையின் இறுதியில் - இழப்பு எவ்வளவு என்பது (It can be debated) என்று அதாவது இது விவாதத்திற்குரியது என்று கூறப்பட்டுள்ளது.

3 ஜி அலைக்கற்றை வரிசையைப் போல - 2 ஜி அலைக்கற்றை வரிசையிலும் ஒரே அளவிற்கு வருவாய் கிடைத்திருக்கும் என்று அனுமானம் செய்கிறார்களே, இரண்டு அலைக்கற்றை வரிசைகளும் ஒரே மாதிரியானதா என்றால் இல்லை. 2 ஜி அலைக்கற்றை வரிசையில் செல் தொலைபேசியில் பேசும்போது ஒலி மட்டும்தான் கேட்கிறோம். ஆனால் 3 ஜி அலைக்கற்றை வரிசை செல்போனை உபயோகிக்கும் போது நீங்கள் யாருடன் பேசுகிறீர்களோ அவர்களின் முகங்களே நேரில் தெரியும். அதிலே வீடியோ பார்ப்பது போல பார்க்கலாம்.

2 ஜி அலைக்கற்றை 4.2 மெகாஹெர்ட்ஸ் வேகம் கொண்டது; ஆனால் 3 ஜி.யோ 6.4 மெகா ஹெர்ட்ஸ் வேகம் கொண்டதாகும். 2 ஜி அலைக்கற்றை வரிசையைவிட உயர்வானது 3 ஜி அலைக்கற்றை என்பதையும் மறந்துவிடக் கூடாது, மறைத்துவிடக் கூடாது.

நாடாளுமன்றக் கூட்டுக் குழு ஒன்றுதான் முடிவு என்று பா.ஜ.க.வும், ஜெயலலிதாவும் கூறுகிறார்கள். 1992ஆம் ஆண்டு ராணுவத்திற்கு தளவாடங்கள் வாங்கியது பற்றிய ஊழல் - 1992ஆம் ஆண்டு சவப்பெட்டி வாங்கியது - 2001ஆம் ஆண்டு நடந்த பங்கு மார்க்கெட் ஊழல் - 2003ஆம் ஆண்டு கோகோ கோலாவில் பூச்சி மருந்து தொடர்பான குற்றச்சாட்டு போன்ற

வைகளுக்காக நாடாளுமன்ற கூட்டுக் குழு தான் விசாரணை நடத்தியது. எந்தப் பலனும் அப்போது ஏற்படவில்லை.

தற்போது பொதுக் கணக்குக் குழு ஸ்பெக்ட்ரம் பற்றி விசாரித்துக் கொண்டிருக்கின்றது. பொதுக்கணக்குக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்ற உறுப் பினர்கள்தான். கூட்டுக் குழுவின் உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்கள்தான். பொதுக்கணக்குக் குழுவிற்குத் தலைவர் எதிர்க் கட்சியான பா.ஜ.க.வைச் சேர்ந்தவர். கூட்டுக் குழு அமைக்கப்பட்டால் அதற்குத் தலைவராக ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்தான் இருப்பார். ஆனால் பா.ஜ.க.வும், ஜெயலலிதாவும் கூட்டுக் குழுதான் விசாரிக்க வேண்டும், பா.ஜ.க.வைச் சேர்ந்தவர் தலைவராக உள்ள பொதுக்கணக்குக் குழு விசாரணை தேவையில்லை என்கிறார்கள். மேலும் இதுவரை தணிக்கைக் குழு அறிக்கையின் மீதான விசாரணையை பொதுக்கணக்குக் குழுதான் விசாரிக்கும். அந்த நடைமுறையை மீறி தற்போது வேண்டுமென்றே தனியாகக் கூட்டுக் குழு வேண்டுமென்று கோருகிறார்கள்.

ஒரு காலத்தில் இந்தச் செல்போன் அறிமுகப் படுத்தப்பட்டபோது இந்தக் கருவியின் விலை 30 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருந்தது. இப்போது முனியன், முத்தன் என்று சாதாரணமானவர்கள் கூட செல்போன் வைத்திருக்கிறார்கள். ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய்க்கே செல்போன்கள் கிடைக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன் தம்பி ராஜா பதவியேற்ற போது செல்போன்களைப் பயன்படுத்தியவர்கள் எண்ணிக்கை 30 கோடி பேர். தற்போது பயன்படுத்துவோர் எண்ணிக்கை 73 கோடி பேர்.

தொடக்கத்தில் செல்போன்களை ஒருவர் பயன்படுத்தினால் அதாவது முன்பு ஒருமுறை பேசினால் - அழைப்பவர் 16 ரூபாய் கட்ட வேண்டும் - அழைக்கப்பட்டவர் 8 ரூபாய் செலுத்த வேண்டும். இப்போது ஒரு நிமிடம் பேசினால் 40 காசு, 30 காசு என்கிற நிலைமை ஏற்பட்டுள்ளது. இது மேலும் குறையக் கூடும் என்று சொல்கிறார்கள். பொதுமக்கள்தானே பயன் அடைகிறார்கள். உதாரணமாக செல்போன் உபயோகிக்கும் ஒவ்வொருவரிடமிருந்தும் செல்போன் நிறுவனங்கள் பெறும்

வருவாய் (Revenue per User) மாதம் ஒன்றுக்கு ரூபாய் 340 ஆக இருந்தது, தற்போது ரூபாய் 120 ஆகக் குறைந்துள்ளது. இதன் காரணமாக செல்போனை உபயோகிக்கும் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 220 ரூபாய் அளவிற்கு சேமிப்பு கிடைக்கின்றது. அதாவது பொதுமக்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு மட்டும் ஒரு லட்சத்து 92 ஆயிரத்து 720 கோடி ரூபாய் சேமிப்பாகும். இதுவும் ஒரு அனுமானம்தான்!

தொலைத் தொடர்புத் துறை சார்பாக எடுக்கப்பட்ட முடிவு 2011ஆம் ஆண்டுக்குள் 600 மில்லியன் மக்களுக்கு இந்தத் தொலைத் தொடர்புபயன் சென்றாக வேண்டும் என்பதாகும். ஆனால் இதற்குள் தொலைத் தொடர்பு பயன் கிடைத்திருக்கும் மக்களின் எண்ணிக்கை 720 மில்லியன் என்பதாகும்.

ஏலம் ஏன் விடவில்லை என்று ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. ஏன் ஏலம் விடப்படவில்லை என்றால் ஏலம்விடத் தேவையில்லை என்று தொலைத் தொடர்புத் துறைக்கு ஆலோசனை கூறுகின்ற அதிகாரத்தில் உள்ள "டிராய்" என்ற அமைப்பு சொல்லியிருக்கிறது.

1994ஆம் ஆண்டு, இந்திய அரசு ஒரு புதிய தொலைத் தொடர்புக் கொள்கையை வகுத்தது. அதன்படி ஏல முறையில்தான் இந்த உரிமம் வழங்கப்பட்டது. அதிகத் தொகைக்கு சிலர் ஏலம் எடுத்தார்கள். ஆனால் அவர்களால் அதனை நடத்த முடியவில்லை. மக்களுக்கு தொலைத் தொடர்பு வசதியும் சரியாகக் கிடைக்க வில்லை. எனவே பா.ஜ.க. ஆட்சியில், 1998ஆம் ஆண்டு அமைச்சர்கள் குழு ஒன்றை அமைத்து புதிய தொலைத் தொடர்புக் கொள்கை ஒன்றை வகுத்தார்கள். அந்தக் கொள்கையில், இனி இது மாதிரி ஏலம் விட வேண்டாம், மக்களுக்கு தொலைத் தொடர்புச் சேவை கிடைக்க வேண்டும், எனவே முதலில் வருபவர்களுக்கு முதலில் உரிமம் வழங்கலாம் என்ற முடிவினை எடுத்தார்கள். எனவே இந்த முடிவினை தம்பி ராஜாவே தன்னிச்சையாக எடுத்துச் செயல்படுத்தினார் என்பது தவறான வாதமாகும். 2001க்குப் பின்பு, ராஜா பதவியேற்ற மே 2007 வரை ஏல முறை எந்த அமைச்சராலும் பின்பற்றப்படவில்லை.

முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற வகையில் ராஜா உரிமங்களைக் கொடுத்து விட்டார் என்பது ஒரு குற்றச்சாட்டு. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்னும் கொள்கை

பா.ஜ.க. ஆட்சியில் வகுக்கப்பட்ட தேசிய தொலைத் தொடர்புக் கொள்கையின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டதாகும். அப்போது அமைச்சராக இருந்தவர் பிரமோத் மகாஜன் அவர்கள். அவரைத் தொடர்ந்து அருண்ஷோரி அவர்கள். அவர்கள் எல்லாம் எந்த முறையைப் பின்பற்றி இந்த உரிமங்களை வழங்கினார்களோ, அதே நடைமுறைதான் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது.

உடன்பிறப்பே, இந்த ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் இவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் இதையெல்லாம் மறைத்து விட்டு, கண்ணை மூடிக்கொண்டு ஸ்பெக்ட்ரம், ஒரு லட்சத்து 76 ஆயிரம்கோடி ரூபாய் ஊழல் என்றெல்லாம் பிரச்சாரம் செய்து மக்களை ஏமாற்ற நினைக்கின்றார்கள். இதிலே இந்தத் துறையின் அமைச்சராக இருந்தவர் என்ற ஒரே காரணத்திற்காக தம்பி ராஜா மீது பழியைப் போடுகிறார்கள். இந்தப் பிரச்சினை எழுந்த போதே செய்தியாளர்கள் 8-12-2010 அன்றே அதைப் பற்றி என்னிடம் கேட்டபோது, ராஜா குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டால், அதற்குப் பிறகு கட்சி தயவு தாட்சண்யம் பார்க்காமல் நடவடிக்கை எடுக்கும் என்று கூறியிருக்கிறேன். இந்த அளவிற்கு தி.மு.கழகம் உறுதியாக இருக்கும்போது, வேறு எந்தக் குற்றச்சாட்டுகளும் தி.மு. கழகத்தின் மீது சாற்றுவதற்கு இல்லாத காரணத்தால் இதை ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மக்களை எப்படியாவது குழப்பத்தில் ஆழ்த்த முடியாதா என்று எண்ணுகிறார்கள். ஆனால் அவர்களின் எண்ணம் ஈடேறாது.

அன்புள்ள,

மு.க.

26-1-2011

3529. அரசு அலுவலர்களும் அம்மையார் ஜெயலலிதாவும்!

உடன்பிறப்பே,

அரசு அலுவலர்கள், சத்துணவு ஊழியர்கள், போக்குவரத்து ஊழியர்கள், ஆசிரியர்கள், கவுரவ விரிவுரையாளர்கள், இன்னபிற அரசு அலுவலர்களுக்காக நீலிக் கண்ணீருடன் முன்னாள் முதல் அமைச்சர் ஜெயலலிதா அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் அரசு அலுவலர்கள் என்ன பாடுபடுத்தப்பட்டார்கள் என்பதை அவர் இவ்வளவு சீக்கிரத்தில் மறக்கலாமா? போக்குவரத்து ஊழியர்களைப் பற்றிக் கூட ஜெயலலிதா அறிக்கையிலே கூறுகிறாரே, அந்த போக்கு வரத்து ஊழியர்கள் இடையே கடந்த சில வாரங்களுக்கு முன்பு நடைபெற்ற தேர்தலில் அ.தி.மு.க. சார்புடைய சங்கத்திற்கு எத்தனை தொழிலாளர்கள் வாக்களித்தார்கள் என்பது மறந்து விட்டதா? முதல் இடத்திலே தி.மு.க. சார்புடைய சங்கமும், அதற்கு அடுத்து சி.ஐ.டி.யு., சங்கமும், அதற்கடுத்து மூன்றா வதாகத் தான் அ.தி.மு.க. சங்கமும் வாக்குகளை போக்குவரத்துத் தொழிலாளர்கள் மத்தியிலே பெற்றன என்ற புள்ளி விவரங்களை ஜெயலலிதா அறிய மாட்டாரா?

அரசு அலுவலர்களுக்காக தற்போது அறிக்கையிலே பாசாங்கு செய்து பரிந்து பேசும் ஜெயலலிதா ஆட்சியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை அழைத்துப் பேசப் போகிறேன் என்று சட்டப் பேரவையில் முதலமைச்சர் என்ற முறையில் ஜெயலலிதா அறிவித்த போதிலும், அவர்களை அழைத்துப் பேசாதது மட்டுமல்ல, அதிரடிச் சட்டங்களைப் பிரயோகித்து அவர்களை அடக்கி ஒடுக்கவும், நிர்வாகிகளை கைது செய்யவும், ஆயிரக்கணக்கானவர்களை பணி நீக்கம் செய்யவுமான அடக்குமுறைக் கொடுமைகளை ஏவி விட்டார். இந்தப் பிரச்சினை குறித்து சட்டப் பேரவையில் தரப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள

வேண்டுமென்று எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த தம்பி துரைமுருகன் 25-10-2002 அன்று வற்புறுத்தினார்.

அப்போது முதலமைச்சர் ஜெயலலிதா ஜேக்டோ-ஜியோ அமைப்பின் சார்பில் தன்னைச் சந்திக்க நேரம் கேட்டிருப்பதாகவும், அப்போது பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் என்றும் தெரிவித்தார். ஆனால் போராட்டக் குழுவினரிடம் போராட்டத்தை கை விட்டு விட்டு வந்தால்தான் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று கூறி அவர்களை சந்திக்கவே மறுத்துவிட்டார். இந்தப் பிரச்சினை குறித்து தொடர்ந்து பேசுவதற்கு அனுமதி மறுத்ததோடு தி.மு.கழக உறுப்பினர்களையெல்லாம் அவையை விட்டே வெளியேற்றினர்.

ஆசிரியர், அரசு அலுவலர் போராட்டத்தில் கலந்துகொண்டு மறியலில் ஈடுபட்ட பொள்ளாச்சி நம்பியமுத்தூர் பள்ளி தலைமை ஆசிரியர் காசிப் பாண்டியன் தனது உடலில் மண்ணெண்ணையை ஊற்றிக் கொண்டு தீக்குளித்து மாண்டார். தேனி மாவட்டம், பெரியகுளம் மாவட்டத்தைச் சேர்ந்த தேவதானப்பட்டி மஞ்சளாறு அணைப்பகுதியில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அப்துல் சத்தார் அ.தி.மு.க. அரசின் அராஜகப் போக்கைக் கண்டித்து தற்கொலை செய்து கொண்டு இறந்தார். இந்த இரண்டு குடும்பங்களுக்கும் தி.மு.கழக அறக்கட்டளை சார்பில் தலா ஐம்பதாயிரம் ரூபாய் வீதம் நிதி உதவி அளிக்கப்பட்டது.

அ.தி.மு.க. ஆட்சியிலே பத்து நாட்களாக நடைபெற்று வந்த அரசு அலுவலர் போராட்டம் அதற்குமேல் தொடர முடியவில்லை. அரசாங்கம் தன் அராஜகப் பிடிவாதத்திலிருந்து இறங்கி வர மறுத்தது. போராட்டம் நடத்திய சங்கத் தலைவர்கள் தங்களை அரசு அழைத்துப் பேச வேண்டுமென்று தொலைபேசி வாயிலாக கூறிக் கொண்டேயிருந்தார்கள். ஆனால் ஜெயலலிதாவோ இனி பேச ஒன்றும் இல்லை, பணிக்குத் திரும்பாவிட்டால் ''எஸ்மா'' பாயும், பணியிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று உருட்டி மிரட்டிக் கொண்டேயிருந்தார். போராட்டம் நடத்திய நாட்களுக்கு ஊதியம் கிடையாது என்று முதலில் கூறிய அரசு, அந்த நாட்களை விடுமுறை நாட்களாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுமென்று அறிவித்தது. வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்றும், சஸ்பெண்ட் உத்தரவுகள் ரத்து செய்யப்படும் என்றும், பழிவாங்கும் நடவடிக்கைகள் இருக்காது என்றும் அளித்த உறுதிமொழிகளையேற்று போராட்டம் கைவிடப்பட்டது.

1997 ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியின் போது பத்தாயிரம் சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். 2001 ஆம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சியில், நிதி நெருக்கடி என்று போலியான காரணம் கூறி, சாலைப் பணியாளர்களை பணி நீக்கம் செய்து உத்தரவிடப்பட்டது. அந்தச் சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் தி.மு. கழக ஆட்சி அமைந்தவுடன் பணி தரப்பட்டு அவர்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்தச் சாலைப் பணியாளர்கள்தான் அ.தி.மு.க. ஆட்சியிலே தாங்கள் வேலையில்லாமல் இருந்த 41 மாதங்களை பணியிலே இருந்ததாக கணக்கிலே கொள்ள வேண்டுமென்று கேட்டு சென்னையிலே நேற்று உண்ணாவிரதம் இருந்தார்கள். அந்தச் சாலைப் பணியாளர்கள் உண்ணாவிரதம் இருக்க முக்கிய காரணமே ஜெயலலிதா ஆட்சிதான். நேற்றையதினம் அவர்கள் காவலர்கள் தடுத்தும் கேளாமல் புதிய தலைமைச் செயலகத்திற்குள் நுழைந்திட முற்பட்டபோதுதான் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டார்கள். தலைமைச் செயலகத்திலிருந்து மதியம் வீட்டிற்கு நான் புறப்பட்டபோது, சாலைப் பணியாளர்களைப் பற்றிய செய்தி எனக்கு கூறப்பட்டவுடன், நான் என் காரை நிறுத்தி, என்னுடைய பாதுகாப்பிற்காக வந்து கொண்டிருந்த காவல் துறை அதிகாரிகளை அழைத்து நேராக சாலைப் பணியாளர்களும், மற்றும் அவர்களோடு இணைந்து ஒரு சில அலுவலர்களும் உண்ணா விரதம் இருந்த இடத்திற்கே நேராகச் சென்று அவர்களின் பிரதிநிதிகளை என்னைச் சந்திக்கச் செய்யுமாறு கூறச் செய்தேன். அவர்களும் அவ்வாறே அந்த அலுவலர்களிடம் சென்று பேசி, அவர்களின் பிரதிநிதிகள் ஐந்தாறு பேரை என் இல்லத்திற்கே அழைத்து வந்தார்கள். அந்த ஐந்தாறு பேரிடம் அரசின் மூத்த அதிகாரிகளை என் வீட்டிற்கே அழைத்து அந்த அலுவலர்களிடம் பேசச் செய்தேன். பின்னர் அவர்கள் என்னைச் சந்தித்தபோது படித்தவர்களாகிய நீங்கள் இப்படிச் செய்யலாமா என்று கூறிவிட்டு பின்னர் நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்ளச் சென்றேன்.

இதைப்பற்றி எதுவும் தெரியாத ஜெயலலிதா விரைவில் தேர்தல் வரப்போகிறது என்றதும், அவசர அவசரமாக இன்று விடுத்துள்ள அறிக்கையில் உண்ணாவிரத அறப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசு ஊழியர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று தெரிவித்துள்ளார். அவருடைய ஆட்சிக் காலத்தில் அரசு அலுவலர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசுவதாகக் கூறியபடி

பேச மறுத்தவர், அந்த அரசு அலுவலர்களை யெல்லாம் நள்ளிரவில் அவர்கள் வீடு புகுந்து கைது செய்து சிறையிலே அடைத்தவர், அந்த அரசு அலுவலர்கள் நீதி மன்றங்களில் முறையிட்ட போதும் அவர்களை எதிர்த்து கடுமையான நடவடிக்கை எடுத்தவர் தற்போது நான் என் வீட்டிற்கே அரசு அலுவலர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசியதைப் பற்றி தெரிந்து கொள்ளாமலே அவர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று அறிக்கை விடுகிறார் என்றால் அந்த அரசு அலுவலர்களே சிரிக்க மாட்டார்களா?

நேற்று முன்தினம் கூட, அதாவது 25-2-2011 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பிலும் - தமிழ்நாடு வருவாய்த்துறை கிராம ஊழியர் சங்கத்தின் சார்பிலும் - தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் முன்னேற்றச் சங்கத்தின் சார்பிலும் - தமிழ்நாடு நில அளவைத் துறை சங்கங்களின் சார்பிலும் அதன் கூட்டமைப்பு நிர்வாகிகள் தனித்தனியாக வந்து என்னை நேரில் சந்தித்ததோடு - தி.மு. கழக அரசு, அதன் அலுவலர்களுக்காக தொடர்ந்து செய்து வரும் நற்காரியங்களுக்காக நன்றி தெரிவித்துக் கொண்டதோடு, அவர்களது எஞ்சியுள்ள கோரிக்கைகளை அரசு பரிசீலிப்பதாக உறுதி அளித்ததின் அடிப்படையில் தங்கள் போராட்டங்களை உடனடியாகத் திரும்பப் பெற்று பணிக்குத் திரும்புவதாக முடிவு செய்திருப்பதாகவும் என்னிடம் கூறிச் சென்றார்கள். அந்தச் செய்தி ஏடுகளிலும் நேற்றையதினம் வெளிவந்துள்ளது.

அரசு அலுவலர்களின் மிகப் பெரிய சங்கமான அரசு அலுவலர் ஒன்றியத்தின் தற்போதைய தலைவரான திரு. இரா. சண்முகராஜன் அவர்களும், அவரது சங்க நிர்வாகிகளும் என்னைச் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டதோடு, இன்று அவர்கள் சங்கத்தின் சார்பில் ஏடுகளில் வெளியிட்டுள்ள அறிக்கையிலும்,

“தமிழகத்தில் அய்ந்தாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழக மக்கள் அனைவரும் நலமோடும் வளமோடும் வாழவேண்டும் என்பதைக் குறிக்கோளாக - அடிப்படையாகக் கொண்டு பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார்கள். தமிழக அரசில் பல்வேறு துறைகளில் பணிபுரியும் அரசு அலுவலர்கள், ஆசிரியர்களின் வாழ்வில் மகிழ்ச்சியையும், ஒளியையும்

ஏற்படுத்த பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றி வைத்துள்ளார்கள்”

என்று தெரிவித்திருப்பதோடு, தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு பத்து அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி ஒரு நாள் உண்ணாவிரதம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்ட தென்றும், ஆனால் அந்தச் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் என்னைச் சந்தித்து நடத்திய பேச்சு வார்த்தை அடிப்படையில் தங்களின் பத்து அம்சக் கோரிக்கைகள் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்றும், அவற்றின் மீது சாதகமான ஆணைகள் விரைவில் வெளியிடப்படும் என்றும் தமிழக முதல்வர் அளித்த உறுதி மொழியை ஏற்று ஒருநாள் கவன ஈர்ப்பு உண்ணாவிரதம் ரத்து செய்யப்படுகிறது என்றும் கூறி அதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தச் செய்திகளையெல்லாம் மறைத்து விட்டு அரசு அலுவலர்களின் அபிமானத்தைக் கொஞ்சமாவது பெற முடியாதா என்ற நப்பாசை யில் ஜெயலலிதா அறிக்கைவிட்டு, அந்த அலுவலர்கள் அ.தி.மு.க. ஆட்சியிலே பட்ட சிரமங்களையெல்லாம் நினைவுபடுத்தி, நுணலும் தன் வாயால் கெடும் என்பதைப் போல நடந்து கொண்டிருக்கிறார்.

ஜெயலலிதா தனது அறிக்கையிலே சத்துணவு ஊழியர்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இந்த ஆட்சியில் 2 இலட்சத்து 12 ஆயிரத்து 981 சத்துணவுப் பணியாளர்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக காலமுறை ஊதியம் அளித்ததோடு ஓய்வூதியம் தரவும் ஒப்புக் கொண்டிருக்கின்றோம்.

ஜெயலலிதாவின் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட எஸ்மா, டெஸ்மா சட்டங்களை நீக்கி அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பறிக்கப்பட்ட சலுகைகளை மீண்டும் வழங்கியதோடு - 1-1-2006 முதல் தமிழகத்தில் ஆண்டுக்கு 5 ஆயிரத்து 155 கோடியே 79 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில் ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக 11 ஆயிரத்து 93 கோடி ரூபாய் அரசு அலுவலர், ஆசிரியர்களுக்கு நிலுவைத் தொகையாக மட்டும் அனுமதிக்கப்பட்டு புதிய வரலாறு படைக்கப்பட்டிருப்பதே இந்தக் கழக ஆட்சியிலேதான்.

ஊதியக் கமிஷன் பரிந்துரையிலே சில முரண்பாடுகள் இருப்பதாக அரசு அலுவலர்களின் சங்கங்கள் தெரிவித்த நேரத்தில் அதனையேற்று 2 லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பயன் பெறும் வகையில் 200 கோடி ரூபாய் கூடுதல் செலவிலே ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளையேற்று அவற்றை 1-8-2010 முதல் நடை முறைக்குக் கொண்டு வந்தோம். ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளை நீக்கி 163 கோடி ரூபாய்ச் செலவில் கூடுதல் சலுகைகள் அளித்ததின் வாயிலாக 2 இலட்சத்து 73 ஆயிரம் ஆசிரியர்கள் பயன் பெற்றனர். அரசு அலுவலர்களுக்காகவும், ஆசிரியர்களுக்காகவும், சத்துணவு பணியாளர்களுக்காகவும், அங்கன்வாடி ஊழியர்களுக்காகவும், சாலைப் பணியாளர்களுக்காகவும் தி.மு. கழக அரசு செய்துள்ள சாதனைகளையெல்லாம் பட்டியலிடுவதென்றால் ஒருநாள் கடிதம் போதாது.

அதையெல்லாம் மறைத்துவிட்டு ஜெயலலிதா தற்போது ஏதோ திடீரென்று அரசு அலுவலர்களிடம் அக்கறை கொண்டவரைப் போல அறிக்கை நாடகம் போட்டால் அதனை நம்பி ஏமாற இனியும் அவர்கள் தயாராக இல்லை. கிடப்பதெல்லாம் கிடக்கட்டும், கிழவியைத் தூக்கி மனையிலேவை என்பதைப் போல ஜெயலலிதா உண்மை நிலைமைகளை மறைத்து விட்டு என்னையும் என் குடும்பத்தினரையும் கைது செய்ய வேண்டும், விசாரணை நடத்த வேண்டுமென்றெல்லாம் புலம்புகின்றார் என்றால் அதற்குக் காரணம் இன்னும் சில நாட்களில் அவர் மீதான 66 கோடி ரூபாய் சொத்துக் குவிப்பு வழக்கிலே விசாரணை, தீர்ப்பு என்றெல்லாம் தன்மீது எங்கே சட்டத்தின் பாய்ச்சல் நிகழ்ந்து விடுமோ என்கின்ற அச்சம்தான்! என்ன செய்வது? வினை விதைத்தவர்கள் வினையை அறுவடை செய்துதானே ஆகவேண்டும்!

அன்புள்ள,

மு.க.

27-02-2011

3530. ஆணையத்தின் ஆணை பிறந்து விட்டது!

உடன்பிறப்பே,

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்டது! இன்னும் இரண்டு மாதங்களுக்கு நாம் ஒவ்வொருவரும் இடைவிடாமல் பணியாற்ற வேண்டிய காலம்! ஓய்வு கொள்ளாமல் உழைக்க வேண்டிய நேரம்! கடந்த ஐந்தாண்டு காலமாக கழக அரசு தமிழக மக்களுக்காக ஆற்றிய அளவற்ற அரும்பணிகள் - தமிழ் நாட்டு மக்களால் எந்த அளவுக்கு கருதப்படுகிறது, போற்றப்படுகிறது என்பதற்கான முடிவினைத் தெரிந்துகொள்ள வேண்டிய நேரம் வந்து விட்டது. இன்னும் இடையிலே 42 நாட்கள்தான் உள்ளன; தமிழ்நாட்டு மக்கள் வாக்களிக்கப் போவதற்கு! வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு இன்னும் 17 நாட்கள்தான்! அதற்குள் தோழமைக் கட்சிகளுக்குள் தொகுதிகளின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட வேண்டும். பின்னர் ஒவ்வொரு கட்சிக்கும் எந்தெந்த தொகுதிகள் என்று பேசி முடிவெடுக்கப்பட வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு கட்சிகளின் சார்பில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பதை - வேட்பு மனு தாக்கல் செய்தவர்களையெல்லாம் ஒவ்வொரு கட்சியும் அழைத்துப் பேசி - முடிவு செய்து அறிவிக்க வேண்டும். தேர்தல் அறிக்கை எழுதப்பட வேண்டும். வேட்பாளர்களாக கட்சிகளின் சார்பில் அறிவிக்கப்படுவோர், தங்களது வேட்பு மனுவினைத் தாக்கல் செய்திட வேண்டும். அதன் பின்னர் வாக்காளப் பெருமக்களைச் சந்தித்து வாக்களிக்க வேண்டு மென்று தங்கள் தங்கள் தொகுதிகளில் கேட்டுக் கொள்ள வேண்டும். கட்சிகளின் தலைவர்களும், முக்கியப் பிரசாரகர்களும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும். இதற்கெல்லாம் 17 நாட்கள் தான் உள்ளன.

ஆனால் வாக்குகளை அளித்த பிறகு வாக்கு எண்ணிக்கை நடைபெற ஒரு மாத காலம் காத்திருக்க வேண்டும். ஏன்

இப்படிப்பட்ட இடைவெளி! தேர்தல் ஆணையத்தின் முடிவு அப்படி! வாக்குகளை அளிக்க வேண்டிய நாள் ஏப்ரல் 13. அந்த வாக்குகளை எண்ணப் போகின்ற நாள் மே 13. ஒரு மாத கால இடைவெளி ஏன்? மேற்கு வங்கத்தில் ஆறு கட்டமாகத் தேர்தல் நடைபெற்று முடிந்த பிறகுதான் அந்த மாநிலத்திலே வாக்குகளை எண்ணும்போது இங்கேயும் எண்ணப்பட வேண்டுமாம்; அது தேர்தல் விதிமுறை. ஆனால் எதற்காக ஒரு மாத காலம் இடைவெளிவிட்டு, அவசர அவசரமாக ஏப்ரல் 13-ந்தேதியே அனைவரையும் சிரமத்திற்கு ஆளாக்கி தேர்தல் வாக்கெடுப்பை நடத்துகிறார்கள். என்ன காரணமோ தெரியாது! தேர்தல் ஆணையம் மாநில அரசுகளை கலந்துகொண்டு தானே தேர்தல் தேதியை அறிவித்திருக்கும் என்ற சந்தேகம் ஏற்படலாம். அப்படி அல்ல! ஏனென்றால் தேர்தல் ஆணையம் யாருடைய கட்டுப்பாட்டிற்கும் உரியதல்ல! சுதந்திரமான அமைப்பு. யாரையும் கேட்க வேண்டிய அவசியமில்லை.

தற்போது அறிவித்துள்ள முடிவின்படி தேர்தல் நடைபெறப் போகின்ற நாள் ஏப்ரல் 13. அதற்குப் பின்னர் வாக்குகளை எண்ணப் போகின்ற நாள் மே 13. மே 13-ந்தேதி வாக்குகள் எண்ணப் பட்டால், வாக்கு எண்ணிக்கை முடிய ஒருநாள் ஆகும். முடிவுகள் மே 14-ந்தேதி தான் தெரியும்.

ஆனால் தற்போதுள்ள சட்டமன்றம் முடிவுற்று, அடுத்த சட்டமன்றம் மே 17-ந்தேதியே தொடங்கப்பட வேண்டும். ஏனென்றால் தற்போதுள்ள சட்டமன்றத்தின் காலம் மே 16-ந்தேதியோடு முடிவடைகிறது. எனவே மே 17-ந்தேதிக்குள் தமிழகத்திலே ஒரு புதிய அமைச்சரவை உருவாகியாக வேண்டும். மே 14ஆம் தேதியன்று யார் யார் சட்டப்பேரவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பது அறிவிக்கப்பட்டு - அதிலே எந்தக் கட்சி பெரும்பான்மை பெற்றுள்ளது என்பது முடிவாகி, அந்தக் கட்சியின் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டி, தங்கள் சட்டமன்றக் கட்சித் தலைவராக, அதாவது முதல் அமைச்சராக ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவர் ஆளுநரைச் சந்தித்து, ஆளுநர் அவர்களை அமைச்சரவை அமைக்கச் சொல்லிக்கேட்டு - அதன் பின்னர் அமைச்சர்கள் அறிவிக்கப்பட்டு - அந்த அமைச்சர்கள் ஆளுநர் முன்னிலையிலே பதவிப் பிரமாணம் செய்து கொண்டு - புதிய

சட்டப் பேரவையை மே 17-ந்தேதிக்குள் கூட்டியாக வேண்டும். இதற்கெல்லாம் இருக்கின்ற நாட்கள் மே 15, மே 16 ஆகிய இரண்டு நாட்கள்தான். அதற்குள் இத்தனை பணிகளையும் முடிக்க முடியுமா? ஆனால் முடித்தாக வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது!

தேர்தல் ஆணையம் இதனையெல்லாம் எண்ணிப் பார்க்காமல் இருந்திருக்குமா என்றால் நிச்சயம் எண்ணிப் பார்த்திருக்கும். எண்ணிப் பார்த்து விட்டுத்தான் இந்தத் தேர்தல் தேதிகளை அறிவித்திருக்கின்றது.

மே திங்கள் 17-ந்தேதியன்றுதான் புதிய சட்டப் பேரவை கூட்டப்பட வேண்டும் என்றால், எதற்காக அவசர அவசரமாக ஏப்ரல் 13-ந்தேதியே தேர்தலை நடத்த வேண்டும். மேலும் சிலநாட்கள் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் கால அவகாசம் கொடுத்து ஏப்ரல் மாதக் கடைசி யிலோ அல்லது மே மாதத்தில் முதல் வாரத்திலோ - அனைவரும் எதிர்பார்த்ததைப் போல தேர்தல் தேதியை அறிவித்திருக்கலாம் அல்லவா? ஏப்ரல் மாதம் 13ஆம் தேதியே அவசர அவசரமாக தேர்தல் தேதியை நிர்ணயம் செய்ய வேண்டிய கட்டாயம் என்ன? தேர்தல் ஆணையம் யாராலும் கேள்வி கேட்க முடியாத அமைப்பு என்றாலும் - சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும் அல்லவா?

தமிழகத்திலே மேலவையை புதிதாக அமைப்பது பற்றி தமிழக சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு - ஆளுநரின் ஒப்புதலைப்பெற்று - மத்திய அரசுக்கு தீர்மானம் அனுப்பப்பட்டு - அங்கே நாடாளு மன்றத்திலும் அந்த தீர்மானம் நிறைவேறிய பிறகு தமிழகத்திலே மேலவைத் தேர்தலை நடத்துவதற்கான நாள் இன்னும் குறிக்கப்பட வில்லை. அந்தத் தேதி கால தாமதம் செய்யப்பட்டுக்கொண்டே போகிறது. மேலவை அமைப்பது பற்றிய ஒரு வழக்கு உச்ச நீதி மன்றத்திலே நடக்கிறது. அந்த வழக்கில் தேர்தல் ஆணையத்தின் சார்பில் ஆஜரான வழக்கறிஞரே தன்னிச்சையாக எழுந்து தமிழகத்திலே சட்டமன்ற மேலவை தேர்தல் நடத்துவதைப் பற்றிக்கேட்டு பேரவைத் தேர்தலுக்குப் பிறகு நடத்தலாம் என்று நீதிபதி சொல்லக் கூடிய அளவிற்கு செய்திருக்கின்றார். தேர்தல் ஆணையம் அவ்வாறு அந்த வழக்கறிஞரை கேள்வி எழுப்பக் கூறியதா?

தேர்தல் ஆணையம் முறைப்படித்தான் செயல்படும். அவர்களின் செயல்பாடுகள் குறித்து நாம் அய்யம் கொள்ளக் கூடாது. அவர்கள் எப்படி ஆணையிட்டாலும் நாம் அதற்கேற்ப செயல்பட தயாராகிக் கொள்ள வேண்டும். எனவே கழகத் தோழர்கள் அனைவரும் தேர்தல் ஆணையம் அறிவித்த நாட்களுக்கேற்ப தங்கள் செயல்பாடுகளை வகுத்துக்கொள்ள வேண்டும். அரசியல் கட்சிகள் எல்லாம் தோழமைக் கட்சிகளோடு தொகுதி எண்ணிக்கைகளை உறுதி செய்து கொள்ள முனைப்பு காட்டத் தொடங்கிவிட்டன. குறைவான நாட்களே இடையிலே உள்ளதால் கட்சித் தோழர்கள் வாக்காளர்களை அணுகி, நாம் கடந்த ஐந்தாண்டுகளில் நிறைவேற்றிய சாதனைகளையெல்லாம் அவர்கள் கருத்தில் கொள்ளும் வண்ணம் பட்டியலிட்டுக் காட்டிட வேண்டும். கழகச் சொற்பொழிவாளர்கள் ஆங்காங்கு கழக நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டு அரசின் சாதனைகளைப் பட்டிய லிட்டு விரிவாக விளக்கி உரைத்திட வேண்டும்.

கழகம் போட்டியிட வேண்டுமென்று உறுதியாக நம்பியிருக்கின்ற சில தொகுதிகள் தோழமைக் கட்சிகளோடு குறைந்த நாட்களில் பேச்சுவார்த்தை நடத்தி தொகுதிகளை முடிவு செய்கின்ற நேரத்தில் ஒருசில தொகுதிகள் தோழமைக் கட்சிகளுக்கு விட்டுக் கொடுக்கப்பட நேரிடலாம். தாங்கள் நிற்பதற்கு உறுதி செய்த தொகுதி கிடைக்காமல் போய் விட்டதே என்று எண்ணிடாமல், தோழமைக் கட்சிகளுக்கு விட்டுக் கொடுக்கப்பட்டிருந்தாலும், அந்தத் தொகுதியில் மட்டுமல்லாமல் அனைத்துத் தொகுதிகளிலும் உதய சூரியனே நிற்பதாகக் கருதி ஒவ்வொரு கழகத் தோழரும் உணர்வொன்றி உற்சாகத்துடன் உழைத்திட வேண்டும்.

தி.மு. கழகத்திற்கு என்று நிர்ணயிக்கப்பட்ட தொகுதிகளிலேகூட - பலபேர் போட்டியிடுவதற்கு நினைத்திருக்கலாம். ஆனால் கழகத்தின் சார்பில் ஒருவரைத்தான் போட்டியிடச் செய்ய முடியும். பேரறிஞர் அண்ணா அவர்களே இதற்கான பதிலை முன்பே அளித்திருக்கிறார். பீரோவில் பல பட்டுப் புடவைகள் இருந்தாலும், இந்தத் திருமண நிகழ்ச்சிக்கு ஒரு பட்டுப் புடவையைத் தான் கட்டிக் கொண்டு செல்ல முடியும். அடுத்தடுத்த நிகழ்ச்சிகளுக்கு மற்றப் பட்டுப் புடவைகளைக் கட்டிக் கொண்டு செல்லலாம் என்றும், ஒரு நிகழ்ச்சிக்கு ஒரு

பட்டுப் புடவைக்குத்தான் வாய்ப்பு கிடைக்கும் என்றும் எழுதியிருக்கிறார். வாய்ப்பு கிடைக்காதவர்கள், அண்ணா அவர்களின் இந்தக் கருத்தினை மனதிலே கொண்டு கட்டுப் பாட்டுடன் பாடுபட வேண்டும்.

தோழமைக் கட்சிகளோடு எந்தெந்த தொகுதிகள் பங்கிட்டுக் கொள்ளப்படுகின்றன என்பது அடுத்து வரும் நாட்களில் பேசி முடிவெடுத்து அவைகள் எல்லாம் அறிவிக்கப் படவுள்ளன. அவற்றில் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தமுறை போட்டியிடவுள்ள தொகுதிகளும் நிர்ணயிக்கப்பட்டு - அந்தத் தொகுதிகளில் போட்டியிடுவதற்காக விண்ணப்பித்தவர்களை நேரில் சென்னைக்கு அழைத்து, அவர்களை நேர்காணல் பணியும் இரண்டொரு நாட்களில் தொடங்கப்படவுள்ளன. திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடவுள்ள தொகுதிகள் அறிவிக்கப்பட்டவுடன், அந்தத் தொகுதிகளைச் சார்ந்த நமது கழகத் தோழர்கள் நமது உதய சூரியன் சின்னத்தினை வரைந்திடும் பணியிலே ஈடுபட்டாக வேண்டும். அப்படி எழுதும்போது பொதுச் சுவர்களிலே விளம்பரம் செய்யக் கூடாது என்று தேர்தல் ஆணையம் கூறியிருப்பதையும் மனதிலே கொண்டு தவறாமல் பின்பற்ற வேண்டும்.

உடன்பிறப்பே, தொடர்ந்து நீ மேற்கொள்ள வேண்டிய பணிகளைப் பற்றி அவ்வப்போது எழுதுகின்றேன். தேர்தல் பணி ஆற்றுவதில் திராவிட முன்னேற்றக்கழகத்துக் காளைகளை, மகளிரையும் மிஞ்சுவதற்கு எங்கும் யாருமில்லை என்பதை மீண்டும் மெய்ப்பிக்கும் வகையில் உன்னுடைய பணி அமைந்திட வேண்டும். அந்தக் காலத்திலேயே பெரியவர் பக்தவத்சலம் அவர்களால் "சிங்கிள் டீயைக் குடித்துவிட்டுக்கூட நாள் முழுவதும் சுற்றிச் சுற்றி பணியாற்றக் கூடியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்" என்று பாராட்டைப் பெற்றவர்கள் நீங்கள்.

கழகத் தோழர்கள் வாக்குகளைக் கேட்டு வாக்காளர்களிடம் செல்வதற்கு தலை நிமிர்ந்து செல்லக் கூடிய அளவிற்கு நாம் ஐந்தாண்டுகளில் ஆற்றிய பணிகளையெல்லாம் நிரல் படுத்திச் சொல்லி வாக்குகளைக் கேட்கலாம். ஐந்தாண்டு காலத்தில் நாம் எந்தத் தரப்பினரையும் மதிக்காமல் இருந்ததில்லை. ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்று பேதம் பார்த்ததில்லை; வாக்களித்தோர் வாக்களிக்காதோர் என்று பிரித்துப் பார்த்ததில்லை. கழகம் ஆட்சிப்

பொறுப்பிலே இருந்த ஒவ்வொரு நாளும், ஏன் ஒவ்வொரு நிமிடமும் இன்றையதினம் தமிழக மக்களுக்காக எந்தத் திட்டத்தை அறிவிக்கலாம், எந்த வகையிலே அவர்களின் இன்னலைப் போக்கலாம்; தமிழகத்தின் மேன்மைக்கும் சிறப்புக்கும் என்னென்ன செய்யலாம் என்று நினைத்து நினைத்து சாதனைகளைக் குவித்த ஆட்சி தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. அந்த ஆட்சிதான் தொடர வேண்டுமென்று முடிவெடுத்துள்ள வாக்காளர்களை அழைத்து வந்து, அவர்களின் வாக்குகளைப் பதிவு செய்ய வேண்டிய பணியினையாற்ற புறப்படு, புறப்படு - புறப்பட்டிருப்பாய் என்பதை நான் அறிவேன் என்றாலும் கேட்டுக்கொள்ள வேண்டிய கடமை என்னைச் சார்ந்ததல்லவா?

அன்புள்ள,

மு.க.

3-3-2011

3531. விளைச்சல் நிறைந்தது; விவசாயி கண்ணீர் மறைந்தது!

உடன்பிறப்பே,

நாடு விடுதலை பெற்ற நாளை “கணக்குத் தீர்த்த நாள்” என்றும் அந்த விடுதலைக்காக ஆண்டு தோறும் விழா எடுத்துக் கொண்டாடும் நாளை “கணக்குப் பார்க்கும் நாள்” என்றும் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதை நெஞ்சிலே நிறுத்தி அன்றாடம் பணி புரிந்து வரும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஐந்தாவது முறையாக 2006ஆம் ஆண்டு மே திங்களில் பதவிப் பொறுப்பேற்று கடந்த ஐந்தாண்டு காலமாக மக்கள் பணியே மகேசன் பணி என்ற உணர்வோடு விடிகின்ற ஒவ்வொரு நாளிலும் மக்களுக்கு இன்று என்ன செய்யலாம், என்ன திட்டங்களை நிறைவேற்றலாம் என்ற எதிர்பார்ப்போடு அதிகாரிகளோடு விவாதித்து சாதனைகளையும், திட்டங்களையும் ஆற்றி வருவதை தமிழ் நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

2006ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நேரத்தில் தமிழ்நாட்டு மக்களிடம் சென்று, நீங்கள் எங்களுக்கு வாக்களியுங்கள், நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் இன்னின்ன திட்டங்களை உங்களுக்காக ஆற்றிடுவோம், “சொன்னதைச் செய்வோம், செய்வதைப் சொல்வோம்” என்று உறுதிமொழி தந்து, மக்களும் அதை நம்பியேற்று பதவிக் கட்டிலிலே மக்கள் நம்மை அமர்த்திய பிறகு, 2011இல் மீண்டும் தமிழ் நாட்டு மக்களைச் சந்திக்கப் போகும்போது, 2006ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில் நாம் அவர்களுக்கு அளித்த உறுதி மொழிகளை நிறைவேற்றினோமா, மேலும் என்னென்ன திட்டங்களை மக்களுக்காக எந்தெந்த துறைகளின் சார்பாக நிறைவேற்றியிருக்கிறோம் என்று கணக்குக் காட்ட வேண்டிய நிலையில் தற்போது நான் இருக்கின்றேன்.

2006ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு முடிகின்ற வரையில் உள்ள இந்தக் காலக் கட்டத்தில் எந்தெந்த துறைகளின்

வாயிலாக என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன, என்னென்ன சலுகைகள் வழங்கப்பட்டன என்பதை நேரம் கிடைக்கின்றபோது உனக்குத் தெரிவிக்கின்றேன். இதனை நாட்டுமக்களிடம் எடுத்துக் கூற வேண்டிய பொறுப்பு உனக்கும், உன் போன்ற உடன்பிறப்புக்களுக்கும் உள்ளது என்பதை நான் நினைவுபடுத்த வேண்டிய தில்லை.

“சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை” - என்றும்

“உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை எல்லாம் பொறுத்து” - என்றும்

அய்யன் வள்ளுவரால் போற்றப்பட்ட வேளாண் துறையின் சார்பில் கடந்த நான்கரை ஆண்டுகளில் தி.மு.கழக அரசு செய்த சாதனைகளின் பட்டியலை இந்தக் கடிதத்தில் தொகுத்துத் தருகின்றேன்.

2006ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தமிழக மக்களிடம் வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கையில் “சிறு, குறு விவசாயிகளுக்கு இதுவரை வழங்கப்பட்ட கூட்டுறவுக் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்வோம்” என்று சொல்லியிருந்தோம். தேர்தலில் தி.மு. கழகம் வெற்றி பெற்று நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அதே நாளில் - அதே மேடையில் இருந்தவாறே விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட இந்தச் சலுகைக்கான கோப்பிலே நான் கையெழுத்திட்டதை தமிழக விவசாயிகள் மறந்திருக்க முடியாது. அன்றைய தினம் நான் கையெழுத்திட்ட மூன்று கோப்புகளில் ஒன்றுதான் விவசாயிகளுக்கு சலுகைகளை அளிக்கக் கூடிய இந்தக் கோப்பு. அதன் காரணமாக விவசாயிகள் வாங்கிய 7000 கோடி ரூபாய் கூட்டுறவு விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு - 22 இலட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன.

விவசாயிகளுக்கான பயிர்க் கடன் வட்டி 2005-2006இல் 9 சதவீதம் என இருந்ததை 2006-2007 கழக அரசில் 7 சதவீதமாகக் குறைத்து, 6,31,283 பேருக்கு 1250 கோடியே 62 இலட்ச ரூபாயும்; 2007-2008இல் 5 சதவீதமாகக் குறைத்து, 6,48,397

பேருக்கு 1393 கோடியே 97 இலட்ச ரூபாயும்; 2008-2009இல் 4 சதவீதமாகக் குறைத்து, 6,91,192 பேருக்கு 1570 கோடியே 99 இலட்ச ரூபாயும்; 2009-2010இல் பயிர்க்கடன்களை முறையாகத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியை முற்றிலும் ரத்து செய்த புரட்சிகரமான திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக அறிவித்து, 8,98,540 பேருக்கு 2169 கோடியே 48 இலட்ச ரூபாயும்; நடப்பு நிதி ஆண்டில் (2010 - 2011) 15.2.2011 வரை 8 லட்சத்து 1960 விவசாயிகளுக்கு 2453 கோடி ரூபாயும் என 2006க்குப்பின் மொத்தம் 36 இலட்சத்து 71 ஆயிரத்து 372 விவசாயிகளுக்கு 8,838 கோடியே 6 இலட்ச ரூபாய் பயிர்க்கடனாக வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் 1 கோடியே 73 இலட்சத்து 92 ஆயிரத்து 556 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, இதுவரை 8 இலட்சத்து 61 ஆயிரத்து 614 உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு 632 கோடியே 59 இலட்சத்து 61 ஆயிரத்து 257 ரூபாய் முதியோர் ஓய்வூதியம், கல்வி, திருமணம், விபத்து போன்ற இனங்களுக்கான உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தலவரி, தலமேல்வரி, தண்ணீர்த் தீர்வை ஆகியவை ரத்து செய்யப்பட்டு, நிலவரி புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு சராசரியாக 15 ரூபாய் என்பது 2 ரூபாய் என்றும், நன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு சராசரியாக 50 ரூபாய் என்பது 5 ரூபாய் என்றும் 2009-2010 முதல் பெயரளவுக்கு வசூலிக்கப்படுகிறது.

1990ஆம் ஆண்டில் கழக அரசு, விவசாய பம்பு செட்டுகளுக்கு வழங்கிய இலவச மின்சாரத் திட்டத்தின் கீழ் இதுவரை 19 இலட்சத்து 13 ஆயிரத்து 697 விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். தற்போது நிலுவையில் உள்ள மேலும் 2 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு படிப்படியாக இலவச மின் இணைப்பு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நவம்பர் 2008-ல் பெய்த பெருமழை மற்றும் வெள்ளத்தால் 5.77 இலட்சம் எக்டரில் பாதிப்புக்குள்ளான நெல் மற்றும் இதர பயிர்களைச் சாகுபடி செய்த 9 இலட்சத்து 10 ஆயிரத்து 200 விவசாயிகளுக்கு, இழப்பீடு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட

உச்சவரம்பான 2 எக்டர் என்ற விதிமுறையையும் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்படும் நெற்பயிர்களுக்கு நிவாரணமான எக்டருக்கு ரூ.4000/- என்பதை ரூ.7500/- ஆக உயர்த்தியும், பாதிக்கப்பட்ட விவசாய நிலப்பரப்பு அனைத்திற்கும் நிவாரணம் வழங்கிட ஆணையிடப்பட்டு 404 கோடியே 41 இலட்சம் ரூபாய் வெள்ள நிவாரணமாக வழங்கப்பட்டது.

இயற்கை சீற்றங்களால் ஏற்படும் பயிர்ப் பாதிப்பிலிருந்து விவசாயிகளைக் காக்கும் பொருட்டு கொண்டு வரப்பட்ட விவசாயக் காப்பீட்டுத் திட்டத்தில் தமிழக அரசு காப்பீட்டு பிரிமியத் தொகையில் 50 சத மானியம் வழங்கிய காரணத்தால் பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளின் எண்ணிக்கை 2006இல் 1 இலட்சம் என்பதிலிருந்து படிப்படியாக 9 இலட்சத்து 88 ஆயிரமாக உயர்ந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் மொத்தம் 9 இலட்சம் விவசாயிகளுக்கு 974 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் காப்பீட்டுத் தொகை மானியமாக வழங்கிட 40 கோடி ரூபாயும், இழப்பீட்டுத் தொகை வழங்கிட தமிழக அரசின் பங்காக 200 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு, விவசாயிகளிடமிருந்து 1.4.1980 முதல் வசூலிக்கப்பட வேண்டிய மண்வளப் பாதுகாப்பு கடன் உள்ளடக்கிய தக்காவி கடன் 196 கோடியே 37 லட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

வேளாண் துறைக்காக 2001-2006 ஐந்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் 4 ஆயிரத்து 137 கோடியே 34 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு; 2006-2011 ஐந்தாண்டுகால கழக ஆட்சியில் 7 ஆயிரத்து 437 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு.

உணவுதானிய உற்பத்தியில் சாதனை

2005-06-ல் உணவு தானிய உற்பத்தி 61.17 இலட்சம் டன்

2006-07-ல் உணவு தானிய உற்பத்தி 82.63 இலட்சம் டன்

2007-08-ல் உணவு தானிய உற்பத்தி 65.82 இலட்சம் டன்

2008-09-ல் உணவு தானிய உற்பத்தி 71.01 இலட்சம் டன்

2009-10-ல் உணவு தானிய உற்பத்தி 84.29 இலட்சம் டன்

தமிழக நெல் விவசாயிகளின் நிலை உயர, மத்திய அரசு நெல்லுக்கு நிர்ணயிக்கும் விலையுடன் மாநில அரசின் சார்பில் மானியம் வழங்கி விவசாயிகளுக்கு உதவி வருகிறது. அந்த வகையில்

- 2006-2007 இல் சாதாரகம் குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசு விலை ரூ.580 என நிர்ணயம் செய்தது; கழக அரசு அதனை ரூ.620 என உயர்த்தியது.
- 2007-2008இல் சாதாரகம் குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசு விலை ரூ.745 என நிர்ணயம் செய்தது; கழக அரசு ரூ.795 என உயர்த்தியது.
- 2008-2009இல் சாதாரகம் குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசு விலை ரூ.900 என நிர்ணயம் செய்தது; கழக அரசு ரூ.1000 என உயர்த்தியது.
- 2009-2010 மற்றும் 2010-2011இல் மத்திய அரசு விலை 1000 ரூபாய் என நிர்ணயம் செய்தது; கழக அரசு ரூபாய் 1050 என உயர்த்தி வழங்கியது.
- 2005-2006இல் அ.தி.மு.க. அரசு நெல்லுக்கு வழங்கிய கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூபாய் 600; கழக அரசு ஆண்டுக்காண்டு இதனை உயர்த்தி, 2009-2010இல் சாதாரக நெல் விலை 1050 ரூபாய் என உயர்த்தி வழங்கி வருகிறது.

நெல் விலை - சன்ன ரகம்

- 2006-2007 இல் சன்ன ரகம் குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசு விலை ரூ.610 என நிர்ணயம் செய்தது; கழக அரசு அதனை ரூ.650 என உயர்த்தியது.
- 2007-2008இல் சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசு விலை ரூ.775 என நிர்ணயம் செய்தது; கழக அரசு ரூ.825 என உயர்த்தியது.
- 2008-2009இல் சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசு விலை ரூ.930 என நிர்ணயம் செய்தது; கழக அரசு ரூ.1050 என உயர்த்தியது.

- 2009-2010 மற்றும் 2010-2011இல் சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசு விலை ரூ.1030 என நிர்ணயம் செய்தது; கழக அரசு ரூ.1100 என உயர்த்தி வழங்கி வருகிறது.

கரும்பு விலை

அதேபோல கரும்பு விவசாயிகளுக்கும் கழக அரசு ஆண்டுக்காண்டு கூடுதல் விலை வழங்கி வருகிறது.

- 2005-2006இல் கரும்பு விவசாயிகளுக்கு அ.தி.மு.க அரசு டன் ஒன்றுக்கு வழங்கிய விலை 1014 ரூபாய்;
- 2006-2007இல் கழக அரசு பொறுப்பேற்றபின், கரும்பு டன் ஒன்றுக்கு மத்திய அரசு நிர்ணயித்த 802 ரூபாய் 50 காசு என்பதை 1024 ரூபாய் எனவும்,
- 2007-2008இல் 811 ரூபாய் 80 காசு என்பது 1034 ரூபாய் எனவும்
- 2008-2009இல் 811 ரூபாய் 80 காசு என்பது 1100 ரூபாய் எனவும்,
- 2009-2010இல் 9.5 சத சர்க்கரை பிழிதிறன் உள்ள கரும்புக்கு மைய அரசு நியாய மற்றும் ஆதாய விலையாக 1077 ரூபாய் 60 காசு என அறிவித்த போது கழக அரசு போக்குவரத்துக் கட்டணம் மற்றும் ஊக்கத் தொகை உட்பட டன் ஒன்றுக்கு 1650 ரூபாய் என வழங்கியது.
- 2010-2011இல் மத்திய அரசு 1391 ரூபாய் என அறிவித்த நிலையில் கழக அரசு டன் ஒன்றுக்கு 2000 ரூபாய் என உயர்த்தி வழங்கி வருகிறது.
- ஆதிதிராவிட விவசாயிகள் 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் 31.3.2006 வரை பெற்ற கடன் தொகை, வட்டியுட்பட 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
- 2001-2006 அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் வறட்சி காரணமாக உயிரிழந்த 19 விவசாயிகள் குடும்பங்களுக்கு 2006ஆம் ஆண்டு சுதந்திரத்

திருநாள் விழாவின்போது தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டது.

❖ தந்தை பெரியாரின் பிறந்த நாளான 17.9.2006 அன்று திருவள்ளூரில் தொடங்கப்பட்ட நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டத்தின்கீழ் 1 இலட்சத்து 78 ஆயிரத்து 796 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் குடும்பங்களுக்கு 2 இலட்சத்து 12 ஆயிரத்து 853 ஏக்கர் நிலம் பண்படுத்தப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது;

❖ 7 இலட்சத்து 74 ஆயிரத்து 386 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன;

❖ தமிழகம் தென்னை வளர்ப்பில் முதல் நிலையில் உள்ளதால் அனைத்து மாவட்டங்களிலும் அதிக அளவில் பயிர் செய்யப்பட்டிருக்கும் ஆயுள் காலப் பயிரான தென்னையைப் பயிரிடும் விவசாயிகளின் நலனுக்காக, "தென்னை விவசாயிகள் நல வாரியம்" 27.8.2010 அன்று திரு ச. ராஜ்குமார் மன்றாடியார் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

❖ உழவரும், நுகர்வோரும் பெரும்பயன் அடைந்திட 1999இல் அறிமுகப்படுத்தப்பட்ட உழவர் சந்தைத் திட்டத்தின்கீழ் 2001 மே வரை 103 உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டு மக்களின் பாராட்டுகளை ஈர்த்தன; அதன்பின் வந்த அ.தி.மு.க. அரசு உழவர் சந்தைத் திட்டத்தைச் சீரழித்திட; 2006இல் இந்த அரசு மீண்டும் பொறுப்பேற்றபின் அவற்றுக்குப் புதுப்பொலிவூட்டி நடைமுறைப்படுத்தியதுடன் புதிதாக மேலும் 50 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டு, தற்போது மொத்தம் 153 உழவர் சந்தைகள் சிறப்பாக இயங்கி வருகின்றன; விவசாயிகளும், பொதுமக்களும் பயனடைகின்றனர்.

❖ விவசாயிகளைச் சுயஉதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து சுழல் நிதி வழங்கும் திட்டம் 2008இல் அறிமுகப்படுத்தப்பட்டு, இதுவரை 2 இலட்சத்து 7 ஆயிரம் விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்ட

35 ஆயிரத்து 924 குழுக்கள் அமைக்கப்பட்டு 30 கோடி ரூபாய் அளவிற்கு சுழல்நிதியாக வழங்கப்பட்டதுடன், 442 கோடியே 32 இலட்ச ரூபாய் பயிர்க் கடனாகவும் அளிக்கப்பட்டுள்ளது.

❖ விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தில், மின்சாரம் விரயமாவதைத் தடுத்திட, சிறு குறு விவசாயிகளுக்கு பழைய மின் மோட்டார்களுக்குப் பதிலாக இலவசமாக புதிய மின்மோட்டார்களும்; பெரிய விவசாயிகளின் பம்பு செட்டுகளில் உள்ள பழைய மின் மோட்டார்களுக்குப் பதிலாக 50 சதவீத மானியத்தில் புதிய மின் மோட்டார்களும், 5 ஆண்டுகளில் மாற்றி அமைக்கப்படும் என்றும் கடந்த சுதந்திர தின நாள் விழாவில் அறிவிக்கப் பட்டதை விரைந்து நிறைவேற்றிட ஆயத்தப்பணிகள் நடைபெறுகின்றன.

❖ ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வரும் பழைய பம்பு செட்டுகளுக்கு பதிலாக 50 சதவீத மானியத்தில் புதிய பம்பு செட்டுகள் வழங்கும் திட்டத்தில் 2006 ஆம் ஆண்டு முதல் 62 ஆயிரத்து 772 பழைய பம்பு செட்டுகளுக்கு பதிலாக புதிய பம்பு செட்டுகள் வாங்க 39 கோடியே 57 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் மானியம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ தோட்டக் கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து பயிரிடும் விவசாயிகளுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்கத்தக்க வகையில் 2007-2008 ஆம் ஆண்டு முதல் துல்லிய பண்ணையத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 57 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின்மூலம் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். இந்தத் துல்லிய பண்ணையத் திட்டம் 2010-2011 ஆம் ஆண்டில் 12,500 ஏக்கர் நிலப்பரப்பில் 38 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க 65 சதவீத மானியமும், நீரில்

கரையும் உரம் எக்டருக்கு ரூ.15000 வீதமும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இத்திட்டத்திற்கான பயிற்சிகளைப் பெற ஒரு விவசாயிக்கு ரூ.1000மும் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்

❖ 2007-2008 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் நெல் உற்பத்தியை உயர்த்தவும், திருவள்ளூர், நாகை, திருவாரூர், கடலூர், வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாமக்கல், கோவை, ஈரோடு, விருதுநகர், தூத்துக்குடி ஆகிய 12 மாவட்டங்களில் பயறுவகைகள் உற்பத்தியை உயர்த்தவும் 47 கோடியே 82 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் பணிகள் நடைபெறுகின்றன. இத்திட்டத்தின் கீழ் தரமானச் சான்று விதைகள், நுண்ணூட்ட உரங்கள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

விதை மற்றும் உர விநியோகம்

❖ கடந்த 2006 முதல், பிப்ரவரி 2010 வரை இத்திட்டத்தில் 106 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் விவசாயிகளுக்கு 70 ஆயிரத்து 175 மெட்ரிக் டன் நெல் விதைகளும், 1493 மெட்ரிக் டன் சிறுதானிய விதைகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், எண்ணெய் வித்துக்கள் 11 ஆயிரத்து 362 மெட்ரிக் டன்கள் ஐசோபாம் திட்டத்தில் 11 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவிலும், பயறுவிதைகள் 6 ஆயிரத்து 629 மெட்ரிக் டன்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு, பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

உர விநியோகம்

❖ 2006-2007 முதல் 2009-2010 முடிய நான்காண்டுகளில் சராசரியாக 9.88 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 3.43 இலட்சம் மெட்ரிக் டன் டிஏபி, 4.99 இலட்சம் மெட்ரிக்

டன் பொட்டாஷ் மற்றும் 3.90 இலட்சம் மெட்ரிக் டன் காம்ப்ளெக்ஸ் உரமும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

❖ 2010-2011ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் வரை யூரியா 6.63 இலட்சம் மெட்ரிக் டன்னும், டிஏபி 2.172 இலட்சம் மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 3.111 இலட்சம் மெட்ரிக் டன்னும் மற்றும் காம்ப்ளக்ஸ் 4.284 இலட்சம் மெட்ரிக் டன்னும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

❖ கடந்த 2007-2008ஆம் ஆண்டில் தேசிய அளவில் டிஏபி உரத் தட்டுப்பாடு நிலவிய போது, இந்தியாவிலேயே தமிழக அரசு மட்டும்தான், முதன்முதலாக டான்பெட் நிறுவனத்தினை மாநில முகமை நிறுவனமாக நியமித்து, வட்டியில்லா முன்பணமாக, டான்பெட் நிறுவனத்திற்கு வழங்கிய 30 கோடி ரூபாய் நிதியினைக் கொண்டு 2007-2008ஆம் ஆண்டில் 1.04 இலட்சம் மெட்ரிக் டன் டிஏபி உரமும், 2008-2009ஆம் ஆண்டில் 40 கோடி ரூபாய் நிதியினைக் கொண்டு 3.13 இலட்சம் மெட்ரிக் டன் டிஏபி உரம் கொள்முதல் செய்யப்பட்டு தடையின்றி விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

❖ 2009-2010ஆம் ஆண்டிலும் டான்பெட் நிறுவனம் மூலம் 90 கோடி ரூபாய் நிதியினைக் கொண்டு இதுவரை 2.83 இலட்சம் மெட்ரிக் டன் டிஏபி உரம் கொள்முதல் செய்யப்பட்டு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் தட்டுப்பாடு இன்றி விநியோகம் செய்யப்பட்டது.

❖ 2010-2011ஆம் ஆண்டிலும் டான்பெட் நிறுவனம் மூலம் 90 கோடி ரூபாய் நிதியினைக் கொண்டு இதுவரை 2.17 இலட்சம் மெட்ரிக் டன் டிஏபி உரம் கொள்முதல் செய்யப்பட்டு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் தட்டுப்பாடு இன்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இராஜராஜன் 1000 சாகுபடி

❖ தஞ்சையில் இராஜராஜனின் 1000வது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடிய போது, அதிக மகசூல் தரக்கூடிய புதிய நெல் தொழில் நுட்பத்திற்கு அந்த

மாமன்னன் நினைவாக "இராஜராஜன் 1000'' என என்னால் பெயர் சூட்டப்பட்டது.

❖ 2006-2007 ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 688 ஏக்கரில் செயல்படுத்தப்பட்ட இராஜராஜன் 1000 தொழில்நுட்ப சாகுபடி முறை நீர்ப்பயன் பாட்டைக் குறைத்து நெல் உற்பத்தித்திறனை அதிகரிக்கிறது என கண்டறியப்பட்டதால் 2007-2008ஆம் ஆண்டில் 10 இலட்சத்து 52 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இத்தொழில்நுட்பம் கடைப்பிடிக்கப்பட்டது.

❖ 2007ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நிலவிய வறட்சி மற்றும் டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாகவும், 2008ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தாலும், 5 இலட்சத்து 95 ஆயிரம் ஏக்கர் நெற்பரப்பு பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக தேசிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 282 கோடியே 63 இலட்சம் ரூபாய் இழப்பீடாகவும், தேசிய பேரிடர் நிவாரண நிதியின்கீழ் 213 கோடியே 80 இலட்சம் ரூபாய் நிவாரணமாகவும், ஆக மொத்தம் 496 கோடியே 43 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

❖ 2008-2009 ஆம் ஆண்டில், 13 இலட்சத்து 45 ஆயிரம் ஏக்கர் பரப்பில் இத்தொழில் நுட்பம் கடைப்பிடிக்கப்பட்டது. 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட நிஷா புயலினால், நிகழ்ந்த வெள்ள பாதிப்பால் 20 மாவட்டங்களில் 11 இலட்சத்து 78 ஆயிரம் ஏக்கர் நெல் பரப்பு பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக, தேசிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 651 கோடியே 66 இலட்சம் ரூபாய் இழப்பீடாகவும், தேசிய பேரிடர் நிவாரண நிதியின்கீழ் 375 கோடியே 48 இலட்சம் ரூபாய் நிவாரணமாகவும் ஆக மொத்தம் 1027 கோடியே 14 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இருப்பினும், கடந்த ஆண்டை விட 2008-2009ஆம் ஆண்டில் கூடுதலாக 2 இலட்சத்து 93 ஆயிரம் ஏக்கரில் இராஜராஜன் 1000 தொழில்நுட்பத்தைப் பின்பற்றிய காரணத்தால் அரிசி உற்பத்தியில் பின்னடைவு ஏதுமில்லாமல் 51 இலட்சத்து 83 ஆயிரம் மெட்ரிக் டன்

பெற முடிந்தது. இயற்கை சீற்றத்தினால் கூடுதலான பரப்பு பாதிப்புக்கு உள்ளானபோதும் உற்பத்தி அதிகமாக பெற முடிந்தது.

❖ இராஜராஜன் 1000 தொழில்நுட்பத்தினால் 30 முதல் 40 சதவீதம் மகசூல் அதிகரித்துள்ளதை உலக வங்கி நிதியின்கீழ் செயல்படுத்தப்படும் நீர்வள, நிலவளத் திட்டத்தின் குழு ஆய்வு அறிக்கை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

❖ இராஜராஜன் 1000 திட்டத்தின்கீழ், இதுவரை 3 இலட்சத்து 63 ஆயிரம் கோனோகளையெடுக்கும் கருவிகளும், 2 இலட்சத்து 43 ஆயிரம் மார்க்கர்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(தொடர்ச்சி - நாளை)

அனபுள்ள,

மு.க.

4-03-2011

3532. விளைச்சல் நிறைந்தது; விவசாயி கண்ணீர் மறைந்தது!

உடன்பிறப்பே,

வேளாண்மைத் துறையில் கழக ஆட்சி கடந்த ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றிய சாதனைகள் - திட்டங்களின் தொடர்ச்சியினை எழுதுகிறேன்.

ஐந்திணை மரபணுப் பூங்கா

"தமிழக அரசு சார்பில் ஐந்திணை நில வகைகளில்" பாரம்பரிய மரபணுப் பூங்காக்கள் (Genetic Gardens) அமைக்கப்படும் என கோவை மாநகரில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு நிறைவு விழாவில் தெரிவித்தபடி சேலம் மாவட்டம் ஏற்காட்டில் 75 ஏக்கரில் குறிஞ்சிப் பூங்கா; திண்டுக்கல் மாவட்டம் சிறுமலைப் பகுதியில் 25 ஏக்கரில் முல்லைப் பூங்கா, தஞ்சை மாவட்டம் சாக்கோட்டையில் 21.47 ஏக்கரில் மருதம் பூங்கா, நாகை மாவட்டம் திருக்கடையூரில் 14.61 ஏக்கரில் நெய்தல் பூங்கா, இராமநாதபுரம் மாவட்டம் அச்சடிப் பிரம்பு கிராமத்தில் 25 ஏக்கரில் பாலைப் பூங்கா என ஐந்திணை மரபணுப் பூங்காக்கள் அமைத்திட முடிவு செய்யப்பட்டு முதற்கட்டமாக 37 கோடியே 391 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆயத்தப் பணிகள் நடைபெறுகின்றன.

கழக அரசு உருவாக்கும் தாவரவியல் பூங்காக்கள்

நீலகிரி மாவட்ட உதகையில் உள்ள அரசு தாவரவியல் பூங்கா மற்றும் அரசு ரோஜாத் தோட்டம், குன்னூரில் உள்ள சிம்ஸ் பூங்கா, கொடைக்கானல் பகுதியில் அமைந்துள்ள பிரையண்ட் பூங்கா ஆகியவை சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் ஈர்த்து வருவதால் மேலும் பல தாவரவியல் பூங்காக்களை கழக அரசு தமிழகத்தில் அமைத்து வருகிறது.

கோவை மாநகரில் அமையும் செம்மொழிப் பூங்காவுடன், சென்னை கதிட்ரல் சாலையில் 7 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் உலகத் தரம் வாய்ந்த செம்மொழிப் பூங்கா அமைக்கப் பட்டு 24.11.2010 அன்று என்னால் திறக்கப்பட்டுள்ளது.

அதேபோல, சென்னையை அடுத்த மாதவரத்தில் 28.16 ஏக்கர் பரப்பில் 5 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் அலங்காரத் தோட்டம் மற்றும் செயல்விளக்கப் பூங்கா;

நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் 36.78 ஏக்கர் பரப்பில் 5 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சூழல் பூங்கா;

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் 47.25 ஏக்கர் பரப்பில் 11 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் தாவரவியல் பூங்கா ஆகியவை அமைக்கப்பட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள பிரையண்ட் பூங்கா, அண்ணா பூங்கா, செட்டியார் பூங்கா ஆகியவை ஒரு கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படு கின்றன.

வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம்

❖ வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் மூலம் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகளிடத்தில் அரசு பிரபலப்படுத்தி வருவதால் வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அதிகரித்து, வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறை நீங்கி, குறித்த காலத்தில் வேளாண் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, வேளாண்மையில் மேற்கொள்ளப்படும் செலவுகள் குறைந்து விவசாயிகளின் நிகர வருவாய் உயர்வதுடன் வேளாண் பணிகளிலுள்ள இடர்ப்பாடுகளும் குறைகின்றன.

ஐந்தாண்டுகளில் டிராக்டர்கள், பவர் டில்லர்கள், அறுவடை இயந்திரங்கள் முதலிய வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கிட 36 ஆயிரத்து 813 விவசாயிகளுக்கு 86 கோடியே 71 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில், விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் விடுவதற்காக பயன்பாட்டிற்காக, 25 கதிர் அறுவடை

இயந்திரங்கள் மற்றும் 50 டிராக்டர்கள் 5 கோடியே 90 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

உலர் களங்கள்

❖ தானிய விளைபொருட்களில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பினைக் குறைக்கும் வகையில் கிராமங்களில் 2006-07 முதல் 2009-10 வரை 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் 200 உலர்களங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

முந்திரி ஏற்றுமதி மண்டலம்

❖ முந்திரிக்கென கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் 16 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் திருவாளர் சத்துவா அக்ரோ எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தால் 2006-07ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மூலம் ஒரு கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள முந்திரி வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது.

மலர் ஏல மையம்

❖ மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளின் நலனுக்கென திருநெல்வேலி மாவட்டம், காவல் கிணற்றில் 1 கோடியே 63 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் மலர் ஏல மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 2009-2010ஆம் ஆண்டில் சராசரியாக நாளொன்றுக்கு 85 ஆயிரத்து 756 ரூபாய் மதிப்புள்ள 1500 கிலோ மலர்கள் 124 விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

புதிய வணிக வளாகங்கள்

❖ ஒரு கோடி ரூபாய் செலவில் திருப்பூர் மாவட்டம் பொங்கலூரில் வெங்காயத்திற்கென குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம்;

❖ ஒரு கோடி ரூபாய் செலவில் கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கு குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம்;

❖ ஒரு கோடி ரூபாய் செலவில் தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் தக்காளிக்கென குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம்;

❖ ஒரு கோடி ரூபாய் செலவில் தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில் திராட்சைக்கென குளிர்ப்பதன கிட்டங்கி வசதியுடன் கூடிய வணிக வளாகம்;

❖ 4 கோடி ரூபாய் செலவில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டைக்கு அருகில் பொன்னவராயன் கோட்டை, உக்கடை கிராமத்தில் தென்னை வணிக வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது.

❖ சென்னைக்கு அருகில் நாவலூரிலும், மதுரைக்கு அருகில் முக்கம்பட்டியிலும், கோவைக்கு அருகில் பெருந்துறையிலும் காய்கறிகள், பழங்கள் மற்றும் இதர விளைபொருளுக்கு நவீன உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உற்பத்தி பகுதியில் சேகரிப்பு மைய வசதிகளுடன் கூடிய விற்பனை முனையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

❖ சேலம் மாவட்டம் மேச்சேரியில் ஒரு கோடி ரூபாய் செலவில் தக்காளிக்கென குளிர்ப்பதனக் கிட்டங்கி; திருப்பூர் மாவட்டம் பெதப்பம்பட்டியில் தேங்காய்க்கென ஒரு கோடி ரூபாய் செலவில் வணிக வளாகம் ஆகியவற்றுடன் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 10 இடங்களில் ஊரக வணிக மையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

❖ திருச்சி, நாமக்கல் மாவட்டம் மோகனூர், தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம், தேனி மாவட்டம் சின்னமனூர் ஆகிய இடங்களில் தலா

50 இலட்சம் ரூபாய் செலவில் வாழை பழுக்க வைக்கும் நான்கு கூடங்கள்;

❖ கோவை மாவட்டம் காரமடையில் ஒரு கோடி ரூபாய் செலவில் மலைக் காய்கறிகளுக்கென விற்பனை வளாகம்;

❖ மதுரையில் 36 இலட்சம் ரூபாய் செலவில் நெல் வணிக வளாகத்தில் கூடுதல் கடைகள்

- ஆகியவற்றுடன் 7 கோடியே 81 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

❖ மதுரையில் காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்யும் விவசாயிகள் / வியாபாரிகள் பயன்பெறும் வகையில் "காய்கறி வணிக வளாகம்'' 85 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். முதல்கட்டமாக 30 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு

அரசு, தனியார்த் துறை, கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சேவை நிறுவனங்களுடனும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், பாரத வங்கி, அதன் துணை வங்கிகள் ஆகியவற்றுடனும் இணைந்து செயல்பட்டு, தமிழகத்தில் வேளாண் வணிகம் மேம்பட உதவும் தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்புத் திட்டத்தின்கீழ் 132 கோடியே 62 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் முதலீட்டுத் தொகையில் 31 வேளாண் வணிக நிறுவனங்களுக்கு தொழில் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டுத் தொகையாக 12 கோடியே 14 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு மூலம் வழங்கப்பட்டுள்ளது.

கழக அரசின் தொழிற்கொள்கை 2007இல் வேளாண் வளர்ச்சி

விவசாய விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும் பொருட்டும், விவசாயத்தைப் பிற தொழில்களுக்கு இணையாக உயர்த்தும் பொருட்டும், வேளாண்மைக்குப் பல சலுகைகள் உள்ளடக்கிய 'தொழிற் கொள்கை 2007'இல் வகுக்கப்பட்டது. இதில் விவசாயத் தொழில்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. 11வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் வேளாண்மையில் 4 சதவீத வளர்ச்சியினை அடைய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரு கின்றன.

நீர்வள நிலவளத் திட்டம்

உலக வங்கி உதவியுடன் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் பாசன பரப்பினை அதிகரிக்கும் நோக்குடன் தமிழ்நாடு நீர் வள நிலவளத் திட்டம் 63 துணை ஆற்றுப்படுகைகளில் 578 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் 2007-2013 ஆகிய 6 ஆண்டுகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு நடை முறைப்படுத்தப்படுகிறது.

2007-2008ஆம் ஆண்டு முதல் 2010-2011 அக்டோபர் வரை, 76 ஆயிரத்து 444 எக்டர் பரப்பில் 112 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் 55 துணை நீர் வடிநிலப் பகுதிகளில் இத்திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

துணை நீர்வடிநிலப் பகுதி விவசாயிகள் கூடுதல் வருமானம் ஈட்டிட அவர்களிடையே 936 விளைபொருள் குழுக்கள் அமைக்கப்பட்டு, வியாபாரிகளுடன் 558 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன. இதுவரை, 64 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 50 ஆயிரத்து 925 மெட்ரிக் டன் வேளாண் விளை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு 15 ஆயிரத்து 36 விவசாயிகள் 4 கோடியே 58 இலட்சம் ரூபாய் கூடுதல் வருமானமாகப் பெற்று பயன் அடைந்துள்ளனர். உலக வங்கியின் ஆய்வுக்குழு விற்பனைத் துறையின் செயல்பாட்டினை ஆய்வு செய்து பாராட்டியுள்ளது.

குழு முறையிலான அணுகுமுறை

2006-07 முதல் 2008-09 வரை 3432 விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள் ரூ.3.36 கோடி ஒதுக்கீட்டில் 51 ஆயிரத்து 285 விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

2006-2007 மற்றும் 2007-2008ஆம் ஆண்டுகளில் 5 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் 8 ஆயிரத்து 91 பண்ணை மகளிர் குழுக்களுக்கு சுயதொழில் தொடங்க பயிற்சி மற்றும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

2008-2009ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 25 குழுக்களுக்கு, குழுவிற்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் தொழில் தொடங்க 2 கோடியே 19 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிதி உதவி வழங்கப் பட்டுள்ளது. மொத்தத்தில் 10 ஆயிரத்து 116 குழுக்களை சார்ந்த ஏறத்தாழ ஒரு இலட் சத்து 50 ஆயிரம் பண்ணை மகளிர் பயன்பெற்றனர். மேலும் 223 பண்ணை மகளிர் குழுக்கள் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடுவ தன் மூலம் பயன்பெற அக்குழுக்களுக்கு 25 சத மானியத்தில் பண்ணைக் கருவிகள் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

சர்க்கரைத் துறை

சர்க்கரைத் தொழிலினை மேம்படுத்துவதற்கு தனியார்த் துறையில் 9 புதிய சர்க்கரை வளாகங்கள் அமைக்க தமிழக அரசு

அனுமதி அளித்து உள்ளது. அதில் 8 சர்க்கரை ஆலைகள், நிர்மாணப் பணிகளை முடித்து, சர்க்கரை உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

2006-2007 அரவைப் பருவம் முதல் கரும்பு வயலிலிருந்து சர்க்கரை ஆலை வரையான தூரத்திற்குப் போக்குவரத்து வாகனக் கட்டணம் முழுவதையும் ஆலைகளே ஏற்க வேண்டுமென அரசு அறிவித்து நடைமுறைப் படுத்தப்படுகிறது.

மேலும் சர்க்கரை ஆலைகளில், இணைமின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதில் தமிழகம் முன்னோடியாகவுள்ளது. தமிழ் நாட்டில் 19 தனியார் சர்க்கரை ஆலைகளில் 404.19 மெகாவாட் திறனுடைய இணைமின் உற்பத்தி நிலையங்களும், 3 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் சிறிய இணை மின் நிலையங்களும் உள்ளன. 1125 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் 183 மெகாவாட் திறன் கொண்ட இணைமின் உற்பத்தி நிலையங்களை 12 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் அமைக்க தீர்மானித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஓர் ஆண்டிற்கு 960 இலட்சம் லிட்டர்கள் எத்தனால் உற்பத்தி செய்யக்கூடிய 9 எத்தனால் உற்பத்தி நிலையங்கள் மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ளது. எரிசாராய உற்பத்தி பற்றாக்குறையினால் 5 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோல் வழங்கிட இயலாத நிலை உள்ளது. கழிவுப் பாகு உற்பத்தி அதிகரிக்கும் பட்சத்தில், புதியதாக உரிமம் பெற்றுள்ள எரிசாராய நிலையங்கள், உற்பத்தியைத் தொடங்கும்போது 5 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோல் மாநிலத்தில் முழு அளவில் கிடைக்கும். நாளொன்றுக்கு 45 கிலோ லிட்டர் திறனுள்ள எரிசாராயம் மற்றும் எத்தனால் ஆலைகள், செய்யாறு மற்றும் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் தலா 36 கோடி ரூபாய் செலவில் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வருகிறது.

கரும்புச் சாற்றுக் கசண்டு, சர்க்கரை ஆலைகளின் விலை மதிப்புள்ள உப உற்பத்திப் பொருளாகும். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் கரும்புச் சாற்றுக் கசண்டை வடிப்பாலையில் எரிசாராயம் தயாரிக்கப் பயன்படுத்தி வருகின்றன.

இந்த அரசின் சீரிய முயற்சியால் சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 30 கிலோ லிட்டர் எரிசாராய உற்பத்தித் திட்டம் ஆகஸ்ட் 2008இல் தொடங்கப்பட்டது.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை 15.10.2010 அன்று மீண்டும் திறக்கப்பட்டு அடுத்த அரவைப் பருவம் முதல் செயல்படும்.

மத்திய அரசின் பரிசு பெற்ற சர்க்கரை ஆலைகள்

தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பு 2009-2010 சர்க்கரைப் பருவத் திற்கு சிறந்த தொழில்நுட்பச் செயல்திறனுக் காக தமிழகத்தைச் சேர்ந்த சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை, கரும்பு மேம்பாட்டிற்காக சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நிதி மேலாண்மைக்காக செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகியவற்றிற்கு முதல் பரிசு வழங்கிப் பாராட்டியுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

தமிழக வேளாண்மை வளர்ச்சியில் வேளாண் கல்வி, வேளாண் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு 1971ஆம் ஆண்டில் நான் முதலமைச் சராக இருந்தபோது தமிழகத்தில் உருவாக்கிய வேளாண்மைப் பல்கலைக் கழகம், 7 வளாகங்களில் அமைந்துள்ள 10 கல்லூரிகள், 36 ஆராய்ச்சி நிலையங்கள், 14 வேளாண்மை அறிவியல் மையங்கள் மூலமாக பெரிதும் தொண்டாற்றி வருகிறது.

வேளாண்மைத் தொழிலை வாழ்வாதாரமாக கொண்டுள்ள விவசாயிகள் நிறைந்த நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சை மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் பெரிதும் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தோடு, நாகை மாவட்டத்தில் உள்ள கீவளூரில் புதிதாக வேளாண்மைக் கல்லூரியும் - வேளாண்மை யின் எதிர்காலம் என்று கருதப்படும் தோட்டக் கலைக்கென தனியே "தோட்டக்கலை பல்கலைக் கழகம்" ஒன்றை கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் இந்த ஆண்டு தொடங்க வுள்ளது.

தமிழக விவசாயிகளின் தேவைக்கேற்ப ஐந்தாண்டுகளில் 56 புதிய பயிர் இரகங்கள், 20 பண்ணைக் கருவிகள், 20

மேலாண்மைத் தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை உருவாக்கி வெளியிட்டு வேளாண்மை உற்பத்தி பெருகிட உதவியுள்ளது.

வேளாண் அலுவலர்கள் பணி நியமனம்

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்திலே அமைந்த போதெல்லாம் இவ்வாறு வேளாண் மக்களுக்கு சலுகைகளையும், திட்டங்களையும் வழங்கியது போலவே, வேளாண்மை அலுவலர்களுக்கு அடுக்கடுக்கான பல உதவிகளை செய்து வருகிறது என்பதை 24-11-2010 அன்று சென்னையிலே நடைபெற்ற அவர்களது மாநாட்டிலேயே என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

1972ஆம் ஆண்டு கழக ஆட்சியிலேதான் வேளாண்மை அலுவலர்களுக்கு கெஜட்டட் தகுதியே வழங்கப்பட்டது. 1989ஆம் ஆண்டு கால்நடை உதவி மருத்துவர், உதவிப் பொறியாளர்களுக்கு இணையாக வேளாண்மை அலுவலர்களுக்கு ஊதியம் அளிக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த 131 உதவி ஆசிரியர்களுக்கு காலமுறை ஊதியமளித்து உதவிப் பேராசிரியர் களாக பணி நியமனம் செய்யப்பட்டது. 2007ஆம் ஆண்டு துறை மறு சீரமைப்பில் 509 வேளாண்மை அலுவலர்கள் பணி இடங்களை உதவி வேளாண்மை இயக்குநர்களாகவும் - 512 உதவி விதை அலுவலர் பணி இடங்களை துணை வேளாண்மை அலுவலர்களாகவும் - 514 உதவி வேளாண்மை அலுவலர் பணி இடங்களை உதவி விதை அலுவலர்களாகவும் - அதே போல 399 உதவி மண்வளப் பாதுகாப்பு அலுவலர் பணி இடங்களை இளநிலைப் பொறியாளர்களாகவும் - பொறியியல் பட்டம் பெற்ற 54 உதவி மண்வளப் பாதுகாப்பு அலுவலர் பணி இடங்களை உதவிப் பொறியாளர்களாகவும் தரம் உயர்த்தி பதவி உயர்வும் அளிக்கப்பட்டது. பணி நியமனத் தடைச் சட்டத்தை நீக்கி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 338 உதவிப் பேராசிரியர்கள், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகளில் 540 வேளாண்மை அலுவலர்கள், 47 தோட்டக்கலை அலுவலர்கள், 1707 உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆக மொத்தம் 2632 பணி இடங்களுக்கு நேரடி நியமனமும், வேளாண் துறையில் 3544 அலுவலர்களுக்கு பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தின் பொறுப்பிலுள்ள இந்தத் துறையின் சார்பாக அதிகாரிகளின் ஒத்துழைப்போடு செய்யப்பட்டுள்ள சாதனைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளேன். நீ படிப்பதோடு மட்டும் இருந்து விடாமல் இவ்வளவு சாதனைகள் விவசாயப் பெருங்குடி மக்களுக்காக இந்த ஐந்தாண்டு காலத்தில் செய்யப்பட்டுள்ளன என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்திடவும் தவறாதே!

அன்புள்ள,

மு.க.

05-03-2011

3533. கமழும் கல்வி நீரோடை!

உடன்பிறப்பே,

“தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு”

என்ற அய்யன் வள்ளுவரின் கூற்றுப்படி, அறிவைத் தரும் கல்வித் துறையில் கழக அரசு ஆற்றிய சாதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல. கல்வித் துறை ஒரே துறையாகவும், ஒரே அமைச்சரின் கீழும் செயலாற்றியதை மாற்றி, அதனை இரண்டு துறையாக அமைத்ததும் கழக அரசுதான்; கல்விக்காக இரண்டு அமைச்சர்களை நியமித்ததும் கழக அரசுதான். இது ஒன்றிலிருந்தே இந்தத் துறைக்காக கழக அரசு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

உயர் கல்விக்கென தனி அமைச்சகம்

❖ 2006க்கு முன்னர் ஒரே அமைச்ச கத்தின் கீழ் செயல்பட்டு வந்த கல்வித்துறை என்பது 2006இல் பள்ளிக் கல்வித்துறை எனவும், உயர்கல்வித்துறை எனவும் தனித் தனித் துறைகளாகப் பிரிக்கப்பட்டு; உயர் கல்விக்கெனத் தனி அமைச்சகமும் புதிதாக ஏற்படுத்தப்பட்டது.

நுழைவுத் தேர்வு இரத்து

❖ கிராமப்புற மற்றும் ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தேவையற்ற ஒரு சுமையாகவும், செலவு மிக்கதாகவும் இருந்த தொழிற்கல்வி படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வு

5-3-2007 அன்று பிறப்பிக்கப்பட்ட சட்டத்தின் மூலம் இரத்து செய்யப்பட்டது.

நுழைவுத் தேர்வு இருந்தபோது, 2006இல் பொறியியல் கல்லூரிகளில் ஒற்றைச் சாளர முறையின் மூலம் சேர்ந்த கிராமப்புற மாணவர் எண்ணிக்கை 24,670 மட்டுமே. நுழைவுத் தேர்வு இரத்து

செய்யப்பட்டபின், பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்த கிராமப்புற மாணவர்களின் எண்ணிக்கை 2007இல் 34 ஆயிரத்து 69 எனவும், 2008 இல் 50 ஆயிரத்து 589 எனவும், 2009 இல் 54 ஆயிரத்து 73 எனவும், 2010 இல் 76 ஆயிரத்து 73 எனவும் அதிகரித்தது.

2006இல் நுழைவுத் தேர்வு இருந்தபோது, தமிழ்வழியில் +2 பயின்ற 11 ஆயிரத்து 799 மாணவர்கள் மட்டுமே ஒற்றைச் சாளர முறையின் மூலம் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்தனர்; நுழைவுத்தேர்வு இரத்து செய்த பிறகு, இந்த மாணவர்கள் எண்ணிக்கை 2007 இல் 19 ஆயிரத்து 966 எனவும், 2008 இல் 34 ஆயிரத்து 39 எனவும், 2009 இல் 35 ஆயிரத்து 434 எனவும், 2010 இல் 54 ஆயிரத்து 460 எனவும் அதிகரித்து; தமிழ்வழிக் கல்வியில் பயின்ற மாணவர்கள் அதிக அளவில் பயன் பெற்றனர்.

➢ 2008-2009ம் கல்வியாண்டு முதல் பொறியியற் கல்லூரி மாணவர் சேர்க்கை கலந்தாய்வில் பங்கேற்க வரும் மாணவர் மற்றும் உதவிக்காக வரும் ஒருவருக்கு 50 சதவீத இருவழிப் பயணக் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது;

➢ 2008-2009ம் ஆண்டு முதல் பொறியியற் கல்லூரிகளில் முன்னாள் இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 81 இடங்கள் என்பதை 150 இடங்கள் எனவும், விளையாட்டு வீரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 42 இடங்கள் என்பதை 100 எனவும் உயர்த்தப்பட்டுள்ளன.

➢ தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகத்தின் பரிந்துரையுடன் சமுதாயக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் 2008-2009ஆம் கல்வியாண்டிலிருந்து ஆண்டு தோறும் 10,000 மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

➢ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினை பெற்றுத்தரும்பொருட்டு, கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் மாணவர் பணியமர்த்துதல் மையம் ஒன்று தொடங்கப் ட்டுள்ளது.

கல்விக் கட்டணம் இரத்து

❖ 2006ஆம் ஆண்டு வரையில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப்படிப்பு

பயின்ற மாணவர்கள் 500 ரூபாய் முதல் 750 ரூபாய் வரையில் கல்விக்கட்டணமாகச் செலுத்தி படிக்க வேண்டிய நிலை இருந்தது. 2007-2008 ஆம் ஆண்டு முதல் இக்கல்விக் கட்டணத்தைக் கழக அரசு இரத்து செய்தது. அதன் விளைவாக 2007-2008ஆம் ஆண்டிலிருந்து 2010-2011ஆம் ஆண்டு வரையில் பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 14 இலட்சத்து 59 ஆயிரத்து 990 ஆகும்.

❖ 2010-2011ஆம் கல்வியாண்டு முதல், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் முழுமையாக இரத்து செய்யப்பட்டு; அரசு கலைக் கல்லூரிகளில் பயிலும் 12 ஆயிரத்து 784 பட்டமேற்படிப்பு மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

❖ அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் ஈ.வெ. ரா. நாகம்மையார் நினைவு ஏழை மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டத்தின் பயன் 2007-2008 ஆம் ஆண்டு முதல் பட்ட மேற்படிப்புவரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இச்சலுகை பெற பெற்றோரின் ஆண்டுவருமான வரம்பு 24 ஆயிரம் ரூபாய் என்பது 2006-2007 முதல் 50 ஆயிரம் ரூபாயாகவும்; நடப்பு ஆண்டு முதல் ஒரு இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப் பட்டுள்ளது.

❖ 2007 ஆம் ஆண்டு வரையில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயின்ற மாணவர்கள் செலுத்தி வந்த 2,500 ரூபாய் கல்விக்கட்டணம் 2008-2009ஆம் ஆண்டு முதல் இரத்து செய்யப்பட்டு; 2010-2011ஆம் ஆண்டு வரையில் 63 ஆயிரத்து 192 மாணவ மாணவியர் பயனடைந்தனர்.

❖ அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் மற்றும் உயர்கல்வித் துறையின்கீழ் இயங்கும் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாற்றுத் திறனாளிகளுக்குக் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக் களிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் பொது நிவாரண நிதியுதவி

❖ பொறியியற் கல்லூரிகளில் பயிலும் 627 ஏழை மாணவர்களுக்கு, தமிழக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் 1 கோடியே 56 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரிகளில் இணையதள வசதி

❖ அரசுக் கல்லூரி மாணவர்களின் வேலை வாய்ப்புகளுக்கு வழிவகுத்திட அகல்கற்றை யுடன் கூடிய இணையதள வசதிகள் (Internet with broadband facilities) மத்திய அரசின் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உதவியுடன் அரசுக் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2 கோடியே 98 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய்ச் செலவில் 27 அரசுக் கல்லூரிகளுக்கு 681 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் முன்னோடித் திட்டம்

❖ சென்னை மாநிலக் கல்லூரியின் மாலை நேரப் பகுதிப் பிரிவில் 2007-2008 கல்வியாண்டு முதல் இந்தியாவிலேயே ஒரு முன்னோடித் திட்டமாக செவித் திறன் குறைந்தோர்க்கு தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பி.காம். (பொது), பி.சி.ஏ. (கணினி பயன்பாடு) ஆகிய பட்டப் படிப்புகள் தொடங்கப்பட்டன.

சுயநிதி பாடப்பிரிவுகள் பொதுப்பாடப் பிரிவுகளாக மாற்றம்

❖ அரசு பொறியியற் கல்லூரிகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுயநிதி பாடப்பிரிவுகள் அனைத்தும் பொதுவகை பாடப்பிரிவுகளாக மாற்றப்பட்டு, கல்விக் கட்டணம் குறைந்து, ஏழை மாணவர்கள் உயர்கல்வி தொடர வழிவகுக்கப்பட்டுள்ளது.

கல்விக் கட்டணம் குறைப்பு

❖ 2006ஆம் ஆண்டு வரையில் அரசு பொறியியல் கல்லூரி மாணவ மாணவியர் செலுத்தி வந்த கல்விக் கட்டணம் 12,550 ரூபாய் 2006-2007ஆம் ஆண்டு முதல் 7,550 ரூபாயாகக் குறைக்கப்பட்டது.

முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்குக் கல்விக் கட்டணச் சலுகை

❖ இந்தியாவிலேயே முதன்முறையாக 2010-2011 ஆம் கல்வியாண்டு முதல், பட்டதாரிகள் இல்லாத குடும்பத்திலிருந்து கலந்தாய்வு முறையில் தொழிற்கல்வி பட்டப்படிப்புகளில் சேரும் முதல் தலைமுறை மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் இரத்து செய்யப்பட்டு; அரசுக்கு 168 கோடி ரூபாய் கூடுதல் செலவில்

பொறியியல் கல்லூரிகளில் முதலாமாண்டில் சேர்ந்து பயிலும் 67,405 மாணவ மாணவியரும்; இரண்டாம் ஆண்டு நேரடி சேர்க்கையில் (Lateral Entry) சேர்ந்து பயிலும் 10,750 மாணவ மாணவியரும் பயனடைந்தனர்.

பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான மதிப்பெண் குறைப்பு

❖ பொறியியல் கல்லூரிகளில் மேலும் அதிக மாணவர்கள் சேர்ந்து பயில்வதற்கு உதவும் வகையில் 2008-2009 ஆம் ஆண்டு முதல், பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கானக் குறைந்தபட்ச மதிப்பெண்களைக் கழக அரசு அனைத்துப் பிரிவினருக்கும் குறைத்தது. அதாவது, பொதுப்பிரிவினர்க்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த மதிப்பெண்கள் 55 விழுக்காடு என்பதை 50 விழுக்காடு எனவும்;

❖ பிற்படுத்தப்பட்ட கிறித்துவ வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் வகுப்பினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த மதிப்பெண்கள் 50 விழுக்காடு என்பதை 45 விழுக்காடு எனவும்;

❖ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்க்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த மதிப்பெண்கள் 45 விழுக்காடு என்பதை 40 விழுக்காடு எனவும்;

❖ பட்டியல் இனத்தவர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர்க்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த தேர்ச்சி இருந்தால் போதும் என்பதை 35 விழுக்காடு எனவும் இந்த அரசு குறைத்ததால் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கும் மாணவ மாணவியர் எண்ணிக்கை அதிகரித்தது.

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகம்

❖ 2007-2008 ஆம் ஆண்டு முதல் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கணிதம், வேதியியல் மற்றும் இயற்பியல் பாடங்களுக்கான பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு; 2010-2011 ஆம் ஆண்டு வரை 33,250 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

இலவசப் பயணப் பேருந்து அட்டை

❖ 2006ஆம் ஆண்டு வரை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்குச் சலுகைக் கட்டணத்தில்தான் பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டன.

ஆனால், 2007-2008ஆம் ஆண்டு முதல் கழக அரசினால், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பயணப் பேருந்து அட்டைகள் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு; 2009-2010ஆம் ஆண்டு வரையில், 4,35,356 மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கலந்தாய்வு முறையில் மாணவர் சேர்க்கை

❖ 2006ஆம் ஆண்டு வரை ஒரு கல்லூரியில் சேர்க்கைபெற ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டிய நிலை இருந்தது.

2007-2008ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு கல்லூரியையும் தனி அலகாகக் கொண்டு ஒரு மாணவன் தான் விரும்பும் பாடப்பிரிவுகளைக் குறிப்பிட்டு ஒரேயொரு விண்ணப்பம் அளித்தால் போதுமானது என ஆணையிடப்பட்டு; அதன்படி, மாணவர்களின் தகுதி அடிப்படையில் அவர்கள் விரும்பும் பாடப் பிரிவு கலந்தாய்வு முறையில் ஒதுக்கீடு செய்யப்படும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு பெற்றோரும் மாணவரும் பெரும் பயன் எய்தி வருகின்றனர்.

2007-2008ஆம் ஆண்டு முதல் அனைத்துக் கல்வியியல் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கையில் மாநில அளவில் ஒற்றைச்சாளர முறை அறிமுகப்படுத்தப்பட்டு; கலந்தாய்வு மூலம் மாணவ மாணவியர் சேர்க்கப் படுகின்றனர்.

மாற்று முறை

❖ 2006-2007ஆம் ஆண்டு முதல் அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் மாற்று முறை (Shift System) நடைமுறைப்படுத்தப்பட்டு; ஆண்டுதோறும் ஏறத்தாழ 11

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கூடுதலாகச் சேர்ந்து பயனடைந்துள்ளனர்.

❖ 2009-2010ஆம் ஆண்டு முதல் அரசு பல வகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் மாற்று முறைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு; ஆண்டு தோறும் 3000க்கும் அதிகமாக மாணவர்கள் கூடுதலாகச் சேர்ந்து பயனடைகின்றனர்.

❖ 2006க்கு முன்னர் சிறுபான்மை பொறியியல் கல்லூரிகளில் 30 விழுக்காடு இடங்களும், சிறுபான்மை அல்லாத கல்லூரிகளில் 50 விழுக்காடு இடங்களும் அரசு ஒதுக்கீட்டு இடங்களாக இருந்தன. சுயநிதி பொறியியல் கல்லூரி நிர்வாகத்தினருடன் அரசு நடத்திய பேச்சுவார்த்தையின் விளைவாக 2006-2007 ஆம் ஆண்டு முதல் அரசு ஒதுக்கீட்டு இடங்கள் சிறுபான்மை பொறியியல் கல்லூரிகளில் 50 விழுக்காடு இடங்கள் எனவும், சிறுபான்மை யல்லாத கல்லூரிகளில் 65 விழுக்காடு இடங்கள் எனவும் நிர்ணயிக்கப்பட்டு; ஏழை எளிய மற்றும் கிராமப்புற மாணவர்கள் அதிக அளவில் பயன் பெறுகின்றனர். அதாவது,

❖ 2005-2006இல் சிறுபான்மைப் பொறியியல் கல்லூரிகளில் 7,112 மாணவ மாணவியரும், (30 விழுக்காடு) சிறுபான்மை அல்லாத பொறியியல் கல்லூரிகளில் 16,621 மாணவ மாணவியரும் (50 விழுக்காடு) மட்டுமே சேர்ந்து பயன்பெற்ற நிலையில்;

2006இல் கழக அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக 2006-2007இல் சிறுபான்மை பொறியியல் கல்லூரிகளில் 10,283 மாணவ மாணவியர் (50 விழுக்காடு) சிறுபான்மை அல்லாத பொறியியல் கல்லூரிகளில் 23,287 மாணவ மாணவியர் (65 விழுக்காடு)

2007-2008இல் சிறுபான்மைப் பொறியியல் கல்லூரிகளில் 14,010 மாணவ மாணவியர்; சிறுபான்மையல்லாத பொறியியல் கல்லூரிகளில் 31,989 மாணவ மாணவியர்;

2008-2009இல் சிறுபான்மைப் பொறியியல் கல்லூரிகளில் 16,526 மாணவ மாணவியர்; சிறுபான்மை அல்லாத பொறியியல் கல்லூரிகளில் 48,149 மாணவ மாணவியர்;

2009-2010இல் சிறுபான்மை பொறியியல் கல்லூரிகளில் 16,851 மாணவ மாணவியர்; சிறுபான்மை அல்லாத பொறியியல் கல்லூரிகளில் 50,219 மாணவ மாணவியர்;

2010-2011இல் சிறுபான்மை பொறியியல் கல்லூரிகளில் 20,203 மாணவ மாணவியர்; சிறுபான்மை அல்லாத பொறியியல் கல்லூரிகளில் 71,629 மாணவ மாணவியர் பயன் பெற்றனர்.

அரசு பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை இடங்கள் அதிகரிப்பு

❖ அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு நிதியுதவியுடன் நடைபெறும் பல்கலைக் கழக உறுப்புப் பொறியியல் கல்லூரிகளில் 2005-2006ஆம் கல்வியாண்டில் 4,917 ஆக இருந்த மாணவர் எண்ணிக்கை, கழக அரசு தொடங்கிய பொறியியல் கல்லூரிகளால் 2010-2011ஆம் கல்வியாண்டில் 12,142ஆக அதிகரித்தது.

தமிழ் வழியில் பொறியியல் பட்டப்படிப்பு

❖ 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோயம்புத்தூரில் நடைபெற்ற சிறப்பு வாய்ந்த தருணத்தில், அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்களில் கட்டுமானவியல், இயந்திரவியல் ஆகிய பாடப்பிரிவுகளில் மாணவர்கள் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தாய்மொழியில் கற்க - தமிழ்மொழி மூலமாகக் கற்க வகைசெய்து இந்த அரசு ஆணையிட்டு; இந்த ஆண்டில் இப்பாடப் பிரிவுகளில் 2010-2011இல் நிர்ணயிக்கப்பட்ட 1,400 இடங்களில் 1,378 மாணவர்கள் தமிழ்வழிப் பொறியியல் வகுப்புகளில் சேர்ந்துள்ளனர்.

❖ 2009-2010ஆம் கல்வியாண்டுவரை, பொறியியல் பட்டப்படிப்புக்கான பல்கலைக்கழக வினாத்தாள்கள் ஆங்கிலத்தில் மட்டுமே வழங்கப்பட்டு; விடைகளும் ஆங்கிலத்தில் மட்டுமே எழுதப்படவேண்டும் என்று இருந்த நிலையை மாற்றி, 2010-2011ஆம் ஆண்டு முதல், ஆங்கிலம் அல்லது தமிழில் வினாத் தாள்கள் வழங்கவும், விடைகளை ஆங்கிலம் மற்றும் தமிழில் எழுதும் முறையை அறிமுகப்படுத்தவும் பல்கலைக்கழகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் 12ஆம் வகுப்பினை தமிழ்வழியில் படித்து, பொறியியல் கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு நல்ல பயனை அளிப்பதாக அமைந்துள்ளது.

இளங்கலைப் பட்டப்படிப்பில் தமிழை கட்டாயமாக ஒரு பாடமாக பயிலுதல்

❖ இளங்கலை மற்றும் இளம் அறிவியல் பட்டப்படிப்புகளில் தமிழை ஒரு பாடப் பிரிவாகப் படிக்காமலேயே இளங்கலை மற்றும் இளம் அறிவியல் பட்டங்களைப்பெற முடியும் என இதுவரை இருந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் 2008-2009 ஆம் ஆண்டில் இளங்கலை பட்டப்படிப்பில் தமிழைக் கட்டாய மாக ஒரு பாடமாக எடுத்து அதில் தேர்ச்சி பெற வேண்டும் என ஆணையிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கல்லூரிகளில் செம்மொழி பாடத்திட்டம் அறிமுகம்

❖ "தமிழகத்தின் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களில், தமிழ்ச் செம்மொழி என்ற தலைப்பு அடுத்த கல்வியாண்டு முதல் இடம் பெறுவதற்கு ஆவன செய்யப்படும்" எனக் கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கேற்ப; செம்மொழிப் பாடத் திட்டம் பல்கலைக் கழகங்களின் வரம்புக்குட்பட்ட கல்லூரிகளில் 2010-2011 (இரண்டாம் பருவம்) முதல் பி.காம். பி.சி.ஏ, பாடப்பிரிவுகள் நீங்கலாக அனைத்துப் பாடப் பிரிவுகளிலும்; 2011-2012 முதல் பி.காம். பாடப் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

புதிய பொறியியல் கல்லூரிகள் / பல்கலைக் கழகங்கள்

❖ நாடு சுதந்திரம் அடைவதற்குமுன் அரசு சார்பில் 2 பொறியியல் கல்லூரிகள் மட்டுமே செயல்பட்டுவந்தன; 2005-2006ஆம் ஆண்டு வரை 6 பொறியியற் கல்லூரிகள்தான் செயல் பட்டன.

❖ 2001 முதல் 2006 வரை ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் புதிதாக அரசுப் பொறியியல் கல்லூரி ஒன்றுகூட தொடங்கப்பட வில்லை.

❖ ஆனால், 2006இல் கழக அரசு பொறுப்பேற்றபின், ஐந்தாண்டுகளில் திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, திருக்குவளை, இராமநாதபுரம், அரியலூர், ஆரணி, பட்டுக் கோட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, நாகர் கோவில், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் 12 புதிய பொறியியல் கல்லூரிகள்

அண்ணா பல்கலைக் கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாகத் தொடங்கப்பட்டு தற்போது 18 அரசு பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

அரசு கல்லூரிகளுக்கு முன்னர் இருந்த தகுதியினை மீளவும் அளித்தல்

❖ அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகள் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக முந்தைய அரசால் மாற்றப்பட்டன. இத்திட்டத்தில் எதிர்பார்த்த பயன்களை அடைய முடியவில்லை. இதனால் நிலவி வந்த குழப்பமான சூழ்நிலைகளை சரிசெய்யும் முகத்தான் அரசு கல்லூரிகளுக்கு முன்னர் இருந்த தகுதியினை மீளவும் அளிப்பதென இந்த அரசு முடிவு செய்தது. அதனடிப்படையில், அனைத்து உறுப்புக் கல்லூரிகளும் இனிமேல் மீண்டும் முழு அளவிலான அரசு கல்லூரிகளாக செயல்படுவதற்காக சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகச் சட்டங்கள் திருத்தப்பட்டன.

(தொடர்ச்சி நாளை)

அன்புள்ள,

மு.க.

06.03-2011

3534. கமழும் கல்வி நீரோடை - 2

உடன்பிறப்பே,

“குஞ்சி அழகும், கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவுநிலை மையால் கல்வி அழகே அழகு” என்று சொல்லும் நாலடியார் வரிகளுக்கிணங்க, நம்முடைய கழக அரசு பள்ளிக் கல்வித் துறையில் செய்த சாதனைகளின் சுருக்கம் இதோ :-

2005-2006இல் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பள்ளிக் கல்வித்துறைக்கான நிதி ஒதுக்கீடு 4 ஆயிரத்து 348 கோடியே 1 இலட்ச ரூபாய்;

ஆனால் 2010-2011 கழக அரசு காலத்தில் பள்ளிக் கல்வித்துறைக்கான நிதி ஒதுக்கீடு 10 ஆயிரத்து 147 கோடியே 56 இலட்ச ரூபாய்; மேலும் 2011-2012ஆம் ஆண்டிற்கான இடைக் கால வரவு-செலவுத் திட்டத்தில் பள்ளிக் கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகை 12 ஆயிரத்து 674 கோடி ரூபாய்;

குடியிருப்புகளுக்கு அருகில் பள்ளிகளை அமைத்து 100 விழுக்காடு மாணவர் சேர்க்கையினை உறுதிப்படுத்திட 569 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டதுடன் 2626 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 645 நடுநிலைப் பள்ளிகள் உயர் நிலைப் பள்ளிகளாகவும், 570 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப் பட்டுள்ளன. அண்மையில் மேலும் 344 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2001-2006 அ.தி.மு.க. அரசின் ஐந்தாண்டுக் கால ஆட்சியில் 45 ஆயிரத்து 987 ஆசிரியர்கள் தொகுப்பூதியத்தில் அதாவது அவர்கள் பெற வேண்டிய ஊதியத்தில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு ஊதியம் பெறும் நிலையில் நியமிக்கப்பட்டனர்.

2006இல் பொறுப்பேற்ற திராவிட முன்னேற்றக்கழக அரசு அந்த 45 ஆயிரத்து 987 ஆசிரியர்களுக்கும் 1.6.2006 முதல் காலமுறை ஊதியம் வழங்கி ஒவ்வொரு ஆசிரியரும் தாம் பெற்றுவந்த ஊதியத்தைவிட மூன்று மடங்கு அதிகம்பெற்று மகிழ ஆணையிட்டு நடை முறைப்படுத்தியது.

அத்துடன், 2006க்குப்பின் தொடக்கக் கல்வித்துறையில் 12 ஆயிரத்து 426 இடைநிலை ஆசிரியர்கள், 14 ஆயிரத்து 115 பட்டதாரி ஆசிரியர்கள் என 26 ஆயிரத்து 541 ஆசிரியர்களும்;

பள்ளிக் கல்வித் துறையில் 70 இடைநிலை ஆசிரியர்கள், 17 ஆயிரத்து 45 பட்டதாரி ஆசிரியர்கள், 4 ஆயிரத்து 665 ஆசிரியர் பயிற்றுநர்கள், 3002 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள், 525 தமிழாசிரியர்கள், 1131 சிறப்பாசிரியர்கள் 140 தொழில் ஆசிரியர்கள், 1,686 கணினி ஆசிரியர்கள் என 27 ஆயிரத்து 739 ஆசிரியர்களும்,

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் 216 விரிவுரையாளர்களும், 32 முதுநிலை விரிவுரையாளர்களும்

-என மொத்தம் 55 ஆயிரத்து 53 ஆசிரியர்கள் நேரடி நியமனம் மூலமாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்;

ஆசிரியர் அல்லாத 1140 பணியாளர்களும் கருணை அடிப்படையில் 449 பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர, அரசு மேல்நிலைப் பள்ளிகளில் விவசாயம் கற்பிக்க 176 விவசாயப் பயிற்றுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

70 குழந்தைகளுக்கு மேல் பயிலும் 1400 தொடக்கப் பள்ளிகளுக்கு மூன்றாவது ஆசிரியப் பணியிடங்கள் 12.9.2009 அரசாணையின்படி அனுமதிக்கப்பட்டு; பணி நியமனம் செய்யப் பட்டனர்.

2006 ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் ஆசிரியர் கல்வித் தகுதி பெற்ற 1114 மாற்றுத் திறனாளிகள் முன்னுரிமை அடிப்படையில் ஆசிரியர்களாக அரசுப்பள்ளிகளில் நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

1999 ஆம் ஆண்டு மே மாதம் வரை அரசு அங்கீகாரம் பெற்று செயல்படும் சிறுபான்மை மற்றும் சிறுபான்மையல்லாத பள்ளிகளுக்கு ஆண்டுக்கு 331 கோடி ரூபாய்ச் செலவில் 11,307 ஆசிரியர் பணியிடங்களும், 648 ஆசிரியர் அல்லாத பணியிடங்களும் பிப்ரவரி 2011-ல் அனுமதிக்கப்பட்டது. இந்த ஆணையை வரவேற்று சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ் மற்றும் திரு.மு.அப்பாவு ஆகியோர் தலைமையில், தமிழ்நாடு கிறித்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் திரு. இனிகோ இருதயராஜ், இ.சி.ஐ. பேராயர் எஸ்றா சற்குணம், சென்னை-மயிலை உயர்மாவட்ட பேராயர் திரு.ஏ.எம். சின்னப்பா, தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் திரு.வின்சென்ட் சின்னதுரை, தமிழ்நாடு சிறுபான்மை மேம்பாட்டுக் கழகத் தலைவர் திரு.சேவியர் அருள்ராஜ் உள்ளிட்ட கிறித்துவ சமுதாயப் பிரதிநிதிகளும், சிறுபான்மை மற்றும் சிறுபான்மையல்லாத சமுதாயத்தைச் சார்ந்த பெருமக்களும் என்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்து நன்றி தெரிவித்து - நமது கழக அரசுக்கு ஆதரவுடன் என்றென்றும் நாங்கள் இருப்போம் என்று உணர்ச்சி பொங்க தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

பொருளாதாரம், வணிகவியல் பாடங்களில் பட்டம் பெற்று பி.எட். பட்டம் பெற்றவர்களுக்கும் நடுநிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களாகவும், பட்டதாரி ஆசிரியர்களாகவும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

ஆசிரியர் பணியிட மாற்றங்கள் அனைத்தும் ஒளிவு மறைவற்ற கலந்தாய்வு மூலமே நடத்தப்பட்டு ஆசிரியர் சமுதாயத்தின் வரவேற்பினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

மாற்றுத் திறன் கொண்ட மாணவர்களுக்கான கல்வித் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்திட முதன்மைக் கல்வி அலுவலர் நிலையில் துணை இயக்குநர் பணியிடம் ஒன்று பள்ளிக் கல்வி இயக்ககத்தில் புதிதாக உருவாக்கப்பட்டது.

31 முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கான நேர்முக உதவியாளர் பணியிடங்கள் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் நிலையில் தோற்று விக்கப்பட்டன.

பள்ளிக் கல்வித்துறை வரலாற்றில் முதன் முறையாக 67 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்கள் 2009-2010ஆம் ஆண்டில் நேரடி நியமனம் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்பட்டன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு 2009ஆம் ஆண்டில் மாவட்டக் கல்வி அலுவலகமும், 2010 ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூரில் புதிய மாவட்டக் கல்வி அலுவலகமும் புதிதாக ஏற்படுத்தப்பட்டது.

புதிதாக உருவாக்கப்பட்ட அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கென தனியே மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகமும், தொடக்கக் கல்வி அலுவலகமும் உருவாக்கப்பட்டுள்ளன.

தர்மபுரி மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் 2007 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு அரசு மின்கட்டணம்

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கான மின்கட்டணங்களைக் கல்வித்துறை மூலம் செலுத்திட 4.7.2008 அன்று ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி 2008-2009 இல்

2 கோடியே 97 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய்; 2009-2010இல் 2 கோடியே 56 இலட்சத்து

17 ஆயிரம் ரூபாய், 2010-2011இல் 2 கோடியே

50 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

18299 தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் 2 கோடியே 35 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

16 மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு மாவட்டத்திலுள்ள பள்ளிகளைப் பார்வையிடும் பொருட்டு புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கட்டட வசதி

பள்ளிக் கல்வித்துறையில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம், தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 751 கோடியே 28 இலட்ச ரூபாய்ச் செலவில் 30 ஆயிரத்து 68 வகுப்பறைகள் கட்டப்பட்டன.

நபார்டு நிதியுதவியில் 1002 கோடியே 25 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய்ச் செலவில் 1153 உயர்நிலை-மேல்நிலைப் பள்ளிகளில் 16 ஆயிரத்து 980 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் அவற்றிற்கான இருக்கை வசதிகள்; 843 அறிவியல் ஆய்வுக் கூடங்கள், 4047 கழிவறைகள், 968 குடிநீர்த் திட்டங்கள், 3 இலட்சத்து 35 ஆயிரத்து 37 மீட்டர் நீளச் சுற்றுச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாகை, கடலூர், நெல்லை ஆகிய மூன்று மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கும் தலா 17 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் வீதம் 53 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய்ச் செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டன.

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி, திருப்பூர் மாவட்டம் அவினாசி, திருவண்ணா மலை மாவட்டம் மேற்கு ஆரணி, சிவகங்கை மாவட்டம் காளையார் கோயில், வேலூர் மாவட்டம் நெமிலி, நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், இராமநாத புரம் மாவட்டம் பரமக்குடி, காஞ்சிபுரம் மாவட்டம் சிறுகாவேரிப் பாக்கம், புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி, தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம், திருச்சி மாவட்டம் மணிகண்டம், சேலம் மாவட்டம் தலைவாசல், ஈரோடு மாவட்டம் மூலனூர், மதுரை மாவட்டம் மதுரை வடக்கு, தொப்பம்பட்டி, ஈரோடு மாவட்டம் காங்கேயம், விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி, பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை, தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஆகிய இடங்களில்

19 உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு தலா 15 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் வீதம் 2 கோடியே 98 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய்ச் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

பள்ளி சீரமைப்பு மாநாடுகள்

கடந்த 5 ஆண்டுகளில் 22 மாவட்டங்களில் பள்ளி சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டு - 970 கோடி ரூபாய்க்கு அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் பொதுமக்களிடமிருந்து நன் கொடையாகப் பள்ளிகளுக்குப் பெறப்பட்டுள்ளது.

2007-2008ஆம் ஆண்டில் 1 முதல் 4 ஆம் வகுப்புகளில் செயல்வழிக் கற்றல் முறை அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் 8ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்பட்டது.

தமிழகத்தில் செயல்படும் 36 ஆயிரத்து 150 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு செயல்வழிக்கற்றல் மற்றும் படைப்பாற்றல் கல்வி முறையில் மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டினை உறுதி செய்ய 26 கோடி ரூபாய் செலவில் வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் டிவிடி பிளேயர்கள் வழங்கப்பட்டுள்ளன.

46 கோடி ரூபாய்ச் செலவில் 6,7,8 ஆம் வகுப்புகளில் பயிலும் 9 இலட்சத்து 24 ஆயிரத்து 490 குழந்தைகளுக்கு இருக்கை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

கழக அரசு சத்துணவுடன் வாரம்

5 முட்டைகள், இலவச பஸ் பாஸ், தமிழ்வழிப் பயிலும் மாணவர்க்குச் சிறப்புக் கட்டணம் ரத்து, படிப்புக் கட்டணம் ரத்து, தேர்வுக் கட்டணம் ரத்து என்பன போன்ற சலுகைகளை வழங்கியதால் பள்ளிகளில் படிப்பைவிட்டு இடைநிற்றல் விகிதம் வெகுவாகக் குறைந்தது. 2001-2002இல் தொடக்கக் கல்வியில் 12 விழுக்காடாக இருந்த இடைநிற்றல் விகிதம் 2009-2010இல் 1.02 விழுக்காடு என்றும்; நடுநிலைக் கல்வியில் 13 விழுக்காடாக இருந்த இடைநிற்றல் விகிதம் 1.88 விழுக்காடு என்றும் குறைந்து அதிக மாணவர்கள் பள்ளிகளில் தொடர்ந்து படித்தனர்.

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் நகர்ப்புறத்தில் வாழும் ஓராண்டிற்கு மேல் இடைநின்ற குழந்தைகள், தெருவோரச் சிறார்கள், புலம்பெயர்வோர் ஆகியோர் 6 முதல் 12 மாதம் வரை பயில 1621 இணைப்பு மையங்கள் பள்ளி வளாகத்திலேயே ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

இதில் பயிலும் குழந்தைகளுக்கு மதிய உணவு, சீருடை, காலணி, புத்தகப் பை, கற்றல் கற்பித்தல் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

பள்ளியே செல்லா குழந்தைகள், இடைநின்ற குழந்தைகள், மலைவாழ் குழந்தைகள், நகர்ப்புற வசதியற்ற குழந்தைகள் ஆகியோர்களுக்காக 231 உண்டு உறைவிட மையங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. செயல்வழி கற்றல் ஒன்று முதல் 5ஆம் வகுப்பு வரையிலும் படைப்பாற்றல் கல்வி ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இம்மையங்களை 177 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் நடத்தி வருகின்றன. இதன் மூலம் 9454 குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர்.

மனவளர்ச்சி குன்றியோருக்கான உண்டு உறைவிட மையங்கள் கோயம்புத்தூர், சேலம், ராமநாதபுரம், பெரம்பலூர், திண்டுக்கல், கடலூர் மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் 265 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

பள்ளியை விட்டு இடைநின்ற 2 இலட்சத்து 94 ஆயிரத்து 182 குழந்தைகள் முறையான பள்ளி களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாற்றுத்திறனாளிகளின் நலன் பேணுதல்

6 முதல் 14 வயது வரையிலான மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கு வாழ்க்கைக் குகந்த தரமான உள்ளடங்கிய கல்வியினை வழங்கிட 52 கோடியே 27 இலட்ச ரூபாய்ச் செலவில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்:

❖ 90 ஆயிரத்து 543 மாற்றுத்திறன் கொண்டுள்ள குழந்தைகள் அரசு மற்றும் மாற்றுப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

❖ 75 ஆயிரத்து 174 மாற்றுத்திறன் கொண்டுள்ள குழந்தைகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எ 4476 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ மிகவும் பாதிக்கப்பட்ட 22 ஆயிரம் குழந்தைகள் வீட்டுவழிக் கல்வி மற்றும் பயிற்சியின் மூலம் தொடர்ந்து பயனடைந்து வருகின்ற னர்.

❖ தரமான உள்ளடங்கிய கல்வி வழங்கிட அனைத்து தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளின் பெற்றோர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ 412 வட்டாரங்களில் ஆதார வள பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன.

❖ 333 பகல் நேரப் பாதுகாப்பு மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

❖ 1144 அரசு பள்ளிகளில் 73 இலட்சம் ரூபாய்ச் செலவில் சாய்தள நடைபாதை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

❖ 826 சிறப்பு ஆசிரியர்கள், 133 தசைப் பயிற்சி நிபுணர்கள் பணியாற்றி வருகின்றனர்.

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் முறையில் கணினியைப் பயன்படுத்தி பாடங்களை போதிப்பதின் மூலமாக மாணவர்களுக்கு எளிமையாக, கற்றுக்கொள்ள இயலும் என்ற அடிப்படையில் 7500 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி களுக்கு 26 ஆயிரத்து 900 மடிக்கணினிகள் 142 கோடியே 15 இலட்சம் ரூபாய்ச் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து மாவட்டங்களிலும் தலா இரண்டு கணினிக் கூடங்கள் நிறுவப்பட்டு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 37 ஆயிரத்து 207 ஆசிரியர் களுக்கு கணினிப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

1980 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 2131 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மொத்தம் 233 கோடியே 77 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய்ச் செலவில் 41 ஆயிரத்து 110 கணினிகள் வழங்கப் பட்டுள்ளன.

மேலும் 2009-10 ஆம் கல்வி ஆண்டு முதல் கணினி அறிவியல் பாடப்புத்தகம் அரசு உயர் நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில்

பயிலும் அனைத்து 6ஆம் வகுப்பு மாணவர் களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 5 இலட்சத்து 75 ஆயிரம் தமிழ் வழி மாணாக்கர்கள் மற்றும் 75 ஆயிரம் ஆங்கில வழி மாணாக்கர்கள் பயன் அடைந்துள்ளனர்.

2008-2009 ஆம் கல்வி ஆண்டு முதல் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதி முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு பரிசாக மடிக்கணினி வழங்கும் புதிய திட்டம் அரசால் அறிமுகப் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ்

2008-2009ஆம் ஆண்டு முதல் 2009-2010ஆம் ஆண்டு முடிய இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 2205 மாணாக்கர்களுக்கு 4 கோடியே 74 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய்ச் செலவில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் மாணாக்கர்களை உயர்கல்வி பயில ஊக்குவிக்க வழி வகுப்பதாக உள்ளது.

மாநில அளவில் தமிழை முதல் மொழி பாடமாக படித்து முதல் 3 இடங்களைப் பெறும் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் தங்களது மேற்படிப்பை தொடர ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசால் ஊக்கத்தொகை 2009-10ஆம் கல்வி ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது. 12ம் வகுப்பு மாணவர்களுக்கு முதற் பரிசாக ரூ. 50,000/-, இரண்டாம் பரிசாக ரூ.30,000/-, மூன்றாம் பரிசாக ரூ. 20,000/- மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ. 25,000/- இரண்டாம் பரிசாக ரூ.20,000/- மற்றும் மூன்றாம் பரிசாக ரூ. 15,000/- தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககம்

இலவச தமிழ் பாடநூல்கள்

எ மெட்ரிகுலேஷன் / மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்புகள் வரை பயிலும் மாணவர்களுக்கு 2007-2008 ஆண்டு முதல் இலவச தமிழ்பாட நூல்கள் ஆண்டுக்கு ஏறத்தாழ 2 கோடியே 25 இலட்ச ரூபாய்ச் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரகத்தை வலுப்படுத்துதல்

❖ மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரகத்தை வலுப்படுத்தும் விதமாக ஒரு இணை இயக்குநர் பணியிடம் புதிதாக உருவாக்கப்பட்டது. அதனடிப்படையில் இணை இயக்குநர் பணியிடத்திற்கு அலுவலர் நியமிக்கப்பட்டு அப்பணியிடத்திற்கு உரிய அதிகார பகிர்வு அளித்து 16.12.2008 அன்று அரசு ஆணையிட்டுள்ளது.

அனைவருக்கும் தொடக்கக் கல்வி இயக்கப் பணிகள் நிறைவு பெற்று வருவதைத் தொடர்ந்து, அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் 2009-2010 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

புதிய உயர்நிலைப் பள்ளிகள்:

ஒவ்வொரு பள்ளிக்கும் 58 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் வீதம் 1 கோடியே 16 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் செலவில் 200 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

பள்ளி மான்யம்:

மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு / மாநகராட்சி / நகராட்சி / நலத்துறை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா 40,000 ரூபாய் என்ற அளவில் 4,627 பள்ளிகளுக்கு பள்ளி மானியம் 18 கோடியே 50 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு, 9, 10 ஆம் வகுப்புகளுக்கான ஆய்வகங்கள், நூலகங்கள் மேம்படுத்தப்பட்டு, தண்ணீர், மின்சாரம், தொலைபேசி மற்றும் இணைய வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி

இடைநிலை வகுப்புகளில் கற்பிக்கும் 15 ஆயிரம் ஆசிரியர்களுக்கு 1 கோடியே 50 இலட்ச ரூபாய்ச் செலவில் ஐந்து நாள்கள் பணியிடைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

மாதிரிப்பள்ளிகள்

மாநிலத்தில் 13 மாவட்டங்களில் (அரியலூர், கடலூர், தர்மபுரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, கரூர், பெரம்பலூர், நாமக்கல், சேலம், சிவகங்கை, திருப்பூர், திருவண்ணாமலை, விழுப்புரம்) கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் தரமான கல்வியை வழங்கும் நோக்கில் ஒரு பள்ளிக்கு 3கோடி ரூபாய் வீதம் 18

ஒன்றியங்களில் 54 கோடி ரூபாய்ச் செலவில் ஒரு ஒன்றியத்திற்கு ஒரு மாதிரிப்பள்ளி வீதம் 18 மாதிரி மேல்நிலைப்பள்ளிகள் 2010-2011 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டன.

மாணவியர் விடுதிகள்

மாநிலத்தில் 13 மாவட்டங்களில் (அரியலூர், கடலூர், தர்மபுரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, கரூர், பெரம்பலூர், நாமக்கல், சேலம், சிவகங்கை, திருப்பூர், திருவண்ணாமலை, விழுப்புரம்) கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் ஒரு ஒன்றியத்திற்கு ஒரு மாணவியர் விடுதி வீதம் 44 மாணவியர் விடுதிகள் 18 கோடியே 70 இலட்ச ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடுதிகளுக்குத் தொடர் செலவினமாக ஆண்டு ஒன்றுக்கு தலா 14 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் அனுமதிக்கப் படும். ஒவ்வொரு விடுதியிலும் 100 மாணவியர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(தொடர்ச்சி நாளை)

அன்புள்ள,

மு.க.

09-03-2011

3535. கமழும் கல்வி நீரோடை - 3

உடன்பிறப்பே,

பள்ளிக் கல்வித்துறையில் கழக ஆட்சி கடந்த ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றிய சாதனைகள் - திட்டங்களின் தொடர்ச்சியினை எழுதுகிறேன்.

சமச்சீர் கல்வி

சமச்சீர் பள்ளிக்கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதற்காக தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டம் 2010 இயற்றப்பட்டு; சமச்சீர் கல்வி முறை 2010-11ம் கல்வி ஆண்டு முதல் தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 1 மற்றும் 6ஆம் வகுப்புகளில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் புதிய பாட நூல்களும் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன.

2011-2012 கல்வியாண்டில் சமச்சீர்க் கல்விமுறையில் இதர வகுப்புகளுக்கான பொதுப்பாடத் திட்டம் தயார் செய்யப்பட்டு பாடநூல்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

உருது, தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டு, தமிழகத்தில் வாழ்ந்து வரும் மொழிவழிச் சிறுபான்மையினர் தமிழை ஒரு பாடமாகக் கற்பதோடு, அவர்தம் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்கள் கூடுதலாக தமது தாய்மொழியையும் ஒரு பாடமாகக் கற்க வேண்டும் என்றும்; அதில் தேர்ச்சி பெறுவதற்கு, தமிழ்ப் பாடத்திற்கு நிர்ணயித்திருப்பதைப் போல குறைந்தபட்ச மதிப்பெண் நிர்ணயிக்கப்படும் என்றும் அண்மையில் அறிவிக்கப்பட்டது.

தனியார் பள்ளிகளில் கட்டண நிர்ணயம்

தனியார் பள்ளிகளில் கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம்

வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம் 2009 இயற்றப்பட்டு 7.12.2009 முதல் செயல்படுத்தப்பட்டது.

இலவச மிதி வண்டி

இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தின்கீழ் 2006-2007ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் 487 கோடியே 35 இலட்ச ரூபாய்ச் செலவினத்தில் 21 இலட்சத்து 28 ஆயிரத்து 938 மாணவ மாணவியர் பயன் அடைந்துள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ் 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ரூ.1250/- மாணவியருக்கு ரூ. 1500/- தமிழக அரசால் வழங்கப்படுகிறது. இதே போன்று 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ரூ.1750/-, மாணவியருக்கு ரூ. 2000/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

2006-2007 ஆம் ஆண்டு முதல்

2009-10ஆம் ஆண்டு முடிய மொத்தம்

20 கோடியே 11 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்

1 இலட்சத்து 24 ஆயிரத்து 702 மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழிக் கல்வி 1-ம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை கட்டாயம் என 31.5.2006 அன்று சட்டம் இயற்றி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மகாராட்டிரம் போன்ற மாநிலங்களில் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாநிலத்திலும் அதிக மதிப்பெண் பெற்று முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ மாணவியருக்கு முதல் பரிசாக ரூ.10,000, இரண்டாம் பரிசாக ரூ.5,000, மூன்றாம் பரிசாக ரூ.3,000 வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல்

10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழி பயிலும் மாணவர்கள் பொதுத்தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு

அளிக்கப்பட்டு ஆண்டுக்கு ஏறத்தாழ 10 இலட்சம் மாணவ மாணவியர் பயன் பெற்றுள்ளனர்.

தேர்வில் கூடுதல் நேரம்

10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவ, மாணவியர் தங்களது வினாத் தாட்களை முறையாக படித்திடவும், விடைத்தாட்களை ஒழுங்குபடுத்திடவும், கூடுதலாக 15 நிமிடங்கள் நமது கழக அரசு பதவியேற்றதற்குப் பிறகு அனுமதிக்கப்பட்டது. இது மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது.

சிறப்புக் கட்டணம் ரத்து

மாணவர்களின் நலன் கருதி தமிழக அரசு 2008-2009 ஆம் கல்வி ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தை இரத்து செய்து 21 கோடியே 40 இலட்ச ரூபாயினை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. ஆண்டுக்கு ஏறத்தாழ 50 இலட்சம் மாணவ மாணவியர் மாணாக்கர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகள் பள்ளியில் இருந்து நின்று விடுவதைத் தவிர்க்கும் பொருட்டு 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்று 9ம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின

16 வயதுக்கு உட்பட்ட திருமணமாகாத மாணவியர்கள் பெயரில் தலா ரூ.3000/- வீதம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் இத்திட்டத்தின் கீழ் வைப்பீடு செய்யப்படும்.

2008-09ம் கல்வி ஆண்டில் மத்திய அரசால் ரூ. 36.38 கோடி செலவில் 1 இலட்சத்து 21 ஆயிரத்து 292 மாணவிகள்; 2009-10ம் ஆண்டில் 32 கோடியே 75 இலட்சம் ரூபாய்ச் செலவில் 1 இலட்சத்து 9 ஆயிரத்து 170 மாணவிகள் பயன் பெற்றுள்ளனர்.

இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழ் நாட்டிற்கு வந்துள்ள 150 மாணவர்கள் உயர்கல்வி பயிலவும், வேலை வாய்ப்புப் பெறவும் "O" level தேர்வுகள் தமிழக அரசுத் தேர்வுத் துறையின் உதவியுடன் நடத்தப்பட்டன.

11 மற்றும் 12ம் வகுப்பு பாடத்திட்டத்தில் உள்ள கடினப்பகுதிகள் நீக்கப்பட்டு எளிதாக்கப்பட்டுள்ளது. தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல் பாடங்களில் செய்யப்பட்டுள்ள இந்த மாற்றம் 2006-2007 முதலே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வி வளர்ச்சி நாள்

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை "கல்வி வளர்ச்சி நாள்" எனக் கொண்டாட வேண்டும் என்று தமிழகச் சட்டப் பேரவையில் கழக அரசு ஒரு சட்டம் இயற்றி, அதைக் கொண்டாடும் வகையில், 2007-08 முதல் ஒவ்வொரு பள்ளிக்கும் தனி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, காமராஜர் அவர்களின் புகழ் போற்றப்படுவதுடன், கல்வி பற்றிய விழிப்புணர்வும் மக்களிடையே வளர்க்கப்படுகின்றன.

2006-07 ஆம் ஆண்டு முதல் சத்துணவுடன் வாரம் 2 முட்டைகள்; 2007-2008 முதல் வாரத்திற்கு 3 முட்டைகள்; 2008-09 ஆம் ஆண்டு முதல் மதிய உணவு திட்டத்தின் கீழ் முட்டை உண்ணாத மாணவர்களுக்கு வாழைப் பழங்கள் ; 2009 -2010ஆம் ஆண்டு முதல் வாரம் ஐந்து முட்டைகள் வீதம் வழங்கப்படுகின்றன.

இலவச பாடப்புத்தகம் வழங்கும் திட்டமும், பள்ளி மாணவர்களுக்கு இலவச பஸ் பயண திட்டமும், 10,12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சாதிச்சான்றிதழ், இருப்பிடச் சான்று, வருவாய்ச் சான்று ஆகியன பள்ளியிலேயே வழங்கும் திட்டமும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

நன்கொடையாளர்கள் மூலம் புதிய பள்ளிக் கட்டடங்கள்

அரசு தொடக்கப் பள்ளிகளில் 2 வகுப்பறைகள் அல்லது 5 இலட்ச ரூபாய்; நடுநிலைப் பள்ளிகளில் 3 வகுப்பறைகள் அல்லது 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்; உயர்நிலைப் பள்ளிகளில் 4 வகுப்பறைகள் அல்லது 15 இலட்ச ரூபாய்; மேல்நிலைப் பள்ளிகளில் 6 வகுப்பறைகள் அல்லது 20 இலட்ச ரூபாய்; அளவுக்கு தங்கள் சொந்த செலவில் நிதி வழங்கி கட்டடங்கள் கட்டிக் கொடுக்க முன்வரும் நன்கொடையாளர்கள் அவர்கள் விரும்பும் பெயரை அந்தக் கட்டடத்தில் பொறித்திட அனுமதித்து

1998ஆம் ஆண்டில் அன்றைய கழக அரசு பிறப்பித்த ஆணையை 9.2.2005 அன்று வெளியிடப்பட்ட அரசாணை மூலம் முந்தைய அ.தி.மு.க. அரசு ரத்து செய்தது. 2006இல் பொறுப்பேற்ற இந்த அரசு, அரசுப் பள்ளிகளுக்கு நிலமாகவோ, நிதியாகவோ கட்டடம் கட்டிக் கொடுத்தல் மூலமாகவோ நன்கொடை வழங்கும் நன் கொடையாளர் விரும்பும் பெயரினை அப்பள்ளிக் கட்டடத்தில் பொறித்துக் கொள்ள 22.6.2006 அன்று ஆணை பிறப்பித்தது.

இத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் உடற்கல்வி பாடப்பிரிவில் உடற்கல்வி பாடத்துடன் யோகாசன கல்வியும் முழுமையாக கற்பிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 7,210 உடற்கல்வி ஆசிரியர்கட்கு யோகா பயிற்சி அளிக்கப்பட்டு யோகா பயிற்சி பெற்ற உடற்கல்வி ஆசிரியர்களைகொண்டு மாணாக்கர்கட்கு யோகா பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 46 இலட்சத்து 60 ஆயிரத்து 812 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் குறித்த, சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதே சுற்றுச்சூழல் மன்றத்தின் நோக்கம்.

சுற்றுச்சூழல் மற்றும் வனப் பாதுகாப்புத் துறையின் மூலம் சுற்றுச்சூழல் மன்றம் செயல்பட்டுவரும் 1200 பள்ளிகளுக்குத் தலா

ரூ. 1250/- வீதம் மாநில அரசிடமிருந்து நிதியுதவி பெற்று வழங்கப்படுகிறது.

தேசிய பசுமைப்படை மன்றம் செயல்பட்டு வரும் 7500 பள்ளிகளுக்கு தலா ரூ. 2500/- வீதம் மைய அரசிடமிருந்து நிதியுதவி பெற்று வழங்கப்படுகிறது.

இத்திட்டச் செயல்பாட்டிற்காக மாநில அளவில் ஓர் உதவி இயக்குநர் (சுற்றுச்சூழல்) பணியிடம், மாவட்டக் கல்வி அலுவலர் நிலையிலும், மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பாளர் பணியிடம் முதுகலைப்பாட ஆசிரியர் (தாவரவியல்/உயிரியல்) நிலையிலும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

1960 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் சிறந்த முறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நல்லாசிரியர் விருது;

1997 ஆம் ஆண்டு முதல் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது என வழங்கப்பட்டு வருகிறது.

விருதுத் தொகை 1000 ரூபாய் என்பது 2000 ரூபாய் என 1997 முதலும்; 2000 ரூபாய் என்பது 5000 ரூபாய் என 2007 முதலும் உயர்த்தப்பட்டு; விருதுபெறும் ஆசிரியர்களுக்கு விருதுத் தொகையுடன் வெள்ளிப்பதக்கமும், நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

2006-2007 முதல் இதுவரை 3 கோடியே 80 இலட்சம் ரூபாய்ச் செலவில் ஆங்கில மொழி ஆய்வகங்கள் எல்காட் நிறுவனம் மூலம் 76 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் நிறுவப்பட்டுள்ளன.

2008-2009 மற்றும் 2009-2010 முடிய 1 கோடியே 56 இலட்சம் ரூபாய்ச் செலவில் 1500 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படும் கணினி மையங்களை மொழி ஆய்வகங்களாக மாற்றி மாணவ மாணவியரின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்திட எல்காட் நிறுவனம் மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2008-09 மற்றும் 2009-10 முடிய இதுவரை 2 கோடி ரூபாய்ச் செலவில் 200 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் கணித ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

2009-10ஆம் ஆண்டில் ஆங்கில மொழி ஆசிரியர்களுக்கு குரல் ஒலி பயிற்சித் திட்டம் 20 இலட்சம் ரூபாய்ச் செலவில் அறிமுகப்படுத்தப்பட்டு, அனைத்து ஆங்கில மொழி ஆசிரியர் களுக்கும் முறையான பயிற்சி வழங்கப்பட்டது.

பொது நூலக இயக்ககம்

பொது நூலகத் துறையில் தொகுப்பூதியத்தில் மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் பகுதி நேர நூலகர்களாகவும், ஊர்ப்புற நூலகர்களாகவும் ரூ.1500/- மாதாந்திர தொகுப்பூதியத்தில் பணியாற்றிய 1282 நூலகர்கள் முறையான ஊதிய விகிதத்தில் மூன்றாம் நிலை நூலகர்களாக ரூ.3200-85-4900 என்ற சம்பள விகிதத்தில் 28.10.2006 முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பல்வேறு நிர்வாகக் காரணங்களால் தினக்கூலி பணியாளர்களைக் கொண்டு ஊர்ப்புற நூலகங்கள் செயல்பட்டு வந்தன. தற்போது 865 ஊர்ப்புற நூலகர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு ஊர்ப்புற நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

பொதுமக்களுக்கு தற்காலத்திற்கேற்ற நவீன நூலக வசதிகள் வழங்கும் பொருட்டு கன்னிமாரா பொது நூலகம், 30 மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் மாநகராட்சி / நகராட்சிப் பகுதிகளில் செயல்படும் 100 நூலகங்கள் என

131 நூலகங்களில் கணிப்பொறி வசதி மற்றும் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள நூலகங்களைத் தரம் உயர்த்துவதன் மூலம் சிறப்பான நூலகச் சேவை வழங்கும் பொருட்டு 166 பகுதிநேர நூலகங்களை ஊர்ப்புற நூலகங்களாகத் தரம் உயர்த்தியும், புதிதாக 169 ஊர்ப்புற நூலகங்கள் திறக்கவும் அரசாணை வெளியிடப்பட்டு நூலகங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேற்படி நூலகங்களை நிர்வகிக்க 335 ஊர்ப்புற நூலகர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு நூலகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய நூல்கள் வாங்குதல்

அறிவியல் செய்திகளை அறியவும், பொது மக்களின் ஓய்வுநேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிடவும் ஏதுவாக ஆண்டுதோறும் சிறந்த தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் நூலகங்களுக்கு வாங்கி வழங்கப்படுகின்றன. 2006-2007 முதல் இந்த நிதியாண்டு வரை தமிழ் நூல்கள் 11 ஆயிரத்து 837 தலைப்புகளில் - 45.14 கோடி ரூபாய்க்கும் - ஆங்கில நூல்கள் 5466 தலைப்புகளில் 6.03 கோடி ரூபாய்க்கும், ஆக மொத்தம் 51.17 கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்டுள்ளன.

மத்திய பணியாளர் தேர்வாணையம், தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இரயில்வே தேர்வாணையம், வங்கித் தேர்வாணையம் ஆகியவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் இளைய தலைமுறையினர் கலந்து கொண்டு பயன்பெறும் வகையில் ஏற்கனவே செயல்பட்டுவரும் 150 குடிமைப் பணி மையங்களுடன் மேலும் 50 மையங்கள் மாவட்ட மைய நூலகங்களிலும், நகராட்சிப் பகுதிகளில் உள்ள நூலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

புதிய நூலகக் கட்டடங்கள் கட்டுதல்

வாடகைக் கட்டடங்களில் போதிய வசதியின்றிச் செயல்பட்டு வந்த நூலகங்கள் வசதியான கட்டடங்களில் செயல்படும் வகை

யில், தமிழகத்தில் உள்ள பொதுநூலகங்களுக்கு 10.56 கோடி ரூபாயில் 93 நூலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

கன்னிமாரா பொது நூலகப் பழைய கட்டடம் புனரமைப்பு

110 ஆண்டுகள் பழமை வாய்ந்த கன்னிமாரா பொது நூலகக் கட்டடம் மத்திய / மாநில அரசுகளின் நிதி உதவியோடு இந்திய தொல் பொருள் ஆய்வுத் துறையினரால் 1 கோடியே

21 இலட்ச ரூபாய்ச் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

பொது நூலகங்களுக்கு தமிழ் நூல்கள் அதிகபட்சமாக 600 படிகள் வாங்கப்பட்டு வந்தன. தற்போது தமிழ் நூல்கள் 1000 படிகள் வாங்கப்படுகின்றன.

பொதுமக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும், நூலக விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பொது மக்களின் பங்களிப்பின் மூலமாக நூலகங்களின் வசதியை மேம்படுத்திட

1) கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து 29.09.2007 அன்று கோயம்புத்தூரில் நூலகச் சீரமைப்பு மாநாடு நடத்தப்பட்டு மேற்படி 3 மாவட்டங்களிலும் முறையே ரூ.1 கோடியே 90 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய், 47 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மற்றும் 33 இலட்சத்து

94 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நன்கொடைகள் மாவட்ட நூலகங்களுக்குப் பெறப்பட்டன.

2) தேனி, மதுரை மற்றும் திண்டுக்கல் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து 17.02.2008 அன்று தேனியில் நடத்தப்பட்ட நூலகச் சீரமைப்பு மாநாட்டில் 3 மாவட்டங்களிலும் முறையே 92 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய், 1 கோடியே 23 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் மற்றும் 1 கோடியே ஒரு இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நன்கொடைகள் மாவட்ட நூலகங்களுக்குப் பெறப்பட்டன.

3) திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர் ஆகிய நான்கு மாவட்டங்களுக்கும் சேர்த்து 29.02.2008 அன்று திருச்சிராப்பள்ளியில் நூலகச் சீரமைப்பு மாநாடு நடத்தப்பட்டு 4 மாவட்டங்களிலும் முறையே 1 கோடியே

10 இலட்சத்து 52ஆயிரம் ரூபாய், 78 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய், 69 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய், 78 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நன்கொடைகள் மாவட்ட நூலகங் களுக்குப் பெறப்பட்டன.

நலவாரியம்

புத்தகப் பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள் மற்றும் அத்துறையில் பணிபுரிவோர் நலன் காத்திட அவர்களுக்கென தனி நல வாரியம் 10.8.2009 அன்று அமைக்கப்பட்டு

2646 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு

236 பேருக்கு 3 இலட்சத்து 38 ஆயிரத்து 900 ரூபாய் நலத்திட்ட உதவியாக வழங்கப் பட்டுள்ளது.

சமத்துவபுரங்களில் நூலகங்கள் திறத்தல் மாவட்டங்களில் அமைந்துள்ள 147 சமத்துவபுரங்களில், பொதுநூலகத் துறையின் கீழும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழும், வளர்கல்வித் திட்டத்தின் மூலமும் நூலகச்சேவை அளிக்கப்பட்டு வருகிறது.

100 ஊர்ப்புற நூலகங்கள் கிளை நூலகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு, அந்நூலகங்களை நிர்வகிக்க 100 மூன்றாம் நிலை நூலகர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

அண்ணா நூற்றாண்டு நூலகம்

அண்ணா நூற்றாண்டு நூலகம் சென்னை, கோட்டூர்புரத்தில் கட்டி முடிக்கப்பட்டு, 15.9.2010 அன்று திறக்கப்பட்டது. இந்நூலகம் 12 இலட்சம் நூல்கள் இடம்பெறத் தேவையான இட வசதியும், 1200 நபர்கள் ஒரே நேரத்தில் அமர்ந்து படிக்கத்தக்க வகையில் இருக்கை வசதியும், பசுமைக் கட்டடத்திற்கு உரிய அமைப்புகள் கொண்டதாகவும், உணவகம் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் தங்கும் விடுதி வசதியுடனும், 1280 பேர் அமரும் வசதி கொண்ட அதிநவீன கலையரங்கம் மற்றும் 850பேர் அமரும் வகையில் திறந்த வெளி அரங்கம் உள்ளிட்ட வசதிகளுடனும் 3 இலட்சத்து 75 ஆயிரத்து 770 சதுர அடி பரப்பளவில் 8 மாடிகள் கொண்டதாகும். சர்வதேசத் தரத்தில் அமைந்துள்ள இந்நூலகம் தமிழக மக்களுக்குப் பெரிதும் பயன்படும் வகையிலும் தேசிய அளவில் முக்கியத்துவம்

வாய்ந்ததாகவும் திகழ்கிறது. இந்நூலகம் 172 கோடி ரூபாய்ச் செலவில் பிரம்மாண்டமாக உருவாகியுள்ளது. மேலும் 60 கோடி ரூபாய்ச் செலவில் புத்தகங்கள், மின் இதழ்கள், மின் புத்தகங்கள் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்காக 195 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.

உடன்பிறப்பே, பள்ளிக் கல்வித் துறை சார்பில் தம்பி தங்கம் தென்னரசின் அயரா உழைப்பின் காரணமாக அந்தத் துறையில் கடந்த நான்கரை ஆண்டுகளில் செய்யப்பட்ட சாதனைகளின் தொகுப்பு இது.

அன்புள்ள,

மு.க.

10-03-2011

3536. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஐந்தாண்டு சாதனைகள்! (1)

உடன்பிறப்பே,

மனித உடம்பின் நாடி நரம்புகள் போல், மக்களாட்சி செழிப்பதற்கு உள்ளாட்சி அமைப்புகள் வேர்களாகவும், விழுதுகளாகவும் திகழ்கின்றன. அவை செம்மையாகச் செயல் படுவதற்குத் தேவையான தலைமக்களையும் அவர்களின் கீழ் இயங்கும் நிலைமக்களையும் தேர்வு செய்வதற்காக 2006ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இந்த அரசு தமிழ்நாட்டில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகளுக்கான தேர்தல்களை நடத்தியது.

ஊரகப் பகுதிகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் 76 சதவீத மக்கள் வாக்களித்து, 29 மாவட்ட ஊராட்சி தலைவர்கள் 385 ஒன்றியக் குழு தலைவர்கள், 12,618 கிராம ஊராட்சித் தலைவர்கள் 656, மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் 6570, ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் 97,458, கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் என 1,07,716 மக்கள் பிரதிநிதிகள் வெற்றிகரமாக தேர்வு செய்யப்பட்டனர். 1996இல் திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தவாறு, தமிழ்நாட்டில் முதல் முறையாக மகளிர்க்கு 33 சதவீத இட ஒதுக்கீடுகளை அமல்படுத்தி, உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்தியது.

அதே அடிப்படையில் 2006 உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலிலும் ஏறத்தாழ 40 ஆயிரம் மகளிர் நான்கு மாநகராட்சி மேயர் பொறுப்பு உட்பட உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும் பொறுப்பேற்று மக்களாட்சித் தத்துவத்தின் வெற்றி முத்திரைகளாக விளங்குகின்றனர்.

● பல ஆண்டுகளாகத் தேர்தல் நடத்தப்படாமல் இருந்த **பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம்,**

கொட்டகச்சியேந்தல் ஆகிய கிராம ஊராட்சிகளுக்கு அக்டோபர் 2006-ல் வெற்றிகரமாகத் தேர்தல்கள் நடத்தப்பட்டு, தேர்தலில் வெற்றி பெற்ற கிராம ஊராட்சித் தலைவர்கள், துணைத்தலைவர்கள் கிராம சமுதாயத் தலைவர்கள் ஆகியோரை அழைத்து சென்னையில் 13.11.2006 அன்று **'சமத்துவப் பெருவிழா'** நடத்தி சிறப்பிக்கப்பட்டது.

● உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்குதற்காக, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் தலைமையில் இரண்டு **உயர் நிலைக் குழுக்கள்** அமைக்கப்பட்டு அக்குழுக்கள் 10.12.2007 அன்று 39 பொருள்களில் அளித்த 99 பரிந்துரைகளில், 61 பரிந்துரைகள் மீது அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

● ஊரக உள்ளாட்சிகளின் எல்லைகளை வரையறை செய்தல் - ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், அவற்றின் எல்லைகளை மாற்றியமைத்தல், அவைகளைப் பிரித்தல் தொடர்பாக மக்களின் கருத்துகள் அடிப்படையில், அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 397 பரிந்துரைகள் வரப்பெற்று அவை குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

● விவசாயிகளின் வரிச் சுமையைக் குறைத்திட 2009 டிசம்பரில் சட்டம் இயற்றப்பட்டு தலவரி மற்றும் தலமேல் வரி வசூலிப்பது ரத்து செய்யப்பட்டுள்ளது.

● பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றம் செய்தல் - கிராம ஊராட்சிகளில் நடைமுறையில் இருந்த பல உறுப்பினர் வார்டுகளை நீக்கம் செய்து, அவற்றிற்குப் பதிலாக ஓர் உறுப்பினர் கொண்ட வார்டுகளாக மாற்றி 2009இல் சட்ட திருத்தம் செய்யப்பட்டது.

● பாரம்பரியமாக, சிறு குளங்களை ஊராட்சி ஒன்றியங்களே பராமரித்து வந்தன. குட்டை பராமரிப்புப் பணிகளைக் கிராம ஊராட்சிகளுக்கு சட்டரீதியாக ஒப்படைத்திடவும் குளங்களின் பராமரிப்புப் பணிகளை ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைத்திடவும் 2009-ல் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

● பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களுக்கான தேசிய ஆணையம், தனது ஏழாவது

அறிக்கையில் "நாடாளுமன்றம், சட்டமன்றப் பேரவை, மாநகராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றைப் பொறுத்த அளவில், பொய்யான சாதிச்சான்றிதழ் பெற்றிருப்பவர்களை உடனடியாகப் பதவிப் பொறுப்பிலிருந்து அல்லது பதவியிடத்திலிருந்து நீக்கம் செய்ய வேண்டும்; மற்றும் சட்டத்தின்படி வகை செய்யப்பட்டுள்ள தண்டனை வழங்கப்படுவதுடன் குறைந்தது 6 ஆண்டு காலம் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தடை செய்யப்படுதல் வேண்டும்"- என அளித்த பரிந்துரையை ஏற்று 2009இல் சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

● தேர்தல் நடக்கும் நாளிற்கு முதல் நாள் மாலை 5.00 மணி வரை தபால் வாக்குச் சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று இருந்த தேர்தல் விதியில் திருத்தம் செய்து தபால் வாக்குச் சீட்டுகளை வாக்கு எண்ணிக்கை நாளன்று காலை 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம் என 2.1.2009 அன்று ஆணையிடப்பட்டது.

● ஊரகப் பகுதிகளில் விளம்பரப் பலகைகளுக்கான உரிமம் வழங்குவதற்கான வழிமுறைகளை வலுப்படுத்தவும், விளம்பர பலகைகள் நிறுவுதலைக் கண்காணிக்கவும், நகர்ப்புற சட்டத்திற்கு இணையாக, விளம்பர பலகை நிறுவ உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பர வரி விதிப்பு செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு வழங்கி, 18.5.2009 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

● தமிழக ஊராட்சிகள் திறமையாகவும் பொறுப்பாகவும் செயல்படுகின்றன என்பதற்காக மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகத்தினால் 2006க்குப்பின் தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தொடர்ந்து பாராட்டப்பட்டு வருகிறது. 2006-07ஆம் ஆண்டில் இத்துறை **நான்காவது இடம்** பெற்றமைக்காக 82.64 இலட்சம் ரூபாயையும்; 2007-08 ஆம் ஆண்டில் முதல் இடம் பெற்றமைக்காக 1 கோடி ரூபாயையும், 2008-09ஆம் ஆண்டில் **மூன்றாவது இடத்தையும்,** 2009-10ஆம் ஆண்டில் **இரண்டாவது இடத்தையும்** பெற்றமைக்காக தலா 1.5 கோடி ரூபாய் வீதம் 3 கோடி ரூபாயையும் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம் பரிசாக வழங்கிப் பாராட்டியது.

உடன்பிறப்பே, 2008ஆம் ஆண்டு முதல் தேசிய அளவில் வளர்ச்சி, சட்டம் ஒழுங்கு, அடிப்படை கட்டமைப்பு போன்ற

பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் தகுந்த நடுவர்கள் மூலம் அனைத்து மாநிலங்களையும் மதிப்பீடு செய்து, சிறந்த மாநிலங்களைத் தேர்வு செய்து சி.என்.என். - ஐ.பி.என். செய்தி நிறுவனம் "வைர மாநில விருதுகள்" வழங்குகிறது. அதன்படி, 2010ஆம் ஆண்டிற்காக தமிழ்நாட்டுக்கு இந்திய அளவில் பெரிய மாநிலங்களில் சிறந்த மாநிலம் என்ற சிறப்பு விருதினையும்; குடிமக்கள் பாதுகாப்பு, குடிநீர் மற்றும் சுகாதாரம், மகளிர் மேம்பாடு ஆகிய 3 பிரிவுகளில் சிறந்த மாநிலத்திற்கான வைர மாநில விருதுகளையும் 23.2.2011 அன்று வழங்கிப் பாராட்டியுள்ளது.

ஆண்டுதோறும் சிறப்பான மற்றும் புதுமையான முயற்சிகளைச் செயல்படுத்தும் 15 கிராம ஊராட்சிகளைத் தேர்ந்தெடுத்து **"உத்தமர் காந்தி ஊராட்சி விருது"** வழங்கும் திட்டம் 2006 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு; **விருது பெறும்** கிராம ஊராட்சிகளுக்கு கேடயமும், ரூபாய் **5 லட்சம்** ரொக்கப் பரிசும், கிராம ஊராட்சித் தலைவர்களுக்குப் பதக்கமும் நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

தொழில், சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்கள் தங்களது சமூகப்பொறுப்பின் ஒரு பகுதியாக பாராட்டத்தக்க வகையில், பல்வேறு சமூக பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் 2007-8 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும், ஐந்து நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு, தலா 5 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசும், நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு நிரந்தர பயணப்படி வழங்க 1997இல் ஆணையிட்டு வழங்கி; 1999-ம் ஆண்டில் அதில் மேலும் 10 சதவீதம் உயர்த்தி வழங்கியதுடன் 28.9.2007 அன்று வெளியிடப்பட்ட ஆணையின் படி கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு மாதம் தோறும் வழங்கப்பட்ட பயணப்படி 330 ரூபாய் என்பதை 500 ரூபாய் என்றும்; ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கு மாதம்தோறும் வழங்கப்பட்ட பயணப்படி 550 ரூபாய் என்பதை 750 ரூபாய் என்றும்; ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கு மாதம் தோறும் வழங்கப்பட்ட பயணப்படி

220 ரூபாய் என்பதை 400 ரூபாய் என்றும்; மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு மாதம்தோறும் வழங்கப்பட்ட பயணப்படி 1100 ரூபாய் என்பதை 1500 ரூபாய் என்றும்; மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு மாதம்தோறும் வழங்கப்பட்ட பயணப்படி 330 ரூபாய் என்பதை 500 ரூபாய் என்றும் உயர்த்தி வழங்கியது.

மக்களுக்கும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் இடையேயான தொடர்புகளை வலுப்படுத்திடும் நோக்கில் ஆண்டுதோறும் நவம்பர் முதல் தேதியன்று "உள்ளாட்சிகள் அமைப்புகள் தினம்" கடைப்பிடித்திட 26.10.2007 அன்று ஆணையிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கிராம ஊராட்சிகள், பொது நிதியிலிருந்து மேற்கொள்ளும் ஒரு பணிக்கு ரூபாய் 1 லட்சத்திற்கும் மிகாமல் நிர்வாக அனுமதி வழங்கலாம் என்பதை ரூபாய் 2 லட்சம் வரை ஒரு பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கலாம் என்றும்; ஊராட்சி ஒன்றியம் ஒரு பணிக்கு ரூபாய் 5 லட்சத்திற்கும் மிகாமல் நிர்வாக அனுமதி வழங்கலாம் என்பதை ரூபாய் 10 லட்சம் வரை அனுமதி வழங்கலாம் என்றும்; மாவட்ட ஊராட்சி ஒரு பணிக்கு ரூபாய் 10 லட்சத்திற்கும் மிகாமல் நிர்வாக அனுமதி வழங்கலாம் என்பதை ரூ.20 லட்சம் வரை அனுமதி வழங்கலாம் என்றும்; நிறைவேற்றப்படும் பணிகளுக்குத் தொழில் நுட்ப அனுமதி வழங்குவதற்குப் பொறியாளர்களுக்கான அதிகாரத்தினை உயர்த்தவும் மற்றும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளைப் பொறுத்தவரை பொறியியல் பிரிவு அலுவலர்களுக்கான அளவீடு மற்றும் மேல் அளவீடு செய்யும் அதிகாரத்தினைச் சீரமைத்திடவும் 20.12.2007 அன்று இந்த அரசு ஆணையிட் டுள்ளது.

கிராம ஊராட்சிகளில் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் அனைத்துக் கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் தொலைபேசி வசதிகளையும்;

2006-07 மற்றும் 2007-08ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஊராட்சிகள் திறமையாகவும் பொறுப்பாகவும் செயல்படுவதை ஊக்குவிக்கும் திட்டநிதியினைக் கொண்டு, 29 மாவட்ட ஊராட்சிகள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களின் அலுவலக உபயோகத்திற்காக கணினி மற்றும் அச்சுப் பொறிகளையும்;

2008-2009ஆம் ஆண்டிற்கான இத்திட்ட நிதியினைக் கொண்டு, 29 மாவட்ட ஊராட்சிகள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றியங்களின் உபயோகத்திற்காக இன்வெர்ட்டர்களையும் (Invertors) அரசு வழங்கியுள்ளது.

2009-2010ஆம் ஆண்டிற்கான இத்திட்ட நிதியைக் கொண்டு 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 385 கணினி மற்றும் அச்சுப் பொறிகளை அரசு வழங்கியுள்ளது.

2007-09ஆம் ஆண்டிலேயே தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கம்பியில்லாத் தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டன.

கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் அல்லது ஊராட்சி ஒன்றிய, மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் சரிபாதி என்பதைக் குறைந்தபட்சம் ஐந்தில் மூன்று பங்கு எனவும், தீர்மானத்தை நிறைவேற்ற தற்போதுள்ள மூன்றில் இரண்டு பங்கு என்பதை ஐந்தில் நான்கு பங்கு எனவும் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சட்ட திருத்தப்படி, கிராம ஊராட்சிகளின் துணைத் தலைவர்கள் அல்லது தலைவர்கள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர் மற்றும் துணைத் தலைவர்கள் பொறுப்பேற்ற ஓராண்டுக்குள்ளாகவோ, பதவிக்காலம் முடியும் இறுதி ஆண்டிலோ நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர இயலாது என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதி 2007-2008-ம் ஆண்டில் 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாகவும் மேலும் இது நடப்பு நிதியாண்டில் 2009-2010-ல் 9.5 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டு 2010-2011ஆம் ஆண்டில் 10 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதி 2006-07-ம் ஆண்டில் ரூ.1,225 கோடியிலிருந்து 2010-11 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 2,674.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

குடிநீர் வழங்குதல், சுகாதாரம், சாலைகள் மற்றும் தெருவிளக்குகளை பராமரித்தல் போன்ற அடிப்படை வசதிகளை

நிறைவு செய்யும் பொறுப்பு கிராம ஊராட்சிகளைச் சார்ந்தது. ஆனால் பல கிராம ஊராட்சிகள் போதிய நிதி வசதியின்றி அடிப்படை வசதிகளை நிறைவுசெய்ய சிரமப்படுவதால், இந்நிலையினைச் சரிசெய்ய பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:-

2007-08-ம் ஆண்டிலிருந்து மாநிலநிதி ஆணைய நிதிப் பகிர்வில், கிராம ஊராட்சிகளின் பங்கு 47 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே நிதிப் பங்கீடு செய்யப்படும்போது, பல சிறிய ஊராட்சிகளுக்கு போதுமான நிதி கிடைப்பதில்லை. இந்நிலையினை மாற்ற மாநில நிதிக் குழு மான்யத்திலிருந்து **அனைத்து ஊராட்சிகளுக்கும் குறைந்தபட்ச நிதியாக** தலா **ரூபாய் 3 இலட்சம்** வீதம் சமமாக வழங்கவும், மீதமுள்ள தொகையை மக்கள் தொகை அடிப்படையில் வழங்கவும் ஆணையிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சமச்சீராக நிதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், 2008-09-ம் ஆண்டு முதல் மாநில நிதிக்குழு மான்யத்திலிருந்து விடுவிக்கப்படும் நிதியில் **குறைந்தபட்ச நிதியாக** தலா **ரூ.30 இலட்சம்** வீதம் சமமாக வழங்க ஆணை வெளியிடப்பட்டு அதன்படி நிதி விடுவிக்கப் படுகிறது.

மத்திய அரசிடமிருந்து பெறப்படும் பன்னிரெண்டாவது நிதிக் குழு மான்யம் முழுமையையும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இது 2006-07 ஆம் ஆண்டு இரண்டாவது அரையாண்டு முதல் ஒதுக்கீடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதேபோல், 2010-11-ம் ஆண்டிற்கான பதிமூன்றாவது நிதிக் குழு மான்ய நிதி 286 கோடி ரூபாய் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

தலவரி, தலமேல் வரி, முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் கேளிக்கை வரி இவை மூலமான வருவாய் இதற்கு முன்னர் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மாவட்ட அளவில் தொடர்புடைய ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளுக்கு ஈடு செய்யப்பட்டது.

ஒருமுகப்படுத்தப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய்கீழுள்ள சிறப்புத் திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்களுக்கு

385 வாகனங்களும், 664 வாகனங்கள் வட்டார வளர்ச்சி அலுவலர், செயற் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர், புதிதாக தோற்றுவிக்கப்பட்ட உபகோட்டங்களின் உதவி செயற் பொறியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே மிகவும் பழுதடைந்துள்ள 87 ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்களுக்குப் பதிலாக ஒவ்வொரு கட்டடமும் 1.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வருகிறது.

மிகவும் அவசியமான சாலைப் பணிகள், ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், தெரு விளக்குகள், பாலங்கள் போன்ற பணிகள் இந்நிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடிசைகளில்லாக் கிராமப்புறங்கள், குடிசைப் பகுதிகளில்லா நகரங்கள் கொண்ட தமிழகத்தை உருவாக்கும் நோக்கத்துடன் தமிழகத்தில் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து ஓலைக் குடிசை வீடுகளையும் கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய நிலையான வீடுகளாக மாற்றும் "கலைஞர் வீடு வழங்கும் திட்டம்" 2010-11 முதல் 2015-16 வரையிலான 6 ஆண்டு காலத் திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கான முதலாம் ஆண்டில் 3 லட்சம் குடிசைகளை கான்கிரீட் வீடுகளாக கட்டித்தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பயனாளி ஒருவருக்கு மாநில அரசு 75 ஆயிரம் ரூபாயை மானியமாக வழங்குகிறது. 28.2.2011 வரை 75,000 கான்கிரீட் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 31.3.2011-க்குள் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் கான்கிரீட் வீடுகளும், 15.4.2011-க்குள் 2 இலட்சம் கான்கிரீட் வீடுகளும் கட்டி முடிக்கப்படும். இத்திட்டத்திற்கு இதுவரை 1082 கோடி அரசு செலவிட்டு உள்ளது. மேலும், 12 லட்சம் பயனாளி களுக்குத் தகுதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக, மேலும், 3 இலட்சம் குடிசைகள் இத்திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு, 2011 பிப்ரவரியில் பயனாளிகளுக்குப் பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனவரி 2007-ம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்ட **அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டமே** மாநில அரசுத் திட்டங்களில் மிகப்பெரிய திட்டமாகச் செயல் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சியிலும் குளம், நூலகம், விளையாட்டு மையம், சுடுகாடு-

இடுகாடு, குடிநீர்த் திட்டப் பணிகள் ஆகிய கட்டாயப் பணிகளும், தெரு விளக்குகள், மீன் வளர்ப்பு குளங்கள், சிமெண்ட் சாலைகள், கிராமச்சந்தைகள் ஆகிய பணிகள் உள்ளூர்த் தேவையின் அடிப்படையிலும் எடுக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 12 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகளுக்கும் மொத்தம் 2,548 கோடியே 84 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டதுடன் மாநில அரசின் வேளாண்துறை, கல்வித் துறை, குடிநீர் வடிகால் வாரியம், நெடுஞ்சாலைத் துறை போன்ற பிற முக்கிய துறைகளின் பணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளில் கிராம ஊராட்சி அனைத்திலும் 12 ஆயிரத்து 746 கோடியே 19 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய்ச் செலவில் 31 இலட்சத்து 20 ஆயிரத்து 320 பணிகள் நிறைவேற்றப்பட்டு கிராம ஊராட்சிகள் வளம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், விளையாட்டு மைதானம், குளம், சுடுகாடு-இடுகாடு, குடிநீர் ஆதாரப் பணிகள் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தெருக்களும் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து ஊராட்சிகளிலும் நூலகம் அமையப் பெற்ற ஒரே மாநிலம் என்ற பெருமையைப் பெரும் வகையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி நாளை)

அன்புள்ள,

மு.க.

11-3-2011

1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022